# காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்



வி. கௌரிபாலன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் மிதக்கும்
## தழும்பின் நிழல்

சிறுகதைகள்

வி. கௌரிபாலன்

விடியல் பதிப்பகம்
கோவை - 641 015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு மே 2016 தி.ஆ. 2047

**விடியல் பதிப்பகம்,**

23/5, ஏ.கே.ஜி. நகர், 3வது தெரு
உப்பிலிபாளையம் அஞ்சல், கோயம்புத்தூர் 641 015.
தொலைபேசி: 0422 - 2576772, 9443468758

**காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்**

**சிறுகதைகள்**

**© வி. கௌரிபாலன்**

அட்டை ஓவியம், வடிவமைப்பு: செந்தில் செல்வன்
அச்சாக்கம்: அருணா எண்டர்பிரைசஸ், சென்னை.
பக்கங்கள் :264
விலை : 250/-

First Edition May 2016 Thiruvalluvar Era 2047

**VIDIYAL PATHIPPAGAM,**

23/5, AKG Nagar, 3rd Street,Uppilipalayam Post, Coimbatore 641 015.
0422 - 2576772, 9443468758, vidiyal@vidiyalpathippagam.org
vidiyalpathippagam.org

**KARRILMITAKKUMTALUMPINNILAL**

**Short Stories**

**© V. Gowripalan**

**Edited by Kannan. M & V. Natraj**

Cover painting and design: Senthil Selvan
Printed at Aruna Enterprises, Chennai.
Pages : 264
Price : 250/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பதிப்புரை ... 7
தலையெழுத்து ... 9
தாயம்மா ... 11
அப்பே றட்ட... ... 18
சினைக்காளை ... 25
மூக்கணாங்கயிறும் கோணல் மொச்சைகளும் ... 33
மறைந்துதான்... ... 41
புஞ்சு லேபிள் ... 54
ஒப்பனை நிழல் ... 64
பிளைக் & வைட் மொழி ஆடுகளுடன்
வார்த்தையாடுதல் ... 70
குளிர் வாடை ... 79
இரும்புப் பறவைகள் ... 88
கிறக்கம் ... 95
றக்கி ... 105
எச்சில் பால் ... 116
சர்ப்பப் பாதை ... 125
கங்காரு ... 134
வேட்டைவாளிகள் ... 143
சன்னம் ... 150



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரும்புதல் | ... 160 |
| தளர்வு | ... 167 |
| சடையன் | ... 175 |
| துடிப்பு | ... 189 |
| சீவீளப் | ... 195 |
| முறைப்பாடு | ... 208 |
| தப்பு | ... 218 |
| வலச போனவங்க | ... 229 |
| முற்றுகை | ... 242 |
| தப்பித்தல் | ... 253 |
| பின் இணைப்பு | ... 258 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் எச்சங்களாக...

மனச் சிதைவுகளுடனும்,

உடற் சிதைவுகளுடனும்,

உடல் உறுப்புகளுக்குள்,

செல்த் துண்டுகளுடனும,

துப்பாக்கி ரவைகளுடனும்,

வாழ்ந்து கொண்டிருப்போருக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கௌரிபாலனின் கதைகள் தன் இயல்பான தீவிரமும் நேரடித்தன்மையும் கொண்டவை. வாழ்வியக்கத்தின் பகுதிகளாக உயிரோட்டத்துடன் அமைந்திருப்பவை. வாழ்க்கைப் போராட்டமும் சாவும் இங்கே அக்கம்பக்கமாக நிறுத்தப்படுகின்றன. சபிக்கப்பட்ட மனிதர்களின் அன்றாட துன்ப துயரங்களை தாண்டிய ஒரு துன்பியல் இந்த கதைகளின் பின்ணணியில் உறைந்து கிடக்கிறது. கூர்நோக்கும், தெளிவான கண்ணோட்டமும், அசலான பாத்திரப் படைப்பும், இயல்பான உரையாடல்களும் கொண்ட இந்த கதைகள் கௌரிபாலனுக்கே உரிய நடையில், கண்முன் விரியும் காட்சிகளாக முன்வைக்கப்படுகின்றன.

கௌரிபாலனின் எழுத்துநடை சற்றே சிக்கலானது, சிடுக்கானது. இது சமகால தமிழ்நாட்டு எழுத்தாளர்களின் எழுத்துநடையின் தாக்கத்தால் ஏற்பட்டது என்று தோன்றுகிறது. ஒவ்வொரு கதையிலும் ஒரு குறிப்பிட்ட மனநிலை இறுதிவரை காப்பாற்றி கொண்டு செல்லப்படுகிறது. வன்முறையான ஒரு சமூகசூழலின் எதார்த்தத்தை எதிர்கொள்ளும் ஒரு தமிழ் மனத்தின் நிலை அது. இந்த மனநிலை பதற்றமாக, இயலாமையாக, தவிப்பாக கதைக்குள் வியாபகம் கொள்கிறது.

கதைகள் சிறுகதை வடிவத்துக்குள் கட்டுண்டு நிற்பதில்லை. வடிவம் சார்ந்த பிரக்ஞையின்மையும் உத்திகள் பற்றிய அக்கறை யின்மையும் கதைக்குள் நிகழும் காலத்தில் சில சமயம் நீர்மை யின்மையைக் கொண்டு வந்து விடுகின்றன. கதைகள் அனுபவத்தையும் உணர்வுநிலைகளையும் மட்டுமே நம்பியிருக்கின்றன. அனுபவம் ஆழமானது; உணர்வுநிலைகள், உண்மையின் தெறிப்புக்கள், இவைதான் நம்மை இந்தக்கதைகளுக்குள் ஈர்த்துக்கொள்கின்றன. எதிர்கொண்ட யதார்த்தத்தின் வன்முறையை நேரடியாகப் பிரதிபலிக்கும் வீண்முயற்சியில் ஈடுபடாமல், அந்த வன்முறை ஏற்படுத்தும் உணர்வுகளை, பதிவுகளை அவை நினைவில் கீறும் அழுத்தத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத்தானே தொடர்ந்து பார்த்துக்கொள்ளும், கடந்துசெல்லும் ஒரு மொழிநடையில் நீட்டுகின்றன கௌரிபாலனின் சிறுகதைகள். வாழ்வின் பொருளாக மாறிநிற்கும் வன்முறையை, வேதனையை, மரணத்தை மொழியினூடாகக் காலத்திலும் வெளியிலும் கடக்க, கடத்த முனையும் தன்னிலைகளாகக் கிடக்கின்றன கௌரிபாலனின் படைப்புகள். மிகச் சாதாரணமான மனிதர்களும் மனம் தரித்து வாழ்வை எதிர்கொள்ளும் நிலை தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது இச்சிறுகதைகளில். விடுதலைப் போராட்டம், யாழ்ப்பாணம், வன்னி போன்றவற்றின் ஊடாக மட்டுமே தொடர்ந்து ஒளி விலக்கப்பட்டு அறியப்பட்டு வரும் ஈழத்தமிழ் இலக்கியத்துக்கு மாறாகத் திரிகோணமலை, மட்டக்களப்பு சார்ந்த அறியப்படாத எளிய மனிதர்களை (ஈழ ஆப்பிரிக்கர்கள், ஆந்திர தமிழ் கன்னட அருந்ததியர்...) அவர்களது உணர்வு நிலையைக் 'காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்களாக' வீழ்த்துகின்றன இந்த எழுத்துக்கள்.

ஈழபடைப்பிலக்கிய நூல்களின் வரிசையில் கௌரிபாலனின் முழுமையான சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் விடியல் பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையெழுத்து

நகக்கண்களுக்குள் இறந்த பிணங்களின் சதைத் துணுக்குகள் நாறுவது போன்ற உணர்விலிருந்து இன்னமும் விடுபட முடியவில்லை. எங்கோ ஒரு மூலையில், யாருடையதோ உடல் வாதையின் அணுக்கம் போன்ற உணர்வு, தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழிக்க வைக்கின்றது. புரையோடிப் போன உட்காயங்கள் ஆற மறுக்கின்றன. பலருக்கு, உடலுக்குள் ஊடுருவிய செல் துண்டுகள் இன்னமும் ஊறுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. மகனுக்காக, உறவுக்களுக்காக, பல சோடிக் கண்கள் ஏக்கத்துடன் புழுதி வீதிகள் தோறும் காத்துக்கிடக்கின்றன.

திட்டமிடப்பட்ட வகையில் பாடசாலைச் சிறார்கள் போதைக்கு அடிமையாக்கப்படுகின்றார்கள். பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் வன்கொடுமைகளும், கொலைகளும், தினம் தினம் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. நிகழ்காலம் மனதை பதைபதைக்க வைத்து வாட்டிக்கொண்டே இருக்கின்றது. நாங்கள் மேடைகளில் யுத்தத்துக்குப் பின்னான வரவு செலவு பற்றி கணக்குப் போட்டுப் பேசுவோம். யுத்தத்துக்கு உள்ளே, வெளியே என்று, புத்தி ஜீவித்தனத்துடன் விழா எடுப்போம். ஏதோ ஓர் இனம் புரியாத கசப்பு இடையறாது அடித்தொண்டைக்குள் வருத்திக்கொண்டே இருக்கின்றது. இவற்றுக் கிடையில் இன்னுமொரு தொகுப்பு என்பது எனக்கு ஆச்சரியமான விசயமாகவே உள்ளது.

*2003*-இல் 'ஒப்பனை நிழலில்' (இலங்கை) வெளி வந்த பத்துச் சிறுகதைகளுக்குப் பின் ஏதும் எழுதும் மனநிலை இருக்கவில்லை. தீவிரமாக படித்துக்கொண்டிருந்தேன் என்றோ, காலம் கனியும் வரை அடைகாத்துக் கொண்டிருந்தேன் என்றோ சொல்ல விரும்பவில்லை. ஆனால், இடையறாத வாசிப்பு நிகழ்ந்து கொண்டே இருந்தது. கால் போனபோக்கில் சிறுவர்களுடனும், அரங்கச் செயற்பாடுகளுடனும். கருத்தாடல்களுடனும் காலம் நகர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 இல் பரிசல் வெளியீடாக 'ஒப்பனை நிழல்' இந்தியாவில் மீள் பிரசுரமானது. 'அடவி' சஞ்சிகையில் 'ஒப்பனை நிழல்' தொகுப்பில் இருந்து, மூன்று சிறுகதைகள் மீள் பிரசுரமாயின. இவை என்னை மீள எழுதத் தூண்டிய போதும், பெரிதாக எதுவும் எழுத முடியவில்லை. மெக்ஸிக எழுத்தாளர் யுவான் ருல்ஃபோவின் இரண்டு புத்தகங்கள் கிடைக்கப்பெற்றன. ''எரியும் சமவெளி''* சிறுகதைத் தொகுப்பும், ''பெட்ரோ பராமோ''* நாவலும். 'ஆகவே' இதழில் யுவான் ருல்ஃபோவின் 'நாய்கள் குரைக்கவில்லை' என்னும் சிறுகதையைப் படித்திருந்த போதும், இந்த எழுத்தாளரை தேடிப் படிக்காததற்காக வருத்தப்பட்டேன். யுவான் ருல்ஃபோவின் படைப்புகள், என் நினைவுகளில் படிந்து கிடந்த திரையை நகர்த்த, நினைவுகளை படைப்பாக மாற்றும் விந்தையை உணரத்தொடங்கினேன். அதன் பின்னர், 2013 இல் இருந்து 2015 இதற்கிடையில் எழுதிய 17 கதைகளுடன், 'ஒப்பனை நிழல்' பத்துக் கதைகளையும் சேர்த்து, இத்தொகுப்பு வெளிவருகின்றது.

இப் படைப்புகள், ஒரு வாசகனாக எனக்கு திருப்தி தருவதாக இல்லை. இப்படைப்புகள் பல பலவீனமான தன்மைகளுடன் இருப்பதை உணர்கின்றேன்.

படைப்புக்களைச் செழுமைப்படுத்த திருத்தங்களை, ஆலோசனைகளை, வழங்கிய நந்தினிசேவியர், செந்தமிழினியன் (புதுவை) ஆகியோருக்கும், மொழியைச் செப்பனிட உதவிய திருமதி. சாந்தினி செல்வி. கௌ. நிதர்சனா அவர்களுக்கும், இக் கதைகளை அவ்வப் போது பிரசுரித்த சஞ்சிகைகளுக்கும், உரையாடலுக்கான நிகழ்வுகளை இடையறாது ஏற்படுத்தும் நண்பர்களுக்கும், எனது முழுத்தொகுப்பை வெளியிடும் 'விடியல்' பதிப்பகத்தினருக்கும் எனது மனமுணர்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

வி. கௌரிபாலன்,
200-A, விபுலானந்தர் வீதி,
குருக்கள்மடம்,
மட்டக்களப்பு,
இலங்கை.
gowri_70@yahoo.com
077827913

---

* யுவான் ருல்ஃபோ, ''எரியும் சமவெளி'' - சிறுகதைகள், (1999) ''பெட்ரோ பராமோ'' - நாவல், (2001) ஆங்கிலம் வழி தமிழில் பாலச்சந்திரன். எஸ். விடியல் பதிப்பகம், கோயமுத்தூர்-641015.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயம்மா

பூஞ்சை பிடித்து பார்வை மங்கிப் போன, தாயம்மாக் கிழவி, மங்கலாகத் தெரியும் தன் மூக்கு நுனியின் ஊடாக, மிக நுண்ணிய டப்... டிப்... எனும் வெடிப்போசையுடன் சுங்கானின் கரிப் பிடித்த மண்சுட்டி விளிம்புகளுக்குள், சிவந்த, நீண்ட ஒளிர்வுக் கோடுகளின் வியாபகத் தன்மையுடன் கனன்ற செந்தணல் கங்கு களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சுங்கானுக்குள் வெட்டி அமத்தி இருந்த பதப்படுத்திய கோடாச் சுருட்டின் புகை கிழவியின் தொண்டைக்குள் வந்து வீரியமான தாக்கத்துடன் நாசியில் ஏறி புகையாக மூக்குத் துவாரங்களுக்கூடாக வெளியேறி கண்களை எரியவைத்தது. மண்டைக்குள் எதுவோ பற்றிப்பிடிப்பது போல் இறுக்கி, பின் லேசாவதுபோல் கிழவி உணர்ந்தபோது சுங்கானுக்குள் கனன்ற தணல்களின் மீது சாம்பல் படியத்தொடங்கி இருந்தது. வெளியில் மழை பெரிய ஆர்ப்பாட்டமான இரைச்சலுடன், மிக மெதுவாக இடைவிடாது தூறிக்கொண்டிருந்தது. குடிலின் வாசலுக் குள்ளால் வந்துகொண்டிருந்த மழை இருளில், மங்கலான வெளிச்சம் வாசலில் கால் நீட்டி கூனி இருந்து சுங்கான் பிடிக்கும் தன்னைத் தாண்டி வியாபிக்கமுடியாமல், தன்மீதே படிந்து விட்டதால், குடில் இருளில் கிடப்பதுபோல் கிழவி உணர்ந்தாள். தேங்காய் யாவாரத்துக்குப் பயன்படுத்திய கைப்பிடி நரைத்து வெளிறிப்போன பச்சை நிற காக்கிக் கித்தான் பேக் குடிலின் ஏதாவது ஒரு மூலையில் கிடக்க வேண்டும் என நினைத்தாள். இனி அது தனக்குப் பயன் படாது என்பதால் அதன் மீது அவளுக்கு இனம் புரியாத பற்றுதல் ஏற்பட்டு, அதை மடித்துப் பத்திரப்படுத்த வேண்டும் என நினைத்தாள். தான் தேங்காய் யாவாரத்தை கை விட்டதால் தன்னைப் போல் உரத்துப்பேசத் தெரியாத சில பெண்களும், ஆண்களுமான வாடிக்கை யாளர்கள் தன்னை தேடினாலும் அவர்கள் பின் வேறு ஒரு வியாபாரியிடம் வாடிக்கையாளராக மாறிவிடப்போவதால் தன்னைத் தவிர வேறுயாரும் நஷ்டமடையப் போவதில்லை எனவும் தன்னைத் தேற்றிக் கொண்டாள். குடிலுக்கு எதிரே இருந்த வீதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோ ஒருவர் வேட்டியைத் தூக்கிப்பிடித்து குடையுடன் கால்களை அங்கும் இங்கும் அகட்டி வைத்து, தேங்கி நிற்கும் மழை நீருக்கோ அல்லது தெருச் சாணிக்கோ பயந்து, இடறி இடறி செருப்பு படார்... படார்... என ஓசை எழுப்ப நடந்து போனார். மழை இன்னும் தூறிக்கொண்டுதான் இருந்தது. உவர் ஏரியில் தண்ணி மட்டம் கூடித்தான் இருக்கும். இறால் குத்தி விரல்கள் வலித்தன. இளஞ்சூட்டுடன் உவர் ஏரி நீர் மார்பளவுக்கு சூழ்ந்திருந்தது. முதுகில் மீன்கள் முட்டி முட்டி கூச்சம் காட்டின. மெல்லிய குளிர் காற்று தீண்டி கொடுகும்படி செய்தது. அத்தாங்கிற்குள் இறால்களும் மீன் குஞ்சுகளும் துள்ளி விழுந்தன. தாழ்வாரத்தில் ஒழுகும் மழை நீரின் இரைச்சல் அதிகமாகி இருந்தது. மழை உரத்துப் பெய்யத் தொடங்கியிருந்தது. நேற்று மாலையே பிச்சாண்டியை உபத்திரப் படுத்தி அத்தாங்கும், பறியும் வாங்கி வைத்திருந்தாள். அத்தாங்கையும், பறியையும் குடிலுக்குள் கொண்டுவருவதா விடுவதா எனக்குழம்பி பின் தாழ்வாரத்தின் இறப்பில் கட்டித்தூக்கி இருந்தாள். தலையை குடில் வாயிலுக்கால் வெளியே நீட்டி தாழ்வார இறப்பைப் பார்த்தாள். அத்தாங்கும், பறியும், ஊமையாக ஒன்றும் உணராது, மழை நீர்ப்படாது தொங்கிக் கொண்டிருந்தன. கிழவியின் சுருக்கம் விழுந்துபோன முகத்தில் தூவானம் அடித்ததால் தலையை குடிலுக்குள் இழுத்துக் கொண்டாள். மழை இரைச்சலினூடு தூரத்தில் இருந்து தன்னை யாரோ ''ஆச்சி'' எனக் கூப்பிடுவது அவளுக்குக் கேட்டது. கூவலான கூப்பிடுதல், அதிக தூரத்தில் இல்லாமல் தன் குடிலுக்கு பின்புறமான வளவில் உள்ள சரசுவின் கூவல் அழைப்பு என்பதை இனங்கண்டுகொண்டாள். அந்தக் கூவலுக்கு செவி சாய்க்கவோ அல்லது பதில் குரல் கொடுக்கும் மனநிலையோ அற்று இருந்தாள். நிச்சயமாக சரசு கிழவிக்காக எதையும் கொடுக்கவோ அல்லது பகிரவோ போவதில்லை என்பது கிழவிக்குத் தெரியும். மார்க்கட்டில் ஏதாவது வாங்குவதற்காகவோ அல்லது நெருப்புக்குச்சியோ அல்லது வேறு ஏதாவது கடன் வாங்கவோ அவள் தன்னை கூப்பிடுவாள் என்பதால் கிழவி பேசாது இருந்தாள். கேட்டால் மழை இரைச்சலில் தனக்கு எதுவும் கேட்க வில்லையென சமாளித்து விடுவது என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள். கூப்பிடுவது ஓய்ந்து, சரசு ஆருக்கோ, கிழவி இல்லப் போலக்கிடக்கு, என்று கூறுவது கேட்டது. மழையின் தொடர்ச்சியான இரைச்சல் இருந்தபோதும் மழை சற்று ஓய்ந்திருப்பதுபோல் அவளுக்குப்பட்டது. மழை நீரின் கனத்தால் சவண்டு போய்க்கிடந்த நிறைய குழாய் போன்ற மஞ்சள் நிறப்பூக்கள் பூத்துக் கிடந்த அலரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தின் அடியில் பனைமட்டை வேலி மீது ஒன்றின் மேல் ஒன்றாக சாத்திக்கிடந்த, கரள்கட்டி நெளிந்து போன இரண்டு வண்டிச் சக்கரங்களின் பட்டங்களில் இருந்தும் நீர் சொட்டிக் கொண்டிருந்தது. அவைதான் தாயம்மாவிற்கு ஒரு கணவனும் அவனுக்கு ஒரு இரட்டைக் கரத்தையும் இருந்ததற்குச் சாட்சியாக அவளுடன் கூட இருப்பவை. அந்த இரட்டைக் கரத்தையில்தான் மூன்றாவது பிரசவத்திற்காக அவள் கணவன் டவுனில் இருந்த மருத்துவ மனைக்கு சாக்குப்படுக்கையில் கிடத்திக்கொண்டு போனதை நினைவு கூர்ந்தாள். அப்போதும் அவர்கள் அந்தப் பாலத்தைத் தாண்டித்தான் போனார்கள். அப்போதும் பாலம் இருந்தது. அதை யாரும் காவல் காக்கவில்லை, ஏரியில் தண்ணி மட்டம் உயர்ந்தால் மாத்திரமே சனம் பாலத்தால் போகும், இல்லாவிட்டால் கரச்சி வெட்டையை குறுக்காக நடந்து தாண்டி விடுவார்கள். அவளும் தன்னுடைய மூன்றாவது பிரசவத்திற்காக டவுனுக்குப்போனபோது மாட்டு வண்டியும் கரச்சி வெட்டைக்கு குறுக்காக அதைத்தாண்டிப் போனது. அப்போது அந்தப்பாலம், கறுத்துவிட்ட வானத்தில் ஒளிரும் இரண்டு வெள்ளிப் பொட்டுகளைக் கொண்ட பின்னணியில், பிரமாண்டமான முதலை ஒன்று இருட்டில் தலையையும் வாலையும் நிலத்தில் பதித்து வயிற்றை அந்தரத்தில் எக்கிப்பிடித்துக் கொண்டு கிடப்பதுபோல் அவளுக்குப்பட்டது. அவள் ஏற்கனவே இரண்டு ஆண் குழந்தைகளை உள்ளூர் மருத்துவச்சிகளின் உதவியுடன் பிரசவித்திருந்தாள். இரண்டுமே இறந்துதான் பிறந்தன. எனவேதான் மூன்றாவது குழந்தையை டவுன் ஆஸ்பத்திரியில் போய் பெற்றெடுப்பது என, அவளுடைய கணவன் தீர்மானித்தான். ஆனால் மூன்றாவது குழந்தையும் பிறந்து சில மணிநேரங்களில் இறந்துபோனது. அதன் பிறகு அவளது கருவில் எந்தக் குழந்தையுமே தங்காமல் போய் விட்டது. அப்பிடி அவளுடைய குழந்தைகள் இறந்துபோனதால் அவர்கள் புத்திசாலிகள் என்றே கருதினாள். அவள் கணவன் விறகு ஏத்தப்போன இடத்தில் பாம்பு தீண்டி இறந்துபோனான். அப்படி அவன் இறந்தபோது அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் பத்து வயதும், எட்டுவயதும், ஐந்து வயதுமாக இருந்திருப்பார்கள். தன்னைக் காப்பாற்றவே தடுமாற்றமாக இருக்கும்போது அவர் களையும் காப்பாற்றி வாழ தன்னால் முடியாமல் போயிருக்கும் எனக்கருதினாள். பின்னாளில் யுத்தம் தொடங்கியபோது அவர் களால் அவளும் அவளால் அவர்களும் வேதனைப்படாமல் தீர்க்கதரிசனமாகவே அவர்கள் பிறந்த வீட்டிலேயே இறந்து போனார்கள் என அவள் எண்ணம் அலைந்தது. அதன் பிறகு அவள் வாழ்வும், தேங்காய் யாவாரமும் நாப்பது வருடங்களுக்கு மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதும்வாதும் தெரியாது, உயர்வும் தாழ்வும் இல்லாது சீராக ஏதோ அவள் பாட்டுக்கு என்று போய்க்கொண்டிருந்தது. மழை நின்று தாழ்வாரத்தில் இருந்து நீர் சொட்டுச்சொட்டாக ஒழுகிக் கொண்டிருந்தது. மழை மயிர்த்தூத்தல் போட்டுக்கொண்டிருந்தது. தெருவில் ஈரத்தில் டயர் சுற்றும் இரைச்சலுடன், வெள்ளைநிற வேன் ஒன்று வேகமாகப் போனது. வாசல் இரும்புக்கதவு திறக்கவோ பூட்டவோ முடியாமல் மண்ணில் புதைந்து கெழிந்து போய்க் கிடந்தது. அது அவளுடைய கணவன் ''நேவி''* ஆங்கில கடற்படைத் தளத்தில் வேலை செய்தபோது செய்துபோட்டது. அவள் கணவனுக்கு அப்பு கரத்தை வாங்கிக்கொடுப்பதற்கு முன், அவள் கணவன் நேவியில்தான் வேலை செய்தான். அப்போது அவனும் குடிலை பெருப்பிக்கவோ அல்லது கல்வீடு ஒன்றை கட்டவோ வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தபோதும் இவை எதையுமே செய்ய முடியாமலே அவன் இறந்துபோனான். அப்போதும் சண்டை நடந்தது. ஜப்பான்காரனும், வெள்ளைக்காரனும் சண்டை போட்டார்கள். அவளுக்குத் தெரிந்ததெல்லாம் ஜப்பான்காரன் குண்டுபோடும்போது மெல்லிய தடி ஒன்றினை பற்கள் கொடுகாத படி பல்லால் கவ்விப்பிடித்தபடி குழிக்குள் குந்தி இருந்துவிட வேண்டும் என்பதுதான். மற்றப்படி ஜப்பான்காரன் குண்டு போட்ட ஒரு தினத்தில்தான் குடுமிக்காற பொன்னையற்ற வண்டிப் பட்டறைக்க அவள் குமரானது என்பது ஞாபகத்தில் இருந்தது. மற்றபடி அந்த சண்டை பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது. அவள் கணவன் வந்து சொல்லும் விஷயங்களே அவளுக்கு கிடைக்கும் மேலதிக தகவலாக இருக்கும். கல்குவாரி மலையில் பெரிய பெரிய நெருப்பு பலூன்கள் எல்லாம் வெள்ளைக்காரன் பறக்க விட்டு கட்டி இருப்பானாம். ஜப்பான்காரன் பதிஞ்சு குண்டு போட மாட்டானாம். அப்பிடிப் பதிஞ்சா பிளேன்ல நெருப்புப் பிடிச்சிருமாம். இரவில் ''நேவி'' வேலை விட்டு வரேக்க பெரிய பெரிய சிவத்த கண்கள் மாதிரி கல்குவாரி மலையில ''காஸ்'' பலூன்கள் அச்சுறுத்திக்கொண்டு நிற்குமாம். இரவில் அவனும் நண்பர்களும் நேவியிலிருந்து வேலையை விட்டு வரும் வழியில் திடீர் என்று எங்காவது இருந்து வெள்ளைக்காரற்ற படையில் இருந்த காப்பிரிகள் ஆயுதங்களுடன் தோன்றுவார்களாம். அப்படி அவர்கள் தோன்றும்போது தங்களுக்குத் தரப்பட்ட பாஸ்காட்டை நெஞ்சுக்குநேரே பிடித்தால் அவர்கள் டோர்ச் அடித்துப் பார்த்து

*திருகோணமலை கடற்படைத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு அவர்களை தொடர்ந்து போக அனுமதிப்பார்களாம் என்று அவள் கணவன் அவளுக்கு மாமர வேரில் குந்தியிருந்து சொன்னது ஞாபகம் வந்தது. அவளுக்கும் அப்படி ஒரு பாஸ் தேவைப்பட்டது. எப்போதும் பாலத்தடியில் நொண்டியும் கூனியும், நடித்தும்தான் பாலத்தடியிலுள்ள சென்றியை தாண்ட வேண்டியுள்ளது. பாலத்தில் நிற்கிற ஆமிக்காரர்கள் எப்போதும் அவளிடம் ஐ.சி. கேட்கிறார்கள். சிரித்தும், நடித்தும் சமாளித்து வந்தாள். அவளுக்கு ஐ.சி. எடுப்பதில் சிரத்தை இருந்தாலும் நெஷனல் ஐ.சி. எடுப்பதற்கு அவளிடம் பிறப்பத்தாட்சிப்பத்திரம் இருக்கவில்லை. போட்டோ சைன் தானும் தருவதற்கு அவள் ஏரியா ஜி.எஸ். மனம் கொள்ளவில்லை. சந்தையில் கிழவியிடம் தேங்காய் வாங்கிய ஜி.எஸ். பின்னேரம் வீட்டில் வந்து காசை வாங்கிப்போ என்று கூற, கிழவி அப்பாவித் தனமாய் பின்னேரம் கடைசி பஸ் பிடித்து போக, நேரம் போய் விடும் என்றும், தன்னால் அலைந்து திரியவும் முடியாது எனக்கூறி விட்டாள். அந்தக் கரளைத்தான் ஐ.சி. எடுப்பதில் ஜி.எஸ். காட்டினான். உடல் பருத்த பெண்களைக் கண்டால் பல் இளிக்கும் அவனிடம் குமரிப்பொட்டைகள் காவாசிமாரைக் காட்டியே காரியம் சாதித்துவிடுவது அவளுக்குத் தெரியும். கிழவியும் ஒரு காலத்தில் மாரைத் தூக்கிக் கட்டிக்கொண்டு திரிந்தவள்தான், இப்போது தோல் சுருங்கி தொய்ந்து போன மாரை வைத்துக் கொண்டு தன்னால் என்ன செய்யமுடியும் என கொடுப்புக்குள் புன்னகை தோன்ற கிழவி நினைத்துக் கொண்டாள். இப்போது பாலத்தை புதிய படை அணி காவல் காக்கிறது. அவர்கள் ஐ.சி. கேட்டு அதிகம் தொந்தரவு செய்யாவிட்டாலும் கடுமையாக நடந்துகொள்கிறார்கள். பாலத்தின் ஒரு ஓரத்தில் காக்கிக் கித்தன்களாலும், தகரத்தாலும் கூண்டுகள் அமைத்து பெண்களுக்கென்று பெண் இராணுவம் சோதனை செய்கிறது. அவளுடைய கைகளும் அவளுடைய கணவனின் கைகளும் மாத்திரமே பட்ட உடலின் மர்ம உறுப்புக்கள் மீதெல்லாம் பெண் இராணுவத்தின் கைகள் ஊர்ந்தபோது அவள் உடல் கூசிக்குறுகிப் போனாள். சில தினங்களுக்கு முன் தேங்காய் யாவாரத்துக்கு போவதற்கு தகரத்தால் அடைத்த கூண்டுக்குள் செக்கிங்குக்காக உள்ளே போவதற்கு லைனில் நின்றிருந்தாள். அப்போது அவளுக்கு முன்னால் போன இளம் பெண்ணை, பெண் இராணுவம் கடுமையாக சோதிப்பதைக் கண்டாள். கிழவிக்கு முன்னே கூண்டுக்குள் நின்ற அவள் முகம் முழுவதும் மஞ்சள் பூசி கண்கள் வீங்கி சோர்வான கலவரமான முகத்துடன் கண்கள் கலங்கி நின்றிருந்தாள். அவர்கள் ஏன் கடுமையாக நடந்து கொள்கிறார்கள் என கிழவிக்குப் புரியவில்லை. அவள் அரசாங்க அலுவலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் வேலை செய்பவளாகக் கூட இருக்கலாம் எனக் கிழவி நினைத்தாள். வெள்ளையும் ஊதா நிறமும் கலந்த சுடிதார் அணிந்து தோளில் கேன்பேக் கொழுவி இருந்தாள். அவளை ஏன் கடுமைப் படுத்த வேண்டும் என்று கிழவி அங்கலாய்த்தாள்.

"இப்படித்தான் எல்லாக் கட்டியவும்* சொல்றது, சுகம் இல்ல சுகம் இல்ல."

"சில கட்டியவுக்கு மாசத்தில் நாலு ஐந்து தடவ வாரது."

"பேந்து பாத்தா கஞ்சா கடத்துறது."

"எப்பிடி நம்புறது நீங்க சுகம் இல்ல சொல்லி குண்டு கொண்டு போக மாட்டுது?"

"அவுட்டு பிளட்ட காட்டிற்று போறது."

அவள் மருண்டு கலங்கிப் போன விழிகளுடன் தன் இடுப்பு நாடாவை உருவி அவிழ்த்து சுடிதார் ஜீன்சை இழுத்தாள். கிழவியின் மண்டைக்குள் கசிந்த சிவப்பு நிறமும், சுருங்கிப் போன கிழிசல்களும் வந்துபோக, சில பொறிகள் மண்டைக்குள் சிதற, மண்டைக்குள் இறங்கிய கார் இருளுடன் மயங்கி அறுத்து விட்ட கொடிபோல் தன்னிச்சை இன்றி காற்றில் அலைந்து பின்னால் நின்றிருந்தவர்கள் மீது விழுந்தாள். பின் கடுமையான சபதமாகவே எடுத்துக் கொண்டாள். இனி அவர்கள் பாலத்தில் செக் பண்ணுமட்டும் பாலம் தாண்டி தேங்காய் யாவாரத்துக்கு மட்டும் இல்லாது வேறு எதற்கும் போவதில்லை என்று.

மழை விட்டு இருள் வெளுத்திருந்தது. தாழ்வாரத்தில் சொட்டுச் சொட்டாக நீர் வடிந்து கொண்டிருந்தது. குடிலும் சற்று வெளுத்துக் கிடந்தது. சுங்கானை தட்டி செத்தையில் செருகிய கிழவி மெல்ல எழுந்து பறியையும் அத்தாங்கையும் நோக்கிப் போனாள்.

அவள் கணவன் நேவியிலிருந்து கொண்டு வந்து போட்ட இரும்புக்கிறாதிக் கதவு திறக்கவோ சாத்தவோ முடியாமல் மழையில் நனைந்து மண்ணில் புதையுண்டு கிடந்தது. கதவுக்கும், கம்பிக் கட்டைக்கும் இடையான வெளிக்குள்ளால் கிழவி வெளியேறி தெருவில் நடந்தாள். தெரு முடக்கில் பழைய ரெயின்கோட்டுப் போட்டு தம்பிராசா பியோன் வந்து கொண்டிருந்தான். கிழவி பயந்தாள். அவன் கேட்கக்கூடும். "என்னை ஆச்சி கோலம், நளப்பொண்டு

---

* கட்டிய: சிங்கள மொழிச் சொல் = ஆட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாட்டம்.'' ''வேணுமென்டா வந்து அவிட்டுப் பார்த்திட்டுப் போ. நளப்பொண்டுகளைவிட எனக்கு ஏதாவது கூட வித்தியாசமா முளைச்சிருக்கா எண்டு!'' ஆனால் இந்த கடுமையான வார்த்தைகளை அதன் கடுமையுடன் தன்னால் உச்சரிக்க முடியுமா எனப்பயந்தாள். தம்பிராசா பியோனின் கீசும் சைக்கிள் ஒலி மிக நெருங்கி வந்தது. அவன் தன் சொந்த மகளையே நெருப்பில் எரியவிட்ட சாதிவெறியன்.

''எங்கன ஆச்சி கரச்சி வெட்டைக்கா?''

''ஓம் தம்பி.''

''பார்த்துப் போனே, அங்கின பாளிக்க முதல கிடக்கெண்டு கதச்சவங்கள்.''

கிழவி நடக்கத் தொடங்கினாள். சாணியையோ, தேங்கிக் கிடக்கும் நீரையோ, பொருட்படுத்தாமல் நடந்தாள். அவள் முதுகில் மீன் குஞ்சுகள் முட்டி முட்டி கூச்சம் காட்டின. இறால் குத்தி வலித்தது. அவளுக்கு முன்னே யாரோ வீசிய வீச்சுவலை, பூப்போல் விரிந்து பின் ஏரிக்குள் அமிழ்ந்துபோனது. இன்று கிழவிக்கு மீனோ, இறாலோ பிடிபடலாம். சிலவேளைகளில் எதுவும் கிடைக்காமலும் போகலாம். ஆனாலும் இன்றோ அல்லது இனி வரும் நாட்களிலோ கிழவி தேங்காய்ச்சாக்கிற்கு அருகிலோ அல்லது குடிலின் மற்ற மூலையிலோ அத்தாங்கையும், பறியையும் கொண்டு வந்து விடுவாள் என்றுதான் தோன்றுகிறது.

(தினமுரசு - பத்திரிகை - 1994, ''ஒப்பனை நிழல்'' 1, (2003) தொகுப்பின் போது திருத்தி எழுதப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பே றட்ட...

மிகச்சுலபமாக வெற்றுக் கண்களால் காண முடியாத மாயப் பிறவியாக அவன் இருக்கவில்லை. உங்கள் இயந்திரத்தனமான அவசர வேலை ஆர்ப்பாட்டங்களுக்கு குறுக்கே வராது, தன் வயிற்றுப் பாட்டுக்கான இரும்பு வியாபாரம் தவிர்ந்த நேரங்களில் மரத்தடிச் சந்தியில் இருக்கும் கிருஸ்ணன்கோவில் சிவப்பு, வெள்ளை நிறத்திலான நீட்டு நீட்டு கீலம் கீலமான காவி அடித்த மதிற் சுவற்றில் தன் வயிற்றை வைத்து, அண்ணாந்து, வானம் பார்த்து நிற்பவன். ஆகவே அவனை பார்ப்பதற்கு, நீங்கள் எதையும் கூர்ந்து அவதானித்து, காலத்தால் பதிவு செய்து வைக்கவேண்டும் என எண்ணும் படைப்பாளியாகவோ அல்லது தம் காலத்தில் தம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் பற்றி சிந்திக்கின்ற மனித நேயமுள்ளவராகவோ இருக்கவேண்டும் என்ற அவசியமுமில்லை. ஏனெனில் அவன் பொறுக்கிவரும் இரும்புகளின் எடையில் அவனை ஏமாற்றி அதேநேரம் அன்றையப்பாட்டிற்கு, அவனுக்கு வழி வகுக்கின்ற நாடார் கடை முதலாளிக்கும், கோயில் மதிற்சுவற்றில் வயிற்றை அணைத்து அண்ணாந்து வானம் பார்த்து நிற்கின்ற சந்தர்ப்பம் ஒன்றில் அவன் அறியாது பின்னால் பதுங்கி வந்து மெல்லிய தடி ஒன்றினால் குண்டியில் ஓங்கி அடித்து, அவன் அடியின் வலி பொறுக்கமுடியாது துடித்து பதைத்து ஓடுவதை குரூரமான நமட்டுச் சிரிப்புடன் ரசிக்கும் தாடி வளர்த்து கிழடு தட்டிப்போன கிருஸ்ணன் கோவில் பரிபாலன சபைத் தலைவருக்கும், அவன் இரவுத்தூக்கத்தை அந்த "டுகுட்" பஸ் கோல்டில் பகிர்ந்து கொண்டு, அதற்காக அவன் சம்பாத்தியத்திலிருந்து, பீடிக்கோ அல்லது கஞ்சாவுக்கோ காசு பிடுங்கிக்கொள்ளும், காலைச் சுற்றி அழுக்குத் துணியைப் போர்த்தி பிச்சை எடுக்கும் கிழவனுக்கும் அவனைத் தெரிந்திருந்தது. நீங்கள் உங்களை ஒரு நாகரீகமான பிறவியாகக் கருதி நேரடியாக சந்திப்பதையோ அல்லது பார்ப்பதையோ விரும்பாவிடில் மரத்தடிச்சந்தியில் இருந்து ரயில்வே ஸ்டேசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிப்போகும் வீதியில் இருக்கும் பிரமாண்டமான நிழல் வாகைமரமொன்றிற்குக் கீழ் நின்று அவனைக் காணலாம். இப்போது மஞ்சள் நிற "நியுஈஸ்டன்" பஸ் கொம்பனிக்குச் சொந்தமான இறக்கண்டி போட்டுடன் புழுதியும் புகையும் கிளப்பிப் போகும் பஸ்சையும், ஒரு குழந்தை அழுவது போன்று கோர்ன் அடித்துப் போகும் "கயஸ்" வேனையும் போகவிட்டு (நீங்கள் ஆணாக இருக்கும் பட்சத்தில்) பின்னால் "லேடிஸ்" சைக்கிளில் வரும் மென் நீல நிற சுடிதார் அணிந்த பெண் மீதான காதல் அல்லது புணர்தல் கற்பனையையும் கலைத்து அவள் உங்களை தாண்டிச் சென்ற பின், (நீங்கள் ஒரு பெண்ணாக இருகும் பட்சத்தில்) தோளில் சுமந்து கூவி விற்றுப்போகும் குசினி "றாக்கை" வாங்குவது பற்றி அல்லது அடுத்த பெண்களின் நடத்தையில் குற்றம் கண்டுபிடிக்கின்ற தீவிர அக்கறை என்பவற்றை கலைத்து விட்டு பின், கிருஸ்ணன் கோவில் முகப்பை நோக்கினால், முகப்பில் கடலை விக்கும் முக்காடு போட்ட பெண்ணிற்கும் பின்னே மதிலில் தன் வயிற்றை வைத்து அண்ணாந்து வான் பார்த்து நிற்கும் அவனை உங்களால் காண முடியும். ஊத்தை நிறத்தில் காற்சட்டை போட்டு வெற்றுடம்புடன் தன் கரிய நிற வயிற்றில் வெளித்தள்ளி இருக்கும் பொக்கில்* மதில் சுவருடன் நசிய அண்ணாந்து வான் பார்த்து நிற்பான். கடைக்காரன் ஏமாற்றிக் கொடுத்த பழைய உணவொன்றின் செமிபாட்டுக்காகவோ அல்லது சுய இன்பத்திற்காகவோ அவன் அவ்வாறு கோவில் மதிற் சுவற்றில் தன் வயிற்றை வைத்து நசித்தபடி, கோரமான முகத்தில் கண்கள் இரத்தச்சிவப்பாய் ஒளிர, நின்றிருந்தான். மற்றவர் முகங்களைப் பார்த்து தான் பீதியடையக் கூடாது என்னும் நோக்கிலோ அல்லது மற்றவர்கள் தன் முகத்தைப் பார்த்து அலறி அடித்து ஓடக் கூடாது என்னும் நோக்கிலோ அவன் வான்பார்த்து நிற்கவும் கூடும். இந்தத் தவநிலை கிருஸ்ணன் கோவில் பரிபாலனசபை தலைவர் வந்து குலைக்கும் வரை நீடிக்கும். நீங்கள் அவன் முகத்தைப் பார்ப்பதை தவிர்ப்பது நல்லது என்றே படுகிறது. முகம் கறுத்து, சிவப்பு நிற கண்கள் அச்சுறுத்தும் என்பதைவிட அவன் முகத்தின் ஒரு பக்க பாதி கன்னம் முழுவதும் அரை வட்டம் அடித்தது போல், இரண்டு அருகருகான சீரான இடைவெளி விட்டு சிறிய பதினொரு இரட்டைத் துளைகள், ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக தசைகளை கவ்விப் பிடித்திருப்பது கோரமாகத் தெரியும். அவ்வாறு கவ்விப்

---

*தொப்புள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்திருக்கும் சதைகள் சிவப்பும், பழுப்பு நிறமுமாய் எப்போதும் குருதியும் சிதலும் வடிந்த வண்ணமும், அதில் இலையானோ அல்லது கொசுக்களோ இரைச்சலுடன் மொய்த்தபடி இருக்கும். பகல் வானில் நட்சத்திரங்கள் ஏதும் இல்லாததாலும் அவன் கண்கள் வானத்தை குரூரத்துடன் வெறித்துக்கொண்டு இருப்பதாலும் அவன் வானத்தில் அழகியல் எதையும் தேடி இன்புறுபவனாகவும் தெரிய வில்லை. சிவந்து ஒளிரும் கண்களைப் போலவே வானிலும் வளைந்து நெளிந்து ஓடும் சிவப்பு நிற சாயம் கலந்த பிசுபிசுப்பற்ற சிறு ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டான். கட்டி யாகவோ அல்லது இறுக்கமான பிசுபிசுப்புடனோ இல்லாது வெற்று ஆறு ஒன்றில், கலந்த சிவப்புச் சாயம் ஊறியது போல அந்த ஆறு ஓடியபோதும் அதில் இரத்த வெடில் அடிப்பதை உணர்ந்தான். அந்த ஆற்றின் சிவப்பு நிறத்தை விட கடுமையான சிவப்பு நிறமும் வெளுப்பு நிறமும் கலந்த சிதைந்த தசைத் துண்டுகளும் இடைக் கிடை அந்த சிவப்பு ஆற்றில் மஞ்சள் கூழாக மூளைத்திசுக்களும் அமிழ்ந்தும், மிதந்தும் வந்தன. வெறிபிடித்த கரிய நிற நாய்கள் மின்னும் சிகப்பு நிற கண்களால் ஆற்றை கூர்ந்து வெறித்தபடி வாய்களை அகலத் திறந்து வைத்துக் கொண்டிருந்தன. சில வேளை களில் ஆற்றில் குதித்து, மூழ்கி தசைத்துண்டுகளையோ அல்லது மூளைத்திசுக்களையோ கவ்வி எடுத்துச் சப்பிய நாய்களின் கடை வாய்களில் சதைத்துகள்களோ அல்லது மூளைத்திசுக்களோ ஒட்டிக் கிடந்தன. இவ்வாறுதான் அவன் வானில் ஓடிக்கொணடிருக்கும் ஆற்றைப் பார்க்கிறான். அடிவானம் சிவந்து தென்னை வட்டும், ஓலைகளும், வேம்பின் உச்சிப்பகுதியும் சிவந்து கிடந்த அந்திக் கருக்கலில்தான் ''வெல்கம் விகாரை'' கேம்பிலிருந்து வீசப்பட்ட எறிகணை அவர்கள் தங்கியிருந்த ''மில்'' அகதி முகாமில் வீழ்ந்து வெடித்துச் சிதறியது. அதன் பின் அவன் இருபது நாட்களுக்கு மேல் மருத்துவமனையில் இருந்து வெளியேறிய போது முகத்தில் பாதிக்கன்னம் முழுவதுமாக அரைவட்ட வடிவில் பதினோரு தையல் போட்டு அனுப்பி வைத்தார்கள். பின் அவன் ''மில்'' முகாமிற்கு திரும்பிய போது சுவரிலும் சீமென்ட் தரையிலும் சிவப்பு நிற இரத்தம் காய்ந்து கறுத்து விட்டிருந்தது. பல இடங்களில் சதைதுகள்கள் ஒட்டி அழுகி சாறு வடிந்து துர்நாற்றம் வீசி கொண்டிருந்தது. உடைந்த ஓட்டுத் துண்டுகளுக்குக் கீழ் புழுக்கள் ஊர்ந்தன. அதன் பின் அவன் தன் தாய்தந்தையையும் உறவுகளையும் தேடுவதை நிறுத்தி விட்டிருந்தான். பின்வந்த இரவுகளில் தூக்கத்திற்காக அந்த ''டூருட்'' பஸ் கோல்டை நாடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஏற்கனவே அந்த ''டுகுட்'' பஸ் கோல்டை கால்களை ஊத்தை துணியால் மூடி, பிச்சை எடுக்கும் கிழவன் தன் தொழிலுக்கும் உறக்கத்திற்கும் பயன்படுத்துவதைக் கண்டான். பீடியோ, கஞ்சாவோ கிழவனுக்கு கிடைக்காத இரவுகளில் அவனை அந்த பஸ் கோல்டுக்குள் உறங்க கிழவன் அனுமதிப்பதில்லை. கிழவன் ஆழ்ந்த போதையில் மட்டுமே தன்னுடன் தங்க அவனுக்கு அனுமதி அளித்தபோதும், போதை தெளிந்த விடியல்களில் தன் காலால் உதைத்து அவனை வெளியேற்றிவிடுவான். எனவே பெரும்பாலான இரவுகளில் அவன் அந்த பஸ்கோல்ட்டுக்கும் ரயில்வேஸ்டேசன் பொறியிலாளர் பங்களா சுற்றுமதிலுக்கும் இடையிலான சந்திலேயே தூங்கினான். பகலில் பஸ்கோல்ட்டில் நிற்பவர்கள் பெய்த மூத்திரவெடுக்கையையும், வெக்கையையும், பொலீத்தீன் பைகளின் சரசரப்பையும், வீதுருத் துண்டுகளின் உறுத்தல்களையும், விடியல்களில் வீசும் அதீதமான குளிரையும் பொருட்படுத்தாது உறங்கப்பழகியிருந்தான். ஆனால் இப்போது சில தினங்களாக அந்த ''டுகுட்'' பஸ் கோல்ட்டுக்குள் கிழவன் இல்லாதிருந்த போதும் அவன் அந்த பஸ் கோல்ட்டுக்குள் மட்டுமில்லாது அதன் பின் புறத்திலும் கூட உறங்குவதை தவிர்த்து நிழல் வாகை மரங்களுக்கு கீழ் பயன்படுத்தாமல் கிடக்கும் ஒடுக்கமான கொங்கீறீட் ''மேன் கோலை'' தன் இரவுத் தூக்கத்திற்காக பயன்படுத்திவருகிறான். சில தினங்களுக்கு முன் கிருஸ்ணன் கோயில் பரிபாலனை சபைத்தலைவர் விட்டெறிந்த செங்கல் முழங்கையில் பட்டு உராய்ந்து இரத்தம் துளிர்க்க, மற்றைய செங்கல் களின் குறியிலிருந்து தப்பி ஓடிவந்து கொண்டிருந்தபோது, ஒரே நிறத்தில் புதிய தொப்பிகளும், அதே நிறத்தில் டீசேட்டும் போட்ட சில அண்ணன்மார்கள் கிழவனுடன் கடுமையாக வாதாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவர்கள் போட்டிருந்த டீசேட்டினதும், தொப்பியினதும் நிறத்தைக் கொண்ட பேப்பர்களில் பெரியவர் ஒருவரின் படம் போட்டிருப்பதையும் அதை அவர்கள் பஸ் கோல்ட்டில் ஒட்ட முனைவதையும், கிழவன் அதை தடுத்து கூச்சல் போடுவதையும் குறுக்கும் நெடுக்குமாக நடப்பதுமாக இருப்பதையும் கண்டான். அப்போதுதான் பஸ் கோல்ட் முழுவதும் அங்கு நின்றவர்கள் போட்டிருந்த நிறத்தைக் கொண்ட, பேப்பர்களில் வேறு ஒரு பெரியவர் வேட்டி சட்டை போட்டு கும்பிடுவது போலும், கோட்சூட் போட்டு கை அசைப்பது போலும் ஒட்டப்பட்டிருப்பதைக் கண்டான்.

''சொன்னாக்கேள், எங்களுக்கும் அவங்களுக்கும் பகை ஒண்டும் இல்ல. அதில ஒட்டி இருக்கிறவருக்கும் எங்களுக்கும் ஒரே நிறந்தான், ஒரே சின்னந்தான். இலக்கம் மட்டுந்தான் வேற. நாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்ற படத்துக்கு மேல ஒட்ட இல்ல. கீழ ஒட்டிற்றுப் போறம். விலத்தி நில்லு.'' ''நாணயம் என்டா நாணயம்தான். அந்த ஐயாமாரிட்ட இதில வேற ஆரும் ஒட்டவிடமாட்டன் எண்டு சொல்லீட்டன். இதில ஒட்டஏலாதுதான். நடையைக் கட்டலாம்.''

''பிச்ச எடுக்கிற கிழட்டு நாயே...! உனக்கு...''

பின், ஒருவன் கிழவனின் கழுத்தைப் பிடித்து தள்ளினான். தள்ளியவனைக் கூட வந்த சிலர் தாங்கிச் சாமாதானப்படுத்தினார். பஸ் கோல்ட்டுக்கு முன்பான தரையில் பலவிதக் கால் தடங் களையும், சப்பாத்துத் தடங்களையும், புழுதி கிழப்பி காய்ந்த மண் ஒதுக்கி ஈரமண் கிளறுப்படுவதையும் பார்த்து நின்றான். பின், அவர்கள் நகர்ந்து தெருவில் நின்ற வேனை நோக்கி நகர்ந்தார்கள். அப்பொழுது தான் அந்த வேனைக் கண்டான். அதுகும் அவர்கள் போட்டிருந்த நிறத்திலேயே இருந்தது. வேனைச் சூழவும் அவர்கள் கையில் வைத்திருந்த பேப்பரில் இருந்த பெரியவர் சிரித்த முகத்துடன் கைகளை தலைக்குமேல் உயர்த்தி கும்பிடு போட்டபடி இருந்தார். கறுத்த கண்ணாடிக்குப் பின், கோரமான முகங்கள் வேனுக்குள் ஏறி அமர்வதையும் வேன் அசைவுடன் ஸ்ராட் ஆவதையும் கண்டான். நின்ற இடத்திலேயே பின் சக்கரங்கள் வேகமாக புழுதி கிழப்பி தரையுடன் உரசிச்சுழல வேன் முன்னே எகிறி குதித்து வேகமெடுத்து மாதா கோவில் முடக்கில் கவிழ்ந்து விடுவதுபோல் திரும்பி பின் மறைந்துபோனது. பஸ் கோல்டில் ஒட்டப்பட்டிருந்த பெரியவரின் முகமும், நிறமும் மங்கி இருளில் மறைந்து கொண்டு போவதை, அவன் பார்த்துக் கொண்டிருந்தான். இரவு, கஞ்சாப்புகையும், பீடி நாத்தமும் வழமைக்கு மீறி அதிகமாக இருப்பதை உணர்ந்தான். சில புதிய வடிவிலானதும் நிறத்திலுமான நோட்டுகள் கிழவனிடம் இருப்பதையும் அவன் கண்டான். பஸ் கோல்ட் முழுவதும் இருந்த பெரியவரும், அவரின் நிறமும் இருளில் முற்றாக மறைந்து போயிருந்தன. கிழவனின் புதிய வியாபாரம் அவனுக்கு புரிய முடியாது போனாலும் வழமையைவிட இன்று அவன் அதிகமாக உழைத்து விட்டதை அவன் உணர்ந்து கொண்டான். கிழவன் விபரமான ஆள்தான்.

''அட பரதேசி சும்மா கிடக்குது எண்டதுக்காக, கிடக்கிறதெல்லாம் இரும்பில்லடா! அதிலயும் தெரியோனும், உருக்கும் இருக்கும். உருக்கெண்டா அதுக்கு தனி விலைடா. தரம் பிரிச்சுக் குடுக்கத் தெரியோனுண்டா பரதேசி.''

அன்று பின் இரவின் உறக்கத்தில் நாய்கள், நிறம் மங்கிப் போன சிகப்பு ஆற்றில் மிதந்து வந்த, ஆற்று நீரின் சிவப்பு நிறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டாது வெண்மையாக கிடந்த எலும்புத்துண்டை கவ்வி சப்புவதையும், எலும்புத் துண்டு சப்பச் சப்ப நழுவி நழுவி ரப்பர் தன்மையுடன் திரும்ப பழைய உருக் கொள்வதையும் கனவில் கண்டான். அத்தகைய ஒரு கணத்தில்தான் வாகனம் ஒன்று அடங்கிய இரைச்சலுடன் பஸ் கோல்ட்டுக்கு முன்னே வந்து நிற்பதை உணர்ந்தான். பஸ் கோல்ட்டின் முன்புறம் காலடி ஓசைகளையும் அடங்கிய குரலிலான இரைச்சலையும் செவியுற்றான். உடலின் மீதான அசதியும், மூத்திர வெக்கையும், எலும்பைச் சப்பும் நாயின் கவனமும் அவன் தூங்கிய இடத்தில் இருந்து எழும்புவதை அனுமதிக்காததால் கிடந்த இடத்திலேயே கிடந்தான். சற்று நேரத்தில் இரைச்சல் அதிகமானது. பஸ் கோல்ட்டின் சீமெண்ட் படிகளிலும், கட்டடத்திலும் மோதும் இரும்புக் கேடர்களின் ''நங்'' எனும் ஒலி அவன் மண்டைக்குள் துல்லியமாக கேட்டது. கிழவனின் கஞ்சா அடித்த அலட்டல் உறுமலாக மாறி, உச்சம் பெற்று அதட்டி, பின் அலறலாக மாறி, ஊளையிட்டு பின் கெஞ்சலும் கேவலுமாக மாறி அனுங்கி ஒய்ந்து போனது. பின் வாகனத்தின் இரைச்சல் கூடி ஓய்ந்து போனது. நாய்கள் மீண்டும் ரப்பர் எலும்புகளை சப்பமுனைய அவன் தூங்கிப்போனான். விடிகாலையின் பனிக்குளிர் உடம்பில் சாம்பல் படிவாய் அசதியை உண்டுபண்ணிக்கிடக்க, நாய்களையும் எலும்புத்துண்டுகளையும் உதறி அவன் விழித்தான். வழமையான கஞ்சா, பீடிப்புகை நாத்தத்தையும் மீறி புதுவித நெடி வீசுவதையும், அது ''மில்'' முகாமில் ''செல்'' விழுந்த போது ஏற்பட்ட அதே நெடி என்பதையும் உணர்ந்தான். இரத்த ஆறும் இரத்த வெடில் அடிக்கும் நாய்களும் அச்சுறுத்த, பஸ் கோல்ட்டை எட்டிப் பார்த்தான். உள்ளே கிழிந்த துணிக்குவியலாய் கிடந்தான் கிழவன். கிழவனின் தலை எங்கே இருக்கிறது என புரியாது விழித்தான். கிழவனின் இடுப்பில் இருந்து விலகிக் கிடந்தது சாரம். இடுப்பில் இருந்த கயித்துக்கு மேல் தோல் கிழிந்து இரத்தம் சிவப்பாய் கிடந்தது. கிழவன் கால் மடிந்து தலை சுவரில் முட்டி மடிந்து கிடக்க குப்புறக்கிடந்தான். பஸ் கோல்ட்டிற்கு வெளியே இரத்தம் படிந்த மெல்லிய நீண்ட தட்டையான இரும்புக்கேடர் கிடப்பதைக் கண்டான். இரும்புக்கேடர் மீது படிந்து கிடந்த இரத்தக்கறையை மண்ணுக்குள் தேய்த்துப் போக்கினான். பின் பொறுமையாக கிழவன் சொன்னதுபோல் சோடா போத்தல் மூடியால் அந்த இரும்பை தேய்த்து கறளைப் போக்கினான். அது உருக்காக இருப்பது கண்டு மகிழ்ந்து தன்னுடைய அன்றைய விடியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த பிரமிப்பான உழைப்பை தோளில் சுமந்து இரும்புக்கடையை நோக்கிப் போனான். பஸ் கோல்ட் இரத்த நெடி வீசுவதுடன் வெறுமையாகக் கிடந்ததால் சில தினங்களாக அந்த ஒடுக்கமான ''மேன் கோலை'' தன் உறக்கத்துக்கு தெரிவு செய்தான். இன்னும் சில மணிநேரத்திற்குப் பின் கிருஸ்ணன் கோவில் பரிபாலன சபைத் தலைவர் வந்து துரத்தும் வரை, அவன் அந்த வெள்ளை, சிகப்பு நிற கீலம் கீலமான காவி அடித்த கிருஸ்ணன் கோவில் மதில் சுவரில் வயித்தை வைத்து பழைய உணவின் செமிபாட்டுக்காகவோ அல்லது சுய இன்பத்துக்காகவோ வானில் ஓடும் இரத்த ஆற்றை வெறித்தபடி நின்றிருப்பான்.

(பத்திரிகையில் பிரசுரமாகாத படைப்பு - 1995; ''ஒப்பனை நிழல்'' தொகுப்பில் இருந்து மீள்பிரசுரம் - அடவி சென்னை - 2011 (இந்தியா))



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினைக்காளை

ஆனாலும் பாருங்கள் எப்போதும் எதற்காகவாவது அதிகாலையில் இருந்தே எரிச்சல்பட்டுக்கொண்டே இருக்க வேண்டி இருக்கிறது. தொடர்ச்சியாகப் பாருங்கள், மூன்று நான்கு மாதங்களுக்கு மேலாக எந்த ஒரு பற்பசையும் எங்கள் பகுதிக்கடைகளில் கிடைப்பதில்லை. கேட்டவுடன் கடைக்காரன் இல்லை என்கிறான். உடனே பாருங்கள் அவன் மீது எரிச்சல் வருகிறது. ஆனால் பாருங்கள், பாலத்தில் உள்ளவர்கள்தான் சாமான்களை இங்காலை விடுவதில்லை என்ற உண்மை, பின்னர்தான் புத்திக்கு வருகிறது. பற்பசை எந்தவித ஆயுதம் என்று புரிவதில்லை. ஆனால் பாருங்கள் வினாசித்தம்பி அண்ணர் போன்ற விபரமான ஆட்கள் சில உண்மைகளைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். பற்பசையுடன் வேறு எதுவோ பட்டைகளையும் சேர்த்து வெடிப்பட்ட காயத்துக்கு மருந்து கட்ட முடியுமாம். பாருங்கள், வேப்பங்குச்சியின் கயர்ப்பால் தொண்டைக்குள் சளி குமட்டுகிறது. பின்பனிக்குளிர் வேறு எரிச்சலுக்கான காரணத்துடன் சேர்ந்துகொள்கிறது. ஆனாலும் பாருங்கள், வயதானவர்கள்போல் அப்பு இந்தக் குளிருக்கெல்லாம் பயப்படுவதில்லை. இன்னும் நிலம் வெளுக்காத விடியலில் மாட்டுக் கொட்டிலுக்குள் சாணம் அள்ளுகிறார். ஆச்சி உயிருடன் இருந்த காலத்தில் பாருங்கள் எப்போதும் அப்புவின் புராணந்தான். ஊருக்குள் உள்ள மற்ற ஆம்பிளைகளைப் போல ஏதாவது சண்டை சச்சரவோ அல்லது அப்பு அப்பிடி இப்பிடி என்று ஒரு கதையோ ஆச்சியின் காதுக்கு வந்ததில்லையாம். பாருங்கள், அப்புவின் மீது காரணமில்லாமல் எரிச்சல் வருகிறது. தொண்டையைக் காறித்துப்பினது அப்புவுக்கு கேட்டிருக்க வேண்டும். அப்பு வேலையை விட்டிற்கு நிமிர்ந்து நிற்கிறார். இருளில் அவர் முகம் தெரியவில்லை. அதனால் அவர் எங்கே பார்க்கிறார் என்று புரியவில்லை. ஆனாலும் பாருங்கள், அவருடைய கூரிய பார்வை என்னை அச்சுறுத்துவது போல் இருக்கிறது. அவருடைய பற்கள் இப்போது கூட ஒழுங்காக இருக்கின்றன. அவர் எந்தப் பற்பசையும் பாவிப்பதில்லை. உமிக்கரியும் வேப்பங்குச்சியும்தான். பற்பசை பாவித்தால் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்குள் கொப்பளங்கள் வந்து விடுகின்றன. பாருங்கள், திரும்பவும் அப்பு தன் வேலையில் சிரத்தையாக ஈடுபடுகிறார். மஞ்சள் நிற வைக்கோல் ஒட்டிய சாணியை வாளிக்குள் அள்ளிக் கொண்டிருக்கவேண்டும். வேப்பங்குச்சியை வீசிவிட எண்ணம் வருகிறது. களிமண்ணால் அரைக்குந்து வைத்து தகரம் அடித்து கிடுகால் கூரை வேய்ந்த குடில், இருளில் மௌனமாக நின்றிருந்தது. ஆனாலும் பாருங்கள், குடிலுக்குள் இரண்டு ஜீவன்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். குடில் இருளில் உறைந்து போய்க் கிடந்தாலும் உள்ளே மனுஷியும், ப்ரியாக்குட்டியும் பனையோலைப் பாயில் சுருண்டு கிடப்பதும், ப்ரியாக்குட்டி சரத்தால் இழுத்துப் போர்த்திக் கொண்டுகிடப்பதும், நினைவில் வருகிறது. பேந்தும் பாருங்கள் எரிச்சல்தான் மிஞ்சுகிறது. பெட்ட இண்டைக்கும் மூத்திரம் போயிருந்தா சரம் என்னாகும். சூத்தை கண்ட கொடுப்புப்பல் வேறு, குளிரை உள்வாங்கி கூசி வலிக்குது. கொட்டிலுக்கு வெளியே இருளில் புள்ளியன் படுத்துக்கிடப்பதை, அதன் ஒளிரும் கண் களாலும், அசை போடும் தாடைகளுமோ காணமுடிகிறது. இப்படித்தான் பாருங்கள், சாமத்தில் எனக்கு இருக்கும் எவ்வளவோ வேலைகளையும், பாதுகாப்புப் பிரச்சனையையும் மறந்து முடித்துவிட்டுவரும்போது புள்ளியன் கண்கள் ஒளிரப் பார்த்துக் கொண்டிருக்கும். சாமத்தில் ஊருக்குள் இருக்கும் எனது வேலைகளை முடித்துக்கொண்டு திரும்பும்போது அப்புவும், மனிசியும் மகளும் உறங்கிவிட்டிருப்பார்கள். ஆனாலும் பாருங்கள், இந்தப் புள்ளியன் தாடையை அசைச்சுக்கொண்டு ஒளிரும் கண்களுடன் குற்றம் கண்டுபிடித்து விட்ட தோரணையில் கழுத்தை ஆட்டி மணியை ஓசைப்படுத்தும். என்னதான் இருந்தாலும், பாருங்கள், புள்ளியன் திறமான ஒரு சினைக்காளைதான். நியூசிலாண்டில இருந்து இறக்கின காளையில பார்த்து, மாட்டுத்தரகர வைச்சு வாங்கின காளையப்பா அது. அதுண்ட திமிலைக்கும் நீட்டுக்கும் எங்கட ஊர் மாடுகள் பக்கத்திலேயும் நிக்கேலாது பாருங்க. சும்மா சொல்லக்கூடாது பாருங்க, இதுவரைக்கும் கொண்டு வந்துவிட்ட இருபது, இருபத்தைந்து பசுக்களையும் சினைப்படுத்திப் போட்டுது. இதுல பாருங்க, வேடிக்கைய, இதிட்ட சினைப்பட்ட எங்கட ஊர் பசுக்கள்ல பத்துப் பன்னிரண்டு, குட்டியைத் தாங்கவும், குட்டி போடவும் ஏலாம அவதிப்பட்டு செத்துப்போச்சு. தப்பிப் பிறந்த கன்டுகள கண்ணால பார்க்க ஏலா. அவ்வளவு பெரிய கன்டுகள் மொழுமொழு என்று. ஆனால் கண்டுபோட்ட பசு எல்லாம் எழும்பி நடக்க ஆறு ஏழு மாசம் பிடிச்சுது. அது மட்டுமா, தப்பிப் பிழைச்ச கன்டுகள் எல்லாம் அனேகமா பசுக்கன்டுகள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பாருங்க, இதுட்ட சினைப்பட்ட எங்கட வீட்டுப்பசு நாம்பன் கன்டாய் போட்டுட்டுது. மனிசி சொல்றாள் பாருங்க, எனக்கும் அதுக்கும் அதிக வித்தியாசமில்லையாம். போன போன இடத்தில் எல்லாம் பையன்களாப் போனதாலதானாம் தனக்கு வடிச்சலா மிஞ்சி ஒரே ஒரு பொம்பிளைப்பிள்ளையோட போயிட்டுதாம். இயற்கையா நடக்கிற விஷயத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? பாருங்க, புள்ளியன் பக்கத்தில் ஆளக் கண்டோன்ன முன்னங்கால நீட்டி உன்னி எழும்புவதுபோல பாசாங்கு காட்டுது. பாருங்க, இதுக்கும் எங்கட மாடுகள்மாதிரி கள்ளம் புடிச்சிட்டுது. அதுக்கும் பாருங்க வாழ்க்கையில் அலுப்புத் தட்டத் தொடங்கி இருக்கும் தானே. இருபது, இருபத்தைந்து பசுக்களோட உறவு வச்ச அதுக்கும் பலவீனம் இருக்கும்தானே. விரக்தியும் மெல்லத் தட்டத் தொடங்கி இருக்கும். இப்ப மூண்டு கிழமையாப் பாருங்க கணபதியற்ற பசு, வேறு சினைக்கு நிண்டது. பாருங்க, திரும்பவும் எரிச்சல் வருகிறது. கயிற்ற ஆப்பில இருந்து உருவவும் முடியாமல் அவுக்கவும் முடியாமல் கிடக்கிறது. பத்தாததுக்கு இருளில் தெரியாமல் சாணியில் வேறு கைபட்டு சில்லிட்டு பிசுபிசுப்பாய்க் கிடக்கு. நகக்கண்ணுக்குள் ஊத்தை வேறு அடைந்து போய்க் கிடக்கும். பாருங்க, திரும்பத்திரும்ப எரிச்சல் தான் மிஞ்சிக்கிடக்குது. எங்கட ஊர் மாடுகள் மாதிரி எழும்புவது போல் பாசாங்கு காட்டிவிட்டு இன்னமும் படுத்துக்கிடக்கு புள்ளியன். அடியில் முடிச்சுப்போட்ட கயிற்றுத்தலைப்பால் இரண்டு விளாசு விளாச கண்ணைக் கூசி, முதுகை சிலிர்த்து எழும்பி நின்றது. பாவந்தான் பாருங்க, சந்து இரண்டும் உள்ஒடுங்கி விலா எல்லாம் வெளித்தெரியுது. நேற்றுத் தான் கணபதியர் சினைக்கு விட்ட பசுவ அவிட்டுக் கொண்டு போனவர், இன்னும் காசு தர இல்ல.

''டோய், கனகற்ற வளவில் கட்டுறது சரி, உன்ரபாட்டில விட்டிற்று வந்திராத. மேயவிட்டு நிண்டு அவிட்டுக் கொண்டுவா.''

பார்த்தீங்களா, குளிரில் கூட பிசிறடிக்காத, அதட்டுகிற கம்பீரமான குரல். கயித்துத்தலைப்பால் இரண்டு விளாசு விளாசினா. ''ந்தா...'' அசட்டையாய் புள்ளியனை சாச்சுக் கொண்டுபோனாலும் பாருங்க, அப்பு சொல்றத கேட்கத்தான்வேண்டும். புள்ளியன கண்ட கண்ட பசுக்களோட சேரவிடக் கூடாதுதான். பேந்தும் பாருங்கள், எரிச்சல் வருகுது. இருட்டில் கடப்புத்தடி இடிச்சு விலா விண் விண் எண்டு வலிக்குது. பனியில் நனைஞ்ச கடப்புத்தடி சில்லிட்டு குளிருது. மேல் கடப்புத் தடிய உருவிப்போட்டு, இடத்தடிக்கு மேலால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தூக்கிப்போட்டு கம்பில குந்த... பாருங்க, உடல் முழுவதும் அசதியாய்க் கிடக்கு. மற்றக் காலையும் தூக்கிப்போட்டு, கடந்து மற்றப் பக்கம் வாறதே பெரும்பாடாய்க் கிடக்கு. ''ந்...தா...'' பார்த்தீங்களா, இவற்ற திமிரை, சாதுவா வந்து ஒரு நெம்பு நெம்பி நிலம் தடதடத்து அதிர கடப்புக் கம்புக்கு மேலா தாண்டி குதிச்சு வந்து கழுத்தில இருக்கிற மணிய ஆட்டி, ஒரு நக்கல் பார்வை வேற. பாருங்க, இவற்ற ஏளனத்துக்கு ஒரு நா ''டமார்'' நாசம் கட்டுவான்கள். நெஞ்சு வெளுத்துப் போச்சு. விடிய வெள்ளனத் தோட தொடங்கிற்றாங்கள், பாடையில போறவங்கள். புள்ளியன் வேற மிரண்டு கடப்பில் இடிபட்டு நிக்குது. இன்னும் பாருங்க, ''செல்'' போற கூவல் சத்தம் கேட்டுக் கொண்டிருக்குது. ''ந்.. தா...'' ரோட்டில் புள்ளியனோட ஏறினாப் பிறகுதான் பாருங்க, ''டம்'' என்ற அடங்கின சத்தத்தோட ''செல்'' விழுந்து வெடிக்கிறது கேட்குது. ஆற்ற தாலிய அறுத்தாங்களோ...? எந்த புள்ளயோ புட்டியோ காடோ, கரம்பையோ வீடோ, மரமோ ''செல்'' விழுந்த இடம் நிலாவெளிப் பக்கமாகவோ அல்லது கும்புறுப்பிட்டியாகவோ இருக்கவேண்டும். கும்புறுப்பிட்டியிலோ அல்லது நிலாவெளியிலோ சொந்தக்காரங்களோ அல்லது தெரிந்தவங்களோ இல்லை என்பது மனதுக்கு ஆறுதலாய் இருந்தது. இப்படி ஒரு அதிகாலையில்தான் மனிசிட ஒன்டவிட்ட அண்ணனுடைய பெஞ்சாதியும், இரண்டு பிள்ளைகளும், ஆச்சிக்கிழவியும் ''செல்'' விழுந்து நித்திரைப் பாயிலேயே சிதறிப் போனார்கள். அவங்கட செத்த வீட்டுக்கு பெட்டயக் கூட்டிப்போனது பிழைச்சுப்போச்சு. பெட்ட எந்த நேரமும் யோசிச்சுக் கொண்டிருந்தாள். சாப்பிடச் சொல்லத்தான் ''அப்பா, நாங்க ஏன் படிக்கோனும்...? ஏன் நல்ல உடுப்புப் போடோனும்...? ஏன் குளிக்கோனும்...? எங்கட பல் காவி பிடிச்சாத்தானே என்ன...? நாங்களும் கெதியா ''செல்'' அடிபட்டு செத்துத்தானே போவம்...?'' இண்டைக்கு நினைச்சாலும் பாருங்க நெஞ்சு பதறிப்போகும். கயிறு கையை வெட்டுது, புள்ளியன் பின்னுக்கு நின்டுட்டுது. திரும்பவும் பாருங்கள், எரிச்சலாகக் கிடக்கிறது. கால் குளிர்வதால் தான் பாருங்கள், தெருவில் தேங்கி நின்ற தண்ணியை மிதித்துத் தாண்டி வந்திருக்கிறேன் என்பதே உணர்வில் வருகுது. கயிற்றின் இழுவைக்கு எதிராக கழுத்தை வளைத்துப் பிடித்து பாதி மதகுக்குள்ளாலும் பாதி ரோட்டிலும் தேங்கும் பள்ளத்தில் புள்ளியன் தண்ணி குடித்துக் கொண்டு நின்றது. தண்ணி குடிக்க கயித்த விட்டதன் பிறகுதான் பாருங்க, ஞாபகம் வருது, அவிட்டு கொண்டு வரேக்க புள்ளியனுக்கு தண்ணி வைக்க இல்ல என்டது. இந்த மதகு போட்ட வரலாறப் பாருங்க. வினாசித் தம்பியண்ணார் என்ர மனிசீட்ட முந்நூறு தடவ சொல்லி இருப்பார். நீர்ப்பாசனக் கந்தோர்காரர் வந்து மட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துப் போட்டு மேட்டு நிலத்தில இருக்கிற வயலுக்கு தண்ணி பாயிறத்துக்காக மதக உயர்த்தி வைச்சாங்களாம். ரோட்டுப் போடுற கந்தோர்காரர் வந்து பார்த்துப்போட்டு இவ்வளவு உயரத்துக்கு கிரவல் போட நிதி ஒதுக்கீடு இல்ல எண்டு சொல்லிப்போட்டு மதகப் பதிவா வைச்சு போட்டாங்களாம். அதுக்குப்பிறகு இப்படித்தான் பாருங்க, பாதித்தண்ணி மட்டும் மதகுக்குள்ளால போக அரைவாசி ரோட்டில் தேங்குது. இரண்டு கந்தோர்காரரும் ஒருத்தரை ஒருத்தர் குற்றம் சாட்டிறதிலதான் கவனமாக இருக்கிறாங்களாம். குளக்கோட்டு மன்னனும் இவ்வளவு பெரிய குளத்தையும் கட்டி மைல் கணக்கில் வாய்க்காலும் வெட்டி ரோட்ட போட்டார் எண்ட அந்தக் காலத்தில் இருந்த கூட்டு முயற்சியத்தான் பாருங்க.

''ஓய், வைத்தி... மாடு தன்ர பாட்டில போகுது.'' இவன் பாருங்க, உடற்பயிற்சிக்காய் காலையில ஓடுறவன். ஆனா பாருங்க, அவன்ர விரல் இடுக்கில் இருக்கிற சிகரட்டுண்ட முனையில் இருந்து இருட்டுல செந்தணல் உதிர்ந்து சிவப்புக்கோடு வரைந்து மறைந்து போகுது. சிகரட் அடிக்காதவர்களும், தண்ணி அடிக்காதவர்களும் பாருங்க, கௌரவக் குறைவானவர்களாக நினைக்கிறன். அதுதான் பாருங்க ஓய் வைத்தி. ஒண்டுந் தெரியாத அப்பாவிபோல புள்ளியன் கழுத்து மணி ஒலிக்க சாவகாசமாக றோட்டின்ட கரையைப் பிடிச்சு நடக்கிறார். இவன் பாருங்க, ஒரு முறை என்ர மகளிட்ட மாட்டிக் கொண்டான். மகள்ர பிறந்த நாளுக்கு வந்தவன் பாருங்க, எல்லோரும் கேள்வி கேட்கிறாங்கள் எண்டு போட்டு, தானும் பாருங்க, பெட்டையிட்ட அரிசி மாவில செய்யிற உணவுப் பண்டம் இரண்டு சொல் எண்டுகேக்க, மகள் யோசிச்சுப் போட்டு தெரியாது எண்டு சொல்ல, ''என்ன இவ்வளவு வாயடிக்கிறாய், இது தெரியாதா பிட்டு, இடியப்பம், தோசை,'' எண்டு விலாசமாச் சொல்லப்பாருங்க மகள் உடனே ''எங்கட அம்மா கோதம்பமாவிலதான் இதெல்லாம் செய்யிறா.'' எண்டு சொல்லப்பாருங்க, பெடியர் கப்சிப். மகள நினைச்சு பெருமைப் படும்போது பாருங்க, கவலையும் கூடவே வருது. பெட்ட எதையும் சட்டென்று பிடிச்சுக் கொள்ளுவாள் பாருங்க, கிட்டி விளையாடுற இடத்தில பொடியல் ''உச்சவா...?'' ''உச்சு'' ''எங்க?'' எண்டு கேட்டு கூடாத சொல்லச் சொல்லிப் பாடிக் கொண்டு விளையாட, பொட்ட இதப்பிடிச்சுக் கொண்டு வீட்டுக்குள் பாடிக்கொண்டு வரும் பாருங்க, மனிசி பிள்ளையைப் போட்டு, அடி அடி என்டு அடிச்சுப் போட்டாள். பிறகு ஒரு நாள் பாருங்க, மனிசிட பழைய பிரன்ட் வர, கதைக்க விஷயம் இல்ல என்டோனே, மகளக் கூப்பிட்டு பாருங்க ''அண்டைக்கு பாடின பாட்ட ஒருக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்மா,'' எண்டு மனிசி கேட்க பொட்டைக்கு பாட்டு மறந்து போச்சு. ''எந்தப் பாட்டம்மா?'' எண்டு பொட்ட கேக்க, ''ஒருநாள் பாடக்கூடாது எண்டு அடிச்சன்,'' ''அப்ப நான் பாடினா நீங்க அடிப்பீங்களே?'' மகள் சொல்லப் பாருங்க, ''இல்ல நான் அடிக்கமாட்டன். இந்த மாமிக்காக ஒருக்கா பாடிக்காட்டு,'' பெட்டைக்குப் பாருங்க, மறந்து போச்சு. உடனே மனிசி பாருங்க ''உச்சுவா.... உச்சு,'' எண்டு தொடக்கி விடப்பாருங்க, வர்ர எரிச்சல்ல, கயித்துத் தலைப்பு முடிச்சு காலில் பட்டு வலித்தது. பாருங்க, நாலடி முன்னே சாவகாசமாய்ப் போய்க் கொண்டிருக்குது புள்ளியன்.

மனிசி மேல இருந்த எரிச்சலும் கால்வலியும் சேர்ந்து பாருங்க, ஏனோ இரண்டு மூன்று வருசத்துக்கு முந்தி, ஆமி சுட்டுச் செத்துப் போன வினாசித்தம்பியண்ணற்ர மூத்தமகன ஞாபகப்படுத்துது. முரளி பற்றிக் கத வந்தாக்காணும் பாருங்க மனிசிட முகம் சிவந்து பிரகாசமாயிடும். எண்ட முகத்தை ஏறெடுத்துக்கூட பார்க்க மாட்டாள் பாருங்க. ஆனா இது இரகசியமான விஷயம் பாருங்க, முரளி உண்மையில கோழி களவெடுக்கப் பதுங்கித்தான், பதுங்கி இருந்த ஆமி இயக்கம் எண்டு சுட்டது. ஆனா பாருங்க, என்ர மனுசி முரளி இயக்கத்துக்கு உளவு பார்க்கப்போய்த்தான் ஆமி சுட்டதாக சாதித்துக்கொண்டிருக்கிறாள். அப்பவும் பாருங்க, முரளிய நல்லவனாக காட்டிறதில் மனிசி முன்னுக்கு.

''கயித்த விர்ரா பரதேசி.'' திகைச்சுப்போய் கயித்த இறுக்கிப் பிடிக்க முனையப் பாருங்க, கையில இருந்த கயிறு விடுபட்டுட்டுது. ''கடவுளே விழுந்தான், தப்பிட்டான்.'' பாண் பெட்டியோடு போன சைக்கிள்காரன் ரோட்டின் இருகரையிலும் உழாஞ்சி சைக்கிளை நேராக்க கஸ்டப்பட்டுக் கொண்டிருந்தான். பாருங்கள், புள்ளியன் செய்யிற வேலையை, என்ன இங்கால விட்டிற்று அது தன்ரபாட்டுக்கு ரோட்டக் குறஸ் பண்ணி மற்றப்பக்கத்தால் போய்க்கொண்டிருக்கும். சைக்கிள் நிப்பாட்டி திட்ட ஏலாத பாண் பெட்டிக்காரன் அம்மா, மனிசி, அயல் வீட்டுப் பெண்கள் ஒழுக்கம் பற்றியெல்லாம் செத்த, மதில்சுவர், மின்கம்பம் எண்டு விசாரிச்சுக்கொண்டுபோனான்.

நானும் இப்பிடி கண்டமாதிரி யோசிக்கிறத விடோனும் விடோனும் எண்டுதான் பாருங்க நினைக்கிறன். ஆனாலும் பாருங்க, முடியிறதில்ல. கடும் யோசனையில் இருக்கேக்கதானாம் பாருங்க, மனிசி என்னட்டக் காசு கேட்பாளாம், அப்பத்தான் உண்மையிலேயே என்னட்ட காசு இருக்கா என்றது தெரியவருமாம். கையில காசு இருந்தா பாருங்க, யோசனையில் உடனே எடுத்துக் குடுத்துவிடுவனாம். மூன்றாவது மனுசனான வினாசித் தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனிட்ட, இதசொல்லேக்கதான் பாருங்க, எரிச்சலும் சினமும் கூடுது. பிரசர்காரன் வேற பாருங்க, இப்படித்தான் அடிக்கடி ஆத்திரம் எல்லை மீறிப்போயிருது. கயித்துத் தலைப்பை மேலே உயர்த்தி விசிற, கயித்துத் தலைப்பில இருந்த முடிச்ச புள்ளியன்ட முதுகில நாலஞ்சு தரம் விழுந்தது. புள்ளியன் பதறி அடித் தொண்டையால் கமறிப்பாஞ்சது. பாருங்க, பாவப்பட்ட வேலையை. அடி முறையா விழுந்திட்டுது. கயிறு கையிலிருந்து விடுபட, வீதிய விட்டு இறங்கி வாய்க்காலுக்குள் இறங்கி மேட்டு நிலத்தில் தாவிப்பாயுது. இண்டைக்கு இதோட மல்லுக்கட்டின மாதிரித்தான். அதுண்ட பாய்ச்சலுக்குப் பாருங்க, என்னால ஈடுகொடுக்க ஏலாம மூச்சுத் திணறுது. சனியன் பசுவாட பிடிச்சுப் போறமாதிரி, எல்லா போகுது. இங்கால சென்றி வேற இருக்குது பாருங்க, கன்னம் ஒட்டி மீசை முளைத்தும் கறுக்காத பொடியன் தான் பாருங்க, அனேகமாக குந்திக்கொண்டு இருக்கிறவன். கையில வேற பாருங்க, தானா நிக்காத சாமான்ல, கோர்வை கோர்வையா பித்தளையில மினுங்கிற சாமான் தூக்கிக் கொண்டு இருக்கிறத கண்டிருக்கன் பாருங்க, துலைஞ்சுது, கம்பிவேலிய நெருக்கிற்று.

''டுமீல்......... டுமீல்............ டட்டட்டட்டட்டட்........ டுமீல்.... டுமீல்..... டட்டட்...''

புலர் காலை. அலைவுறும் கம்பிவேலி மரங்கள், பனியில் நனைந்து ஒளிரும் பனைமரம்... மரங்கள்... புதர்... கம்பிவேலி... புதர்... கம்பிவேலி புதர்... வடலி... கருக்குமட்டை.... கங்கு மட்டை.... முகம் புதைந்த மணல்... மண் வாசனை... மாட்டுச் சாண வாடை.... இரத்தவாடை.... மகள் கேட்ட பள்ளிக்கூட யூனிபோம்... காசு தராத கனகர்... புள்ளியன் அப்பு, புலர் காலை இருள்... இருள்... கார் இருள்.

கார் இருள்... இருள்... புலர் காலை இருள். சாணவாடை.... இரத்தவாடை.... மண்வாசனை. இல்ல இல்ல... மூத்திர வாடை. மகள்கேட்ட பள்ளிக்கூட யூனிபோம்... ''ஐயோ.... விடிய வெள்ளன டியூசனுக்குப் போனவன். கண் கெடுவாங்கள் கண்டுட்டாங்களே.'' யாரோ கதறும் சத்தம். மங்கலான வெளிச்சம், சூழ அந்தரத்தில் அரைவாசி உடம்புடன் தெரியும் தெரிந்த முகங்கள்... சீலிங்கில் பேன் மிகக் குறைவான இரைச்சலுடன் சுழல்கிறது. சுவரில் நீலநிறப் பின்னலில் ஒரு குழந்தை தன்வாயில் கைவைத்து ஸ்....ஸ்....ஸ்....ஸ்.... என்று எச்சரிக்கும் படம். சோட்டிக்கு மேலா சாறி சுத்தின மனிசி... அப்பு... மகள்... சில ஊர்ப் பெருசுகள். ''அநியாயம் நல்ல சாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினைக்காளையப்பா...'' புலம்பும் பெரிசு, புள்ளியனுக்கு என்ன ஆனாலும் கவலை இல்லைத்தான். எப்பவும் பாருங்க, என்னில குற்றம் கண்டுபிடித்து மணிய ஆட்டிக் கொண்டிருக்கும். சில வேளைகளில், என்ற பலவீனத்த நக்கல் பண்ணியும் இருக்கு. அதுக்கு என்ன நடந்தாலும் கவலைப் படுறத்திற்கு ஒண்டும் இல்லைத் தான். ''அதுக்கு தீனி போட்டுக்கட்டாது. அகதியா திரியேக்கையும் அதக்கொண்டே வைச்சிருக்கிறதும் கஷ்டம். அதுபோனது ஒரு வகையில் நல்லதுதான்'' ஆஸ்பத்திரியில படுத்திருக்கிறதாலேயோ என்னவோ பாருங்க, குரல் தன் பாட்டுக்கு அனுங்குது.

''சா, அருமையான சினைக்காளையப்பா,'' பாருங்க, பெரிசு புலம்பல விடுறதா இல்ல. மனிசிட முகத்தில பாருங்க ஒரு நமட்டுச் சிரிப்பு மலருது. சில வேளையில சினைக்காளை இன்னும் சாக இல்ல எண்டு நினைச்சிருப்பாள் போல. என்ர முகமும் பாருங்க, என்னையறியாமலே மலருது.

''எமகாதகப் பயலப்பா, இவ்வளவு கஷ்டத்திலேயும் சிரிக்கிறான்.'' பாருங்க, பெரிசு, இன்னமும் புலம்பலை விடுவதாக இல்லை.

புதிய களம் (இலங்கை) - 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்கணாங்கயிறும் கோணல் மொச்சைகளும்

நான்கு மூலைக் காத்தாடியை பெருமையாக பார்த்து நின்றான். அது அவனுடைய சொந்தப் படைப்பு. பலவர்ணக் கடதாசிகளை முக்கோணவடிவில் சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி ஒட்டி இருந்தான். ஒன்றுடன் ஒன்று சரியாகப் பொருந்தாத முக்கோணங்களுக்கிடையே கீழே ஒட்டப்பட்ட வெள்ளைக் கடதாசி வெளித்தெரிந்தது. அதுவும் ஏதோ ஒரு வகையில் அழகாகவே அவனுக்குப்பட்டது. எந்தப்பிரச்சினையும் கொடுக்காமல் காத்தாடி பறக்கவேண்டும் என்று கவலைப்பட்டான். மேல் மொச்சை, வால் மொச்சை கட்டி காற்றில் பறக்கவிட்டான். மேல் எழுந்த காத்தாடி வலதுபக்கம் தலையை சாய்த்துச் சாய்த்து மரங்களில் சிக்கப் பார்த்தது. மேல் மொச்சை சரிபார்த்தான். சரியாக இருந்தும் வலது பக்கம் தலை சாய்த்தது. மேல் மொச்சையை கோணல் ஆக்கினான். பறக்க மறுத்தது. வால் மொச்சையை கோணல் ஆக்கினான். அதிகமாக வலப்பக்கம் சாய்ந்தது. காத்தாடி பறக்காமல் விட்டு விடுமோ என்ற கவலையில் அவன் சோர்வானான்.

***

புஸ்... புஸ்... சளியா, எச்சிலா, வேர்வைத்துளியா அல்லது எல்லாம் சேர்ந்த ஒன்றா? மூக்கணாங்கயிற்று இடை வெளியில் குமிழியாக வெடித்துச் சிதறியது. இழுக்க முடியாமல் இழுத்து வந்த சுமையினால் எருது களைத்துப் போயிருந்தது. சுண்டிப்பிடித்த மூக்கணாங்கயிற்றுக்கு ஏதுவாக தலை நிமிர்த்தி மூச்சு வாங்கியது. முழிகள் இரண்டும் தெறித்து விடும்போல் மின்னின. திடீரென்று இமைகள் செருகத் தொடங்கின. முன்னங்கால்கள் உறுதியற்று தடுமாறின. நிலை தளர்ந்து எருது தலை குத்தி கீழே விழுந்தது. தொடர்ந்து வண்டிக்காரன் எருதின் மீது விழுந்தான். அவன் மேல் பாரமூட்டைகள் விழுந்தன. அவன் மூச்சுத்திணறிச் செத்துப்போனான். பரமேஸ்வரன் கண்ணை மூடி பார்வையைத் திருப்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாக தெரு தாண்டி பாடசாலை வளாகத்துக்குள் போனான். கண்ணை மூடிநின்றான். புஸ்... புஸ்... எருதின் மூக்கில் குமிழி வெடித்தது. திரும்பிப் பார்த்தான். வண்டி தெருவில் பயணப்பட்டுக் கொண்டிருந்தது.

கடற்கரைச் சூழலுடன் ஒன்றிப்போன அந்தப் பாடசாலை எடுத்த எடுப்பிலேயே பரமேஸ்வரனை அச்சுறுத்தியது. வேர்த்து விறுவிறுத்துப் போனவன் நேராக கடற்கரையில் போய் நின்றான். இந்தோனேசியாவின் சுமத்திராவிலும், யாவாவிலும் பற்றியெறிந்த காட்டு தீயினால் ஏற்பட்ட புகைமூட்டம், புருணேயில் ஏற்பட்ட சூறாவளியினால் திசை திரும்பி 3000 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள இலங்கைத் தீவை அடைந்தது. தூரத்தே 'பிறிமா' மா ஆலை அனல் கொதிக்கும் புகை மூட்டத்தில் தளம்பிக் கொண்டிருந்தது. திடீர் என்று ''பிறிமா'' ஆலை தீப்பிடித்து எரியத் தொடங்கியது. பரமேஸ்வரன் தலையை சிலுப்பிக் கொண்டான். 'பிறிமா' மா ஆலை புகை மூட்டத்தில் தளம்பிக்கொண்டிருந்தது. அவன் குனிந்து கால்களைப் பார்த்தான்.

ஒற்றைக்கால் செருப்பு கனமாய் இருந்தது. கால்களைத் தூக்கிப் பார்த்தான் பரமேஸ்வரன். செருப்பில் அழுக்கு அப்பிப்போய் கிடந்தது. காலை கடல் நீரில் பிடித்தான். அப்பிய அழுக்கு செருப்பை விட்டு கழர்வதாய் இல்லை. மற்றக் காலால் அதை தேயத்து விட்டான். மற்றக்கால் பெருவிரலில் அழுக்கு ஒட்டிக் கொண்டது. பெருவிரலில் புழுக்கள் ஊரத்தொடங்கின. பெருவிரல் அழுகிப் போனது. பின் கணுக்கால், முழங்கால் என்று தொடர்ந்து அழுகியது. பெரிய அலை ஒன்று முழங்கால் வரை வந்து நனைத்துப்போனது. பெருவிரலில் அழுக்கு கழுவப்பட்டிருந்தது.

கரை ஓரமாக பார்வையை தூரப்போகவிட்டான் பரமேஸ்வரன். தூரத்தே இருந்த சென்றியில் பார்வை நிலைத்தது. உள்ளே யார் இருப்பார்கள். யாரோ தொலை நோக்கியால் பார்க்கக்கூடும். இதில் நிற்கக் கூடாது... சட்டென்று திரும்பி நடையை வேகமாக்க முனைந்தான். மிகக்கிட்டவாக எதிரே இருந்த சென்றியில் இருந்தவன் இவனையே உற்றுப்பார்த்தான். கூடாது... இந்த இடத்தை விட்டு வேகமாக நகரக்கூடாது... உலாவுவது போல் உலாவிவிட்டுப் போகவேண்டும். இல்லாவிட்டால் சந்தேகப்படுவார்கள். உளவு பார்க்க வந்ததாக நினைத்துக் கொள்வார்கள். வீண் தொல்லையில் மாட்டவேண்டி வரும். பரமேஸ்வரன் உலாவத் தொடங்கினான்.

பாடசாலைச் சூழல் பரமேஸ்வரனை அச்சுறுத்துவதாகவே இருந்தது. ஏதும் பிரச்சினை என்றால் தப்பி ஓடமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் பக்கத்தில் இராணுவ அரண். பின்பக்கம் கடல். வழியில் ஏதும் பிரச்சினை என்றாலும் வீடு போய்ச்சேர முடியாது. வழி நெடுசிலும் காவல் அரண்கள். கூடாது... இந்தப் பாடசாலை கூடாது... இங்கிருந்து கழர வேண்டும்... எப்படியும் கழண்டு ஓட வேண்டும். பரமேஸ்வரன் கடற்கரையில் வேகமாக உலாவத் தொடங்கினான்.

***

''என்ன டீச்சர் புதுசாக்கிடக்கு? குட்டிபோட்ட நாயாட்டம் கடற்கரையில் ஒண்டு உலாத்துது!''

''ஓம் சேர். அதான் நானும் பார்க்கிறேன். ஆள்ட தோற்றத்தப் பார்த்தா பயமாவேற கிடக்கு. சி.ஐ.டீ.யா இருக்குமோ சேர்?''

அதிபருக்கு தகவல் சொல்லப்பட்டது. அதிபர் சிரித்துக் கொண்டு சொன்னார், ''இவர்தானப்பா புதுசா வந்திருக்கிற வாத்தி!''

''புதுசா வந்தவர் 'றிப்போட்' பண்ணாம, ஏன் சேர் கடற்கரையில போய் நிற்கிறார்?''

''டவுனில் படிப்பிச்ச வாத்திய டவுனில இருந்து கழட்டி இங்கால அனுப்பிறான் என்டோனேயே நினைச்சன். இது ஏதாவது கேசாகத்தான் இருக்கும் என்று வந்ததும் வராததுமாக கடற்கரையில் உலாத்துது... இன்னும் என்னென்ன தொல்லை தருமோ?'' அதிபர் அலுத்துக் கொண்டார். பரமேஸ்வரனை அதிபர் அழைத்ததாகக் கூற ஒரு மாணவன் கடற்கரைக்குப் போனான்.

***

தோசையும் சாம்பாரும் வயித்தை கலக்குமாப்போல இருந்தது. பரமேஸ்வரன் ஜீன்சை கழட்டி போட்டுவிட்டு சரத்தை கட்டிக் கொண்டான். வாளியை எடுத்துக்கொண்டு டொயிலெட் நோக்கிப் போனான். அவன் மனைவி, அவன் டொயிலெட்டுக்குள் போய் கதவு மூடும்வரை பார்த்து கொண்டு நின்றாள். பின் பாடசாலைக்கு வெளிக்கிடும் குழந்தைக்கு உதவ உள்ளேபோனாள்.

டொயிலெட்டுக்குள் போன பரமேஸ்வரன் பின் இரண்டு மூலையையும் உற்றுப் பார்த்தான். மேலே நிமிர்ந்து பார்த்தான். டொயிலெட்டில் குந்தினான். திரும்ப இரண்டு மூலையையும் திருப்பி ப்பார்த்து எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான். பாம்புச்செட்டை ஒன்று முன்பக்கப்புதரில் சிக்கிக் கிடந்தது ஞாபகம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவு முழுவதும் புதர் மண்டிக்கிடந்தது. துப்பரவாக்க வேண்டும். டொயிலெட்டும் மணமடித்தது. ''ஹாபிக்'' வாங்கி கழுவவேண்டும். இண்டைக்குப் பள்ளிக்கு லீவு போட்டாத்தான் இதெல்லாம் முடியும். லீவு போடுறதெண்டால் மனிசி கத்துவாள். அவள் வேலைக்கு போகும் மட்டும் டொயிலெட்டுக்குள் இருப்பதென்று முடிவு செய்தான்.

மகன் பாடசாலைக்கு வெளிக்கிட்டுப்போனான். அவள் வேலைக்குப்போக ஆய்த்தமானாள். மணி பார்த்தாள். 7.20. பரமேஸ்வரன் போகவேண்டிய பஸ் வரும் நேரம். டொயிலெட் கதவு பூட்டியே இருந்தது. பஸ் தெருவோரப் புழுதியையெல்லாம் வீட்டுக்குள் அனுப்பி விட்டுப் போனது. "அப்பா... பஸ் போகுது" ''போகட்டும்... அடுத்த பஸ்ஸில் போறன்.'' அவள் கவலையானாள். ''கடவுளே வேலை போகாம இருந்தால் சரி.'' அவள் முணுமுணுத்துக் கொண்டாள். தன் வேலையை உறுதிப் படுத்தவேண்டும் என்ற வேகம் அவள் படலையை சாத்தியதில் தெரிந்தது. அவன் டொயிலெட் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினான்.

தொடர்ந்து ஒருவாரமாக 7.20க்கு பரமேஸ்வரன் டொயிலெட் போனான். வாசல் பக்க புதர்கள் மட்டும் சுத்தப்பட்டிருந்தன. டொய்லெட் தொடர்ந்தும் மணம் அடித்தது. அவள் அலுத்துக் கொண்டாள். அடம் பிடித்தாள். அழுது பார்த்தாள் டொய்லெட் வாளியை ஒழித்துப் பார்த்தாள். அவன் சிரத்தை அற்று நாளை போவேன் என்று தினமும் சத்தியம் செய்தான். அவள், அவன் தாய்க்கு கடிதம் எழுதிப்போட்டாள்.

***

''ஊரவன் என்ர பிள்ளையை விமர்சிக்க நீ என்ன தெருவெல்லாம் பர அடிச்சனியா?''

"இந்தாள் பஞ்சிப்பட்டு வேலைக்கு போகாமல் இருக்கு தெண்டு சிவஞானத்திட்ட சொன்னனான். அவன்தான் இவர் பஞ்சிப்பர்ர மாதிரி தெரியேல்ல. பயப்பிடுற மாதிரி தெரியு தெண்டு.''

''அத்தாண்டி நானும் கேக்கிறன். அவனுக்கு தெரியுமாடீ என்ற புள்ளய, என்ற அவர் எப்படியெல்லாம் வளர்த்தவரென்டு?"

"அவன் பிறக்கேக்கேயே ஆம்பிளப்பிள்ளை பிறந்திருக்கெண்டு, செத்தையில உலக்கையால் தட்டி பயம் தெளிவிச்சவர்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிள்ள மூச்சு வாங்கி விக்கல் எடுக்கிறவரைக்கும் தலைக்கு மேல் எறிஞ்சு பிடிப்பார். பிள்ள முழுசிர முழுசைப்பார்த்தா சிரிப்புத்தான் வரும்.''

''இருட்டைக் கண்டு பயப்படுறான் என்று சொல்லி இருட்டு அறைக்கை நாள்பூரா பூட்டி வைச்சு பயம் தெளிவிச்சவரடி.''

''கடல் தண்ணியக்கண்டா புடிச்சிருக்கிற கையைப் பறிச்சு கொண்டு ஓடுவான். அவர் பொடியனைப் பிடிச்சு தலைய தண்ணீக்க அமிழ்த்தி அமிழ்த்தி எடுத்து விட்டார் என்டா பொடியன் பயத்தில குளிரில நடுங்குமாப்போல உதடு துடிக்க மூச்சு வாங்கி, விக்கல் எடுத்து நிக்கிறதப்பார்த்தா சிரிச்சு வயிறு நொந்து போகும்.''

''ஊஞ்சலில் வைச்சு ஒரு உன்னு உன்னி விட்டார் எண்டா பெடி ஊஞ்சல் கட்டின மரத்தின்ட கிளையில முட்டி வருவான். ஆடி முடிஞ்சு தூக்கினா அவன் கழுத்தப்பிடிச்சுக் கொண்டு கண்ண மூடிருவான். என்னதான் பயந்தாலும் புள்ள ஒருநாள் கூட பயந்து வீரிட்டுக் கத்தினதில்ல. அப்படி பயம் தெளிஞ்ச பிள்ளையை நீயும் அவனுமாக சேர்ந்து பூச்சாண்டி காட்டிறியள் என்ன...''

இந்த மனுசி ஏன் தொண்ட வச்சுக் கத்துது? அவன் ஒரு மாதிரி ஆமி I.C. (அடையாள அட்டை) எல்லாம் எடுத்துக் குடுக்கிறவனாம். அவன் சிவஞானம் பிறகு கண்டதெல்லாம் சொல்ல என்ர பாடு சிக்கலாயிரும். இந்த மனிசி தொண்ட வைக்கிறத்துக் கெண்டே பிறந்தது. ''அனே தொண்ட வச்சுக் கத்தாம இருக்கிறதெண்டா இங்க இரு. இல்லாட்டா வெளிக்கிட்டு போ'' பரமேஸ்வரன் தெருவுக்குப் போனான்.

சினிமாப் படத்தில் வரும் வழக்காடு மன்றக்காட்சி போல் ஊமையாக மனைவியுடன், தாய் சண்டை போட்டாள். பின் வெளிக்கிட்டு போனாள். அவன் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தான். மனிசி இன்னும் தொல்லைதரும். அவன் பாடசாலை போவதென்று முடிவெடுத்தான்.

***

எண்ணெய் வழியும் சில முகங்கள். கோபமாக சிலவும், பிரஞ்ஞை அற்று சிலவும், பவுடர்போட்டு தெளிவான முகத்துடன் சிலவும், பவுடர் போட்டும் வன்மத்துடன் சிலவுமாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தன. முப்பத்தாறு முகங்களும் அவனுக்கு எதிரானவை என்பதை அவன் உறுதியாக தீர்மானித்தான். இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கில் இரண்டு முகங்கள் ஒன்றை ஒன்று வன்மத்துடன் பார்த்தன. பின் ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டன. அவன் அவர்களிடம் போனான். அமைதியாக இருக்கும்படி கேட்டான். ஒருவன் மற்றவனை ஏதோ சொன்னான். மற்றவன் புத்தகப்பையில் இருந்து கத்தியை உருவினான். பரமேஸ்வரன் இரண்டடி பின்வாங்கினான்.

''தம்பி கத்திய உள்ள வை.'' ''மாட்டன்.'' ''உனக்கு கத்தி எங்கால?'' ''களவெடுத்தனான்.'' ''இப்ப ஏன் கத்தி எடுத்தனி?'' ''எனக்கு கோவம் வந்தா குத்துவன்.'' ''உனக்கு ஏன் கோவம் வரும்.'' ''எங்கம்மாவைப்பத்தி தப்பா சொன்னா... எனக்கு கோவம் வரும்.'' ''தம்பி கத்திய உள்ளவை.'' ''மாட்டன்.'' அவன் முறைத்தான். பரமேஸ்வரன் வகுப்பறையை விட்டு வெளியேறினான்.

''சேர் வகுப்பில் ஒருத்தன் கத்தி வைச்சிருக்கிறான். கேட்டாத் தாறான் இல்ல. முறைக்கிறான்.''

''என்ன சேர். ரெண்டு, கன்னத்தில குடுத்து வாங்கிறதுக்கு?'' அந்த ஆசிரியன் சுத்த வீரனானான். நேராக அந்த மாணவனிடம் போனான். ''எங்கடா கத்தி?'' அவன் கத்தியை வெளியே எடுத்தான். முழுப்பலத்தையும் தன்கையில் சேர்த்து, அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். உலகம், அந்த மாணவனுக்காக ஒருமுறை இருண்டது. அவன் கன்னத்தில் கை வைத்து வாங்கில் சாய்ந்தான். ஆசிரியன் கத்தியைப் பறித்தான். கத்தியில் கூர் பார்த்தான். கொச்சிக்காய், வெங்காயம் வெட்ட உதவும் என்று நினைத்திருப்பான். மடித்து பொக்கட்டுக்குள் போட்டான். பரமேஸ்வரனைப் பார்த்து வீர சிவாஜி சிரிப்புடன் வெளியேறினான். பரமேஸ்வரனைப் பார்த்து அவன் முறைத்தான். ''மவனே எனக்கா அறை வாங்கித் தந்தனி? இன்டைக்கு பள்ளிக்கூடம் விடுறத்துக்கிடையில உன்கதை கந்தல்.'' பரமேஸ்வரன் முறைப்பை ஊகப்படுத்திக் கொண்டான். வகுப்பறையை விட்டு மீண்டும் வெளியேறினான்.

''தம்பி, பரமேஸ்வரன் வாத்தீட்டப்போய் மெடிக்கல் ரிப்போட் வாங்கி வா.'' அதிபரின் கட்டளைக்கு அந்த மாணவன் இசைந்தான். வேகமாகப் போனான். சிறிது நேரத்தில் திரும்பி வந்தான்.

''சேர் கடற்கரையில் கூட பரமேஸ்வரன் வாத்தி இல்ல சேர்.'' ''நல்லது நீ போ.'' அதிபர் தலையாட்டினார்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் முன் கதவு திறந்து கிடந்தது. பரமேஸ்வரனுக்கு மனைவி மீது கட்டுக்கடங்காத கோபம் வந்தது. அவள் தன் வேலைகளில் அசட்டுத்தனமாக ஈடுபடுவதில்லை என்ற உணர்வு உறுத்தியது. திருடர்கள் யாராவது கதவை உடைத்துத் திறந்திருக்கலாம். அவன் இல்லாததை அவர்கள் உளவு பார்த்திருக்கிறார்கள். தான் இன்று வீட்டில் இருந்திருந்தால் இதை தடுத்திருக்க முடியும் என்று நினைத்தான். வேகமாக வீட்டை நெருங்கியவன் நின்றான். சில வேளை திருடர்கள் இன்னமும் உள்ளே இருக்கலாம். வீட்டை சுற்றிக் கொண்டு பின்னே போனான். அறை, யன்னல் கதவுகள் பூட்டப் பட்டிருந்தன. அவள் கவனமாகத்தான் பூட்டிவிட்டு போயிருந்தாள். சுற்றிக்கொண்டு ஹோல் பக்கம் வந்தான். ஹோல் யன்னல் கதவு திறந்திருந்தது. பைத்தியக்காரி எல்லாத்தையும் பூட்டி இதை மறந்து விட்டிருந்தாள். இதற்குள்ளால்தான் தடியை போட்டு முன் கதவை திறந்திருப்பார்கள்.

திறந்திருந்த யன்னலை நோக்கி மெதுவாக முன்னேறினான். தலைக்கு கட்டுப்போட்ட நிலையில் அவன் மகன் படுத்திருந்தான். சட்டென்று யன்னலை நெருங்கினான். தலை கீழாய் இழைக்கப் பட்டு தொங்கும் தோரணங்கள். இரண்டு வேட்டிகள் இணைத்து மேலே வெள்ளை கட்டப்பட்டிருந்தது. தலைமாட்டில் குத்து விளக்கு எரிந்தது. தெப்பை போட்டார்கள். பொற்சுண்ணம் இடித்தார்கள். அவன் வேகமாக உள்ளே போனான்.

மகனின் மூக்கின் மேல் விரல் வைத்துப் பார்த்தான். உஷ்ணக் காற்று கையில் பட்டது. ''தம்பி,'' அவன் கண் விழித்தான். பாட சாலையில் ஓடி விளையாடும் போது காயம்பட்டது என்று சொன்னான்.

தாய் மருந்து கட்டி வீட்டில் கொண்டுவந்து விட்டதைச் சொன்னான். தாய் மீண்டும் வேலைக்குப் போனதும் சொன்னான். அவன் இன்று அரைவாசியுடன் வந்தது நல்லதாகப் போய் விட்டதாகக் கருதினான். மகனைப் படுக்கச் சொல்லி தான் உடைமாற்ற உள்ளே போனான்.

மனைவி வந்ததும் சண்டை போட்டான். காயம்பட்ட பிள்ளையை தனிய விட்டுச் சென்றது பிழை என்றான். ''நான் லீவு போட்டு பிள்ளையை கவனிப்பன். நீ வேலைக்கு போ,'' என்றான். அவள் பயந்தாள். தான் லீவு போடுவதாக அவள் வாதாடினாள்.

அவள் காயம்பட்ட பிள்ளைய தனிய விட்டுச் சென்றது பிழை என்று திரும்பத்திரும்பச் சுட்டிக்காட்டினான். தன்னால் குழந்தையைப் பார்த்துக் கொள்ளமுடியும், நீ வேலைக்கு போ என்றான். சிரத்தை எடுத்து மகனைக் கவனித்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயம் ஓரளவு ஆறி மகன் பாடசாலை போகத் தொடங்கினான். அவன் வேலைக்குப் போவதுபற்றி எண்ணவில்லை.

அவள் அவனுடன் வாதாடிப்பார்த்தாள். சில சமயம் மனநல மருத்துவரிடம் காட்டலாம் என்று எண்ணினாள். பஞ்சிப்பட்டு வேலைக்குப் போகாமல் இருப்பதை மருத்துவரிடம் காட்டினால் தன் கணவனுக்கு பைத்தியக்காரப்பட்டம் கட்டிவிடுவார்கள் என்று பயந்தாள். தன் வேலையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவள் உறுதியெடுத்தாள்.

***

அவன் தன் காத்தாடி பறக்கும் என்பதில் சோர்வுக்கு மத்தியிலும் திடமாக நம்பினான். அவன் நீண்ட நேரமாக காத்தாடியைப் பார்த்துக் கொண்டிருந்தான். தீடீர் என்று ஏதோ ஒன்று அவன் சிந்தையை தாக்கிற்று. கடல் அலைகள் ஆர்ப்பரித்தன. காலநிலை குளிர்ச்சியாக மாறியது. தென்றல் சீண்டியது. தென்னோலைகள் ஆர்ப்பரித்தன. அவன் இடது பக்க மூலையுடன் மெல்லிய தடி ஒன்றைக் கட்டினான். காத்தாடியை பறக்கவிட்டான்.

காத்தாடி இப்போது இடது பக்கம் சாய்ந்தது. பால்மா பக்கட் விளம்பரங்களில் வரும் சிறுவர்களைப் போல் அவன் புயங்களை மடித்து முஸ்டி காட்டி தன் வெற்றியை கொண்டாடினான்.

சரிநிகர் (இலங்கை) -1997 - மீள்பிரசுரம்
அம்மா சஞ்சிகை 1998 (பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்துதான்...

விலா எலும்புக்குள் வயிற்றுத் தசைகளை தூக்கி கொழுவி விட்டது போன்று வலியை உணர்ந்தாள். ஒவ்வொரு முறை நிமிர எத்தனிக்கும் போதும் வலி உயிரை வதைத்தது. தொடர்ந்தும் முதுகைக் கூனிக்கொண்டிருக்கவே முற்பட்டாள். பசி... பசியாகத்தான் இருக்க வேண்டும். கொட்டாவி வேறு தொண்டை மட்டும் வந்து நின்று போனது, தாங்க முடியாத ஏமாற்றத்தை அவளுக்கு கொடுத்தது. சுத்தமாகக் கழுவி துடைத்து வைத்தது போல் தெருவும் கட்டடங்களும், புழுதி மணலும் எரிக்கும் வெயிலில் பளிச்சிட்டன.

கூசும் கண்ணை வெட்டி வெட்டி மூடுவதும் புழுக்கத்தை ஆசுவாசப்படுத்துவதற்காக முனகிக் கொண்டும் எரிக்கும் வெயிலில் சீமெந்துக் கானில் குந்தி மதில் சுவரில் தலை சாய்த்திருந்தாள். ஆனாலும் அவள் தெருவைக் கூர்ந்து அவதானித்தபடியே இருந்தாள். தெரு சனநடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடிப் போய்க்கிடக்கிறது என்ற நினைப்பு அவளைத் துணுக்குறச் செய்தது. தலையை உயர்த்தி, வெட்டி, ஆட்டி, பின் சுருக்கி, உடம்பை உலுக்கித் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள். எண்ணத்தை மாற்றப் பார்வையை அங்க இங்க என்று அலையவிட்டாள். பார்வை கோபுரத்திற்கு கீழ் கிடந்த கம்பிக் கூண்டில் நிலைத்தது.

கோபுரத்தின் நிழல் அந்தக் கம்பிக் கூண்டில் படாமல் வெட்டிக் கொண்டு போனது. வேப்பமரத்தின் நிழலும் கம்பிக் கூண்டுக்கு வர நேரம் செல்லும். வேப்பமரத்தில் காகம் அடைத்த குரலில் ஒரு முறை கத்தியது. இரைந்து கத்தினால் அது இருக்கின்ற இடத்தைக் காட்டிக் கொடுத்து விடும் என்ற பயத்தில்தான் அது மெதுவாக ஒரு தரம் கத்திவிட்டு அடங்கியதாக அவளுக்குப்பட்டது. வலி... திரும்பவும் வலி... திரும்பவும், அவள் பார்வையும் சிந்தனையும் அந்தக் கம்பிக் கூண்டில் நிலைத்தது.

பகல் முழுவதும் எரித்த வெயிலில் கிடந்து போக்கு வெயிலின் சூட்டை வைத்திருக்கும், இந்த சீமெந்து கான் வெக்கையில் குண்டி தீய்ந்து போகிறது. அந்தக் கூண்டில் கை பட்டால் பொக்களம் கிளம்பலாம் என்று தான் அவளுக்குப்பட்டது. கம்பிக் கூண்டுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கின்ற அந்தக் கருங்கல், மணலுடன் சேர்ந்து புழுதி நிறமாகவே அவளுக்கு தென்பட்டது. எரிக்கும் வெயிலில் அது தட்டையாகத் தெரிந்தாலும் அது தட்டையாக இருக்க முடியாது. வெயிலில், அந்தக் கல், சாதாரணமாக மணலில் கிடந்தால் அதை வேறுபடுத்தி பார்க்க தோன்றாதுதான். ஆனால் அது கம்பிக் கூண்டுக்குள் கிடப்பதால்தான் கொதிக்கிற புழுதிமணலையும் அதில் கிடக்கிற அந்தக்கல்லையும் அதைச் சூழ கிடக்கின்ற சிதறுதேங்காய் சில்லுகளையும்கூட வேறு படுத்திப் பார்க்க முடிவதாக எண்ணினாள். இன்னும் கொஞ்சநேரத்திற்குப் பிறகு தேங்காய் சிதறினால் அந்தக் கல்லும் இளனி படும் மணலும் தேங்காய் சில்லுகளும் கூண்டுக் கம்பிகளும் கூட நிறம் மாறும். வலி... திரும்பவும் வலி... பசிதான். முகத்தில் வழிந்த வியர்வையை சோட்டியால் துடைத்தவள், வெடுக்கென தலையை பின்னுக்கு இழுத்து தலையை நிமிர்த்தி நல்ல காற்றை சுவாசித்தாள்.

ஊத்தை படிந்து, வியர்வையில் நனைந்து, வெயிலில் காய்ந்து மொறு மொறு என்று இருந்தாலும் இந்த சோட்டி இல்லாவிடில் வெயில் தின்றுதான் போடும். முகத்திலும் சோட்டியின் கிழிசலுக்குள்ளாலும், வெயில் சுள்ளிடுகிறது. குண்டிக்கும் சீமெந்து தரைக்குமிடையில் வேர்த்திருப்பதால் அங்கு வெக்கை, முளை வந்த நெல்லுச் சாக்குக்குள் கைவிட்டது போன்று இருப்பதை உணர்ந்தாள். சோட்டி நாறுகிறதா? கான் நாறுகிறதா? என்று ஊகிப்பவள் போன்று இருந்தாள். இங்கிருந்து நகரமுடியாது. நகரவும் கூடாது. அவர்கள் தேடி வரலாம். இந்த இடத்தில் இருந்தால்தான் அவர்கள் எந்த சந்தியால் வந்தாலும் தப்பி ஓடிவிடலாம். அவள் தெருவை கூர்ந்து அவதானிக்கத் தொடங்கினாள்.

கூர்ந்து பார்க்க முடியாது, உச்சந்தலைக்கும் கண் புருவத்திற்கும் இடையில் வலி. விண்டு விண்டு வலிக்கிறது. வலி தாங்காமல் கண் கலங்குவதும், மூக்கை அரித்துக் கொண்டு நீர் வழிவதும், அவளுக்கு எரிச்சலைக் கொடுத்தது. நிழலில் இருந்தால் சுகமாக இருக்கலாம். ஆனால் அது முடியாது. அவர்கள் எந்தநேரமும் தேடிவரலாம். அங்கிருந்து பார்த்தால் தான் தெருவின் இருமுனையும் தெளிவாகத் தெரிவதாக நம்பினாள். திடீர் என்று துணுக்குற்று தெருவின் முனையை உற்று உற்றுப் பார்த்தாள்.

தெருமுனையில் யாரோ இருவர் வருவது கலங்கலாகத் தெரிந்தது. இல்லை. இவர்கள்... அவர்களாக இருக்க ஏலாது, இவர்கள் வேட்டி கட்டி இருக்கிறார்கள். வேட்டித்தலைப்பு காலை இடர இடர வேகமாய் வாறாங்கள். கிட்ட வந்திட்டாங்கள். அவங்கட பார்வையும் சரியில்லை. ஏன் உத்து உத்துப் பார்க்கிறாங்கள். அவர்களையும் சந்தேகத்துடனேயே நோக்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதுகளுக்கு வெய்யில், சூடு, வெக்கை, ஒண்டும் தெரியாதா?''

''நடந்து போற எங்களுக்கே தலையைச் சுத்துது. இது நிலவில் இருக்கிறமாதிரி இருக்குது.''

என்னவோ குசுகுசுக்கிறாங்கள். இவங்களையும் நம்பமுடியாது. எழும்பி அங்கால போவது நல்லது என்று அவளுக்குப்பட்டது. அவங்கள் திரும்பிப் பார்க்காமல் போறாங்கள்... அதுவும் நல்லதுதான்... எழும்பி அந்த கடைத் தாழ்வாரத்திற்கு போகலாம்... அங்க இருந்து பார்த்தாலும் தெருவின் இருமுனையும் தெரியலாம் என அவளுக்குத் தோன்றியது.

எழும்பி தார்ரோட்டில் சூடுபடாமல் கால் பாவ ஓட்டமாய் தெரு தாண்டி, சுடுமணலில் கால் புதையப்புதைய ஓட்டமாய் கடைத் தாழ்வாரத்தை போய்சேர மூச்சு முட்டி கண் இருட்டிக்கொண்டு வந்தது. கால் நிழலுக்கதான் இருக்கிறதா என்று நம்ப முடியாமல், சுடுவதை அவள் உணர்ந்தாள். சுடுகுதா இல்லை விறைச்சிற்றுதா என்று அவளால் உணரமுடியாது இருந்தது. மணலுக்கும் காலுக்கும் இடையில் முள்ளுக்குத்துவது போல அரித்தெடுத்தது.

முன்தட்டிக் கப்பில் சாய்ந்து கண்மூட எல்லாம் இருண்டு போனது. வயிறு நக்கலாய் சத்தம் போட்டது. சடக்... முடக்... வெளியிலும் சத்தம் கேட்குமோ என்று அவளுக்கு சந்தேகமாய் இருந்தது. வயிற்றுக்குள் இருந்து நெஞ்சை எரித்துக் கொண்டு ஏதோ ஒன்று மேலே கிளம்பி வந்தது. தொண்டைக்குள் காரமும் புளியுமாய் திரவம் ஓடித்திரும்ப நெஞ்சை எரித்துக்கொண்டு வயிற்றுக்குள் அடங்கிற்று. மூக்குக்குள்ளால் அழுகல் நாத்தத்தை தாங்கி உஸ்ணக்காற்று வெளியேறியது. மூக்கு அரிப்பு தாங்க முடியாமல் அவளுக்கு கண் கலங்கியது.

கண்ணைத் திறக்க, கலங்கின கண்ணுக்குள் கடை தெரிந்தது. கடைக்குள் நல்லவெளிச்சம் இருந்தது. கடைக்காரர் மேசையில் குப்பறக்கிடக்கிறார். கடைப்பொடியன் ஸ்றூலில் குந்தி கண்ணாடியில் தலையை சாய்ச்சு தூங்குகிறான். அட, இந்தக் கடைக்கையும் நிறைய சட்டி முட்டி எல்லாம் கிடக்கு! அவள் திடுக்கிட்டு தன் பார்வையை கூர்மையாக்கினாள். ஒண்டு இரண்டு முட்டி தான் சிவப்பு நிறத்தில் கிடந்தது. மிச்சமுட்டி எல்லாம் பழுப்பு கலந்த ஊத்தை சிவப்பு நிறத்தில் கிடந்தது. சிலவேளை இந்தமுட்டிகளுக்கையும் அந்த பழைய சாமான்தான் இருக்கு மோ... அவள் உடல் ஒருமுறை உதறிப்போட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த முட்டி வேணும்." கடைக்காரன் திடுக்கிட்டு எழும்பினான். வாயில் வழிந்த எச்சிலையும் கழுத்து வியர்வையையும் சறத்தில் துடைத்தான். திரும்பி அவளை முறைத்தான். முறைச்சு முறைச்சு பார்க்கிறான். இவனையும் நம்பமுடியாது... அவள் பயத்துடன் பார்வையை கடைப்பையனிடம் திருப்பினாள். அவன் விருட்டென்று எழும்பி பலகை ராக்கையில் அடிவாங்கி முழுசி முழுசி பார்க்கிறான். பாவம்... அவள் அவனை பரிதாபமாகப் பார்த்தாள்.

"ஆர்றா இவள்? விட்டா அடிப்பாள் போலகிடக்கு."

"தெரியேல்ல ஐயா. இரண்டு மூன்று நாளா இது வழிய உலாவுது. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொண்டு புதுசு புதுசு உலாவுது."

"சக்... வெடுக்கு நாத்தம். கன்னத்தில் சிதல் வேற வழியுது. ஓடு ஓடு சனியனே முட்டியும் இல்லை ஒரு கோதாரியும் இல்ல. ஓடு, ஓடு அங்கால."

அந்த முட்டிக்கு மேல. மேல வரிசை வரிசையாக அடுக்கியிருக்கிற முட்டிக்கு மேல, பச்சையா ஏதோ... அட... கிளி. அதுவும் பஞ்சவர்ணக்கிளி. அட பஞ்சவர்ணக்கிளி மங்கிப்போகுது. அதுவும் T.V. இல காட்றமாதிரி சின்ன சின்ன. வர்ணவர்ண சதுரங்களாய் பஞ்சவர்ணக்கிளி மங்கிப் போயிற்று. அவள் ஏதோ வெறுமையை உணர்ந்தாள். அட, என்ன ஆச்சரியம்! திரும்பவும் அதே மாதிரி முறையில் கிளியின் உருவம் மெல்ல மெல்ல உருக் கொள்ளுது. ஐயோ... இது என்ன. கிளி நெஞ்சுவிறைச்சு படபடக்க உதடு உலர்ந்து போய் துடித்தது. அவள் கீழே விழுந்து விடுவோமா என்ற பயத்தில் தள்ளாடினாள். இது என்ன கிளி, ஊத்த பிரவுன்ல சொண்டு. உடம்பு முழுக்க ஊத்தைப் பச்சை, ஊத்தை மஞ்சள், ஊத்தை கறுப்பு உடம்பிலையும் ஊத்த பிரவுன், அவள் கண்ணை மூடி உடம்பை சிலிர்த்து தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு கண்ணைத் திறந்தாள். திரும்பவும் சின்னச் சின்ன. வர்ண சதுரமாய் கிளி மங்கிப்போனது. அவள் நிம்மதியாய் பெருமூச்சு விட்டாள். அட... இதென்ன தொல்லை, திரும்பவும் உருக்கொள்ளுது? ஐயையோ... இது என்ன இது...! ஏதோ ஒரு ஊத்தை கலரில் இரண்டு பக்கமும் சிறகு முளைச்ச முட்டி ஒண்டு. ஐயோ... முட்டி இறகை அசைச்சு பறந்து வருகுது. பறந்து வந்து கடைப் பொடியன்ட காலுக்கு கீழே குந்திற்று. ஐயோ... எனக்கு தெரியும், அது என்ன என்று எனக்குத் தெரியும். அவள் வெகுண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்குத் தெரியும்... எனக்குத்தெரியும். முட்டிக்குள்ள என்ன இருக்கெண்டு. எனக்குத் தெரியும். நீங்கள் எல்லாம் சனத்தை சாகடிக்கப் போறீங்களடா, உங்கள எல்லாம் சும்மா விடக்கூடாதடா.''

''அட... சக்... வேகிற வெய்யில்ல சனியன் கடைக்கு முன்னால நிண்டு கத்துது. ஏதாவது வாய் உடைஞ்ச முட்டி இருந்தா தூக்கிப் போடுடா. கொண்டு போகட்டும் சனியன்.''

கடைப்பொடியன் அசட்டையாக முட்டியைத் தூக்கினான். பாவம், அவனுக்கு எப்படித் தெரியும். கைதவறி விழுந்தா என்ன ஆகும் என்று அவனுக்கு எப்படித் தெரியும். அவன் தூக்கிப் பொத்தெண்டு போட்டிருவான் போல. அவள் திடுக்கிட்டாள்.

''கீழே பொத்தெண்டு போடாதடா. மெதுவா... மெதுவா... மெதுவா. அப்பிடித்தான். கீழே... மெதுவா வை... வை.'' எட்டநின்று குனிந்து முட்டியை உற்றுப் பார்த்தாள். முட்டி வெறுமையாகக் கிடந்தது. அவள் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். நிமிர எத்தனித்தபோது நிமிர இயலாமல் முழங்கால் சில்லு வழ வழப்பாய் காலோடு ஒட்டாத மாதிரி, நிமிர இயலாமல் விழுந்து விடுவது போல் தள்ளாடி, பின் கடைத்தாழ்வாரக் குந்தில் இருக்கப்போனாள்.

''அட... திமிரப் பார்ரா திமிர...! அடோய்... அடோய்... இதில குந்தப் போகுதடா.... தண்ணி எடுத்து வந்து ஊத்தடா. சனியன் அங்கால தொலையட்டும்.''

கனரக வாகனத்தின் இரைச்சல் தெருவில் கேட்டது. பெரிய வாகனத்தின் விட்டுவிட்டு உறுமும் பேரிரைச்சலும் கேட்டது. சந்தியில் ஓடிப்போய் நின்று பார்த்தால் அது என்ன வாகனம் என்று தெரியலாம். அவள் வாகன இரைச்சலை உன்னிப்பாகச், செவிமடுப்பது போல காணப்பட்டாள்.

''அட... தண்ணி ஊத்தெண்டு சொன்னோன்ன ஓடுற ஓட்டத்தைப் பார்ரா...! இதுகள் பயித்தியமா, இல்லாட்டி பயித்தியம் மாதிரி நடிக்குதுகளா எண்டு தெரியயில்லை.

நாய்களின் குரைப்பொலி அவளை அருண்ட தூக்கத்தில் இருந்து விழிப்புக்குக் கொண்டு வந்தது. ஏன் இந்தக் குரை குரைக்குதோ தெரியவில்லை. இந்த நாய்களே காட்டிக் கொடுத்திடும் போல கிடக்கு. நிம்மதியாய் தூங்க முடியாமல் புரண்டு படுத்தாள். அண்ணியும் வீட்டில் இருப்பதாக அவளுக்குப் படவில்லை. அறைக்கதவும் பூட்டி இருந்தது. வெளிப்பக்கமாகத்தான் பூட்டி இருக்க வேண்டும். அண்ணியையும் நம்ப முடியாது. நேரே அவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டி வந்து காட்டாட்டியும் ஊர் முழுக்க கதைத்தே விசயத்தைப் பரப்பிடும். கதவு திறந்திருந்தாலும் என்ன நடக்குதெண்டு பார்க்கலாம். நாய்களின் வேகமான குரைப்பொலி அவளை வெருளவைத்தது.

''அண்ணி...! அண்ணி...! கதவைத்திறவுங்கோ அண்ணோய்...! எங்க போய் துலைஞ்சுதுகளோ.'' கத்தவும் முடியாமல் ஆரோ ஏறி நெஞ்சுக்கு மேலே இருந்து கொண்டு தலையை அமத்திப் பிடிக்கிற மாதிரியும், அடிச்சுப் போட்ட மாதிரி கைகால் சோர்ந்து போய் கிடப்பதையும் உணர்ந்தாள். கூச்சல் போடமுடியாமல் அவதிப் பட்டாள். தனியாக விட்டுப்பூட்டிற்றுப் போனவர்கள் தானே. அவர்களுக்கு நல்ல பாடம் படிப்பிப்பது என்று தீர்மானித்தாள். அவள் எழுந்து நின்றாள். அவளுடன் சேர்ந்து, அந்த அறையும் ஆடியது. எங்கோ அதலபாதாளத்தில் போவது போலும் பின் மேல் எழுவதும் இடம் வலம் என்று அறையுடன் சேர்ந்து தாழ்வதும் பின், மிதப்பதுமாய் இவ்இவ் என்ற இரைச்சலுடன் அவளை எங்கெங்கோ தூக்கி வீசுவது போலவும் அவள் சட்டென்று பக்கத்தில் இருந்த தையல் மெசினில் கையூன்றி கண்களை மூடிக்கொண்டாள். மூடிய இமைக்குள் ஏதோ கனதியான கருமையான ஒன்று ஊடுருவுவது போல உணர்ந்தாள். இயலாமையும் சோர்வும் அவளை ஆத்திரப் படவைத்தன. ஆத்திரத்துடன் தையல் மெசினை கீழே தள்ளும் முனைப்புடன் தள்ள, தையல் மெசின் சரிய, கால் தடுமாற மெசினுடன் சேர்ந்து அவளும் வீழ்ந்தாள். தையல் மெசின் விழுந்து நொறுங்கிய சத்தம் நாலா பக்கமும் சிதறியது. சுவரில் தலை மோத, பலகீனமும் சோர்வும் அவளை மெல்ல மெல்ல நினைவிழக்கச் செய்தது.

''ஐயோ....! இதொண்ட வைச்சுக் கொண்டு மனிசன் படுறபாடு. போடா போய் கொப்பரக் கூட்டியாடா. போகேக்க சொன்னன், குளுசையைக் குடுத்திற்று போங்க எண்டு... விசர்மனிசன் பேசாமல் போயிட்டுது.''

''ஏன்டி... இப்ப... கத்துறாய்...!''

''போய் பாருங்க, உள்ள என்னத்தப் போட்டு உடைச்சாளோ.''

''சரி சரி கத்தாம தண்ணியையும் குளுசையையும் கொண்டா.''

அண்ணனும் அண்ணியும் எங்கோ தூரத்தில் கிணற்றுக்குள் இருந்து கதைப்பது போல் அவளுக்கு கேட்டது. காதுக்குள் ஏதோ வாகனம் எல்லாம் ஓடுவது போல. ஊம்... ஊம்... ஒரே இரைச்சல். எங்கோ அதல பாதாளத்தில் கிடப்பது போல உணர்ந்தாள். கொடுப்பு இரண்டும் பலமாக நெரிபட்டது. ''அம்மா'' தொடர்ந்து வாய்க்குள் தண்ணி ஊற்றப்படுவதையும் வாய்க்குள் ஏதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியாய் இரண்டு உருளுவதையும் வாய்க்குள் தண்ணி நிறைந்து கடவாயில் வழிவதையும் உணர்ந்தாள். தன்னிச்சையின்றி தண்ணியை விழுங்கினாள். கட்டியாக உருண்டது தொண்டைக்குள் அடைத்துக் கொண்டது. மூச்சு முட்டியது நெஞ்சு வலி தாங்கமுடியாமல் உடம்பு ஒரு உதறு உதறிப்போட்டது. தண்ணி மட்டும் வயிற்றுக்குள் போனது போலவும் கட்டி நெஞ்சுக்குள் அடைபட்டு நிற்பது போலவும் உணர்ந்தாள். காதுக்குள் இன்னும் பலமாக வாகனம் ஓடுவது போல். இரைச்சல்... இரைச்சல்... இரைச்சல்.

எங்கோ மெல்லிருள் சார்ந்த மேகக் கூட்டத்திற்குள்ளால் போவது போல் இரைச்சல்... இரைச்சல்... இரைச்சல். காதுக்குள் பலமாக வாகனம் ஓட்டுவது போல்... தட... தட... தட... ஐயோ ரெயின். கண் திறக்க முடியாமல் இரண்டு கண்ணும் அயர் கட்டிப் போய் இருந்தது. கண் இடுக்கியில் பூளசாரி காய்ஞ்சு போய்க் கிடந்தது. கையால் நோண்டி எடுத்து கண்ணைத் திறக்க, அறை முழுவதும் வெளிச்சமாய் கிடப்பது அவளுக்கு வியப்பை தந்தது. எப்படி இவ்வளவு வெளிச்சம், கண்ணைக் கூசுவது போல். சில் என்று காற்று படுவது அவளுக்கு இதமாக இருந்தது. ''தட...... தட...... தட...... தா...... தெப்.''

''அத்தை.''

''அட விவேக்குட்டி....! குஞ்சு...! இப்பிடி ஓடி வந்து குதிக்காத. அத்தைக்கு தலை இடிக்குது.''

''சரி அத்தை.''

''ஆர் கதவைத் திறந்து விட்டது?''

''நான்... நான்... அத்த.'' அறைக்க வர ஏலாம ஒரே நாத்தமாய் கிடந்தது. அம்மாவும் நித்திரைதானே. அதுதான் திறந்துவிட்டனான்.''

''ம்...''

''அத்த, நீங்க ஏன் இப்ப வடிவா வெளிக்கிட்டு டீயூசனுக்கு எல்லாம் போறதில்லை?''

''அத்த, உங்கட சுருட்ட முடிஎல்லாம் கொட்டுப் பட்டு, கொஞ்ச முடிதான் தலையில இருக்கு.''

''ம்...''

''உங்களுக்கு கிட்ட வர ஏலாம ஒரே நாத்தமாக கிடக்கு அத்த.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ம்...''

''அத்த, உங்கட... உங்கட... உப்பின வெள்ள சொக்கு கருத்து ஒட்டி, பல்லெல்லாம் வெளியில் தெரியுது.''

''ம்''

''அத்த, நீங்க ஏன் அந்த பஸ்சில போனீங்க? அந்த பஸ்ஸில போனதால தானே உங்களுக்கு இப்படி வந்தது எண்டு அம்மா சொன்னா.''

''என்ன... என்ன... என்ன சொன்னனி?'' அவன் திடுக்கிட்டு முழுசி பின்வாங்கினான். பாவம் பயந்திட்டான். இவன வெருட்டி என்ன செய்யிறது. இந்த அண்ணிக்கு ஆரோட என்ன கதைக்கிற தெண்டு தெரியாது. வாஞ்சையுடன் அவனைப் பார்த்தாள்.

''அப்பு, இப்படி எல்லாம் கதைக்கக் கூடாது என்ன.....?''

''சரி.... அத்த.''

''தெருவில் நாய் குரைக்குது. என்னெண்டு பார்.''

''அது எங்கட பிரவுனி, அத்த அது. ரோட்டால வேற நாய் போகுது, அதுதான் குரைக்குது.''

''இல்லையப்பு. பிரவுனி கடுமையாக குரைக்குது. என்னெண்டு பார்த்திற்று வா.''

''சரி அத்த.''

அவன் பார்க்கப் போனான். பாவம் விவேக்குட்டி. அதுக்கு என்ன தெரியும். அண்ணிக்குத்தான் விசர். நாய்களின் கடுமையான குரைப்பொலி அவளுக்கு பயத்தை தந்தது. தட... தட... தட... தட... தெப். ''அத்த. அது. நாயப் பார்த்து குரைக்கயில்ல.'' ''என்ன... நாயப் பார்த்து குரைக்கயில்லயா? அப்ப... ஆர் ரோட்டில் நிற்கிறது.''

''ஐயோ அத்த அது நாயுமில்லை, ஆக்களும் இல்ல. மாடுநிக்குது.''

''ம், சரி. அத்த நித்திரை கொள்ளப்போறேன். பக்கத்தில் இருந்து கொள். ஆரும் வித்தியாசமா வந்தா அத்தய எழுப்போனும் என்ன?''

''சரி அத்த. அத்த, படுங்க, நான் தடவி விடுகிறன்... என்ன?

''சரி.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தடவி விடத் தொடங்கினான். பாவம் விவேக் குட்டி, எவ்வளவு நல்லம். தலை விறைக்குது. சா... முதுகத் தடவிவிட எவ்வளவு சுகமாக இருக்கு. அவள் மெல்ல கண் மூடினாள். கண் அயர் கட்டிப்போனமாதிரி நோகுது. திரும்பவும் காதுக்க ஏதோ சத்தம். ஊம்... ஊம்... ஊம்... இரைச்சல்... இரைச்சல்... இரைச்சல். எங்கோ அவள் அதளபாதாளத்தில் எல்லாம் பயணப்படுவது போல் இரைச்சல். இரைச்சலோடுதான் அந்த பஸ் வந்து நின்றது. கூடையோடு அந்த அம்மா இடிச்சு முண்டி ஏறினாள். அவசரப்படாமல் அவ ஏறவிட்டு, பின் இறங்கிறவரையும் இறங்க விட்டு பஸ்சுக்குள் ஏறினாள். சனவெக்கை முகத்தில் அறைந்து தாக்கியது. பஸ் உலுப்பலுக்கு ஈடுகொடுத்து தடுமாற்றத்தை ஈடுசெய்து கொண்டு இருக்க சீற் தேடினாள். பின்நீட்டு சீற்றில் நடுவில் மட்டும் ஓர் இடம். ஒரு பக்கம் கூடையோடு ஏறின மனிசி. மற்றப்பக்கம் ஒரு இளம்பொடியன். அதில் இருக்க அவள் தயங்கினாள். அவன், அவள் முகத்தை பார்த்துவிட்டு தான் இருந்த பக்கம் இன்னும் ஒதுங்கி இருந்தான். அவன் முகத்தில் ஒரு இளம் புன்னகை இருந்து கொண்டே இருந்ததாக அவளுக்குப்பட்டது. இதுக்குப் பிறகும் அந்த சீற்றில் இருக்காட்டி அவனைக் கேவலப்படுத்தினதாய் போகும் என்று நினைத்தபடி அந்த சீற்றில் குந்தினாள். அவன் தனக்கு முன்னால் இருந்த கடதாசிப் பேப்பரால் வாய் மூடி இருந்த தயிர் முட்டியை காலுக்கு கீழ் தள்ளி விட்டு விட்டு கால் நீட்டி இன்னும் ஒதுங்கி இருக்கிறான். அடுத்த கோல்ட்டில் பஸ் நிக்க, ஒரு வயசான மனுசி ஏற, அவன் தன்ர இடத்தைக் கொடுத்துவிட்டு முன்னுக்கு போய் நின்றான். அடுத்த ஸ்டொப்பில் ஆர் வயசானவங்க ஏறினாலும் எழும்பி இடம் கொடுப்பது என்று அவள் முடிவு செய்தாள். அவன்ட முகத்தில் இன்னும் புன்னகை அப்பிடியே இருந்தது. சீச்சி... அவன் சிரிக்க இல்ல. அவண்ட மீசை முகத்தை சிரிச்ச முகமாய் காட்டுது. நல்ல காலம் அவன் சிரிக்கிறான் என்று நினைத்து சிரித்து அசடு வழியாமல் விட்டது என்று நினைத்துக் கொண்டாள். அடுத்தடுத்த ஸ்டொப்பில் ஏறினவங்கள் எல்லாம் தண்டு தரமான இளமாக்களாய் ஏறி வெறுப்பேத்தினார்கள். சனம் கூட அவன் பஸ்சின் நடுப்பகுதிக்கு போய்விட்டான். அடுத்த ஸ்டொப்பில் ஒரு பெண். கையில் குழந்தையுடன் ஏறினார். பெண் ஏறிவர முன்னமே எழும்பி இடம் கொடுத்தாள். அந்தப் பெண் சிரிப்பிலேயே நன்றி சொல்லிவிட்டு இருந்தாள். இடிபட்டு திரும்பி கம்பிய பிடிச்சுக்கொண்டு திரும்பிப் பார்த்தாள். நடுவில் அவனைக் காணவில்லை. பஸ் ஸ்டொப்பில் நிக்குது. அவன் இறங்கிப் போனான். அவனுடைய தலைமட்டும் தான் தெரியுது. பஸ் கடந்து போகுது. அவன் தயிர் முட்டியை விட்டிட்டு இறங்கிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு தூக்கி வாரிப்போட்டது. அவனுக்கு அதை எப்பிடி தெரிவிப்பது என்று துணுக்குற்று நிமிர பின்னுக்கு நின்டவரை இடித்து, முன்னுக்கு நின்டவருடன் மோதினாள். பஸ்சுக்குள் அவளை வினோதமாயப் பார்த்தார்கள். திடீர் என்று பஸ்ஸை ஆரோ பிடிச்சு உலுப்பி விட்டமாதிரி காற்று அலை அலையாக உஸ்... என்று காலுக்கு கீழே அடிச்சுக் கொண்டு போனது. முகத்தில் ஏதோ மோதி குளிர்ச்சியாய் சில்லென்றுபட்டது. அவளுக்கு உடம்பு சிலிர்த்து விறைத்தது.

''ஐயோ... குழந்தையிட கால், ஐயோ... முகம் எல்லாம் ரெத்தம்!''

''இல்ல அத்த கை... இஞ்ச... கைதான்....''

''என்ன கையா...? அப்ப கால்...!''

''இஞ்ச... கால்... துடையில இருக்கு.''

''கால்... துடையில இருக்கா...?''

''ஓம்... அத்த. நான் கையத்தான் முகத்தில் வைச்சனான்.''
''அப்ப... இரத்தம்...?''

''நீங்க கனவு கண்டிருக்கீங்க அத்த.''

''கனவா...?''

''ஓ... கனவு தான்....''

திடுக்கிட்டு எழும்பியதால் கழுத்து சுளுக்கிவிட்டது போன்று அவளுக்குப் பட்டது. திரும்பவும் தலையணையில் தலைசாய்த்து காலை மடித்து நெஞ்சுக்குள் குறுக்கி கொண்டு கண் மூடினாள். இரைச்சல்... இரைச்சல்... இரைச்சல். எங்கோ மெல்லிருள் சார்ந்த மேகக் கூட்டத்திற்குள்ளால் போவது போல்.

***

எங்கோ மெல்லிருள் சார்ந்த மேகக் கூட்டத்துக்குள்ளால் போவது போல் இரைச்சல்... இரைச்சல்... இரைச்சல். அவள் கண்ணைத் திறந்தாள். வெளிச்சம் சுவரில் பட்டு முகத்தில் அறைந்தது. அவள் கண்ணை மூடினாள். இரைச்சல்... அவள் வலிந்து பிரயாசைப்பட்டு கண்ணை திறந்தாள். சுவரில் குட்டிப் பல்லியொன்று இரையை இலக்கு வைத்து மெல்ல மெல்ல ஊர்ந்து வந்து நின்றது. பூச்சி பல்லிக்கு கிட்ட ஊர்ந்து போனது. பல்லி பதுங்கி பாயத் தயாரானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயப்போகுது... பாயப்போகுது. உச்சந்தலையில் இடி விழுந்தது போல் பல்லி ஒன்று சத்தம் போட்டது. திடுக்கிட்டு பதறும் நெஞ்சைப் பிடித்தபடி எழும்பி இருந்தாள். அறை சுற்றத் தொடங்கியது. தலையை உதறி உடம்பை சிலிர்த்து தன்னை, ஆசுவாசப்படுத்தினாள். உச்சந்தலையில் அடித்தது போன்று பிரவுனியின் குரைப்பு அவளுக்கு ஆத்திரத்தை கொடுத்தது. இவன்... விவேக்குட்டி எங்க போனானோ. கதவில் கை ஊன்றி எழும்பி நின்றாள். அறையை விட்டு வெளிவர. கண் வெளிச்சத்துக்கு ஓரளவு பரிச்சயப்பட்டிருந்தது. விவேக்குட்டி தாய்க்கு பக்கத்தில் நல்ல நித்திரை. அவள் கோல் தாண்டி வெளியே வந்தாள். வெயில் கண்ணைக் கூசச் செய்தது. பிரவுனி செத்தைக்குள் எதனுடனோ போராட்டம் நடத்திக் கொண்டிருந்தது. பின்னால் போய் அதன் தலையில் எதையாவது போட வேண்டும் போலிருந்தது. சுற்றி பார்வையை ஓட விட்டாள். அருகிலிருந்த பட்டுப்போன பூமரச் சாடியை பிரயாசைப்பட்டு தூக்கினாள். தூக்கி கொண்டு நடக்க முற்பட்டாள். தொடர்ந்து தான் ஒரேயிடத்தில் நிற்பதை அவள் உணர்ந்தாள். பிரவுனி செத்தைக்குள் தன் போராட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பியது. பூச்சாடியுடன் நிற்கும் அவளைக் கண்டு பிரவுனி மிரண்டது. முதலில் அவளைப்பார்த்து ஆக்ரோஷமாய் குரைத்தாலும் பின் அவளை இனங்கண்டு கொண்டு வாலை ஆட்டி குலைத்துக் கொண்டு அவளை நோக்கி ஓடி வந்தது. ஓடிவரும் பிரவுனியைக் கண்டு மிரண்டாள். தடுமாறி கீழே விழுந்தாள். அவள் விழுந்த வேகத்தில் பூச்சாடி எகிறி ஓடிவந்த பிரவுனியின் முகத்தில் மோதியது. பிரவுனி துடித்து சுருண்டு ஊளையிட்டது. அவள் கையிலும் முகத்திலும் சிராய்ப்புடன் எழும்பி நிற்க முற்பட்டாள். பிரவுனியின் ஊளைச்சத்தம் கேட்டு அண்ணி எழும்பி ஓடி வந்தாள். உடைந்து கிடக்கும் பூச்சாடியையும் துடித்து ஊளையிடும் பிரவுனியையும் சிராய்ப்புகளுடன் நிற்கும் அவளையும் பார்த்து தான் பெரிய யுத்த சூழலுக்குள் நிற்பது போல உணர்ந்தாள். வேகமாய் உள்ளே பாய்ந்து விவேக்குட்டியை இழுத்துக் கொண்டு தெருக்கதவை திறந்து தெருவுக்கு ஓடினாள்.

''ஐயோ... இனி இந்த வீட்டில் இருக்கேலாது. இண்டைக்கு நாயின்ர தலையில பூச்சாடியை போட்டவள், நாளைக்கு என்ட பிள்ளையின்ட தலையில போடமாட்டாள் எண்டு என்ன நிச்சயம். அவள் இருக்கிறவரைக்கும் இனி இந்த வீட்டில் இருக்க மாட்டன்.

அண்ணியின் கூச்சலில் தெருநாய்கள் மிரண்டு குரைக்கத் தொடங்கின. அவள் தெருவுக்கு வந்தாள். ஒவ்வொரு வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலிலும் அவளை மிரட்சியுடன் பார்த்தார்கள். இவங்கள் பதுங்குகிறார்கள், பிடிச்சுக் கொடுக்கப்போல. அவள் இரைக்கும் மூச்சுடன் ஓடத் தொடங்கினாள்.

அவங்கள் வந்துகேட்டா சொல்ல வேண்டும், ஒண்டும் தெரியாதென்று. அவங்கள் என்ன, எவங்கள் வந்து கேட்டாலும் ஒண்டும் தெரியாது. அதுதான் பதில். முட்டி என்ன மாதிரி, என்ன கலர், என்னத்தால் மூடியிருந்தது? என்ன கேட்டாலும் தெரியாதுதான் பதில். கொண்டு வந்தவன் எப்படி உயரமா? கட்டையா? என்ன உடுப்பு போட்டிருந்தான்? தெரியாது, தெரியாது. தெரியாதுதான் பதில். அவள் நிமிர்ந்து மின் கம்பத்தில் உடம்பை சாய்த்துக் கொண்டாள்.

அது என்ன மாதிரி முட்டி? ஊத்த சிவப்பு நிறத்தில் அவனும் ஏதோ ஊத்த கலர்ல. சீச் சீ... அப்பிடி ஒன்றையும் பார்க்கவில்லை. அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவள் தன் சிந்தனையை கலைக்க எண்ணி தெருவில் போவோர் வருவோரை புதினம் பார்க்கத் தொடங்கினாள்.

நாகரீகமாக வெளிக்கிட்டுக் கொண்டு ஆணும் பெண்ணுமாய் இருவர் அவளை தாண்டி போனார்கள். அவன் புதுசு புதுசாய் எல்லாம் போட்டுப் போறான். பெண்ணும் அதுக்கு குறைவில்லாமல் போட்டுபோறாள். எங்கோ தூரப் பயணத்தால் போகிறார்கள் போல. வேர்த்து, களைத்து, போட்டிருக்கிற உடுப்புக்கும் அவங்களுக்கும் சம்மந்தமில்லாததுபோல அரியண்டமாக இருப்பதாக எண்ணினாள். பெண்ணின் கையைப் பார்த்தவள் திடுக்கிட்டாள். ஐயையோ! முட்டி வைச்சிருக்கு மனிசி, அதுகும் தயிர்முட்டி. இதுகளுக்கு என்ன பயித்தியமா? சாகப்போகுதுகள்...! அதே முட்டிதான். அதே முட்டிதான். அதப் பறிச்சு எறிஞ்சிற்றுதான் மற்ற வேலை. சீச்சி தூக்கி எறியக்கூடாது. மெதுவா தூரக்கொண்டே வைச்சிட்டுதான் மற்ற வேலை. அவள் எழும்பி அவர்களை துரத்தத் தொடங்கினாள்.

''ஐயோ... பைத்தியம் தயிர் முட்டிய பறிச்சுக் கொண்டு ஓடுது.''

''அது பறிக்கும் மட்டும் நீ என்ன கனவு கண்டனியா? அட தம்பிமார். புடியுங்கடா அது, தயிர்முட்டியை பறிச்சுக் கொண்டு ஓடுது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதென்ன இந்த பொடியங்கள் மொக்குப் பொடியங்களாகக் கிடக்கு. வழிய மறிச்சுக் கொண்டு தடியும் கல்லுமா நிக்கிறாங்கள். இவங்களுக்கென்ன விசரா...? கல்லுப்பட்டா என்ன நடக்கும் எண்டு இவங்களுக்கு தெரியுமா...? முட்டியை நெஞ்சோட பொத்திப் பிடிச்சு குனிஞ்சு கொண்டு கல்லும் படாமல் ஒரே ஓட்டமாய் அவங்களை தாண்டி ஓடினாள். ''எறிடா... எறிடா. கொண்டு ஓடுது. விடாத... எறி... எறி.''

வேகமாய் காற்றில் விசிறி வந்த தடி அவள் நாரியில் மோதி தெருவில் விழுந்தது. அவள் வலி தாங்காமல் குனிய வேகமாய் வந்த கல்லு அவள் பிடரியில் மோதியது.

''ஐயையோ... அம்மா.''

காதடியில் மண்டை உடைந்து இரத்தம் வடிந்தது. பிரடி சுரீர் சுரீர் என்று வலித்தது. இனியும் இதைக்கொண்டு ஓடினால் ஆபத்து என்று நினைத்தாள். முட்டியை பக்குவமாய் தெருவில் வைத்து விட்டு தள்ளி ஓடினாள்.

''டேய்... முட்டிய கீழ வைச்சிற்றுதடா. எப்பிடி எறி. ஐயாட குறிதவறாம பிடரியில...''

''ஐயோ... என்ன இந்தப் பொடியன்கள் அந்த முட்டிய நெருங்கிறாங்கள். இவங்களுக்கு என்ன பைத்தியமா?'' காதடியில் விண் விண் என்று வலி தாங்கமுடியாமல் அவள் மயக்கம் வரும் போல் உணர்ந்தாள். பொடியங்கள் அதை நெருங்கிறாங்கள். கூடாது, கூடாது. ''அத தொடாதேங்கோ. அத தொடாதேங்கோ. எனக்கு நல்லாத் தெரியும், அது அதே பழைய சாமான் தான். தொடாதேங்கோ.''

''முந்தநாள் வாரதெண்டு இருந்ததால தங்கிற வீட்டுக்காரருக்கு குடுக்க எண்டு முந்தநாளே வாங்கினது, அதுக்குள்ள பழுதாப் போயிருக்குமா? திறந்து பார்க்காம இது எப்படிக் கண்டு பிடிச்சது.''

''பைத்தியங்களுக்கு எதையும் ஊடுருவிப் பார்க்கிற தன்மை இருக்கெண்டு கேள்விப்பட்டிருக்கன் வெருளாம வா.'' ''தொடாதேங்கோ. தொடாதேங்கோ. அது அதே பழைய சாமான் தான்.'' அவள் இரத்தம் வழியும் பிரடியை பொத்திப்பிடிச்சுக்கொண்டு ஓடினாள்.

புதிய களம் (இலங்கை) - (சஞ்சிகை) - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளுநீ லேபிள்

“வீர வணக்கம்” அஞ்சலிப் போஸ்டரில் புன்னகைக்கும் மருமகளுக்கு இந்த முன் கதைச்சுருக்கம் சமர்ப்பணம்.

அவள் கடைவாயிலிருந்து இரண்டு கோரப்பற்கள் நீண்டன. அந்த மெல்லிய பொலீத்தின் தடுப்புத்திரைகளை அவை ஆவேசத்துடன் கிழித்தெறிந்தன. உப்பிப்போன பேத்தை வயிற்றின் மேல் சிறுத்துக் கிடந்த முலைகளுடன் தாயின் உடம்பு மல்லாக்காய் கிடந்தது. நீண்டு நெடுத்து குப்புறக்கிடந்தது, தந்தையின் உடல். கோரப்பற்கள் ஆவேசத்துடன் அவர்கள் உடல்கள் மீது பாயந்து, பின் அவர்கள் அலற... அலற... உடல்களை நார் நாராகக் கிழித்துப் போட்டன. அம்மா சொல்வாள், “உனக்கு அந்த தெத்திப் பல்தான் அழகடி.” அவள் மூடிய உதடுகளுக்கிடையில் தெத்திப்பல் நெருடுவதை உணர்ந்தாள். அவள் கழுத்துவரை போர்த்திக் கிடந்த போர்வையை இழுத்து தலையையும் மூடிக் கொண்டு தரையில் சுருண்டு படுத்தாள். மெல்லிய பொலித்தீன் திரைக்கோ தன் போர்வைக்கோ விகாரமான முனகல் ஒலிகளை தடுக்கும் ஆற்றல் இல்லை என்பதையும் அவள் உணர்வாள். அந்த அகதி முகாமின் சுவர்களில் எல்லாம் முனகல்களும், பிதற்றல்களும் முண்டி நெருங்கி ஒன்றன்மேல் ஒன்றாகப் படிந்தன. எல்லாச் செவிகளும் விழித்துக்கிடந்தன. காற்றில் முனகல் ஒலி பயப்பீதியுடன் உலாவியது. அந்த அகதி முகாமின் மூலை முடுக்குகள் தோறும் அவளைக் கண்ட போது ஆண்கள் தலையைத் துண்டால் மூடி முனகினார்கள். பெண்கள் உதட்டைப்பிதுக்கி தங்களுக்குள் இடித்து மௌனமாய் கிசுகிசுத்தார்கள்.

“உன்ர உடம்ப தள்ளி நின்டு பாக்கவே குடுத்து வைச்சிருக்க வேனுமடி... தொடக்கிடைச்சிருக்கெண்டா?”

பைப்படியில் ஒருவன் முக்கலும் முனகலுமாய்ச் சொன்னான். ஒருவன் அடித்தொண்டையால் சிரிக்கத் தெரியாமல் கமறினான். சிரிக்கத் தெரியாதவன் அவளைத் தனிமையில் சந்திக்க நேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்களில் அவளை அதிகம் நேசிப்பதாகச் சொன்னவன். அவனுக்கும் மேற்பல் தெத்திப்பல். அவள் முகத்தில் முட்கள் முளைத்தன. தோல் நன்னுப்படாமல் நகத்தின் முனைகளால் முட்களின் முனைகளை கிள்ளி இழுத்தாள். வேர்கள் அழுகிப் போன முட்கள் சுலபமாக பிடுங்குப்பட்டன. சில முட்களின் வேர்கள் மூளைவரை புரையோடிப்போய்க் கிடந்தன. அவற்றைப் பிடுங்க அவள் பயப்பட்டாள். அவை அவளைப் பைத்தியமாக்கி விடக் கூடும். சில முட்களைப் பிடுங்கியபோது அவற்றின் நீண்ட வேர்கள் முகத்தின் மிக மென்மையான தசைகளை கிழித்து காயப் படுத்தின. அதன் ரணமும் வடுவும் முகத்துடனேயே தங்கிப் போய் விட்டன. முட்களைப் பிடுங்கப் பிடுங்க புதிய முட்கள் முளைத்தபடி இருந்தன. அவளுக்கு சொந்தமாய் வீடு இருந்தது நினைவில் இருக்கிறது. அம்மா அவளுக்கும் தனக்குமாய் முகப்பவுடர்கள் வாங்கி வருவாள். அப்பா பட்டு வேட்டி கட்டி கோயிலுக்குப் போய் வருவார். பின் அவள் அந்த அகதி முகாமின் பொலித்தீன் திரைகளுக்கிடையில் இருந்து காணாமல் போனாள். அவளால் வேறு என்ன செய்ய முடியும் என்று சிலர் அனுதாபப்பட்டார்கள். சிலர் அவளை டவுனில் ஒருவனுடன் கண்டதாகச் சொன்னார்கள். எப்போதும் எந்த விஷயமும் தங்களுக்குத் தான் முதலில் தெரிய வரும் என்று காட்டிக் கொள்பவர்கள், அவள் பெயரை பயம் கலந்த மரியாதையுடன் உச்சரித்தார்கள். அவளுக்கு வேறு சில புனைபெயர் களும் இருப்பதாக அவர்கள் தங்கள் பேச்சில் காட்டிக் கொண்டார்கள்.

இனி...

ஒதுங்கி நிற்குமாறு அவர்கள் சைகை காட்டினார்கள். சரசுக் குஞ்சி சுடுமணலில் நின்றாள். இனி எங்கும் அசையமுடியாது. நடந்து வந்தபோது தெரியாத வெய்யிலின் தகிப்பு ஒரே இடத்தில் நிற்கும் போது இன்னும் அதிகமாய் வறட்டுவதை உணர்ந்தாள். சரசுக்குஞ்சி தெருவுக்கு முதுகு காட்டி நின்றாள். மெல்ல கால்களை நகர்த்தி புல்தரை நோக்கி நகர்ந்தாள். வெய்யிலில் கிடந்த காய்ந்த புல்தண்டுகளில் கால்பட்ட போது சுள்ளிட்ட சூடு அவள் உச்சந் தலையை தாக்கிற்று. அவள் சட்டென்று பச்சை புற்களின் மீது தாவினாள். முள்ளந்தண்டில் இருந்து உருண்ட வியர்வை சின்னி விரலில் தேங்கி கூடைக்குள் காய்ந்து போய்க்கிடந்த தோடங்காய்கள் மீது ஊறியது. தூரத்தில் இராணுவ வாகனத் தொடர் அணியின் உறுமல் கேட்டது. தெரு இயக்கமற்று உறங்கிப் போனது. கடுமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுமலுடன் முதல் வாகனம் சரசுக்குஞ்சியை தாண்டிப்போனது. சரசுக்குஞ்சி அந்த நார்க்கூடையின் கைப்பிடியை இறுக்கிப் பிடித்தாள். அவள் உடல் அதிகமாக வியர்த்தது. நெஞ்சுக் கூட்டுக்குள் இதயத்தின் துடிப்பு வலிக்கிறது. இன்னும் இன்னும் அழுத்தமாய் நார்க்கூடையின் கைப்பிடியை இறுக்கிப் பிடித்தாள். அவளுக்கு உள்ளூர அச்சம் பரவி இருந்தது. நார்க்கூடையை அந்த இராணுவ வாகன தொடர் அணி மீது வீசிவிடுவோமா என்று பயந்தாள். வீசி விட்டால்... நினைப்பின் கடுமையில் அவள் தள்ளாடினாள். மின் கம்பத்தின் கட்டம் போட்ட வெள்ளைத் தகட்டில் ஒளிரும் சிவப்பு எழுத்துக்களின் அச்சுறுத்தும் ஒளிக்கோடுகள் வான்முழுவதும் வியாப்பிக்கின்றன. மலேரியாக் காய்ச்சல்காரி போல் உடம்பு வெடவெடத்து நடுங்குகிறது. நார்க் கூடையின் கைப்பிடியில் கிடந்த முடிச்சு கையை உறுத்துகிறது. முடிச்சின் உறுத்தலே தன்னை மனப்பிரமைக்கும், சுயநினைவுக்கும் இடையில் அந்தரத் தவிப்புடன் வைத்திருக்க உதவுவதாக உணர்ந்தாள். பின் அவர்கள் கை அசைத்தார்கள். தெரு மெல்ல மெல்ல இயக்கம் கொண்டது.

சரசுக்குஞ்சி கையை விசிறி முழங்காலில் கூடை இடிபட, நடந்தாள். அவள் உள்ளங்கை சில நாட்களாய் தொடர்ந்து அரிக்கிறது இரண்டு, மூன்று நாட்களாய் செலவு அவளைப் பாடாய்படுத்துகிறது. இன்றும் உள்ளங்கை அரிக்கிறது. அவள் கணவன் இருந்த காலங் களிலும் அவள் உள்ளங்கை அரித்திருக்கிறது. அப்போதெல்லாம் அவள் அவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தவளாக இருந்தாள். கள்ளமரம் அரியப் போன சரசுக்குஞ்சியின் கணவன் பிடிபட்டான். பின் அன்று வெடித்த குண்டு வெடிப்பின் முக்கிய சூத்திரதாரியாக அறிவிக்கப்பட்டு காணாமல் போனான். உள்ளங்கை அரிக்கும் போது அவன் ஞாபகம் வருகிறது. அதிகம் முயங்கும்போது மாத்திரமே அவன் "குஞ்சி" என்று முனகுவதை அவன் பிடிபட்ட காலங்களில் அவள் சொல்லித் திரிந்த பிறகுதான் சரசு..., சரசுக் குஞ்சியானாள். இப்போது அவளுக்கு யாரின் தயவும் எரிச்சல் தருகிறது. அன்று அவனுடைய தயவுக்காக வாசலில் காத்துக் கிடந்த நாட்கள் அவமானமாய்ப்படுகிறது. அவன் தயவில் அவள் தன் சுதந்திரத்தை அவனிடம் முற்றுமாக அடைவு வைத்து விட்டது போல் தோன்றுவதை உணர்ந்தாள். அவனிடம் எப்போதுமே அவள் பகிர்தல் என்பதை உணர்ந்ததோ அறிந்ததோ இல்லை. சரசுக்குஞ்சி சென்றி தாண்டி இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசுக்குஞ்சி சென்றி தாண்டியதுமே எல்லாம் மாறிப்போகும். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கற்கால வாழ்க்கை முறைமாறிப் போகும். மரக்கொட்டுகளுக்குள் சேவல் கூவுவதும், மரக் கூண்டுக்குள் பசுக்கள் அடைக்கப்படுவதும். நிசப்தத்தைக் குலைக்கும். எப்போதாவது கேட்கும் கூவல் அழைப்புக்களும், சில் வண்டுகளின் தாளலயமும் சில வேளைகளில் அடிக்கடி கூவி வரும் ''செல்லும்'' 21-ம் நூற்றாண்டை ஞாபகப்படுத்திக்கொள்ளாமல் போனால், அமைதியில் உறைந்து கிடக்கும் அந்த பிரதேசம் சரசுக்குஞ்சி சென்றி தாண்டியதும் மாறிப் போகும்.

சரசுக்குஞ்சி பிரதான வீதிக்கு வந்திருந்தாள். தேத்தண்ணிக் கடையில் ''குலுக்கி வைச்ச கொக்கோக் கோலா'' போல எவளோ ஒருத்தி கரகரத்த தொண்டையில் ஈய்ந்து இழுபட்டு வந்தாள். அவளை விட்டு விலகி ஓடும் சைக்கிள்காரர். அவளை நோக்கி வரும், எதையோ பறிகுடுத்துவிட்ட தவிப்பில் இயங்கிக் கொண்டிருப்பவர். நாயை ஞாபகப்படுத்தும், ஒரு சில்லு உயர சரிந்து கிடக்கும் ஆட்டோ. மசமசவென்று எதையோ பேசிக் கொண்டு இயங்கும் பெண்கள். ஆரோ ஒருவனின் கூச்சலுக்கு சட்டையைத் தூக்கிக் காட்டி ''பசிவயித்தில் இல்ல, இங்க'' என்று கூவும் மனநோயாளிப் பெண். எல்லாம் அவள் தன் கணவனுடன் பார்த்த பழைய தமிழ் சினிமாவின் நகர வீதிக் காட்சி போல் அவள் பார்வைக்குள் வந்தது. சரசுக்குஞ்சியின் பார்வை ஒவ்வொரு முகம் மீதும் கூர்மையாய் நகர்ந்தது.

குடும்பச் சுமையின் மன அழுத்தத்தில் சோர்ந்து போன முகம் எதையோ தெருவில் எதிர்பார்த்து வெறித்துக் கிடந்தது. இடுப்பில் இருந்த குழந்தையோ காலை உதைத்து உதைத்து கதறி அவள் உயிரை எடுத்தது. அவள் சிரத்தையற்று தெருவை எதிர்ப்பார்ப்புடன் வெறித்து நின்றாள். சரசுக்குஞ்சி அந்த முகத்தில் இருந்து தன் பார்வையை நகர்த்தினாள்.

அந்த தகர வேலி கொண்ட வீடுகளை சரசுக் குஞ்சி இரண்டு தடவை தாண்டினாள். போனவாரமும் அந்த வீடுகளை அவள் இரண்டு தடவை கடந்திருந்தாள். அந்த முகங்கள் அவள் நினைவில் சலனமாய் உருக் கொண்டன. அவள் அதைப் பற்றிக் கவலைப் படவில்லை சரசுக்குஞ்சி நகர்ந்தாள்.

''ஆரை அக்கா தேடுராய்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கீச்சுக் குரல் எங்கிருந்து வந்தது என்பது பற்றியோ அவள் இவளுக்கு எந்த வகையில் தங்கையானாள் என்றோ சரசுக் குஞ்சி ஆராயவில்லை. சிநேகித பூர்வமான புன்னகை தவழ அந்தக் கீச்சுக்குரல்காரி கதவைத் திறந்து வந்தாள்.

''100 குறைச்சு எடுக்கலாம் போலக் கிடக்கு,'' சரசுக்குஞ்சி சட்டென்று தொழிலுக்கு வந்தாள்.

''ஆனா ஒண்டு சொல்லிப் போட்டன்,'' கைமாறின சாமான்கள்.

''ம்.''

''உனக்கு ஒரு பிரச்சினையும் வராது. கடையில எடுக்கிற தென்டா ஆயிரத்தி இருநூறுக்குக் குறையாது. ஆயிரத்தில இருந்து தொளாயிரத்துக்கு இறங்கி வந்திருக்கு. ஒரிஜினல் இந்தியன் எவர்சில்வர். பக்கட் கூட உடைக்கயில்ல.''

''குறைச்சுத் தரமாட்டாங்களா அக்கா?''

சரசுக் குஞ்சி நடக்கத் தொடங்கினாள்

''என்னக்கா ஓடுறாய்... நில்லன்.''

''விளையாடாத. காசு பிளங்கிற சனமாக இருந்தா ஏன் விக்கப் போகுதுகள். ஏதோ ஆடாப்பிலதான் விக்குதுகள். இதுக்குமேல குறைக்கிறது ஞாயமில்ல. விரும்பினா வாங்கு. இல்லாட்டி ஆளவிடு. எனக்கு வேல இருக்கு.''

''அக்கா எதுக்கும் அடுத்த கிழம இங்கால வந்தாவாவன். அவரிட்டையும் ஒருக்காக் கேட்டுப் போட்டுச் சொல்றன்.'' சரசுக்குஞ்சி கூடை முழங்காலில் இடிபட கையை விசிறி நடந்தாள். சரசுக்குஞ்சி தன்தொழில் வெற்றி பெற்றபோதெல்லாம் அதை முழுமையாக அனுபவித்ததாக சொல்ல முடியாது. திமிர்த்தனமாய் ஒருத்தன் அவளிடம் ஆயிரம் ரூபாயை சட்டென்று இழந்தான். அவன் இழந்த வேகத்தில் தன்னைத் தேடிவருவான் என்று சரசுக் குஞ்சி எதிர்பார்த்தாள். அவள் எதிர்பார்க்காதவிதத்தில் அதிகாலையிலேயே நித்திரைப்பாயில் அவளை அவன் மடக்கிவிட்டான். அவனுடன் ஒரு பெண்ணும் வந்திருந்தாள். அந்தப் பெண் அவனுக்கு என்ன முறை என்றோ அவன் எப்படி ஆறு மைல்களுக்கு அப்பால் உள்ள தன் குடிசையை கண்டு பிடித்தான் என்றோ அவள் ஆராய முற்படவில்லை. அவன் அதிகாலையிலேயே வேர்த்திருந்தான்.

''எங்கடி காசு?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசுக்குஞ்சி சட்டென்று இடுப்பில் இருந்து இருநூறு ரூபாயை கொடுத்தாள்.

''மிச்சம் எங்கடி?''

''வீட்ட கொண்டந்து தாறன்.''

''என்ன விளையார்றியாடி?''

சரசுக்குஞ்சி கொட்டில் தட்டியை அகல விரித்துப்போட்டாள்.

''கிடந்தா எடுத்திற்றுப்போ.''

அவனுடன் கூட வந்தவள் தோல்வியை ஒப்புக்கொண்டாள். அருகில் கிடந்த தென்னம் பாளையால் சரசுக்குஞ்சியை விளாசத் தொடங்கினாள். அவன் அவளை இழுத்துக் கொண்டு போனான். அவள் அவனை அழுகுணி மூஞ்சி என்று திட்டினாள். சரசுக்குஞ்சியின் முகத்தில் இளம் புன்னகை ஒன்று தோன்றிற்று. எதிரே ஒற்றையடிப் பாதையில் சைக்கிளில் வேகமாக வந்தவன் கேட்டான்.

''என்னத்த நினச்சிடி சிரிப்பு?''

அவனுக்கு விலத்தி வழிவிட்ட சரசுக்குஞ்சி அடித் தொண்டைக்குள் சொன்னாள்.

''காச்சட்டை சிப்ப பூட்டிற்றுப் போடா.''

கல்லிலும் திட்டிலும் எகிறிக்குதித்து கலகலத்து பின் அமைதியாகிப்போனது சைக்கிள். சரசுக்குஞ்சி மெல்ல புன்னகைத்தபடி திரும்பிப்பார்க்காமல் போனாள்.

''எனது நண்பனுக்கு மனைவியாகமுன்னமே எனக்கும் நண்பனுக்கும் புளூலேபிளுக்கு பைட்சாய் நீலாக்காளி நண்டு பொரித்துத் தந்து, பின் அவசரமாக நண்பனுக்கு மனைவியாகி அண்மையில் மறைந்து போன எனது சகோதரிக்கு இந்தக் குறுக்கீடு சமர்ப்பணம்.''

மோட்டு வளையும், நீப்பைகளும், ஓடுகளும் அவளுடைய வார்த்தைகளை உறுஞ்சி விட்டதாக அவள் கவலைப்பட்டாள். இரத்த வாடையும், கவிச்சல்மணமும் கலந்த வெக்கையில் காற்றோட்டம் அற்றுக்கிடக்கிறது அறை. முனகல்களின் துகள்கள் அந்த அறையின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் நிரந்தரமாய் தேங்கி நின்றன. அவளுக்குப் பார்வை நிலை குத்திவிட்டதாம். சேடம் இழுக்கிறதாம். அவள் அவர்களிடம் கேட்க விரும்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவர்களுக்கும் சேடம் இழுக்குமா... ஆனால் சேடம் இழுக்கிறது. அவள் உடல் விறைத்துவிட்டதை உணர்கிறாள். ஏனென்றால் அவளுக்கு விடாமல் வலித்துக் கொண்டிருந்த அடிவயிறே இப்போது இருப்பதாக தெரியவில்லை. அடிக்கடி துணி மாற்றுவதற்காக அவளை தூக்கும் போது மாத்திரமே தனக்கு தொடர்ந்து இரத்தப்போக்கு இருப்பதை உணர்கிறாள். வெளியில் காற்று கொட்டாங்கா மர இலைகளுடன் புழுதியையும் வாரி அடிக்கிறது. கொட்டாங்கா மர நிழலில் எல்லாவற்றிற்கும் ஆயத்தமாய் வாங்கில்கள் போடப்பட்டிருக்கின்றன. கணவன் நண்பர்களுடன் இருக்கக்கூடும். தங்கை இரத்த வெடில் அடிக்கும் துணியுடன் வெளியில் போனாள்.

''இரத்த வெடிலும் ஒரு வெடில் தான். தலை எல்லாம் கிறுகிறுக்குது.''

''மச்சான், இதுதானே உன்ர மனிசீட தங்கச்சி என்ன?''

''ம்.''

''இவள்ட சாமத்திய வீட்டுக்குச் சோடிக்க வந்துதானே அக்காக்காறிய மாட்டினி... என்ன?''

''ம்.''

''டேய்... அவன் ஏதோ கவலையில் இருக்கிறான். நீ இப்பத்தான் பழசையெல்லாம் கிண்டு.''

''மச்சான், நடந்தது நடந்திற்று. அதுவிதி. அதுக்கு ஒண்டும் செய்ய ஏலாது. அவளுக்கு கொடுத்து வைச்சது அவ்வளவுதான். அவன் என்ன மச்சான் செய்யிறது. அவன் என்ன செய்யிரதை செய்திட்டு நடுவழியில கைகழுவிவிட்டுட்டா போனவன் இல்லையே! ''அப்பலோவுக்கு'' கொண்டேயே வைத்தியம் பார்த்திருக்கிறான். இதைவிட அவன் வேறேன்ன செய்யிறது?''

''ஒரு நாளைக்கு ''அப்பலோவில்'' ரூம் செலவு மாத்திரம் ஆறாயிரம் ரூபா... பன்ரெண்டு நாள்வைச்சுப் பார்க்கிறதென்டால் சும்மாவா?''

''பிறகென்ன மச்சான், அவன் இதைவிட என்ன செய்யிறது? ரெஜிஸ்ரேசனும் முடிஞ்சுது. தாலியும் கட்டினான். அவ்வளவும் காணும் மச்சான். நீ இனி கவலைப்பட ஒண்டும் இல்ல.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ர நிலமையையும் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க. இனி தனிமையில் தான் வாழ்க்கை. எவ்வளவு கொடுமை. பட்ட கடன் அடைக்கிறதுக்குள்ள ஆயுள்முடிஞ்சிரும்.''

''அந்தளவுக்கு உன்ன தனிமையில் விட்டிற மாட்டம் மச்சான். அதுக்கு வேறவழியெல்லாம் இருக்கு.''

''ம்... பாப்பம்.''

''அது சரி மச்சான், நினைவில்லாமல் கிடக்கேக்க எப்பிடி மச்சான் றெஜிஸ்ரேசனுக்கு சைன் வாங்கி?''

''பெருவிரல் அடையாளம்.''

''கைநாட்டு, கில்லாடி மச்சான் நீ. ஆனா ஒண்டு கெட்டிக் காரத்தனமாய் றெஜிஸ்ரேசன் செய்து போட்டாய். இல்லாட்டி கேஸ் வேறமாதிரிப் போயிருக்கும் மாட்டியிருப்பாய்.''

''அந்தளவுக்கு மொக்கன் இல்ல.''

''நான் கேக்கோனும் எண்டு நினைச்சனான். மச்சான், இரண்டு பேரும் கதைச்சுப் பேசித்தானே இவ்வளவு நாளும் எல்லாம் நடந்தது? பிறகு என்னெண்டு மச்சான் நடந்தது?''

''சின்னப் பெட்டைதானே, அசட்டையா இருந்திட்டாள்.''

''மச்சான், இந்தக் கதைய என்னட்ட சொல்லாத. இந்தப் பெட்டையளப்பத்தி உனக்குதெரியாது மச்சான்.

கோவிக்காத சொல்லறன் எண்டு... அவள் பார்த்தாள். நீ இப்படியே இருந்திற்று, காய் வெட்டிருவாய் என்டு பயம் வந்திருக்கும்... உன்ன அமத்திறத்திற்கு இதுதான் ஒரே வழி எண்டு போட்டு அவள் பேசாமல் இருந்திட்டாள். இது தான் நடந்திருக்கும்.''

''சும்மா விசர் கதை கதைக்காதடா. அவள் கலைக்கிறதுக்கு ஒத்து... அவங்கட வீட்டிற்கு கூட தெரியாம அவனோட குருநாகல் மட்டும் போய் வந்தவள்.''

''போடா, அப்ப குருநாகல்ல வைச்சா இது நடந்தது?''

''சீ... நாள் பிந்திற்று எண்டு அவங்கள் ஏலா எண்டு சொல்லிற்றாங்கள்.''

''பிறகு எங்க கொண்டே செய்தனி?''

''முதூர்ல நாட்டு வைத்தியம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாட்டு வைத்தியம்மெண்டு?''

''திரி வைச்சது.''

''திரி வைக்கிறதாடா... நான் ஆக்களுக்குத்தான் திரி வைக்கிறது எண்டு கேள்விப்பட்டிருக்கன். இது என்னடா புதுசா திரிவைக்கிறது...''

''இங்க இருந்துதான் மச்சான்... இந்த திரிவைக்கிறதென்ட சொல்லே வந்தது... திரிவைச்சா, வைச்சதுதான். இருபத்திநாலு மணிநேரத்துக்குள்ள வயித்தில் ஒண்டும் தங்காது... சுத்தம்.''

''போடா...''

''திரிய மூலிகையில உலறப் போட்டிற்று செருகிவிடுகிறது.''

''சீ போடா...''

பல் இடுக்குகளின் நாற்றமும், இரத்த வாடையும், புழுதியும் கொட்டாங்கா மரஇலைகளின் இடைவெளிகளில் சொற்துகள்களாக உறங்கிப்போயின.

இனி...

அடிவயிற்றில் கொந்தளிப்பும் எரிச்சலும் குமட்டலும் உடல் முழுவதும் கொதிப்புமாய் சரசுக்குஞ்சி திரும்பியிருந்தாள். அவள் தன் குடிலை நெருங்கியபோது அவன் வாசலில் குந்தி இருந்தான். அவளைக் கண்டதும் சறத்தை இழுத்துக் கவட்டுக்குள் செருகிக் கொண்டு எழும்பி நின்றான். அவனை சில காலமாய்ப் பழக்கம். அவன் பகல் வேளைக்குப் பின் சுத்தமாக குளித்துவிட்டு வந்திருப்பதை உணர்ந்தாள். அவன், அவளுடன் நிறையவே பகிர்ந்து கொள்கிறான். எண்ணங்களை, உணர்வுகளை, உணர்ச்சிகளை, பகிடிகளை, ஏன் ''புளூலேபிளை'' என்று நிறையவே அவன் அவளுடன் பகிர்ந்து கொள்கிறான். இன்று அவனுடன் பகிர்வதற்கு அவளிடம் எதுவும் இல்லாதது அவன் மேல் எரிச்சலை ஏற்படுத்தியது.

''இதுல என்ன மசிரப்புடுங்கிற்று நிற்கிறாய்?''

அவள் குடிசைத் தட்டியை ஒற்றக்கையால் அகலத்தூக்கிப் போட்டுவிட்டு உள்ளே போனாள். அவன் பின்னே போனான். குடிசை மௌனத்தில் உறைந்து போனது. குடிலுக்குள் ''புளூலேபிளின்'' மணம் ஒங்காளம் எடுக்கும்போல் காற்றில் பரவி இருந்தது. அவன் அவளை சரசு என்று உற்சாகமாக அழைத்துப் பேசத் தொடங்கினான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் தன் உடம்பு முழுவதும் ஆசை இருப்பதாக உணர்ந்த தாகவும்... பிறகு அது தன்ர உடல் முழுதிலையும் இல்லை என்பதை உணர்ந்ததாகவும் அது தன் குறியில் உறைந்து கிடப்பதாக இப்போது உணர்ந்ததாகவும் அவன் சொன்னான்... நீண்ட மௌனத்தின் பின் அவள் சொன்னாள்.

''ஆசை உடம்பிலையும் இல்ல, உன்ர புடுக்கிலயும் இல்ல. உன்ர கற்பனையில் இருந்தது. உன்ர கற்பனைகளையும், கனவு களையும் கலைச்சுப் போட்டுப் பார். உன்ர புடுக்கிலயும் ஆசை இருக்காது.''

பின் குடிலுக்குள் நீண்ட மௌனம் உறைந்து போனது. அவன் அடித்தொண்டையை காறித்துப்பிவிட்டுப் போனான். வியர்த்துக் கிடந்த அவள் உடலில் மெல்லிய குளிர்காற்று போர்வையாய் தழுவுவதை உணர்ந்தாள். பின் அடித் தொண்டையில் 'புளுலேபிளின்' குமட்டலுடன் உறங்கிப்போனாள்.

(பிரசுரமாகாத படைப்பு - 2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பனை நிழல்

ஆதி அந்தம் இல்லாத மதத்தின் பெயராலும், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த மொழியைக் கொண்ட இனத்தின் பெயராலும், பனிபெய்து கூதல் அடிக்கின்ற பின்னிரவு நிலாக்காய்வதுமான விடிகாலைப்பொழுதில் தான் இழந்து விட்ட புனிதத்தை மீண்டும் அடைவதற்கான பிராயச்சித்தச் சடங்கைச் செய்வதென தீர்மானித்தான். பத்தினித் தெய்வத்தின் பெயரால் மடிப்பிச்சை எடுக்கப்போனபோது அவளுக்கு குழந்தை பிறந்ததால் யன்னி கண்டிருக்கக்கூடும் என, ஒற்றைக் கண்ணாடி உடைந்து, உடைந்த கண்ணாடிக்கூடாக கூழாய்ப்போன கண்ணால் பார்த்து வள்ளிக்கிழவி அருகில் இருந்தவர்களிடம் கூறியபோது ஆத்திரமடைந்தாள். இன்னும் கன்னி கழியாது அவதார புருஷன் ஒருவனுக்காக காத்திருப்பதை அவர்களுக்குப் பெருமிதத்துடன் சொல்ல விரும்பினாள். அதன் பின்னரும், உடல் முழுவதும் புழுதியில் புரண்டது போல் ஒன்றோடு ஒன்று முட்டும்போது வளுவளுப்பாக இருப்பதுபோல் உஸ்ணம் பரவி அடி வயிறு கடுமையாக வலித்தபோதும், பத்தினித் தெய்வத்தின் பேரால் ஏழு வீடுகளில் மடிப்பிச்சை எடுத்திருந்தாள். தூய மஞ்சள் நிறத்தைக் கொண்ட பழங்களையே எதிர்பார்த்தபோதும் கறுத்து நசிந்த பழங்களையே அவளால் பெற்றுக்கொள்ள முடிந்திருந்தது. முடி உள்ளதாகவும், கண்கள் அழுகல் அற்றதாகவும், பழக்கப்படுத்தப்பட்ட ஒரு குடும்பப் பெண்ணுக்கே உரிய கரிசனையுடன் குலுக்கிப் பார்த்து தேங்காய்களை தெரிவு செய்திருந்தாள். பலிப்பொருளானது பின் இரவின் பனிக்குளிரில் கொடுகி அவள் மார்புச் சூட்டுடன் நெருங்கி அசைவு காட்டியது. புனிதச் சடங்கிற்கான பலிப்பொருளை அதன் பெயர் சொல்லி அழைப்பது அந்த யாகத்தின் முழுப் பயனையும் தராது போகும் என்பது போல் உணர்ந்தாள். சிக்குப் பிடித்துக் கிடந்த பரட்டைக் கூந்தல் மீதும், தடம் மாறி மாறி இயங்கு நிலையில் இருக்கும் உவர் ஏரியின் நீரலை மடிப்புக்கள் மீதும், வளுவளுப்பான பாசி படிந்த கண்ணா மரங்களின் அடிக்கட்டைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும், கண்ணா மரங்கள் மீது படர்ந்து கிடந்த இருள் மீதும் பின்இரவின் நிலவொளி சலனப்பட்டது. அவள் தற்துணிவுக்கு அப்பால் மெல்லிய சலனமாக தொற்றிய சந்தேகம் முடிவில்லாது வலுப்பெறுவதை உணர்ந்தாள். தலைமூழ்கி சடங்கை ஆரம்பிப்பதா அல்லது சடங்கு முடிந்து தலைமூழ்கி புனிதமடைவதா என முடிவற்ற வினாவுதலுக்கு, இரு தடவைகளும் தலைமூழ்குவது சம்பிரதாயம் என தீர்ப்பளித்தாள். கால்களை மிதமான இளஞ்சூட்டுடன் நீர் சூழ்ந்து கொள்ள, உவர் ஏரியில் இறங்கினாள். கால்கள் குதிவரை சேற்றில் அமிழ்ந்தபோது, அவள் கணவன் அதிகாலை கனவில் இளம் பெண்ணொருத்தியின் முலைகளை பிடிக்க முயன்று, பிடிபடாமல் நழுவும் பெண் பற்றிய ஏக்கத்தில், எச்சில் தலையணை பஞ்சுகளில் ஊற அசடு வழிந்து கோணிப் போன முகத்துடன் உறங்கிக் கொண்டிருந்தான். தலையில் சுருள்சுருளான அடுக்குகளைக் கொண்ட வெண்ணிறத் துணி அணிந்து நீதி சொல்வதான கற்பனை கலைந்து, வெறுமென நற்சான்றிதழ் பத்திரம் வழங்கவோ அல்லது கையொப்பத்தை உறுதிப்படுத்துவதற்காகவோ மட்டுமே சமாதான நீதவான் பதவி பயன்படும் என்பதை அவள் தந்தை உணர்வதற்கு முன், எப்போதோ கந்தபுராணப் புத்தகத்தின் பக்கங்களுக்கிடையில் செருகி வைக்கப்பட்டிருந்த, அவருடைய ஒழுக்க மீறல் நடத்தையைக் காரணம் காட்டி J.P. பதவி பறிக்கப்பட்டதற்கான கடிதத்தை அந்த அதிகாலை வேளையில் கண்டார். கள்ளத் தொடர்பே பதவி பறிக்கப் பட்டதற்கு காரணம் என மனம் நொந்து, கந்தபுராணத்தை மூடி, சாமி அறையிலேயே தன் தலையிலே அடித்துக் கொண்டபோது, குளிரில் கொடுகிய படி உடல் முழுவதும் உஷ்ணம் பரவிக்கிடக்க, கூந்தலிலிருந்தும், அணிந்திருந்த உடையிலிருந்தும் நீர் சொட்டச் சொட்ட அந்த பத்தினித் தெய்வத்தின் பலிபீடத்தின் முன்னே வந்து நின்றாள். சந்தனக் குச்சியில் இருந்து உதிர்ந்த சாம்பல், உடைந்த பாதி தேங்காய் மூடி மீது உதிர்ந்த போது, கற்பூரம் கிழக்கு நோக்கி வாசனையுடன் தன் சுடரை சாய்ப்பதைக் கண்டாள். வெண்ணிற மற்றும் செந்நிற பெரிய அலரிப்பூ மாலை அணிந்து பெரியதாக சந்தன குங்குமப் பொட்டிட்ட பலிப்பொருள் கற்பூரச் சுடரின் சாய்வு ஒளியில், அச்சுறுத்தும் ஒரு தெய்வீகத் தரிசனத்துடன் கிடப்பதாக உணர்ந்தாள். அதிகாலையின் விழிப்புக்கும் உறக்கத்திற்கும் இடையிலான தவிப்பில், அவள் தாய் எங்கோ ஆந்தை அலறுவதான நினைப்பில், மரணபயம் பிடிக்க, விசனப்பட்டு கொடுப்பிற்குள் கொதிக்கும் சூத்தைப்பல்லால் ஆத்திரமுற்று, தன் பாட்டில் புறுபுறுத்துக் கொண்டு பாயில் புரண்டு படுத்த போது, மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயபக்தியுடன் ஏற்கனவே கற்றுத்தரப்பட்ட ஒழுங்கில் திருமுறைகளை கனிவான குரலில், தன்னைச் சூழ கண்ணுக்குப் புலப்படாது, மறைந்து கிடக்கும் பல்லின சிறு உயிர்களின் சிலம்பல் இசைப் பின்னணியில் பாடி முடித்தாள். பால் வெடுக்குடன் சேர்ந்து கதம்பமான வாசனை வீசும் அலரிப் பூமாலை அணிந்த பலிப் பொருளை கைகளில் ஏந்தி பாம்புகள் உறையக்கூடிய புதர்களைச் சுற்றுப்பாதையாகக் கொண்ட பத்தினித் தெய்வத்தின் சித்தோடு வேயப்பட்ட சிறிய கோவிலை மும்முறை வலம் வருவது என தீர்மானித்து நகர்ந்தாள். மிகச் சிறிய பெண் என்று சொல்லமுடியாததும் பெரிய பெண் என்று மற்றவர்கள் ஒத்துக்கொள்ளாததுமான வயதில், அவள் வெண்ணிற யூனிபோம் அணிந்து கழுத்தில் செந்நிற டை கட்டி ஒரு கலவரமான சூழலில் பாடசாலைவிட்டு தெருவில் வரும் போது வழிமறித்த உறவுக்காரப் பையன் சைக்கிளில் ஏறுமாறு கேட்டபோது, பதட்டமான அந்த கொதிக்கும் மதிய வேளையிலும் தார் வீதியில் நின்று கேவிக்கேவி அழுதாள். பின் அந்த அழுகை பிரபலமாகி ஊருக்குள் பதுமையான பெண் என்று பெயர் எடுத்ததையும், பாடசாலையில் அதிபர், ஆசிரியர் என்பதைவிட மொனிட்டருக்கே பயந்த சுபாவம் கொண்ட பதுமையப்பா என அயலவர்கள் நாடியில் கைவைத்து வியந்ததை பலதடவை கேட்டதை நினைவு கூர்ந்து, தனக்கு இவ்வாறு நேர்ந்து விட்டதென தன்மீது பச்சாதாபமும், கழிவிரக்கமும் கொண்டாள். இந்திரன், ரிஷி பத்தினியின் முலைகளின் திரட்சியில் மயங்கி ரிஷியின் சாபத்துக்குப் பயந்து தன் சுயரூபத்தில் இச்சிக்க முடியாது, காக்கை உருவம் கொண்டு ரிஷி பத்தினி மல்லாந்து உறங்குகையில் காக்கையின் கால்களால் ரிஷி பத்தினியின் முலைகளின் திரட்சியை இச்சித்ததாக ரீச்சர், திட்டுத்திட்டான வெண்படிவுகள் கொண்ட கரும்பலகையின் பின்னணியில் கொட்டாவி விட்டபடி படிப்பித்தபோது இவ்வாறு ஏதாவது மாயங்கள் நிகழ்ந்து தனது பத்தினித்தன்மைக்கு களங்கம் ஏற்பட்டுவிடும் எனும் பயத்தில் மேசையில் குப்புறக் கவிழ்ந்து அழுததை நினைவு கூர்ந்தபோது அவளது கண்கள் பனித்தன. தன் உடலில் உஷ்ணம் அதிகரிப்பதையும், பலிப்பொருளானது அவளுடைய உடலின் தொடுகையின்போது சில்லிடுவதையும் உணர்ந்தாள். தன் உடலின் உஷ்ணமானது வெளியில் மட்டுமல்லாது உள்ளேயும் அதிகரித்துக் கொண்டிருப்பதை சிலநாட்களாகவே உணர்ந்து வருகிறாள். அவளுக்கு பரீட்சயமில்லாததும் எப்போதோ பார்த்த இடம் போலும் இருந்தது அவள் நின்றிருந்த சீமெண்டால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமாக தரைபோடப்பட்டு, செங்கற்கள் பெயர்ந்து வெளித் தெரிகின்ற, அந்த நிலம். எந்த மறைப்பும் அற்று அது வெட்டை யாகவும் கிடந்தது. அருகில் பெருமரங்களோ, வீடுகளோ, மதில் சுவர்களோ, வேலி மறைப்புக்களோ இல்லாதிருந்தது ஆச்சரிய மாகவும் இருந்தது. நீட்டு நீட்டாக வளர்ந்த கூரான முனைகளைக் கொண்ட புற்கள், வெண்ணிற வெளிர்வானத்தை பின்புலமாகக் கொண்டிருந்தன. கடுக்கும் மூத்திரத்தை அடக்க முடியாது அவதிப்பட்டாள். சுற்றிவர நோட்டம் விட்டபின் தன் பாவாடையுடன் சேர்த்து சாரியை உயர்த்தியபடி மனத்தவிப்புடன் வெட்டையில் மூத்திரம் பெய்தாள். சட்டென அவளைச் சூழ சம்பாஷனைகள் கேட்டன. எவரோ வெளிரான வானம் போன்ற பின்புலத்துக்குப் பின்னால் நடமாடுவது போல் உணர்ந்து திடுக்கிட்டு விழித்தாள். அவள் தன் துடைகளுக்கிடையில் இளஞ்சூடான திரவம் பரவுவதை உணர்ந்தாள். அவளைச் சூழ இருள் மண்டிக்கிடந்தது. மூத்திரவாடை அடிப்பதையும் நைட்டி ஈரமாகி இருப்பதையும் உணர்ந்தாள். தடுமாறி லைட்டைப் போட்டாள். கணவன் விழித்து அவளையே பார்த்தபடி தலைக்கு கீழே கைகளை கோர்த்த வண்ணம் சாய்ந்து படுத்திருப்பதைக் கண்டாள். அவனும் மூத்திர வாடையை சுவாசித் திருக்க வேண்டும். திடுக்கிட்டு தலையைத் தூக்கி திருதிருவென விழித்தான். பின் அவன் பலதடவைகள் திடுக்கிடும்படியும், திருதிருவென விழிக்கும்படியும், சரம் தடுக்கி குப்புற விழும்படி யானதும், கதவு நிலையில் இடிபட வேண்டியதுமான பல சம்பவங்கள் நிகழ்ந்தன. மஞ்சள் நிறப் பின்னணியில் சிவப்பு நிறப்பூவும் கறுப்புநிறக் கோடுகளும் கொண்ட வெல்வெட் உறைபோட்ட சோபா குஷன் மீதும், தூய வெளுத்த வெண்ணிறமும், நீலநிறமும், குறுக்கும் நெடுக்கமாக ஓடிய கட்டில் மெத்தையில் விரிக்கப்பட்ட பெட்சீட் மீதும், சாமி அறையிலும் ஒரு கனவுப்பாங்கான பிரமைக்கு உட்பட்டு இருக்கின்ற இடங்களிலேயே தன்னிச்சை இன்றி மலமும் சலமும் கழிக்க நேர்ந்தபோதே, அவள் கணவன் திடுக்கிட்ட சம்பவங்கள் நிகழ்ந்தேறின. தான் இழந்துவிட்ட புனிதம் காரணமாகவே இவ்வாறு நிகழ்வதால் பத்தினித்தெய்வத்திற்கு பலியிட்டு புனிதமடைவது என தீர்மானித்தாள். ஆனால் தான் புனிதமிழக்கக் கூடிய சம்பவங்கள் ஏதாவது நிகழ்ந்ததா என அவள் எண்ணிய போது வெறுமையும், சூனியமுமே மிஞ்சிக் கிடப்பதாக உணர்ந்தாள். உடல் பருத்தவளும், வயதுக்கு மீறிய வளர்ச்சி கொண்டவளுமான அயல் வீட்டுப் பெண் குமாரி, வீட்டுக்கு வரும்போது கணவன் செல்லமாக அவளது கன்னத்தில் கிள்ளுவதும், தோளில் குத்துவதும் வெறும் பகிடி என்றும், அதில் ஏதும் காரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்களை தேடக்கூடாது என்றும், கையைத் திருகி சுவருடன் வைத்து நசிப்பதும்கூட வெறும் விளையாட்டே என்றும், அதில் எதுவித கற்பிதங்களையும் தான் வளர்த்துக் கொள்ளக்கூடாது என்றும் சிந்தித்தாள். மங்கலான இருள் கொண்ட கோலில் துடை காட்டிச் சிரிக்கும் ரம்பாவின் இரண்டாயிரமாம் ஆண்டு கலண்டருக்குக் கீழ் இருந்த சோபா செட்டியில் குமாரியின் துடையில் தன் துடையை வைத்து அவளின் கழுத்தை இறுக்க அவள் மூச்சுத் திணறி செருமியதுகூட விளையாட்டே அன்றி வியாக்கியானப்படுத்துவதற்கு எதுவும் இல்லை என்றும் கருதினாள். மிதமான சிறு ஓசையுடன் பேன் சுற்றிக் கொண்டிருக்கும், நிசப்தமான தன் படுக்கையறையில் அப்படி ஒரு சம்பவம் நிகழவில்லை என்றும், அது வெறும் மனப் பிரமையாகவோ அல்லது ஒரு கனவாகவோ இருந்திருக்க வேண்டும் என்றும், அதை நிஜத்துடன் சேர்த்துக் குழப்புவது கூடாது என்றும் தனக்குள் வாதிட்டாள். பலிப்பொருளின் அசைவில் உடல் சில்லிட திடுக்கிட்டு, தன் நினைவோட்டத்தில் மும்முறை வலம் வருவதான கணக்கு தவறிப்போய்விட்டதை உணர்ந்து, பின் துப்பல் சொல்லி, காலுக்குக்கீழ் காய்ந்த சருகுகள் நெரிபடும் ஓசையுடன், பனித்துளிகள் ஓர் இலையிலிருந்து, இன்னோர் இலைக்கு மழைத்துளிபோல் விழுகின்ற ஓசையை செவிமடுத்த படி, பின் இரவு நிலா நிழல் விழுத்திக்கிடக்கும் மரத்துக்கு கீழ் இருந்த அந்த பத்தினித் தெய்வத்தின் கோயிலை நிதானமாக மூன்று முறை வலம் வந்தாள். முழங்காலில் பலிபீடத்தின் முன் நின்று மங்கிப்போன கற்பூர ஒளியில் பலிப் பொருளை கருங்கல் பீடத்தில் கிடத்தினாள். தான் கொண்டு வந்திருந்த கூரிய கத்தியை எடுத்து பிராத்தனை செய்தபடி, மிகப் பலமாக ஓங்கி பலிப்பொருளின் நெஞ்சுப்பகுதியில் குத்தினாள். பாணில் ஏறுவதை விட கடினமாகவும், பூசணிக்காயை நறுக்குவதை விட இலகுவாகவும் இருந்த பலிப்பொருளின் நெஞ்சுப்பகுதியின் எலும்புகளை நொறுக்கிக் கொண்டும் சதைகளை கிழித்துக் கொண்டும் கத்தி ஆழமாக இறங்கி கருங்கல்லில் முட்டி மழுங்குவதை உணர்ந்தாள். பலிபீடத்திலும் அவள் கைகளிலும் இளஞ்சூட்டுடன் இரத்தம் பீச்சியடித்து, பலிப்பொருள் சிறியதொரு அசைவுடன் கேவி, பின், அசைவற்றுப் போனது. கத்தியை உருவி வழியும் இரத்தத்தை, ஆல் இலையில் வடித்து பூசைப்பெட்டியில் வைத்தாள். பலிப் பொருளை இன்னொருவர் தீண்டி, சடங்கை அசுத்தப்படுத்தக் கூடாது எனும் நோக்கில் நீர்தேங்கி, புல் பூண்டுகள் அழுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெக்கையுடன் கூடிய, ஒருவித நுகரக் கூடிய வாசனை வீசும் கண்ணா மரங்களுக்கிடையில் வீசி எறிந்தாள். பூசைப் பெட்டியை கல்முனை பிரதான வீதியிலிருந்து கடற்கரை நோக்கிப் போகும் கிழக்கு வீதி சந்திக்கும் முச்சந்தியில் தூண்களின் மீது இரண்டு நந்திகள் காவல் செய்யும் சுற்றுப்புற மதிலைக் கொண்ட வீட்டின் முன் கழிப்புச் செய்தாள். தலை மூழ்கி புனிதச் சடங்கை நிறைவு செய்யும் நோக்குடன் அங்கிருந்து நகர்ந்தாள். மூன்று குழந்தைகளின் தந்தையும் ஆட்டு வியாபாரியுமான அவன் சைக்கிளின் பின்கரியறின் இரு புறங்களிலும் பசளை பேக் உறையில் தொங்கும் ஆட்டின் இடைவிடாத கத்தலினால் எரிச்சலுற்று சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்டில் விட்டான். வலதுபுறமாக தொங்கிக் கொண்டிருந்த ஆட்டின் முழங்கால்கள் சைக்கிள் கம்பியுடன் உரசி இரத்தம் வடிவதைக் கண்டான். ஆட்டின் கால்களுக்கு பச்சிலை வைத்துக் கட்டும் நோக்குடனும், தன் இயற்கை உபாதையை தீர்த்துக் கொள்ளும் நோக்குடனும் கண்ணா புதர்களை விலக்கி ஊடறுத்துச் சென்றான். பொதுவாகவே குழந்தைப் பேறில்லாத கடவுள் விசுவாசிகளுக்கு மாத்திரமே தெய்வீகக் குழந்தைகள் புதர் நடுவிலும் காட்டுப்பாதைகளிலும் கிடப்பதாக அவன் சரித்திரத்தில் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் மூன்று குழ்ந்தைகளின் தந்தையான தனக்கு அவ்வாறு நிகழச் சாத்தியமில்லை என்பதால் இந்தக் கண்ணாக் காட்டுக்குள் வர இருந்த கடவுள் விசுவாசியைத் தேடினான். வெண்ணிறமும் செந்நிறமும் கலந்த அலரிப் பூமாலை அணிந்து நிலவொளியில் தெய்வீக தரிசனத்துடன் கிடக்கும் குழந்தையை தூக்கினான். நெஞ்சுக்குழி குழிந்து கறுப்பு மறுவாய்க் கிடந்தது. கையில் பிசுபிசுப்பது இரத்தம் என அவன் புத்தி உணர்ந்து அலறியபோது, கிடுகு மட்டையால் தட்டி கட்டி சிதம்பருத்திப் பூ பூத்துக்கிடந்த கிணற்றடியில் தன் சடங்கிற்கு இடையூறு ஏதும் இல்லாது முடிந்து, புனிதமடைந்ததை நினைத்து மூன்றாவது தினமும் தலை மூழ்கிக் கொண்டிருந்தாள்.

(பிரசுரமாகாத படைப்பு - 2001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளைக் & வைட் மொழி ஆடுகளுடன் வார்த்தையாடுதல்

முகத்துக்கு கிட்டவாக வானமா, முகிலா என்று ஊகிக்க முடியாத ஊத்தை வெண்ணிறத்தில் பிரமாண்டமான ஒளிப்பரப்பொன்று கிட்ட வருவதும் பின் விலகிச் செல்வதுமாய் இருந்தது. பின், பால் வெள்ளை முகில்கள் காற்றில் தவழ்ந்து வந்தன. ஊத்தை வெண் பரப்பு எங்கோ தொலைவில் ஒழிந்து கொண்டது. திடீர் என்று தமக்குள் கசமுச, கசமுச... என்று சர்ச்சித்த வண்ணம் வேகமாய் வந்த எண்ணைப்பாண்டு கருமுகில்கள் வெண்முகிலுடன் கலந்தன. அடிவானில் இருந்து வந்த செம்மை எண்ணெய்ப்பாண்டு கருமுகில் மீது படர்ந்தது. எண்ணெய்ப்பாண்டு முகில்களில் தீ பற்றிக் கொண்டது. வானத்தில் இருந்து சிறிதும் பெரிதுமாய் தீக்கங்குகள் விழத்தொடங்கின. வீடுகள் மீதும், மரங்கள் மீதும் தீக்கங்குகள் வீழ்ந்து எரிந்தன. அவன் குரலெடுத்து கத்த முனைந்தான். தொண்டைக்குள்ளேயே அமிழ்ந்து போயிற்று அவன் குரல். அனலின் வெப்பத்தால் தொண்டை வறண்டு தாகமெடுத்தது. வெம்மை கூடக்கூட தொண்டை வறண்டு கயர் கட்டிக்கொண்டு மூச்சுவிட சிரமம் தந்தது. கயர் கட்டிக் கொண்ட தொண்டை செருமத் தொடங்கியது. செருமல் இருமலாக மாறி நெஞ்சுக் கூடு வலிக்குமாறு இருமியது. இரும இரும கண்கள் கலங்கிப்போயின. கலங்கிய விழிகளுக்குள் இருள் சலனப்பட்டது. எழுந்து உட்கார்ந்தான். சுவரில் ஒளிக் கீற்று ஒன்று ஓடி அறுந்தது. அவன் வெளிச்சத்துக்காய் காத்திருந்தான். கடைக்கண்ணுக்குள் ஒளிப்புள்ளி ஒன்று அசைந்து உடைந்தது. போர்வையை இழுத்து கடைக் கண்ணைத்துடைத்தான். புளிச்சுப்போன வியர்வை நாற்றம் எரிச்சல்படுத்தியது. அடித்தொண்டைக்குள் வறட்சி நோவாக மாறி இருந்தது. எழுந்து இருளுக்குள் துளாவி நின்றான். செம்பின் களிம்பு வெடுக்குடன் தொண்டைக்குள் தண்ணி இறங்கத் தொடங்கியது. அவனுக்கு பரிச்சயமான பழைய துவாய் கதவில் இருள் போர்த்தி புதிய பரிமாணம் பெற்றுக்கிடக்கிறது. கீச்சிட்டு அலறும் இடப்பக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவை திறக்க அஞ்சி நின்று பின் வலப்பக்க ஒற்றைக் கதவை ஓசை எழாது திறந்தான். மெல்லிய கீசல் ஒலியுடன் கதவு திறந்தது. விறாந்தையில் போர்வையின் உதறலும், பாயில் புரள்வதும் கேட்டது. சிரத்தையற்ற சலன உருக்களில் சித்தப்பாவோ, அண்ணாவோ வந்து போனார்கள். வெளிர் இருளாக கிடந்த பாய்களின் இடைவெளி இருளில் கால் ஊன்றி அலங்கோலமான அசைவுடன் வெளிக்கதவை ஓசைபடத் திறந்து வெளியேறினான். தொண்டைக்குள் குளிர்ச்சி இருந்தது. ஆனால் தொண்டை வறண்டு தாகம் எடுப்பதுபோல் சினம் தந்தது. தாகத்துடன் சுமக்க முடியாத பாரத்துடன் எதுவோ மனதில் கனமாய் அழுத்துவதை உணர்ந்தான். மனதில் மூண்டு கிடக்கும் சுமை தன் சக்திக்கு அப்பாற்பட்டது என்பது போல் சஞ்சலப்படுத்துவதை உணர்ந்தான். அதிகம் கவலைப் பட்டு சோர்ந்து போனான். காலை மடித்து துடைக்குள் வைத்து படிக்கட்டில் கை ஊன்றி அமர்ந்தான்.

காலை ரம்மியமானது, குளிர் வாடை வீசி சுகம் தரும். அவன் விரல்கள் இயல்பாய் தலை கோதி மீண்டது. தென்னோலைகள் காற்றில் சலசலக்கும், புல்லிற்குள் சில்வண்டுகள் சிலம்பும். அவனை அறியாமலே பார்வை கற்குவியலுக்குள் போனது மெல்லியதாய் ஆனால் வீரியமாய் துர்நாற்றம் அவன் நாசிக்குள் ஏறிக்கொண்டிருந்தது. அந்த கல் இடுக்குக்குள், சாம்பல் நிறத்தில் சிவப்பு மூஞ்சியுடன் மூஞ்சூறு எட்டிப் பார்த்து விட்டு உள்வாங்கிக் கொண்டது போல இருந்தது. பார்வையை திருப்பிக் கொண்டான். தொண்டைக்குள் வறட்சியும் நோவும் கூடித்தான் இருந்தது.

காலை இதமற்று வரட்சியாய்க்கிடக்கிறது. மனதை அழுத்தும் சுமையின் வலிவு கணத்துக்கு கணம் கூடுகிறது. சுமை எதுவோ? தேங்கிக் கிடக்கும் அலுவலக வேலைகளாக இருக்குமோ? சீய்... அதுவாய் இருக்காது. இப்படி எத்தனையோ தரம் தேங்கிக் கிடந்து பின், முகில்கள் போகிற போக்கில் கரைந்து புது உருவங்கொள்வது போல், அதன் போக்கில் கரைந்து புதுப்புது வடிவம் எடுக்கும்... அது சுமையே அல்ல... இப்படி இருக்குமோ? அந்தக் கிறவல் வீதியில் அவனுக்கு முன்னே, கம்பியுடன் கம்பி உரசி, பொறி கிளப்பி, காற்றில் விசுக்கென்று வந்து, தரையில் மோதி, செம்புழுதி கிளப்பி, சுருண்டு விழுந்த மின்சாரக் கம்பியாய் இருக்குமோ? வேட்டையாடப்படும் விலங்கின் துர்மரணம் அதற்கு விடுதலை அழிக்குமோ? இத்தகைய மரணமும் அத்தகையதோ? எண்ணம் தொடர்பற்று அறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை எல்லாம் புறம் தள்ளி விட்டு சுமை மனதில் கனதியாகக் கிடக்கிறது. நேற்று அதிகாலையிலேயே பாயில் புரண்டு கொண்டு கிடக்கும்போது தான் அந்தச் செய்தி அவன் காதில் விழுந்தது.

''பீச்சில், சைக்கிள் மட்டும் தனியாகக் கிடக்கிறது.''

உணவு செரிக்காதவன் போல் ஆர்ப்பாட்டமின்றி புரண்ட இடத்திலேயே திரும்பத் திரும்ப புரள்கிறது கடலலை. தார்ரோட்டை அண்டி புல்வெளியில் தனியாகக் கிடக்கிறது சைக்கிள். அந்த வெளியில் குழுமி நிற்கும் சிறுகும்பலுக்குள் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு கும்பலுக்குள்ளால் எட்டிப் பார்த்தான். அந்த சைக்கிளுக்குள் மர்மம் புதைந்து கிடக்கிறது. நிறையப் புதிர் போடுகிறது. ஒவ்வொருவராய் விடுவிக்க முனைகிறார்கள். மலை இடுக்கின் வழியாக கீற்றாய் விழும் அதிகாலை சூரிய ஒளியில், கறள்கட்டிப் போன கம்பிகள் கூட அர்த்தத்துடன் மினுங்குவதாக அங்கிருப்பவர்களுக்குப்பட்டது. சாதாரண கறுப்பு நிற சைக்கிள். சீற், புதுசு மங்கிப் போன சைக்கிள், அதைத் தவிர அவனுக்கு அதில் மர்மம் எதுவும் பிடிபடவில்லை. ஆனால் அவனைச் சுற்றி மர்மத்தை விடுவித்து விட ஒவ்வொருவரும் சைக்கிளை வெறித்து வெறித்துப் பார்க்கிறார்கள்.

''கடையைப் பூட்டிற்று போகேக்க பத்தரை இருக்கும்.''

''போகேக்க ஏதும் சொல்லிற்றுப் போனவனா?''

''ஒண்டும் சொல்லவில்லை. வழமையா போறமாதிரித்தான் போனவன்.''

''வழமையா நேரத்தோட தானே பூட்டிற்றுப் போறவன்?''

''விடியக் குடுக்கிறதுக்கெண்டு சொல்லி, T.V ஒண்டவைச்சு குடஞ்சு கொண்டு இருந்திற்று, பத்தரைக்குத்தான் போனான்.''

''மசிரப் பிடுங்கினான். காலம் கெட்டுக்கிடக் கெண்டு தெரியும், நேரத்தோட போக வேண்டியது தானே?''

இவனுக்கு அவனுடன் நெருக்கமான நட்பு உண்டு. சட்டென்று சிரிப்பான். பின்புறமாய் இடுப்பை வளைத்து தூக்கிச் சுற்றுவான். சட்டென்று வயிற்றில் குத்திவிட்டு சிரிப்பான். அகால வேளையில் நீச்சலடிக்கப் போய் மாண்டுபோயிருக்கலாம். வாயில் நுரைதள்ள ஏதோ ஒரு முகாமுக்குள் பாதி சயனட் குப்பியுடன் கிடக்கலாம். உயிர் அணுக்கள் சிதைக்கப்பட்ட முனகலுடன் ஆஸ்பத்திரியில் கிடக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் போல், அவனும் வாழ்ந்ததற்கான தடயம் எதுவுமில்லாமல் போவது போல, அவன் உடலும் தடயமற்றுப் போகலாம். இன்னும் செய்தி எதுவும் இல்லை.

தரையில் மோதி ஒலி எழுப்பிய ''பார்த்'' தடியின் ஓசையுடன் கதவு அலறித்திறந்தது. கறுத்து மெலிந்த உருவத்தின் மீது இருள் போர்த்தி அம்மா வெளியே வந்தாள். அம்மா அவனைத் தாண்டிப் போனாள். ஒட்டி உலர்ந்து போன ஒடிசலான தேகம். தொலைந்து போன எதையோ தொலைவில் தேடுவது போல், இடுப்பில் கை ஊன்றி அடி வளவை வெறித்து நின்றாள். இடுப்பில் கட்டி இருந்த துண்டை அவிழ்த்து உதறிக் கட்டினாள். வலக்கையை தூக்கி ரவுக்கைக்கு மேலால் கமக்கட்டை வரட்டு வரட்டென்று சொறிந்தாள். பின் தலையை சாய்த்து துப்பினாள். எச்சிலோ, வெத்திலைச் சாறோ இருளில் துலக்கமின்றி மண்ணில் ஊறியது. வெத்திலை போட்டுப் போட்டு அவிந்து போன அம்மாவின் கடைவாய்கள் அவன் மனதில் சலனமாய் வெளுத்தன. ஆட்டுக் கொட்டிலை நோக்கி அம்மா போனாள். அவளது உலகம் ஆடுகளுடனானது. மெல்ல மெல்ல ஆட்டு மொச்சையின் மணம் நாசியில் ஊர்கிறது.

தொண்டைக்குள் நோவும் வரட்சியும் இன்னமும் இருந்தது. மனச் சுமையின் அலுப்பு இன்னமும் வடியாமல் கிடந்தது. இந்த கனவின் மிரட்டல் நீண்ட தொலைவில் இருந்து என்று சொல்ல முடியாத ஒரு இடத்திலிருந்து அவனுடன் கூட வருகிறது.

அந்த காவலரணில் இருந்தவர்களின் முகத்தில் சற்று பயம் கலந்த சுறுசுறுப்பு அவன் மூச்சு விடும் வேகத்தை அதிகப் படுத்துகிறது. முகாமுக்குள் இருந்தும் சிலர் ஆயுதங்களுடன் காவலரணை நோக்கி ஓடிவந்தார்கள். அந்த பஸ்ஸில் வந்தவர்களில் இருந்து, அவர்கள் அவனைத் தனிமைப்படுத்தி அழைத்துப் போனார்கள். அவன் நெஞ்சுக் கூட்டுக்குள் மூச்சு தடம் மாறித் திணறியது. அஞ்சல் அடையாள அட்டையில் இல்லாத பயங்கரத் தன்மையை தன் முகத்தில் வரைய முற்படும் அவர்கள் கண்களை, அவன் பயப்பீதியால் வெளிறிப்போன கண்களால் பார்த்து நின்றான். அந்த பழுப்புநிறக் காகிதத்தில் என்ன தான் கிடக்கிறது. கையை உயர்த்தி சுடலை மதிலுடன் அவனை குப்புற சாத்தினார்கள். அவன் கண்களுக்குள் இருள் சூழ்ந்து வெளுப்பதை உணர்ந்தான். அந்தப் பழுப்புநிறக் காகிதம் பலவடிவங்களில் அவன் புத்தியைச் சுரண்டுகிறது. எங்குமே அது தட்டுப்படவில்லை. நோட்டிஸ்கள் அவன் வாசித்திருக்கிறான்தான். ஆனால் புத்தகத்துக்குள் மடித்து வைக்கும் அளவுக்கு அவனுக்கு தைரியம் இருந்ததில்லை.. அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுப்புநிறக் காகிதம் மண்டைக்குள் சிறகு கட்டி அடித்து வலிக்கச் செய்கிறது. அவன் உடல் முழுவதும் அவர்கள் கைகள் ஊர்ந்தன... தடவின... தட்டின... அவர்கள் புத்தகப்பைக்குள் மிக மெதுவாக கைவிட்டார்கள். ஒவ்வொரு புத்தகமாய், பக்கம் பக்கமாய் துருவித் துருவித் தேடினார்கள். பஸ் இன்னமும் காத்து நிற்கிறது. தானும் அதில் ஏறிப்போய்விடலாம் என்ற நம்பிக்கையும் இருந்தது. அவன் நினைவுச் சுருளின் ஒவ்வொரு படிவுகளிலும் பழுப்புநிறம் முட்டி மோதி அலைந்து வந்தது. பள்ளிக்கூட லைபிரரி மேசையின் வழவழப்பில் வழவழப்பான ஆங்கில சஞ்சிகைகளின் பக்கங்கள் காற்றில் படபடத்து, ஒன்றின் மீது ஒன்றாக விழுவது அவன் நினைவடுக்குகளில் கிளரப்படுகிறது. ''ஓ... டிசூப் பேப்பர்.'' ஆங்கில சஞ்சிகையில் இருந்து பிரதியெடுத்தது. சேர்த்து வாசிக்க முடியாத ஆங்கில உச்சரிப்பை அவன் பிரதி பண்ணி அம்புக்குறி இட்டு வரைந்திருந்தான். அவன் மிகப்பொறுமையுடன் பிரதி எடுத்த பாகம் குறித்த கைத்துப்பாக்கி. அவன் கண்கள் நம்பிக்கை ஒளி இழந்தன. முகம் வெளுத்தது, பின் இருள் சூழ்ந்து போனது.

அதுபற்றி தனக்கு எதுவுமே தெரியாது என சாதித்திருக்கத் தேவை இல்லை என்று பின்னர் உணர்ந்து கொண்டான். உதடு தடித்து, ஊமைக்காயங்களின் அழுகையினூடே, இரத்த வாடையும் எச்சிலும் கலந்த சொற்களில், சஞ்சிகையில் பிரதி எடுத்ததைச் சொன்னான். அவர்கள் நகைச்சுவையைக் கேட்டது போல் வயிறெக்கிச் சிரித்தார்கள். பின் அவர்கள் அவனிடம் ஐஸ்கட்டியின் உறைநிலைபற்றிச் சிரித்தபடி கேட்டார்கள். அதுபற்றி உண்மை யிலேயே தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னான். பல்லாயிரக்கணக்கான நுண்ணிய கூர் முனைகள் அவன் உடல் முழுவதையும் துளைத்தெடுத்தன. சுண்டிப் போன இரத்தத் துணிக்கைகளின் கூர்முனைகள் முதுகுத்தோலைப் பிய்த்துக் கொண்டு ஐஸ்கட்டிக்குள் இறங்குவதை உணர்ந்தான். புருவத்துக்கும் உச்சந்தலைக்கும் இடையில் கனதியான எதுவோ உருள்வதும்... பின் குத்துவதும்... உருள்வதுமாய் இருந்தது. தலைக்குள் பல உருட்டுக்கட்டைகள் உருண்டன. உதடுகள் பிடுங்கப்பட்டு பற்கள் வெளித்தெரிவது போல உணர்ந்தான். விதைகள் விறைத்துக் கொண்டு அடிவயிறு வலித்தது. உடல் சூடு தணியத் தொடங்கியது. மூச்சு அவஸ்தைப் பட்டது. தொண்டைக்குள் சளி கரகரப்புடன் இழுபட்டு அறுகிறது. பாட்டியினுடையதோ... வேறுயாருடையதோ... சேடம் இழுக்கும் ஒலி செவிப்பறைக்குள் இரைகிறது. திடீர்மரண அவஸ்தை, அவர்கள் திடுக்கிட்டு உறைந்து போனார்கள். ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைக்குள் ''பள்ளிமாணவன்'', ''பள்ளிமாணவன்'' என்ற சொற்றொடர் திரும்பத் திரும்ப வந்தது. இன்னொருவன் நினைவுத் தடத்தில் கூட்டிய குப்பைகளும் எரிந்த சாம்பல் மேடுகளும் மின்னி மறைந்தன.

ஆச்சரியமாகவும், துள்ளிக் குதிக்குமளவுக்கு சந்தோஷமாகவும் இருந்தது. வீட்டு முற்றந்தான். ஆனால் பனை நிற்கிறது. பனைக்கு முன்னால் வட்டு வரைக்கும் மேடாய் குவிந்து கிடக்கிறது உமிப்பரப்பு. உமியை விட பெரிய... பெரிய... அரிசித் துணிக்கைகள் அதிகமாய் கிடக்கின்றன. சுண்டிவில்லில் கல் சரியாக பொருந்திக் கிடக்கிறது. ஒரு புறாக் கூட கண்ணில்படவில்லை. உமிப்பரப்புக்கு பின்னே இருக்கலாம். காற்றில் தாவி வேகமாய் உமி உச்சிக்குப் பாய்ந்தபோது... உமி சரியத் தொடங்கியது. நிலை குலைந்து தடுமாறி, தப்பிப்பதற்காக காற்றில் மிதந்த போது... பின்புறமாய் பெரும்நிழல் பரப்பொன்று நெருங்கி வந்தது. திடுக்கிட்டு அண்ணாந்து பார்க்க... வேகமாய் வந்து உச்சந்தலையில் மெல்லிய கீறலாய் அழுத்திவிட்டு மெல்லப் பறந்து போனது காக்கை... உமி கால்களை உள்வாங்கத் தொடங்கியது. கொஞ்சம் கொஞ்சமாய் உமிக்குள் அமிழ்ந்து... பின், முற்றாக அமிழ்ந்து போக உமியின் சுனையும், வெக்கையும் மூச்சுத்திணற வைத்தது. மேலும் மேலும் அமிழ்ந்துபோக... உடலில் வெப்பம் கூடிக்கொண்டு வந்தது. உடலில் உஷ்ணம் அதிகரித்த வண்ணம் இருந்தது. மூச்சுத் திணறல் குறைந்திருந்தது. அமிழ்ந்த உமிக்குள் வெக்கையின் சுகத்தை அனுபவிக்கத் தொடங்கினான். சூட்டில் தொண்டை கட்டிக் கொண்டது. மெல்லத் தொண்டை வரண்டு தாகமெடுத்தது. காற்றை வேகமாய் வாயால் சுவாசித்தான். சட்டென்று எதுவோ... பூச்சி போல் தொண்டைக்குள் ஒட்டிக் கொண்டு செருமத் தொடங்கியது. செருமல் புரைக்கேறி இருமத் தொடங்கியது. தொடர்ந்து விடாமல் இருமிய போது சலனமில்லாமல் கிடக்க முனைந்தான். அதிகம் மூச்சு வாங்கியது... விழித்துப் பார்த்தான். இருள் சூழ்ந்து கிடக்கிறது. நாசியை எதுவோ அழுகிப்போன நாற்றம் வேகமாய் வந்து தாக்குகிறது. தவளைகளின் விடாத அலறல்களும் சில வண்டுகளின் சிலம்பல்களும், இனம்புரியாத இரைச்சல்களும் தன்னைச் சூழ ஒலிப்பதைக் கேட்டான். கையை ஊன்றி எழ முயற்சித்தான். எதுவோ அழுகிப்போன கூளம், கையில் பிசுபிசுத்தது. விறைத்துப்போன முதுகும் கதகதப்பில் இருக்கும் வயிறும் அவனை இரண்டு மனிதர்களாக்கி விட்டிருப்பதை உணர்ந்தான். அழுகல் நாற்றம் தலையை கிறுகிறுக்க வைத்தது பார்வை மழுங்கிப்போன கண்களுக்குள் இருள் உருவமாய் நின்ற கன்னா மரங்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலங்கும் அமைதியான உப்புநீர் ஏரியும், மின்சார கம்பங்களும் இடம்மாறி சலனப்பட்டன. அதிகமாக மூச்சுவாங்கியது. தொண்டை வறண்டு கி'_ந்தது. தாகமும், இருமலும் கூடிக்கொண்டே வந்தன.

அவன் செருமினான். எங்கோ மிகத்தொலைவில் இருந்து மணி மெல்ல எழுந்தது. மாதா கோயில் மணி ஓசையாக இருக்கலாம். நேரம் ஐந்தாகிவிட்டது... அவன் நினைப்பு முற்றுப் பெறும் முன்னே, கிட்ட இருந்தும் மிகப்பெரும் ஓசையுடன் மணி ஒலிக்கத் தொடங்கியது. ஆட்டுக்கொட்டிலிலிருந்து மொச்சை நெடியுடன் கலந்து அம்மாவின் புறுபுறுப்பும் வந்தது. சலசலத்த தென்னை, வானத்தில் முகில்களை சுத்தப்படுத்த அங்கும் இங்கும் அலைகிறது. கிளுவையும் தன் பங்குக்கு சுத்தப்படுத்த முனைகிறது.

அன்றும் அப்பிடித்தான் பொழுது நன்றாக இருண்டு கொண்டு வந்தது. மழை எல்லா இடங்களிலும் இருளைப் பிரகடனப் படுத்தியிருந்தது. தூறலுக்காய் பஸ்கோல்ட்டில் கால் குத்தி நின்ற அவன் மெல்ல காலை உன்னி சைக்கிளை தெருவுக்கு கொண்டு வந்தான். தூறல் வலுக்க முன்னர் வீடுபோய் சேர்ந்து விடலாம். முகத்தில் தூறல் விழுகிறது குளிரில் உடல் சிலிர்த்து உதறியது. பல்லை இடுக்கிக் கொண்டு சைக்கிளை இறுக்கி மிதிக்கத் தொடங்கினான். காதடியிலும், புருவத்திலும் குளிர்ச்சி ஈரமாய் நனைகிறது. மக்காட்டில் மோதும் சிறு கற்துணிக்கைகளின் ஒலியும், நனைந்து போன தார்றோட்டில் உருளும் சில்லு தொடர்ந்து ஏற்படுத்தும் சரசரக்கும் இரைச்சலும் அவனுக்குள் குதூகலத்தை ஏற்படுத்தின. இன்னும்... இன்னும்... வேகத்துடன் சைக்கிளை மிதித்தான். வந்த வேகம் குறையாமலே பழக்கப்பட்ட முடக்கில் இயல்பாய்த் திரும்பினான். மம்மலாய் இருந்த இருளை மீறிக் கொண்டு காரிருளாய் ஓர் உருவம் தன்னை மிக விரைவாக நெருங்குவதை உணர்ந்தான். பெருத்த ஓசையுடன் இடறி விழுந்தான். நீள இரும்புக்கேடர் தெருவில் விழுந்து தெறித்தது. பெரல் இன்னும் உருண்டு கொண்டிருந்தது. பாருக்குள் கால் ஊன்றி... சரிந்த சைக்கிளின் கென்டிலை பிடித்தபடி காத்து நின்றான். மிகப் பயங்கரமான அமைதியுடன் சில வினாடிகள் போனது மெல்ல... ஆனால் துல்லியமாய் ''கோல்சர்'' உடலுடன் உரசும் ஒலி கேட்டது இரும்புடன் இரும்பு உரசி ரவை நாணில் ஏறும் இழுவிசை பல தொனியில் அவனைச் சூழ ஒலித்தது. தன் இச்சையின்றி தசைகள் அதிர்வதை உணர்ந்தான். உடல் கருகி சாம்பல் துகள்கள் நெருப்பில் பறப்பது நினைவுத் தடங்களில் உரசியது. இருளுக்குள் மரணத்தை தேடினான். இறுக்கமாய்... உறுதியாய் அவன் கழுத்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிச்சுராவிக்குள் அகப்பட்டது போல் உணர்ந்தான். கண்ணைக் கூசும் ஒளி எதிரில் இருளை இன்னும் பயங்கரப்படுத்தியது. முகத்தசைகள் இழுபட்டுக் கோணின. மிக நீண்ட நேரம்போல் தோன்றிய, குறுகிய நேரத்தில் சொன்னார்கள். "சலோ... சலோ..." இந்த வீதியில்... தன்னிச்சை இன்றியே சைக்கிள் தடம் பார்த்து போவதாக பல தடவை கருதி இருக்கின்றான். ஒவ்வொரு பள்ளமும் இடறிநிற்கும் கல்லும் மாறி மாறிப் போகும் தடமும் அவனுக்கு அத்துப்படி. இருளில் தோன்றப் போகும் கரும்புள்ளிகளை வீதி முழுவதிலும் தேடிக் கொண்டு போனான். பள்ளத்திலும் கல்லிலும் ஏறி விழுந்து தடம் மாறிப்போனது சைக்கிள். அன்றிரவும் அப்படித்தான்.

மிகப் பிரமாண்டமான பள்ளமாய் கடல் வறண்டு போய்க் கிடக்கிறது. பாளம் பாளமாய் பிளந்து கிடக்கிறது உவர்த்தரை நடுவில் கறுப்பாய்... வினோதமாய்... சிறுபுள்ளி அது வர வர பெருத்து வந்தது. தலை மயிர்... காது... தோல்... பக்கவாட்டில் பார்வை இறங்கி வந்தது. ஓ... மனிதனின் பக்கத்தோற்றம்தானே... தான், அந்த பிரமாண்டமான பள்ளத்தில் தன்னந்தனியாய். கடல் எங்கே போயிற்று? திடீர் என்று அலை புரளும் ஓசை கேட்டது. உடல் வெடவெடத்து நடுங்கியது... மிகப் பிரமாண்டமான நிழல் துரத்தத் தொடங்கியது. பெரிய... பெரிய... அலைகள் இரைச்சலுடன் சூழ்ந்து வந்தன. கரை கண்ணில் படுவதாய் இல்லை... உயிர் மூச்சு அறுபட ஓடி... கரை தட்டுப்படுமுன்னே... ஆர்ப்பாட்டமாய் வந்த அலைகள் அவனை மூழ்கடித்தன... அலைகளுக்குள் இழுபட்டு மூச்சுத் திணறிப் போனான். மூக்குக்குள்ளாலும் வாய்க்குள்ளாலும் உப்பு நீர் புரைக்கேறியது.

தொண்டைக்குள் இன்னும் குளிர்ச்சி இருக்கிறது. ஆட்டு மொச்சையின் மணம் தொடர்ந்து விடாமல் வருகிறது. அம்மாவும் ஆடுகளும் பேசுகின்றன. அம்மாவின் உலகம் ஆடுகளுடனானது. ஆடுகள் அவளுடன் பேசும், செல்லம் பொழியும். அவளும் செல்லம் பொழிகிறாள். அவளுடைய உலகம் அவளுக்கு உவப்பானது. திருப்திகரமானது. அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அப்படித்தான். பிள்ளைகளை விட அவளுக்கு ஆடுகள் மீது பற்று. அப்படியும் சொல்ல முடியாதுதான். சில நாட்களில் ஆடுகளையும் மறந்து இருப்பாள். உறவுகள் மீது அவளுக்கு நம்பிக்கையற்றுப் போயிருக்கலாம். தன் உலகத்தை தனக்குள் அலசிப் பார்க்க ஆடுகளைப் பயன்படுத்துகிறாளோ...? செல்லம் பொழிந்தபடியே ஆட்டுக்குட்டியைத் தூக்கி கொஞ்சுகிறாள். நல்லா... நினைப்பிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீவுநாள் முழுவதும் விளையாடித் தீர்ப்பதென்பது எழுதாத விதியாக அவன் அமைத்துக் கொண்டிருந்த காலம் அது. உச்சி வெயில் கடுப்பேறி, மைதானத்துக்கு அம்மா வந்தாள். பின்புறமாக கிட்டிக்கு வாய்பார்த்து நின்ற அவனை குடுமியில் பிடித்து இழுத்துப் போனாள். வீட்டு முற்றத்து வாதராணி நிழலில் குந்த வைத்தாள். விளையாட்டு பாதியில் நின்று போன எரிச்சலில் இருந்தான். வீட்டுடன் பத்தியாய் இறக்கி இருந்த குசினிக்குள் அம்மா போனாள். ஆடும் பின்னால் குசினிக்குள் போய் செல்லம் பொழிந்தது. வாய் கிழிந்துபோன சருவப்பானையில் பாண் கருகல்களும், களனியும் சேர்த்து முற்றத்தில் வைத்தாள். பானைக்குள் மறைந்து போன பாதிக்கண்ணுடன் அவனைப்பார்த்தபடி ஆடு உறிஞ்சியது. அவன் ஆத்திரத்தின் உச்சிக்குப் போனான். எழுந்து போன வேகத்தில் சருவப்பானையை எட்டி உதைத்தான். பானை நகர்ந்து தளம்பியது. பெருவிரல் அதிர்ந்து விறைத்தது. ஆடு வெருண்டு பின் கத்தியது. ஆட்டின் கன்னத்தில் இரத்தம் கீறலாய்த் துளித்துக்கிடந்தது. அம்மா வெளியே வந்தாள். அம்மாவின் கண்களுக்குள் இரத்தம் கீறலாய்க் கிடந்தது. ஆத்திரத்துடன் திரும்பி விறகுக்கட்டையை தூக்கினாள். அவன் தெருப்படலையை நோக்கி ஓடினான். காற்றில் விசிறி வந்த விறகுக்கட்டை நிலத்தில் மோதி தகரப்படலையில் சத்தத்துடன் தெறித்தது. படலையைத் திறந்து தெருவுக்கு வந்தான். காற்றில் அம்மாவின் வார்த்தைகள் அவனைத் துரத்தி வந்தன.

''தவிச்ச வாய்க்கு தண்ணி ஊத்த பெண்டாட்டிகூட
இல்லாமத் தான்டா செத்துப் போவாய்.''

அவன் எழுந்து கிணத்தடிக்குப் போனான். மனதில் சுமை மெல்லிய கீறலாய்க்கிடந்தது. கனவு பற்றி பலரிடம் கூறி இருக்கிறான். ஆனால் அவர்கள் அதைப்பற்றி அசண்டையாய் இருப்பதாகப்பட்டது. பின்..., அவன் தன் கனவு பற்றி சொன்னபோது அதைவிடப் பயங்கரமான கனவுகளுடனும், கற்பனைகளுடனும் அவர்கள் இருப்பதை உணர்ந்து கொண்டான்.

நிகரி (இலங்கை) -2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர் வாடை

எல்லாம் தெரிந்து வைத்திருப்பவள் போல் சொன்னாள் அவர்கள் இந்தப் பாதையைத்தான் அடிக்கடி பயன்படுத்துவார்கள் என்று. அவள் நினைத்துச் சொன்னவைகளை விட, வேறு பல காரணங்களுக்காகவும் அவர்கள் இந்தப் பாதையை கட்டாயம் பயன்படுத்துவார்கள். இருள் சார்ந்த கரும் பச்சை நிறக் காட்டைப் போல் தோற்றம் தந்ததை எல்லையாகக் கொண்டு, இடைக்கிடை மரங்களும், வடலிகளும், கட்டம் கட்டமான கரும் பச்சை நிற வரப்புகளுமாய், காலையிருள் கலையாது பரந்து கிடக்கிறது வயல் வெட்டை. பரந்து கிடக்கும் வயல் வெட்டையில் இவர்கள் தீர்மானித்து போகும் பாதை எதுவெனக் குழப்பமாய்க் கிடக்கிறது. எல்லோருக்கும் தெரிந்த பாதையில் அவர்கள் போவார்களா? தனக்கு அதிகம் தெரிந்ததாக அவளுக்கு திமிர். முன்னே காத்துக் கிடந்த இடங்களையும் நாட்களையும் விட இன்றைய தினம் அதிக நம்பிக்கை தருகிறது.

அன்புடையீர்...!

தம்பி கொண்டு வந்த பணத்தை திருப்பி அனுப்பி இருந்தீர்கள். எமக்கு பொருட்களின் உடனடித் தேவையையும் அவசியத்தையும் விட சிக்கலானது, தம்பி பணத்துடன் நடமாடுவது என்பதைத் தாங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். பொருட்களை கொள்வனவு செய்வதும் அதை இடம் மாற்றுவதும் தங்கள் சௌகரியத்தைப் பொறுத்தது. அது எம்முடன் பேசி அல்லது காலம் தாழ்த்தி நிகழ்த்தக்கூடியது என்பதும், தங்கள் நடைமுறை சாத்தியப்பாட்டை பொறுத்து, தங்களின் நடவடிக்கைக்கான உரிமையாகிறது. அனுப்பப்பட்ட பணத்தை திருப்புதல் என்பது தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்கே உணவளிக்கின்ற கடமையில் இருந்து தவறுவதற்கு ஒப்பானது என்பதை உணர்தல் வேண்டும். அத்துடன் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் இது சம்மந்தமான எமது கலந்துரையாடலுக்கு எதிர்வரும் நாட்களில் அழைக்கப்படுவீர்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் வெட்டையின் எல்லையில் அடிவானத்தை தொட்டுக் கொண்டிருக்கும் காடு, நிச்சயமாக காடாக இருக்காது. கிட்டப் போகப் போக தூரம் தூரமாய் நிற்கும் தனி மரங்களாகக் காட்சி தரும். சாறமும் சேட்டில்லாத வெற்றுடம்புமாய் இரு சிறுவர்கள் தோளில் கை போட்டு குதூகலித்துப் போகிறார்கள். அவனும் இப்படித்தான் வெளித்தெரியாமல் சிரிப்பான். அறுத்த வயலின் அடிக்கட்டைகளைக் காந்திக் கொண்டு மாடுகள் வயல் வெட்டையில் அரக்கி அரக்கி நகர்ந்தன. எவ்வளவு நேரத்துக்கு காத்திருப்பது. நெஞ்சை வலித்துக்கொண்டு பெருமூச்சு வெளிக்கிட்டுப்போனது. அங்கொன்று இங்கொன்றாய் வயல் வெட்டையில் மாடுகளின் ஊடாட்டம் அதிகமாகிக் கொண்டிருந்தது. அவனைக் கடைசியாக பார்த்தபோது வெளிர் நிற பிரவுன் கலரில் கறுப்பு நிற நீளக்கோடு போட்ட சேட்டை ஜீன்சுக்கு வெளியே விட்டிருந்தான். ஒற்றைக்காலை உயர்த்தி தென்னை மரத்தின் அடியில் ஊன்றியபடி தன் முழங்காலுக்கு மேல் கைகளை கோர்த்தபடி தேனீர் ஆற்றும் தாய்க்கு எதிரில் நின்று கதைத்துக் கொண்டிருந்தான். அவன் உதடுகள் தடித்திருப்பது போல் பட்டது. கன்னங்கள் உப்பி கண்கள் சிறுத்துப் போயிருந்தன. கண்புருவங்கள் தடித்து கறுத்திருந்தன. திக்கித்திக்கிக் கதைத்தான். திக்கித் திக்கி பேசினானா அல்லது வார்த்தைகளை விழுங்கினானா என்பது புரியாமல் இருந்தது. அவன் பேசியதன் சாரமாக, விலத்துவதும் விலகி வருவது என்பதும் தற்கொலைக்கு ஒப்பானது என்றும் இந்த பேச்சை எடுத்தால் தான் வந்துபோவதும் நின்று போய்விடும் என்றும் மிரட்டிச் சென்றிருந்தான். காலை வெய்யிலின் இதத்தில் வைக்கோல் நுனிப்பனி தன்னை இழக்கிறது. மாட்டுச் சாண வாடையும் உலரும் வைக்கோல் வாடையும் சேர்ந்த குளிர் வாடை நாசியில் நனைகிறது. அசதிக்கு ஓய்வு தேவை. அருகில் ஏதோ இருள் நிழலாய் அசைந்தது. வேம்பு வேரில் குந்தி வேம்பில் உடல் சாய்த்து சுகமாய் ஒரு இருப்பு. சோர்வாய் அசைபோடும் கறுத்தகன்று. கன்றின் கழுத்துக்கு மேல் தன் கழுத்தை வைத்து, ஒளிரும் கண்களால் பார்க்கும் பசு. பசுவும் கன்றைப் போல் கறுப்புத் தான். கன்றின் நெற்றியில் மட்டும் வெள்ளைப்புள்ளி. இலையானுக்காய் கண்ணைக் கூசி தன் தலையை, பின்னங்கால் சந்தில் இடித்து கால் மாறி நிற்கும் பசு. தூரமான வயல் வெட்டை எங்கும் மௌனம் மூட்டை மூட்டையாக நிரம்பிக்கிடக்கிறது. முன்ன மாதிரி இல்ல, இப்ப. கோப்* லொறி என்டாப் போல செக் போஸ்டில் சும்மா

---

* Co-op - பலநோக்கு கூட்டுறவு சங்க வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுறதில்லை, செக்கிங் கடும தான். ஸ்றொக் புக், டிலிவரி புக் எல்லாம் செக் பண்ணுகிறார்கள். வீட்டிலும் முன்ன போல இல்ல. சின்னவள் வளர்ந்திட்டாள். அவளுக்கும் விபரம் புரியும். லொறியின் கிளீனர்களையும் மாற்றிவிட்டார்கள். புதியவர்கள் வேறு இனத்தை சேர்ந்தவர்கள். ஏன் லொறியில் மேலதிக சாமான்கள் ஏற்றப்படுகிறது என அவர்களுக்கு விளக்கம் சொல்ல முடியாது. ஏற்கனவே திட்டமிட்டு வலுவான காரணங்களை திரட்டிச் சென்றாலும் அவர்கள் ஒரு மர்மப் புன்னகையுடன் வாதத்தின் பலவீனமான பக்கங்களுக்குள்ளாள் ஊடுருவி விவாதத்தைத் தகர்த்து ஒரு தலையாட்டலை சம்மதமாக வாங்கி விடுவார்கள். ''விர்ர்ர்ர்'' மௌன மூட்டைகளை தகர்த்துக் கொண்டு, இரத்த நாடிகளை அறுத்தெறியும் உத்வேகத்துடன், அந்த ஒலி - கூர்மையாகி பின் மங்கி, கூர்மையாகி காற்றில் கரைந்து, பின் சீறிக்கொண்டு காதுகளை அறுத்துவிடும் வேகத்துடன் காற்றில், தன் இச்சையின்றி வலமும், இடமும், முன்னும், பின்னுமாக கையை விசிற, விரல் நுனி விட்டு விட்டு சுள் சுள் என்று வலித்தது. வேரில் இடிபட்ட மலவாசலில் தொற்றிய நோ மெல்ல முதுகுத் தண்டுக்கு மாறி கழுத்து வரை பரவி நின்றது. தரையில் தலை குத்திக்கிடக்கும் சாணி உருட்டி தரையில் கால் பரப்பி, அதன் கரிய மூடி போன்ற உடலுக்குள் ஒழுங்காக அடைபடாத மெல்லிய பிறவுன் நிற சிறகுகள், வெளித்தள்ளி காய்ந்த புல் ஒன்று... இறகுகளை கிழித்து துருத்திக் கொண்டு நின்றது. வயல் வெட்டையில் மீண்டும் மௌன மூட்டைகள் குவிந்தன. அசதியுடன் இமைகள் செருகிச் செருகிச் சோர்ந்தன. வீட்டில் பணத்தை வைத்திருக்கவும் முடியாது. களவு போகலாம். அவ்வாறு நடந்தால் அதை நம்புவார்களா? ரவுண்டப் நடந்து இவ்வளவு பணம் அம்பிட்டால் அதோ கதிதான். பின் மீட்சி என்பது கனவாகத்தான் இருக்கும். வங்கியில் போட முடியாது. அவர்கள் திடீர் என்று திருப்பிக் கேட்கலாம் அல்லது பொருட்களை கைமாற்றும் சந்தர்ப்பமே கை நழுவிப் போகலாம். அவ்வாறு நிகழ்ந்தால் அவர்களுக்கு விளக்கம் தர முடியாது, சந்தேகம் வரலாம். பின் ஒரு துண்டு கயிறு, ஏதாவது ஒருமின்கம்பம்... இரத்தம்... அருகில் தலையில் அடித்து அழும் கல்யாணி... என்னவென்று புரியாது முழிக்கும் சின்னான்... அப்பு... இன்னும் வேறு யார் யாரோ. ''க்ர்வோர்ர்க்'' வெண்ணிற இறக்கைகளை சடசடப்புடன் அடித்து, அந்தரத்தில் தரித்து, கரிய நிற கால்களை, குவித்துக் கன்றின் முள்ளந்தண்டில், சிலிர்த்து நின்ற செம்பட்டை மயிர்களை மடித்துக்கொண்டு குந்தும் கொக்கு, கன்றின் முள்ளந் தண்டில் நடந்து பசுவுக்கு தாவியது. கண்களில் பெருமிதம் தொனிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றை நக்கிக் கொடுக்கும் பசு, வாலை உயர்த்தி சிலிர்த்துக் கொண்டு நிற்கும் கன்று, கன்றின் மல வாசலை நக்கிக்கொடுக்கும் பசு. திரும்பத் திரும்ப சிரத்தையுடன் தலையை உயர்த்தி, தாழ்த்தி, வாயில் எச்சில் வழிய வழிய கன்றின் மலவாசலை நக்கும் தாய்ப்பசு. கழுத்தில் நெருப்புப் பட்ட சுளீர் வலி, முசுர் உயிரைப் போக்கிக் கொண்டது. கழுத்தில் புழுதியும் பிசுபிசுப்புமாய்க் கிடந்தது. சிறு வயதில் அவனது குழப்படிகள் கொஞ்சம் அதிகம்தான். கடல் ஆமையைப் பிடித்து அதன் ஓட்டின் மீது மெழுகுத்திரியை கொழுத்தி ஒட்டி விட்டிருக்கிறான். அது ஊர்ந்துபோய் கொத்தியக்கா வீட்டுத்தாழ்வாரத்தில் போய் ஒண்டியிருக்கிறது. கொத்தியக்கா வீட்டு செத்தையில் தீ பிடித்து விட்டது. கொத்தியக்காவுக்கும் அயல் வீட்டு சுரண்டியக்காவுக்கும் இருந்த பகையால் நாம் தப்பித்தோம். இரண்டு பகுதியும் அடிதடி என்று இறங்கி வேடிக்கை பார்ப்பதைத் தவிர ஒன்றும் செய்யமுடியாது போனது. இலைகளை ஊடறுத்து வந்து தாக்கியது வெய்யில். பைத்தியக்காரியின் புலம்பலை கேட்டிருக்கத் தேவையில்லை. குளிர் வாடை மெல்ல மெல்லக் கலைந்து உஷ்ண வாடை அடிக்கத் தொடங்கியிருந்தது. கோடைவெய்யிலின் உஷ்ணத் தகிப்பில் காலை தன்னை இழந்து கொண்டிருந்தது. அறுத்த வயலின் அடிக்கட்டைகளில் கூட வெளிச்சம் வெம்மையாய் கூசுகிறது. தூரத்தே, அடிவானைத் தொடும் மரங்கள் கூட கானல் நீரில் மறைந்துகொண்டு உஷ்ணம் காட்டுகின்றன. மாடுகளும் சோர்வாய் அசைபோட்டன. வயல் வெட்டை வனாந்தரமாகிக் கொண்டிருந்தது. ஏதோ உரசுவது போல் கூர்மையான ஒலி கேட்கிறது. பிரமையாக இருக்குமோ இல்லை. மாடுகள் மேய்ச்சலை விட்டு விட்டு தலையை உயர்த்தி காற்றில் வேற்றின வாடை பிடித்தது. கூர்மையான இரைச்சல் விட்டுவிட்டு அதே நேரம் உரத்துக்கொண்டும் வந்தது. மாடுகள் மூச்சுவிடச் சிரமப்படுவதுபோல் மூக்கு புடைக்க தொண்டைக்குள் கமறுது. அங்கொன்று இங்கொன்றாய் நின்ற மாடுகள் கூட்டமாக இரைச்சல் வந்த திசைக்கு எதிர் திசையில் நெருக்கி இடித்துக் கொண்டு நகரத் தொடங்கியது.

''ஏன் அண்ணாச்சி, இவ்வளவு நாளும் ஒழுங்காகத்தானே நடந்தது.''

''தம்பி, நீங்க என்ன நினைச்சாலும் பரவாயில்ல, என்னால ஏலாது. ஏலா என்டா ஏலாதுதான்.''

''என்னாண்ணாச்சி, கடைசி நேரத்தில் கால வார்றீங்க.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதுதான் கடைசி நேரம் இல்ல என்டு எனக்கு வடிவாய் விளங்கும். சின்னவளயாச்சும் படிப்பிக்கவேணும். அவளயாச்சும் நோ வலி தெரியாம வளர்க்க வேணும். பயம் இரவு பகல் என்டில்லாமல் விரட்டுவது.''

''ஆருக்கண்ணாச்சி பயப்பிடுறீங்க... ஆமீக்கா?''

''இல்ல.''

''பின்ன மற்ற இயக்கங்களுக்கா?''

''இல்ல.''

''பின்ன ஏதுக்கண்ணாச்சி பயப்படுறீங்க?''

''ஊர்ச் சனத்துக்கு.''

நிலம் அதிரும் தடதடப்பும் உரசல் ஒலியும் வடலிக்காட்டுக்கு பின்னே இருந்து வந்தது. தமக்குள் இடிபட்டுக் கொண்டு பாதுகாப்புத் தேடி நகரும் மந்தைக் கூட்டம். தாயும் கன்றும் என்னாச்சு... முதுகுவலி பிளந்தெடுக்குது. நெருங்கி அடிக்கும் மந்தைக் கூட்டத்தின் நடுவே இடிபட்டு நெருக்குப்பட்டு நகர்ந்தன தாயும் கன்றும். முன்னே போக நெட்டித்தள்ளும் தாய்ப்பசு. அசண்டைத் தனத்துடன் போக மறுக்கும் கன்றுக்குட்டி. தலையை கன்றின் கவட்டுக்குள் வைத்து நெட்டித்தள்ளும் பசு, சிரத்தையற்று நகரும் கன்று. திடீர் என்று எகிறி குதித்து, முன்னே துள்ளி ஒடி, மந்தைக் கூட்டத்தை எதிர்த்து நிற்கும் கன்று. அதன் கண்களில் குறும்பும், தாயை ஏய்த்து விட்ட போக்கும், முன்னங்கால்களை நிலத்தில் வலுவாக ஊன்றி எது வந்தாலும் எதிர்த்துவிடுவேன் என்பது போல. அவன் எதிலுமே கூர்ந்த அவதானம் கொண்டவன் கூட. தாய் தேங்காய் துருவுவதை பார்த்திருந்து விட்டு எழுந்து நடக்காத வயதில் கூட தவழ்ந்து வந்து திருவலையில் அமர்ந்து தேங்காய் துருவுவது போல் உடலை ஆட்டி பாசாங்கு செய்வான். வடலிக் காட்டுக்கு பின்னே இருந்து, இரையும் மூச்சும், மிரண்ட கண்ணுமாய், புள்ளி நாகு தன் உப்பிப்போன பிரமாண்டமான உடலை, தாங்கி நிற்கும் குச்சிக் கால்களை அங்கொன்று இங்கொன்றாய் எகிறி எகிறி அதன் வெண்ணிற அடிவயிறும் செந்நிற முலைகளும் அலங்கோலமாய் அசைய, உப்பிய உடலை அந்தரத்தில் உயர்த்தி இடறி இடறி வந்தது. அதன் பின்னே துரத்திக் கொண்டு கூர்மையான உரசல் ஒலி துல்லியமாக எழுந்தது. மிரண்டு போன மந்தைக் கூட்டம் வெகுண்டு மூர்க்கத்தனமாய் ஒடத் தொடங்கியது. மூர்க்கத்தனமாய் கன்றை நெருங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தைக் கூட்டம், கன்று திணறித் திரும்ப, முன் மூர்க்கமாய் மோதித் தள்ளி மிதித்து துவைக்கும் மந்தைக்கூட்டம். கால்களுக்கிடையில் மிதிபட்டு, புரண்டு, எகிறி, புழுதி கிளப்பி, அடித்தொண்டைக்குள் கமறி, இழுபட்டு, பெரும் பிரளயமாய் புழுதி கிளப்பி, ஓடும் மந்தைக் கூட்டத்தைத் தாண்டி வந்து விழுந்தது கன்று.

''கலக்சனுக்கு வந்த இடத்திலதான் மாட்டியிருக்கான் போல கிடக்கு. கடக்காரன் இரண்டரைக்கு வரச் சொல்லிப்போட்டு மற்றப்பக்கமும் அறிவிச்சுப்போட்டான் எண்டுதான் சனம் கதைக்குது.''

''இல்லாட்டி எப்பிடி தெரியவாறது?''

''ஆறுஏழு பேருக்குக்கிட்ட சிவில்ல வளைச்சிருக்காங்கள் போல கிடக்கு. வேற வழி இல்லாம சாப்பீட்டானாம் எண்டு தான் கண்ட சனம் கதைக்குது.''

''இத சும்மா விடுவாங்கள் எண்டு மட்டும் நினைக்காத கடக்காரனுக்கு கெதியில இருக்கு.''

மூச்சு வாங்கி வாங்கி வந்த நாகு உப்பிப்போன உடலைத் தாங்கிய கால்கள் இடற இடற கன்றைத் தாண்டிப் போனது. கூர்மையான இரைச்சலும் தாண்டிப் போனது. பதைத்து வெகுண்டு எழுந்து நின்றது கன்று. கடந்து போகும் நாகு. அதன் நீண்ட கயிற்றில் சிக்கி வரப்பிலும், தரையிலும் மோதி மோதி கூர்மையான இரைச்சலை ஏற்படுத்திப் போனது காவோலை. ஓடும் மந்தைக் கூட்டத்தைப் பார்த்து அடித்தொண்டைக்குள் கமறும் கன்று. பெரும் புழுதிப்படலம், ஒன்று வயல் வெட்டையின் எல்லையை நெருங்கிக் கொண்டிருந்தது.

''ஒரே பதிலாக சொல்லிப்போடு. இரண்டு மூண்டு வருசமா ஒரு தொடர்பும் இல்ல. இப்ப நீங்க வந்து சொல்லித்தான் தெரியும்.''

''அதுக்கு மேல ஒண்டும் கதைக்காத, என்ன கேட்டாலும் ஒண்டும் தெரியாது எண்டு சொல்லிப்போடு. கடைசியாக இப்ப என்ன சொல்லி கூட்டி வந்தவங்கள்?''

''போஸ்மோட்டம் நடக்குதாம். பிரேதத்தை வீட்ட கொண்டு போகலாம் எண்டு சொல்லுறாங்கள், ஆனா இன்னது தான் எண்டு கையெழுத்து வைச்சு தந்து போட்டு கொண்டு போகட்டாம்.''

''வேணாம் விசர் வேல பாத்திராத. வேணாம் எண்டு ஒரேயடியா மறுத்துப் போட்டு வந்திரு. கையெழுத்து கிய்யெழுத்து வைச்சியண்டா அவ்வளவுதான். பொறியில் விழுந்த மாதிரித்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு அவன் மட்டும் பிள்ள இல்ல வீட்டில இருக்கிறதுகளுக்கும் சேர்த்து வினைய தேடிக்கொண்டு வந்திராத. சரி, உள்ள கூப்பிர்றாங்கள் போல.''

''என்ன உள்ள போனான் இன்னம் காணம், என்னவாம் கையெழுத்து கிய்யெழுத்து வைச்சுப்போட்டானா?''

''இல்ல, வேணாம் எண்டுட்டேர் போல கிடக்கு.''

''அதுதான்... அதுதான் சரி, கொண்டு வந்து போட்டு அயல் அட்டயில பெடி பெட்டயல வைச்சுக் கொண்டு இருக்க ஏலுமா?''

புழுதி படிந்த உடலும், கால்குழம்புகள் மிதித்து கிழிந்து தொங்கும் தோலும், வழியும் இரத்தமும், அப்பிய புழுதி மணலை மீறி துளிர்த்து நிற்கும் இரத்தமுமாய், கன்று முன்னங்கால்களைப் பரப்பி நிலத்தில் வீழ்ந்தது. முள்ளந்தண்டில் வலி விண்டு விண்டு வலித்தது. மூச்சுத் திணற தடதடக்கும் நெஞ்சுடன் கன்றை நோக்கி நகர காலடி ஓசையையோ, அதிர்வையோ இரைச்சலையோ பொருட் படுத்தாது நிதானமாக அசைபோட்டது கன்று. அதன் மேல் என் நிழல் படர்ந்தது. அசை போடுவதை நிறுத்தாது திரும்பி முகத்தை நோக்கியது. அதன் ஒளிரும் கண்கள் அச்சுறுத்தின.

பார்வையைத் திருப்பி நிதானமாக அசைபோட்டது. அசை போடப் போட, அதன் உடலினின்றும் புழுதி உதிரத் தொடங்கியது. நெஞ்சுக்கூட்டுக்குள் வலி விட்டுவிட்டு வலித்தது. கிழிந்து தொங்கிய தோல்கள் மீண்டும் ஒட்டிக் கொண்டன. வியர்வை முள்ளந்தண்டில் வழிந்து உருண்டுபோனது. கன்றின் உடலில் துளிர்த்துக் கிடந்த இரத்தக் கசிவுகள் உதிர்ந்தன. நிதானமாக அசைபோட்டது. அதன் கரிய உடலில் மெருகும் மினுமினுப்பும் கூடிக் கொண்டே வந்தது. அசை போடப்போட கால்களை மடித்து விழுந்து கிடந்த நிலையிலேயே அதன் உடல் அந்தரத்தில் மெல்ல மெல்ல எழுந்தது. புவி ஈர்ப்பில் இருந்து விடுபட்டுப் போன உடல் வெடவெடப்பற்று, காற்று வெளியின் சுழிப்பில் அல்லாடாது நேர் மேலே எழுந்தது. உள்ளங்கால்கள் கூசின. கண்கள் மங்கின. பூமிக்கும் கன்றுக்கும் இடையில் காற்று சுழித்து புழுதியையும் தூசிகளையும் அள்ளிக் கொண்டு போனது. வைக்கோல் அடிக் கட்டைகள் வெடவெடத்து நடுங்கின. கன்றின் உடலினின்று பரவிய வெம்மையை மூக்கு நுனி உணர்ந்தது. முகம் முழுவதும் வெம்மை பரவியது. தாங்க முடியாத வெம்மை, தன்னிச்சையின்றியே கால்களை பின்னடையச் செய்தது. கன்று விலக விலக வெம்மையும் கூடிக்கொண்டுவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கட்டிகளும், வைக்கோல் அடிக்கட்டைகளும் குதிக்குள் நெருங்கி நெரிபட்டன. வேம்பின் நிழல் இருளாக பின்னே அசைந்தது. கடும் வெய்யில் நாளில் கண் கூசும் தகர மினுக்கத்தை தவிர்க்க மதிலைப் பார்த்த போதுதான் முதல் முதலில் தந்தையின் கடமைகூட செய்ய முடியாமல் போன கையாலாகாத்தனம் மண்டையையும் பிளக்கத் தொடங்கிற்று. காவி அடித்த மதில் சுவற்றில் செந்நிறமும் பழுப்பு நிறமும் கலந்த அஞ்சலிப்போஸ்டரில் நெஞ்சளவு படம் பேட்டிருந்தார்கள். எப்போதோ மறந்து போன அவன் பெயருடன் கூப்பிடும் பெயரும் இருந்தது. மேல் இருந்து கீழாக வலப் பக்கத்திலும் இடப்பக்கத்திலும் தேதிகள் குறிக்கப் பட்டிருந்தன. அன்னையின் மடியில். மண்ணின் மடியில். இரண்டு சுட்டி விளக்குகள் சுடருடன் தத்ரூபமாக ஒளிர்ந்து கொண்டிருந்தன. உண்மை. உண்மை. இரத்த நாளங்களை அறுத்தெறியும் கூர்மையான இரைச்சல் ''விர்ர்ர்ர்...'' சாணி உருட்டி, சாணி உருட்டியேதான். வெறுமையாய்க்கிடந்தது காய்ந்த புல்லின் அடிக்கட்டை. கிழிந்து தொங்கும் பிரவுன் நிற மென் இறக்கையை அகல விரித்து, புழுதி கிளப்பி, அதன் கரிய உடலில் பொன் நிறமாய் ஒளிரும் புழுதித் துகள்கள். ''விர்ர்ர்...'' சிறு குவியலாய் புழுதி கிளம்பி வேகமாய் காற்றைக் கிழித்து, மேல் எழுந்தது சாணி உருட்டி. கால்களை வீசிப்போட்டு, வேகமாய் நடந்து போக, உலரும் வியர்வை உடலில் குளிர்ந்து, சிலிர்த்தது. வெடவெடக்கும் உடலைத் தாங்கி வேகமாய், இன்னும் வேகமாய், காற்றைக் கிழித்து கானல் நீரை வயல் வெட்டையில் துரத்தி, நடையைத் துரிதப்படுத்தி ஓட, இரைச்சல் காற்றில் கரைந்து வந்தது. மூட்டுகள் பிடிப்பற்று விலத்தி வழுக்கியது. தலைமுடி காதை அறுத்தது. கானல் நீரை ஊடறுத்து வரும் காட்டோரப் புதர்களில் ஒளி பார்வையை முறித்தது. மண்ணாங்கட்டிகள் சிதைய, வைக்கோல் அடிக் கட்டைகள் மடித்து நிமிர, வரப்புகள் வேகமாய்க் கடக்க, இரைச்சல் இழுபட்டு காற்றில் கரைந்து, கூர்மையாகிக் கூர்மையாகி கிட்டவாக வந்தது. ''விர்ர்ர்ர்...'' பிடரியைத் துளைத்து, சட்டென்று குனிந்து தப்ப, முன்னே பிய்ந்த இறக்கையின் வீரியம் குறைந்த பறத்தலுடன் சாய்ந்து சாய்ந்து வயல் வெட்டையில் அரைவட்டம் அடித்து வாகை மரத்தை நோக்கி போகும் சாணி உருட்டி. மூச்சு நெஞ்சை வலிக்கச் செய்ய வேகமாய், இன்னும் வேகமாய் நடையை எட்டப் போட்டு ஒரே முடிவு, தீர்மானமான ஒரே முடிவு. அக்சலேட்டரில் இருந்து நுனிப்பாதத்தை எடுக்காமல் ஒரே அமத்து... 68,75,78,79... அதிரும் முள். எதிர்படும் நிலங்களை, ரோட்டை, மரத்தை, மின்கம்பத்தை, வீடுகளை, முள்வேலிகளை, காவல் அரண்களை உள்வாங்கி பாயும் லொறி. சுலபமான முடிவு. ஒரு மரமோ, மதிலோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் கம்பமோ..., தப்பித்தலுக்கு சாத்தியமில்லாத மோதல். ஓய்ச்சல் ஒழிவு இல்லாத இயந்திர மயமான உலகில் இருந்து உடலுக்கும் உள்ளத்துக்கும் ஓய்வு. நிரந்தர அமைதி. வயல் வெட்டையில் திசையை மாற்றி, எல்லைப் புதர்களை நோக்கி, வேகமாய் நடந்து, புதர்களை ஊடறுத்து ஒற்றையடிப் பாதையில் சட்டென்று திரும்ப, அதிர்ச்சி தரும் வேகத்தில் சாணி உருட்டி எதிரே வந்தது. நெற்றி கீறுப்பட்டு கிழிபட்டு வியர்வைபட்டு காந்தியது. ஒற்றையடிப் பாதையில் குனிந்து, வேகமாய் நடக்க, வழி நெடுகிலும் சூரைக்கொடி முகத்துக்கு நேரே ஆடிக்கொண்டு வந்தது. நெருங்கி வரும் இறப்பைக் கண்டு ஓடி என்னாகப் போகிறது? பாதங்களுக்கடியில் கற முற என்று உருண்டு தடம் மாறிப்புரளும் கிறவற்கற்கள். இன்னும் காற்றில் அதிர்வு கேட்டபடி இருந்தது. காற்றில் அதிர்வு கூடிக் கொண்டு வந்தது. சட்டென்று திரும்ப, கால்களை குறி பார்த்து இரைச்சல் இல்லாது வந்தது சாணி உருட்டி, கண்ணிமைக்கும் நேரத்தில் கால்களைத் தூக்கி தப்பிக்க முனைய, மோதிய வேகத்தில் செம்புழுதி எழ, கிறவற்கற்கள் முன்னே உருண்டன. பெருவிரல் நகக்கண் காந்த, இரத்தம் கசிந்தது. மூச்சுப் பிடித்து வீட்டுப்படலையை நோக்கிப் பாய்ந்து, இடித்துத் திறந்து தப்பிக்க முனைய "தடால்" செத்தையுடன் மோதும் கதவு.

"தூ...! எரும மாதிரி கதவ இடிச்சு திறக்காதைங்க, எண்டு எத்தினதரம் சொல்லி இருக்கன்?"

முற்றத்து மணலில் அவள். முன்னால் மணலில் கிடக்கும் சுளகும், சாக்கும். பக்கத்தில் சின்னன்.

முழங்காலுக்குள் செருகிய சட்டையும் மிரண்ட பார்வையுமாய் சின்னன் குந்திக் கொண்டு இருந்தது.

"கண்டதையும் கேட்டுக் கேட்டு பயந்து போய்க் கிடக்குதுகள். கொஞ்சம் என்டாலும் அறிவு கிடையாது."

அசையும் அவள் உதடுகள், சின்னன் முகத்தில் மிரட்சி மாறி குறும்பு தாண்டவமாடியது. சட்டையைத் தூக்கிப் பிடித்து எழுந்து, நிற்கும் சின்னன். சட்டென்று மடியில் இருந்ததை சுளகுக்குள் கொட்டி, சுளகைத் தாண்டி பாய்ந்து, தாயின் அடிக்குத் தப்பி காலை கெந்திக்கெந்தி குளிர்ப்புன்னகையுடன் ஓடிவரும் சின்னன். கூடவே குளிர் வாடையும் வந்தது. கதவை இடித்துத் திறக்கக் கூடாதுதான்.

பெயர் (இலங்கை) - சஞ்சிகை - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புப் பறவைகள்

“15ம் நூற்றாண்டில் வாழ்ந்த தீர்க்க தரிசியானவன் கூறிய வானத்தில் இருந்து ஒரு பயங்கரம் வரும். இரண்டு இரும்புப் பறவைகள் இரண்டு பெரிய கட்டிடங்கள் மீதுமோதும். உலகம் அழிவைத் தனதாக்கிக் கொள்ளும். மக்கள் பட்டினியால் சாவார்கள் என்ற தீர்க்க தரிசனத்தை நீங்கள் செவி சாய்க்காது போனாலும் மழுங்கடிக்கப்பட்ட விதைகளின் உற்பத்தியுடன் இவ்வுலகமானது பச்சையத்தை இழக்கத் துணிந்துவிட்டது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இவன் அந்த ரவைகளை கண்டெடுப்பதற்கு சற்று முன்னான இந்த நிகழ்வு இங்கு பதிவு செய்யப்படுகிறது.”

காதுகளைத் தாண்டி உப்பிப்போன கன்னங்களையும், தலையில் முடியற்றதும், உப்பிப்பருத்த வயிற்றைக் கொண்டதும், கால்கள் அற்றதுமான பூதங்கள் கடலுக்குள் மூழ்கி உயர்ந்த அலைகளுடன் தலையை தரையில் அடித்து ஓஓஓ...........என இரையும் கடற்கரைப் பிரதேசத்து சிறுவனின் நினைவில், மழைக் கால பேரிரைச்சலைக் கொண்ட கடலின் அலைகள் சிறுவனின் நண்பனின் கடற்கரை ஒரத்து வீட்டிற்குள் புகுந்திருந்தன. நண்பனின் தங்கை இருண்ட அறை ஒன்றின் யன்னல் கம்பியை ஒற்றைக் கையால்பற்றி, அந்தரத்தில் தொங்கியபடி, முகத்தில் இருள் கவிந்து கிடக்க வெண்பற்கள் மட்டும் ஒளிர இளித்துக் கூச்சல் இடுகிறாள். நண்பனின் வீட்டாருக்கும் அவனுக்கும் பொதுவில் தேவையற்ற பொருட்கள் வீட்டு முற்றத்தில் தென்னை மரஅடியில் முட்டியபடி, வெண்நுரையுடன் இரையும் உப்புக்கரிக்கும் கடல் அலைகள் மீது மிதக்கின்றன. சற்றுமுன் நண்பனின் தந்தை புன்னகையுடன் சைக்கிளில் மழைநீர், செஞ்சகதியாக்கி இருந்த கிறவல் வீதியில் சென்றிருந்தார்.

அந்தப் பொருள் மீதான அவனது கவன ஈர்ப்பானது ஒரு வித பதட்டத்தை ஏற்படுத்தும் பீதியுடனே இருந்தது. புதிய கொப்பி ஒன்றில் கவலையீனமாக ஊற்றப்பட்ட மையானது கொப்பித் தாள்களில் ஊறி உலகப்படம் போல் வியாபித்துச் செல்வதானதொரு பீதியே அவனைப் பதட்டப்பட வைத்தது. எனினும் அந்தப் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதான கவனக்குவிப்பை அவனால் விட்டுவிட முடியாதிருந்தது. அது அவனை அச்சுறுத்துவதாக இருந்தபோதிலும், தன் மீது கவிந்துள்ள இனம் புரியாத சுமையை அல்லது அழுத்தத்தை அகற்றி விடக்கூடிய பொருளாகவே அதனை அவன் கருதினான். எனவே தான் பதட்டத்திற்கும் அச்சத்திற்கும் இடையில் தன் மீது எந்த விதமான கவனிப்போ, பார்வையோ பதியக்கூடாது எனும் கவலையுடன், அவன் அணிந்திருந்த காற்சட்டையின் பக்கற்றுக்கள் ஈய்ந்து கிழிந்துவிடக்கூடிய தன்மை கொண்டவை என்பதை உணர்ந்திருந்தபோதும், கனதியான அந்தப் பொருளை தன் காற்சட்டை பக்கற்றுக்குள் போட்டுக் கொண்டான்.

வெண்பழுப்பு நிற முடிகள் எப்போதும் நெற்றியில் சுருண்டு தொங்கத் திரியும் கணக்கு வாத்தி, பள்ளிக்கு வரக்கூடாது, வந்தாலும் அடிக்கக்கூடாது, என பிள்ளையார் கோயிலில் உடைத்த தேங்காய்ச் சில்லுத்துண்டை, தன் வெண்ணிற மேல் அங்கிக்குள் மறைந்துக் கொண்டு சென்ற நாட்களிலேயே அவனுக்கு அதிகம் அடிவிழுந்தது. அவன் தன் பிராத்தனை மீதும், கடவுள் மீதும் மிகச் சிறிய வயதிலேயே நம்பிக்கை இழந்திருந்தான். தன்னிடம் அந்த அபாயகரமான பொருள் இருப்பதை தன் கணித ஆசிரியர் தெரிய வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டவும் அது காரணமாக அமைந்திருந்தது. பாடசாலையின் தேநீர் இடைவேளையின்போது அவனைச் சூழ சகமாணவர்கள் நிற்கும் சந்தர்ப்பத்தில் மிக அலட்சியமாக அந்தப்பொருளை வெளியில் எடுக்க விரும்பினான். அவர்கள் அது பயன்படுத்தும் ஆயுதம் பற்றித் தங்களுக்கு தெரிந்ததைக் கூறுவார்கள். ஒருவன் L.M.G ரவுன்ஸ் எனச் சொல்வான். இன்னொருவன் S.L.R. னுடையது எனச் சொல்வான். ஒவ்வொருவனும் ஒவ்வொரு பெயர் சொன்ன பிற்பாடு அவர்கள் சொல்லாத துப்பாக்கியின் பெயர் சொல்லி மிக அலட்சியமாக அதன் பயன்பாடு தனக்கு மிகப் பரீட்சியமானது என்கின்ற தொனியில் மீண்டும் அந்த ரவுன்சை தன் காற்சட்டைப் பையில் போட விரும்பினான். இதன் மூலம் கணித ஆசிரியருக்கு அவன் மர்மமானவன் என்பதை மாணவர்கள் மூலம் தெரியப்படுத்த விரும்பினான். பொதுவாகவே கணித ஆசிரியர் அவனுடைய வகுப்பின் மீது தீராத பகை கொண்டிருப்பதாக தெரிவித்திருந்தார். அதிகாலைக் கனவொன்றில் அந்த வகுப்பு மாணவர்கள் செவ்விந்தியர்கள் போல் உடை அணிந்து கையில் பொல்லுகள், தடிகளுடன் தன்னை துரத்தியதாகவும் பயந்து எழுந்து ஓடியதில் தன் தோள் மூட்டு கதவில் இடிபட்டதால் தனக்கு தீராத வலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதும் இருப்பதாக அவர் அவர்களை கடுமையாகத் தண்டிக்கும்போது தெரிவித்திருக்கிறார். எனவே தன்னிடம் ரவைகள் இருப்பது அவருக்கு தெரிய வருமானால் வேப்பமரத்தின் கீழும், கோயில்களுக்குள்ளும் இருக்கும் கரிய நிற சாமிகள் எல்லாம், கண்ணில் இருந்து சிகப்பு நிறச் சுவாலைகள் ஒளிர, கனவில் தத்தமது ஆயுதங்களுடன் அவரை விரட்டக்கூடும் என தனக்குள் ஒரு குறுகுறுப்புடன் புன்னகைத்தான்.

இன்னொரு சந்தர்ப்பமாக எப்போதும் அப்பாவிபோல் நடமாடிக் கொண்டு எதையுமே கள்ளத்தனமாகச் செய்யும் அவன் அண்ணன் கள்ளக் கரண்ட் எடுப்பதற்கு கொண்டு வந்த வயரை, ஆமி ரவுண்டப் பண்ணினால், கைது செய்யலாம் என்ற அச்சம் காரணமாக, தந்தை கிடுகு மட்டை வேலிக்கும் மாட்டுக் கொட்டிலுக்கும் இடையான சந்தில் குழிதோண்டிப் புதைத்ததை அறிவான். எனவே தன்னிடம் ரவைகள் இருப்பது நேரடியாக தந்தைக்கு தெரியவருமானால் ரவுன்சுக்குப் பதிலாக மாட்டுக் கொட்டிலுக்கு பின்புறம் தான் புதைக்கப்படலாம் என்பதையும் அறிவான். ரவைகள் வைத்திருப்பது வேறொருவர் மூலம் தந்தைக்கு மறைமுகமாக தெரிய வருவதையே விரும்பினான். அவ்வாறான சந்தர்ப்பத்தில் தந்தை அவனை நேரடியாக கவனிக்காதது போல் பாவனை செய்தாலும் மறைமுகமாக அவர் தீவிரமாக கவனிப்பதை இறுமாப்போடு எதிர்கொள்ளவே விரும்பினான்.

பின்னர் மழைநீர் ஓடி கருநீல நிற இரும்புத்தாது படிவுற்றுக் கிடந்த நீர் பீலியில் தன் கவனத்தைக் குவித்து நடந்தான்.

வாகைமரத்தடியை அவன் நெருங்கியபோது இடுப்பில் இருந்த வோக்கி டோக்கி சிகப்பு நிற ஒளிர்வுடன் கரகரத்தது. அவன் சட்டென்று வாகைமர வேலியுடன் பதுங்கினான். வலது கை இடுப்பிலிருந்து பிஸ்டலை உருவி எடுத்தது. கையை உயர்த்தி கழுத்துடன் பிஸ்டலை அணைத்துக் கொண்டான். இடது கையால் வோக்கியை ஒன் செய்து வாய்க்கருகில் கொண்டு வந்தான்... ஓவர்..... ஓவர்..... யேஸ்..... ஓவர்......... ஓவர்..... ரிசீவ்...... எனிமி... எனிமி... வோக்கியை இடுப்பில் செருகிவிட்டு இடது கையையும் பிஸ்டலை நோக்கி கொண்டு போய்க் கொண்டே வேலியுடன் இன்னும் நெருக்கமாய்ப் பதுங்கினான். உள்ளே எதிரிகள், முதுகு கடுக்கியது. கம்பி வேலியின் கரல் கட்டிப் போன முள்ளோ அல்லது வாகை மரத்தின் மொக்கோ முதுகுடன் கடுமையாக அண்டிக் கொண்டிருப்பதை உணர்ந்தான். தமிழ் அல்லது ஆங்கிலப் படத்தில் வருவது போல் அவன் ஒட்டியிருந்த இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தட்டையான மதில் சுவராகவோ அல்லது மரக்குற்றியாகவோ இல்லாதிருந்தது அவனுக்கு வருத்தத்தை அளித்தது. தான் ஒரு கேள்விக்குறிபோல் வளைந்து நிற்பதை உணர்ந்தான். மீண்டும் சிகப்புநிற ஒளிர்வுடன் வோக்கி கரகரத்தது... எனிமி... எனிமி... சேஞ்யுவர் பொசிசன்... ஓவர்... ஓவர். ஆம், அவன் தன் நிலையெடுப்பை மாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தான். சொர சொர என்ற சத்தத்துடன் எதுவோ நிலத்தில் வீழ்ந்து தெறித்தது. தன் கால்களில் இளஞ்சூட்டுடன் தெறித்த சாணித்துகள்கள் கீழ்நோக்கி வழிந்து செல்வதைக் கண்டான்.

''அந்த எருமையை காலையிலிருந்து தேடுறன். எங்க தொலைஞ்சுதோ தெரியாது.'' எனிமி... எனிமி... டேஞ்சரஸ் எனிமி... சேஞ் யுவர் பொசிசன். அவன் மூளை அவனுக்குக் கட்டளையிட்டது. பழுப்பும், பசியநிறமும் கலந்த நந்தியா வெட்டையின் இலைகளுக்கிடையில் அந்த வெண்ணிறப் பூக்களின் அசைவைத் தவிர எதிரில் அவனுக்கு எதுவும் புலப்படவில்லை. இரண்டு தாவு... ஒரு எட்டு.... இன்னொரு ஜம்ப்.... அவ்வளவுதான்...., அவன் அந்தக் குறுக்கு வெட்டையைக் கடந்து பூவாழைக் குரோட்டன் களுக்குப் பின்னால் ஒரே கிடையாய் விழுந்து தன் சேப்டி பிளேசை அடைந்து விட முடியும். வன்... டு... திரி. இரண்டு எட்டு, ஒரு தாவு, இன்னுமொரு ஜம்ப். அவன் கணிப்புத்தவறவில்லை. வெதுவெதுப்பானதும் உரோமத்தின் மென்மையைக் கொண்டதும் சூடான எலும்புகள் முட்டுவதுமான ஒரு பொருள் மீது வீழ்வதை உணர்ந்தான். மனச் சுமையுடன் கூடிய தவிப்பில் நீல வானும், அலையும் வெண்பரப்பும் அவற்றுக்கிடையில் அச்சுறுத்தும் இரு கரிய விழிகளையும், இளஞ்சிகப்பு நிற முரசுகளையும், அதில் தெரியும் வெண்பழுப்பு நிற, கூரிய பற்களையும் கண்டான். காதுகள் அடைத்து விடுவது போன்ற அலறலுடன் தான் இடர்ப்படுவதை உணர்ந்தான். தொடர்ச்சியான ஈனமான முனகலுடன் கூடிய ஊளையிடுதலே தனக்கு நேரவிருந்த விபத்தின் கடுமையை அவனுக்கு உணர்த்தியது. அவன் உடல் ஒருமுறை துடித்து அடங்க உதடுகள் துடித்துக் கொண்டிருந்தது. ''டேஞ்சரஸ் எனிமி... கெரி பல்லா.''* புடுக்குத் தப்பினது தம்பிரான் புண்ணியம்.

மாரிகால கடலின் ஓயாத இரைச்சலும், கல்லில் உடுப்படிக்கும் சத்தமும், அணில் பிள்ளையின் தித்தித் சத்தமும் கேட்டுக் கொண்டு

---

*(கெரிபல்லா - சிங்கள மொழிச் சொல் - கெரி - கெட்டவார்த்தை, பல்லா - நாய் - தமிழர்களை துவேசமாக திட்ட சிங்கள இனவாதிகள் பயன்படுத்தும் சொற்றொடர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் போதும் வளவு சத்தமில்லாமல் அமைதியாக இருக்குமாப் போல் அவனுக்குப்பட்டது. மதியம் பெய்த மழைக்குப்பிறகு இப்போதுதான் மஞ்சள் வெய்யில் எரிக்கிறது. ஆனாலும் முகில் கலையாது மம்மலாய் இருந்தது. பாதத்திற்கு, நிலம் ஈரமாய் கசிவதை உணர்ந்தான். கிளுவைக்கும் கொய்யாவுக்கும் இடையில் வேலியில் வரியப்பட்டிருந்த பனை மட்டைகளுக்கிடையே விழும் மஞ்சள் வெய்யில் புற்தரையில் மஞ்சள் கீலம்கீலமாக விழுந்து கிடந்தது. கரும் பச்சை நிறப் புற்கள் விறுவிறுவென்று வளர்ந்து வழித்தடத்தை எல்லாம் மூடிவிடும் போல் இருந்தது. மிக மெல்லியதாய் குளிர்காற்று உடல் மீது படர்ந்ததை உணர்ந்தான். திடீர் என்று காற்று பலமாக வீசிவிட்டு சட்டென்று ஓய்ந்தது. கிளுவையில் இருந்து சிழுநீர் அவன் உடல், உச்சந்தலை என்று கொட்டிற்று. சிழுநீர் விழுந்து உச்சி விறைக்க, உடல் பதற, புடுக்கு விறைச்சு நிற்க, நெஞ்சுக்கூடு கொடுக அடித்தொண்டையால் தன்னிச்சையின்றிக் கத்தினான்.

''மஞ்சள் வெய்யில் எறிக்குது

மாங்கொட்டை துடிக்குது

மச்சாண்ட புடுக்குத் தெறிக்குது....''

''தட்டினால் தப்பி வருவேன். தடவினால் தாலியைக் கழட்டிவை...'' என்று ஆண் நுளம்பு தன் மனைவியிடம் சொல்லி வருவதாக நுளம்படிக்கப் பக்குவம் சொல்லித்தந்த பாட்டி இறந்து போனாள் எனும் இரவுநேர நினைப்பின்போது ஏற்படுவதான திகிலே கத்தியவுடன் அவனுக்கு ஏற்பட்டது. ஆனாலும் சட்டென்று அவன் தன்னிலை அடைந்தான். ராகினி வீட்டு டொயிலெட் கதவு திறந்து கிடப்பதும் பத்தர் வீட்டு யன்னல் பூட்டி இருப்பதும், தூரத்து தார்றோட்டில் சிலர் தன் பாட்டில் இயங்குவதும் அருகில் இருந்த ஒழுங்கை ஆள் அரவமற்றுக் கிடப்பதுமான முரண்பாடான விசயங்கள், தான் அடைந்த அச்சத்திலிருந்து தன்னை விடுவித்து விட்டதாகவும் மகிழ்ந்தான். பின்னர் மழை நீர் ஓடி கருநீல நிற இரும்புத்தாது படிவுற்றுக் கிடந்த நீர் பீலியில் தன் கவனத்தைக் குவித்து நடந்தான்.

''ஆர்.... சபேசனா? ஐயாச்சி இங்கொருக்கா வாய்யா.''

குரலில் இருந்த கனிவு காரணமாகவோ அல்லது அந்தக் குரலுக்குரியவரை இனங்கண்டு கொண்டதாலோ அவன் சிறிய திடுக்கிடலுடன் மட்டும், அந்த விழிப்புக்கு செவிசாய்த்தான். வசந்திச்சித்தி குறுக்ககட்டி கிணத்தடியில் குந்தி இருந்து உடுப்புத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவைக்கிறா, சிவராமும், ஸ்ரீயும் வசந்திச் சித்தி பற்றி அதிகம் சிரிச்சுச் சிரிச்சு கதைப்பதை அவன் கண்டிருக்கிறான். வசந்திச் சித்தி வடிவுதான்.

''ஐயாச்சி, வாழைக்குப் போற தண்ணிய ஒருக்கா தென்னைக்கு மாற்றி விடய்யா.''

தன் ஆண்மையை நிலைநிறுத்திக் கொள்வதான அவாவே தன் புயவலிமையை காட்டுவதான பாசாங்குமற்று இயல்பாகவே ஒரு கைதேர்ந்த விவசாயியின் நுணுக்க பாவத்துடன் மண்ணைக் கோலி தண்ணீரின் திசையை மாற்றினான். இவற்றின் மீது எதுவித கவனமுற்று தன் உடுப்புக்களை துவைத்தபடியே வசந்திச்சித்தியின் உதடுகள் பிரிவதைக் கண்டான்.

''ஆற்ற புடுக்கையாச்சி தெறிச்சது?''

கொதிக்கும் சுண்ணாம்புக் கலவைப் பின்னணியில் சுருட்டுக் கடைக்காரர் ரவுண்டப்போல கிடக்கு என்று கிடுகு மடைவேலிக்கு பின்னால் மறைந்து, மறைந்து போய்க்கொண்டே கைகள் இரண்டையும் தலைக்கு மேல் தூக்கி உதறி உதறி கத்திக் கத்திப் போனார். நெஞ்சு விறைச்சுப்போக திடுக்கிட்டு கோழிக் குடிலின் உச்சியிலிருந்து உருண்டு சேற்றுக் குழிக்குள் வீழ்ந்தான். சேற்றிலிருந்தும் ரவுண்டப்பிலிருந்தும் தப்புவதற்கான வகையற்று தவித்தான். அம்மாவின் குரல் முகில்களுக்குள்ளேயோ அல்லது கரிப்பிடித்த குசினிச் சிமினிக்குப் பின்னால் இருந்தோ அசரீரீ போல் ஒலித்தது. ''டேய்... பள்ளிக்குப் போற மாதிரி புத்தக பேக்க தூக்கிட்டுப் போடா.'' பரீட்சயமானது போல் தோற்றம் தந்ததும் ஆனால் அவனுடைய வீட்டு முற்றமும் அல்லாததாகவும் இருந்த இடத்தில் இருந்து அவன் தெருவை நோக்கி ஓடினான். ஆனால் வந்து சேர்ந்த அந்த வீதியும் அவனுக்கு பரீட்சயமான கிரவல் வீதியாக இல்லாமல் புல்லும் புதரும் தென்னை மரங்களும் நிறைந்த மணல் பாதையாக கிடந்தது. நிறையப்பேர் துப்பாக்கியுடன் யூனிபோம் போட்டு நின்றார்கள். அதில் அவனும் துப்பாக்கியுடன் யூனிபோம் போட்டு நிற்பதைக் கண்டான். ஒருவரும் கவனிக்காத போதும் பரீட்சயமற்ற புதிரான பாதைகளில் அலைவது அவனுக்கு பயப்பீதியை உண்டு பண்ணியது. திடீர் என்று ஒரு புதிர்பாதை முன் சென்றி தோன்றியது. அவன் புத்தகப்பையில் இருந்து ரவுண்சை கீழே போடுவது எனத் தீர்மானித்தான். திடீர் என்ற விறைச்சுப்போன முத்தப்பாவின் முகத்தில் அவருக்கு சொந்த மில்லாததும் யாருடையதோ போன்ற இறுகிப்போனதுமான குரல் கட்டளை இடுவதுபோல் கரகரத்தது. ''செக் பொயின்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் நிண்டு புத்தக பேக்கத் திறக்கக் கூடாது. ஒருத்தர் செக்பொயின்டுக்கு முன்னால நிண்டு வெத்திலபோட இடுப்பில் இருந்து வெத்தில பேக்க உருவினவராம். அவர் இடுப்பில் இருந்து துவக்க எடுக்கிறதா நினைச்சு சுட்டுப்போட்டாங்களாம்.'' சென்றியைத் தாண்டிச் சென்று ரவுண்சை கீழே போடுவது எனத் தீர்மானித்தான். பின்னால் யானை பிளிறுவது போல அல்லது ஆகாய விமானம் இரைவதாகவே மிகப் பயங்கரமான உறுமலும் அலறலும் சேர்ந்ததான சத்தம் கேட்டது. இரண்டு ரவுன்ஸ் இணைஞ்சு ஆங்கிலப் படத்தில் வர்றதுபோல் இரண்டு கூர் முன்னால் நீட்டிக் கொண்டும் பளபளப்பா மினிங்கிக் கொண்டும் ஒரு ஜீப் வேகமாக வந்தது அவன் கூர்ந்து பார்த்தான். கணக்கு வாத்தி முன்சீற்றில் வேட்டி கட்டி குதிச்சு குதிச்சுக் கத்தினார். ''அவன் தான்... அவன் தான்.'' கால்கள் தள்ளாடின. பாதைகள் விட்டு விட்டு தோன்றின ஜீப்பும் திடீர் திடீர் என்று மறைந்து மறைந்து தோன்றியது. ஆனாலும் அச்சுறுத்தும் உறுமல் தொடர்ந்து கேட்டபடி இருந்தது. ஓட முடியாத அளவுக்குத் தொண்டை காஞ்சுபோனது. முட்புதற் களுக்கிடையில் வகுப்பு மொனிட்டரும், கணக்கு வாத்தியும் குந்தி இருந்தார்கள். திடீர் என்று அவனுக்கு முன்னே வானத்தை முட்டுவதுபோலே உயர்ந்த கோபுரம் தோன்றியது. சுவர்கள் அவனை விழுங்கி உள்ளே துப்பின. அவன் புல்தரையில் புரண்டான். அவன் முதுகில் சொர சொர என நீர் ஊற்றப்பட்டு நனைவதை உணர்ந்தான். வெத்தில போட்ட வாயுடன் பிரின்சிப்பல் தோட்டத்திற்கு தண்ணி அடிக்கிறார். உடம்பில் மெல்ல குளிர் பரவுவதை அவன் உணர்ந்து திடுக்கிட்டு முழிச்சுப் பார்த்தான். உடம்பெல்லாம் நனைந்து போய் கிடந்தது. தலைமாட்டில் வைத்திருந்த தண்ணிச் செம்பு உருண்டு போய்க் கிடந்தது. நிமிர்ந்து மேசையை பார்த்தான். குளத்தில் கழுத்தளவு தண்ணியில் எருமை தலையை மட்டுமே மேலே தூக்கிக் கொண்டு அமைதியாக நிற்குமாப்போல மேசையில் புத்தகபேக் அமைதியாகக் கிடப்பது இருட்டில் தெரிந்தது. விடிந்ததும் முதல் வேலையாக குசினிக்குப் பின்னால் குழி கிண்டி ரவுன்சைத் தாக்க வேண்டும் என நினைத்தான். ஊர் முழுவதும் நாய்கள் கண்ட மாதிரியும் குரைத்தன. விடிய ரவுண்டப் போட்டாலும் போடுவாங்கள், என்ற நினைப்பு உடம்பெல்லாம் கூதலாய்ப்பரவி நடுங்குவதை உணர்ந்தான்.

2002 - எக்சில் - (பிரான்ஸ்) ''ஒப்பனை நிழல்'' தொகுப்பில் இருந்து மீள் பிரசுரம் - அடவி 2011 - (இந்தியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறக்கம்

கோடை மிக நீண்டு செல்வதால், காற்று கிறக்கம் தரக் கூடிய எதுவித வாடையையும் சுமந்து வரவில்லை என ராசப்பா நினைத்துக் கொண்டார். நாசியை எந்த வாடையும் வந்து நிறைக்காதது அவருக்கு தவிப்பையும், பதட்டத்தையும், உண்டு பண்ணுவதாய் இருந்தது. ஆழக் கடலில் இருந்து, காற்று கடல் வெடுக்கு எதையாவது சுமந்து வருகிறதா என நாசியை, கடற் பக்கமாக கூர்மைப்படுத்தினார் ராசப்பா. விறகு பிளக்கும் ஒலியை, விறகுச் சிராய்கள் பட்டுப் பட்டு எப்போதும் தழும்பும் காயமுமாக, குத்தும் வலியுமாக, பாடாய்ப் படுத்தும் கால்களை, சகிக்க முடியாத குரைப்பொலியுடன் துரத்தும் நாய்களை, அதட்டி வேலை வாங்கும் கொடூரமான முகங்களை, நினைவில் தொற்றி உறவாடாது நழுவிச் செல்லும் முகங்களை, கிறவல் வீதிகளை, குச்சு மணல் ஒழுங்கை களை, மரங்களை, வேலிகளை மறக்க, மண்டையை இறுக்கிப் பிடித்து விடுதலை அளிக்கும், கிறக்கம் தரக்கூடிய வாடைக்காக, அவரது கறுத்த மீசைக்குள் மறைந்து கிடந்த மூக்குத் துவாரங்கள் புடைத்து, கோடையின் தகிப்பில் வறண்ட காற்றினை உள்வாங்கின. கடற்கரையிலும் எதுவித வெடுக்கும் அடிக்காததால் அவர் கிறவல் வீதியில் ஏறி நடக்கத் தொடங்கினார்.

தலையில் பழைய, காவி பிடித்த வெள்ளை வேட்டித் துண்டைப் போட்டு, கயிற்றால் அரபு தேசத்தவர் போல், தலையைச் சுற்றி வட்டமாக இறுக்கிக் கட்டி இருப்பது, தனக்கு மிடுக்காக இருப்பதாக ராசப்பா கருதினார். அவரது வலது பக்க தோள்ப்பட்டையை நோக்கி, காற்றில் மேல் எழுந்த, பழுப்பு நிறத் தாடியை, இடது கையால் நேராக நீவியபடி, நாசி துர்வாடைக்காக ஏங்க, கிறவல் வீதியில் நடந்து போனார் ராசப்பா. மிகக் கூர்மையான நுண்ணிய, விட்டு விட்டு சுரீர் எனக் குத்தும் வலியை, நெஞ்சில் உணர்ந்தார் ராசப்பா. அவரது சீரான நடை தடைப்பட்டு, அங்கும் இங்குமாகத் தள்ளாடினார். சிகப்பும் வெள்ளையும் குறுக்குக் கீலமாக ஓடும் கயர் படிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாறனை, தூக்கிக் கட்டியபடி கால்களை அகல விரித்து நின்ற போது தன் உடல் சமநிலைக்கு வந்துவிட்டதை உணர்ந்தார். கடும் நீல நிற, பட்டின் பூட்டாத சேட்டுக்குள், அடர்ந்த கரிய முடிகள் கொண்ட நெஞ்சுப் பகுதியை, தன் கைகளால் பிசைந்த போது வலி குறைந்திருப்பதாக உணர்ந்தார் ராசப்பா.

வலியை அடக்கி கண் விழித்த போது, பனைமட்டை வேலியின் மீது படர்ந்து, காய்ந்து போய்க்கிடந்த பழுத்த பாலைக் கொடி இலைகள், ராசப்பாவின் கலங்கிய கண்களின் பழுத்துப் போன விழிகளுக்குள் சலனமற்றுக் கிடந்தன. இலைகளைப் பிடுங்கி உள்ளங்கையில் வைத்து, பெருவிரலால் கசக்கி, உள்ளங்கையை முகத்திற்கு கிட்ட உயர்த்தி, ஆற அமர மூச்சை தம்பிடித்து உள் இழுத்தார். அந்த வாடை அவருக்கு எதுவிதக் கிறக்கத்தையும் கொடுக்காதிருப்பதை உணர்ந்தார். தள்ளாடியபடி நகரத் தொடங்கினார். அந்தக் கிறவல் ஒழுங்கையின் முடக்கைத் தாண்டிவிட்டால் தார் போட்ட பிரதான வீதி வந்துவிடும். பின் ஏதாவது வாகனத்தின் எரிந்த பெற்றோல் வாடையையோ, அல்லது டீசல் வாடையையோ நுகரலாம் என ராசப்பா வேகமாக நடக்க முற்பட்டார்.

''ராசப்போ ...! கஞ்சா இருக்காம். அம்மா... கொள்ளி... கொத்த வரட்டாம்.''

நீண்ட கூவலான அழைப்பொலி, பின்புறமாக, வறண்டு கிடந்த காற்றில் மிதந்து வந்து, தாக்கியது போல் ராசப்பா திடுக்கிட்டு நின்றார். கண்கள் ஒளிர, நாசிகள் புடைக்க, உதடு துடிக்க ராசப்பா திரும்பினார். நீல நிற அரைக் காற்சட்டை அணிந்து, வெற்றுடம்புடன் சைக்கிள் பாறுக்குள்ளால் ஒரு காலைப் போட்டு, பெடலை மிதித்தபடியும், மற்றக் கால் நிலத்தில் ஊன்றிக் கெண்டிலில் ஒரு கையும், சைக்கிள் சீற்றில் ஒருகையுமாக, சிறுவன் அக்கிறவல் வீதியின் பிற்புலத்தில், ராசப்பாவின் நீல விழிகளுக்குள் வந்தான். அழிந்து கொண்டிருக்கும் அவரது நினைவாற்றலுக்குள், அந்தச் சிறுவனின் வீட்டைத் தேடி இனங்கண்ட வெறியில், ராசப்பா நடக்கத் தொடங்கினார். அரை வட்டம் அடித்துக் காலைக் கெந்தி, பாறுக்குள்ளால் கால் போட்டு, அலங்கோலமான அங்க அசைவு களுடன் சைக்கிளை ஓட்டிப் போகும் சிறுவனைத் தொடர்ந்து போனார் ராசப்பா.

தகரப் படலையைத் திறந்து, அவர் உள்ளே போன போது, விறகு கொத்தும் தென்னை மரத்தடியில், கோடாரி வெய்யிலில் பளபளத்துக் கிடந்தது. சிராய்களுக்கு நடுவே, விறகு போட்டுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தும் கட்டை, கொத்திக் கொத்தி பாதி உள் குழிந்த நிலையில் கிடந்தது. முருகலும், திருகலுமான சில மொக்குக் கட்டைகள் குவிந்து கிடந்ததை ராசப்பா கண்டார். பாடு பார்த்துப் போடுவதும், மூச்சிரைப்புமாக அவர் அந்த மொக்குக் கட்டைகளுடன் போராடத் தொடங்கினார். சில விறகுத் துண்டுகளும் அதிக சிராய்த் துண்டுகளுமாக மொக்குக் கட்டைகள் பிளக்கத் தொடங்கும் போது, மீன் பொரியல் வாசனை ராசப்பாவின் நாசியை நிறைத்தது.

''அவங்கட புருசன்மாருக்கு மட்டும் குடுப்பாங்க.''

''என்ன ராசப்பா புறுபுறுக்கிறாய்?''

குனிந்த முதுகை நிமிர்த்தாது, கோடாரிப் பிடியில் தன் பாரத்தைச் சுமத்தி, தலையை மேல் நோக்கி உயர்த்தினார் ராசப்பா. களைத்துச் சோர்ந்து போன விழிகளுக்குள், அந்த அம்மாள் கையில் ஜேம் போத்தலுக்குள் தேனீர்ச் சாயத்துடன் நின்றிருந்தாள்.

''கஞ்சா...?''

''கொத்தி முடி தாரன்.''

அந்த அம்மாள் குனிந்து நிலத்தில் ஜேம் போத்தலை வைத்து விட்டு, குசினிக்குள் போகும் வரை, கூனிப்போன தன் உடலை நிமிர்த்தாது, பார்த்து நின்றார் ராசப்பா.

மூச்சிரைக்கும் ஒலியும், விறகு பிளக்கும் ஒலியும், கோடரியின் ''நங்'' என்ற ஒலியும், புறுபுறுப்பும், அந்த அம்மாள் கறி இறக்கும் வரை கேட்டுக் கொண்டிருந்தது.

வியர்வையில் நனைந்து, உடலோடு ஒட்டிப் போன உடையும், தாடியுமாக, தலையில் கட்டி இருந்த துணியால், முகத்தை துடைத்தபடி, குசினி வாசலில் காத்து நின்றார் ராசப்பா. அந்த அம்மாள் கையில் பேப்பர் சரையுடன் வருவதை, ஒளிரும் கண்களுடன் அவர் பார்த்து நின்றார்.

''நெருப்பு...?''

''சரைக்க இரண்டு மூண்டு நெருப்புக் குச்சும் உரச நெருப்புப் பெட்டி மருந்துப் பக்கமும் இருக்கு.''

மலர்ந்த முகமும், பலமான தலை ஆட்டலுமாக ராசப்பா திரும்பினார். தாடை நீண்ட முக வடிவும், ஒடிந்த தேகம் கொண்டவனுமான அவன், இடுப்பில் சாரம் மட்டும் கட்டி, அந்த பிரம்மாண்டமான வீட்டின், மூன்று தூண் தாங்கும் சன் செட்டின் கீழ், இடுப்பில் கை ஊன்றி நிற்பதை ராசப்பா கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ராசப்பா கொஞ்சம் நில், அலுவல் ஒண்டு இருக்கு.''

அந்த ஒடிசல் தேகக்காரன், கழுத்தை உயர்த்திச் சொறிந்து கொண்டு சொன்னான். ராசப்பா தகரப் படலையைத் திறந்து, ஓடத் தொடங்கினார்.

''என்னத்துக்கு இப்ப அவசரப்பட்டுக் குடுத்தனி. நான் கன்னியாவில் இருந்து கஷ்ரப்பட்டுக் கொண்டு வந்தது. உனக்கு கொள்ளி கொத்தவா ...? இன்சுரன்ஸ்ல இருந்து இரண்டு சிங்களக் கடிதம் வந்திருக்கு. அந்தாளக் கொண்டு வாசிச்சு... பதில் எழுதோனும் எண்டு இருந்தனான். இனி அந்தாளப் பிடிச்ச மாதிரித்தான்.''

அந்த ஒடிசலான தேகக்காரன் குசினிப் பக்கம் திரும்பிக் கத்தினான்.

''முழுக்கக் குடுக்க இல்ல. கொஞ்சந்தான் குடுத்தனான். எங்க போப்போறேர்...? முடிய வரத்தானே வேணும்.''

அந்த அம்மாள் குசினிக்குள் போனாள். ஒடிசல் தேகக்காரன் சினத்துடன் தலையைச் சிலுப்பி வீட்டினுள் போனான். ராசப்பா வேலிக்கு மேலால் அவர்களை நோட்டம் விட்டபடி ஓடினார்.

ராசப்பா ஓடிக் கொண்டிருந்தார். கிறவல் வீதி தாண்டி, எதிர்ப்பட்ட மனிதர்கள் தாண்டி, கம்பிக் கடப்புக்கள் தாண்டி, மண் அரிப்புக்குப் போட்ட கருங்கற்கள் தாண்டி, கடற்கரையில் கிடந்த படகுகள் தாண்டி, குவிந்து கிடந்த வலைகள் தாண்டி, ராசப்பா ஓடிக் கொண்டிருந்தார். சில பத்து ரூபாய் நோட்டுக்களும், கஞ்சாச்சரையும் துரத்த, ராசப்பா ஓடிக் கொண்டிருந்தார். ஊரில் வேலி அடைக்க, கிடுகு இழைக்க, சீமெந்து குழைக்க, தென்னங் கன்றுகளுக்கு நீர் வார்க்க, சிங்களக் கடிதம் வாசிக்க, சிங்களத்தில் கடிதம் எழுத, பாரம் சுமக்க, விறகு கொத்த, சில பத்து ரூபாய் நோட்டுகளும், கஞ்சாச் சரையும் விரட்ட சுடலையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார் ராசப்பா. கையில் கஞ்சாச் சரையும், சில பேப்பர் துண்டுகளும், சுண்டுப் பேணியில் தண்ணியுமாக யாரும் தன்னை தொந்தரவு படுத்தாமல் இருக்க, அந்தச் சுடலையின் வேப்பமர நிழலில் கிடந்த நினைவுக் கட்டிடத்திற்கு ராசப்பா மூச்சிரைக்க வந்து சேர்ந்தார்.

கண்கள் கிறங்கிக் கிடக்க பேப்பர்களில் நீலமும், மஞ்சளுமாகப் பற்றிப் படரும் நெருப்புக் கங்குகளைப் பார்த்தபடி இருந்தார் ராசப்பா. அவர் நாசியையும், அவரைச் சூழவும், கஞ்சாப் புகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடி நிறைந்து கிடக்க, ராசப்பா கிறங்கிப் போய்க் கிடந்தார். தலையின் இறுக்கம் குறைந்து, உடல் பஞ்சாய் லேசாகி மேல் எழ, முகம் மலர்ந்து, அந்தச் சுடலை மணலில் கிடந்தார் ராசப்பா.

பஞ்சாகி உடற் பாரம் குறைந்து போக, ராசப்பா கடற் பரப்பிற்கு மேலே முகில் மீது மிதந்து சிறுவனாக பேசாலைக் கடற்கரையில் இறங்கி ஓடிக் கொண்டிருந்தார். அவர் தன் மார்புடன் அணைத்திருந்த, கடையில் வாங்கிய புதுப் புத்தக நெடியைச் சுவாசித்தபடி தன் தாயிடம், தன் புதுப் பாடப் புத்தகத்தில், தன் ஊர்ப் பெயர் இருப்பதைக் காட்டிப் பெருமைப்பட, தன் தாய் மடி சாய, ராசப்பா சிறுவனாக ஓடிக் கொண்டிருந்தார். ஓடிக் கொண்டிருக்கும் போதே, அவரது பால்ய முகம் மறைந்து, தடித்த மீசையும், வாரிப் படிய விட்ட தலையுமான அவரது இளமைப் பருவ முகம் நினைவில் உருக்கொண்டது. கூடவே இரும்புகள் ஒன்றோடு ஒன்று உரசும் ஒலியும் கிரீச்சிடல்களும் டீசல் பற்றி எரியும் மணமும் ரயிலின் கூவல் ஒலியும் அவரது பிரகாசமான முகத்தை மெல்ல மெல்ல இருளடைய வைத்தன.

தோய்த்து அயன் செய்யப்பட்ட வைட் & வைட் உடை அணிந்து, இடுப்பில் கறுத்த பெல்ட் கவ்வி இருக்க, சாம்பல் நிற நைலோன் கயிற்றில் பின்னி, தோள்பட்டையில் வளையமாக கட்டிய கயிற்றின் நுனியில் விசில் தொங்க, அவர் கம்பீரமாக ரயில் எஞ்சினின் வெளிப்புற, வெள்ளி நிற விளிம்புக் கைப் பிடியை பற்றி நின்றிருந்தார். அவருக்கு ரயில் பயணமும், ரயிலின் அகங்காரமும் பிடித்தமானது. ரயில் ஒரு ஸ்டேசனில் இருந்து புறப்பட்டு விட்டால் அடுத்த ஸ்டேசன் வரை எந்தக் கடவையிலும் யாருக்காகவும் காத்து நிற்பதில்லை. ஆனால் வீதிக் கடவைகளில் ரயில் கடக்கும் வரை, ராணுவ ரக் வண்டிகள், உயர் அதிகாரிகள், காரில் வரும் பணக்காரர்கள், நீதிபதிகள் என பலர் காத்துக் கிடப்பதை அவர் கண்டிருக்கிறார். இந்த இறுமாப்பு, ரயிலுக்கு இருப்பது போல், அதில் உத்தியோகம் பார்க்கும் தனக்கும் இருப்பதாக பல தடவை நினைத்துப் பார்த்திருக்கின்றார். இந்த இறுமாப்பும், உத்தியோகமும், ரயில் பயணமும் அவருக்குப் பிடித்தமான அந்த ரயில்வே ஸ்டேசனிலேயே முடிந்து போனது.

முன்னைய ஸ்டேசனில் இருந்தே ரயில் முழுவதும் ஒரு பதட்டமும், பீதியும் பரவி இருந்தது. ஆயுதம் தரித்த ராணுவம் எல்லாப் பெட்டிகளிலும் ஏறி வாசல்களில் காவலுக்கு நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்ட செய்திகளும், தகவல்களும் அந்த ஸ்டேசன் நெருங்க நெருங்க ரயிலில் இருந்த பயணிகளைப் போல், அவருக்கும் பதட்டத்தை அதிகரிக்கச்செய்தது. ரயில் உரக்கக் கூவி ஆர்ப்பாட்டம் பண்ணாது, அடங்கிப் போய் மெல்ல நகர்வதாக அவருக்குப்பட்டது.

ரயில் அடங்கிய ஊதல் ஒலியுடன், ஸ்டேசனை மெதுவாக அண்மித்த போது, பல இடங்களில் தீ அணைந்து புகை மூட்டமாகவும், சில இடங்களில் தீ அணையாது இன்னமும் எரிந்து கொண்டும் இருந்ததைக் கண்டார். எரிந்த தசைகளின் வீச்சமும், டயர் எரியும் வாடையும், அந்தப் பிரதேசம் முழுவதும் வியாபித்து, அவர் நாசியை கடுமையாகத் தாக்கிற்று. டயர்களுக்குள் பாதி எரிந்தும், எரியாததுமான, அகற்றப்படாத சடலங்களும் தன் உடலை காய்ச்சல் கண்டவர் போல் நடுங்கச் செய்வதை உணர்ந்தார். ரயில்வே ஸ்டேசன் முழுதும் ஆயுதம் தாங்கிய ராணுவம் காவல் செய்வதைக் கண்டார். இன்னமும் வன்மமான முகத்துடன் சிலர், மரங்களுக்குப் பின்னால் இருந்து இரயிலை நோக்கி விட்டெறிந்த கற்கள், ரயில்ப் பெட்டிகளைத் தாண்டி, பிளட் போமில் வந்து விழுந்து, உடைந்து சிதறுவதைக் கண்டார். சில வேட்டோசைகள் தீர்க்கப்பட்டது, இன்னும் பயப் பீதியையும், பதட்டத்தையும், உண்டு பண்ணுவது போல் அவருக்குப்பட்டது. ரயில் ஸ்டேசனில் ஒய்வுக்கு வந்தது. அந்த ஸ்டேசனில் இறங்குபவர்களும், ஏறுபவர்களும், மாத்திரமே நடமாட அனுமதிக்கப்பட்டார்கள். மற்ற பயணிகள் ரயிலில் இருந்து இறங்க அனுமதிக்கப் படவில்லை. அந்த ரயில் கால அட்டவணைகளையும், ரயில்வே சம்பிரதாயங் களையும், கவனியாது புறப்பட்டதை வருத்தத்துடன் கவனித்தார். ரயில் ரக்மாறி வேகமெடுத்த கணத்தில் அது நிகழ்ந்தது. உடலில் ஆடை இல்லாது, கோரமான எரிகாயங்களுடன் புதருக்குள் இருந்து, ஆணா பெண்ணா என அனுமானிக்க முடியாத ஒரு உருவம், வீரிட்டு அலறி வந்து ரயில் மீது பாய்வதை பதட்டத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். சிதைந்து வந்த தசைத் துணுக்குகள், அவரது வெள்ளாடை மீது சிவப்பும், கறுப்புமாகப் படிந்தது. எரிந்த தசைத் துகள்களின் வீச்சம் அவரை மூச்சுத்திணற வைத்தது. வெட்டப்பட்ட மரம் போல், எஞ்சின் பெட்டிக்குள் தான் சாய்வதை உணர்ந்தார்.

சில்லிட்ட நீர்த் துளிகள் ராசப்பாவை உணர்வு நிலைக்குக் கொண்டு வந்தன. பசி மயக்கமும், கஞ்சா மயக்கமும், அவரது விழிகள் திறப்பதற்கு அனுமதிக்கவில்லை. திரும்பவும் முகத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் ஊற்றப்பட்டதால், அவர் வலுக்கட்டாயமாக விழித்தார். நனைந்த ஈரமான இமை மயிர்களுக்கு இடையே, பாதி நீல வானமும், பாதி பசிய வேப்ப மரக் கிளைகளுமான பிற்புலத்தில், அவரைச் சூழ சில முகங்கள் தென்பட்டன.

''ராசப்பா, எழும்பி வா. சவக்குழி ஒண்டு தோண்டோனும்.''

பாசி படிந்த கறுத்த நினைவுக் கட்டிடங்களும், ஆனை நெருஞ்சியும் நிறைந்த மயானத்தில், பசிமயக்கமும், கஞ்சா மயக்கமுமாக, ராசப்பா மூச்சிறைக்க, அவர்களுடன் சேர்ந்து, ஈரமான குருத்து மணல் மேலெழும் வரை சவக்குழி தோண்டினார். வழமையான பத்து ரூபாய் நோட்டுக்களும், இன்னும் சில நோட்டுக்களுமாக, ராசப்பா மயானத்தை விட்டு வெளியேறினார்.

கமக்கட்டிற்குள் ஒரு இறாத்தல் பாணைச் செருகி, ஒரு கையில், ஜேம் போத்தலில் தண்ணியுமாக, ராசப்பா, மீளவும் அந்த மயானத்தின் வேப்ப மர நிழலை நோக்கி வந்தார். பாணைப் பிய்த்து தண்ணீரில் நனைத்து சாப்பிடத் தொடங்கிய போது, தூரத்தில் சீன வெடிச் சத்தத்தைக் கேட்டார். சவ ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறது என நினைத்தபோது, பாண் புறைக்கேறி, ராசப்பா இருமினார்.

அதிகமான நெஞ்சு வலியும், முதிர்ச்சியும் அவரை கடுமையாக தாக்கியதால், ஊருக்குள் வேலை செய்வதை விடுத்து, மயானங்களில் எரியும் பிணவாடையை நுகர்ந்தபடி, அலைந்து திரிந்தார் ராசப்பா. பிணம் எரியும் சுடலைகளைத் தேடிச் சென்று, பிணம் எரிந்து முடியும் வரை எரிப்பதும், பிணவாடை நுகர்வதுமாக, அலைந்து திரிந்தார். பிணம் எரியும் வாடை நுகர முடியாத நாட்களில் ஏக்கமும், மண்டைக் குடச்சலுமாக அலைந்து திரிந்தார் ராசப்பா.

ராசப்பா வெட்டியானாகிப் போன கதையை, நக்கலாக ஊர்ப் பெருசுகள் பேசித் திரிந்த இரவொன்றில், மூன்று நான்கு நாட்களாக, எரியும் பிணத்தின் வாடை எதையும் நுகர முடியாது போனதால், மண்டைக் குடைச்சல் தாங்க முடியாது சுடலைகள் தோறும் அலைந்து திரிந்துவிட்டு, பெரிய நிழல் வாகைகளில், ஆந்தைகள் அலறிக் கொண்டிருந்த, கம்பிக் கதவில் சிலுவைக் குறிபொறித்த, இருளடைந்து கிடந்த அந்தச் சுடலையை வந்தடைந்தார்.

பாசி படிந்த கருத்த கட்டிடங்களைக்கொண்ட, புதர் மண்டிய அந்தச் சுடலைக்குள், தன் கண்களைக் கூர்மையாக்கி, இருளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளுத்துத் தெரியும் மணல் திட்டுக்களைத் தேடத் தொடங்கினார். வெளிறித் தெரிந்த திட்டுக்களில் கைவைத்துப் பார்த்து, ஈரமணலாக இருந்த ஒரு திட்டின் அருகே அமர்ந்து கிண்டத் தொடங்கினார்.

முழுமையாக இழுத்து வெளியே எடுக்க முடியாது, பாதி மணலுள் புதைந்து கிடந்த சடலத்தின் மீது, கள்ளிகளையும், குப்பை களையும், உடைந்த சவப் பெட்டித் துண்டுகளையும், போட்டுத் தீ மூட்டினார் ராசப்பா.

நெருப்பு வெளிச்சம் அணையத் தொடங்கிய போது, பிணவாடை தந்த கிறக்கத்திலும், ஈர மணல் தந்த மென்மையிலும், தன்னை இழக்கத் தொடங்கினார் ராசப்பா. எரிந்த குச்சிகளின் தணலில் இருந்து வரும் வெளிச்சத்தையும் மீறி, டோச் லைட்டின் வெள்ளொளிர்ப் பொட்டுக்கள், புதர்களிலும், நினைவுக் கட்டிடங் களிலும், தன் உடல் மீதும் நகர்ந்து விலகிப் போவதை, பிண வாடை தந்த கிறக்கத்தில் கவனியாது கிடந்தார் ராசப்பா.

இரும்புகள் ஒன்றோடு ஒன்று உரசும் ஒலி, கிரீச்சிடல்கள், டீசல் பற்றி எரியும் மணம், ரயிலின் கூவல் ஒலி. தோய்த்து அயன் செய்யப்பட்ட வைட் & வைட் உடை அணிந்து, இடுப்பில் கறுத்த பெல்ட் கவ்வி இருக்க, கம்பீரமாக ரயில் எஞ்சினின் வெளிப் புற, வெள்ளி நிற விளிம்புக் கைப்பிடியை பற்றி நின்றிருந்தார் ராசப்பா. வேகமாகப் போய்க் கொண்டிருந்த ரயிலை யாரோ பிடித்து உலுப்ப, தான் முகம் குப்பற விழுவது போல் உணர்ந்தார் ராசப்பா. ஏதோ ஒரு மிருகம் தன் மீது விழுந்து பிறாண்டியது போல், கிறங்கிக் கிடந்த தன் உணர்வை உலுப்பி, விழித்தெழுந்தார்.

தான் ஈர மணலில், முகம் புதைய விழுந்து கிடப்பதை ராசப்பா உணர்ந்தார். நெற்றிப் புருவம் விண்டு விண்டு வலித்துக் கொண்டிருந்த போது, நெற்றிப் புருவத்தில் மண்ணுடன் ஒட்டிய இரத்தம், வலப் பக்க இமையிலிருந்து விழுவதற்குத் தயாராகத் தொங்கிக் கொண்டிருந்ததை, தன் வலப் பக்க விழிக்குள் கண்டார். புலர்ந்து கொண்டிருக்கும் காலை வேளையில் இமை முடிகளில் தொங்கிய இரத்தத் துளி கன்னத்தில் விழுந்த போது, தன்னைச் சூழ, பொல்லு தடிகளுடன், பலர் நிற்பதைக் கண்டார்.

கம்பிக் கதவில் சிலுவைக் குறி பொறித்த அந்தச் சுடலையின் முகப்புவாசலில் நீல நிற பொலிஸ் வாகனமும், வெள்ளை நிற நீள அங்கி அணிந்த பாதிரியாரின் வெள்ளை நிற வேனும், கூட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்கியபடி வந்து நின்ற போது, தன் நாசியைக் கூர்மையாக்கி, எரிந்த பெற்றோல் மணத்தையும், டீசல் மணத்தையும் நுகர்ந்து மீண்டும் கிறங்கிப் போக முற்பட்டார் ராசப்பா.

''இது வெள்ளக்காரன் காலத்துச் சுடல. இண்டைக்கு நகரத்துக்கு நடுவில வந்திற்று எண்டதுக்காக வேற இடத்துக்கு மாத்தேலாது. இது நகர சபைக்காரண்ட சதி. ஏற்கனவே குப்பை கொட்டுறதும் அறுத்த கோழிக் கழிவப் போடுறதும் நகர சபைக்குள்ள அவங்க அதிகமா இருக்கிற துணிச்சல்லதான். புனிதருக்கு ஒப்புக் கொடுக்கப் பட்ட உடம்ப எரிச்சு மதத்த கேவலப்படுத்தினவங்கள சும்மா விடக் கூடாது பாதர்.''

சுடலையின் பகைப் புலத்தை, பாதருக்கும், உடல் தடித்த, கழுத்துக் கட்டையான இன்ஸ்பெக்டருக்கும், அந்த நடுத்தர வயது மனிதர் அழுத்தமாகச் சொல்லிக் கொண்டிருந்த போது, தடித்த இன்ஸ்பெக்டரின் உடல் தகனத்துக்கு வந்தால், நீண்ட நேரம் பிண வாடை நுகர முடியும் என ராசப்பா நினைத்தார்.

"ஐயா, இவர் எங்கட மதத்தச் சேர்ந்தவர் இல்ல. இவர் தாடியும் வைச்சு, தலையில துண்டும் கட்டுறவர். இவற்ற பெயர் ராசிக்பரீட். சின்னப் பிள்ளையள். ராசப்பா ராசப்பா எண்டு கூப்பிட்டுக்கூப்பிட்டு அப்பிடியே பழகீற்றுது. இவர் மன்னார் பக்கம் எண்டும் கேள்வி. ரயில்வேயில வேலை செய்யேக்க அதிகாரியின்ட பெட்டைய விரும்பினதால அந்த ஆள் ஏதோ கோல்மால் பண்ணி வேலைய விட்டுத் தூக்கிப் போட்டான் எண்டு கேள்வி. ஆளுக்குக் கொஞ்சம் மெண்டல்தான். ஆனா இங்கிலிஸ். சிங்களம் ரெண்டுலயும் ஆள் விண்ணன்.''

கூட்டத்தில் இருந்த பிள்ளையார் கோயில் தலைவர், பிரச்சினையை வேறுபக்கம் திருப்பி விட முனைந்தபோது, எந்த விதக் குழப்பமும் இல்லாது, இரத்த வாடையும், பிண வாடையும் தரும் கிறக்கத்தில் உறைந்து போக விரும்பினார் ராசப்பா.

''பாதர், இந்தாள் கஞ்சா குடுத்தா என்ன வேலையும் செய்வான். இது நகர சபைக்காரங்களிட சதி. இதுல நிக்கிற டடா, ரயில்வேல போமனா இருந்தவர், இவர விசாரிச்சுப்பாருங்க.''

அந்த நடுத்தர மனிதர், வன்மத்துடன் மல்லுக்கு நின்ற போது, கூச்சலாலும், குழப்பத்தாலும், கிறங்கிப் போக முடியாது தவித்துக் கிடந்தார் ராசப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் நினைக்கிறன்... ஆயிரத்தி தொள்ளாயிரத்தி எண்பது, பங்குனிமாதக் கடும் பனிக் குளிர் காலத்தில் எங்கட ஸ்டேசனுக்க இவர் வருகை தந்தார். அன்றய தினம் 17 ம் திகதி திங்கட்கிழமை, காலை 7.22 மணிக்கு எமது வரவுப் பதிவேட்டில் R.R. ராஜேந்திரன் என ஒப்பமிட்டது என் நினைவில் இருக்கிறது. இவர் ஒரு கிருஸ்தவர், இவரது பெயர் ரொபேட் ராசைய்யா ராஜேந்திரன். இவற்ற அழகில மயங்கின, ரயில் பயணியான ஆங்கில தேசத்து அழகி, இவருக்கு போதைப் பழக்கத்தை உண்டு பண்ணியதாகக் கேள்விப்பட்டிருக்கிறன்.''

ராசப்பாவின் பூர்வீகத்தின் ஒரு பகுதியை சர்வதேச பரப்பிற்கு உயர்த்தி, துல்லியமான தரவுகளை, அடித்துச் சொல்வதன் ஊடாக, எந்த ஒரு பிரச்சினையையும் தீர்க்க முடியும் எனத் தனது முப்பது வருட போமன் வாழ்க்கையில் கண்ட அனுபவத்தின் அடிப்படையில், அவர் கூறிக் கொண்டிருந்த போது, எரிந்த பிணவாடையும், வடியும் இரத்த வாடையும், தந்த கிறக்கத்தில், தனது ஊர்ப் பெயர் பொறித்த பாடப் புத்தகத்தை மார்பில் அணைத்தபடியும், புதுப் புத்தகத்தின் வாசனையை நுகர்ந்தபடியும், அந்த கடற்கரை மணலில் சிறுவனாக ஓடிக் கொண்டிருந்தார் ராசப்பா...

நற்றிணை (இந்தியா) - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றக்கி

தன் காதுகள் ஓயாத இரைச்சலுடன், இடைவிடாது வலித்துக் கொண்டும் இருப்பதால், எதையும் சரியாக கிரகிக்க முடியாது போவதால் கவலையானாள். ஏதோ ஒரு மார்கழி மாத மழை இரைச்சலையோ, கோடை இடியையோ, அதிகாலை புள்ளினங்களின் சிலம்பலையோ, வாகன உறுமலையோ, கோர்ன் சத்தத்தையோ, கோவில் மணி ஓசையையோ, குழந்தையின் அழுகையையோ, சிரிப்பொலியையோ, ஒரு நாள் கேட்க முடியாது போய்விடும் என, மரக்கிளையின் அசைவுடன் அசைந்தபடி, மனம் நொந்து சொல்லிக் கொண்டாள். இருளில் தான் நிலையெடுத்திருக்கும் மரத்தின் கிளை பற்றி அவளுக்குத் திருப்தியான எண்ணம் எதுவும் எழவில்லை. இருளில் அடிமரத்தின் பட்டைகளை கைகளால் பற்றி அசைத்துணர்ந்து, மரம் வலிமையானது என அனுமானித்திருந்தாள். கிளையின் அதிகமான அசைவும், அதிகமாக வளையும் தன்மையும் அவளுக்கு வருத்தமளித்தது. கிளையின் அடிப்பகுதியை கால்களால் கவ்வி கிளைக் கெந்தின் பகுதிகளில் கைகளை அகல விரித்து, ஒரு மரப்பல்லியைப் போல் அவள் அந்தக் கிளையில் தொங்கிக் கொண்டிருந்தாள். அவளது பாரத்தை தாங்காது கிளை அதிகமாக கீழே கவிழ்ந்தது. மரத்தின் உச்சாணிக் கெந்தில் இருந்த போதும் கிளையின் அதிக வளைவால், தலை குப்புற கவிழ்ந்த நிலையில் அவளது பார்வைத் தூரம் அதிகமாக இல்லாது, மிகக் குறுகிய தூரமாக மட்டுப்படுவது அவளுக்கு தன் ஆற்றல் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியது. சாமத்தில் பெய்த மழையால் நனைந்து போயிருந்த மரக் கெந்தின் ஈரமும், இலைகளில் தேங்கிக் கிடந்த ஈரமும், அவள் உடைகளை நனைத்து உடலுடன் ஒட்டிப்போகச் செய்திருந்தது. மெல்லிய காற்றுக்கு உடல் வெடவெடப்பதையும், இலைகளில் இருந்து உதிரும் சிலுநீர் உடலை இன்னமும் குளிரில் உறைய வைப்பதையும் உணர்ந்தாள். தான் நிலை எடுத்திருந்த கிளையில் இருந்து வேறு கிளைக்கு தன் நிலையெடுப்பை மாற்ற அவள் விரும்பவில்லை. அது அவளை எதிரிகளிடம் காட்டிக் கொடுத்துவிடும் என்பதில் திடமாக இருந்தாள். அதிக பார்வைத் தூரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காணிக்க முடியாத காரணத்தினால், தன் செவிப்புலனை கூர்மையாக்கி தொலைவு நோக்கி ஏவி, காற்றில் மரங்களின் அசைவுகளின் இரைச்சலைத் தவிர்த்து, இயந்திரங்களின் உறுமல் ஓசையை பிரித்தறிய முனைந்து கொண்டிருந்தாள். நிலையெடுத்திருந்த மரத்தில் இருந்து ஒரு மைல் தொலைவிற்குள் பிரதான வீதி இருப்பதை உணர்வாள். ஆனால் எதுவித கோர்ன், உறுமல் ஒலியுமற்று வீதி அமைதியாக இருப்பதை ஊகித்தாள். தூரத்தில் மிக மெல்லிய நீண்ட ஓசையில் சேவல் ஒன்றின் கூவல் ஒலி கேட்டது. அவள் இந்த மரத்தில் நிலையெடுப்புச் செய்து சில மணி நேரம் ஆகி இருக்கும் எனக் கணிக்க முற்பட்டாள். திடீர் என்று அயலில் இருந்த மரங்களில் இருந்தும், அவள் நிலையெடுப்புச் செய்திருந்த மரத்தில் இருந்தும் நெருக்கமாக, மெதுவாக ஆரம்பித்துப் பின் உரத்து இடைவிடாது பறவைகளின் அதிகாலைச் சிலம்பல் ஒலி நாலாபுறமும் எழுந்தது. அவள் அந்த மரத்தில் நிலையெடுக்கும் போது சில பறவைகள் மரத்தில் இருந்து சடசடத்து வெளியேறிய போதும் அந்த மரத்திலும் பறவைகள் தங்கி இருப்பது அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. தன் நிலையெடுப்பின் சலனமின்மையின் நுட்பத்தை வியந்து கொண்டாள். அவள் தன் நிலையெடுப்பில் இருந்து பின்வாங்குவது என்று முடிவெடுத்த கணத்தில் அந்த கூர்மையான வாகன இரைச்சலைச் செவி மடுத்தாள். அவளது இயல்பான புலனாய்வுப் புத்தி விழித்துக் கொண்டது. வாகனத்தின் இரைச்சல், இஞ்சின் இயக்கத்தின் தன்மை என்பவற்றைப் பிரித்து வரும் வாகனங்களின் வகைகளைப் பிரித்தறிய முற்பட்டாள். வரும் வாகனங்கள் தம் இருப்பிடத்தை இன்னும் சில நிமிடங்களில் நெருங்கிவிடும் என்பதை ஊகித்தவளாக தன் நிலையெடுப்பில் இருந்து வேகமாக நழுவி பின்வாங்கினாள். தன் கால் விரல்களையும், கை விரல்களையும், ஒரு விலங்கின் கூரிய நகங்களாகப் பாவித்து, ஒரு மரப் பல்லியின் அங்க அசைவுடன் மரத்தில் இருந்து ஈரலிப்பான தரையில் இறங்கினாள். நிலம் அதிகம் சேறும் சகதியுமாக இருந்ததால், கால்களை அகலமாக இடம் வலம் மாறிவைத்து பக்கவாட்டில், அரைச் சுவருக்கு மேல் நெற் அடித்த விசேட கவனிப்பு முகாமின் நிர்வாக உத்தியோகத்தர் தூங்கிக் கொண்டிருந்த கட்டிடத்தை நெருங்கினாள்.

நிர்வாக உத்தியோகத்தர் தூங்கும் கட்டிலின் பக்கச் சுவரை நெருங்கிய அவள், அரைச் சுவருக்கு மேல் அடித்திருந்த நெற்றை இரைச்சல் எழ இடக்கையால் தட்டினாள். திடுக்கிட்டு விழித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர், தலைமாட்டில் கண்ணாடியை தடவி எடுத்து அணிந்து கொண்டு, கட்டிலில் எழுந்தமர்ந்து அதட்ட முற்படுவதை இருளுக்குப் பழக்கப்பட்ட கண்களுக்குள் கண்டாள்.

''இரண்டு வாகனம் முகாம் நோக்கி வருது. ஒன்டு பிக்கப். மற்றது எல்ப். லோட்டோட வருது.''

அதட்டலுக்கான முனைப்புத் தகர்ந்து போனதால் அவர் தன் இடுப்பில் சாரத்தை அவசர அவசரமாகக் கட்டிக் கொண்டு எழுவதைக் கண்டாள். வாகனம் வரும் ஒழுங்கையை கவனித்தபடி சற்றுக் குனிந்து இடப்பக்கமாக கால்களை இடம் வலம் மாறி வைத்து கால்கள் சேற்றில் சறுக்கிவிடாமல் தன் அறையை நோக்கி நகர்ந்தாள். சேறும் சகதியும் குழியுமான அந்த ஒழுங்கையில் வாகன 'கெட்' லைட்டுகளின் ஒளிப் பொட்டுகள், உயர்ந்தும் பதிந்தும் இடம் வலமாக அசைந்தும் வருவதை அவள் நகர்ந்து கொண்டே கவனித்தாள். அவள் தன் அறையை நெருங்கிய போது நிர்வாக உத்தியோகத்தரின் அறையில் 'பல்ப்' எரிந்தது. அவளது அறையின் பின் சுவரில் எரியும் லைட்டின் வெளிச்சம் நெற்றின் சதுரம் சதுரமான நிழலுடன் விழுவதைக் கண்டாள். அவள் அவசர அவசரமாக ஈர உடுப்பை மாற்றிக் கொண்டு கட்டிலில் விழுந்த போது முகாம் கதவு திறக்கப்பட்டு வாகனங்கள் உள்ளே வந்து ஓய்வுக்கு வருவதையும் நிர்வாக உத்தியோகத்தர் வணக்கம் சொல்வதையும் வந்தவர்கள் பதில் வணக்கம் சொல்வதையும் தன் இரையும் காதுகளுக்குள் உள்வாங்க முனைந்தாள். அவர்களது உரையாடல்களைச் செவிமடுக்க முனைந்த போது, காதுக்குள் நெருப்புப் பத்துவது போன்ற தாங்க முடியாத கொதிப்பை உணர்ந்தாள். நெற்றிப் புருவத்தில் மிக மெல்லிய வலியாக ஆரம்பித்து தலை முழுவதும் பரவி தன் கால்கைகளை செயலிழக்க வைப்பதையும், தன்னை அரை மயக்க நிலைக்குக் கொண்டு போவதையும் உணர்ந்தாள். வயிறு குமட்டிக் கொண்டு சத்தி வரும் போல் இருந்த போது சட்டென்று எழுந்து தலைமாட்டில் இருந்த வெள்ளைப் பெயின்ற் அடித்த இரண்டடி உயரமான சிறிய மேசையின் இழுப்பறையை இழுத்து, அதற்குள் இருந்து வலி மாத்திரைகளை அவசர அவசரமாக வாய்க்குள் போட்டு, பிளாஸ்ரிக் போத்தலைத் திறந்து தண்ணியை தொண்டைக்குள் அண்ணாக்காக ஊற்றி விழுங்கினாள். மல்லாக்காய் கட்டிலில் விழுந்த போது, வெளிச் சூழலின் தெளிவற்ற உரையாடல்கள் முற்றாக உணர்விழக்காத அவளது நினைவுகளில் அலை மோதிக் கொண்டிருந்தன. மீண்டும் சுயநிலையை அடைய எத்தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணித்தியாலம் பிடிக்குமோ என்ற அவளின் மன உளைச்சலை, வலிமை மிக்க மாத்திரைகளின் வேகம் துண்டம் துண்டமாக ஆக்குவதை உணர்ந்தாள்.

எங்கோ தெளிவற்ற புகை மூட்டத்துடன், அவள் பள்ளித் தோழி பவானி இரட்டைப் பின்னலும் பூப்போட்ட வெள்ளைச் சட்டையுமாக சிரித்துக் கொண்டு வந்தாள். அவள் முகம் தெளிவாக வந்த போது பூவரச மரத்தின் பிரவுன் தண்டுகளும், பசிய இதய வடிவ இலைகளும், மஞ்சள் பூக்களும் பவானியின் பின்னணியில் அசைந்தாடின. காட்டு மரங்கள் நெருக்கமாகப் போட்டு, வருச்சை குறுக்காக வைத்து, காட்டுக் கொடிகளால் பிணைத்துக் கட்டிய வளவிற்குள் தந்தையுடன் மரவள்ளித் தடி வெட்டிச் சீவி நட்டுக் கொண்டிருக்கும் போதுதான், பள்ளித் தோழி பவானி கடப்பின் குறுக்குத் தடிகளுக்குள்ளால் புகுந்து வந்து, அவள் காதுக்குள் குசுகுசுத்தாள்.

''பள்ளிக்க இயக்கம் வீடியோப் படம் போடுதாம்!''

பவானி கடப்பின் குறுக்குத் தடிகளுக்குள்ளால் புகுந்து வெளியேறுவதைப் பார்த்துக் கொண்டே பின்னால் தானும் புகுந்து வெளியேறினாள்.

''எங்க?''

திரும்பிய போது, செம்பாட்டுப் புழுதி படிந்து படிந்து காவி ஏறிப் போன வேட்டியை மடித்துக்கட்டி, ஒரு கையில் கத்தியும், மறு கையில் மரவள்ளித் தடியுமாக, கறுத்து வரண்ட சேட்டுப் போடாத தேகத்துடன் அவள் தந்தை இவர்களை காட்டு மரங்களிலான வேலியைப் பின்புலமாகக் கொண்ட வளவுக்குள் இருந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''பள்ளிக்க.''

நடுவிலும் இரு கரைகளிலும் புல்திட்டு வரம்பு போல் நீண்டிருக்க, நடுவில் வாகனம் போய்ப் போய் பள்ளமும் திட்டியுமாக நீளும் செம்மண் புழுதிப் பாதையில் தன்னை விட்டு விட்டு ஓடும் பவானியை ஓடவிட்டுப் பார்த்திருந்த அவள் வேகமாக ஓடி அவள் முதுகைத்தட்டி பவானியைத் தாண்டி ஓடி பிரதான வீதியை நெருங்கும் வரை முன்னே மூச்சிரைப்புடன் ஓடிக் கொண்டே பின்னால் வரும் பவானியை திரும்பிப் பார்த்துப் பார்த்து ஓடினாள்.

பனையும் ஆலமரமும் பிணைந்து விழுதுகள் தொங்கிக் கொண்டிருந்த மரத்தின் கீழே, புகை பட்டுப்பட்டுக் கறுத்துப் போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடுகுமட்டை வேய்ந்த தேத்தண்ணிக் கடையும், சைக்கிள் கடையும் சேர்ந்தாற் போல் இருக்கும் கடைகளை நெருங்கிய போது, தார் வீதியில், பள்ளிப் பக்கமிருந்து, அவர்கள் வகுப்புக்கார குமரன், தமக்கையின் கூடை பூட்டிய லேடிஸ் சைக்கிள் சீற்றில் இடமும் வலமுமாக அரைத்து சைக்கிளை ஓட்டி வருவதைக் கண்டாள்.

''இண்டைக்கு எவ்வளவு கொச்சிக்காடா அரைச்சாய்...?''

பவானியின் நக்கலைப் பொருட்படுத்தாது, தன் முகத்தை சீரியஸாகப் பார்த்துக் கொண்டு அவன் சொல்லப் போவதைக் கவனித்தாள்.

''படம் போட லேட்டாகுமாம்டி. இன்டைக்கு கட்டுநாயக்கா அடிபாடு போடுரதாண்டி.''

குமரன் சைக்கிள் சீற்றில் கொச்சிக்காய் அரைத்துப் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு உற்சாகம் வடிந்து போனது. வீட்டுக்குப் போகும் எண்ணம் இல்லாததால், பாவானியை இழுத்துக் கொண்டு ரோட்டைக் குரஸ் பண்ணி தேக்கு மரத்துக்குக் கீழ் பனங்குற்றியால் அமைக்கப்பட்டிருந்த பஸ் தரிப்பிடத்தில் வந்தமர்ந்தாள்.

''பழைய விளையாட்டு விளையாடுவமாடி...?''

நீண்டு கொண்டிருந்த மௌனத்தை பவானிதான் கலைத்தாள்.

''ரைட்.''

அவள் கண்களை மூடிக் கொண்டு செவிப்புலனைத் தீட்டினாள். காற்றின் இரைச்சலை, மனிதக் குரல்களை, பறவைகளின் கீச்சிடல்களை, வாகன இயந்திரங்களின் இயக்கத்தின் ஓசையை, இரும்பு உரசுவதால் எழும் ஒலிகளை, மிருகங்களின் கத்தலை என அவள் தன் நினைவடுக்குகளில் ஒழுங்குபடுத்தத் தொடங்கினாள். பவானியின் மூச்சுக் காற்றைத் தவிர அப்பிரதேசம் அமைதியாக இருந்தது. தூரத்தே யாருடையதோ ஒரு பெண் குரல், யாரையோ அழைப்பது கேட்டது. அவளுக்கு அம்மாவின் நினைவு வந்தது. எதிரே இருந்த பூவரசு மரத்தில் இருந்து புணில் குருவியின் சலசலப்பு ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. சிறிது நேரம் வீதி சலனமற்று இருந்தது. இப்போது பள்ளிப் பக்கம் இருந்து ரெக்டர் ஒன்றின் அமத்திப்பிடித்த அக்சலேட்டரின் உறுமலுடன் கூடிய தட தடப்புச் சத்தத்தைக் கேட்டாள்.

''மணியத்தார்ர டூ போட்டி டிரக்டர்.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கரக்ட்.''

டிரக்டர் அவளைத் தாண்டிய போது டீசல் மணம் அவள் நாசியை தாக்கியது. தொடர்ந்து பெரிய சைக்கிள் ஒன்று ஒழுங்கையில் இருந்து மெயின் ரோட்டுக்கு மாறி பள்ளத்தில் விழுந்து கலகலத்துப் போவதை கேட்டாள்.

''பின் கெரியர் பூட்டின பெரிய சைக்கிள். ஆர் என்டு தெரியாது.''

''ஓகே.''

தூரத்தில் வரும் போதே இரும்பின் தடதடப்புச் சத்தம். இயந்திரத்தின் இயக்க ஓசையை கேட்க முடியாது தடுப்பதை உணர்ந்தாள். அவளைத் தாண்டிப் போகும் போது பற்றிய டீசல் புகை மணம் தாங்க முடியாது அவளுக்கு வயித்தைக் குமட்டியது.

''C.T.B ... தகர பஸ்.''

''கரக்ட்.''

கூடையின் தடதடப்புச் சத்தத்துடன் ஒரு சின்னச் சைக்கிள் அவளைத் தாண்டிப் போவதை ஊகித்தாள்.

''குமரன் திரும்ப லேடிஸ் பைக்கில பள்ளிக்க போறான்.''

''கரக்ட்.''

திரும்பவும் டயரின் வேகமான உராய்வு ஓசையுடனும், இயந்திரத்தின் அமத்தலான ஓசையுடனும், வாகனம் ஒன்று அவளைத் தாண்டி வேகமாகப் போவதை கிரகித்தாள்.

''இயக்கத்திட மிட்சுபிசி பஜிரோ.''

''கரக்ட்.''

''அடியே. பஜிரோ பள்ளிக்க போகுது, வாடி போவம்.''

அவள் கண் விழித்த போது, தூரத்தே வீதி இருள் படியத் தொடங்கி இருந்தது. பவானி பள்ளி நோக்கி ஓடத் தொடங்கி இருப்பதைக் கண்டாள். பவானியை முதுகுப் புறமாக துரத்தி ஓடி, நெருங்கி, அவளை முந்தி, பள்ளிக் கம்பிக் கதவைத் தாண்டி உள்ளே வந்தபோது, அவளுக்கு மூச்சிரைத்தது. பம்பர் அடித்து பாதி சிதைந்த அரங்கின் ஓரத்தில் திரை கட்டி, படம் போடுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயார் படுத்திக் கொண்டிருப்பதைக் கண்டாள். உடைந்த அரங்கிற்கு முன்னே குமரனும் பள்ளித் தோழிகளும் பையன்கள் சிலரும் அண்ணாச்சி மாரும் அக்காச்சிமாரும் அமர்ந்திருந்தார்கள். அவளும் அரங்கிற்கு முன்னே அமர்ந்த போது, மூச்சிரைப்புடன் வந்த பவானி அவளை இடித்துக் கொண்டு அமர்ந்த போது, அவள் தோள்பட்டை கடுக்குவதை உணர்ந்தாள்.

வோட்டப் பம்பில் செய்த ஜெனரேட்டர் சத்தம் பள்ளிக் கட்டடத்திற்கு பின்னே இருந்து வந்து கொண்டிருப்பதையும், மாலைப் பொழுது இருட்டிக் கொண்டு வருவதையும் கவனித்தாள். இரைச்சலும் கூ... என்ற சத்தமுமாகப் போராடிய பின் திரையில் படம் ஓடத் தொடங்கியதை பார்த்துக் கொண்டிருந்தாள். வேட்டோசைகளும், புகைமண்டலமும், கட்டளைகளும், அலறல் களுமாக படம் நீண்ட நேரம் ஓடிக் கொண்டிருந்த போது அவளுக்கு வீட்டு நினைவு வந்தது. அவள் எழுந்து போக முடியாதபடிக்கு துவக்குகளுடன் அக்காச்சிமாரும், அண்ணாச்சிமாரும் வளைத்து நிற்பதைக் கண்டாள்.

திடீர் என்று அண்ணாச்சிமாரும், அக்காச்சிமாரும் கோசமிட்டுக் கொண்டு அரங்கை நோக்கி நெருக்கி அடித்துக்கொண்டு முன்னேறி வருவதைக் கண்டாள். முன்னே இருந்தவர்களுடன் குமரனும் அரங்கில் ஏறுவதைக் கண்டாள். தாமும் முன்னே தள்ளப்படுவதை உணர்ந்தாள். பவானி தடுமாறி உயரமான அரங்கில் ஏறிக் கொண்டு தன் கையைப் பற்றி மேலே இழுத்தபோது அவளும் அரங்கில் ஏறினாள். தாங்கள் ஒழுங்காக நிறுத்தி வைக்கப்பட்டு பஸ் நோக்கி வழி நடத்தப்படுவதைக் கண்டாள். பஸ்சும், பஜீரோவும் வேகமெடுத்து பள்ளிக் கதவைத் தாண்டும் போதுதான் அருகே பவானி முன் சீற்றின் கம்பியைப் பிடித்தபடி பயத்துடன் வெளியே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். பஸ் அவள் ஒழுங்கையைத் தாண்டும் போது, ஒழுங்கை முற்றாக இருண்டு போய் அவளால் அடையாளம் காணமுடியாதிருந்தது. இருளில் அவளுடைய திறந்த தட்டிக் குடிலுக்குள் குப்பி விளக்கு எரிவது நினைவுகளில் படிய கவலையானாள். பஸ் நீண்ட நேரம் ஓடியதில் அலுப்பும் பயமும் வீட்டு நினைவும் கவ்வ தோழியின் தோளில் சாய்ந்து தூங்கிப் போனாள். ஆரோ தன்னை அதட்டி எழுப்புவதை உணர்ந்து கண் விழித்துப் பார்த்தாள்.

''பிள்ள, குளுச ஏதாச்சும் போட்டனியே ஆச்சி.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக் கவனித்தபடி பெரிய பிரேம் கண்ணாடி போட்ட, தலை பஞ்சாக நரைத்த நிர்வாக உத்தியோகத்தரின் முகத்தைக் கண்டாள்.

''ஓம்.''

வெளியே பகல் வெளிச்சம் கண்ணைக் கூசி, மீண்டும் அவளுக்கு தலைவலியை உண்டுபண்ணியது. தான் நீண்ட நேரம் நினைவிழந்திருப்பதை ஊகித்தாள். துப்பாக்கியுடன் நிற்கும் தலைவரின் முழு உயரப்படம் கொழுவிய பதிவான பயிற்சி முகாமில் இருக்கும் போதுதான், பவானி அவளைக் காட்டிக் கொடுத்தாள். இவள் நல்லா வாகனச் சத்தத்தை மதிப்பாள் என்ற பிறகுதான் அவளை அக்காச்சிமார் வாய்க்காலில் நீர் ஓடிக் கொண்டிருக்கும் இடத்துக்கு பக்கத்தில், அடர்ந்த காட்டுக்குள் இருந்த வேறு முகாமுக்கு மாற்றினார்கள். அங்குதான் அவளுக்கு விரல்களை நகங்களாக மாற்றி மரத்தில் ஏறப் பழக்கினார்கள். நரம்புகள் புடைக்க சரணவாயுவால் அவதிப்பட்டதும் பின் அது பழக்கமாகிப் போனதும் அவளுக்கு நினைவில் வந்தது. தனக்கு பயிற்சி முடிந்ததா அல்லது பயிற்சியா என ஊகிக்க முடியாத பல இரவுகள், அவள் ராணுவ முகாம்களுக்கு அருகில் இருந்த மரங்களில் மறைந்திருந்து 'றக்கி' எடுத்திருக்கின்றாள். அன்று இரவுச் சாப்பாட்டுக்குப்பின் தங்கள் பயிற்சி முகாம் பதட்டமாக இருப்பதை உணர்ந்தாள். அன்றிரவு வழமையான இடங்களை விட தூரமான இடம் ஒன்றிற்கு, அக்காச்சி ஒருவர் அவளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிப் போனார். ஒற்றையடிப் பாதையா அல்லது வயல் வெட்டையா என உணர முடியாத பாதையில் டப்பு டப்பு என்ற ஓசையுடன் பயணப்பட்ட CG 125 பைக் பனங்கூடலை வந்தடைந்த போது அவள் கையில் வோக்கியைக் குடுத்த அக்காச்சி சொன்னா...

''இங்க இருந்து எட்டு கிலோ மீற்றருக்கு அங்காலதான் ஆமி நிக்குது. உனக்கு முன்னால இரண்டு பொயின்ட் இருக்கு. உன்ன சும்மாதான் விடுரம். அலேட்டா இரு.''

அவள் அடர்ந்த பனங் கூடலுக்குள் அதிக உயரமான பனையொன்றை தெரிவு செய்து நிலையெடுப்புச் செய்தாள். நட்சத்திரங்களும் தானும் தனித்திருப்பதாக அவளுக்குப்பட்டது. காவோலைகளின் இரைச்சலும் அப்பு... அம்மா... பவானி... பள்ளி... தங்கை... வீடு... என்ற நினைவுகளுமாக அவள் நீண்ட நேரம் இருளில் விழித்திருந்தாள். திடீர் என்று தூரத்தே நில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்வுடன் பெரு வெடிப்போசை ஒன்றைக் கேட்டாள். எங்கோ சக்கை வாகனம் முழங்கி இருக்க வேண்டும் என்பதை அவள் ஊகித்தாள். சிறிது நேரம் பனையின் இரைச்சலைத் தவிர வேறு ஓசைகள் ஏதுமற்று அமைதியாக இருப்பதை கவனித்தாள். திரும்ப டப் டப் எனும் ஓசை தூரத்தே கேட்டது. சிறிது நேரத்தில் மெல்லிய கூவல் ஓசையையும் தொடர்ச்சியான டப் டப் என்ற ஓசைகளையும் ஒரே சமயத்தில் செவிமடுத்தாள். தூரத்து முகாமில் இருந்து செல் அடிக்கப்படுவதையும், இலக்கு எதுவென அவள் ஊகிக்க முற்பட்ட கணத்தில் அருகே பெரு வெடிப்போசையுடன் 'செல்' வீழ்ந்து வெடிப்பதையும், தொடர்ந்து பனங்கூடலில் செல் விழுந்து வெடிப்பதையும், பனைகள் முறிவதையும் சில இடங்களில் பனை பெரும் சுவாலையுடன் தீப்பிடித்து எரிவதையும் கண்டாள். அவள் வேகமாக தன் நிலையெடுப்பில் இருந்து பின் வாங்கத் தொடங்கினாள். பாதிப் பனைக்கும் கூடுதலாக இறங்கிக் கொண்டிருந்த கணத்தில், தான் காற்றழுத்தத்தில் தூக்கி வீசப்படுவதை உணர்ந்தாள். அவள் விழித்த போது பனியில் நனைந்த உடுப்பு ஈரமாக இருப்பதையும், ஒரு பக்கத் தோள்ப்பட்டை கடுமையாக வலிப்பதையும், ஒரு காதால் இரத்தம் வழிந்து கொண்டிருப்பதையும், காது நெருப்பால் சுட்டது போல் எரிவும் கொதிப்புமாக இருப்பதையும் உணர்ந்தாள். அவள் எழுந்து நின்ற போது அந்த ஒற்றையடிப் பாதை அதிகாலைப் புலர்வில் வெளிச்சமாகிக் கொண்டிருப்பதைக் கண்டாள். நடக்க முற்பட்ட போது தலை சுற்றத் தொடங்குவதை உணர்ந்தாள். வயித்தைக் குமட்டிக் கொண்டு வாந்தி எடுத்தாள். தொடர்ந்தும் ஒற்றையடிப் பாதையில் வாந்தி எடுத்தபடி முன்னேறிக் கொண்டிருந்தாள். தூரத்தே CG 125 மோட்டார் சைக்கிளின் சத்தத்தை, இரத்தம் வழிந்து கொதிக்கும் தன் காதுகள் இனம் கண்டு கொண்ட மகிழ்ச்சியில் மீண்டும் மயங்கி நிலத்தில் வீழ்ந்தாள்.

''நான் குருவிட்ட முறையா தியானம் படிச்சவன். நீங்க விலத்துங்க, நான் கவனிக்கிறன்.''

அந்தக் குரலைக் கேட்டதும் அவள் திடுக்குற்று விழித்தாள். எழுந்து கட்டிலில் அமர்ந்தாள். மழை மப்பாக இருந்த போதும் அறைக்குள் வரும் வெளிச்சத்தில் இருந்து நேரம் பகல் பொழுதைத் தாண்டி விட்டதை உணர்ந்தாள். நிர்வாக உத்தியோகத்தருக்கு முன்னே நெசனல் சேட்டும் வேட்டியுமாக தியானக்காரன் பல்லைக் காட்டி நின்றிருந்தான்.

''எனக்கு ஒருத்தரும் ஒண்டும் புடுங்க வேண்டாம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் எழுந்து தடுமாறி சாப்பாட்டுக் கோலை நோக்கி நடக்கத் தொடங்கிய போது பசி அகோரமாக மாறி இருப்பதை உணர்ந்தாள். அந்தப் பதிவான தகரக் கூரை அடித்த சாப்பாட்டுக் கோல் ஆள் நடமாட்டம் ஓய்ந்து வெறிச்சோடிப்போய்க் கிடந்தது. அவள் அந்த தியானக்காரனை வெறுத்தாள். அவள் இயக்கமற்றுக் கிடக்கும் போது, சாந்தப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு அவன் தன்னைத் தொடுவதை வெறுத்தாள். அந்தத் தொடுகை மிக மோசமான வக்கிரத்தனமானது என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அதனாலேயே நிர்வாக உத்தியோகத்தர் இல்லாத நேரங்களில் தன் அறையில் இருப்பதை தவிர்க்க விரும்பினாள். அவள் சாப்பாட்டு மேசையில் அமர்ந்து ஊத்தை படிந்து மங்கி வெளுத்துப்போன கூடையை திறந்து பார்த்தாள். அவளது சாப்பாடு சூடு ஆறிப் போய்க் கிடந்தது. ஆறிக் குளிர்ந்து போய்க் கிடந்த மதிய உணவை வேகமாக உண்ணத் தொடங்கினாள். சில தினங்களுக்கு முன், அவளை சட்டென்று கீழே விழுத்தி பின் நிமிர்த்தி பின் அவர் விரலை தன் முகத்துக்கு முன்னே ஆட்டி பரிசோதித்த முகாம் வைத்தியர் தனக்கு செவிப்பறை வெடித்திருப்பதால் விரைவிலேயே காது கேட்க முடியாமல் போய்விடும் எனக் கூறியதை நினைத்த போது, தொண்டையை அடைத்துக் கொண்ட சோறு புரையேறி சோற்றுப் பருக்கை அவள் நாசியில் ஏறி எரிவை ஏற்படுத்தியது. அடிக்கடி ஏற்படும் இந்த மயக்கம் தன்னை நிரந்தர நோயாளியாக்கிவிடுமோ என்ற பயமும், மற்றவர்களால் 'செவிப்புலனற்றவள்' என்று புறக்கணிக்கப்படுவோமோ என்ற மனவேதனையும், தன் எதிர்காலம் பற்றிய ஏக்கமும் கண்ணீரை வரவழைக்க, அவள் வேகமாக உண்டு வெளியே வந்தாள். நிர்வாக உத்தியோகத்தர் மங்கிப் போன பிரவுன் கலரில் சேட்டும் ஜீன்சும் போட்டு அவரது துணியாலான பயணப் பையுடன் வெளிக்கிட்டு தன்னைத் தேடி, இரவு பெய்த மழை நீர் செஞ்சகதியாக்கி இருந்த சேற்றைத் தாண்டி வருவதைக் கண்டாள்.

''பிள்ள, நான் ஊருக்குப் போட்டு வாறன். உங்கின மரத்தில் ஏறாம அறைக்கேயே கிடவண ஆச்சி.''

''ஓம்.''

அவர் மீன் ஒன்று துள்ளிப்பாயும் மஞ்சள் நிற விளம்பரம் ஒட்டிய குடி நீர்த்தாங்கிக்குப் பின்னே இருந்த, ஒரு பக்கச் சாய்வாக தகரக் கூரை அடித்து, அறுத்த சீமெந்து புளக் கல்லால் சுவர் கட்டிப் பூசாமல் கிடந்த களஞ்சியப் பகுதி நோக்கிப் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவர் திரும்பி வந்து தன் அறையை நோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதையும் தன் கண்ணாடியை சரி செய்து கொண்டு தலையை நிமிர்த்தி மரங்களில் தன்னை அவர் தேடுவதையும் வீதிக்கு வெளியே இருந்த மரத்தின் உச்சானிக் கெந்தில் ஒரு மரப் பல்லியைப் போல் ஒட்டிக் கொண்டு பார்த்திருந்தாள். அவர் வெளிக் கதவைத் திறந்து வெளியே வந்து மரங்களை அண்ணாந்து பார்த்தபடி நடந்து கால்கள் கல்லிலோ வேரிலோ இடறித் தடுமாறி பிரதான வீதி நோக்கிப் போவதை அவள் பார்த்திருந்தாள். அவர் திரும்பி வரும் வரை அல்லது தனக்கு வலிப்போ பசியோ வரும் வரை அந்த மரத்தில் நிலையெடுப்புச் செய்வதென அவள் முடிவெடுத்தாள்.

- புதிய தளம் (இலங்கை) - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சில் பால்

கூரிய பாற்பற்கள் நெருட, தடித்த உதடும், சுருள் முடியும் கொண்ட கறுத்த குழந்தை சௌசா, பச்சை தென்னை மட்டையில் இழைத்து, காய்ந்து வெளிறிப் போன பன்னாங்கில், திருகோணமலை கடற்கரையோரத்துக் கிராமத்தின் வேப்பமர நிழலில், தன் நெஞ்சால் உன்னி, ஓலைக் கூந்தலை வாய்க்குள் வைத்து சப்பியபடி, தன் கறுத்த சிறிய பிஞ்சுப் பாதத்தின் பெருவிரலை, பன்னாங்கில் உதைத்து எழும் ஓசையைக் கிரகித்தபடி கிடந்தான். ஓலைக் கூந்தலிலும், கைகளிலும், எச்சில் வழிந்து கிடக்க, மதிய மப்பு வெயிலின் வெக்கையில், கரிய நிறச் சுருள் முடிக் கற்றைகளின் இடைவெளிகளில் துளிர்த்துக் கிடந்த வியர்வையில், கடற்காற்றுப் பட்டு குளிர்விக்க, அடித் தொண்டையில் சத்தமெழுப்பிச் சிரித்துக் கிடந்தான், கறுத்த உடலில், வெண் மணல் பூத்துக் கிடந்த குழந்தை சௌசா. திடீரென்று நாயின் குரைப்பொலியில் திடுக்குற்று, ஓலைக் கூந்தலின் பிடியை விட்டுவிட்டு, நிமிர்ந்து முகத்தைச் சுளித்து அழ எத்தனித்தான். நீளப் பாட்டில் கிடுகு மட்டை இழைத்து, பக்கம் அடைக்கப்பட்டிருந்த குடிலின் தாழ்வாரத்தில் இருந்து, உடலின் மயிர்கள் உதிர்ந்து, விலா எலும்புகள் வெளித் தெரியும், ஒட்டிய உடல் கொண்ட நாய் ஒன்று, மணல் ஒழுங்கையைப் பார்த்துக் குரைப்பதை, தன் கறுத்த இமைகள் வெடவெடக்கப் பார்த்தான் சௌசா. வாளிக் கக்கூசில் இருந்து மலத்தைக் கொட்டுவதற்கு, சிகப்பும், மஞ்சளுமாக, நாயுண்ணிப் பற்றைகள் பூத்துக் கிடந்த மணல் ஒழுங்கையில், கார்த்திக் கிழவன் கடற்கரை நோக்கிப் போவதை, குடிலின் விளிம்பில் அவர் மறையும் வரை பார்த்திருந்தான் கறுத்த குழந்தை சௌசா. அழுவதற்கான எத்தனத்தை மறந்து, தன் கறுத்த பிஞ்சுக் கரங்களுக்குள், ஓலைக் கூந்தலை மடித்து இழுத்து, கறுத்துத் தடித்த, தன் மென்மையான உதடுகளுக்குள் செருகத் துடித்தான் குழந்தை சௌசா.

வேகமான நடையில், கால்களுக்கிடையில் சாரி பட படப்புச் சத்தத்தை ஏற்படுத்த, அதிர்ந்த நடையின் வேகத்தில், பன்னாங்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணல் சிதறி விழ, மூச்சிரைப்புடன் தன்னை நிழலுருவமொன்று நெருங்குவதை மணலில் கண்ட கறுத்த குழந்தை சௌசா, ஓலைக் கூந்தலை விட்டு விட்டு நிமிர்ந்தான். நோயுற்ற ஒடிசலான தேகமும், செம்பட்டை அடித்த பறட்டை நீள் முடியும், கந்தலான அள்ளிச் சுற்றிய சாரியும், இடுப்பில் குழந்தையுமாக, இருண்டு கிடக்கும் குடில் வாசலைப் பார்த்தபடி நிற்கும், உடல் வெளுறிப் போன ஊர்ப் பெண்ணை, சௌசா இளம் பச்சை தண்டுகள் கொண்ட நிழல் மரவள்ளி இலைப் பின்னணியில் கண்டான். இடுப்பில் இருந்த குழந்தையை, மணலில் இறக்கி விட்ட அந்த ஒடிசலான, வெம்பி வெளுறிப் போன நிறம் கொண்ட பெண், தன் கால் கைகளை அகலப் பரப்பி, குப்புற மணலில் மயங்கிப் போவதனை, சௌசா வெளுறல் நிறம் கொண்ட ஊர்க் குழந்தைக்குப் பின்னே கண்டான்.

தன் முன்னே இடுப்பால் அரக்கி வரும் ஊர்க் குழந்தையைப் பார்த்து கறுத்த குழந்தை சௌசா வெள்ளைச் சிரிப்புச் சிரித்தான். தன் முகத்தை நோக்கி வரும் கைகளைக் கண்டு, கறுத்த இமைகளால், தன் கண்களைக் கூசி மூடினான் சௌசா. முகத்தில் நகம் பட்டுக் காந்த, தடித்த மென்மையான கறுத்த பிஞ்சு உதடுகளைத் திறந்து, குரல் எடுத்துக் கத்தினான் குழந்தை சௌசா. இருண்ட வாசலுக்குள் இருந்து, தடித்த கறுத்த உருவமும், கரிய சுருள் முடியும், பெரிய சிவப்புப் பூவும், கத்தரி நாவற் பூவும் போட்ட, சீத்தைச் சட்டை அணிந்த கறுத்த தாய், செத்தைக் குடிலுக்குள் இருந்து, வெளியே வருவதைப் பார்த்தபடி, உரத்துக் கத்தினான் கறுத்த குழந்தை சௌசா. சௌசா அழுவதை நிறுத்தி விட்டு, தாயின் கறுத்துத் தடித்த கால்களுக்கிடையே குப்பறக் கிடக்கும், நோஞ்சான் நோயாளிப் பெண்ணையும், வத்தல் குழந்தையையும் மாறி மாறிப் பார்த்து, பன்னாங்கில் கால்களை உதைத்தான். கழுத்தில் வெள்ளி வளையம் போட்டிருந்த கறுத்த தாய், நோஞ்சான் பெண்ணின் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, இருண்ட குடிலின் வாசலுக்குள் மறையும் வரை பார்த்திருந்த சௌசா, ஓலைக் கூந்தலைத் தேடத் தொடங்கினான்.

''ம்... ம்...'' என்ற லயிப்பின் முனகலையும், பொச்சடிப்பு ஓசையையும், கறுத்த செவி மடல்களுக்குள் கிரகித்தபடி, குழந்தை சௌசா, பன்னாங்கில் இருந்து, ஓலைக் கூந்தலை பிய்த்துவிட எத்தனித்தான். கறுத்த செவிகளில், வெள்ளி வளையம் அணிந்த தாய், பால் மணம் வீசும் வாயுடன் நோஞ்சான் குழந்தையை திரும்பக் கொண்டு வந்து, பன்னாங்கில் இருத்தி, சௌசாவின் கண் முழி பிதுங்க, கறுத்த கன்னத்தை, தன் உரம் ஏறிய கறுத்த கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்களால் அழுத்திப் பின் சிரித்து, குடிலுக்குள் இருள் மறைவானாள். ஈரமாகவும் தாய்ப் பால் வாசனையுடனும் இருந்த நோஞ்சான் குழந்தையைக் கண்ட சௌசா, குரல் எடுத்துக் கத்தினான். திடுக்கிட்டு எழுந்த நோஞ்சான் பெண், தன் வத்தல் குழந்தையை இடுப்பில் தூக்கி வைத்து, மணல் ஒழுங்கையில் கால் புதைய, இடறி இடறிப் போவதை, சௌசா அழுது சுளித்த முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். திரும்பவும் வந்த அந்தக் கறுத்த தாய், கறுத்த குழந்தை சௌசாவை தூக்கிக் குடிலுக்குள் போனாள். குடில் மங்கலான வெளிச்சமாய் இருக்க தாய்ப்பாலின் வாசனையுடன், கறுத்த தாயின் உடம்புச் சூட்டின் கதகதப்பில், கறுத்த குழந்தை சௌசா ''ம்... ம்...ம்ம்'' என்ற பொச்சடிப்புடன் அரைத் தூக்கக் கிறக்கத்தில் கிடந்தான்.

***

''வெள்ளக்காரன் போயிற்றான், கூட்டி வந்த கருங்காலிக் கொட்டானுகள்ற தொல்ல தாங்க ஏலாமக் கிடக்கு.''

பலாவும், கமுகும், அடவியாய் வளர்ந்த தன் தோப்புக்குள், இடுப்பில் வெள்ளை வேட்டியும், தோளில் துண்டுமாய், சரிந்து தொங்கிக் கொண்டிருக்கும் தொந்தியின் மீது, ஒரு கையை வைத்துக் கொண்டு இடுப்புக்குக் கீழே தொங்க விட்ட மறு கையின் விரல்களைச் சுண்டிக் கொண்டும், இறுக்கிக் கட்டிய குடுமி அசையாது இருக்க, வற்றிய உடலும், ஒட்டிய வயிறுமாக, கூனுண்டு நின்றிருந்த வேலையாளுக்கு எதிரே நின்று கதைத்துக் கொண்டிருந்தார், வெம்புச் செட்டி.

'நேற்று உப்பளத்துக்குப் போன யாவாரிமாற்ற, இரட்டைக் கரத்தையை மறித்துக் கொள்ளை அடிச்சிருக்காங்கள் இந்தக் கருங்காலிக் கொட்டானுகள்.''

செட்டியின் தலையோ, குடுமியோ, ஆடாவிட்டாலும், குரல் அதிகாரத்தின் தொனியில் அதிர்ந்து, தோப்பு முழுவதும் எதிரொலித்தது.

''ஐயா, அவங்களுக்கும் வயிறுண்ணு ஒண்ணு இருக்குதில்ல. வேல வெட்டி ஏதாச்சும் குடுத்தா பிளச்சுக் கொள்வாங்கயில்ல.''

அந்த வேலையாள் இன்னும் கூனுண்டு நின்றான்.

''விட்டா நீ நிலமும் குடுத்து அவங்களுக்கு பொம்பிளையும் குடுத்து பாயும் விரிச்சு விடச் சொல்வாய் போலக் கிடக்கு. ஓ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் வெள்ளகாரனோட வந்த தோட்டக்காட்டான் தானே. உனக்கும் கருங்காலிக் கொட்டானுகள்ள கொஞ்சம் பாசம் இருக்கத்தான் செய்யும்.''

தன் கால்களால், தன் உடலை நகர்த்த முடியாத தன் பாட்டனையும் வளர்ப்பு நாயையும் 'பிரவுனி' என வெள்ளைக்காரன், செல்லமாக அழைத்ததாக, முகம் மலர்ந்து பெருமைப்பட்டுக் கொள்ளும் வெம்புச் செட்டி, பிரயாசைப்பட்டு தன் உடலை நகர்த்திப் போனான்.

***

''இண்டைக்கு எங்கட வீட்ட முட்டே பொறியல், கரேட் சம்பேல், உங்கட வீட்டே?''

குடிலுக்கு வெளியே வேப்ப மரத்துக்கும் தென்னம் பிள்ளைக்கும் இடையேயான வெளியில் ஆங்கில டியூசனுக்கு வரும் ஊர்ப் பிள்ளைகளுடன் உரையாடும் தாயின் குரலைக் கேட்டபடி, கறுத்த சௌசாச் சிறுவன், முன்னே போகும், கறுத்த, நெடிய உருவம் கொண்ட தந்தையின் லெதர் பை ஒன்றை சுமக்க முடியாது, மணல் ஒழுங்கையிலும், தன் தோளிலுமாக இழுத்து வந்தான். சௌசாவையும், தந்தையையும் முள்முருக்கு மர இடைவெளிகளில் மணல் ஒழுங்கையில் கண்ட தடித்த உதடும், கறுத்த தடிமனான உடல்வாகும் கொண்ட தாய், சதுரப் பலகைப் பெட்டியில் இருந்து எழுந்து ஓடி வந்தாள்.

கடப்பிலேயே வழி மறித்த தாய், கறுத்த தந்தையின் கழுத்தை, தன் தடித்த கறுத்த கரங்களால், வளைத்து இழுத்து, அணைத்து முத்தமிட்டாள். தன் தடித்த தந்தையின் கறுத்த தோள்களுக்குப் பின்னே நின்று, டியூசன் படிக்க வந்த ஊர்ச்சிறுவர்கள், வெட்கப்பட்டு சிரித்து ''கூ'' என்று இரைந்து பன்னாங்கில் இருந்து நாலாபுறமும் சிதறி வெளியேறுவதை கறுத்த சிறுவன் சௌசா வெட்கப்பட்டு பார்த்து நின்றான். தந்தை கொழும்பிலிருந்து, ஊருக்குள் வரும் போது ஊர்க்காரர்களுக்கும், தனக்கும் புதிய விடயம் அறிமுகமாவதை சௌசாச் சிறுவன் அறிவான். லெதர் பேக், டெனிஸ் பந்து, பெட்மிட்டன், தடித்த கிளாஸ் போத்தல், கவிழ்த்து வைக்கப்பட்ட காத்தடிக்கும் மண்ணெண்ணை அடுப்பு என்று ஏதாவது ஊருக்குள் உலாவுவதை சௌசா கவனித்திருக்கின்றான். சில நாட்களுக்கு முன் சௌசாவின் தந்தையும், நண்பர்களும் மம்மலான மாலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதொன்றில் ஊமைப்படம் போட்டதை சௌசாச் சிறுவன் நினைவு கூர்ந்தான். ஜெனரேற்றரின் இரைச்சலும், மண்ணெண்ணை நெடியுமாக சிறுவர்களும், பெரியவர்களும், கடற்கரை மணலில் அமர்ந்து, கிடுகுத் தட்டி கட்டி, வெள்ளை வேட்டியில் திரை கட்டி, சாளிச்சப்ளின் படம் பார்த்ததையும், சிறுவர்கள் கால்களை டாப்பி... டாப்பி... சாளிச்சப்ளின் போல் நடித்ததும், சௌசாச் சிறுவனின் கண்களுக்குள் நிழலுருவம் பெற்றது.

''வாடியில மீன் பட்டிருக்குமில்லையா?''

ரூபா நோட்டும், பையும், தாயின் குரலும் சௌசாச் சிறுவனை சுய நினைவிற்கு கொண்டு வந்தன. தலையில் பனை ஓலைத் தொப்பி அணிந்து, கரைவலை பொத்துபவர்களும், கோளா மீனும், வாடியும், அலையடிக்கும் கடற்கரையும், சிப்பியும், முருகைக் கற்களும் பரவிக் கிடக்கும் வெண்மணல் பரப்பும், நினைவில் இடர, சௌசாச் சிறுவன் சிகப்பும், மஞ்சள் நிறமும், கலந்த பூக்கள் கொண்ட நாயுண்ணிப் பற்றைகள் பரவிக் கிடந்த, மணல் ஒழுங்கைத் தடத்தில், கடற்கரை நோக்கி ஓடினான்.

கறுத்தப் பாதங்கள் கொண்ட, சௌசாச் சிறுவன் கடற்கரையை நெருங்கிய போது, தரையிலிருந்து கடற்கரை நோக்கி வளைந்து, நிமிர்ந்த தென்னை மரத்தின் கீழ், அந்த நோஞ்சான் நோயாளிப் பெண்ணின் பையனை, இரண்டு ஊர்ச் சிறுவர்கள் மணலில் குப்புற அமத்தி, மூர்க்கமாய்த் தாக்கிக் கொண்டிருந்ததைக் கண்டான். மணலும் வியர்வைப் பிசு பிசுப்புமான, ஒரு சிறுவனை இழுத்து விடுவிக்க, மற்றச் சிறுவன் தன்னைக் கண்டு, அரண்டு ஓடுவதை, கறுத்த அகன்ற நெஞ்சு கொண்ட சௌசாச் சிறுவன் கண்டான். அரண்டு ஓடிய சிறுவர்கள், தோணி தாண்டி ஓடிப் பின் நின்று, அடி வயிற்றால் எக்கிக் கூவினார்கள்.

''போங்கடா... எச்சில் பால் நாய்களா!''

நோஞ்சான் பெண்ணின் பையன், முருகைக் கற்களைப் பொறுக்கி, அந்தச் சிறுவர்கள் மீது விட்டெறிவதையும், சில முருகைக் கற்கள் தோணியில் பட்டுத் தெறித்து, மணலிலும், கடல் அலைகளிற்குள்ளும் விழுவதையும் சௌசாச் சிறுவன் கண்டான். ஆத்திரத்துடன் திரும்பிய நோஞ்சான் பெண்ணின் பையன், தன்னைத் தாக்க மூர்க்கமாக வருவதை கறுத்த திண்மையான உடல்வாகு கொண்ட சௌசாச் சிறுவன் கண்டான். பிடரி அடிபட மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த போது, முகத்தில் முருகைக்கல் உரசி முகம் காந்துவதையும், தன் மீது விழுந்து புரண்ட அவன் எழுந்து, மணல் ஒழுங்கையில் ஓடுவதையும், கறுத்த உடலில், வெண் மணல், பூத்துக் கிடந்த சௌசாச் சிறுவன், விழுந்த நிலையிலேயே பார்த்துக் கொண்டிருந்தான்.

***

''சா... காப்பிலிச்சியள் மாதிரி வேலை செய்யிரதுக்கு பொம்பிளையள் கிடைக்கோனும். ஏக்கர் கணக்கில் கொச்சிக்காய் ஆயிரதெண்டாலும் சரி, வெங்காயம் புடுங்கிறதெண்டாலும் சரி, அசுப்பில்லாம வேலைய முடிச்சுப் போடுவாளவ. நம்மடயதுகள் வெறும் சாவாழையள்.''

வெத்திலை குதம்பிய வாயால். உதடு கோணும் திசைக்கு ஏற்ப சொற்களைக் குதறிக் குதறிச் சொன்னான் சேனைக்காரன்.

''ஓமண்ண, நல்லா நிண்டு பிடிப்பாளவ எண்டு கேள்விப் பட்டிருக்கன்.''

'வோட்டப் பம்' திருத்துவதில் மும்முரமாக இருந்த 'மெக்கானிக்', நக்கலாகச் சொன்ன போது, அதைக் கவனியாது, வெத்திலைச் சாறு ஊறும் பக்கத்துக்கு உதட்டைச் சுழித்து, சொற்களைக் குதறினான் சேனைக்காரன்.

''கச்சான் மட்டும் புடுங்க விட்டிரக் கூடாது. ஆடு மாடு குல சப்பிர மாதிரி கொத்துக் கணக்கில தோலோட சப்பிட்டுப் போட்டுப் போயிருவாளவ.''

''அதுதானண்ண. அவளவயிட அவ்வளவு பெரிசு.''

'வோட்டப் பம்' மெக்கானிக் குனிந்து வேலை செய்த படி சொன்னான். வாய்க்குள் இருந்த வெத்திலைச் சாறு வெளியேறி விடாதபடி கவனமாக இருந்த சேனைக்காரன், அவன் பேச்சின் போக்கை விளங்கி, திடுக்கிட்டுச் சிரித்தான்.

''சேட்ட விட்டா கமக் கட்டுக்க வைச்சு நசிச்சுப் போடுவாளவ தம்பி.''

வாய் குதம்பி, எச்சில் வழிய, கடவாயை கோணலாக்கித் துடைத்துக் கொண்டான் சேனைக்காரன்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைப் பொழுது மயங்கி, இருள் கவியத் தொடங்கிய போது, அந்த கிளாஸ் பெக்டரி அகதி முகாமின், மூலையில் குவிந்து கிடந்த குப்பைகளை பற்றவைத்துவிட்டு, இரைச்சலும் ஆரவாரமுமான உரையாடல்களையும், வாக்குவாதங்களையும், செவிமடுத்தபடி, எரியும் குப்பையின் செம்மஞ்சள் ஒளி சுவரில் பிரதிபலிப்பதை கவனித்தபடி, தன் அறை நோக்கி வந்தார் கறுத்த உடலும், அகன்ற தோள்களும் கொண்ட சௌசா. களஞ்சியங்களின் கையிருப்பு, நாளைய உணவுக்கான பொருட்களின் இருப்பென, அவரது சிந்தனை ஓட தன் கதிரையில் அமர்ந்தார் சௌசா. எரியும் குப்பையின் ஒளி, சுவர் மீதும், படங்கள் மீதும், இடம் மாறி அசைவதைக் கவனித்த படி, மேசை இழுப்பறைக்குள் இருந்து, பதிவேடு ஒன்றை மேசையில் தூக்கிப்போட்டார் தடிமனான, கறுத்த, நீண்ட கைகள் கொண்ட சௌசா. இரும்புக் கதவைத் திறந்து கொண்டு, இருவர் ஆயுதங் களுடன் வருவதை, முன் ஜன்னல் நிலைக்குத்து கம்பிகளுக்கும், வெள்ளைப் பெயின்ற் அடித்த கதவுகளுக்கும் இடையேயான வெளியில் கண்டார் சௌசா. ஆயுதங்களுடன் உட்பிரவேசிக்கக் கூடாது என்ற பலகை அர்த்தமற்று வெளிக் கதவில் அசைவதாக சௌசாவுக்குப் பட்டது. எதுவித அனுமதியும் கோராது, அவர்கள் அறைப் படியில், செருப்புக் காலும், ஜீன்சுக்கு வெளியே விட்ட தடித்த சேட்டும், தோளில் துப்பாக்கியுமாக, அவர் மேசை முன்னே வந்து நிற்பதை, கவனித்துக் கொண்டிருந்தார். சௌசா. எரியும் குப்பையின் ஒளி அவர்களின் பக்கவாட்டில் செஞ்சிகப்பாய் படிந்து கிடப்பதை, சலனமற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் கறுத்த முகம் கொண்ட சௌசா.

''அண்ணே, இன்னமும் இரண்டு மூடை மாவும் கிழங்கு மூடையும் பொறுப்பாளர் கேக்கச் சொன்னவர்.''

சற்று உடல் பருத்தவன், சுவரில் மாட்டியிருந்த படங்களில் பிராக்குப் பார்க்க, ஒல்லியாய் இருந்தவன், இரண்டு கைகளையும் மேசையில் ஊன்றி, எதிரே கிடந்த லெஜரை கவனித்தபடி நிற்பதை, தனது தடித்த, கறுத்த இமைகள் படபடக்கப் பார்த்துக் கொண்டிருந்தார் சௌசா.

''தம்பி, பொறுப்பாளருக்கு தெளிவாகச் சொல்லி இருக்கிறம். மேலதிகமாகத் தர ஏலாது. சனத்துக்குப் பகிரக் காணாது. கணக்குக் காட்டுவது கஷ்டம்.''

''அது பழைய பொறுப்பாளர். இப்ப புதுசா வந்திருக்கிற பொறுப்பாளர் கடுமையா இருக்கிறார்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னால இதுக்குமேல ஒண்டும் செய்ய ஏலாது.''

மேசையில் கிடந்த பதிவேட்டை, இழுப்பறைக்குள் போட்ட, தடித்த கறுத்த உதடு கொண்ட சௌசா, எரியும் குப்பையின் தணல் கங்குகளைப் பார்த்தபடி அறையை விட்டு வெளியேறினார். மோட்டார் சைக்கிளின் உறுமலும், கதவின் ஓசையும், அவர்கள் வெளியேறியதை சௌசாவுக்கு உணர்த்தியது.

அறைக்குத் திரும்ப வந்த சௌசா, உள் விளக்கை அணைத்துக் கதவைப் பூட்டி, அகதி முகாமை சுற்றிக் கொண்டு வந்த போது, எரிந்த குப்பைக்குள் இருந்த நத்தை ஓடு, ''டப்'' எனும் அடங்கிய ஒலியில் வெடித்து, தணல்களையும், சாம்பலையும் குப்பைக்கு வெளியே விசிறியது. வெளிக் கதவை சாத்திய சௌசா, வெளியில் இறங்கி நடக்கத் தொடங்கினார். வீதி இருள் மண்டிக் கிடந்தது. இருளுக்கு கண் பழக்கப்பட்ட போது, வீதி ஓரங்களிலும், நடுவிலும், கட்டாக் காலி மாடுகள் படுத்தும், நின்றும், அசை போட்டுக் கொண்டிருப்பதை சௌசா கண்டார். அவர் முச்சந்தியில், முக்கோண வடிவில் அமைக்கப்பட்ட, மைல் கல்லைத் தாண்டி, இறக்கமான அந்த வீதியில், நடக்கத் தொடங்கிய போது, எதிரே கண்கள் கூசும் வண்ணம் கெட்லைட்டை முகத்துக்கு அடித்து வந்தது ஒரு மோட்டார் சைக்கிள். தன்னை உரசி நிற்கும் மோட்டார் சைக்கிளின் பெற்றோல் நெடி அவர் நாசியைத் தாக்கியது. மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவன், மாலை முகாமுக்கு வந்தவன் என்பதை அவர் உணர்ந்து, பின்னால் இருந்தவனை, அவர் இனம் காண முற்பட்ட போது, மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவன், அவர் நெஞ்சில் கைவைத்துத் தள்ளினான்.

''இந்தக் காப்பிலிதான் அண்ணே.''

உறுதியான கறுத்த கால்கள் இடர, பின் வாங்கிய சௌசா, வீதியோரக் கம்பிக் கட்டையை பிடிக்க முயன்ற போது, பெருவிரலுக்கும் நகத்துக்கும் இடையில் கம்பி கிழித்து, பெருவிரல் காந்துவதை உணர்ந்தார். பின்னால் வந்த பொறுப்பாளர் தன்னை கூர்ந்து கவனிப்பதை, சௌசா இருளினூடு கவனித்தார். பொறுப்பாளரின் கண்ணுக்குள், தடித்த கறுத்த உருவமும், கரிய சுருள் முடியும், பெரிய சிவப்புப் பூவும், கத்தரி நாவற்பூவும் போட்ட, சீத்தைச் சட்டை அணிந்த, கறுத்தத் தாயின் நினைவு வருவதையும், தன் நினைவுக்குள், நோயுற்ற ஒடிசலான தேகமும், செம்பட்டை அடித்த பறட்டை நீள் முடியும், கந்தலான அள்ளிச் சுற்றிய சாரியுமாக, அந்தத் தாயும் சலனமற்று வருவதை அவர் உணர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எடுடா பைக்க.''

''அண்ணே, இவனுகளுக்கு கொழுப்புக் கூட.''

''எடுடா பைக்க.''

இருளுக்குள் அந்த அதட்டல், கடூரமாய் ஒலிப்பதை சௌசா உணர்ந்தார். பொறுப்பாளரின் சீற்றம் புரியாத அவன், பைக்க உதைத்து ஸ்ராட் செய்வதையும், தன் முகத்தை இயலாமையுடன் நோக்குவதையும் சௌசா கண்டார்.

''போங்கடா எச்சில் பால் நாய்களா...''

யாரோ இயலாமையுடன் பின்னால் அலறுவது போல், கறுத்த சௌசா உணர்ந்தார்.

மறுகா - (இலங்கை) - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ப்பப் பாதை

முதுகுப் பகுதிக்குள் மணல் திட்டியாக அண்டுவதால், தன் தலை கீழே சாய்வாக, சமநிலையற்றுக் கிடப்பதை உணர்ந்தான். நித்திரைக் குழப்பத்திற்கான காரணத்தை ஊகிக்க முனைந்தான். முகம் முழுவதும் அனல் பரவிக் கிடப்பதற்கும், கண்கள் எரிவுடன் சோர்வாகக் கிடப்பதற்கும், அரை குறைத் தூக்கம்தான் காரணமாக இருக்க வேண்டும் என நினைத்தான். தான் மரமுந்திரிகை மர நிழலில் கிடக்கின்ற போதும், பகல் வெயில் மதியத்தை நெருங்கி விட்டிருந்தபடியால், இந்த இடம் முழுவதும், அலை அலையாய் அனல் புழுக்கம் பரவி இருப்பதும், தன் நித்திரையற்ற தவிப்புக்குக் காரணமாக இருக்கக் கூடும் என நினைத்தான். மரமுந்திரிகை இலைகளுக்கிடையில் விழுந்த சூரிய வெளிச்சம், தன் உடல் மீதும், மணலிலும், சருகுகள் மீதும், வட்டப் புள்ளிகளாக வெளிச்சம் பாய்ச்சி, வெளி உடலையும், மணலையும், சருகுகளையும் வெப்பமாக்கி, தன் உள் உறுப்புக்களையும் உஷ்ணமாக்குவதாய் உணர்ந்தான். அருகில் புதருக்குள் சரசரப்பதைக் கேட்டான். எழுந்திருக்கவோ, அல்லது நகரவோ விருப்பமற்றுக் கிடந்தான். ஏதோ ஒரு கட்டுக் கடங்காத விடுதலை உணர்வுக்காகவோ, அல்லது எல்லையற்ற சுய இன்பத்திற்காகவோ ஏங்குபவன் போல் காத்துக்கிடந்தான். அடிவயிறு திருகலாக முறுக்கி, கடுமையாக வலித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான். திட்டமிட்டு அடைய முடியாத, தன்னியல்பான விடுதலை உணர்வுக்கான கால நேரத்தை அவாவிக் காத்துக் கிடந்தான். கடற்கரை ஆலமரத்தின் கீழ், அசதியும் வலியுமாகக் கிடந்த போது, பாம்பின் சீறல் சத்தத்தை கேட்டதையும், பாம்பின் விசம் தனக்கு மருந்தாக மாறி தன்னை குணப்படுத்தலாம் என்ற நினைவுடன் கிடந்ததையும், நினைவு கூர்ந்தான். சரசரப்புச் சத்தத்தை பயத்துடன் பொருட்படுத்தாது கிடக்க முனைந்தான். தன்னிச்சையற்று, தன் தலையை, மணலில் ஒளிப் பொட்டாய்க் கிடந்த வெய்யில் வெளிச்சத்தை நோக்கி நகர்த்தினான். கண்கள் கூசின. வெளிச்சத்தை ஊடறுத்துப் பார்க்க முனைந்தான். இலையொன்றின் விளிம்போரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய வெளிச்சம், நீல ஒளிர்வுடன் மரம் முழுவதும் வியாபித்ததைக் கண்டான். தன் தலையை மீண்டும் பழைய இடத்திற்கு மணலில் அரைத்து இழுத்தான்.

காலம் தப்பிப் போன, செம்மஞ்சளும், மஞ்சளும் கலந்த சூம்பல் பழத்துடன் கூடிய பச்சை மரமுந்திரியம் பருப்பொன்று உச்சாணிக் கெந்தில், தனியாக ஆடிக் கொண்டிருந்தது. வெய்யில் படிவதும், நிழல் படிவதுமாக, அது ஆடிக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருந்தான். வெய்யிலையும், காற்றையும், முந்திரி மர இலைகளின் சாற்றையும், அகோரப் பசியுடன் உறிஞ்சத் தொடங்கிய முந்திரியம் பருப்பு, வீங்கத் தொடங்குவதைக் கண்டான். அதன் பச்சை நிறம் மங்கி, கூசும் சிவப்பு நிறமாக மாறி, ஒரு கிடாய் ஆட்டின் விதை அளவுக்கு வீங்கி, வெடித்துச் சிதறுவதைக் கண்டான். இரத்தம் கலந்த தசைத் துணுக்குகள் மரப்பட்டையிலும், இலைகளிலும், காய்ந்த சருகுகளிலும், பற்றைகளிலும், வடிந்து, காய்ந்து, கறுத்துப் போவதைக் கண்டான். அவன் தன் அடிவயிற்றில் கடுமையான வலியை உணர்ந்தான். உருண்டு திரண்ட இரத்தத் துணுக்கொன்று, தன் ஆண் குறியின் சலத் துவாரத்தில், எரிவும், கடுப்பும், நெருப்பால் சுடுவது போன்ற கூர் உணர்வுடனும், உருண்டு வெளியேறுவதை உணர்ந்தான். அது தந்த கட்டற்ற விடுதலை உணர்வின் லயிப்பில், கண் மூடிக் கிடந்தான். விழியோரம் வழிந்த கண்ணீர் காது மடலில் தேங்குவதை உணர்ந்தான். விழித்த போது, சூம்பல் முந்திரியம் பழமும், அதனுடன் இணைந்த பருப்பும், ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

ஒட்டி உலர்ந்து கறுத்துப் போன வயிறும், சுருண்டு மண் ஒட்டிய முதுகும், நீலமும் பச்சையும் கலந்த, சதுரம் சதுரமான, வெளிறிப் போன சாரமுமாக, எழுந்து நின்று தலைக் கிறுகிறுப்பில் தள்ளாடிப் பின் சமநிலைக்கு வந்தான். சாரத்தை அவிழ்த்து, பின் முன்னாக வலம் மாறி எடுத்துக் குனிந்து பார்த்தான். ஏற்கனவே காய்ந்த இரத்தப் பொட்டுக் கயருடன், புதிதாக ஈரமான இரத்தப் பொட்டு சாரத்தில் படிந்து, அதில் மணல் ஒட்டிக்கிடப்பதைக் கண்டான். மண் திட்டுக்களும், பச்சை முட்கள்ளிகளும், ஈச்சம் பற்றைகளும், பெரு விருட்சங்களும், கடும் வெய்யிலின் ஒளிப்பிரவாக செந்நிற இரத்தக் குழம்பில் அசைந்து, தன்னுடன் கூடவர, சுடு மணலில் கால் புதைத்து, சாரம் இடர உந்தி உந்தி பிரதான வீதி நோக்கிப் போனான். பிரதான வீதியை நெருங்கிய போது, வீதியில் பஸ் ஒன்று, புழுக்களைச் சுமந்து வேகமாக பறப்பதையும் கண்டான். சில சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுக்கள், நீலக் காற்சட்டையும், வெள்ளைச் சேட்டும், கழுத்தில் பச்சை டையும் அணிந்து, முதுகில் புத்தகப் பையும் சுமந்து, வியர்த்து விறுவிறுத்து, தன்னைத் தாண்டிப் போவதைப் பார்த்து நின்றான். மீண்டும் புழுக்களைச் சுமந்த கார் ஒன்று, எதிர்த்திசையில் தன்னை தாண்டிப் போய், முடக்கில் மறைகின்றவரை பார்த்து நின்றான். தார் வீதி வெறிச்சோடிக் கிடந்தது. தூரத்தே தார் வீதியின் பள்ளப் பகுதியில் கானல் நீர் தேங்கி தளம்பிக் கிடப்பதைக் கண்டான். திடுக்கிட்டு பஸ் கோல்ட்டை உற்றுப் பார்த்தான். இரண்டு சாரி கட்டிய புழுக்கள், தன்னைக் கூர்ந்து கவனிப்பதைக் கண்டான். தன் உடலை புழுக்கள் துளைத்துப் புகுந்து விடும் என்ற பயத்துடன், அவன் வீதியைத் தாண்டி பஸ் கோல்ட்டிற்கு எதிர்த்திசையில் நடந்தான்.

பாதிச் சாய்வில், தகரக் கூரை அடித்து, செங்கல்லால் கட்டப் பட்டு, ஒயில் அழுக்கும், கிரீஸ் அழுக்கும் படிந்து, கறுத்துக் கிடந்த கராச்சை நோக்கி உந்தி உந்தி நடந்து போனான். ஒயில் படிந்து கறுத்துப் போன ரீசேட்டும், ஜீன்சும் போட்ட, தலை முடி உதிர்ந்து, கண்மடல்கள் புடைத்து வீங்கிப் போன முதிர்ந்த மெக்கானிக் புழு, இரும்புக் கதிரையில் இருந்து, மதிய உணவுக்குப் பின், சிகரட் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''பத்தின ஒயில் வேணும்.''

மெக்கானிக் புழு, தன் வலது காலின் பெருவிரலுக்கும், மெட்டி விரலுக்கும் இடையில் ஒயில் சட்டியின் பிடியைப் பற்றி இழுத்து, இடது காலால் ஒயில் சட்டியை, தன்னை நோக்கி நகர்த்துவதைக் கண்டான். தன் உடலுக்குள் புழுக்கள் துளைத்து உட்புகுந்து விடக்கூடாது என்ற வெறியுடன், குனிந்த நிலையிலேயே, ஒயில் சட்டியில் இருந்து, தன் உடல், முகம், கை, கால் என ஒயிலைப் பூசத் தொடங்கினான். அடி வயிற்றில் மீண்டும் கடுப்பை உணர்ந்தான். கூனுண்ட நிலையில் இருந்து நிமிர முடியாது, அடி வயிறு கொழுவிக் கொண்டு, தாங்க முடியாத வலியை உண்டு பண்ணுவதை உணர்ந்தான். கூனுண்ட முதுகுடன், சாரத்தை அடி வயிற்றுடன் அணைத்துப் பிடித்துக் கொண்டு கராச்சில் இருந்து நகர்ந்து, தென்னைகள் நின்ற, தேனிப்புல் பூண்டுகள் படர்ந்து கிடந்த திடலைத் தாண்டி, பிரப்பம் பற்றைக்குள்ளால் நுழைந்து, காய்ந்த மஞ்சள் நெல், அடிக்கட்டை வைக்கோல் பரவிக்கிடந்த வயல் வெட்டையைக் கடந்து ஆற்றுக் கட்டை நோக்கி உந்தி உந்தி ஓடினான். கூடவே ஒளிப் பிரவாகத்தில் நகரும் இரத்தக் குழம்பில், தென்னை வட்டுக்களும், பிரப்பம் முள் பற்றைகளும், வயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டைகளும் தொடர்ந்து வர, ஆற்றுக்கட்டின் தில்லை மர நிழலை நோக்கி ஓடினான். தனக்கு முன்னே சூரியனின் வெளிர் வர்ண ஒளி மங்கி, செம்மை படர்வதைக் கண்டான். ஆற்றுக் கட்டின் தில்லை மர நிழலில் குப்பற விழுந்து, சில நிமிடங்கள் உணர்வற்றவன் போல் மூச்சிரைத்துக் கிடந்தான்.

ஏனோ சாம்பல் நிற தில்லை மரத்தின் அடியும், அதன் வெண்ணிறப் பொட்டுக்களும் பாம்பின் நினைவை அவனுக்கு கொண்டு வந்தது. ஒரு பெருத்த முதலை தன் உடலைச் சுமக்க முடியாது அசைந்து போவது போல், தில்லை மர வேருக்கும், தோணிக்கும் இடையில் நகர்ந்து, தன் கால்களை ஆற்றுக்குள் விட்டு இடுப்பு வரை நீருக்குள் அமிழ்த்தினான். அரைவாசி உடல் வெய்யிலின் வெக்கையிலும், பாதியுடல் நீரின் குளிர்ச்சியிலும் கிடக்க, தன் உடல் இரண்டு பாதியாகிப் போனது போல் உணர்ந்தான். அவன் நீருக்குள் நகர்ந்த போது, விலகிய ஆற்று வாழைகள், மீண்டும் அவன் இடுப்பு வரை மூடி, தன் உடலை இரு பாதியாக்கி விட்டதைப் போல் உணர்ந்தான். உடலில் வலியை மறக்க, ஆற்றின் குளிர்மையை உள் வாங்கிக் கொண்டும், தொம்பலின் அழுகல் மணத்தை நுகர்ந்தபடியும், அசைவற்று, தியான மௌனத்தில் திளைத்துக் கிடந்தான்.

புழுக்களை அக்கரைக்கு கொண்டு போகும் பாதை, அங்கு, தான் வந்த பின், தனது இரண்டாவது பயணத்திற்காக புழுக்களைச் சுமந்து, டப்... டப்... எனும் இயந்திர ஓசையுடன் நகர்வதைக் கேட்டான். இன்னும் கிட்டாத அந்த விடுதலைக்காகவோ அல்லது இன்பத்திற்காகவோ அவன் காத்துக் கிடந்தான். முதலில், அவன் குறியில் மீன் ஒன்றோ, அல்லது வேறு எதுவோ கவ்வுவது போன்று உணர்ந்தான். பின் தன் அடி வயிற்றில் கடுப்பும், எரிவும், மெல்லிய சூடுமாக, தன் குறியின் சலத் துவாரத்தின் ஊடாக, சிறு சிறு துணிக்கைகளாக, தொடர் இரத்தப் பெருக்கை உணர்ந்தான். சிவன் கோயிலின் கொக்கட்டி மரவேரில் வயிற்றை வைத்து, காற்பெருவிரலையும், நெற்றியையும் மணலில் குத்திக் கிடந்த போதும், குறியிலிருந்து கடுமையான இரத்தப் போக்கு ஏற்பட்டதையும், அங்கு மரணம் நிகழுமாயின், மோட்சம் கிட்டும் என நினைத்த போதும், அவ்வாறு எதுவும் நிகழ்ந்து விடவில்லையாதலால், இன்றும் அப்படி ஒன்றும் நிகழ்ந்து விடப்போவதில்லை என நினைத்தான். கடுமையான இரத்தப் பெருக்கால் உடல் உஷ்ணமாகி, நெருப்பாய்க் கொதிப்பதை உணர்ந்தான். தன் பாதி உடல் மீது தில்லை மரத்தின் பச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைகளுடன், அதன் சிவப்பு துளிர் இலைகளும் கொட்டி மூடுவதாக உணர்ந்தான். உடலை மூடிய பச்சை இலைகளும், துளிரும், உடல் வெப்பத்தில் காய்ந்து, சருகாகி, தீப்பிடித்துப் பற்றி, அதில் தன் உடல் எரிவது போல் உணர்ந்தான்.

பதிவான அஸ்பெஸ்டர்ஸ் சீட் கூரை கொண்ட, திருத்தத்துக்கு வந்த மின்சாரப் பொருட்கள் குவிந்து கிடக்கும் ஒடுக்கமான அந்த சிறிய கடைக்குள், தன்னைச் சூழ, இரவு பகல் என்றில்லாது, நாற்பது வோல்ட் மின்குமிழ் எரிந்து, கடையையும் சூடாக்கி, தன் உடலையும் சூடாக வைத்திருப்பதை நினைவு படுத்திப் பார்த்தான். பௌத் ஒட்டு வேலை தன் முகத்தைச் சுட்டு, இடையறாது தன் முகத்தை எரியப் பண்ணிக் கொண்டிருப்பதை நினைத்துப் பார்த்தான். நாற்பது வோல்ட் பல்ப், தன் நெற்றிக்கு நேரே எரிந்து கொண்டிருக்க, சீலிங் பேன் ஒன்றுக்கு, கொயில் சுற்றிக் கோண்டிருந்த பகல் பொழுதில்தான், அந்த வெள்ளை வேன் தன் கடைக்கு முன்னே வந்து நின்றதை ஞாபகப்படுத்திப் பார்த்தான்.

அவர்கள் தன்னைக் கைது செய்த போது, தான், 'பௌத்' ஒட்டு வேலைக்கு வாங்கி வைத்திருந்த, சுலபமாக வளையக் கூடிய ஈயக் கம்பியினால், தன் கைகளை பின்புறமாகக் கட்டி, தன் விதையை ஜீன்சுக்கு மேலால் முரட்டுத்தனமாக நசித்துப் பிடித்து, கடைக்கு வெளியே அவர்கள் இழுத்து வந்த போது, தான் கூனுண்ட நிலையில், பயிற்சியினால் நரம்புகள் முறுக்கிக் கிடந்த முரட்டுத்தனமான அவர்களது கைகளைப் பார்த்துக் கெஞ்சியது நினைவுக்கு வந்தது. ஜீப்பிற்குள் தூக்கிப் போட்ட அவர்கள், பூட்ஸ் காலால் தன் விதையில் ஓங்கி மிதித்த போது, தன் நினைவு தப்பிப் போனதை நினைத்துக் கொண்டான். அவர்களது முகங்களை தன் நினைவடுக்குகளில் தேடிப்பார்த்தான். தன் நினைவு அடுக்குகளில் நரம்புகள் புடைத்த முறுக்கேறிய கைகளும், முரட்டுத்தனமான பச்சை யூனிபோமும், தொப்பியும், பூட்ஸ் கால்களும் மட்டுமே அவன் நினைவுகளுக்குள் வந்தன.

தனக்கு நினைவு மீண்ட போது, பின்னால் கை கட்டப்பட்ட நிலையில், சுணைப் புற்கள் படர்ந்த மைதானமொன்றில் கிடப்பதாகவே நம்பினான். பகல் மங்கி, இருள் சேரும் வேளையில், பசிய சுணைப் புற்கள் படர்ந்த பள்ளத்தில் கிடக்கின்ற உணர்வில், யாராவது வந்து, தன் கைக் கட்டுக்களை அவிழ்த்து, அழைத்துப் போவார்கள் என நினைத்துக் கிடந்தது ஞாபகம் வந்தது. சற்றுத் தள்ளிப் புல் வளர்ந்த மணல் அணைக்கட்டில், சிலிப்பர் கட்டையும், தகரமும் கொண்டு, சதுரமாய்க் காப்பரண் இருப்பது, தான் முகாமுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கின்ற நினைவைத் தனக்குத் தந்ததை ஞாபகப் படுத்திக் கொண்டான். நிர்வாணமான தன் உடலில் பூச்சிகள் ஊர்வதாலும், புல்லின் சுணையாலும், பிரண்டு அவதிப்பட்ட நினைவுகள் வந்து போனது. சுணைப் புற்களில் நீண்ட பூக்களை ஊடறுத்துப் பார்த்த போது, மணல் அணைக்கட்டின் சாய்வில், விளிம்பு வைத்த சீமெந்துச் சதுரக் கட்டிற்குள், இரண்டு வாள்கள் குறுக்காக வைத்து, மேலே பறந்த கொடியில், மண்டை ஓட்டுச் சின்னம் பொறித்து, இன்ன படைப் பிரிவு என மாபிள் பதித்திருந்ததை, அவனால் ஞாபகப்படுத்த முடிந்தது. அன்றிரவு, அவர்கள் நாற்பது வோல்ட் பல்ப் எரியும் மங்கலானதும், கோரமான உராய்வு ஓசையுடன் இயங்கும், மின் விசிறி சுற்றிக் கொண்டிருந்த அறைக்குள் அழைத்துப் போன ஞாபகம் தூரமாய் வந்தது. தன்னால் அந்த மின்விசிறியை சில நிமிடங்களில் உராய்வு ஒசையற்று இயங்க வைக்கமுடியும் என நினைத்ததும் ஞாபகத்தில் வந்தது. நிர்வாணக் கூச்சம் மறந்து போன கணம் ஒன்றில், மின் விசிறியின் உராய்வில் கவனம் செலுத்திக் கிடந்த கணத்தில், அந்த அதிகாரி அவன் குறியை பற்றிப் பிடித்து இழுத்து, அமர்ந்திருந்த மேசையின் இழுப்பறைக்குள் குறியை வைத்து நெருக்கிப் பிடித்தான். தன் அலறல், மது போதையில் இருந்த அந்த அதிகாரியை பாதிக்க வில்லை என்பதை ஞாபகம் கொண்டான். காஸ் சிலிண்டர் செட் பண்ணி கொடுத்தது பற்றி அவர்கள் கேட்ட போது, தனக்கு பௌத் ஒட்டு வேலை மட்டும்தான் தெரியும் எனக் கூறிய போது, தன்னை அவர்கள் கடுமையாகத் தாக்கியதை நினைவு கொண்டான். நள்ளிரவுக்குப் பின், தன் உடல் முழுவதும் எரிவும், காய்ச்சலும், வலியும், அனல் கொதிப்புமாக கிடந்த போது, அந்த அறையில் இருந்து, நிர்வாணமாக இழுத்து வந்து, பழைய பள்ளமாகக் கிடந்த அணைக்குப் பக்கத்தில், சுணைப் புல்லில் போட்டதை நினைவு கொண்டான். குறி தடித்து வீங்கி, தன் உடலில் இல்லாதது போல், தொடையில் அண்டுப்பட அம்மணமாகக் கிடந்ததை நினைவு கூர்ந்தான். இரவு முழுவதும் கடும் குளிரில், உடல் வலியுடன் உடல் அனலாய் கொதிக்க கிடந்ததை நினைவு கூர்ந்தான்.

எப்போது உறங்கிப் போனான் என்ற நினைவை அடைய முன்பே, அவர்கள் பிடரி மயிர்க் கற்றையில் பிடித்து இழுத்து, தூக்கி நிறுத்தி, நகர்த்திப் போனார்கள். பொழுது மண் அணைக்கு மேல் கிளம்பிக் கொண்டிருந்தது. தகரத்தால் மூடி இருந்த மலக் குழிக்குள் தூக்கிப் போட்டு, தகரத்தை மூடிப் பொழுதை அவர்கள் இருட்டாக்கியதை நினைவு கூர்ந்தான். அது கைவிடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட மலக் குழியாக இருந்த போதும், காய்ந்து கருத்துப் போய்க் கிடந்தது. மலக்குழி தாங்க முடியாத வெக்கை மணமும் மூச்சுத் திணறலுமாகக் கிடந்தது. நிர்வாண உடல் முழுவதும், புழுக்களும், வண்டுகளும், ஊர்வதை உணர்ந்தான். குளுத்திப் பூச்சிகள் வேகமாக, உடல், காது மடல் என ஊர்ந்து மொய்த்தன.

பின் ஒரு நாள், அவர்கள் கிருஸ்ணமூர்த்தியை பிடித்து, இழுத்து வந்து, மலக் குழிக்குள் தள்ளினார்கள். கிருஸ்ணமூர்த்தியின் உதடுகள் வெடித்து இரத்தம் காய்ந்து போய்க் கிடந்ததும், ஒரு பக்க கண் வீங்கி, வெளிப்பேர்ந்து கிடந்ததும், அவன் நினைவுக்கு வந்தது. கிருஸ்ணமூர்த்தியின் அந்த அகோரமான தோற்றத்திலும், அவனை அடையாளம் கண்டு கொண்டதை நினைத்துப் பார்த்தான். அந்த நகரத்தில், தனக்கு இருந்த ஒரே எதிரிக் கடைக்காரன் கிருஸ்ணமூர்த்தி மட்டும்தான் என்பதை நினைவு கொண்டான். தன்னுடன் ஒப்பிடும் போது, கிருஸ்ணமூர்த்தி நுட்பமான திறமை கொண்ட வேலைக்காரன் இல்லை என நினைத்தான். தான் ரான்ஸ்போமர் தகடுகளை 'பௌத்' ஒட்டு ஒட்டும் போது, மறு புறத்திற்கு சூடு பரவாமல், மதி நுட்பமாக ஒட்டுவதையும், மறு புறத்தில் தன் புறங்கையை வைத்துச் சூட்டின் தன்மையை உணர்ந்து, பெருமைப்பட்டுக் கொள்வதையும் அவன் நினைவு கூர்ந்தான். அவர்கள் கிருஸ்ணமூர்த்தியை பிடித்துக் கொண்டு வந்த பின் ஒரு நாள் இரவில், ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில், வாகனத்திலிருந்து தள்ளி விட்டுப் போனதை நினைவு கொண்டான்.

தில்லை மரத்திலிருந்து உதிர்ந்த தடித்த சருகொன்று, தன் உடலில் விழுந்து, காற்றில் உருண்டு நிலத்தில் வீழ்ந்ததை உணர்ந்தான். தன் கால்களில், மீன்கள் தம் வாயால் கவ்விக் கவ்விப் பிடிப்பதை உணர்ந்தான். மீண்டும் அடி வயிற்றில் நோவையும், கடமுடப்பான ஒலியையும் உணர்ந்தான். குறியில் இருந்து இளஞ்சூட்டுடன் சில இரத்தத் துணுக்குகள் எரிவுடன் வெளியேறி நீரில் கலப்பதை உணர்ந்தான். சில வேலைகளில் இரத்த வெடுக்குக்கு முதலைகள் வரக்கூடும் என நினைத்தான். இருந்தாலும், முழுமையான விடுதலை உணர்வோ, அல்லது வலிக்குப் பின்னான இன்பமோ கிடைக்கும் வரை, அந்த ஆற்றோரத்தில் கிடப்பது என நினைத்த போது, புழுக்களைச் சுமந்த பாதை, டப்... டப்... என்ற இயந்திர ஓசையுடன் இறங்கு துறையில் தரை தட்டியது.

ஏதோ ஒரு புதிய உணர்வு அவன் புத்தியைத் தாக்கி, உழுப்பி விட்டது. விறைத்துக் கிடந்த தன் வறிற்றுக்குள் ஏதோ ஒரு ஏக்கத்தை உணர்ந்தான். ஆற்று வாழைக்குள் பாதி அமிழ்ந்து கிடந்த உடலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே இழுத்து எடுத்து, சாரத்தில் இருந்து நீர் சொட்டச் சொட்ட எழுந்து நின்றான். தன் இடுப்புடன் சுற்றிக் கொண்டு வந்திருந்த ஆற்று வாழைக் கொடிகளைக் களைந்த போது, ஆற்றில் இருந்து வந்த காற்று, அவன் உடலைக் கொடுகப் பண்ணியது. கைகளை மார்புக்கு குறுக்காக வைத்து, தன் தோள்ப்பட்டையை வலுவாகப் பற்றிக் கொடுகினான். கைகள் தன் தோள்ப்பட்டையை வலுவாகப் பற்றி இருக்க, உடலை இடம் வலமாக ஆட்டி ஆட்டி, வயல் வெட்டையில் கால்களை உந்தி உந்தி ஓடினான். வயல் வெட்டையில் இருந்து, தென்னை மரங்கள் நின்றிருந்த திடலில், தாவி ஏறினான். துறையடியில் இருந்து, முச்சந்தியை நோக்கிப் போகும் வீதியை அண்டி நிற்கும் மஞ்சவண்ணா மரக் கூடலை நோக்கி ஓடினான்.

சருகுக் கோழி ஒன்று, வேகமாக புதருக்குள் ஓடி, அரவமற்றுப் போவது போல், வேகமாக ஓடி வந்தவன், மஞ்சவண்ணா மரக் கூடலுக்குள் புகுந்து, அரவமற்றுப் போனான். தன் கண்களுக்கு முன்னே ஆடிக் கொண்டிருக்கும் மஞ்சவண்ணா இலைகளை ஊடறுத்து, வீதியில் தன் பார்வையை பதியவைத்திருந்தான். பாதையில் இருந்து இறங்கிய புழுக்கள், மோட்டார் சைக்கிளிலும், சைக்கிளில் டபிள் போட்டும், சைக்கிள் பின் கெறியரில் மூடையையோ விறகுக் கட்டைகளையோ ஏற்றியபடி, தான் ஒளிந்திருக்கும் மஞ்சவண்ணாக் கூடல் தாண்டி, தார் வீதியில், சக்கரங்கள் சுழலப் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். சாறி உடுத்திய நடுத்தர வயதான புழுக்களும், சிறு புழுக்களுமாகத் தன்னைத் தாண்டி நடந்து போவதை, பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

விறைத்துக் கிடந்த தன் வயிற்றுக்குள், அந்த ஏக்கம் அதிகரிப்பதை உணர்ந்தான். பொறுமையாக தன் இலக்குக்காகக் காத்திருந்தான். தான் எதிர்பார்த்தது போல், கையில் பன் பேக் சுமந்து, முகத் தசைகள் சுருங்கிப் போன, முதிய புழு ஒன்று கடுகி நடந்து வருவதைக் கண்டான். உறைந்து போன தன் முகத்தசைகள், தன்னிச்சையின்றி விரிவதை உணர்ந்தான். தன் இடுப்பில் இருந்து சாரத்தை அவிழ்த்து ஒரு கையில் பிடித்துக் கொண்டும், தான் குந்தி இருந்த புற்றில் இருந்து களிமண் கட்டி ஒன்றைப் பெயர்த்தெடுத்துக் கொண்டும், தயாராக இருந்தான். வீதியில், கடுகி நடந்து வந்து கொண்டிருந்த கிழப் புழுவிற்கு எதிரே சட்டென்று மஞ்சவண்ணாக் கூடலுக்குள் இருந்து வெளிப்பட்டு, தன் கையில் இருந்த சாரத்தைக் கீழே விட்டு விட்டு, களிமண் கட்டி இருந்த கையை மேலே உயர்த்திக் கர்ஜித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலவெலத்துப் போன கிழப் புழு, தன் கையில் இருந்த பையை வீதியில் போட்டு விட்டு, தன் தலைக்கு மேல் கையை கூப்பியபடி வீதியில் அமர்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். களிமண் கட்டியைத் தார் வீதியில் சிதறப் போட்டுவிட்டு, சாரத்தை வேகமாகத் தூக்கி இடுப்பில் கட்டிக் கொண்டான். கிழப் புழுவின் பன் பையை தூக்கி, நெஞ்சோடு அணைத்தபடி, மஞ்சவண்ணா மரக் கூடலைத் தாண்டி, தென்னந் தோப்புக்குள் உடலை அசைத்து அசைத்து காலை உந்தி உந்தி ஓடினான். தென்னந்தோப்புத் திடலில் இருந்து பள்ளமாகக் கிடந்த வயல் வெளியில் இறங்கி, சாப்பைப் புல் வளர்ந்து கிடந்த, வயல் வெளியின் அந்தத்தில் இருந்த சேற்றுப் பள்ளத்தை நோக்கி ஓடினான்.

வயல் அந்தத்திற்கு வியர்வையும், மூச்சிரைப்புமாக வந்து சேர்ந்தான். சாப்பைப் புல் அடர்ந்து வளர்ந்து கிடந்த சேற்றுப் பள்ளத்துக்குள் இடறி இடறி உட்புகுந்து, சாப்பைப் புற்களை மடித்துக் கொண்டு உட்கார்ந்தான். கிழப் புழுவின் பன் பைக்குள் இருந்த பச்சை வெற்றிலையும், பாக்கும், தேங்காய்ப் பாதியும், வாழைப்பழங்களும், வெண் பொங்கல் கட்டிகளும், தன் விறைத்துப் போன வயிற்றின் ஏக்கத்தைத் தீர்த்து விடும் என நம்பினான். ஒட்டி உலர்ந்து போன வயிறு, ஏக்கத்தைத் தணித்துக் கொண்டிருந்த போது, மீண்டும் தன் குறியில் கடுப்பை உணர்ந்தான். தன் கால்களை இடம் வலம் மாறி வைத்து, தன் குறியைத் தொடைக்குள் நசித்துப் பிடித்தபடி, தன் வயிற்றின் ஏக்கத்தை ஓரளவாவது தணிக்க முனைந்தான். பன் பையை சாப்பைப் புல்லுக்குள் தூக்கி எறிந்து விட்டு, சேற்றுப் பள்ளத்துக்குள் கிடந்த தண்ணியை மொண்டு குடித்தான்.

எழுந்து நின்ற போது, மீண்டும் அடி வயிற்றில் நோவுடன் தன் குறி விறைத்துக் கடுக்குவதை உணர்ந்தான். மீண்டும் உடல் உஷ்ணமாவதை உணர்ந்தான். ஈரமான உடலுடன் மீண்டும் ஆற்றில் கிடக்க விரும்பாததால், போக்கு வெய்யில் கொழுத்திக் கொண்டிருக்கும் வயல் வரப்பில், உடலை வளத்திக் கிடந்தான். கட்டற்ற விடுதலைக்காகவே, குறியில் இருந்து, இரத்தத் துணிக்கைகள் வெளியேறுவதால் கிட்டும் இன்பத்துக்காகவே, காத்துக் கிடக்கத் தொடங்கினான்.

பிரசுரமாகாத படைப்பு - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்காரு

வயித்தை நேவி நேவி வந்ததால் தனக்குப் பசி என நினைத்தாள். தம்பியைப் போல் பசிக்கிறது என அடம் பிடித்துக் கத்த முடியாது என தனக்குத் தெரிந்திருப்பதற்காக கவலை அடைந்தாள். எரியும் குத்து விளக்கின் களிம்பு மணமும், ஊதுபத்தியின் வாசனையும், சவப்பெட்டியின் பெயின்ட் மணமும் கலந்த நாற்றமும் தன் வயிற்றுக் குமட்டலுக்கு காரணமாக இருக்கக் கூடும் என நினைத்தாள். முற்றத்தில் படங்கு கட்டி இருப்பதால் முன் வாசல் மதிய நேரத்திலும் இருண்டு போய்க்கிடப்பதாய் அவளுக்குப்பட்டது. திடீர் என்று சவப்பெட்டிக்கு அருகில் இருந்த அம்மம்மாவும் ஊர்ப் பெண்களும் மாரடித்து ஒப்பாரி வைத்தார்கள். தன் நெஞ்சு திடுக்குற்று படபடப்பதை உணர்ந்தாள். புதிதாக யாரோ உறவினர்கள் உள்ளே வருவதை ஊகித்து நிமிர்ந்தாள். வெளியே படங்கு காற்றில் உயர்ந்ததால் ஏற்பட்ட வெளிச்சம் படிய முன் வாசல் ஊடாக யோகி மாமாவும், பள்ளி அன்ரியும் படியில் ஏறிவருவதைக் கண்டாள். படங்கு அமர்ந்தது. இருள் கவிந்து அவர்களையும் பிணமாக்கிவிட்டது போல் உணர்ந்தாள். ஒப்பாரி அடங்கும் வரை காத்திருந்தாள். அறைக்குள் அம்மா கட முட என சாமான்களை உருட்டி எதையோ தேடுவது போல் உணர்ந்தாள். அழுகை முட்டிக் கொண்டு மூக்குத் துவாரத்தை எரிய வைத்ததால், கண்ணாலும் மூக்காலும் நீர் வடிந்து உதட்டில் அவளுக்கு உப்புக்கரித்தது. அழுகையினூடே இரட்டைப் பின்னல் பின்னிய பொம்மை அவள் நினைவுக்கு வந்தது. அப்பா மாமாங்கத் திருவிழாவில் வாங்கிக் கொடுத்தது என நினைத்துக் கொண்டாள். செத்த வீட்டின் களேபரங்களுக்கிடையில், நேற்றுப் பின்னேரத்தில் இருந்து அதன் இரட்டைச்சடை நினைவில் அசைய தேடித்திரிந்ததை நினைவு கொண்டாள். அது இதுவரை கண்ணில் படாததால் கவலையானாள். அம்மாவிடம் கேட்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்ட போதும், சிரமத்துடன் அடக்கிக் கொண்டிருப்பதால், தனக்கு நெஞ்சு கடுமையாக நோவதாக நினைத்தாள். தான் தரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதால், கருத்த ஸ்டாண்டில் உள்ள சவப் பெட்டிக்குள் வளர்த்தி இருக்கும் அம்மாவின் முகமோ உருவமோ தெரியவில்லை எனக் கவலைப் பட்டாள். எழுந்து நின்ற போது கூறைச் சாறி உடுத்தி கருத்து விகாரமான முகத்துடன் அம்மாவின் உருவம் அவளுக்கு முழுமையாகத் தெரிந்தது. சவப் பெட்டிக்குள் இருக்கும் அம்மாவைப் பார்த்தபோது தனக்கு அழுகை வரவில்லை என நினைத்தாள். சில நாட்களாக தன் தலை வாரப்படாததால், சிக்குப் பிடித்து புழுத்துப் போனது போல் அருவருப்புக் கொண்டாள். திட்டிக் கொண்டே தலைவாரும் அம்மாவின் முகம் அவளுக்கு நினைவு வந்த போது, கூடவே அழுகையும் வந்தது. தன் இரட்டைச்சடை பொம்மை அதன் மூக்கில் சொக்லேட் பிரண்ட கயருடன் கடைக் கல்லா மேசையில் மல்லாக்காய் கிடக்கின்ற நினைவு அவளுக்கு வந்தது. அழுகையும், அடங்கிய ஒப்பாரியும், இருளும், களிம்பு மணமும் பரவிக் கிடந்த கூடத்தில் இருந்து, குந்தியிருந்த சோடிக் கால்களுக்கிடையே நகர்ந்து வெளியே வந்தாள். முகத்தில் அறைந்து தாக்கும் படங்கின் வெக்கை, நேரம் மதியத்தை தாண்டி விட்டதை அவளுக்கு உணர்த்தியது. வாசல் படியில் இருந்து வெளியே நோட்டம் விட்டாள். நிரையாக அடுக்கப்பட்ட பிளாஸ்டிக் கதிரைகளின் நிலை குழப்பிச் சிலர் முழங்கையை தொடையில் ஊன்றி கவிழ்ந்து ரகசியம் கதைத்துக் கிடப்பதைக் கண்டாள். சடங்குப் பொருட்கள் கழுவிய கஞ்சல்களும் நீரும் ஊறி, வாழைப் பாத்தி தன் பெரிய இலைகளின் நிழல் விழுத்திச் சகதியாய்க் கிடந்தது. தகரக் கூரையின் நிழல் புளக் கல்லால் கட்டப்பட்ட பூசாத கடைச் சுவரிலும், தகரக் கதவிலுமாக முக்கோணமாய் படிந்து கிடந்ததை பார்த்து நின்றாள். கடை துக்கத்தாலும், கவலையாலும் சோர்ந்து தூங்கிப் போய்க் கிடப்பதாக அவளுக்குப் பட்டது. நெற்றி வடுவுடன் தந்தையின் சுருள் முடி முகம் ஒரு கணம் கடைச் சுவரில் தோன்றி மறைந்ததைக் கண்டாள். தான் கடைச் சுவரில் அப்பிய கருத்த நெற்றிப் பொட்டின் மிச்சம் என ஊகித்தாள்.

படங்கின் நிழல் தாண்டியதும், மணலின் கொதிப்பை கால்களில் உணர்ந்தாள். வயிரெக்கி, பெருவிரல் நுனியால் நடந்து கடைத் தாழ்வார நிழல் அண்டிச் சுவரில் சாய்ந்து நின்றாள். வெள்ளை டிசுப் பேப்பரில் வெட்டி சணல் கயிற்றில் ஒட்டிய கடதாசிப் பூக்கள் காற்றில் சரசரப்புடன் குறுக்கும் நெடுக்குமாக பறப்பதைப் பார்த்து நின்றாள். வாழைக் குற்றியில் பூவாகச் செருகப்பட்ட தென்னங்குருத்துக்கள் சிரிப்பதாக அவளுக்குப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடைக்கருகில் பூவரசம் தடியில் இருந்து கிழிக்கப்பட்ட பட்டைகள் வெய்யிலில் காய்ந்து சுருண்டு கிடந்தது. சுவரின் வெக்கை உடம்பில் தகித்ததால் கம்பிக் கொக்கியை இழுத்து தகரக் கதவைத் திறந்து, கடைக்குள் போனாள். தகர வெக்கையில் அவிந்த பல சரக்குச் சாமான்களின் வெக்கை முகத்தில் அறைந்து தாக்கி, தலையை கிறுகிறுக்க வைப்பதை உணர்ந்தாள். நீளக் கை சேட்டுப் போட்ட தந்தை, குறுக்குச் சட்டத்தில் தூங்கும் நிறப் பக்கட்டுக்களுக்கிடையே சிரித்துக் கொண்டு பிஸ்கட் பக்கட்டை தன்னை நோக்கி நீட்டுவது போல் அவளுக்குப் பட்டது. எல்லா பலகை ராக்கைகளும் வெறுமையாகக்கிடந்ததால் அவளுக்கு அழவேண்டும் போல் இருந்தது. உறையுடன் உருகி பலகையுடன் ஒட்டிக்கிடந்த டொபி ஒன்றை நேற்றுப் பின்நேரமே எடுத்துச் சாப்பிட்டது அவளுக்கு ஞாபகம் வந்தது.

பாடசாலையின் அருகான கிறவல் வீதியில் ஒரு லேண் மாஸ்டர் சாமான்களுடன் புழுதி கிழப்பி வரும் தந்தையின் சலி மோட்டார் சைக்கிள் அவளுக்கு ஞாபகம் வந்தது. சாமான்களுக்கு மத்தியில் தந்தைக்கு முன்னே இருந்து, தன் தோழிகளுக்கு கையசைத்து வருவதான நினைவில் நடந்தாள். கால்களுக்குள் மாட்டுத்தாள் சரைகள் இடறியதால் நின்றாள். உலர்ந்து வத்திப் போன கொருக்காய்ப் புளிகள் எதுவித ஈரலிப்புமற்று கைகளில் இருந்து மாட்டுத்தாள் சரைக்குள் விழுவதை உணர்ந்தாள். தந்தை, துலாக் கிணற்றடியில் குளித்துவிட்டு வெற்றுடம்புடன் துவாயை முதுகுப்பக்கம் வீசித் துடைப்பது போன்ற பிரமை தட்டியதால், கண்களுக்குள் தன்னுணர்வின்றி கண்ணீர் தளும்புவதை உணர்ந்தாள். மாட்டுக்கு குறி சுட்டது போன்று, தந்தையின் ஒரு பக்க விலா எலும்புப் பகுதியிலும், நெற்றியிலும், தோள் பட்டையிலும் இருக்கும் தழும்புகள், தன் கண்களுக்கு நெருக்கமாக தெரிவதாக உணர்ந்தாள். சந்தையின் சன நெரிசலுக்குள், மணல் புழுதியுடனும், சிதைந்த பொருட்களின் துகள்களுடனும் பாரிய சத்தத்துடன் குண்டொன்று வெடிக்கிறது. புழுதி அடங்க சந்தையின் இடிபாடு களுக்குள் தந்தையின் உடல், கிழிந்த உடையும், இரத்தக் கறையுமாக கிடக்கிறது. அப்பம்மாவின் கண்களுக்குள் விரியும் கதையுடன் அவள் ஒன்றிக் கிடந்தது ஞாபகம் வந்தது. வன்செயலில் பாதிக்கப் பட்டவர் என்று அவுஸ்திரேலிய சிட்டிசனுக்கு அந்தத் தழும்புகள் வாய்ப்பாக இருக்கும் என்று, ஆட்டேக்காரர் காலை வெளியே நீட்டிய படி, ஆட்டோவுக்குள் முகம் மறைத்துச் சொன்னதை ஞாபகம் கொண்டாள். சில வேளை அந்த காயங்களைக் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் செயலில் ஈடுபட்டவர் என்ற காரணத்தினால் சிட்டிசன் மறுக்கப்படவும் கூடும் என்று வேலும்மயிலும் பெரியப்பா வெற்றுடம்புடன் நெஞ்சை தடவியபடி ஈசிச் செயரில் சாய்ந்து கொண்டு சொன்னதை நினைவு கொண்டாள். இந்த மனுசனுக்கு கரி நாக்கு என்று புகை மூட்டமான குசினிப் பின்னணியில் உருவமற்று அம்மாவின் வார்த்தைகளை மட்டும் கேட்டாள். தன் இரட்டைச்சடை பொம்மை கல்லாவில் குப்பறவோ, பலகை ராக்கையில் சாய்ந்த நிலையிலோ இல்லாதால் கடைக் கதவை இழுத்துச் சாத்தி கம்பிக் கொழுவி போட்டு வெளியேறினாள். ஆட்கள் அற்ற பிளாஸ்ரிக் கதிரை நிரைகளின் இடைவெளியில் நகர்ந்து தெருவுக்கு வந்தாள். கடும் சுழல் காற்று அடர்ந்த கொட்டங்கா மர நிழலில் இருந்த அண்ணாச்சிமார் மீது புழுதியையும் தூசியையும் வாரி இறைத்து தகர வேலி ஓரம் நகர்வதைக் கண்டாள். அவர்கள் கதிரையுடன் எழுந்து தூசி உதறி கதிரையை வலம்மாறிப் போட்டிருந்து மீண்டும் சிரித்துக் கதைப்பதைக் கண்டாள். மஞ்சள் தொப்பியும், மஞ்சள் ரீ சேட்டும், கருத்த ஜீன்சும் போட்ட லீசிங்காரர்களும், அப்பாவும் அடர் கொட்டங்கா மரத்துக்குக் கீழே பகல் நேர துல்லியமான வெளிச்சத்தில் உரையாடி, உலாவிக் கரைவது போல் தன் கண்களுக்குள் கண்டாள். அப்பாவுக்கு டிப்பர் எடுப்பதில் விருப்பம் இல்லாதிருந்ததால், தனக்கும் விருப்பம் இல்லாதிருந்ததை நினைவு கொண்டாள். மாமாவும், வேலை இல்லாதிருப்பதால் உதவியாக இருக்கும் என்று அம்மம்மாதான், அம்மாவை அரியண்டப்படுத்தியது அவளுக்கு ஞாபகம் வந்தது. அம்மா தன் நகைகளை அடைவு வைத்து அப்பாவிடம் காசு கொடுத்ததை, சாமான்கள் நிறைந்து கிடந்த கடைப் பின்னணியில் நினைவு கொண்டாள். நீல நிற டிப்பரின் வேகத்தில் எழுந்த சூறைக் காற்றில் கிரவல் புழுதியும், தூசிகளும் பின்னால் சுழன்று துரத்தி வர, மஞ்சள் கொடி பறக்க கொட்டங்கா மர நிழலில் டிப்பர் வந்து நின்றது, அவள் நினைவுகளுக்குள் வந்தது. அப்பா, அம்மாவுடன் தகரக் கதவுப் பின்னணியில் சிரித்துக் கதைத்து நின்றதை நினைவுபடுத்திப் பார்த்தாள். தம்பி வாகனத்துடன் ஒட்டிக் கொண்ட போதும் தனக்கு விருப்பம் இல்லாதிருந்ததை நினைவு கொண்டாள். ஊருக்குள்ளும், வீதிகளிலும் நிறைய டிப்பர்கள் நிற்பதை தான் இப்போது புதிதாக கவனிக்கத் தொடங்கியதை நினைத்துப் பார்த்தாள். பெரும்பாலும் தங்களுடைய டிப்பர் கொட்டங்காய் மரத்துக்குக் கீழேயே நிற்பதை கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்ததை நினைவுபடுத்திப் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் வந்த இரவுகளில் தான் விழிக்கும் போதெல்லாம் அம்மாவும், அப்பாவும் கடுமையாகக் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கின்றாள். சில வேலைகளில் கண் விழிக்காமலே அம்மா அழுவதை கேட்டுக் கொண்டு படுத்திருந்ததை நினைவு கொண்டாள். பள்ளிக்குள் சோமி தன்னை கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டு, அம்மா ஊர் முழுக்க கடன் வாங்கி இருப்பதாக மற்றப்பிள்ளைகளிடம் கூறியதை கவலையுடன் நினைத்துப் பார்த்தாள். துரவை அண்டி நிற்கும் தென்னை மரங்களும், குயில் கூவும் மஞ்சவண்ணா மரமும் கொண்ட துறையடி வளவிற்குள் சோமி அதிகாரத்துடன் உலாவுவது நினைவுக்கு வந்ததால் கண்கள் தன்னிச்சையின்றி கலங்குவதை உணர்ந்தாள். அவளுக்குப் பிடித்தமான துறையடி வளவு கைமாறிப் போனதால் அம்மா மீது அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. தான் செய்யாத பிழைக்கு தண்டனை கிடைக்கும் போது மட்டுமே தன்னை அறியாது கலங்குகின்ற தன் கண்கள் இப்போது வீட்டுக்குள் வரும் போது காரணம் ஏதுமன்றி கலங்குவதால் கவலையும் பயமும் கொண்டாள். டிப்பர் சேவிஸ், திருத்தம் என்று மாமா விளையாடுவதாக அப்பா, அம்மாவுடன் அடிக்கடி சண்டை போட்டதை நினைத்துப் பார்த்தாள். மற்றவர்களிடம் இருந்து தான் தனித்துத் திரிந்த ஒரு பகல் பொழுதில்தான் லீசிங்காரர்கள் தங்கள் டிப்பரை, உழுவு இயந்திரத்தால், கிரவல் புழுதி கிளம்பக் கட்டி இழுத்துப் போனதை நினைத்துப் பார்த்தாள்.

பகல்களில் சமாளித்தாலும் இரவு வேலைகளில் பயத்தில் அம்மம்மாவுடன் கொடுகியதை நினைத்துக் கொண்டாள். அப்பாவும், அம்மாவும் தலை மறைவாகி தூரத்து உறவினர் வீட்டில் ஒளித்திருப்பதாக அம்மம்மா குசுகுசுத்ததை ஞாபகப்படுத்திப் பார்த்தாள். அப்படியான இரவுகளில் நாய்கள் கடுமையாக குரைத்தன. யாரோ படலையில் உதைத்து தூசணத்தால் பேசிப் போனார்கள். சில வேளைகளில் கற்கள் ஓட்டில் விழுந்து உருண்டு கீழே விழுந்தன. தான் அம்மம்மாவை இறுக அணைத்தபடி உறங்க முடியாது தவித்துக் கிடந்ததை ஞாபகப் படுத்திக் கண் கலங்கினாள். உறக்கமற்ற ஓர் இரவில்தான், அப்பாவும் அம்மாவும் வந்து அவளை எழுப்பித் தூக்கி வெளியே போனதை ஞாபகப்படுத்திப் பார்த்தாள். வெளியே வந்த போது நிலவொளி வாழையின் பெரிய இலைகளை நிலத்தில் நிழலாக விழுத்திக்கிடந்தது ஞாபகம் வந்தது. அப்பா அவளிடம் ஏதோ கூற வந்து முடியாமல் கண்கலங்கிப் பின் கீழே இறக்கி விட்டதை நினைத்துப் பார்த்தாள். தூக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்கத்தில் தன்னையும் அப்பாவையும் சுற்றி சிலர் குசுகுசுத்தப்படி நின்றதை நினைவுக்கு கொண்டுவர முயன்றாள். அந்த இரவுக்குப் பின் அப்பம்மாவின் புலம்பும் வார்த்தைகளில் அப்பா படகு ஏறிவிட்டார் என்பதை அறிந்து, தொண்டை அடைக்க விம்மியதை நினைத்துப் பார்த்தாள். அந்த இரவுக்குப் பின் அம்மா ஒளிந்து திரியவில்லை. கொண்டையை தூக்கிக் கட்டிக் கொண்டு வீராப்பாய் ஊருக்குள் திரிந்ததை நினைத்துப் பார்த்தாள். அந்த இரவுகளில் தான் ஏஜன்சி வேலை செய்யும் ஆட்டோக்காரர் தங்கள் வீட்டுக்கு வந்து போனது அவள் நினைவில் நின்றது. இறங்கி தொடர்பு கொண்டதும் எல்லா செட்டில்மெண்டும் கை மாறும் என்று, அம்மா அவரை விழுந்து விழுந்து கவனித்துக் கொண்டு சொன்னதை, தன் பாடப்புத்தகத்தை நிலத்தில் படுத்தபடி, படித்துக் கொண்டு கேட்டதை ஞாபகம் கொண்டாள். நாட்கள் செல்லச் செல்ல அப்பா பற்றிய தகவல்கள் இல்லாததால், வீட்டுவிறாந்தையின் தரை உலர்ந்து பாளம் பாளமாய் வெடித்து, உறைந்து போய்க் கிடப்பதாக அவளுக்குப்பட்டது. கடலில் படகுகள் தாண்டு பிணங்கள் மிதப்பதாகவும், கடற்படை நூற்றுக்கணக்காணவர்களை கைது செய்திருப்பதாகவும், இந்தோனேசியாவில் கரை தட்டி இருப்பதாகவும் ஊருக்குள் கதை பரவி அல்லோடப்பட்ட போது தான், ஊருக்குள் அப்பாவுடன் பலர் படகேறிய விசயம் தனக்குத் தெரிய வந்ததை நினைத்துப் பார்த்தாள். அம்மா நெஞ்சு நோ என்று பன்பாயில் சுருண்டு கிடந்ததை பசியுடனும் ஏக்கத்துடனும் பார்த்து நின்றதை நினைத்துப் பார்த்தாள். அம்மம்மா, அம்மாவை அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனதால் பள்ளிக்குப் போகாமல் தம்பியை தூக்கிக் கொண்டு ஊருக்குள் திரிந்ததை நினைத்துப் பார்த்தாள். இரவு, பகல் என்று இல்லாது எழுந்திருக்கும் நேரத்தில் எல்லாம் அம்மா நெஞ்சில் அடித்து ஒப்பாரி வைத்ததையும், ஏஜன்சிக்காரரை திட்டியதையும், தன் நைட்டியாலோ, போர்வையாலோ தன்னை போர்த்தி சுவர் மூலையில் கொடுகியதை நினைத்துப் பார்த்தாள். ஏஜன்சிக்காரருக்கு கடற்படையுடனும், புலனாய்வுத் துறையுடனும் தொடர்பு இருப்பதாக அம்மாவை, அம்மம்மா அதட்டி அடக்கிய போது தான் வெறும் நிலத்தில் வருத்தக்காரியைப் போல் பயத்தில் சுருண்டு படுத்திருந்ததை நினைத்துக் கவலைப் பட்டாள். பத்தொன்பது நாட்களில் படகு கரை தட்டி இருக்க வேண்டும், இருபத்தெட்டு நாட்களாகியும் தகவல் இல்லாததால், படகு கடலில் மூழ்கி விட்டதாக ஊர் கவலைப்பட்ட போது, தன் கை கால்கள் சோர்ந்து பலவீனமாகிவிட்டது போல் உணர்ந்ததை நினைவு கொண்டாள். ஊதி வெளிறி உப்பிப் போன உடலில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருத்துப் போன தழும்புகளுடன் நீரில் உடல்கள் மிதப்பது போன்ற உணர்வுடன் ஊருக்குள் தான் அலைந்து திரிந்ததை நினைவு படுத்திப் பார்த்தாள்.

''அம்மாளாச்சி, உனக்கு ஆயிரம் கோடி புண்ணியமனே''

நடுநிசியில் அம்மாவின் அலறல் சத்தத்தில் அவள் விழித்த போது, கண் கூசும் லைட் வெளிச்சத்தில் வீடு பரபரப்பாக இருந்ததை நினைவு கொண்டாள். ஈஸ்வரி மாமி சோட்டியுடன் நின்றிருந்ததையும், தாசன் அத்தானும் அப்பாவுடன் படகேறிய விசயமும் தனக்கு தூக்கக் கலக்கத்திலும் நினைவு வந்ததை நினைத்துக் கொண்டாள். வழி முழுவதும் இருள் படர்ந்து கிடந்தது. தூக்கி முடித்த கொண்டையுடன் அம்மா முன்னே போனார். ஈஸ்வரி மாமி சோட்டி இடற அம்மாவை தொடர முடியாது இடறி இடறிப் போனார். இடை இடையே நாயின் ஊளைச் சத்தம் உடலை குளிரில் நடுங்கச் செய்வது போல் நடுங்க வைத்தது அவள் நினைவுக்கு வந்தது.

ஈஸ்வரி மாமி வீட்டு விறாந்தையில் தான் ஏறும் போது மாமாவும் பவியும், ''லப்டப்புக்கு'' முன்னே இருப்பதைக் கண்டாள். தாசன் அத்தான் எழுந்து நகர்வதையும், யாரோ குறுக்காக நகர்வதையும் சலன உருவில் துலக்கமற்று முதலில் கண்டதை நினைவு கொண்டாள். சலன உருவில் வந்தவர் நெருக்கமாக வந்த போது நெற்றியில் இருந்த தழும்பை இனம் கண்ட கணம், அம்மா பெருங்குரல் எடுத்துக் கத்தியதை நினைத்துப் பார்த்தாள். லப்டப்புக்குள் சலன உருவில் அப்பா இரு கைகளையும் தலைக்கு மேல் கூப்பி அழுததால் தானும் அழுததை நினைவு கொண்டாள்.

''ஆரும் வாரதா இருந்தா தயவு செய்து இங்க வரவேண்டாம் எண்டு சொல்லு.''

''லப்டப்புக்குள்'' சலன உருவில், தலைக்கு மேல் தூக்கிய கரத்தை இறக்காது அப்பா கேவிக் கேவி அழுத போது தான் கவலையில் ஏதும் பேச முடியாது நா உலர்ந்து போக நின்றதை நினைத்துப் பார்த்தாள். திசை தப்பிய சமுத்திர வெளியில் படகு அலைந்த போது, வானில் தும்பிக்கை கொண்ட முகில் கூட்டம் சில நாட்கள் பின் தொடர்ந்து வர. தாம் கரை தட்டியதாக, அப்பா சொன்ன போது, தான் பிள்ளையாரப்பாவை வேண்டிக் கொண்டதை நினைத்துப் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிள்ளையாரப்பா, வர்ர திருவிழாவுக்கு உன்ர ஊர்வலத்தில் யானையை நடக்க விடுவன். என்ர பிள்ளையாரப்பா உன்னாணை இது சத்தியம்.''

பெரும் ஒப்பாரிக்கு மத்தியில் அம்மா பிள்ளையாரப்பாவுக்கு நேர்த்தி வைத்தார். அம்மா சத்தியம் செய்தது போல் பிள்ளையார் கோவில் திருவிழாவுக்கு கதிர்காமத்தில் இருந்து யானையை வாடகைக்கு அமர்த்தி ஊர்வலத்தில் நடக்க விட்டார். நிறைய செலவாகி இருக்கும் என்று ஊர் கதைத்தது. சோமி நீண்ட நாட்களுக்குப் பின் நெருக்கமாக வந்து நின்று கதைத்ததை நினைத்துப் பார்த்தாள். அன்றிரவு அம்மாவுக்கும் ஏஜென்ஸிக்காரருக்கும் கடும் வாக்குவாதம் நிகழ்ந்ததும், அம்மாவின் கழுத்தை நெரித்து பின்னால் தள்ளி விட்டுவிட்டு, ஆத்திரத்துடன் புதுசாக வாங்கிய ''லப்டப்பை'' தூக்கி ஆட்டோவுக்குள் போட்டுக் கொண்டு போனதும், கூடவே அவளுக்கு ஞாபகம் வந்தது.

சாமத்தில் பூனையோ, எலியோ சாமன்களை உருட்டுவது போன்ற சத்தத்திலும், குழந்தை முனகுவது போன்ற சத்தத்திலும், தான் விழித்த போது அம்மம்மா தூக்கத்தில் புலம்பிக் கொண்டிருந்ததை நினைத்துப் பார்த்தாள். தனக்கு தொண்டை வறண்டு தாகமாக இருந்த போது, எழுந்து சுவரில் தடவி சுவிட்சைப் போட்டது நினைவுக்கு வந்தது. அறை பிரகாசமாகி நிலைப்படியின் ஊடாக லைட் வெளிச்சம் விறாந்தையில் சாய்சதுரமாகப் படிந்து விறாந்தையை வெளிச்சப் படுத்தி இருந்தது. குசினிப் பக்கம் இருந்து கையில் கருத்தக் கிலவுஸ் போட்ட ஒருவர் விறாந்தையில் நடந்து போவதைக் கண்டதை நினைவில் இருந்து மறக்க முனைந்தாள். அது எஜன்ஸிக்காரர் போல் இருந்ததை மறக்க முனைந்த போதும் அந்த உருவம் தொடர்ந்தும் நினைவில் வந்து அச்சுறுத்திக் கொண்டிருப்பதால் தான் தனிமையை விரும்புவதாக நினைத்துக் கொண்டாள். குசினி விட்டத்தில் தொங்கிக் கொண்டிருந்தது அம்மா என்பதை நினைவுக்குக் கொண்டுவர அவள் விரும்பவில்லை.

தன் கால்கள் சுடுமணலின் தகிப்பை உணர்ந்ததால் நின்றாள். நினைவோட்டத்தில் பிள்ளையார் கோவில் தாண்டி கிரவல் வீதி முடங்கி மறையும் சந்திக்கு வந்து விட்டதை உணர்ந்தாள். திரும்பி வீட்டுப் பக்கம் நோக்கினாள். வீதிக்குக் குறுக்காக, கயிற்றில் அம்மாவின் திருமணக்கோல உருவப்படத்துடன் கண்ணீர் அஞ்சலிப் போஸ்டர் காற்றில் ஆடிக் கொண்டிருந்ததைக் கண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் வங்கிப் புத்தகத்தில் முதல் நாள் அறுபத்தையாயிரம் விட்ரோ பண்ணி இருப்பதாகவும், மிச்சம் எட்டாயிரச் சொச்சம் இருப்பதாகவும் பெரியப்பா துப்புத்துலக்கிச் சொல்லிக் கொண்டிருந்த போது தான் இரட்டைச்சடை பொம்மையை தேடுவது போல் குறுக்கும் நெடுக்கும் அலைந்து திரிந்ததை நினைத்துப் பார்த்தாள். அன்று மாலையே அவன் வீட்டுக்குள் புகுந்து ஒளித்திருந்திருக்க வேண்டும் என்று பெரியப்பா தென்னையில் சாய்ந்து கொண்டு விளக்கம் தந்து கொண்டிருந்ததை நினைத்துப் பார்த்தாள். தான் எவரிடமும் எதுவும் கூறாது தனிமையில் அலைந்து திரிவதே நல்லது என்று நினைத்து தன் இரட்டைச்சடை பொம்மையை தேடத் தொடங்கியதை நினைத்துப் பார்த்தாள்.

ஏதோ மின்னி மறைவது போல் அந்த நினைவு அவளுக்கு வந்தது. வயிறு அண்டுப்பட பின்னறை யன்னல் கம்பிகளுக்கிடையில் புகுத்தி வைத்தது ஞாபகத்தில் படிந்தது. யன்னலை யாராவது சாத்தி இருந்தால் தன் இரட்டைச்சடை பொம்மை நசிந்திருக்கும் எனக் கவலைப்பட்டாள். ஓட்ட''மம் நடையுமாக வீடு நோக்கி வந்தாள். தகரத்துக்குக் கீழ் கம்பி அடித்த வேலிக்கு அருகில் குந்தி வீட்டை நோட்டம் விட்டாள். பின்னறை யன்னல் கம்பிகளுக்கிடையில் கால்களை அகல விரித்துத் தொங்கிக் கொண்டிருந்தது இரட்டைச் சடை பொம்மை. யன்னல் பூட்டாததால் பொம்மை நசியவில்லை என்று சந்தோசப்பட்டு, கடப்புத் தாண்டி பின்னறை யன்னல் நோக்கி, தன்னை மறந்து ஓடினாள்.

கல்குதிரை (இந்தியா) - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டைவாளிகள்

கீழைக் கடலில் தெறித்த இரத்தச்சேறு
வானத்தில் மோதி
வீட்டுப்
படலைகளில் வீழ்ந்து
பாஸ்கா குறியாகும்
கோட்டையில் ஏறிய வேட்டைவாளிகள்
குழவிக் கூடுகளை முற்றுகையிடும்
முற்றுகையில் கொடுக்குகளை முறித்துச்
சரணடைந்த குள(ழ)விகளை
சமாதி கட்டும் வேட்டைவாளிகள்

[சண்முகம் சிவலிங்கம்]

ஆம்பிளைப் பிள்ளை என்பதற்காக, தானும், மனைவியும் தேடி வாங்கிய நீல நிற கம்பித் தொட்டிலில், தன் குழந்தை நரிக் கொத்தான் விரட்ட, முகத்தை சுழித்துச் சிணுங்கி, பின் சிரித்துக் கிடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். நீலம் பாரித்த நரம்புகள் வெளிப்புடைத்துக் கிடக்க, ஒடுங்கி வெளிறிப் போன கைகளுக்குள், துணியைப் பொத்தி, தொட்டிலுக்குள் ஒருக்களித்துப் படுத்திருக்கும் குழந்தையை ரசித்துக் கொண்டிருந்தான். பிறந்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும், அதற்குரிய வளர்ச்சியை அடையாது கிடப்பதால் கவலையானான். கடும் யுத்த காலத்தில் கருவானதை நினைவு கூர்ந்தான். பசியுடனும், தாகத்துடனும், செல் அடிச்சத்தத்துக்குள்ளும், பெரும் வெடி ஓசைகளுக்குள்ளும், கடும் குளிரிலும், வெய்யிலிலும் தன்னுடன் மனைவி அலைந்து திரிந்த போது, கருவில் வளர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை என நினைத்துக் கொண்டான். தடித்த யன்னல் சீலை தொங்கிக் கொண்டிருந்த, மிதமான குளிரூட்டப்பட்ட மருத்துவ அறையில் வைத்து, மருத்துவர் குழந்தைக்கு இதயம் பலவீனமாக இருப்பதால், வளர்ச்சி குன்றி விட்டது எனக் கூறியபோது துவண்டு போனான். தொடர்ச்சியான கவனிப்பும், அக்கறையான சிகிச்சையும், குழந்தையை மீட்டு விடும் என்று மருத்துவர் கூறிய போதும், நாளாந்தம் நலிவடையும் குழந்தையைப் பார்த்துக் கவலையானான். வெளிறிச் சிவந்த உதடுகளைத் திறந்து, வாயைச் சுழித்து கொட்டாவி விட்ட குழந்தையை கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்தான். காலையில் இருந்து, தன் மனைவி கண்ணில் படவில்லை என நினைத்தான். நாக கன்னி புற்றுக் கோயில் முன்றலிலோ, கத்தியில் ஏறி நின்று, விபூதியை அள்ளி வீசி, கட்டுச் சொல்லும் சாமியின் வரம் வேண்டியோ எங்காவது தவம் கிடக்கக் கூடும் என நினைத்தான்.

கண்ணைத் திறந்து, தன் கண்களைக் கூர்ந்து பார்க்கும் குழந்தையை, ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். நக்கல் சிரிப்புடன், நெஞ்சால் உன்னி மேல் எழுந்து, விறாந்தையில் மிதந்து, கதவைத் தாண்டி வெளியேறி தென்னை வட்டுக்கும், வேப்ப மரத்துக்கும் இடையே மேல் கிளம்பிப் பறப்பதை, அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். திடுக்கிட்டு எதுவோ உந்த, தன் உணர்வுள்ள காலை நிலத்தில் ஊன்றி, உணர்வற்ற, செயற்கைக் கட்டைக் காலைத் தூக்கி வைத்து வெளியே நகர்ந்து, ஆகாயத்தில் மிதக்கும் குழந்தையை ஏக்கத்துடன் பார்த்து நின்றான்.

பின் தானும் நெஞ்சால் உன்னிப் பறந்து விட முடியும் என நினைத்தான். செயற்கையான கட்டைக் கால் தடையாக இருப்பது போல் பட்டது. கட்டைக் காலைக் கழட்டி விட்டு விட்டு நெஞ்சால் உன்னி மேல் எழுந்த போது, தன் உடல் காற்றில் லேசாகி மிதப்பதை உணர்ந்தான். நீண்ட காலை நீள விட்டு, மிதி வெடியில் சிதைந்து போன, தன் பாதிக் காலை மடித்த நிலையில், குழந்தை முந்தியும், பின் தான் முந்தியும், என பறத்தலின் சுகத்தை ஏகாந்தமாய் அனுபவித்துப் பறந்தான். பசிய புல் வெளிகளில் மேயும் பசுக்களையும், மேய்க்கும் வயோதிபர்களையும் காட்டினான். கையில் பச்சை ஈர்க்கில் சுருக்குப் போட்டு, வேலியோரம் ஓணான் பிடிக்கப் பதுங்கும் சிறுவனைக் காட்டிக் குதுகலித்தான். வளைந்து, நெளிந்து, நீளும் ஆற்று விளிம்போர மரங்களின் கரும் பசிய நிறச் செழுமைகளைக் காட்டினான். வெண்மணல் பரப்புடன் விரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரை ஓரத்தில், வெண் நுரையுடன் வந்து போகும் கடல் அலைகளைக் காட்டினான். நடுக்குளத்தில், பட்ட மரத்தில், வெண் மொட்டுக்களாய் குவிந்து கிடக்கும் கொக்குகளைக் காட்ட முனைந்தான்.

குழந்தையின் வீரிட்ட அலறல் சத்தத்தில் திடுக்கிட்டு நினைவு வந்தவனாய், பரபரப்புடன் தொட்டிலை கூர்ந்து ஆராய்ந்தான். கண்களில் நீர் ததும்ப, அழும் குழந்தையைப் பார்த்து தடுமாறிப் போனான். தொட்டிலின் விளிம்போரம், பச்சையும் கடும் காவி நிறமும், நீலமும் கலந்த, வேட்டைவாளி ஒன்று, ஒட்டி ஒளிந்திருப்பதை பதட்டத்துடன் அவதானித்தான். பதட்டத்துடன் புறங்கையை வீச, விரல் நுனிகள் தொட்டிலின் விளிம்போரம் பட்டு வலிப்பதை உணர்ந்தான். விருட்டென்று எழுந்த வேட்டைவாளி, தன் காதடியைச் சுற்றி, நடுக் கூடத்தில் திரும்பி, முன் கதவு வழியாக வெளியே போவதைப் பார்த்திருந்தான். ஒரு புழுவைப் போல் சிறுத்துக் கொண்டு வரும் தன் குழந்தையை, வேட்டைவாளி தூக்கிச் சென்றுவிடுமோ எனப் பயந்தான். தன் குழந்தையை தூக்கிச் சென்று, தன் உமிழ் நீரைச் சுரந்து, கூட்டுக்குள் வைத்து, தன்னினமாக மாற்றி விடுமோ எனச் சினந்து வெகுண்டெழுந்தான். தரையின் தொடுகையில் சில்லிடும் தன் ஒற்றைக் காலை வலுவாக ஊன்றி, உணர்வற்ற தன் செயற்கை கட்டைக்காலை நிலத்தில் பதித்து, எழுந்து நின்று, தன் பார்வையை கூர்மையாக்கி, வேட்டைவாளிக் கூடுகளை ஆராயத் தொடங்கினான். கோலின் யன்னல் நிலைகள், உள் வீட்டுக் கதவு நிலைகள், சுவர் மூலைகள் என, களி மண்ணாலான வேட்டை வாளிக் கூடுகளை, நன்கு புலனாய்வு செய்து, திட்டமிடப்பட்ட முகாம் தகர்ப்பிற்கான உணர்வுடன் உடைக்கத் தொடங்கினான். உடைந்த முகாமின் களிமண் சிதிலங்களுக்குள் இருந்த, புழுக்களைப் பக்குவமாக எடுத்து, அவற்றிற்கு விடுதலை அளித்த உணர்வுடன் வெளியே விட்டான்.

மீண்டும் வந்து தொட்டிலைப் பார்த்தவன், தன் உடல் பதட்டத்துடன் தன்னிச்சையின்றி நடுங்குவதை உணர்ந்தான். தன் குழந்தையின் கை, கால்கள் சூம்பி, விரல்கள் அற்று, கூலமாகிக் கிடப்பதைப் பார்த்து, கடல் பேரலைக்குள் சிக்குண்டு மூச்சுத் திணறுவது போல் உணர்ந்தான். இவை எதுவும் உணராது தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையை, ஏக்கத்துடன் பார்த்து நின்றான்.

தன் செயற்கையான கட்டைக் காலை உதறி எறிந்து விட்டு, குழந்தையை மார்பில் அணைத்தபடி, உந்தி சுழன்றெழுந்து, ஓட்டைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிய்த்துக் கொண்டு பிரபஞ்ச வெளியில், தப்பித்த உணர்வுடன் மிதந்தான். பிரகாசமான வெளிச்சத்துடன், வேகமாக ஒளிர்ந்து கொண்டு போய், அணைந்து, மறைந்து போன, எரி நட்சத்திரத்தைக் காட்டினான். பிரமாண்டத்துடன் கூடிய கோள்களின் சுழற்சியையும், விண் கற்களின் பிரமாண்டத்தையும் காட்ட முனைந்தான். நீண்ட நேர புலன் இழப்புக்கு இடம் கொடுக்காத வேட்டைவாளியின் விதிர்விதிர்க்கும் இரைச்சலினால் அருவருப்பு உணர்வு கொண்டான்.

ஆள் அரவமற்று வீடு மௌனத்தில் உறைந்து கிடப்பதால், விதிர்விதிர்க்கும் இரைச்சல், எங்கிருந்து வருகின்றது எனக் கூர்ந்து அவதானிக்க முடிவதாக நினைத்தான். தனது படிப்பறையில் இருந்து, இரைச்சல் எழுவதை அடையாளப் படுத்தக் கூடியதாக இருப்பதை உணர்ந்தான். தன் பாரமான கட்டைக் காலை இழுத்து நகர்த்தி, ஓசை எழாது, கூடத்தில் இருந்து, படிப்பறை நோக்கித் தும்புத் தடியுடன், கிடைவாக்கில் சுவரில் 'கவர்' எடுத்தபடி, தான் யாருடையதோ கட்டளைக்கு கட்டுப்பட்டு நகர்வதைப் போல் உணர்ந்தான். புத்தக அலுமாரியின் பலகை இடுக்கில் பெரியதோர் செம்மண் கூட்டைக் கண்டு தடுமாறிப் போனான். தும்புத் தடியை இலக்கு நோக்கி உயர்த்தி, சிறிது நேரம் அமைதியாக நின்று பின், ஒரு தன்னியங்கித் துப்பாக்கியின் உதறலுக்கு இணையான வேகத்தில், தும்புத் தடியை இயக்கி, கூட்டை நொறுக்கித் தள்ளினான். பழைய காலத்து அலுமாரியின் குறுக்குப் பலகை, தனது இடியின் வேகத்தில் கழண்டு விழ, புத்தகங்கள் சிதறி நிலத்தில் விழுவதை கவலையுடன் பார்த்து நின்றான். கூட்டின் களி மண் ஓடுகளை, பக்குவமாகச் சிதைத்து, புழுக்களை பக்குவமாக வெளியே கொண்டு போய் விட்டான். கட்டைக் காலின் சுமையுடன் அலைந்து, களைத்துச் சோர்ந்து போய் தொட்டிலுக்கருகில் வந்தமர்ந்தான்.

தொட்டிலுக்குள் குழந்தையின் தோற்றத்தைப் பார்த்து, உடல் வலுவிழந்து துவண்டு போனான். சூம்பிய கைகளும், கால்களும், உடலுக்குள் செருகி, தலையும், உடலும் மட்டும் கொண்ட புழுவாக, தன் குழந்தை மாறிவிட்டதை இயலாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். இலையொன்றில் குழந்தையை கிடத்தி, பெரும் கானக வெளியில் மிதக்க விட்டு, தான் பின்னே மிதந்து போனான். பூக்களில் தேன் வாடை நுகரப் பழக்கினான். மெல்லிய காற்றின் ஓசையை செவிமடுக்கப் பழக்கினான். பெரும் மிருகங்களின் உறுமலை, பிளிறல்களை, பயமின்றிச் செவிமடுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் திசையறிந்து, விலத்தி நடக்கப் பழக்கிக் குழந்தையுடன் மிதந்தான். குருவிகளின் கீச்சிடல்களை ரசித்து, தனித்துவங்களை இனங்கண்டு, தரம் பிரிக்கும் ஆற்றலைக் கண்டடையக் கற்றுக் கொடுத்தான். நினைவற்ற நினைவில், தன் கண்களுக்குள் சாமி அறை நோக்கி இரைச்சல் எழாது போகும், அதிக காவி நிறம் கொண்ட வேட்டைவாளியின் பறத்தலைக் கண்டு நினைவு மீண்டான்.

ஆத்திரமும், அவமானமும் உந்த, ஆவேசமாய் மீண்டும் தும்புத் தடியைத் தூக்கி, சாமி அறை நோக்கி, எந்த வித நிலையெடுப்பும் செய்யாது முன்னேறினான். காளியின் படத்துக்கும், பிள்ளையின் நலத்துக்காக காஜீயார் ஓதிக் கொடுத்த ''அல்லா'' என்ற அரபு எழுத்துப் பதித்த படத்துக்கும் இடையில் வேட்டைவாளிக் கூட்டைக் கண்டான். சாமிப் படங்களை நோக்கி, தும்புத் தடியை நீட்ட சங்கடப்பட்ட போதும், கூட்டை தகர்க்க வேண்டும் என்ற ஆவேசத்தில் இடித்தான். பதட்டத்தில் இலக்குத் தவறிய கையால், சாமிப் படக் கண்ணாடிகள் நொருங்குண்டு, நிலத்தில் சிதறி விழுவதை ஏமாற்றத்துடன் பார்த்து நின்றான். விழுந்து நொறுங்கிய கண்ணாடிச் சட்டத்துக்குப் பின்னே, ஆயிரக் கணக்கான புழுக்களின் எச்சங்களும், வெண்ணிறச் செதில்களும் கிடப்பதைப் பார்த்து, உறைந்து போய் நின்றான். மீண்டும் இலக்குத் தவறாது, நிதானமாக வேட்டைவாளிக் கூடுகளைத் தகர்த்து, உட்கிடந்த புழுக்களை விடுவித்தான். மீண்டும் தொட்டில் அருகே ஸ்ரூலில் வந்தமர்ந்த போது, எது வித பிடிப்புமற்று, நம்பிக்கை இழந்து போயிருந்தான்.

முற்றாக முள்ளந் தண்டு எலும்பை இழந்து போயிருந்த குழந்தை, துண்டுதுண்டான, தசைக் கோர்வை கொண்ட, நெளியும் புழுவாக மாறிவிட்டிருப்பதைக் கண்டான். முற்றாக நம்பிக்கை இழந்து, துவண்டு சிந்திக்கும் ஆற்றல் அற்றுப் போன கணத்தில், வெளியே வேட்டைவாளிகளின் நிதானமான பறத்தல் ஓசையைக் கேட்டான். வேகமாக எழுந்து யன்னல்களையும், கதவுகளையும் மூடி, தன் குழந்தைக்காக தன்னை ஒடுக்கிக் கொண்டு, உள்ளே இருக்க முனைந்தான். வெளியே வேட்டைவாளிகளின் இரைச்சல் அதிகமாகிக் கொண்டு வருவதையும், யன்னல் கண்ணாடிகளில் ''நங்'' என்ற ஓசையுடன் முட்டி, இரையும் வேட்டைவாளிகளின் ஓசை, தன் மண்டையைக் குடைந்து, நிம்மதியை இழக்கப் பண்ணுவதையும் உணர்ந்தான். ஆவேசத்துடன் முன் கதவைத் திறந்து, தும்புத்தடியுடன் வெளியே பாய்ந்தான். வெளியில் ஆழமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசப்தம் உறைந்து போய்க் கிடந்ததால், நிலைகுலைந்து போனான். தாக்குதலுக்கான இலக்குகள் ஏதும் இல்லாததால், சுய நினைவற்று, காற்றில் தும்புத் தடியை நாலாபுறமும் வீசி, தன்னிச்சையின்றி சண்டை செய்தான். சோர்ந்து களைத்து நிலத்தில் வீழ்ந்தான். மீண்டும் வெளி ஆழமான நிசப்தத்தில் உறைந்து போனது. தன் மூச்சிறைப்பின் ஓசையையும் மீறி, காற்றில் அதிர்விரைச்சலை உணர்ந்தான். அயல் வீட்டின், வேலி ஓரக் கம்பிக் கட்டைப் பொந்தில் இருந்து, வேட்டைவாளிகள், எதுவித தளம்பலுமற்று, துப்பாக்கி சன்னத்தின் வேகத்துடன், இரைச்சலற்றுப் பிரதான வாயிலை நோக்கிப் பறந்து வருவதைக் கண்டான். தன்னை சுதாகரித்துக் கொண்டு எழ முன்னரே, அடுத்தடுத்துப் பல வேட்டைவாளிகள் அசுர வேகத்தில், வீட்டுக்குள் நுழைவதை கையாலாகாத தனத்துடன் பார்த்து நின்றான். தடுமாறி எழுந்து, மம்மலான இருள் பரவிக் கிடந்த கூடத்துக்குள் வந்தான். தொட்டிலுக்குள் புழுவாகி, உறங்கிக் கிடந்த குழந்தை காணாமல் போய் விட்டிருப்பதைக் கண்டு, திணறிப் போய் நின்றான்.

பச்சையும், காவி நிறமும், நீலமும் கலந்த நூற்றுக் கணக்கான வேட்டைவாளிகள், கதவு நிலையில் பெரிய கூடு ஒன்றை, தீவிரமாக களி மண்ணும், தமது உமிழ் நீரும் கொண்டு அமைப்பதைக் கண்டான். கூட்டுக்குள் திணிக்கப்பட்ட பெரிய புழுவொன்றின், வெண்ணிற அடிப்பகுதியை மூடி விடுவதற்கு, வேட்டைவாளிகள் வேகமாக இயங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். தம் உமிழ் நீரில், களி மண்ணை குழைத்து, கூட்டுக்குள் தன் புழுவாகிப் போன குழந்தையை வைத்து மூடுவதற்கு, வேட்டைவாளிகள் தீவிரமாக இயங்கிக் கொண்டிருப்பதை, இயலாமையுடன் பார்த்து நின்றான். முழுமையாகக் கூட்டை அமைத்த திருப்தியுடன், வேட்டைவாளிகள் பிரதான வாயில், யன்னல், ஏனைய கதவுகள் எனக் காவல் நிற்பதைப் பயத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான். கூட்டை இடித்தால், கூட்டுக்குள் இருக்கும், புழுவாகிப் போன தன் குழந்தைக்கும், தனக்கும் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சி, தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி நின்றான். பலவீனமான இதயத்துடன் புழுவாகத் தன் குழந்தை இறப்பதை விட, வேட்டைவாளி என்னும், இன்னோர் இனமாக உயிர் வாழட்டுமே என நினைத்தான். மூடுண்டு இருக்கும் கூட்டுக்குள் புழுக்கள் வேட்டைவாளியாக மாறும் வரை, சுவாசிக்கக் காற்றும், கூட்டுக்குள் உருமாற இடவசதியும் இருக்கும் என நம்பினான். கூட்டை யாரேனும் உடைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார்களோ என்ற அச்சம் தனக்குள் பற்றிப் படவர்வதை உணர்ந்தான். காவல் காக்கின்ற பொறுப்புணர்வு மிக்க கடமையை, தன்னியல்பாக ஏற்று, வேட்டைவாளிக் கூட்டைப் பாதுகாப்பது என, தனக்குத்தானே திட சங்கற்பம் கொண்டான். மீண்டும் காற்றில் விதிர்விதிர்ப்பின் அதிர்வை உணர்ந்தான். தன் தலையைச் சுற்றிக் கொண்டு போன வேட்டைவாளி, இடம் வலமாக, அதிக வேகமும் இல்லாது, மெதுவாகவும் இல்லாத வேகத்தில், கூட்டைச் சுற்றத் தொடங்குவதைக் கண்டான். இடம் வலமாகச் சுற்றும் வேட்டை வாளியின் இரைச்சலில், ''என்னைப் போல வா..., என்னைப் போல வா...'' என்ற, கூர்மையான ஒலி அதிர்வைக் கேட்டான். புழுவாகிக் கூட்டுக்குள், அணு அணுவாக வேட்டைவாளியாகி, கூட்டை பிரித்துக் கொண்டு வெளிவர இருக்கும் தன் குழந்தைக்காக, காலத்தைக் கரைத்துக் காத்து நின்றான்.

பிரசுரமாகாத படைப்பு - 2014

---

''வேட்டைவாளி'' சுயமான இனப்பெருக்க ஆற்றல் இல்லாத, குழவி வகையைச் சேர்ந்த இது, சூழலில் காணப்படும் சிறு புழுக்களைக் கொண்டு வந்து, தனது களிமண் கூட்டுக்குள் வைத்து, தன் உமிழ் நீரைச் சுரந்து மூடி விடும், பின் அப்புழுக்கள் வேட்டைவாளிக் குழவியாக, அச்சுரப்பிக் கூட்டைப் பிரித்துக் கொண்டு வெளி வரும், என்பது ஐதீகக் கதை. இவை தமது உடலில் காவி, நீலம், பச்சை என மூன்று நிறமும் கலந்து காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்னம்

காகத்தின் உக்கிரமான கத்துதலால், தன் தூக்கம் கெட்டுப் போன சினத்தில் கண் விழித்துப் பார்த்தார். விட்டத்தில் சீலிங் பேன் சுற்றிக் கொண்டிருந்த போதும், அறை புழுக்கமாகவும், வெடுக்கு நாற்றத்துடனும் இருப்பதை உணர்ந்தார். புண்ணாக நொந்து கொண்டிருக்கும் தன் உடலை வருத்தாது, தன் முழங்கைகளை முதுகுக்குப் பின்னே நிலத்தில் குத்தி தலையையும், முதுகுப் பகுதியையும், சற்று உயர்த்தி யன்னலோரம் பார்வையைப் போக விட்டார். யன்னல் ஓர மதில் சுவரில் இருந்து காகம் தன்னை கூர்ந்து பார்த்தபடி, தலையை கீழே பதித்து, அதன் கூரிய கரிய நிறச் சொண்டுகளைத் திறந்து கத்திக் கொண்டிருப்பதைக் கண்டார்.

வீதி ஒன்றில் அடிபட்ட நாயினதோ, பூனையினதோ, கீரிப் பிள்ளையினதோ, சிதைந்த உடலுக்குள் இருந்து காகங்கள் சதைத் துணுக்குகளைப் பிய்த்து உண்பதையும், குடலை வெளியே நீளமாக இழுத்து விட்டிருப்பதையும், பார்த்த நினைவுகள் அவருக்கு ஞாபகம் வந்தது. இடுப்புக்குக் கீழ் உணர்வற்ற தன் கால்கள், மருந்துகளும், தைலங்களும், போட்டுப் போட்டு உரோமங்கள் அற்று சொற சொறப்பாய் சூம்பி வருவதை, அனலாய்க் கொதித்து இடையறாது வலித்துக் கொண்டிருக்கும் தன் முதுகுப் பகுதியை, வில் போல் வளைத்துப் பார்த்தார். உணர்வற்ற கால் எலும்புகளில் இருந்து அழுகிப் பிய்ந்து கொண்டிருக்கும் தன் தசைத் துணுக்குகளை காகம் பிய்த்துத் தின்று விடுமோ எனப் பயந்தார். யூரினுக்காக வைக்கப் பட்டிருந்த "கடிட்டர்" பையிலும், அதன் டியுப்பிலும் தன்னுணர்வின்றி யூரின் வெளியேறி மஞ்சள் நிறத்தில் பொதும்பிக் கிடப்பதைக் கண்டார். மலசலத்தினதும், மருந்துகளினதும் நெடி எப்போதும் அறை முழுவதும் வெடுக்கு நாற்றமாக மாறி இருப்பதால், தனிப்பட்ட எதன் நெடியும் தன் நாசியை வீரியமாகத் தாக்குவதில்லை என நினைத்தார். தன் உடலின் கொதிப்பும், உள் புழுக்கமும், மதிய நேர அறைப் புழுக்கத்தை விட அதிகமாக இருப்பதால், தன் உடல் வியர்த்து பல நாட்கள் ஆகிவிட்டதை நினைவுபடுத்திப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று நான்கு காக்கைகள் மதிலில் இருந்து கொண்டு, தம் தலைகளை கீழே பதித்து மாறி மாறி இரைச்சலாகக் கத்துவதால், அருவருப்படைந்தார். தூங்கினால் காக்கைகள் தன் அழுகிய சதைத் துணுக்குகளை கொத்தத் தொடங்கி விடும் என்ற பயத்தில், தூங்காது விழித்திருப்பதென்று முடிவெடுத்தார். காக்கைகள் தொடர்ந்தும் தலையை கீழே பதித்துக் கத்திய வண்ணமே இருந்ததால், தன் உடல் பயத்தில் சிலிர்த்து விறைப்பதாக உணர்ந்தார்.

எச்சில் துப்பும் சிரட்டை மணலுடன் சுவர்ப் பக்கம் சாய்ந்து கிடப்பதைக் கண்டார். இத்துப் போன தன் இடுப்பை நகர்த்தி அதை எட்ட முடியாது என நினைத்ததால், அதை எடுக்கும் முயற்சியைக் கைவிடுவது என தீர்மானித்தார். தான் படுத்திருந்த சாக்குப் பைக்கு அருகில், காலையில் தான் குடித்துவிட்டு வைத்த டீ கப்பில், ஈக்கள் மொய்த்துக் கிடப்பதைக் கண்டார். டீ கப்பை தன் கை விரல்கள் பற்றிய போது, தன் கைகள் காலையில் நடுங்கியதை விட அதிகமாக நடுக்கம் கண்டு விட்டது போல் கவலை அடைந்தார். டீ கப்பின் எச்சிலை, காகங்களை நோக்கி வீச முனைந்து, தன் கைகள் தோற்றுப் போவதை தாங்க இயலாது தவித்தார். தன் கை நடுக்கத்தில் சிதறும் டீ மண்டி, தன்னிலும் சிதறுவதைக் கண்டார். கப்பை கீழே வைக்க சிரமப்பட வேண்டி இருப்பதால், டீ கப்பை பற்றித் தூக்கியதற்காக வருத்தப்பட்டார். காக்கைகளின் தொடர்ச்சி யானதும் அகோரமானதுமான கரையும் இரைச்சல், அவரை அதிகமாக பதட்டப்பட வைப்பதாக உணர்ந்தார்.

மீண்டும் இடப்பக்க முழங்கையை முதுகுக்குக் கீழே ஊன்றி, முதுகை வில்லாக வளைத்து ஒருபக்க சாய்வில் சவண்டு, நடுங்கும் தன் கைகளை சாரத்துக்குள் விட்டுத் துளாவினார். ஈரமாகவும், காய்ந்து போனது போலவும், மலம் தன் தொடைகளுக்கிடையில் நசிந்து கிடப்பதை உணர்ந்தார். தன் நடுங்கும் விரல்களை குவித்து தொடைக்குள் இருந்து மலத்தை வழித்து அள்ளி எடுத்தார். மலத்தின் நெடி நாசியில் லேசாக படிவது போல் உணர்ந்தார். யன்னலை நோக்கி தன் கையை பலம் கொண்டு விசிறிய போது, யன்னல் கம்பியிலும், அதைத் தாண்டியும் மலத் துணுக்குகள் சிதறி விழுவதைக் கண்டார். தன் தோள் மூட்டுக்களில் கடுமையான கடுப்பை உணர்ந்தார். உன்னி எழும்பிய காகம் யன்னல் கம்பியில் தொங்கிய மலத்தை கவ்விப் பறப்பதைக் கண்டார். திடுக்கிட்டு பதறிப் போன போது, தன் நெஞ்சுக்குள் வலி அதிகமாகி, மூச்சுத் திணறல் ஏற்பட்டு விட்டதை உணர்ந்தார்.

''என்றப்பா இவண்ட தொல்ல தாங்கேலாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் அறுத்த சட்டியுடன் அம்மாவின் மார்பளவுத் தோற்றம், யன்னல் கம்பிகளுக்குப் பின்னே மதில் சுவர் பின்னணியில் தெரிவதைக் கண்டார். நாசியில் இவ்வளவு நேரமும் இனங்காண முடியாதிருந்த நெடி, கணவாய் கழுவிய நெடி என்பதை உணர்ந்த போது திடுக்கிடும்படியான பயம் தன்னை கவ்வியதை உணர்ந்தார். தன் விரல்களை சாக்கில் துடைத்த போது, விரல்கள் சாக்கை விட்டு பிரிக்க முடியாதவாறு ஒட்டிக் கொண்டு விட்டது போல் சிரமப்பட்டார்.

''இப்ப உனக்கு என்ன அவசரம்? வயலால வந்து துப்பரவாக்குவேர் தானே?''

காக்கைகளின் இரைச்சல் குறைந்திருந்ததால் மீண்டும் தூங்கமுற்பட்டார். கொதிக்கும் தார் வீதிகளும், வயல் வரப்புக்களும் தன் கால்களுக்குக் கீழ் நகர்ந்து கொண்டிருக்க, தன் முழங்கால் உயரம் கூட வராத மின் கம்பங்களும், ஆல விருட்சங்களும், ஒடுங்கிக் கிடக்க உயர உயர நடந்து போவதான நினைவுச் சுழிக்குள் அமிழ்ந்து கிடந்தார்.

''தீசன் எழும்பு.''

திடுக்கிட்டு விழித்த போது, சுழலும் சீலிங் பேனுக்கு முன்னே, பழுத்துப் போன தலை முடியும், சேவ் எடுக்காத இரண்டு நாள் வெண்முற் தாடியும், அடர்ந்த வெண் மீசையுமாக, தந்தை தன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

'என்ன வேணும்?''

பழக்கப்பட்ட அதிகாரமான அந்தக் குரல் தன் முள்ளந்தண்டை சிலிர்க்க வைப்பதை உணர்ந்தார்.

''பு... ரு... டோ... ன்... ந... ஞ்... ச...''

தன் காதுகளைக் கூட எட்டாத துலக்கமற்ற முனகல் ஒலி, தன் வாய் எச்சிலுக்குள்ளேயே நசிந்து சிதைந்து போய்விட்டது போல் அவருக்குப்பட்டது வாய்க்குள் குமிழியாக வெடித்த எச்சில் கன்னத்தில் வழிந்து, கழுத்தடியில் ஊறி நிற்பதை உணர்ந்தார்.

''எழும்பு குளிப்பம்.''

நைந்து செத்துப் போன தன் மார்புத் தசைகளில், தந்தையின் வலுவான கரங்கள், நெஞ்சுக் கூட்டுடன் வலுவாக இறுக்கிப் பற்றுவதை உணர்ந்தார். யூரின் பொதும்பிக் கிடந்த ''கடிட்டரை''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் தந்து, தன் கால்கள் நிலத்தில் இழுபட, முதுகுப் பகுதியை, தந்தை தன் மார்புப் பகுதியுடன் அணைத்து இழுத்து வந்த போது, கால் தசைகள் பிய்ந்து சீமெந்து நிலத்துடன் ஒட்டிக் கொள்ளுமோ எனப் பயந்தார். அறைக் கதவு தாண்டி, கொரிடோர் தாண்டி, மதிலுக்கும் வீட்டுச் சுவருக்கும் இடையான குறுகிய சந்திற்குள், எதுவித பிரக்ஞையும் இன்றி படிகளில் எத்தி விழுந்து, துவண்டு வரும் தன் கால்களை சலனமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''கீழ வழுக்கிப் போகாம கதிரையில வடிவாச் சாஞ்சிரு. தண்ணி கலந்திற்று வாரன்.''

தன் உடலின் வலு முழுவதையும் திரட்டி, கால்களை உந்திப் பார்த்தார். யாருடையதோ கால்களை தன் உணர்வால் அசைக்க முற்படுவது போல், மணலினதோ, சிறு கற்களினதோ, உறுத்தல்கள் அற்றுக் கிடக்கும் கால்களை வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

வீட்டுக்கும், மதிலுக்கும் இடையான சந்து, தனக்கு முன்னே வேலிகளைப் பிய்த்துக் கொண்டு தார் வீதியாக நீள்வது போல் அவருக்குப்பட்டது. அதிகாலையின் குளிர்ந்த தார் வீதியின் சில்லிடலை உள்வாங்கி, தன் பாதங்கள் ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். வீதி ஓரங்களில் திரண்டு நிற்கும் சனங்களின் ஆரவாரத்துக்கு மத்தியில், தன் வலுவான தசைகளால் திரண்ட பாதங்கள், தார் வீதியில் உறுதியாகப் படிந்து, விரல் நுனிகளின் இரத்த நாளங்களில் அதிர்வை உள்வாங்கித் தெறிக்க, இலக்கை நோக்கி ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டார். தன் வலுவான ஓட்டம், மின் விசிறிகளாக, அயன் பொக்ஸ்ஸாக, கேடயமாக, சுவர்க் கடிகாரமாக தன்னைச் சூழ மிதந்து சுழன்று, பின் தரையில் விழுந்து நொறுங்கிப் போவது போல் அவருக்குப்பட்டது.

''அவன் வரப்புக் கட்டில மாட்டுக்குப் பின்னால ஓடுரவன். அவன முந்த இன்னொருத்தன் பிறந்துதான் வரவேணும்.''

யாரோ பரீட்சயமானவரின் குரல் வீரியமாக தன்னை பின் தொடர்ந்து வருவது போல் உணர்ந்தார். யாரோ நண்பர்கள் இருவர் பின்னே சைக்கிளை ஒருவன் மிதிக்க, மற்றவன் முன்னே பாறில் இருந்து பெடல் போட்டு வந்து, தன் தலையில் குளிர் நீரைக் கொட்டுவது போல் உணர்ந்தார். திடுக்கிட்டு உடல் கொடுகி மீள, தன் உச்சந்தலையில் கொட்டிய சூடான நீர் தலையில் கொட்டி, உடலில் சூட்டைப் படிய விட்டு பின் உணர்வுகளின்றி நிலத்தில் ஊறிப் போவதை உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாக உடலை வருத்தி வேலை செய்த பின், மாலைப் பொழுதுகளில் வென்னீர்க் குளியலின் சுகத்தை அனுபவித்திருந்த போதும், இன்று வென்னீர்க் குளியல் உடம்பை புண்ணாக வலிக்கச் செய்வதை உணர்ந்தார்.

உடல் வருத்தி உழைக்கும் வேலைகளில் லயித்து, தன்னை முற்றாக இழந்து போவதை நினைத்துப் பார்த்தார். மிக அதிகாலையிலேயே வயல் வரப்புக்களின் கலப்பை படாத மூலைகளைக் கொத்திப் பிரட்டுவதற்காக, இளஞ்சூடான சேற்றில் முழங்கால் வரை கால்கள் அமிழ்ந்து கிடக்க வயலுக்குள் நின்றிருந்தது ஞாபகம் வந்தது.

காட்டை அண்டிய அந்த வயல் பரப்பு தனக்கு மிகப் பிடித்தமானதாக இருந்ததை நினைத்துப் பார்த்தார். விதைப்பின் பின்னும், அறுவடை காலங்களிலும், புறாக் காவல், கிளிக் காவல், பன்றிக் காவல், எனத் தொல்லைகள் இருந்த போதும், வயலுக்கும் காட்டுக்கும் இடையான சமவெளியில் இருந்த, அதிக உயரமில்லாத தட்டையான சிறிய மலைத் தொடரும், சூழ இருந்த வெண்பஞ்சு மெத்தைக் கம்பளம் போன்ற கோரைப் புல் பூப்பரப்பும், தனக்கு மிக நெருக்கமானவை போல் உணர்ந்தார்.

வயல் வேலை செய்து, செய்து காய்த்துப் போன தந்தையின் வலுவான பெரிய கைகள், சோப்புடன் வழுக்கிச் சென்ற போதும், கைகளில் இருந்த காய்ப்புக்கள், தன் உடலில் கீறிக் காயப்படுத்துவது போல் உணர்ந்தார். தந்தையின் வலுவான கைகள் தன் கால்களில் சோப்பு நுரையுடன் வலுவாக இயங்கிக் கொண்டிருந்த போதும், தன் கால்கள் எதுவித உணர்வுமற்றும், காயங்களில் சோப் படும் போது எரிவுமற்றும், கிடப்பதை உணர்ந்தார்.

மூலை கொத்துவதில் தன்னை மறந்து இயங்கிக் கொண்டிருந்த போதுதான், தனக்கு மிக அருகில் விலங்கின் அசைவைப் போன்றதொரு அசைவை, முதலில் தான் உணர்ந்ததை நினைவு படுத்திப் பார்த்தார். திடுக்கிட்டு திரும்பிய போது, முதலில் துப்பாக்கி முனையையும், பின் தடித்த காக்கி யூனிபோமுடனும், கறுத்து வன்மங்கொண்ட முகத்துடனும், தலையில் ஆமை ஓட்டைப் போல் உருக்குச் சட்டியை கவிழ்த்திருந்த ராணுவச் சிப்பாயை நெருக்கமாகக் கண்டதை நினைவு கொண்டார். திணறிப் பின் வாங்கிய போது, தன்னைச் சூழ ஆயுதங்களுடன் ராணுவத்தினரும், தன்னைப் போல் வெயிலுக்குப் பயந்து அதிகாலையிலேயே வயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளுக்கு வந்திருந்த, இடுப்பில் சாரன் துண்டும், முகத்தில் பிணத்தின் சாயலும் கொண்ட நண்பர்களும், உறவினர்களாக இருந்தவர்களும், நிற்பதைக் கண்டதை நினைவுபடுத்திக் கொண்டார்.

தம்மை நடமாடும் காப்பரண்களாக முன்னே நகர விட்டு, ராணுவம் பின்னே காட்டுக்குள் ஊடுருவத் தொடங்கிய போது, நெருப்பில் நடப்பதான ஒரு உணர்வில், மற்ற எட்டுப் பேருடன் தானும் நகர்ந்து போனதை நினைவு கூர்ந்து பார்த்தார். முதலில் அவர்கள் காட்டுக்குள் ஆழ ஊடுருவாது விளிம்போரம் நகர்வதும், பின் குந்தி இருக்குமாறு கூறி, ராணுவத்தினர் நிலையெடுப்பதுமாக நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்ததை நினைவுபடுத்திப் பார்த்தார். ராணுவம் காட்டுக்குள் ஊடுருவத் தொடங்கிய போது, தன் கால்களில் ஒட்டியிருந்த சேறு காய்ந்து காலுடன் இறுக்கி வலிக்கத் தொடங்கி இருந்தது ஞாபகம் வந்தது. பயம் குறைந்திருந்த ஒரு கணத்தில் பள்ளமும், திடலுமான இடத்தை நெருங்கி இருந்தது நினைவில் வந்தது. பின்னால் எதுவித ஊடாட்டமும் இல்லாது இருக்கின்ற உணர்வில் திரும்பிப் பார்த்த போது, நின்று கொண்டிருக்கும் தம்மைத் தவிர வேறுயாருமற்று காடு நிசப்தமாக இருந்ததை மகிழ்ச்சியாக எதிர் கொண்ட போதும், நிலத்தோடு நிலமாக பற்றைகளுக்குள்ளும், மரங்களுக்குப் பின்னும் ராணுவம் நிலையெடுப்புச் செய்திருந்ததைக் கண்ட போதுதான், தாம் ஏதோ பொறிக்குள் சிக்குண்டு இருப்பதை உணர்ந்த கணம், பள்ளத்துக்குள் தடித்த கித்தான்களால் ஆன திறந்த கூடாரத்தை கண்டு பதகளித்து நின்றதை நினைவுக்குள் கொண்டு வந்தார். எதிர்த் திசையில் இருந்து வரும் ஒரு வேட்டோசை தம் உடல்களை சல்லடையாக்கப் போதுமானதாக இருக்கும் என நினைத்த போதும், கூடாரம் வெறுமையாக இருந்ததுடன், எதிர் தாக்குதல்கள் ஏதும் இடம் பெறாததால், தாம் சற்று நிம்மதியடைந்த போதும், தொடர்ந்தும் பயம் தம்மைக் கவ்வி இருந்ததை நினைவு படுத்திக் கொண்டார்.

முரட்டுத்தனமான துவாயின் மொரமொரப்பு தலையைத் துவட்டும் போது, தலை சூடாவதுடன், தன் தலை முடிகளை கற்றையாக பிய்த்துக் கொண்டு வந்து விடுமோ எனப் பயந்தார். தோளில் துவண்டு கிடக்கும் துவாய் கூட தனக்கு சுமையாக இருப்பதாகக் கருதினார். மதிய குளிப்பிற்குப் பின் உடல் லேசாகவும், சுகமாகவும் இருப்பதாக அவருக்குப்பட்டது.

அந்த கூடாரத்தை நெருங்கிய போது ராணுவம் சுற்றிவளைக்காது ஒரு பக்கமாக ஒதுங்கி நிலத்துடன் கிடையாக நிலையெடுப்புச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டு, தம்மை கூடாரத்துக்குள் போகுமாறு சைகை செய்ததை நினைவுபடுத்திப் பார்த்தார். கூடாரத்துக்குள் போன போது உணவுப் பொருட்களும், உடைகளும் மட்டும் சிதறிக் கிடந்ததையும், ஆயுதங்களோ, வெடி பொருட்களோ, எதுவும் இல்லாதிருந்ததை மற்றவர்களுடன் தானும் கண்டதை நினைவு கொண்டார். பொறி வெடியொன்றோ, கிளிப் கழட்டப்பட்டு பாரமேற்றப்பட்ட கிரினெட் ஒன்றோ, தம் உடல் சிதறிப் போகும் அளவுக்கு, பாரிய சத்தத்துடன் வெடிப்பதான அச்சத்துடனேயே, தாம் அந்தக் கூடாரத்தை ராணுவத்தின் கட்டளைக்குப் பணிந்து கிண்டிக் கிளறியதை நினைவு கூர்ந்தார்.

சற்று முன்தான் அவர்கள் அங்கிருந்து நகர்ந்திருக்க வேண்டும், அல்லது ராணுவத்துடன் சேர்ந்து தாமும் சுற்றிவளைக்கப் பட்டிருக்க வேண்டும் என்று தான் நினைத்து பார்த்தபோது, தன் உடலும், வேறு யாருடையதோ உடல்களும், எரியும் தீப்பிழம்புகளுக்குள், உயிருடன் அவதிப்பட்டு கருகுவது போன்ற உணர்வில் தத்தளித்து நின்றதை நினைத்துப் பார்த்தார். தம்மை காப்பாற்றுவதற்காகவோ அல்லது அவர்கள் குறைவாக இருந்ததாலோ, எதிர் தாக்குதல் ஏதும் செய்யாது பின் வாங்கி இருக்கவேண்டும் என எண்ணியதை நினைவுபடுத்திக் கொண்டார்.

கூடாரத்துக்குள் எதுவும் இல்லை என்பதை தாம் சைகை மூலம் ராணுவத்துக்கு தெரிவித்த பின்தான், அவர்களில் சிலர் எழுந்து துப்பாக்கி முனையை தம்மை நோக்கி குறிபார்த்தபடி நெருங்கி வந்ததை, தாங்கள் உதறலுடன் பார்த்துக் கொண்டிருந்ததை நினைவு கொண்டார். நெருங்கி வந்த ராணுவம் பச்சையும், மஞ்சள் நிறமும் கலந்த சில காக்கி பெனியன்களையும், டவுசர்களையும் தம்மை நோக்கி வீசி, அணிந்து கொள்ளுமாறு அதட்டிய போதுதான், தாங்கள் பயங்கரவாதிகளாக்கப்பட்டுக் கொண்டிருப்பதை பதட்டத்துடன் நினைத்ததை நினைவு கூர்ந்தார். அப்படியானதொரு கணத்தில் தான் கால்கள் பறபறக்கத் தொடங்கியது ஞாபகம் வந்தது. சும்மா சூடு வாங்கிச் சாவதை விட, ஓடிச் சாவது என முடிவெடுத்த கணம், சிலர் குனிந்து சீருடையை எடுக்க, தன் கால்கள் அதற்கே உரிய வீச்சுடன் இயங்க, எகிறி பற்றைகளைத் தாண்டி குதித்து ஓடத் தொடங்கியதை நினைவு படுத்திப் பார்த்தார்.

சில நிமிடங்கள் எந்த ஓசையும் கேட்கவில்லை. தான் ஓடியது பிழையோ என நினைத்துப் பார்க்க தனக்கு நேரம் கிடைத்த அளவுக்கு காடு அமைதியாக இருந்தது ஞாபகம் வந்தது. தான் புதர் ஒன்றைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டி கடந்து, மரத்தில் மோதி இடறி ஓடிக் கொண்டிருந்த போது முதலாவது வேட்டோசை, காட்டிற்குள் அதன் எதிரொலிப்புடன் கேட்டது ஞாபகம் வந்தது. தொடர்ந்து துப்பாக்கிகள் நெருப்புப் பொறிகளையும், சன்னங்களையும், வெற்றுத் தோட்டாக்களையும், வேட்டோசைகளையும், துப்பத் தொடங்கியதை நினைவுக்குக் கொண்டுவர முற்பட்டார். விண் கூவும் ஓசையுடன் தன்னை தாண்டிப் போன சன்னங்கள் மரப்பட்டைகளை பெயர்க்கும் ஓசையையும், மணல்களை வாரி இறைப்பதையும் கண்டதை நினைத்துப் பார்த்தார். பயத்திலும், பதட்டத்திலும், இலக்கற்ற ஓட்டத்தின் தடுமாற்றமும், தன் ஓட்ட வேகத்தை மந்தப்படுத்துவதாக நினைத்த கணம், தான் ஓடும் திசையை இலக்கு வைத்து துப்பாக்கிகள் வேட்டுக்களைத் தீர்க்கின்ற ஓசை நினைவுக்குள் வந்து வந்து போனது. நிலத்தில் விழுந்து படுக்கலாம் என நினைத்த போது தனக்குப் பின்னே மிக நெருக்கமாக யாரோ நின்று கொண்டு, இரும்புக் கம்பியால் இடுப்பில் ஓங்கி அடித்தது போன்று இருந்த கணம் தன்னுணர்வின்றி தூக்கி வீசப்பட்டு, ஆளுயரக் கோரைப் புற்களுக்குள் வீழ்ந்ததை நினைத்துப் பார்த்தார். தனக்குப் பின்னே யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, மீண்டும் திசையற்று காட்டிற்குள் ஓடியதை நினைவுபடுத்திப் பார்த்தார். தன் கால்களும், உடலும் பலம் இழந்து துவழ்வது போல் இருந்த போதும், தப்பித்தலுக்கான முனைப்பில் ஓடிக் கொண்டிருந்த போது, தன் இடுப்புப் பகுதியில் இருந்து வழிந்த இரத்தம் தன் மலவாசல் கடந்து தொடைக்குள் கசிவதை உணர்ந்ததை நினைத்துப் பார்த்தார். தனக்கு வெடிப் பட்டிருக்க வேண்டும் என உணர்ந்த போது, தூரத்தில் வேட்டோசைகள் கேட்டுக் கொண்டிருந்தது ஞாபகத்தில் படிந்து நின்றது. தான் காட்டை விட்டு வெளிப்பட்ட இடம் உப்பளத்தை அண்டிய கரைச்சி வெட்டை என்பதை இனங்கண்டு, உப்பளத்துக்குப் போகும் பாதையை இலக்கு வைத்து ஓடியதும், பின் நினைவிழந்து போனதும் ஞாபகத்தில் வந்தது. தனக்கு நினைவு வந்த போது, சாக்கில் சுற்றப்பட்டு, விறகு ஏற்றிய வண்டில் ஒன்றில் சென்று கொண்டிருந்ததும், மீண்டும் தான் நினைவிழந்து போனதையும் நினைத்துப் பார்த்தார்.

திரும்பவும் தந்தையின் வலுவான கரங்கள் தன் மார்புக் கூட்டுடன் இறுகப் பற்றி, அவரது மார்புடன் முதுகை அணைத்துத் தூக்க, துவண்டு போன கால்களையும், யூரின் வெளியேற்றப்பட்ட ''கடிட்டரை''யும் அம்மா தூக்க, கொரிடோருக்குள்ளால், அறைக்குள் வந்த போது, அறை முழுவதும் ஆஸ்பத்திரி எரி தண்ணியின் நெடி பரவி இருந்ததை உணர்ந்தார். சாக்கு விரிப்பு ஈரமற்று உலர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடப்பது, தனக்கு மேலும் சுகத்தைத் தருவது போல் உணர்ந்தார். சுவருடன் முதுகு அண்டி இருந்த போதும், தன் உடல் துவழ்வதால், தன் இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தன் உடலை சுவருடன் சாத்தி சமநிலையில் இருக்க முனைந்தார். தந்தையின் நடுங்காத விரல்கள், திடமாக கரண்டியைப் பற்றி தனக்கு உணவூட்டுவதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். தன் பிரதிமையை கண்ணாடியில் பார்ப்பது போன்ற உணர்வில், தந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தார். தந்தைக்கும், தனக்கும் பின் தம் பிரதிமைகள் இவ்வுலகில் இருந்து மறைந்து விடும் என்று எண்ணிய போது கண்கள் பனித்ததால், தன் பார்வையை யன்னல் பக்கம் திருப்பினார்.

பயங்கரவாதிகளின் இடைத்தங்கல் முகாமை ராணுவம் முற்றுகையிட்டுத் தாக்கியதில் ஐந்து பயங்கரவாதிகள் கொல்லப் பட்டதாகவும், மேலும் பலர் கொல்லப்பட்டும், காயமடைந்தும் இருக்கலாம் என "லங்கா புவத்தை" மேற்கோள் காட்டி B.B.C அறிவித்திருந்ததாக கேள்விப்பட்டபோது தன்னுடன் மூன்று பேர் தப்பி இருக்கலாம், அல்லது உயிருடன் ராணுவம் கொண்டு போயிருக்கலாம், என நினைத்துப் பார்த்தது அவருக்கு ஞாபகம் வந்தது.

"நீ ஓடத் தொடங்கினதப் பார்த்து பின்னுக்கு நிண்ட நானும், சிவாவும், மூர்த்தியும், கொஞ்சத் தூரம் காட்டுக்க ஓடி, வெடி எழும்ப, பள்ளத்துக்க கிடந்த பிரப்பம் பத்தைக்க, முள்ளு கிழிக்கக் கிழிக்க பூந்து படுத்திட்டம் ஆமி கலஞ்சாப் பிறகு, வெளில வந்து, மூண்டு நாளா அன்னந் தண்ணி இல்லாம காட்டுக்க அலைஞ்சு திரிஞ்சு, சலப்பையாற்றுப் பக்கமா வெளிப்பட்டம்."

மிக நீண்ட நாட்களுக்குப் பின் தன்னைப் பார்க்க வந்த மாணிக்கண்ணன் சொன்ன போது, அந்தச் சம்பவத்தில் இறந்து போன அவரது மைத்துனனும் தன் நண்பனுமாகிய விக்கி, நினைவில் வந்து தன்னை வேதனைப்படுத்தியதை நினைத்துப் பார்த்தார்.

முள்ளந்தண்டின் ஓரமாகத் தங்கிக் கொண்ட சன்னம் வெளியில் எடுக்க முடியாது எப்போதும் உறுத்திக் கொண்டும், பழுத்து வெட்டி சிதலை வெளியே எடுக்கும் வரை வலித்துக் கொண்டும் இருந்த போதும், தன்னை சில காலம் நடமாட விட்டதை நினைத்துப் பார்த்தார். நாட்கள் செல்லச் செல்ல விறைக்கத் தொடங்கிய கால்கள், தள்ளாடி இடறிக் குப்புற விழ வைத்ததையும், பின் ஒரேயடியாக தன்னை படுக்கையில் போட்டு விட்டதையும், நினைத்த போது கலங்கி இருந்த கண்கள் குளமாகி கண்ணீர் கன்னத்தில் வழிவதை உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாயுடன் கண்ணீரையும் துடைக்கும் தந்தையின் கை விரல்களை கண்களுக்கு மிக நெருக்கமாகக் கண்டார். மீண்டும் தன்னை நகர்த்தி படுக்க விட்ட தந்தை சாப்பாட்டுத் தட்டுக்களுடன் வாசல் படி தாண்டி வெளியே போவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தன் சுமையான பாதி உடம்பில் அசதி வேகமாகப் பரவி தூங்க வைக்க முனைவதை உணர்ந்தார். அதிகாலையின் மிக மெல்லிய பனிமூட்டம் போன்று வயல் வெளி எங்கும் புகார் படர்ந்திருப்பது போன்ற நினைவு தழுவக் கிடந்தார். தன் கால்கள் வரப்பில் தன் உடலைச் சுமந்து ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டார். தன்னை பின்புறமாக வெளியே துப்பிய தன் உடல், தனக்கு முன்னே ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டார். தன் உடல் தூரமாக ஓடிக் கொண்டிருந்த போது வெயிலில் பனி மூட்டம் கரையத் தொடங்கியதைக் கண்டார். தன் கால்களில் இருந்து பிய்ந்து வரப்பெங்கும் சிதறிக் கிடந்த தசைத் துணுக்குகளைக் கொத்த, வெளிர் நீல வானம் எங்கும் காக்கைக் கூட்டம் இரைச்சலுடன் மிதப்பதைக் கண்டார். தன் எலும்புக் கூட்டுக் கால்களுக்கு மேல் இருந்த பாதி உடம்பு தொடங்கும் இடத்தில், முள்ளந் தண்டுக்கு மிக அருகில், வெயிலின் ஒளிர்வில் பித்தளைச் சன்னம் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். ஓடிக் கொண்டிருக்கும் தன் உடல், அடிவானும், காடும் சங்கமிக்கும் இடத்தில் கரைந்து போவதைக் கண்டார்.

மறுகா (இலங்கை) - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்புதல்

அடர்த்தியான கரும்புகையைக் கக்கி, தன்னை மூச்சுத்திணற வைத்து நகரும் பஸ்சுக்குப் பின்னே நடந்து, பின் தங்கி, வலது கையால் புகையைக் கலைத்து நின்றாள். பஸ்சை விட்டு இறங்கிய போது, தன் உடல் வியர்வையில் அணிந்திருந்த மெல்லிய நைலெக்ஸ் துணிச் சுடிதார் உடலுடன் ஒட்டி, தன் உடலை அருவருப்பாக வெளிப்படுத்துவதற்காக கவலைப்பட்டாள். தன் மீது கவிழ்ந்திருந்தவனின் தடித்த உதட்டிலும், அடர்ந்த மீசையிலும், வீசிய வடிசாரயத்தின் நெடி, தன் உடல் மீதும் படிந்து விட்டது போல் சினமடைந்தாள். போக்கு வெயிலுடன் அனல் காற்று முகத்தில் அறைந்து தாக்கி தன் நினைவுகளில் படிந்திருந்த அடையாளங்களின் மீது கவனத்தை குவிக்க முடியாது சிதறடிப்பதாக கருதினாள். எப்போதும் தன் இருப்பை உணர்த்திக் கொண்டே இருக்கும் இடப்பக்க ஒற்றைத் தலை வலி விண்டுவிண்டு வலிக்கத் தொடங்கியதை உணர்ந்தாள். உரப்பையாலான தன் இடது கமக்கட்டுக்குள் நசிந்திருந்த பயணப் பை, தன் சமூகத்தையும், தன்னையும் பழைமையானதொரு காலத்தில் உலாவ விட்டிருப்பதற்காக வருத்தப்பட்டாள். தன் வெண்ணிற துப்பட்டாவின் ஒரு அந்தத்தினால் தன் இடது கையைச் சுற்றி மறைத்து, மற்ற அந்தத்ததை கழுத்தில் மாலை போல் சுற்றிப் போட்டுக் கொண்டாள். தனக்குப் பரீட்சயமான அகலமற்ற குண்டும் குழியுமான, வெண்மணல் பரப்போடு படிந்த வீதியாக அது இல்லாதிருப்பது இனம் புரியாத தவிப்பை ஏற்படுத்துவதாக நினைத்தாள். வெண்மணல் பரப்பில் இருந்து உயரமாகவும், தெளிவான வெண்நிற நீளக் கோட்டுடன், அகலமாகவும் இருந்த தார் வீதியில் அன்னியப் பட்டு, பாதுகாப்பின்றி தனிமையில் நிற்பதற்காக வேதனைப்பட்டாள். சன நெரிசலாலும், நீண்ட நாட்களுக்குப் பின் வருகின்ற பதட்டத்தாலும், இரண்டு பஸ் கோல்ட் முன்னதாகவே இறங்கி விட்டதை அடையாளங்கண்டு கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் நெற்றிப்புருவத்திற்கு நேர் எதிரே சுட்டெரிக்கும் சூரியன், கலங்கி இருந்த விழிக்குள் வர்ணக் குமிழிகளாக சிதைந்து கரைய, கூச்ச உணர்வுடன் தலை குனிந்து நின்றாள். உயரமான மின்கம்பத்தின் நிழல் தன்னைப் போல் கூனி, சவண்டு பள்ளத்தினுள்ளேயே குறுகிக்கிடப்பதாக அவளுக்குப்பட்டது. யாருடையதோ அளவுக்கு வாங்கிய, தன் வியர்வையால், உடலுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் சுடிதாரினால் அசௌகரியப் பட்டு நின்றாள். நைந்து போன வடிவம் கொண்ட, கத்தரிப் பூ நிறத்தில் கறுத்தப் பொட்டுக்கள் நிறைந்த, யாருடையதோ விருப்பத்துக்கு வாங்கிய, தான் அணிந்திருக்கும் உடையின் மீது அருவருப்புக் கொண்டாள். புனர்வாழ்வு முகாமின் சீமெந்து தரையில் உரப்பையில் கொண்டு வந்து கொட்டிய துணிக் குவியல்களில், மற்றவர்கள் பொறுக்கிய பின், தனக்கு அளவாக இருக்கும் என நினைத்து எடுத்து வைத்தது அவளுக்கு ஞாபகம் வந்தது. ஈச்சம் புதர் ஓரமாக வெளிப்பட்ட வெள்ளாடொன்று தன்னைக் கண்டு திரும்பவும் புதருக்குள் மறைந்து போவதைப் பார்த்தாள்.

தன்னை அருவருப்படையச் செய்யும் உணர்வுகளுடன், கிறவல் ஒழுங்கையால் செல்லாது, சுண்ணாம்புச் சூளை ஓரமாகப் போகும் ஒற்றையடி மணல் பாதையில் போவதென்ற நினைவுடன் நகரத் தொடங்கினாள். நாய்க்களியால் செங்கற்கள் வெளித் தெரியக் கிணறு போல் கட்டிய சூளையின் விளிம்பில் சாம்பலும் கரியும் படிந்து கிடக்க, உமி வெக்கையில் வெந்து கொண்டிருக்கும் சிப்பியின் வெண்மை நினைவில் படிய நடந்தாள். புகை படிந்து, கறள் கட்டிப் போன சுண்ணாம்புச் சூளை கூர்முகட்டில் இருந்து துகள்கள் சிதறிப் பறப்பதான நினைவு உந்த, சுண்ணாம்புச் சூளையை நெருங்கி நின்றாள். சுட்ட சிப்பியின் அவிந்த மணம் நாசியில் கனதியாகப் படிய, பனை மட்டை வரிந்த சுண்ணாம்புச் சூளை வேலி ஓர, ஒற்றையடி மணல் பாதையை நோக்கி, தார் வீதியில் இருந்து, தாழ்வாக இறங்கி ஓடினாள்.

வெயிலின் தகிப்பை தவிர்ப்பதற்கு மரமுந்திரிக்குக் கீழால் செல்வதற்கு தன் எண்ணம் உந்துவதை உணர்ந்தாள். மரமுந்திரியின் கெந்துகள், கொடியைப் போல் சவண்டு வெண்மணல் பரப்பில் பச்சைக் கூடாரம் போல் குவிந்து கிடப்பதாக நினைத்து நடந்தாள். காயான் பற்றைகளும், சப்பாத்திக் கள்ளியும், விடத்தல் முள்பற்றைகளும் நிறைந்த, இலக்கற்ற பாதையில் வளைந்து வளைந்து, நேர் எதிரே முகத்தைச் சுட்டெரிக்கும் வெயிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதால், தான் அதிகம் களைப்படைந்து விட்டதை உணர்ந்தாள். மீண்டும் தன் ஒற்றைத் தலை வலி தன் இருப்பை காட்டத் தொடங்கியது. தன் இடப்பக்கத் தலைக்குள் இருக்கும் எறிகணைத் துண்டு சூடாகி, முகம் முழுவதும் சூடு பரவி வருவது போல் உணர்ந்தாள். தன் தட்டையான செருப்பு மணலுக்குள் புதையும் போது, கால்கள் சுள்ளிட்டு எரிவதை உள்வாங்கி நடையை வேகப் படுத்தினாள்.

தென்னை மரத்தின் அரைவாசி உயரத்துக்குக் கிடந்த, கைவிடப்பட்ட வெற்றிலைத் தோட்ட மணல் பிட்டியின் உச்சி விளிம்பில், அதன் பக்க அடைப்புக்கு நட்ட பனை முருங்கையின் உச்சியில் இருந்த பசிய துளிர்கள், தனக்கு ஏதோ நம்பிக்கையை தருவதாக நினைத்தாள். சிதைந்து கிடந்த மணல் பிட்டியின் சாய்வில் தன் தந்தையின் வியர்வைத் துளிகளையும், நம்பிக்கை களையும் தேடுவது போல் முதுகை கூனிய படி ஏறினாள். செருப்புக்கும் தன் கால்களுக்கிடையிலும் உந்திச் சிதறும் மணல்கள், கழுத்தடியில் விழுந்து, சட்டைக்குள் கொட்டுண்டு, வியர்வையில் ஒட்டி உறுத்துவதால் எரிச்சலடைந்தாள்.

மணல் பிட்டியின் உச்சி விளிம்பில் ஒரு காலும், சாய்வில் ஒரு காலுமாக நின்று, தான் என்றோ தொலைத்து விட்டுப் போன எதோ ஒன்று பின்னே கிடப்பதான உணர்வில் திரும்பிப் பார்த்து நின்றாள். கொஞ்ச நீருக்குள் அடர்த்தியாக கரும்பாசியும், பன்புற்களும் மண்டிய துரவு, தான் நிற்கும் மணல் பிட்டியில் இருந்து தூரமாகப் போய்விட்டது போல் அவளுக்குப் பட்டது. தன் அப்பா இந்த மணல் பிட்டியில் வெற்றிலைத் தோட்டம் வைத்திருந்த போது, துரவு அதிக தண்ணியுடன் பெரிதாகவும், தோட்ட அடைப்புக்கு நெருக்கமாகவும் இருந்தது, அவள் நினைவுகளில் பசிய துளிர்களுடன் படிந்து மறைந்தது. கரிய வற்றிப் போன உடலில் கச்சைத் துண்டுடன், பெரிய மண் குடம் சுமந்து தந்தை துரவில் நீர் மொண்டு, மணலில் கால் புதைய தோட்டப் பிட்டியில் ஏறுவது துரவு நீரில், விம்பம் போல் அவள் நினைவில் படிந்து, நீர்க்- குமிழி அலையில், அழிவது போல் அழிந்தும் போனது. நீண்ட பச்சை நிறக் காய்கள் தொங்கும் வாகை மரத்தின் அடியில், தம்பியும், தானும் சுட்ட மரவள்ளிக் கிழங்கின் சூட்டை கை உணர, பிய்த்து உண்பது போல், விறகுக்குக் கொத்திய வாகையின் அடிக்கட்டை வெதும்பிக் கொண்டிருக்கும் வெம்புமணலின் கானல் நீரில் சலனமாக உருக் கொள்ளக் கண்டாள். தமக்கு உணவாக, பாடப் புத்தகங்களாக இருந்த பசிய நிற வெற்றிலைக் கொடிகள் அலம்பல்களில் அசைந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரியமான அனல் காற்றை தன் மீது உமிழ்ந்து தன்னை நிலை குலையச் செய்வது போல் தள்ளாடி நின்றாள். ஒவ்வொரு முறை கொடி பதிக்கும் போதும், மணலும், சாணமும், வியர்வையும் கலந்து, கடகத்தில் அப்பா மண் சுமந்து கொட்டிய மணல் பிட்டி இது என்ற நினைவு, தன் இடது கையைப் போல், கால்களும் பலம் இழந்து துவழ்வது போல் அவளுக்குப்பட்டது.

கொதிக்கும் சுடு மணல் பிட்டியின் மையத்தில் வந்து, தன் பார்வையை குடியிருப்புக்கள் இருந்த பக்கமாக தூரப் போக விட்டாள். வெண்மணல் திட்டுக்களும், புதர்களும், பசுமையற்ற தடித்த இலைகளைக் கொண்ட மரமுந்திரிகைகளுக்குமிடையே, சிகப்பு ஓடுகளில், வெள்ளை நிறத்தில் நிறுவனங்களின் பெயர் பொறித்த உயரமில்லாத கல் வீடுகள், தூரமொன்றாய்க் கிடப்பதைக் கண்டாள். தான் இயக்கத்துக்குப் போகும் போது இருந்த தகரம் பாதியும், ஓலை பாதியுமாகக் கிடந்த கூர் முகட்டுக் குடில்கள் முற்றாக மறைந்து விட்டதைக் கண்டாள். அலை அலையாய் அடிக்கும் அனல் காற்றையும் தாண்டி, பார்வையை தன் குடில் இருந்த பக்கம் கூர்மைப் படுத்தினாள். வெண்ணிறத்தில், நீல நிறப் பெயின்றால் ''யுனிசெப்'' எனப் பொறிக்கப்பட்டு உயரமாகக் கட்டியிருந்த படங்கிற்குக் கீழ், ஒடுங்கிக்கிடந்த, நிறுவனம் கட்டிக் கொடுத்த சிறிய ஓட்டு வீடுதான் தங்களுடையது என்பதை உறுதிப் படுத்திக் கொண்டாள். தன் பார்வையை, வெய்யிலின் தகிப்பையும் மீறிக் கூர்மைப் படுத்தினாள். படங்கிற்குள்ளும், வீட்டிற்கு வெளியே, வீட்டின் தாழ்வாரத்தை விட உயரமானவர்கள், வெள்ளை உடையுடன் நடமாடுவதை தன் விழிகள் கிரகித்து விட்டதை உணர்ந்தாள். சவம் எடுப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறும் நெருக்கமான காட்சிகளில், துலக்கமற்ற உறவின் முகங்கள் நினைவில் வந்து போவதை தன் கலங்கிய விழிகளுக்குள் கண்டாள்.

செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக வந்த தம்பியின் மரணச் செய்திதான், தன் விடுதலைக்குக் காரணமாகிப் போனதை நினைத்து துக்கப்படுவதா, மகிழ்வதா என்று புரியாது புறப்பட்டு வந்ததை நினைவுபடுத்திப் பார்த்தாள்.

''ஆரோ கல்வி அதிகாரியிண்ட பொட்டைய கெம்பசுக்க விரும்பி இருக்கிறான். பொட்டையிட தகப்பன் கெம்பசுக்க. புள்ளயளுக்க வைச்சு அறைஞ்சிருக்கான். அண்டிரவே மரத்தில் தூக்கு மாட்டிற்றான். மூண்டு நாளைக்கு வைச்சுப் பாக்கிறோம். விட்டா வந்து கடைசியா அவன்ட முகத்தப் பார்.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சிலுவைச் சங்கத்துடன் வந்த கோவிந்தன் மாமாதான் சொல்லிவிட்டுப் போயிருந்தார்.

அப்பாவைப் போல் வெள்ளாந்தியாய் தன் மீது பாசம் வைத்திருந்த பரிசாரக் கிழவர் தான் பிணைக்கு ஒப்பமிட்டு, பஸ் ஏற்றி விட்டதை, அவரது வெற்றிலை குதம்பிக் கொண்டிருக்கும் வாயுடனும், கயர்படிந்த ஆடைகளுடனும் நினைவு கொண்டாள்.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளிலும், பொது நிகழ்வுகளிலும், ஆணோ, பெண்ணோ வீட்டுக்கு ஒருவர் கட்டாயம் போராட வர வேண்டும் என அம்மான் தொடர்ச்சியாக பேசிக் கொண்டிருந்தது தன் நினைவுகளில் ஒலி பெருக்கியின் அலறலுடன் செவிப்பறைகளை தாக்குவதாக நினைத்தாள்.

''பொடியன் படு சுட்டி, கெட்டிக்காரன். எப்பிடியும் கெம்பஸ்சுக்கு எண்ட பண்ணிப் போடுவான். ஆம்பிளப் பிள்ள நிமிந்திற்றான் எண்டா குடும்பத்த கரையேத்திப் போடுவான்.''

கோவிந்தன் மாமா திரும்பத் திரும்பச் சொன்ன போது அதன் உள்ளர்த்தம் புரியாது வெள்ளாந்தியாய் அப்பா கேட்டுக் கொண்டிருந்ததை நினைவுபடுத்திப் பார்த்தாள். தம்பிக்காகவும் தன் குடும்பத்துக்காகவும், இரவோடு இரவாக கடிதம் எழுதி வைத்து விட்டு இயக்கத்துக்குப் போன இரவையும், நிலவில் வெளிறிக் கிடந்த வெண் மணல் ஒழுங்கைகளையும் நினைவு படுத்திக் கொண்டாள்.

போக்கு வெயிலின் தகிப்பில், தலையுடன் தங்கி விட்ட ''செல்லின்'' துண்டு சூடாகி, தன் நரம்புகளும், இரத்தமும் சூடாகி, தலை, உடல் எல்லாம் கொதிப்பது போல் உணர்ந்தாள். மணல் திட்டில் இருந்து இறங்கி, தன் வீடு இருந்த பக்கம் புலன்களைக் குவித்து நடந்து போனாள். வீட்டை தூரமாக நெருங்கும் போதே ஒப்பாரிச் சத்தத்தையும், சடங்குகளுக்கான அடங்கிய கட்டளைச் சத்தங்களையும், தன் புலனுணர்வுகள் கிரகிக்கத் தொடங்கி விட்டதை உணர்ந்தாள்.

நெருக்கமாக சலசலப்பான உரையாடல்களையும், ஒப்பாரிச் சத்தத்தையும் கேட்கத் தொடங்கிய போது, தான் வெளிப்படுவதை திடலில் இருந்த விடத்தல் பற்றையும், ஈச்சை மரப் பற்றைகளுமே திரையாக தடுத்து நிற்பதாக கருதினாள். திடீர் என்று காற்றில் கந்தக நெடியை சுவாசித்தாள். ஒற்றைச் சீன வெடி, மிக நெருக்கமாக வெடித்து தலைக்குள் அதிர்ந்து அடங்குவதை பயத்துடன் உணர்ந்தாள். எதிர்த் திசை அடிவானில் சலவைக் கல்லில் துணி அடிப்பது போன்று அந்த ஒற்றை வெடி எதிரொலித்து அடங்குவதைக் கேட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வெளிப்படுத்துவதற்கான உந்துதலில், சுய கட்டுப் பாடின்றியே கால்களின் இயங்குதல் இடற, காய்ந்த விடத்தல் முள் பற்றைகளும் சுடு மணலும் முகத்துக்கு நேரே நெருங்கி வருவதைக் கண்டாள். தன் வலுவிழந்த இடக்கையை பிரயோகிக்க முடியாது என உணர்ந்து, தன் உடலை உந்தி வலம் மாற்றி, வலப்பக்கத் தோள்ப்பட்டையை நிலத்தில் வலுவாக மோதி, தன் தலையை சுடு மணலில் கிடத்தி விழுந்தாள். மீண்டும் கந்தக நெடி நாசியை தாக்கியது தொடர்ச்சியாகக் கட்டுடன் சர வெடிகள் தனக்கு மிகக் கிட்டவாக வெடிப்பதைக் கேட்டாள். புகைகளுக்கிடையே, திடீர் திடீர் எனத் தோன்றும் நெருப்புப் பொறிகளும், பேப்பர் துகள்களும் பறக்கும் நினைவுகளுக்குள் தான் அமிழ்ந்து போவதை உணர்ந்தாள்.

தொடர்ச்சியான வெடி ஓசையும், அதன் எதிரொலிப்பும், தன் தலைக்குள் எண்ணற்ற ஊசி முனைகள் குத்துவது போன்ற வலியையும், விறைப்பையும் உணர்ந்தாள். வலி மிகையாக, தன் கால்கள் தன்னிச்சையின்றி நடுங்கிப் பின் சுடு மணலில் உதரத் தொடங்குவதை கட்டுப்படுத்த முடியாது தவித்தாள். தன் தாடைகள் கட்டிக்கொண்டு பற்கள் நெறுநெறுப்பதைக் கேட்டாள். தன் உடல் கொடுகி நடுங்கி உதறல் எடுக்கத் தொடங்கிய போது, தன் கண்கள் முற்றாக இருண்டு கறுத்துப் போவதை உணர்ந்தாள்.

வெறும் வெளிர் வானம் போன்ற நினைவுகள் மிஞ்ச, உடல் தன் நினைவுகளில் இருந்து முற்றாக அழிந்து போய்விட்டதை உணர்ந்தாள். காதுக்குள் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருந்த சீன வெடி ஓசையும் எதிரொலியும், மெல்ல மெல்ல எதிரொலியற்ற துப்பாக்கி வேட்டோசைகளாக மாறுவதை உணர்ந்தாள். தன் துப்பாக்கியின் இரும்புப் பகுதிகள் மாத்திரமன்றி, பலகைப் பகுதிகளும் சூடாகிக் கொண்டிருந்த போதும், தான் நிறுத்தாது தொடர்ச்சியாக சுட்டுக் கொண்டிருந்தது, எதுவித உருவமுமற்று அவள் நினைவுக்கு வந்தது. எதிர்த்து வந்த துப்பாக்கி ரவை ஒன்று சீமெந்துக் காப்பரணில் பட்டுத் தெரித்த போது, தெரித்த கற்களின் துகள்கள் தன்னை வலுவாக காயப்படுத்திய வலி மட்டும் நினைவில் நின்றது. ரவை பட்டுக் கருகிய சீமெந்துக் கட்டின் நெடி தன் நாசியை வலுவாக தாக்கி நிலை தடுமாற வைத்தது. தொடர்ச்சியாக தான் சுட்டுக் கொண்டிருக்கும் போதுதான், தனக்கு முன்னே மின்னல் ஒன்று வெட்டியது போன்ற ஒளிப் பிரவாகத்தைக் கண்டதை, காட்சியாக தன் நினைவுகளுக்குள் கொண்டுவர முயற்சி செய்தாள். எதுவித ஓசையுமற்று, திரண்ட வலுவான மணல் குவியல் ஒன்று தன் காப்பரணை நோக்கி வருவதைமட்டும் உணர முடிந்ததை நினைத்துப் பார்த்தாள். பேரோசை ஒன்றும், மணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலொன்றும் தன்னை கடந்து போன பின் தன் காப்பரண், மணல் குவியலாலும், சிதைந்த மரக்கெந்துகளாலும் மூடுண்டு இருந்ததை, சினிமாக்களில் நெக்கட்டிவில் வரும் வன்முறைக் காட்சிகள் போல் நினைவு கொண்டாள். தன் இடது கையின் இரண்டு விரல்கள் கூரிய பிளேட் ஒன்றினால் சீவியது போல் இருந்த இடத்திலிருந்தும், இடது பக்கத் தலையில் இருந்து கன்னத்திலும், இளஞ் சூடான இரத்தம் பரவுவது போன்ற உணர்வு வந்த போது, அவள் காதுக்குள் இரைந்து கொண்டிருந்த இரைச்சலும் முற்றாக நின்று போவதை உணர்ந்தாள்.

இடப் பக்க ஒற்றைத் தலை இடியுடன் தன் உணர்வு மீள்வதை உணர்ந்தாள். வியர்வையால் தன் உடல் மழையில் நனைந்தது போல் ஊறிக்கிடப்பதை உணர்ந்தாள். யாருடையதோ விருப்பத்துக்கு வாங்கிய, தான் அணிந்திருந்த சல்வாரையும், மணலையும், வியர்வை உடலுடன் ஒட்டி இறுக்கமாக்கி அருவருப்படைய வைப்பதாகக் கருதினாள். கண் விழித்த போது தலைக்குள் கிறுகிறுப்பு இருந்து கொண்டே இருந்ததை அவளால் உணர முடிந்தது. வானம் சாம்பல் படர்ந்து பொழுது மங்கத் தொடங்கி விட்டதை உணர்ந்து திடுக்கிட்டாள். செத்த வீட்டின் இரைச்சல்கள் முற்றாக அடங்கி விட்டிருப்பதை தன் புலன்கள் தனக்குணர்த்தி கவலையடைய வைப்பதாகக் கருதினாள். பகல் வெயிலின் சூட்டை மணல் தக்க வைத்திருப்பதை தன் உடல் உள்வாங்குவதை அவளால் உணர முடிந்தது. தன் பற்கள் கிட்டியதால் உதட்டில் உப்புக் கரிப்பையும், தாடையில் வலியையும் அவளால் உணர முடிந்தது.

எழுந்து, தன்னை வெளிப்படுத்தத் திரையாக இருந்த விடத்தல் பற்றையையும், ஈச்சை மரப் பற்றைகளையும், தாண்டி வந்த போது, வெள்ளாந்தியாய் யாரோ உறவினர்களுக்கு முன் தன் தந்தை கூனுண்டு இருப்பதைக் கண்டாள். தன் இடக்கையை வெள்ளைத் துப்பட்டாவால் மறைத்துக் கொண்டு, பொழுது இருட்டும் வரை, மீண்டும் திரையாக இருந்த விடத்தல் பற்றைக்கும், ஈச்சை மரப் பற்றைக்கும், பின்னே போய் அமர்ந்து கொள்ளுமாறு, இனம் புரியாத உணர்ச்சிகள் கொப்பிளிக்க துவண்டு போய் நின்றாள். வெம்பு மணலில் கீரைப் பாத்திகளுக்கு நீர் வார்த்த, மரமுந்திரி பருப்புகள் சுட்டுத்தின்ற, தன் தம்பியுடனான நினைவுகளை இரை மீட்டு, திரையாக இருந்த விடத்தல் பற்றைக்கும், ஈச்சை மரப் பற்றைக்கும், பின்னே போய் அமர்ந்து கொண்டு, வெதும்பி அழுதாள்.

ஜீவநதி (இலங்கை)- 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளர்வு

இன்னும் இறக்காத இன்றைய பொழுது, தனக்காக இன்னும் கொஞ்ச நேரம் செல்லச் சாயட்டுமே, என்று நினைத்த படி, தனது கயர் படிந்த வாழைப்பழக் கடைத் திண்ணையில், சாரத்தை கொடுக்குள் செருகியபடி, வீதியைப் பார்த்துக் கொண்டு குந்தி இருந்தார். வாழைப்பழக் கடையில் நின்று நின்று 'வெரிக்கோஸ்' நோயினால் தன் கால் தசைகளை மீறி புடைத்துக் கிடந்த, சுருள் சுருளான, கடுப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இரத்த நாளங்களை வருடியபடி, திண்ணையில் குந்தி இருந்தார். சந்தையின் இரைச்சல் பரபரப்பு அடங்கி விட்டது. சிலர் மந்தமாக முடிவுறாத தேவைகளுக்காக இன்னும் சந்தைக்குள் சோம்பலாக இயங்கிக் கொண்டிருப்பதாக அவருக்குப் பட்டது. முதுகுக்குப் பின்னே அறுத்து விட்டு, தகர அரைப்பரல் ஒன்றுக்குள் போட்ட கோழி, இறக்கையை அடித்துச் சத்தம் எழுப்பி இறந்து போவது போல், அவருக்குப் பின்னே முனகல்களும், கால் கைகளை தரையில் அடித்துப் புரளும் சத்தமும் கேட்டதால் திரும்பிப் பார்த்தார். எதுவும் அற்று வாழைக் கயர் படிந்த சுவர் மட்டுமே கிடந்தது. பல வருசமாக, ஒரு நாளில் ஒரு முறையாவது, தான் திரும்பி அர்த்தமற்றுப் பார்ப்பது வழக்கமாகிப் போய் விட்டதற்காக வருத்தப்பட்டார்.

சடைத்த பருத்த ஆலமரத்துக்குக் கீழ் இருந்த சைக்கிள் பார்க்கை, சந்தைக் கடைத் தொடர்களின் கூரைகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் தூண்களுக்கூடாக ஊடறுத்துப் பார்த்தார். குறுக்கு வீதியில், பச்சை நிற ஆட்டோ ஒன்று புழுதி கிளப்பிப் போவதைக் கவனித்தார். சைக்கிள் பார்க்கிற்குள் அவரது இரும்புக் கெரியர் சைக்கிள் மட்டும் தனித்து, தன்னைப் போல் அமைதியாகக் கிடப்பதாக நினைத்தார்.

இறக்கும் இன்றையப் பொழுதுடன், தனக்கும் இந்த மார்க்கட்டுக்குமான உறவு அன்னியப்பட்டுப் போகும் என்று நினைத்த போது, தன் கைகள் கடையின் திண்ணைக் குந்தை தன்னிச்சையின்றி வாஞ்சையுடன் தடவுவதை உணர்ந்தார். பல நிருவாக மாற்றங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும், கடை ஏலம் போகும் போதும், இடம் மாறி வந்தாலும், தன் வாழைப்பழக் கடைக்கு சந்தைக்குள் நாற்பது வருடத்திற்கும் மேலாக ஒரு இடம் கிடைத்து விடுவதை நினைத்து முகம் மலர்ந்து சிரித்தார்.

நின்று... நின்று யாவாரம் செய்ததால், ''வெரிக்கோஸ்'' நோயினால் குத்தி வலி எழும்பிப் போன கால்கள் ஓய்வு கேட்டதால், இந்த முறை குத்தகையுடன் கடையை விடுவது என முடிவு செய்திருந்தார். வேலை செய்யும் போது, புடைத்துக்கிடக்கும் நாளங்களில் காயப்பட்டால், இரத்தப் பெருக்கு, கட்டுக்கடங்காது தன்னை வருத்துவதை நினைத்துப் பார்த்தார். ஒவ்வொரு முறையும், குத்தகையின் போது தன்னுடன் மல்லுக்கு நிக்கும் பரமன்தான், அவனுடைய வாழைப்பழக் கடையுடன் சேர்த்து, தன்னுடையதையும் குத்தகைக்கு எடுத்ததை நினைத்துக் கொண்டார்.

''தொழிலை விட்டுட்டு வருமானத்துக்கு என்ன செய்யப் போறீங்க அண்ண.''

பரமன் கேட்ட போது, உண்மையிலேயே தான் வெளுறி வெலவெலத்துக் கண் கலங்கிப் போனதை நினைத்துப் பார்த்தார்.

''வீட்டோட ஒரு பத்திய இறக்கி யாவாரம் பண்ணலாம் எண்டு இருக்கன். பத்தி கூட இறக்கீற்றன்.''

அந்தப் பதிலை தனக்குத்தானே ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டார். அவனுக்கு இருந்த கரிசனை கூட தன்னுடன் குடும்பம் நடத்தியவளுக்கு இல்லாமல் போனதே என்று வருத்தப்பட்டார்.

ஞாயிறு மதியத்துக்கு மேல் சாவகாசமாக வீட்டுத் திண்ணையின் சுவரில் தன் முதுகைச் சாத்தி, சிகப்புச் சீமெந்து இழுத்த தரையில் தன் நாளங்கள் புடைத்த கால்களை நீட்டி, கோடாச் சுருட்டின் காரத்தை தன் நாசி முழுவதும் நிறையவிட்டு, நிதானமாக, கடையை விடுவது பற்றி மனைவியிடம் கூறியதை நினைத்துப் பார்த்தார்.

''இஞ்சபார், கால்ல வெரிக்கோஸிண்ட வலி தாங்கேலாது, ஊருக்குள்ள வாழைக்குலையும் தேடி அலைஞ்சு சந்தைக்கும் சைக்கிள் மிதிக்க ஏலாது, குதிக்கால் சில நேரங்களில விறைச்சுப் போகுது. சில நேரங்களில விண்டு விண்டு வலிக்குது. வீட்டோட பத்தி இறக்கி யாவாரம் பண்ணலாம் எண்டு நினைக்கிறேன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிய உணவுக்குப் பிறகு, சிகப்புச் சீமெந்து போட்ட தரையில் தன் தொந்தியைச் சரிய விட்டு, தன் கைகளை மடித்து தலைக்கு அணையாக கொடுத்து, எதையும் காதில் வாங்காதவள் போல் நீட்டிப் படுத்துக் கிடந்ததை நினைத்துப் பார்த்தார். திரும்பவும் தான் சொல்ல முனைந்த போது, கண்களைத் திறக்காது அவள் உதடு மட்டும் பிரிந்து வார்த்தைகளைத் துப்பியது, நினைவில் வந்தது.

''ஒ... நீங்க வெடிச் சத்தம் கேட்டோனே எங்கள விட்டுப் போட்டு கிணத்துக்குள்ள இறங்கி நிண்ட ஆள்தானே.''

அன்றைப் போல், இன்றும் அந்தப் பதிலால் திடுக்கிட்டுத்தான் போனார். தன் தொழில் இடத்தை மாற்றுவதற்கும், எப்போதோ உலர்ந்து, தன் நினைவில் இருந்து நழுவிப் போன சம்பவத்தை, அவள் நினைவில் வைத்துச் சொன்னதற்குமான அடி முடி புரியாமல், அன்றைப் போல், இன்றும் குழம்பித்தான் போனார்.

கார் இருள் போர்த்திய அந்த இரவை, கிணற்று வாளியை இனங்காண முடியாத அதே இருளுடன் ஞாபகம் கொண்டார். திருநெல்வேலியில் 13 இராணுவம் மரணம், மற்றும் கலவரம் நிகழாத பகுதிகளை செய்திகளில் சுட்டிக் காட்டி, ஜே.ஆர். ஜெயவரத்தனா, கலவரத்தை மூட்டிக் கொண்டிருந்த யூலை இரவு அது. ஊருக்குள் வெட்டிய வாழைக் குலைகளை சைக்கிள் கெரியரில் இருந்து இறக்கும் போது வேட்டோசைகள் தூரமாய் கேட்டுக் கொண்டிருந்தது, அவருக்கு ஞாபகம் இருந்தது. அவதி அவதியாக கிணற்றில் தலை முழுகிக் கொண்டிருந்த போது, குண்டு வெடிக்கும் ஓசைகள் நெருங்கிக்கொண்டு வந்ததை நினைவு படுத்திப்பார்த்தார். வாளியை கிணற்றுக்குள் விட்டுக் கொண்டிருக்கும் போதுதான் வீதியை அண்டியிருந்த தன் வீட்டு மூலையில், நிலம் அதிர குண்டொன்று வெடித்து அடங்கியதை நினைவு கொண்டார். நிலை தடுமாறிய தான், தலை கீழாய் கிணற்றுக்குள் வீழ்ந்ததை நினைத்துப் பார்த்தார். கயிற்றைப் பற்றிக் கொண்டதால், கயிற்றுடன் உருவுப்பட்டு கிணற்றுக்குள் விழுந்த போது, தன் உள்ளங்கைகள் நெருப்பால் சுடுபட்டதைப் போன்று கொதித்துப் பின் தோல் வக்கு விட்டு, பல நாள் காயமாக இருந்து மாறியதை நினைத்துப் பார்த்தார். கத்தி உதவி கேட்கவும் முடியாமல், கிணற்றுக்குள் இருந்து வெளியேறவும் முடியாமல், கால் வெடவெடக்க, விடிய விடிய கிணற்றுக்குள் குளிரில் கொடுகிக் கிடந்தது ஞாபகத்தில் இருளாய் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெரிக்கோஸ்' கண்டு வலிக்கும் தன் கால்களை தடவியபடி, இன்று தான் கடையை விடுவதற்கும், அதற்கும் உள்ள தொடர்பை ஊகிக்க முனைந்தார். வெளியே 'லேலன் மாஸ்டர்' சத்தத்தைக் கேட்டார். தன் முழங்காலில் கை ஊன்றி எழுந்தார். அது ஆனந்தராசாட 'லேலன் மாஸ்டர்' இல்லை என நினைத்த போது, வீதியில் வேறு யாருடையதோ 'லேலன் மாஸ்டர்' சந்தை முன் வாசலைத் தாண்டிப் போவதைக் கண்டார். எழுந்த வேகத்தில் இடுப்பு மடிப்பில் செருகி வைத்திருந்த வெற்றிலைச் சரையும், வில்லுக் கத்தியும் நிலத்தில் விழுந்து தள்ளிப் போவதைக் கண்டார். தனது வலுவிழந்த நீளமான கால்களை மடித்துக் கடைத் திண்ணையில் மீண்டும் குந்தினார்.

கால்களில் புடைத்துக் கிடக்கும் இரத்த நாளங்களை ஒரு கையால் வருடியபடி, மற்றக்கையால் வெற்றிலைக் சரை எடுத்து முழங்காலில் தட்டி இடுப்பில் செருகிக் கொண்டு, மடித்து, ஒரு சிறு கம்புத் துண்டு போல் கிடந்த, சந்திரசிறியை எப்போதும் ஞாபகப்படுத்தும், அந்த வில்லுக் கத்தியை எடுத்துக் கடைத் திண்ணையில் தட்டி மண்ணைப் போக்கினார்.

தான் இழுக்காமலே வெளியே வந்து லொட லொடத்துக் கிடந்த வில்லுக் கத்தி, தன்னைப் போலவே தளர்ந்து விட்டது என நினைத்தார். சந்திரசிறியின் கறுத்துக் கறை படிந்த பல்லைப் போல், கத்திக் கூரின் அடிப்பகுதியும் பல்லுப் பல்லாக நெளிந்து கிடந்தது. வில்லுக் கத்தியின் மான் கொம்புப் பிடியில், சந்திரசிறியின் சுருள் முடி கொண்ட அகன்ற முகம் தெரிவது போல் அவருக்குப் பட்டது. கொழும்பு லொறி ஒன்றில் கிளீனராக இருந்த சந்திரசிறி தன்னுடன் மார்க்கட்டுக்கு அப்பால், வீடு வரை வரும் அளவுக்கு நெருக்கமாக நட்பு வைத்திருந்ததை நினைத்துப் பார்த்தார். கொழும்பில் இருந்து ஜேர்மன் நாட்டுத் தயாரிப்பான மான் கொம்பில், பிடி செய்த வில்லுக் கத்தியை வாங்கித் தந்து விட்டுச் சொன்னதை நினைத்துப் பார்த்தார்.

''மச்சான், தொழிலுக்கு மட்டுமில்ல வழிப்பயணத்திற்கும் பயம் இல்லத்தானே மச்சான்.''

சந்திரசிறியின் லொறி சாமான்களுடனும், ஆட்களுடனும் கடத்தப்பட்டு விட்டது என அறிந்த போது, சகோதர உணர்வு உந்த, மார்க்கட் வியாபாரிகளுடன் தானும் பல இடங்களுக்கு அலைந்து திரிந்து தேடியதை நினைவு கூர்ந்தார். சந்திரசிறியுடன் கூடவரும் அந்த மஞ்சள் லொறியைப் போல், பல தெற்கு லொறிகள் மார்க்கட் சூழலில் இருந்து மறைந்து போனதை நினைவு கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேமன்ட் ரெடிமெட் உடுப்புக் கடைக்காரர், பெரிய காட்போட் பெட்டியில் அடைத்து, பச்சை நைலோன் கயிற்றால் கட்டிய பொதி ஒன்றை, சைக்கிள் பின் கெரியரில் ஏற்றுவதற்கு மல்லுக் கட்டிக் கொண்டிருந்தார். வீதி ஓரத்தில் இருந்த அவரின் இடது முழங்கையில் இருந்து, கீழ் நோக்கி இறங்கும் பெரிய நெருப்புச் சுட்டது போன்ற வடு, மாக்கட்டின் உள் அந்தத்தில் இருக்கும் தனக்கு துல்லியமாகத் தெரிவதாக நம்பினார்.

தெற்கு லொறிகள் கடத்தப்பட்ட நாட்களில், மார்க்கட் முழுவதும் ஒருவித பதட்டம் தொடர்ந்து இருந்து கொண்டிருந்ததை நினைத்துப்பார்த்தார். தெற்கு லொறிகளால் தாம் பாதிக்கப் படுவதாக மார்க்கட்டுக்குள் வன்மத்துடன் திரிந்த முகங்கள், லொறிகள் கடத்தப்பட்டதன் பின், கிலி பிடித்துத் திரிந்ததை நினைவுபடுத்திப் பார்த்தார். அந்த நாட்களில் ஆமை ஒன்று, தன் கால்களையும், தலையையும் உள் இழுத்துப் பதுங்கிக் கொள்வது போல், மார்க்கட் பதுங்கிக்கிடந்ததை நினைவுபடுத்திப்பார்த்தார். பதட்டம் தணிந்து மார்க்கட் வருடப் பிறப்புக்காக களை கட்டியிருந்த மதியப் பொழுதில் தான் அந்தக் கோரச் சம்பவம் நிகழ்ந்தது.

எதுவித குறிப்பிட்ட அடையாளமோ, பெயரோ குறிக்காத இரண்டு லொறிகள் மார்க்கட் வீதியில், மார்க்கட்டின் இரண்டு அந்தங்களிலும் வந்து நின்ற போது, யாரும் அதை பொருட் படுத்தியிருக்கவில்லை. வியாபார மும்முரத்தில் மார்க்கட் கலகலத்துக் கிடந்ததை நினைத்துப் பார்த்தார். சட்டி பானைக் கடை இருந்த வீதியின் மூலையில் பனையுடன் ஆலமரம் வளர்ந்திருந்த இடத்தில் தான், முதல் குண்டு வெடித்தது. புகையும், புழுதியும் அதிர்வும் எழுந்தது நினைவில் வந்தது. அடுத்த கணம் மார்க்கட் முழுவதும் கட்டிறுக்கமான மயான அமைதி உறைந்து போனது. விபரீதம் உணர்ந்து கூச்சலும், அலறல்களும் எழுந்த கணம், மார்க்கட்டின் புடவைக் கடைகள் இருந்த அந்தத்தில், லைட் போஸ்ட் ஓரம் இரண்டாவது குண்டு வெடித்தது, தன் செவிப்பறைகளில் இப்போதும் அதிர்வது போல் உணர்ந்தார். மார்க்கட் கூச்சலும், கலவரமுமாகிப் போனது. சனம் எதிர்ப்பட்டவர்களை இடித்து விழுத்தி, தாமும் விழுந்து புரண்டு ஓடியதை ஞாபகப்படுத்திப் பார்த்தார். லொறிக்குள் இருந்து பொல்லு, கத்தி, வாள்கள், இரும்புக் கம்பிகளுடன் முகத்தில் கறுப்புத் துணி கட்டியவர்கள் துவேசமும், தூசணமுமாகக் கத்திக் கொண்டு மார்க்கட்டுக்குள் நின்றவர்களைக் கண்மூடித் தனமாகத் தாக்கத் தொடங்கியதை, மார்க்கட்டின் உள் அந்தத்தில் நின்ற தான் ஒரு ஆங்கில சினிமாவைப் பார்ப்பது போல் பார்த்து நின்றதை, நினைவு படுத்திக் கொண்டார். அவர்கள் இறங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகத்தில் முதல் வெட்டு பேமன்ட் கடைக்காரருக்குத்தான் விழுந்ததாம். அவர் சாண்டோ என்ற படியால் கையைக் கொடுத்து வெட்டை வாங்கி வந்தவனை காலால் நெட்டித் தூக்கி எறிந்து விட்டு, தப்பி ஓடியதாகப் பின்னர் அறிந்துகொண்டதை நினைத்துப்பார்த்தார்.

மகளை வருடப் பிறப்புக்கு உடுப்பெடுக்க அன்றைக்கென்று கூட்டி வந்து, பதட்டப்பட்டதை நினைத்துப் பதட்டப்பட்டார். பதட்டத்தில் புத்தி செயலிழந்த போதும், வில்லுக் கத்தியும், மகளும் மட்டுமே தன் நினைவில் முழுமையாக நிறைந்து போய்க் கிடந்ததை நினைவு கொண்டார். மகளை இழுத்துக் கொண்டு பின்னே ஓடிய போது, கோழி இறைச்சிக் கடைக் கதவு திறந்திருந்ததால், சட்டென்று அதற்குள் புகுந்து கொண்டது மடத்தனமானது என, இன்று நினைத்துக் கொண்டார். இரத்தக்கறை படிந்து போன கோழி இறைச்சிக் கடைக்குள், மகளுடன் உள்ளே போன போது, இரத்த வெடில் அவர் நாசியைத் தாக்கிற்று. எதையும் பொருட்படுத்தாது கோழி அறுத்துப் போடும் தகரத்துக்குள் மகளைப் போட்டு உரைப்பையால் மூடி, தான் வில்லுக் கத்தியை திறந்து வலுவாகப் பிடித்துக் கொண்டு, கதவைத் திறந்து வைத்தபடி, கதவுக்கும் சுவருக்கும் இடையில் ஒழிந்து கொண்டு நின்றதை நினைத்துப் பார்த்தார். கூச்சலும், துவேசமுமான கோசங்களும், அழுகுரல்களும், தூசணமும், வெளியே இருந்த பதட்டத்தை தன் மார்புக் கூட்டுக்குள்ளே திணித்து தன் உடலை உதறப்பண்ணியதை, அதே பதட்டத்துடன் நினைவு கொண்டார். பக்கத்தில் மூடிக் கிடந்த ஆட்டிறைச்சிக் கடையின் தகரக் கதவை துவேசத்துடன் திட்டியபடி, உடைத்துத் திறப்பது தனக்குக் கேட்ட போது, தமக்கு காலம் முடிந்து விட்டது என அப்போது நினைத்தது அவருக்கு ஞாபகம் வந்தது.

திறந்து கிடந்த கோழி இறைச்சிக் கடையை நோட்டமிட்டபடி ஒரு கும்பல் வாள், இரும்புக் கம்பி, தடிகளுடன் தாண்டிச் சென்றது. அந்தக் கும்பலில் கறுத்தத் துணி அணியாதிருந்த சில முகங்கள் வியர்வையில் நனைந்து போய்க் கிடந்தன. அந்த முகங்களில் ஒன்றிரண்டை தான் எங்கேயோ பார்த்தது போல் இருக்கிறது என்று அன்று நினைத்ததை, பின்னாட்களில் வீதிகளில், காவற்கடமைகளில் ஈடுபட்டிருக்கும் சீருடைகளுக்குள் கண்டதை நினைவுபடுத்திக் கொண்டார்.

அவர்களைத் தொடர்ந்து இன்னுமொரு கும்பல் நகர்ந்து வருவதை ஊகித்த போது, அந்தக் கும்பல் மிக நெருக்கமாக கோழிக்கடை தாண்டிப் போவதைக் கண்டார். முகத்தில் கறுத்தத் துணி கட்டிய ஒருவன் அந்தக் கும்பலில் இருந்து பின்தங்கிப் பின்தங்கி கோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச்சிக் கடையை கூர்ந்து நோக்கிய போது, தன் உடலில் இருந்த இரத்தம் முழுவதும் உறைந்து கட்டியாகிப்போய்விட்டது போல் உணர்ந்ததை, வெடவெடக்கும் தன் உடலைக் கட்டுப் படுத்திக் கொண்டு நினைவுபடுத்தினார். மற்றவர்களை முன்னே போகவிட்ட அவன் சட்டென்று கோழிக் கடைக்குள் வந்தான். வேகமாக கல்லா மேசையை நெருங்கி லாச்சியை இழுத்து சில்லறைகளையும், நோட்டுக்களையும் தன் பொக்கட்டுக்குள் போடுவதைக் கண்டார். அவன் நின்ற நிலையில் நிமிர்ந்திருந்தால் நிச்சயமாகத் தன்னை கண்டிருக்க முடியும் என நினைத்தது நினைவில் வந்தது. வேகமாக வெளியேற முற்பட்டவன், சட்டென்று நின்று, தகர பறல் மூடிக்கிடந்த உரப்பையை இழுத்தான். பெறலை குனிந்து கூர்ந்து பார்ப்பதைக் கண்டார். மகள் கோழி இரத்தம் படிந்திருந்த முகத்துடன் நிமிர்ந்து நல்ல காற்றை சுவாசிக்க முற்படுவதை, பதறும் நினைவுகளாக ஞாபகம் கொண்டார். அவன் தடுமாறி கூச்சலிட முனைவதை ஊகித்து, சட்டென்று பின்புறமாக வேகமாக நெருங்கி, தன் வில்லுக் கத்தியால், அவன் வலது தோள்ப் பட்டைக் கழுத்துக் குழியில் வேகமாக குத்தி இழுத்தார். கழுத்தறுத்து தகர பெறலுக்குள் போட்ட கோழியைப் போல், அவன் முனகி கால் கைகளை அடித்து உதறியதை நினைத்துப் பார்த்தார்.

மகளை இழுத்துக் கொண்டு மீன் கடை பின்புறம் ஓடினார். அவர் எதிர்பார்த்தது போல், மீன் கழிவுகள், குப்பைகளை கானுக்குள் வெளியேற்றும் சந்தை மதில் சுவரில் இருந்து கதவு மகளை வெளியேற்றப் போதுமானதாக இருந்ததைக் கண்டு மகிழ்ந்ததை, நினைத்துப் பார்த்தார். மகளை அந்த கடப்புக்குள்ளால் வெளியேற்றி, தான் மதிலேறிப் பாய்ந்து மகளுடன் ஓடியதை நேற்று நடந்த நிகழ்வு போல் தன் மனக் கண்ணில் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சம்பவம் நிகழ்ந்த காலத்தில், ஒரு வருசமோ அல்லது அதற்கும் குறைவான காலம்தான், தான் வில்லுக் கத்தியை பிரிந்திருந்ததை நினைத்து, அதை வாஞ்சையுடன் தடவிக் கொண்டார். கொச்சிக்காய்த் தூள் டின் ஒன்றுக்குள் வைத்து, நிலத்தில் புதைத்து வைத்ததையும், பின் பயம் தணிந்த ஒரு இரவில், மீண்டும் தோண்டி எடுத்ததையும் நினைத்துக் கொண்டார். கத்தியை வளைந்த அதன் மான் கொம்புப் பிடிக்குள் செருகிய போது, அது சந்திரசிறியின் அடர்ந்த கருத்த மீசையைப் போல் இருப்பதாக அவருக்குத் தோன்றியது. இடுப்பில் செருகிப் பத்திரப்படுத்திக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ... நீங்க வெடிச்சத்தம் கேட்டோன்னே எங்கள விட்டுப் போட்டு கிணத்துக்குள்ள இறங்கி நிண்ட ஆள்த்தானே."

மீண்டும் மனைவியின் கேள்விக்கு, தன் மூளை பதில் தேடுவதை உணர்ந்தார்.

நாளை மார்க்கட்டுக்கு வந்தால், பழைய வியாபாரி என்று மரியாதை கிட்டும். நாட்கள் செல்லச் செல்ல எல்லாமே ஒரு பழைய நினைவைப் போல் ஓரத்தில் ஒதுங்கி விடும். பிறகு இந்த மார்க்கட்டும், நண்பர்களும் கூட அன்னியமாகிப் போய்விடுவார்கள் என நினைத்தார்.

இன்னும் இறக்காத அன்றைய பொழுது கொஞ்ச நேரம் சென்று சாயட்டுமே என, தன் வெரிக்கோஸ் கண்டு புடைத்துப் போன இரத்த நாளத்தை வருடிக் கொண்டு, வாழைப் பழக் கடைத் திண்ணையில் குந்தி இருந்து, நினைத்த போது, இன்னும் மிச்சமிருக்கும் தன் வாழைப்பழக் கடைச் சாமான்களை ஏற்றிப் போக, ஆனந்தராசாவின் லேன் மாஸ்டர், மார்க்கட் வாசலில் திரும்புவதைக் கண்டார்.

களப்பு (இலங்கை) - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடையன்

“கண்டியோ...! சனம் கதைக்கிறமாரி, வளவுக்குள்ள சுடலச் சாம்பல் வீசி, செய்வினை செஞ்சிருக்கெண்டு நீ நம்பிறியா...?”

“...”

கடல் அரிப்புக்குப் போட்ட பெரிய, காக்காய் பீச்சிய பாறாங்கல்லில், தன் வெண்ணிற சடை முடிக் கால்களை நீட்டி, அதற்கு மேல் ஒடுங்கிச் சிறுத்த தலையை வைத்து, கண்களை மேல் செருகி, அப்பாவித்தனமான பார்வையுடன், எதுவித அசைவும் காட்டாது படுத்துக் கிடக்கும் சடையனைப் பார்த்துக் கொண்டிருந்தார். அது படுத்திருக்கும் கல்லை விட, உயரமான கல்லில் இருக்கும் தன் கண்களையே நோட்டம் விடும் அதன் கள்ளத்தனமான பார்வை, அதன் மீது அவருக்கு கோபத்தை உண்டு பண்ணியது. தன் வாய்க்குள், எச்சிலை ஊறப் பண்ணிக் கொண்டிருக்கும் வெற்றிலைச் சாற்றை, அதன் வெண்ணிற கற்றை முடி உடலின் மீது, துப்பி விட வேண்டும் போல் ஆத்திரப்பட்டார். ஆனால் அது தன்னுடைய ஒவ்வொரு அசைவையும், உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தார். ஆத்திரத்துடனான தன் தாக்குதல்களை முழுமையாக பிரயோகிக்க முடியாதபடி, விசுவாசத்தைக் காட்டிக் கொண்டே, சடையன் தாக்குதலில் இருந்து, மெல்ல நழுவித் தப்பிவிடும் சாமர்த்தியத்தை நினைத்துப் பெருமைப்பட்டார்.

அதிகாலையின் குளிர்ச்சியை உள்வாங்கிக் கிடக்கும், உட்காந்திருக்கும் கடல் அரிப்புக்குப் போட்ட பெரிய பாறாங் கற்கள், மதியத்திலும் சூட்டை அதிகமாக தக்கவைத்திருக்காவிடினும், மாலையில் சூடு அதிகமாகி விடுகிறது என நினைத்தார். ஆனால், எப்போதும் காக்கைகளின் எச்சத்தால் ஏற்படும் வெடுக்கு நாற்றம்தான் எந்த வேளை என்று இல்லாமல் ஒரே மாதிரி நாறிக் கிடக்கிறது என நினைத்தார்.

இரவு முழுக்கத் தூங்காததால், கண்கள் கயர் கட்டி, எரிந்து கொண்டே இருந்தது அவருக்கு. மகன் இரவு முழுவதும் தூங்காமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய உணர்வின்றி, கால் கைகளை வீசித் தரையில் எறிந்து, விடிய விடிய முனகிக் கொண்டும் கிடந்ததை நினைத்துப் பார்த்தார். காச்சல் வேறு கடுமையாய்க் காய்ந்து கொண்டே இருந்தது. தன் பிரயாசை முழுவதும், தன் பிள்ளைக்கு மட்டுமாகத்தானே இருந்தது என கண்கலங்கினார். அவன் தூங்க முடியாது பிதற்றிக் கொண்டிருக்கும் போது, தன்னால் எப்படித் தூங்க முடியும் என நினைத்தார். அவர்கள், அவனின் சுய கட்டுப்பாடில்லாத செயலை உணர்ந்து, பொலிசிலாவது ஒப்படைத்திருக்கலாம் என நினைத்தார்.

''உடம்பு கண்டிப் போற மாறி அடிச்சிருக்காங்க. தோள் வெடிச்சு ரத்த விளாராக் கிடந்துது. கண்டியோ!

''...''

அவர் தன் வாய்க்குள் புளிச்ச வெற்றிலைச் சாற்றை, கடைவாயில் வழியும் முன்னே துப்ப, பாறாங்கல்லில் படிந்து, காய்ந்து கிடந்த, வெண்ணிற காக்காய் எச்சத்தின் மீது, சிகப்பு நிற வெற்றிலைச் சாறு படிந்து, கல்லில் வழிந்து போவதைக் கண்டார். உடலை உயர்த்தாது, பின்னங்கால்களால், உன்னிப்பாகத் தன் முக மாறுதல்களை கணித்தபடி, அசையாது கிடக்கும் சடையனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பெண்கள் பாடசாலையின் பாத்ரூம் பகுதிக் கானுக்குள் ஒழிந்து படுத்துக் கிடந்தான் என்று அவர்கள், அவனைக் கண்மூடித் தனமாகத் தாக்கியதை நினைத்து வருத்தப்பட்டார். அவன் முகத்தில் இருந்த வடுவோ, மனநிலைப் பிறள்வோ, அவன் மீது அவர்களுக்கு இரக்கத்தையோ, கருணையையோ, உண்டு பண்ணவில்லையே என மனமுடைந்து போனார். இரவு முழுவதும், வேதனைப்பட்டுக் கண் விழித்துக் கிடந்ததால், இரவு தும்பு மிட்டாய்க்கோ, பம்பாய் மிட்டாய்க்கோ, சீனிப் பாகு காச்ச முடியாமல் போனதற்காய் வருத்தப் பட்டார்.

''உனக்கும் அவனுக்கும் இண்டைக்கு சாப்பாடு இல்லைக் கண்டியோ!''

''...''

சாப்பாடு என்ற சத்தத்திற்கு, விழுந்து கிடந்த காது மடல்களை விறைப்பாக உயர்த்தி, கூர்மையாக்கி, உடம்பை உயர்த்தாது. தலையை உயர்த்தி, வால் கல்லில் உரசுவதைக் கூட பொருட்படுத்தாது, மிகுந்த விசுவாசத்துடன், வேகமாக வாலை ஆட்டிக் கொண்டிருக்கும் சடையனை, வருத்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் மட்டத்திற்கு நெருக்கமாக, அதிகாலைச் செவ்வானப் பின்னணியில், அதிகமாக வளைந்த மெல்லிய கழுத்துக் கொண்ட நீர்க் காக்கைக் கூட்டம் ஒன்று, முக்கோண வடிவில் பறந்து போவதை நித்திரை முழித்துச் சிவந்து போன கண்களால் பார்த்துக் கொண்டிருந்தார். பின் தொடர்ச்சியாகப் பல நீர்க் காக்கைக் கூட்டங்கள், அடிவானம் எங்கும் பறந்து போவது தனக்கு மன ஆறுதலைத் தருவது போல் உணர்ந்தார். கடல் நடுவே நின்றிருந்த, இனங்காண முடியாத படகொன்றின், அவுட் மோட்டர் ஸ்ராட்டாகிய சத்தத்தை, கடல் காற்று விட்டு விட்டு மெல்லிய ஒசையாக கரைக்கு சுமந்து வருவதைக் கிரகித்தார். மகன், சிறுவனாக இருந்த போது, அதிகாலையின் ரம்மியத்தை தன்னுடன் கூடவே வந்து, அவனும் ரசித்திருந்ததை நினைவு கூர்ந்தார். அப்போது, அவனின் முகம், செவ்வானின் பிரகாசம் போல் அழகாகவும், முழுமையாகவும் இருந்ததை அவர் நினைவில் கொண்டு வந்தார். இனி ஒரு போதும், முழுமையாக அவனது முகமும், ரசிக்கும் மனநிலையும் திரும்பி வரப்போவதில்லை என நினைத்த போது கண்கள் தன்னிச்சை இன்றி கலங்கித் தவிப்பதை உணர்ந்தார்.

கணவனைப் பிரிந்து தனியாக இருக்கும் பெண்ணிடம் போய்க் கேட்டிருக்கிறான், நீ பொலீஸ்காரனோட படுக்கிறனிதானே, என்னோட படுக்கவா, எண்டு கேட்டிருக்கிறான். அவள் போட்ட கூச்சலில் ஊர் திரண்டு அடித்ததில், காது மடல் பிய்ந்தும், விலா எலும்புகள் வெடித்தும் போனதால் பல நாட்கள் படுத்த படுக்கையாய்க் கிடந்ததை நினைத்துப் பார்த்தார். சில வேளை கூலமான ஒற்றைக் கண்ணும், கண்ணில் இருந்து காது வரை நீண்டு செல்லும் கருத்தத் தழும்பும் இல்லாது, சீனிப்பாகும், சக்ரீனும் கலந்த இனிப்புக்களால் வளர்ந்த, நலிந்த, பிசுபிசுப்பான உடலாகவும் இல்லாதிருந்து, ஆணழகனாகவோ, அதிகாரம் உள்ளவனாகவோ, பணக்காரனாகவோ, இருந்திருந்தால் சில வேளை அவன் அழைப்புக்கு, அவள் சம்மதித்திருக்கக் கூடுமோ என அவர் நினைவுகள் அலைந்தன.

''மற்றாக்கள், அவன அடிச்சுக் கொல்லுறதுக்கு முதல்ல நானே, அவனக் கொண்டிரலாம் எண்டு தோனுது கண்டியோ!''

''...''

சொல்வது எதையும் காதில் வாங்காது, உடலில் இருந்து மயிர்கள் கொட்டிய, இரப்பரைப் போல் ஈய்ந்து, சவண்டு, கொடுகி நின்ற, தன் எதிரியுடன் பற்களை நறநறத்து உறுமி, பின்னங் கால்களை பாறாங்கல்லில் விறாண்டி, கோபம் காட்டி நிற்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடையனை, நித்திரை இல்லாததால் சிவந்து போயிருந்த கண்களுக்குள் கண்டார். எதேச்சையாக திரும்பிய சடையன், தன் முகத்தில் உணர்ச்சிகளை வேவு பார்த்தபடியே இருப்பதைக் கண்டும் காணாதவர் போல் இருக்க முனைந்தார்.

இரண்டு சிறுமிகள் கைக்குள் எதையோ பொத்தி, இடமும் வலமுமாக ஆளையாள் தள்ளி, இடறி, கடற்கரை மணலில் கால் புதைய, தம்மை நோக்கி நடந்து வருவது போல் உணர்ந்தார். தும்பு மிட்டாசிக்கோ, பம்பாய் மிட்டாசிக்கோ, அதிகாலையில் வரமாட்டார்கள் என்பதால், தான் சங்கடப்படத் தேவை இல்லை என நினைத்தார். சிறுமிகள், சடையனும், அவரும் இருந்த பாறாங்கற்ளைத் தாண்டிப் போவதை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். சில வேளை பெட்டிக் கடையில் சீனியோ, தேயிலைத் தூளோ வாங்கப் போகக் கூடும் என நினைத்தார்.

கொய்யாத் தோட்ட வளவில், பிரதான வீதியை அண்டி இருந்த, மாமாவின் தும்பு மிட்டாசிக் கடையைத் தார்த் தகரத்தின் கரலுடன் ஞாபகம் கொண்டார். தகப்பன் இல்லாத தங்களுக்கு, மாமாவை விட்டால் வேறு கதி இல்லாததால், அவருடன் அண்டிக் கிடந்ததை, சீனிப் பாகுக் கயர் படிந்த ஊத்தை வேட்டியுடன், கனவுப் பாங்கான சலன உருவில் நினைவு கொண்டார். கொய்யாத் தோட்ட நடு வளவுக்குள், மாமா குடும்பத்துக்கும், எங்கள் குடும்பத்துக்கும், தனித் தனியாக குடிசைகள் இருந்ததை, அந்த உயரமான ஒற்றைத் தென்னையுடன் ஞாபகப் படுத்திக் கொண்டார். பேருக்குத்தான் கொய்யாத் தோட்ட வளவு, மருந்துக்கும் ஒரு கொய்யா மரம் கூட இருக்கவில்லை. சில பனைகளும், ஒற்றைத் தென்னையும், புதர்களும்தான் மண்டிக் கிடந்தன என நினைத்தார். ஆங்கிலேயர் காலத்தில் கொய்யாத் தோட்டமாக இருந்து, பின் தரிசு நிலமாகிப் போன இடத்தில் இருந்த, தங்கள், பதிவான தாழ்வாரம் கொண்ட, ஓலைக் குடிசைகளை மனதில் பார்த்துக் கொண்டிருந்தார். தானும் மாமாவும் சீனிப் பாகு அப்பாத, எறும்புகள் இல்லாத இடத்தில் தான் சாக்கை விரித்து தகரத்தாலான, தும்பு மிட்டாசிக் கடைக்குள் தூங்குவது ஞாபகம் வந்தது. அதிகாலையில் மாமா பாகு காய்ச்சி ஊத்த, மெல்லிய வாரப்பட்ட ஈர்க்குக் கட்டால், தாய்ச்சியை விட்டு வெளியால, பாணி சிந்தாமல் அடித்து, தும்பு மிட்டாசி ஆக்குவதும் ஞாபகம் வந்தது. நீளமாகக் கடும் சிகப்பு நிறத் துண்டுகளும், மெல்லிய பூப்போன்ற தும்பு மிட்டாய்த் துகள்களையும், மூண்டு பக்கம் தகரமும், ஒரு பக்கம் கண்ணாடியும் கொண்ட, சிறிய வட்ட வடிவ மூடியையும் கொண்ட, டின்னில் அடைத்து வைப்பது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமாவின் பாகு படிந்த கைகளுடன் அவர் ஞாபகத்துக்கு வந்தது. களியாக உறையும் பாணியை, வாழை இலையில் நீளமாக உருட்டி, பின் ஒரு அங்குலத்துக்கும் குறைவான துண்டுகளாக வெட்டி எடுத்து, அந்தத் துண்டுகளை ஈர்க்குகளில் குத்தி பம்பாய் மிட்டாசி ஆக்குவதும், தும்புத் தடி கொட்டானில் கவிழ்த்துக் குத்திய பச்சைப் பப்பாசிக் காயில், பம்பாய் மிட்டாசியின் ஈர்க்குகளை செருகி விடுவதும், பச்சை நிற பப்பாசிக் காயில், சிகப்பு நிற பம்பாய் மிட்டாசிகள், பூப்போல விரிந்து கிடப்பதும், மாமா சைக்கிள் கெரியரில் ஒரு தகர டின்னும், கென்டிலில் பம்பாய் மிட்டாசியையும் கட்டி, நகரத்தை நோக்கிப் போவதை, அவரது 'ரலி' சைக்கிளுடன் ஞாபகப் படுத்திப் பார்த்தார். தானும் தம்பியும் வெறுங்காலுடன் ஊர்ப் பாடசாலை ஓரமாகவும், புழுதி மணல் வீதிகளிலும், நாய் துரத்தும் ஒழுங்கைகளிலும், சிறிய மணி ஒன்றைக் கிளுக்கியபடி, தும்பு மிட்டாயை விற்று வருவதால், கொய்யாத் தோட்ட வளவுக்குள் இருந்த இரு குடும்பங்களின் அன்றைய பொழுது, பசி இன்றிச் சாய்ந்ததும் பசியாறிய அந்தப் பொழுதுகளைக் கூடத் தொடர முடியாது, வேட்டுவைத்த யூலைக் கலவரமும், அதே கரிய இருளுடன் அவர் ஞாபகத்தில் வந்து இடறின.

''அப்ப உண்ட முப்பாட்டனும் பிறந்திருக்க மாட்டான் கண்டியே!''

''...''

தென்னையில் இருந்து, கல்லில் விழுந்த குரும்பை ஒன்று, வெடித்து, இளநீர் கொட்டி, உருண்டு, கல் இடுக்கில் தங்கிக் கொண்டது. திடுக்கிட்டு துள்ளி எழுந்த சடையன், தலையைக் கோணி குரும்பையை முகர்ந்து பார்த்துவிட்டு, பின்னங் காலை உயர்த்தி, உடலை வளைத்து தன் கழுத்தை வறட்டு வறட்டென்று சொறிந்து கொண்ட போது, கடற்காற்று, சடையனின் வெண்ணிற சடை முடியைக் கலைத்து விளையாடுவதை சிறிது நேரம் ரசித்துக் கொண்டிருந்தார்.

அந்தக் கரிய யூலை இரவு, தங்கள் இரவுச் சாப்பாட்டை குப்பி விளக்கின் வெளிச்சத்தில் உண்டு கொண்டிருந்ததை, வெளிர் மஞ்சள் நிற ஒளிப் பின்னணியில் ஞாபகம் கொண்டார். மாமா அன்று எஞ்சிய தும்பு மிட்டாசிகளை, ''நைஸ்'' ஆக்குவதற்காக கடைக்குள், திரும்பவும் பாகு காச்சிக் கொண்டிருந்ததையும், ஆரம்பத்தில் தூரத்தில்தான் துப்பாக்கி வெடி ஓசைகளும், பொம்ஸ் வெடிக்கும் ஓசைகளும் கேட்டுக் கொண்டிருந்ததையும், நெளிந்த தகரச் சோற்றுக் கோப்பையுடன் ஞாபகப்படுத்திக் கொண்டார். தாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதட்டத்துடன் வேகமாக உணவை உண்டு கொண்டிருந்த நேரம், வெடி ஓசைகள் தம்மை நெருங்கி வருவதை உணர முடிந்ததை, எப்போதும் அமைதியாக இருக்கும் தம்பியின் சாந்தமான முகத்துடன் நினைவு கொண்டார். திடீரென கனரக வாகனங்கள் வேகமான இரைச்சலுடன் வந்து, தும்பு மிட்டாசிக் கடைக்கு எதிரே நிற்பதை உணர முடிந்தது என நினைத்தார். தாங்கள் பதட்டத்துடன் குப்பி விளக்கை அணைத்து விட்டபோது, குடிசை ஆளையாள் இனம் காண முடியாத இருளில் மூழ்கிப் போனதை நினைத்துப் பார்த்தார். தாங்கள் மாமாவை நினைத்துப் பதட்டப்பட்டபோது. வீதியில் கூச்சலும், அதட்டலும், ஆவேசமான துவேசம் கலந்த பேச்சுக்களும் கேட்டுக் கொண்டிருந்தது, துல்லியமான சந்தங்களுடன், அவர் நினைவுகளில் வந்து படிந்தது. நிலம் அதிராத வெடி ஓசை ஒன்று குப்பென வெடித்தது. தம்பி ''பெற்றோல் பம்ஸ்'' என்று குசுகுசுத்தான். அவர் இருட்டுக்குள் தம்பியின் முகத்தைத் தேடினார். திடீர் என்று அவன் முகத்தையும், அம்மாவின் முகத்தையும், காணும் அளவுக்கு குடிலுக்குள் வெளிச்சம் பரவி இருந்தது கண்டு பதறிப் போனார். தங்கள் குடிசைக்குத் தீ வைத்து விட்டார்கள் என்று தான் முதலில் அவர் நினைத்தார். குடிசையின் இடுக்குகளால் வெளியே பார்த்த போது, பிரதான வீதியில் தங்கள் கடைக்கு எதிரே இருந்த ''லோன்றி'' பெருஞ் சுவாலையுடன் தீப்பற்றி எரிவதைக் கண்டார். தங்கள் கடையும், கொய்யாத் தோட்ட முழு வளவும் அந்த வெளிச்சத்தில் பிரகாசித்துக் கிடந்ததையும், மாமாவின் குடிசைப் பக்கம் எந்த அரவமும் இல்லாது உறங்கிக் கிடந்ததையும், உள்ளே இரண்டு ஜீவன்கள் இருப்பதற்கான தடம் இன்றி உறைந்து கிடந்ததையும், வான் நோக்கி எழுந்த தீக்கங்குகளுடன் ஞாபகம் கொண்டார். ''லோன்றி'' எரியும் வெளிச்சத்தில், ராணுவச் சப்பாத்துக்களுடன் கையில் பொல்லு தடியுடனும், பெற்றோல் கேனுடனும், துவேசமான தூசணப் பேச்சுக்களுடனும், முகத்தில் வன்மத்தை ஏற்றி ஒளிரும் வெளிச்சத்திலும், இருண்ட முகத்துடன் பிரதான வீதியில் அவர்கள் நடமாடுவது தெரிந்தது. ராணுவ கனரக வாகனம் மெல்ல நகர, மாமாவின் தும்பு மிட்டாய்க் கடை லோன்றி எரியும் வெளிச்சத்தில் துலக்கமாய்த் தெரிந்தது. மாமாவை நினைத்து தாங்கள் பதறத் தொடங்கியதை, மெல்லியதாக உடல் பதற நினைவு கொண்டார். தகரத்தில் உதைக்கும் சத்தம் அவர்களுக்கு கேட்டது. துவேசமான தூசணப் பேச்சும், மாமாவின் அலறல் சத்தமும், அவர்களைக் கொடுகி விறைக்கப் பண்ணி விட்டது. கனரக வாகனத்தின் இரைச்சலும், வேட்டோசைகளும், பொம்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிப்பும் அவர்களை விட்டுத் தூரமாகப் போவதை உணர்ந்தார்கள். குடிசையில் இருந்து வெளிப்பட்டு. தாங்கள் மாமியை இரகசியமாக வெளியே அழைத்ததையும், மாமியும், மச்சாளும். தலைக்கு மேல் கூப்பிய கையுடன் வெளியே வந்து நிலத்தில் குந்திக் கொண்டதையும், மாமியின் வெளிறிப் போன நடுங்கும் கை விரல்களுடன் ஞாபகம் கொண்டார். தானும் அம்மாவும் கடையை நோக்கி மெல்ல மெல்ல நகர்ந்த போது, கடைப் பின் கதவு பூட்டப்பட்ட நிலையில் இருந்ததால், உள்ளே என்ன நட்ந்திருக்கும் என ஊகிக்க முனைந்ததையும், கடைக்குள் மாமாவின் முனகல் கேட்டுக் கொண்டிருந்ததையும், ஊர் அடங்கிக் கிடந்த கனதியான நிசப்தத்தில் ஞாபகம் கொண்டார். எரிந்து முகடு உட்குழிந்த நிலையில் லோன்றி தொடர்ந்தும் எரிந்து கொண்டிருந்தது. பின்கதவைத் திறந்த போது, சிதறிய சீனிப் பாகுக்கு மத்தியில் கிடந்த மாமாவை, கடைக்குள், பெயர்ந்து கிடந்த முன் கதவுக்குள்ளால் வந்த வெளிச்சத்தில் கண்டதை, வேதனையுடன் ஞாபகம் கொண்டார்.

''இப்ப கூட மாமாவிண்ட ஆவி கொய்யாத் தோட்ட வளவுக்குள்ள கயர் பிரண்ட வேட்டித் துண்டோட நடமாடுறதா சனம் சொல்லுதுகள். கண்டியோ!''

''...''

இரவு முழுவதும் குரைத்து, மற்றவர்களின் தூக்கத்தை கெடுத்துவிட்டு, கல்லில் நீளக் கால் நீட்டி, உறங்கிக் கிடந்த சடையனின் உப்பி, ஒடுங்கும், வயிறுதான் அது உயிரோடு இருப்பதை உணர்த்துவதாக நினைத்தார். அவர் கால்கள் தானாகவே உதைத்து மீண்டது. குதிக்கால் கல்லில் பட்டு வலித்தது. அலறி, கல்லில் வழுக்கிப் போய், இடறி மணலில் விழுந்து, எழுந்து நின்றது சடையன். உடலை உலுப்பி, பின் சிலிர்த்து, மீண்டும் கல்லில் ஏறி வந்தது சடையன். உறங்காமல் இருக்க, குந்தி இருந்து, நாக்கைத் தொங்கப் போட்டு இளைத்துக் கொண்டிருந்த சடையனின் தூரப் போகாத விசுவாசத்தை, இயலாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். அவுட் மோட்டரின் இரைச்சலுடன், நால்வரைச் சுமந்த மஞ்சளும், நீல நிறமும் கலந்த பிளாஸ்ரிக் படகொன்று, கடலலையில் மிதந்து, தாழ்ந்து, கரையை நோக்கி வேகமாக வந்தது. அவுட் மோட்டருக்கு அருகில் இருந்தவன், அவுட் மோட்டரை, கடல் நீர் மட்டத்துக்கு மேல் நிமிர்த்த, வந்த வேகத்திலேயே படகு அரைவாசி மணலில் புதைய, மீதி நீரில் முட்டாது, அந்தரத்தில் நின்றது படகு. படகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர்கள் கீழே குதித்து, படகை மணலில் முழுமையாக தள்ளி நகர்த்துவதை, ஈரமாக இருந்த அவர்களது சாரனுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

மாமா இறந்த போது, தொடர்ந்தும் ஊரடங்கு அமுலில் இருந்ததால் கொய்யாத் தோட்ட அடி வளவில் ஆழக் குழி தோண்டிப் புதைத்ததை, சவக் குழிக்குள் தொடர்ச்சியாக உதிர்ந்து கொண்டிருந்த காய்ந்த மணலுடன் ஞாபகப் படுத்திக் கொண்டார். அவர்கள், மாமாவை கீழே விழுத்தி, கொதித்துக் கொண்டிருந்த சீனிப் பாகை தலையில் ஊற்றி இருந்தார்கள். தலைமுடி, தோல், கண், காது, மூக்கு என எதையும் வேறுபடுத்த முடியாது பாகு எல்லாவற்றிலும் உருகி ஒட்டிப் போய்க் கிடந்தது. பச்சை வாழை இலையில் கிடத்தி இருந்த மாமாவின் எரிகாயங்களுடனும், முனகல் ஒலியுடனும், நினைவுகளில் வந்து படிவதை உணர்ந்தார். ஊரடங்கு நாட்கணக்கில் தொடர்ந்தும் அமுலில் இருந்ததால், அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக முடியாது போனதை, வெறிச்சோடிப் போன வீதியுடன் ஞாபகம் கொண்டார். தானும், தம்பியும், பிரயாசைப்பட்டு மீண்டும் தொழிலைத் தொடங்கியதையும், சில மாதங்களில், தம்பியும் காணாமல் போனதையும், மேவி இழுத்த அவனது தலையுடன் ஞாபகப்படுத்திக் கொண்டார். அப்ப தங்களுக்கு இயக்கம் பற்றி எல்லாம் தெரியாததால், மற்றவர்களைப் போல், தாங்களும், பயத்தில் ஊரைவிட்டு ஓடி விட்டான் என்று தான் நினைத்ததையும், பின் நாட்களில், அவன் உரம் ஏறிய உடல்வாகும், தடித்த உடையும், உடைக்குள் ஆயுதங்களை மறைத்துக் கொண்டும், ஊருக்குள் நடமாடியதையும் நினைத்துப் பார்த்தார். இருக்கிறதுக்கு சொந்தமா ஒரு துண்டு நிலத்துக்கு நாதி இல்லாதவன், நிலத்துக்காகப் போராடப் போய், இறந்து போனதை வேதனையுடன் நினைத்துப் பார்த்தார். மாமா இறந்த துக்கத்திலும், தம்பி காணாமல் போன துக்கத்திலும், அம்மா, உண்ணாமல் தன்னை வருத்திக் கொண்டு இறந்து போனதை, அவரது அகன்ற நெற்றியில், எப்போதும் இருக்கும் திருநீற்றுப் பூச்சுடன் நினைவு கூர்ந்தார். எந்த எதிர்பார்ப்பும் இன்றி, மாமாவின் மகளை மணந்து கொண்டதையும், மாமி இரயில்வே பக்கம் இருந்த மகனுடன் போய் தங்கிக் கொண்டதையும், நினைத்துப் பார்த்தார். கொய்யாத் தோட்ட குடிசைகளும், கடையும் அச்சுறுத்திக் கொண்டிருந்ததால், அதைப் பிரித்துக் கொண்டு வந்து, இந்தக் கடற்கரையோர மைதானத்துக்கு பக்கத்தில், குடிசையையும், கடையையும், போட்டுக் கொண்டதை, மைதானத்தில் ஓடிக் கொண்டிருக்கும் கால்களுக்குள், உருளும் பந்துடனான பின்னணியில் ஞாபகம் கொண்டார். அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிலுக்குள், மகன் பிறந்த போது, மாமாவே மீண்டும் வந்து பிறந்து விட்டதாக தானும், மனுசியும் சந்தோசப்பட்டதை, சிறிய சிவந்த உதடும், வட்டமான முகமுமாக நினைத்து மகிழ்ந்தார்.

''சீனிப் பாகு ஒட்டின பத்தின காயங்களோடதான் மாமா மண்ணுக்க புதஞ்சு போனார் கண்டியோ!''

''...''

எழுந்து நின்று, கண்களைக் கூர்மைப்படுத்தி, காதுகளை நீட்டி முனகிக் கொண்டு, காற்றில் நாசியை கூர்மையாக்கி, பெண் வாடை பிடிக்கும் சடையன் மீது அவருக்கு எரிச்சல் வந்தது. திரும்பி தன் கண்களில் கோபத்தைக் கண்டு சட்டென்று குந்தி, நாக்கை இடப்பக்கமாகத் தொங்கப் போட்டு, இளைத்துக் கொண்டிருந்த சடையனின் புத்திக் கூர்மை அவருக்குப் பிடித்திருந்தது. படகில் தரை தட்டியவர்கள், வலையை வெளியே அள்ளிப் போட்டு, மீன் தெரியத் தொடங்கி இருந்தார்கள். அவர்களின் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கும் கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மைதானத்திற்கு அருகில் இருந்ததாலோ என்னவோ, அவன் கால்களுக்குள் பந்தை நளினமாக உருட்டுவதை, வெண் மணலில் ஆங்காங்கே தெரியும் கரும் பசிய புல் திட்டுக் கொண்ட மைதானப் பின்னணியில் நினைவு கொண்டார். அவனிடம் கோல் போஸ்ட்டுக்கு அண்மையில் வைத்து, பந்து போவதை பெரியவர்கள் கூட விரும்பமாட்டார்கள், அவ்வளவு திறமையாக பந்தை கோல் போஸ்ட்டுக்குள் செலுத்தி விடுவான். அவன் படிக்க வேண்டும் என்பதற்காக, தன் உழைப்பை இரண்டு மடங்காக்கி, இரவு பகலாக திருவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் என அலைந்து திரிந்து, வியாபாரம் செய்ததை நினைவு கொண்டார். அவன் விளையாட்டைப் போல், படிப்பிலும் சுட்டியாகத்தான் இருந்தான். அந்தக் கேணியடிப் பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கு, அவனை அன்று கூட்டிப் போய் இருக்க கூடாது என நினைத்தார். அவர்கள் கோயிலை நெருங்கிய போது, இரவின் ஆக்கிரமிப்பில் கோயில் தன் உருவத்தை சிதைத்துக் கிடந்தது. தாங்கள் கோயிலுக்குள் போகும் போது, வர்ணக் கடதாசிகள் சுற்றிய டியூப் லைட்டுக்கள் கோயிலின் உள், வெளி வீதிகளில், பத்தடிக்கு ஒன்று என்று கதியால் நட்டு கட்டி இருந்தார்கள். வர்ண ஒளியில் கோயில் வீதியில் அவன் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டு, தன் வியாபாரத்திலும் கவனமாக இருந்ததை நினைத்துப் பார்த்தார். கோயிலில் பூசை நடந்து கொண்டிருந்ததால் உள்ளேதான் சனம் நெருசலாக இருந்தது. வெளி வீதியில், சிறுவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடிக் கொண்டிருக்கும் அவனைக் கவனித்துக் கொண்டு, வியாபாரம் செய்வதில் சிரமம் ஏதும் இல்லாதிருந்ததை நினைத்துப் பார்த்தார். ஐஸ்பழம் விற்றுக் கொண்டிருந்த பரமசிவன் தன் காதுக்குக்கிட்ட வந்து குசுகுசுத்தது ஞாபகம் வந்தது.

''பெரிசிண்ட புலனாய்வுத் துறை... வேட்டி, சேட்டோட உள்ள நிக்குது.''

சொன்ன வேகத்தில் சைக்கிளில் உன்னி ஏறிப் போனான். மந்திர உச்சாடனத்தின் சத்தத்திலும், மணி ஓசையிலும், அவன் சொன்னது தெளிவாக விளங்காததால், தான் வியாபாரத்தில் மும்முரமாக இருந்ததில், அவன் சொன்னதின் அர்த்தத்தை, தன் மனதில் சரியாக வாங்கிக் கொள்ளாததற்காகக் கவலைப்பட்டார். ஏதோ ஒரு வர்ண விளக்கு, தீர்த்தக் கேணி முடக்கில் கண்ணைப் பறிக்கும் வெளிச்சத்துடன், வெடித்துச் சிதறியது போல்தான் முதலில் இருந்ததையும், கால்கள் உணர்ந்த அதிர்வும், பேரிடி ஓசையும்தான், ஏதோ விபரீதம் என தன்னை உணரச் செய்ததையும் நினைத்துப் பார்த்தார். இருளில் கிடந்த தீர்த்தக்கேணி அடியைச்சூழ, பெரும் தூசி மண்டலமும், புகையும் அடைத்துக் கிடந்தது. சனம் அல்லோலப்படத்தான், உணர்வு வந்தவனாக வியாபாரத்தை விட்டுவிட்டு, புழுதியும், வெடிமருந்தின் நெடியும் தன்னை எதிர்த்தறைய கேணியடியை நோக்கி ஓடியது ஞாபகம் வந்தது. எதையும் அடையாளம் காண முடியாத அளவுக்கு, சில விநாடிகளில் எல்லாமே உருமாறிக் கிடந்தது. தலை முடிகளிலும், முகத்திலும் சாம்பல் புழுதி படிய, நிலவு வெளிச்சத்தில், சிறுவர்கள் திசை கெட்டு, கதறி அழுது, அலைந்து, எதிர்ப்பட்டவர்களில், தாவி ஏற முற்பட்டனர். அப்படி எதிர்ப்பட்ட முகங்களிலும், உருவங்களிலும்தான் முதலில் அவனைத் தேடியதை நினைத்துப் பார்த்தார். நிலத்தில் விழுந்து துடித்துக் கொண்டிருப்பவர்களில், தான் அவனை அடையாளம் கண்ட போது, துடித்துப் போனதையும், அவனைத் தூக்கிக் கொண்டு எந்த திசை என்று அறியாது, இலக்கற்று ஓடி, கடைசியில் ஆஸ்பத்திரிக்கு போய்ச் சேர்ந்ததையும் அவனது இரத்தம் தோய்ந்த முகத்துடன் ஞாபகம் கொண்டார். அதற்குப் பிறகுதான், அவன் வலக் கண் கூழாய்ப் போனது. கண்ணிலிருந்து காது வரை, ஒரு கான் போல் வடு, அவன் முகத்தில் நிரந்தரமாய்த் தங்கிப் போய் விட்டது அந்த வடுவின் ஆழத்துடன் அவர் நினைவுக்கு வந்தது.

''அண்டைக்குத்தான் மாமாண்ட ''ரெலி'' சைக்கிளும் தும்பு முட்டாசி டின்னும் காணாமல் போச்சுது. கண்டியோ!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...."

படகு மறைவில் பாதி உடம்பை மறைத்து, மீன் தலை ஒன்றுடனோ, குடலுடனோ, மல்லுக்கட்டிக் கிடக்கும் சடையன் மீது, அவருக்கு கட்டுக்கடங்காத கோபம் வந்தது. எறிவதற்குக் கல் எதுவும் கிடைக்காததால், குரும்பையை எடுத்து வீசினார். காற்றில் வலம் மாறி, சுழன்று, வேகமெடுத்துப் போய், மணலில் விழுந்து தெறித்து, சடையனைத் தாண்டிப் படகில் பட்டு நின்றது குரும்பை. முதலில் உறுமிய சடையன், பின் படகைச் சுற்றி ஓடி, கல்லில் தாவி ஏறி, பின்னால் வந்து பக்கவாட்டில் கடலைப் பார்ப்பது போல், தன் முகத்தை கடைக்கண்ணால் நோட்டம் விட்டபடி, தலையை மேலே தூக்கிக் கொண்டு, கல்லில் அமர்ந்திருக்கும் அப்பாவித்தனமான, குள்ளநரித்தனத்தை ரசித்தார். கடல் காற்று அதன் முடிகளைக் கலைத்துக் கோணல் ஆக்கியது. படகைச் சுற்றி காக்கைகளின் இரைச்சலும், வியாபாரிகளின் ஏலம் போடும் இரைச்சலும் அதிகமாகி இருந்தது. சிகப்பு ரீசேட் அணிந்த படகுக்காரன், தலையில் தொப்பியும், தோளில் அவுட் மோட்டரும் சுமந்து, கல்லில் ஏறிப்போவதை பார்த்துக் கொண்டிருந்தார்.

அவன் காயப்பட்ட இரவுகளில் துக்கம் தூக்கத்தை விழுங்கிவிட, பல இரவுகள் தூக்கமின்றி, அவனைப் போல் தானும், பிதற்றிக்கிடந்ததை நினைத்துப்பார்த்தார். பல இரவுகள், அவனைத் தூக்கிக் கொண்டு போய், அவனுடன் தானும், கடலில் உப்பாகக் கரைந்து போக விரும்பியதையும், சில இரவுகளில், தூங்கிக் கொண்டிருக்கும் அவனைத் தோளில் தூக்கிக் கொண்டு குடிசைக்கு வெளியேயும், சில இரவுகளில், அலைவாய்க் கரை வரையும் வந்து, பின் திரும்பிப் போனதையும் தோளில் கனக்கும் சுமையுடன் நினைவு கொண்டார். குடிசைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தவன், குடிசைக்கு வெளியே வரத் தொடங்கிய போது, கண்ணில் பட்ட ஓணான், பூனை என்று எதையும் கல்லால் அடித்துக் கொன்றான். மைதானமும், பாடசாலையும் அவன் நினைவுகளில் இருந்து தூரமாய்ப் போனது. பின் வளர வளர நேரம் காலம் அற்று, யாரும் அற்ற இடங்களில் அலைந்து திரிந்ததையும், எதிர்பாராத நேரத்தில், கொல்லப்பட்ட சிறு பிராணி ஒன்றைக் கையில் பிடித்தபடி நிற்கும் அவன் தோற்றத்தையும் ஞாபகம் கொண்டார். திடீர் என்று ஒரு நாள், அவனை வீதியில் போட்டு சனம் அடிப்பதாக கேள்விப்பட்டு பதறி ஓடிப்போனபோது, பாடசாலைக்குச் சென்ற பெண்பிள்ளை ஒன்றை கட்டிப் பிடித்ததாகச் சொன்னார்கள். வீதியில் கைகள் தலையைப் பற்றி இருக்க, துவண்டு கிடக்கும் அவனை, காலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது, தான் கால்கள் துவண்டு, பலம் இழந்து போய், இயலாமையுடன் பார்த்திருந்தது அவருக்கு ஞாபகம் வந்தது.

''யாரிட்டையாச்சும் எதுக்கெண்டு இல்லாம எங்கயாச்சும் வைச்சு அடிவாங்கி ரத்தக் காயமும், கண்டலுமா வருவான், கண்டியோ!''

''ங்ங்... ங்ங்...''

தன் உணர்வுச் சுழிப்புக்குள் மூழ்கிப் போன சடையன், அதன் முகத்தை தன் முகத்துக்கு நெருக்கமாக வைத்துக் கொண்டு, அதன் முன்னங்கால் ஒன்றை தன் தொடையில், சாரத்துக்கு மேல் வைத்து முனகி, வால் கல்லில் பட உரசி ஆட்டி, அதன் நெருக்கத்தை தனக்கு வெளிப்படுத்துவது போல் அனுங்கும் போது, சடையன் மீது, தான் அதிக பாசத்தைக் காட்டி இருக்க வேண்டும் என நினைத்தார். அலைவாய்க் கரையோரம், இரு இளைஞர்கள் உரையாடிப் போனார்கள். மணல் திட்டுக்குப் பின்னே, அவர்களின் மார்பளவுக்கு மேலான உருவம் மட்டுமே, நகர்ந்து போவது போல் அவருக்குப்பட்டது.

தன்னை விட அதிகமாகப் பாதிக்கப்பட்டது, மனைவிதான் என நினைத்தார். பைத்தியக்காரி போல், தலைக்கு எண்ணெய் இன்றி பறட்டையாக விட்டு, போட்ட சோட்டியுடன் கொய்யாத் தோட்ட வளவுக்குள் விறகு பொறுக்கித் திரிந்ததை, குடிசைகள் இருந்து சிதைந்து கிடந்த அடித்தளத்துடன் கூடிய, கொய்யாத் தோட்ட வளவுப் பின்னணியில் ஞாபகம் கொண்டார். தாய் தன் பிள்ளையின் முகத்தைக் காணவிரும்பாது, குடிசைக்கு வெளியே, குடிசையைச் சுற்றிக் கொண்டும், சில வேளைகளில், வளவுக் குள்ளேயே இருக்க விருப்பம் இல்லாது, வளவுக்கு வெளியே, வளவைச் சுற்றியும், தென்னை வட்டையோ, பறவைகளையோ, அண்ணாந்து பிராக்குப் பார்த்தபடி, அலைந்து திரிந்ததை நினைவு படுத்தி வேதனைப்பட்டார். மகன் குடிசைக்குள் இல்லாத வேளைகளில், அவனுக்காக மினக்கெட்டு, மும்முரமாக உணவு தயாரிப்பதை, கரிப் பிடித்த சட்டி பானைகளுடன் ஞாபகம் கொண்டார். பகல் முழுவதும் குடிசைக்கு வெளியேயோ, மைதானத்துக்குள்ளோ, கொய்யாத் தோட்ட வளவுக்குள்ளோ, மனைவியைக் காணாததால், பகல் பொழுது மங்கி செக்கல் பட்ட நேரத்தில், தானும், சடையனும் தேடிப் புறப்பட்டதை, கையில் இருந்த மூன்று கட்டை பெற்றி போடும் வெள்ளி நிற டோச் லைற்றுடன் ஞாபகம் கொண்டார். இருள் சூழ்ந்த ரெயில்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்டேசனுக்குப் பின்னே, சடையனின் மோப்ப சக்தியால் மனைவியைக் கண்டுபிடித்ததை நினைத்துப் பார்த்தார். ரயிலில் பெட்டியில் சாமான்களை ஏற்றுவதற்குக் கட்டப் பட்டிருந்த சாய்தளத்துக்கு அருகே, கூடையும், சிதறிய கச்சான், கடலைப் பக்கட்டுக்களுக்கும் மத்தியில் மயங்கிக் கிடந்ததைக் கண்டுபிடித்து, குழந்தையைப் போல், தோளில் தூக்கிக் கொண்டு வந்ததை நினைத்து வேதனைப்பட்டார். அந்த நாட்களில், தான் மனைவியுடன் நெருக்கமாக இருந்ததை நினைவு கொண்டார். அந்நாட்களில், எண்ணெய் படியத் தலை வாரி, நீற்றாக வெளிக்கிட்டு ஊர்ப் பெண்களுடன் நிவாரணத்துக்கோ, அல்லது ஏதாவது கடன் திட்டக் கூட்டங்களுக்கோ போய் வருவதை, கிறவல் வீதியில் போகும் பெண்கள் கூட்டத்தை, பின்புறமாக ஞாபகம் கொண்டார். அதிகமாக இனிப்புத் திண்டால் அடித் தொண்டை கயருவது போல், எப்போதும் இனிப்புப் பாகினால், பிசுபிசுத்துக் கொண்டிருக்கும் தான், அவளது அடித் தொண்டையில் கைத்து, வெறுப்பை உண்டு பண்ணி இருக்கக்கூடும் என நினைத்தார். நுண் கடன் திட்டக்காரனின் இனிப்பான நுனி நாக்கு வார்த்தைகள் அவளை மயக்கமுற வைத்திருக்கக்கூடும். மயக்கத்தில் மிதந்து கொண்டிருப்பவர்கள், அதிலிருந்து மீளும் முன், அவர்கள் தங்களுக்குத் தேவையானதை சுரண்டி விடுவார்கள் என நினைத்தார். சில வேளைகளில் மிரட்டியும், அதிகாரத்தைப் பயன்படுத்தியும் கூட தங்கள் நோக்கத்தை சாதித்துக் கொள்ளக்கூடியவர்கள் அவர்கள் என நினைத்தார். தான் அன்று கண்டித்தது, அவர்களது உறவுக்காக இல்லை என்பதை, சடையனின் குரைப்பொலிப் பின்னணியில் இருளில் ஊடாடும் அவர்களின் உருவங்களுடன் நினைவு கொண்டார். தனக்குத் தெரியாது, தன் தொழிலை அடகு வைத்து, நுண் கடன் ஒன்றை பெற்றதற்காகத்தானே கண்டித்தேன் என நினைத்தார். மீளச் செலுத்த முடியாது போனால் திண்டாட்டமாகப் போகும் என்று, தான் கண்டித்ததை, முகம் முழுவதும் பருப்போட்டுப்போட்டு, தளும்புகள் நிறைந்த, நுண் கடன் திட்டக்காரனின் முகத்துடன் ஞாபகம் கொண்டார். அதற்காக அவள் அந்த நுண் கடன் திட்டக்காரனுடன் ஓடி, தன்னைத்தானே அவமானப்படுத்திக் கொண்டிருக்கத் தேவையில்லை என, நுண் கடன் திட்டக்காரனின் கூனுண்ட முதுகுடன் ஞாபகம் கொண்டார்.

''இரவில அவங்கட நடமாட்டத்த, உன்ர குரைப்பு காட்டிக் கொடுத்திரும் எண்டு தானே, உனக்கு பாணில நஞ்சு வைச்சுத் தந்தனான், உன்னக் கொண்டது கூட, பிரியோசனம் இல்லாமப் போயிற்றுது. கண்டியோ!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"..."

நீலம் பாரித்த வெண்ணிற சடை உடலும், வெளிறி மஞ்சள் பூத்து, திறந்து கிடந்த கண்களும், வெளித் தள்ளிய நாக்குக்கிடையே தெரியும் கூரான பழுப்பேறிய கோரைப் பற்களுக்கிடையில் நுரை தள்ளி, சக்கச்சலிய, பாறாங்கல்லில் சிதைந்து கிடந்த சடையனின் உடலைப் பார்த்த அவர், திடுக்கிட்டு பாறாங்கல்லில் இருந்து எழுந்து நின்றார். இரவுகளின் நிசப்தத்தை அதிரச் செய்யும் சடையனின் கூர்மையான குரைப்பொலி அடங்கி, நீண்ட நாட்கள் ஆகிவிட்டது என நினைத்தார். நஞ்சு கலந்த பாணை உண்ணும் சடையனின் அப்பாவித்தனமான பார்வை, அவர் நினைவுகளில் வந்து வேதனைப் படுத்தியது. விசுவாசத்தைக் காட்டிக் கொண்டே, தப்பித்துப் போகும் அதன் போக்கு, வளவின் ஏதாவது ஒரு மூலையில், மறைந்து மறைந்து, பின் தோன்றுவது போன்ற உணர்வு, தன்னை வாட்டுவதை உணர்ந்தார். காக்காய் பீச்சிய கல்லில் இருந்து, அழுகல் மணம் வெய்யில் பட்டு அதிகமாக நாறியதால், திரும்பிக் குடிசை நோக்கிப் போனார். குடிசையை நெருங்கிய போது, செத்தைக்குள் இருந்து அழுகிய நகக் காளானின் வெடுக்கு நாற்றம் நாசியைத் தாக்கியதால், கால்கள் திசையற்று, இலக்கின்றி நடக்கத் தொடங்கியதாலும், புலன்கள் குறிப்புணர்த்தாததாலும், அவர் கால் போன போக்கில் போனார்.

கலைமுகம் (இலங்கை) - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடிப்பு

''மாறாட்டக்கத... கதைக்கத் தொடங்கிற்றார்... நாடித் துடிப்பும் நல்லாக் குறைஞ்சிற்றுது, நினைவும் தப்பித் தப்பி, வந்து வந்து, போகுது.''

''நாம என்ன செய்யோணும்?''

''பீங்கான் ஓடு வெட்டினதால... ஏற்புவலியாக்கிப் போட்டிருக்கு... உடம்பு முழுக்க கிருமி பரவிற்று... மாத்து மருந்தொண்டும் ஆன்சர் பண்ணுதில்ல... என்ன தொழில் செய்தவர்...?'

''விவசாயம்...''

''உடம்பு முழுக்க நஞ்சு பரவி இருக்கு. எந்த மருந்துக்கும் ஆன்சர் இல்ல. இதுக்கு மேல ரீட்மெண்ட் என்று ஒண்டுமில்ல. இனிக் கடவுள் விட்ட வழிதான்.''

என்ன ஐஸ் றூமில வச்சிருக்காங்ககா. எனக்கு நல்லா நெனப்பெல்லாம் இருக்கி. கண்ணத் தொறந்து பாக்க ஏலாகா. உதட்ட பிரிச்சு ஒண்ணையும் கதைக்க ஒண்ணா. மத்தப்படி பேசிறதெல்லாம் கேட்டுட்டுத்தாங்கா இருக்கி. மூத்தவன் பம்மிப் பம்மி டாக்குத்தர் ஐயாவோட பேசிக்கிறது கேக்குதுகா. ஆசுப்பத்திரி எரி தண்ணி நாத்தம், நாறுதெண்டா மறுகா என்னத்தச் சொல்லகா. மக்களப் படிப்பிக்கோணும் எண்டுதாங்கா, இந்தக் கண்றாவிப் பம்ம முதுகில கட்டிணணான். இளயல் சின்னதா இருக்கேக்க வெத்திலக்கால வருமானம் பத்திற மாதிரித்தாங்கா இருந்திச்சி. கிள வளர வளரத்தாங்கா வருமானம் பத்தாமப் போச்சி.

அலம்பல்ல ஆடுற வெத்தில இலயப் பாத்துப் பாத்து, தண்ணிச் சோத்தத் திண்ணுற சுகம் இனி ஒருக்காலும் வராதுகா. தோட்டப் பிட்டி வித்தனில, ராச வள்ளிக் கிழங்கும், மையொரிக் கிழங்கும், சிறு கிழங்கும், அறுலோட் கிழங்குமா, ஊருக்குள்ள எத்தின ஊட்டுக்குக்கா இந்தக் கையால பகிர்ந்திருப்பன். மாசத்தில ரெண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டி, நூறு, நூற்றயிம்பது பகளிக்கும் குறையாம வெத்தில ஆஞ்சு போடுவன். முதல்ல இரவல் பம் வாங்கித்தாங்கா மருந்தடிச்சனான். பிரயாசைக்கும், வாடகைக்கும் வருமானம் சரியாப் போச்சுகா. மறுகா ஒள்ளுப்பம், ஒள்ளுப்பமா, சேத்துப் பிடிச்சுத்தாங்கா புதுப் பம் வாங்கி தொழில் செஞ்சனான். அப்படி பிரயாசப்பட்டதாலதாங்கா இண்ணக்கி கிளயெல்லாம் அரசாங்க உத்தியோகம் பாக்குது. மூத்தவன் வாத்தித் தொழிலுக்குப் போன புறகு, நான் அந்தத் தொழில் செஞ்சா, அவனுக்கு கிழிசகேடாங்கா. பம்மத் தொடக் கூடாதெண்டு கொம்பினாங்கா. வர்ர வருமானத்த விடலாமாகா. நான் மருந்தடிக்கப் போனதுதாங்கா. கோவத்துல கோடாரியால பம்முண்ட நடுவுல கொத்திப் போட்டாங்கா. நடுவுல நவிஞ்சு பொந்திற்றுதுகா. அண்டைக்கு என்ற நெஞ்சில கொத்தின மாதிரித்தாங்கா இருந்திச்சி.

இப்பத்தாங்கா நெனப்பு வருது. காட்டுக் கத்திய மாட்டுக் குடிலுக்குப் பக்கத்தில, காயான் பத்தக்க ஒழிச்சி வச்சனான். சின்னவண்ட கண்ணில பட்டா வீட்ட கொண்டு போயிறுவான். மத்தப்படி வெளியாக்கள்ற கண்ணில பட்டா அவ்வளவுதாங்கா. தாக்கத்திய பொன்னன் மாட்டுக்கு புல் அறுக்க கொண்டு போனவன் வீட்ட குடுத்தானோ தெரியாது. மனிசிட்ட வியளம் ஒண்டுஞ் சொல்லனுங்கா. பேப்பர்ல சுத்தின நூறு ரூவா தாள் சாப்பூட்டு யன்னல் நில இடுக்கில சொருகி இருக்கி.

ஆத்துக்கு அங்கால படுவான்கரையிலயுஞ்சரி, இங்கால எழுவானிலயுஞ்சரி, நானும் பம்மும் போகாத வயல் வெட்டையும் இல்ல கத்திரி-கொச்சி பயிர்க் காலயும் இல்லகா. வருசக் கணக்கில என்ற ஓடம்பில ஒட்டினாப் போலதாங்கா இருந்திச்சி பம்.

ஒரு நெனப்பு வருகுதுதாங்கா. கிளாக்கர்ர கத்திரிப் பயிர்க்காலய்க்கு மருந்தடிக்கப் போன நெனப்பு. மருந்து கலக்கின பம்ம முதுகில தூக்கி ஏத்தேக்க கை வழுவீற்றுகா. பம்மின்ற மூடி கழண்டு மருந்து முதுகில வழிஞ்சு நிலத்தில கொட்டி ஊறிற்றுதுகா. கத்தரிக்கு அடிக்கிற மருந்து கொள்ள விலகா. நிலத்தில கொட்டின மருந்த நெனச்சுத்தாங்கா கவலயா இருந்திச்சி. ஒல்லுப்பம் சுணங்கித்தாங்கா மருந்து தன்ற வேலயக் காட்டிச்சி. உடம்பு பூறா பத்திச்சுகா. முதுகில தணல அள்ளிக் கொட்டின மாதிறித்தாங்கா பத்திச்சி. முதுகு முழுக்க அவிஞ்சு போச்செண்டுதாங்கா நெனச்சன். ஓங்காளம் ஓங்காளமா வந்திச்சு, மறுகா தல கிறுகிறுக்கிற மாதிரித்தாங்கா இருந்திச்சி. பெறகு நெனப்பு ஒண்டும் இல்லகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழிச்சுப் பாத்தா, கிளாக்கர் என்ன உக்காத்தி வைச்சுப் பிடிச்சிருக்க, பயிர்காலயக்கு தண்ணியடிக்கிற பொடியமார், வோட்டப் பம்மப் போட்டு பட்டயால எனக்கு தண்ணி வாத்துக் கொண்டிருந்தாங்ககா. களுவாஞ்சிக்குடி ஆசுப்பத்திரியில மருந்தெடுத்தது நெனப்பிருக்குகா. கொஞ்ச நாளு பம்ம முதுகில கட்ட ஏலாம எரிவு இருந்திச்சி. மறுகா வேலை வரத் தொடங்க பம்ம முதுகில கட்டினதுதாங்கா.

சக்குணனுக்கு, வெள்ளாம வெட்டுக்காரங்களுக்கு வாங்கிக் குடுத்த சப்பட்டப் போத்தல் சாரயக் காசு குடுக்க இருக்குகா. நாய்ப் பயல், முதல்ல என்னத்த கலக்கிக் குடுக்கானோ தெரியா, நாக்கில பட்டோனேயே உச்சந்தலயில சுரீர் எண்டு அடிச்சிறுங்கா, மறுகா அவன் சாரய மணத்தோட தண்ணிய ஊத்தித் தந்தாலும் ஒண்டும் தெரியாதுகா. வெறியோட வந்து, சவக்காள முடக்கில திரும்பி, குரைக்கிற நாய்க்கு காராப்பீச்சி துப்பிப் போட்டு, சங்கரப்பிள்ள வாத்தியார்ர கிளயள, வள்ளியெண்டும், தெய்வானயெண்டும் பட்டஞ் சொல்லி கூப்பிட்டு, சண்ட போட்டதெல்லாம் முடிஞ்சு போச்சுகா. கால் புதைய நடந்த கொதிக்கிற வெம்பு மணலயும், கால் புதைஞ்சு சில்லிட பன்வெட்டின தொம்பலயும், இனி என்ற கால் ஒருக்காலும் மிதிக்கப் போறதில்லகா.

போடிட கண்டல் தர எண்டுதாங்கா நெனக்கிறன். முதுகில இருந்து பம்ம இறக்கி பணிய வச்சிட்டு, வாய்க்க அதக்கி இருந்த வெத்திலய துப்பிற்றுகா, கதப்பிராக்கில, மருந்து கலக்கின பிளாஸ்டிக் யக்கில தண்ணிய வாத்து வாயக்கொப்பிளிச்சிற்றன்கா. உடனே ஒண்டும் காட்ட இல்லகா. மறுகா நாலஞ்சி நாளுக்குப் புறவு, வாய்க்குள்ள கொப்புளம் கட்டிற்று, நாக்கு மரக்கட்டாய மரத்துப் போச்சி. என்னத்த திண்ணாலும் புளிப்பும் இல்ல, இனிப்பும் இல்ல, உறைப்பும் இல்ல. வைக்கல சப்புற மாதிறித்தாங்கா மாசக்கணக்கா இருந்திச்சி.

சூலம் குறி சுட்ட கறுத்த நாம்பன் லேசில மாலப் பட்டாலும் மாட்டுக் காலைக்க வராதுகா. அங்கின எதயாச்சும் காந்து கொண்டு நிற்கும், சின்னவன் சாக்குக் கொண்டாந்து கட்டி தண்ணி காட்டிணானோ தெரியாது. வெத்திலக்கால அடைப்புப் படலயிர கிட்டியும் கழண்டு போய்கிடக்கி. பணிய விழ முதல்ல கட்டணும்கா. அலம்பல்ல வெத்திலக் கொழுந்து நல்லா உசக்கப் போயிட்டுதுகா. கொழுந்து பதிச்சு மண் சுமக்கணுங்கா. இதியெல்லாம் நடக்கும் எண்டாகா நெனக்கிற. கால் மாட்டில முட்டி உடைச்சிற்றாங்ககா, இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமாட்டில கொள்ளி வச்சா சரிகா, எல்லாரும் தலயில தண்ணிய வாத்திற்று, அவங்கவங்கட சோலியப் பாக்கப் போயிருவாங்ககா. அம்மாச்சி எண்டொருத்தன் பம்ம முதுகில கட்டிற்று, நிலம் தெளியாத இருட்டில பாம்புக் காட்டிலயும், முதலப் பாளிகள்லயும், ஆமி அம்புஸ் கிடக்கிற ஆத்தோரத்திலேயும், அலைஞ்சான் எண்டு ஆறுக்குகா நெனப்பிருக்கப் போகுது.

இப்பத்தாங்கா இன்னொரு நெனப்பும் வருது. அண்டைக்கு திருநாவாத்தியார்ர வயல்ல மருந்தடிச்சுப் போட்டு வரேக்க, தன்ற சக்கிலில வைச்சு மிதிச்சுக் கொண்டு, தன்ற ஊட்டுக்கே கூட்டீத்துப் பொயித்தார்கா. கறிக் குழம்பு வைச்சிருக்கி சாப்பிட்டுத்தான் போகணுமெண்டு, திருநாவாத்தியார்ர பொட்ட ஒரேபுடியா நிண்டுட்டுதுகா. புள்ள மனங்கோணக் கூடாதெண்டு சாப்பிடுறதுக்கு கைய கழுவினா மருந்து மணம் போக மாட்டேங்குதுகா. அறக்கொட்டிக்கின்னு வந்த புது மருந்துகா அது. புண நாத்தம். மறுகா பொடிச்சீட்ட துருவின தேங்காப் பூவ வாங்கி, கையில நல்லா தேச்சி, உருட்டிப் புரட்டிப் போட்டு, அந்த தேங்காப் பூவ வாழப் பாத்திக்க போட்டுட்டு சாப்பிடப் பொயித்தன்கா. மறுகா திண்ணுட்டு வந்து பாத்தாக்கா, அடவச்சி பெருக்கின நாலஞ்சு கோழிக் குஞ்சுக, கால ஒரு பக்கமா இழுத்திற்று கிடக்குகா. என்ன சங்கதியிண்ணு பாத்தாக்கா, கைய்யத் துறச்சிற்றுப் போட்ட தேங்காத் துருவல குஞ்சுக திண்ணிருக்குதுகா. ஒல்லுப்பம் நேரத்தில் நாலஞ்சு குஞ்சுக செத்துப் போச்சுதுகா. அதுக்குப் பொறகு வயல் காட்டிலேயே கைய்ய, கால கழுவித் துறச்சிட்டுத்தாங்கா ஊட்டுக்குப் போற.

பம்மின்ற வெள்ளிக் கைப்பிடி சூரியன்ற வெளிச்சத்தில பட்டு தக தக எண்டு மின்னுதுகா. பீச்சாங் கை, கைப் பிடியின்ற கறுத்த றப்பர் கைப் பிடியப் பிடிச்சு அடிச்சுக் கொண்டே இருக்கி. சோத்துக்கை மருந்து விசிர்ர லிவர புடிச்சிருக்குகா. பச்ச நெல் தாள்கள மடிச்சிக் கொண்டு மருந்து பூவா சிதறி விரியுதுகா. வயல் வெட்டையில மருந்து காலத்திலயும், தண்ணியிலயும் பரவிப் போகுதுகா. பரவி வந்த மஞ்சள் அறக்கொட்டி எல்லாம் செத்து, கூட்டம் கூட்டமா வயல் வரம்பு மூலக்குத்தில திறந்து கிடக்கிற வக்கடயில வடிஞ்சு, வடிச்சல் வாய்க்கால்ல மிதந்து போருதுகா. இலச் சுருட்டியும், குருத்து வாடலும் இல்லாம வயல் வெட்டை எல்லாம், பச்சப் பசேலெண்டு, காத்து அடிக்கிற பக்கமா சாஞ்சு போய், மறுகா சோக்கா நிமிருதுகா. ஒரு பொய் களவு இல்லகா, தந்த மருந்துக்கும், கூலிக்கும், ஒரு நாளும் ஓரவஞ்சக் செஞ்சதில்லகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பாத்துக் கொண்டிருக்கேக்கயே, வெள்ளாமயின்ற தாள் நுனி கருகிப் போகுதுகா. குருத்து வாடல் நோயில, குருத்துச் சாஞ்சுகிடக்குகா. தண்ணிபாயிற வக்கடயால அறக்கொட்டி பெருகி வருதுகா. பீச்சாங்கை அடிச்சுக் கொண்டே இருக்குகா, சோத்துக்கை விசிறிக் கொண்டே இருக்குதுகா. அறக்கொட்டியும், பூச்சிகளும், பெருகிக் கொண்டே இருக்குகா. கை அலுத்து, கால் அலுத்து, உடம்பு அலுத்து, மனசும் அலுத்துப் போச்சிகா. இன்னும் நான் மருந்த விசிறிக் கொண்டுதாங்கா இருக்கன். அலுத்துப் போன உடம்பு பஞ்சு போல ஆச்சுகா. மெதுவா காத்தில எழும்பின உடம்பு உசக்க உசக்க போகுதுகா, ஆகாசத்தில மிதக்குதுகா. மருந்த விசிர்ரத மட்டும் விடலகா. பரந்து விரிஞ்ச வயல் வெட்ட எங்கினயும், அறக்கொட்டியும், பூச்சிகளும், திரண்டு திரண்டு வந்து கொண்டே இருக்குகா. மிதந்து மிதந்து மருந்தடிக்கிறங்கா. எதுவுமே குறையிற மாதிரி இல்லகா. மனசு முழுக்க அலுத்துப் போச்சிகா. வானம் வேற இருட்டீத்து வருதுகா, வயல் வெட்டயெல்லாம் கண்ணுக்கு தெரியாத அளவுக்கு இருட்டீற்றுகா. மழவாராப்பில இருக்கி, எண்டு நெனக்க, வெட்டிச்சுகா மின்னல், கண்ணப் பறிக்கிறமாதிரி, கிளைமோர் வெடிக்கிற மாதிரித்தாங்கா இடி இறங்கீத்து. அருச்சுனனுக்கு அபயம் எண்டு சொல்லிக் கொண்டே பணிய விழுறங்கா. தரையில மோதின வேகத்தில, நிலம் பிலாப் பழம் பிழக்கிற மாதிரிப் பிழந்து என்ன விழுங்குதுகா. விறகில ஏத்தின ஆப்பு மாதிரி, இருண்ட மண் பிழவப் பாத்து, தரையில குப்பிற பொறுத்துப் போய்க்கிடக்கங்கா.

மழ கொட்டுதுகா, வானம் பொந்து போன மாதிரி சோ எண்டு கொட்டுது. முதுகுக்கு மேல மின்னுற மின்னல் வெளிச்சம், நிலத்தின்ற பிளவுக்குள்ள பளிச் பளிச்செண்டு அடிக்கேக்க, பிழவுக்குள்ள மண்ணும், குருணிக் கல்லும், வேர்களும் தெரியுதுகா. இடிச் சத்தம் கேக்கக் கேக்க கொஞ்சம் கொஞ்சமா நிலத்துக்குள்ள புதையிறது தெரியுதுகா. நான் பணியப் பணியப் போகப் போக, தரையில விழுற மழத் தண்ணியும், மண்ணில ஊறி வடிஞ்சு துளித் துளியா இறங்குதுகா. ஒவ்வொரு துளியும், தாங்கொண்ணாத மருந்து நாத்தத்தோட, விதம் விதமான கலரில இறங்கிறது மின்னல் வெளிச்சத்தில் பளபளப்பா தெரியுது. அந்த கலருகளப் பாத்தாகா, பச்சக் கலர் காக்றோஸ் மாதிரியும் இருக்கி, கத்தரிப்பூக் கலர் நெமினி கனக்காவும் இருக்கி, ஊத்த மரப்பட்டக் கலர் ரவுண்டப் கனக்காயும் இருக்கி, குடலப் புடுங்கிற நாத்தத்தப் பாத்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருடோன் கனக்காயும் இருக்கி, புதுசா அறக்கொட்டிக்கு வந்த மருந்து மாதிரியும் கிடக்குது. கொஞ்சம் கொஞ்சமா நான் பணியப் பணியப் போக வடியிற தண்ணியும் கூடவே நாத்தத்தோட வருதுகா. டக்கெண்டு கவ்விப் பிடிச்சிருந்த மண் தன்ற பிடிய விட்டுட்டுதுகா. கூடவே மருந்து நாத்தத்தோட கலர் கலராக வந்த தண்ணித் துளிகளும், நானும், மண்ணுக்கு அடியில, ஓட மாதிரி ஓடிக் கொண்டிருக்கிற ஊத்துத் தண்ணியில விழுந்தம். நாத்தம் குடலப் புடுங்கிச்சு, ஓடத் தண்ணியில முங்கி நிமிர்ரங்கா, கிளாக்கர்ர கத்தரிக்காலக்க, மூடி கழண்டு மருந்து ஊத்துப்பட்டப்ப பத்தின மாதிரித்தான் உடம்பெல்லாம் பத்துது, ஓங்காளம் ஓங்காளமா வருது, நெனப்பு மெல்ல மெல்ல மங்கிப் போகுதுகா. தண்ணிக்குத் தவிச்ச சூலம் குறி சுட்ட கறுத்த நாம்பன் தன்ற கொம்பால என்ன முட்ட வருதுகா. தண்ணிக்குத் தவிச்ச பேரக் கிளயல் சுத்தி நிண்டு என்ற கழுத்த நவிக்குதுகள்கா. தண்ணிக்குத் தவிச்ச சூலம் குறி சுட்ட கறுத்த நாம்பன் தன்ற கொம்பால என்ன திரும்பத் திரும்ப முட்ட வருதுகா. என்ற நெனப்பு மெல்ல மெல்ல மங்கிப் போகுதுகா.

(பிரசுரமாகாத படைப்பு - 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீவீஎப்

"இலங்க ஆமியோ, இந்தியன் ஆமியோ, அத்துக்கட்டுப் பாதையில விடிய வெள்ளன றோந்துக்கு வாரதுக்கிடையில, கட்டு வலைக்காறங்கள் வந்து காப்பாத்திப் போட வேணுமெண்டு, பெத்தா சொல்லித்தந்தது போல, காலில செருப்பில்ல, வாயில சாப்பாடில்ல, எண்டு நினச்சுக் கொண்டு வைரவரப்பாட்ட மனமுருகிக் கேட்டுக் கொண்டன். ஆத்தில கழுத்து மட்டத்தில தாண்டு போயிருந்த உடம்போட சேட்டும், காக்கி ஜீன்சும் நனைஞ்சு ஊறி, உடம்ப குளிரில விறைக்கப் பண்ணி கொடுக வைக்குது. தப்பிக்கோணும் எண்ட வேகத்தில இருட்டில முரட்டுத்தனமா நீந்தி வந்ததில, கூலமாய் விரிஞ்சும், மிதந்தும், தாண்டும் கிடந்த கட்டுவலைக்குள்ள சிக்குவன் எண்டு தெரிஞ்சிருந்தா, கையில பிளேட்டோ, சின்னக் கத்தியோ கொண்டு வந்திருப்பன். நிலவு முன்னிரவில கடந்திருந்தது ஞாபகத்துக்கு வருகுது. ஆத்து வெளியிண்ட பெரும்பரப்பும், வெளிர் வானமும், இருளிண்ட அடத்தியக் குறைச்சிருக்குது போலப் படுகுது. சிறு சிறு ஒளிர்வோட எண்ட கண் மட்டத்துக்கு நெருக்கமாக கடந்து போன ஆத்து அலைகள் கூட என்ன மூழ்கடிச்சு விடும் போல வெருட்டுது. ஒத்தக்கையில சிக்கியிருக்கிற, கட்டுவல கட்டுறதுக்கு நட்டு வைச்சிருந்த, பாசி படிஞ்ச வழுவழுப்பான காட்டுக்கண்ணாக் கதியால்தான், இன்னும் என்னை ஆத்து தண்ணியில தாண்டு போகாமக் காப்பாத்திக் கொண்டிருக்குது. உடம்போட சேத்து கைகளும் வலைக்குள்ள சிக்கியிருக்கு. வலையின்ற இடுக்குக்குள்ளால நீட்டின நுனி விரல்கள்தான் வழுக்கும் கண்ணாக் கதியாலப் பிடிச்சிருக்கு. தப்பி வரேக்க தலையச் சுத்தி கழுத்து மட்டத்தில, காப்பரணப் போல தண்ணியில மிதக்கவிட்டு வந்த ஆத்து வாழைக் கொடிகள், தண்ணி ஓட்டத்தில என்ன விட்டு மெதுமெதுவா ஒதுங்கிப் போறத ஏலாமையோட பாத்துக் கொண்டிருக்கிறன். மூச்சுப் பிடிச்சு உடம்ப ஆத்துக்குள்ள அமத்திப் பாத்தன். கித்தான் சப்பாத்துக்கு மேலாளயே வழுவழுப்பாக பாசியையோ, அழுகிப் போன எதையோ மிதிப்பதை உணர முடியுது. கழுத்த தண்ணி மட்டத்துக்கு திரும்பவும் உயத்தினன். முகத்தில வழியிற தண்ணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைக்க வலைக்குள்ள சிக்கின கை பரபரக்குது. நீந்தி வந்து வலையில சிக்கி திணறின போது, குடிச்ச ஆத்துத் தண்ணில வயிறு கனமாகிக் கிடக்குது. காத்து ஆத்துவாழையில மோதி சிறு சிறு சலசலப்பு ஓசை எழுப்புது. கரையில மடியிற அலைகளின்ட ''டப்'' எனும் மெல்லிய சத்தம் கேக்குது. இன்னும் கொஞ்சத் தூரம் நீந்தி இருந்தாலே கெட்டியான கரையின்ற நிலத்தில கால்கள வலுவா ஊன்றித் தப்பி இருக்க முடியும். இப்பிடி அரை அடி எட்டாத தண்ணியில தத்தளிக்க வேண்டி வந்திருக்காது.

தப்பிறதுக்காக சென்றியில துவக்கப் போட்டுட்டு ஆத்தில இறங்கேக்க, இளம் சூடான ஆத்துத் தண்ணிதான் என்ற உடம்ப உள்வாங்கினது. ஆத்துவாழக் கொடிகள தலையச் சுத்தி கழுத்து மட்டத்தில காப்பரணா ஆத்துத் தண்ணியில மிதக்க விட்டுக் கொண்டு, கொஞ்சத் தூரம் தவண்டு வந்து, பிறகு அரமண்டியில நடந்து, கழுத்து மட்டத்தில நிமிந்து கொஞ்சத்தூரம் நடந்து, பிறகு தான் நீந்தி வந்தனான். தொடக்கத்தில எல்லாம் எனக்கு சாதகமாகத்தான் இருந்தது. இப்ப கால்களையோ, கைகளையோ விரிக்கவோ, அகட்டவோ முடியாதபடிக்கு, நைலோன் வலைகள் உடம்போட சேர்த்து கை, கால்கள இறுக்கி இருக்கு.

விலகிப் போகும் ஆத்துவாழ இதழ்களிலயும், ஆத்துத் தண்ணி அலை மடிப்புக்களின்ற சிறு ஒளிப்புள்ளிகளிலயும், அவளின்ட முகம் உருவாகி வந்து, என்ன அணைச்சு பிறகு அழிஞ்சு போகுது. மாட்டு மொச்சையோட கூடிய அவளின்ற உடம்பு வெப்பக்காத்து நினைவில வந்து தாக்குது. கரிய சுருள் முடி காத்தில, விளம்பர நடிகைகளின்றது போல கலைஞ்சு பறக்க, சிரிப்போட ஆத்துத் தண்ணிக்கு மேல நடந்து வந்து, அணைச்சுத் தூக்கி கரையில இறக்காம, அந்தரத்தில தவிக்க விட்டு விட்டு மறைஞ்சு போனாள். அவளின்ற நினைவு குளிரில விறைச்சுக் கிடந்த உடம்ப வெப்பமாக்கி, புடுக்க சஸ்பென்டருக்குள்ள விறைக்கச் செய்தது.

வெயில் அனல் கொழுத்திக் கொண்டிருந்த இரண்டு மணி மதிய வெயிலிலதான் அந்தச் செய்தி ஊர் முழுக்கப் பதட்டத்தை உண்டு பண்ணியிருந்தது. பள்ளி விட்டு வெள்ளை யுனிபோமில வந்த A/L படிக்கிற அண்ணாச்சிமார்ர சைக்கிள்கள், மடத்தடி சுடலை மதிலில சாத்தி இருக்கெண்டும், அண்ணாச்சிமாரை வெள்ளை வேனில கடத்திப் போட்டாங்க எண்ட செய்தியும், ஊரை உறைய வைத்தது. அண்டைக்கு, ஊர் அரவம் காட்டாம அமைதியா இருந்த மம்மலான பின்னேரப் பொழுதிலதான், சீவிளப் என்ற பெயர முதல் முதலா தெரிஞ்சு கொண்டன். இந்திய இராணுவத்தின்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையோட, இயக்கங்கள் படிக்கிற பொடியன்களைப் பிடிச்சு பயிற்சி குடுத்து, 'சீவீஎப்' எண்ட படைய உருவாக்கிறதாக ஊர்ச்சனம் திணறித் திரிஞ்சுது. ஆரம்பத்தில ஒழிவு மறைவாத்தான் ஆள் பிடிச்சாங்கள். இரவில் படம் பாத்துப்போட்டு வந்தவங்களையும், கூட்டமாக நிண்டாக்களையும் பிடிச்சாங்கள். பிறகு சாதாரணமாவே சந்திகளில வேன நிப்பாட்டிப்போட்டு றோட்டில போய் வந்து கொண்டிருந்த இளந்தாரிப் பொடியங்களையும், சின்னாக்களையும், வளவுக்குள்ள நிண்டவங்களையும், வீடு புகுந்தும் பிடிக்கத் தொடங்கினாங்கள். இயக்கம் ஆள் பிடிக்கிற விசயத்த கேள்விப்பட்ட அம்மா பதறத் தொடங்கிற்றா. சும்மாவே கனக்கக் கதைக்காத மனிசி, ஒரேயடியா ஊமையாப் போயிற்றா. மனிசிட கூனுண்ட முதுகு இன்னும் கூனுண்ட மாதிரிக் கிடந்தது. பயத்திலயும், கவலையிலயும், சுருங்கிப் போன அம்மாட முகம் காஞ்சு கருத்துப் போய்க் கிடந்தது. சோட்டிக்கு மேலால சுத்தின சாரியோட தெருவிலயும், ஒழுங்கைக்கயும், வளவுக்கையுமா, குட்டிபோட்ட நாயாட்டம் மனுசி கோவமா புறுபுறுத்துக் கொண்டு அலஞ்சு திரிஞ்சுது. என்ன வளவுக்க கூட நிக்க விடாம வீட்டுக்க இருத்தி வைச்சா. அம்மா பர்ற அவஸ்தயப் பாத்து நான் வீட்டுக்க இருக்க முயற்சி செஞ்சன். ஏதாவது நினைவுப் பிராக்கில, வீட்டுக்க இருந்து வளவுக்கயோ, ஒழுங்கைக்கயோ வந்திருவன். மனிசி எங்க நிண்டு பாக்குதோ தெரியாது. நான் வீட்டுக்க இருந்து வெளியில வந்த உடனே, பதறி அடிச்சு வந்து, கூட்டுக்க கோழியச் சாய்க்கிற மாதிரி, என்ன வீட்டுக்குள்ள சாச்சு, வீட்டு வாசல்ல முழுங்காலுக்கு மேல கைய நீட்டிக் கொண்டு, காவல் இருக்கத் தொடங்கிரும். அப்பிடியான ஒரு பின்னேரப் பொழுதிலதான், அம்மா அக்காவின்ட சட்டையப் போட்டு, தலையில கெல்மட்டும் மாட்டி ஊரில இருந்து சலி மோட்டார் சைக்கிள்ல, தூரத்து உறவுக்காரர் ஒருவரின்ட சேனை வீட்டுக்கு அனுப்பிவைச்சா. பனை மட்டை வரிஞ்ச, செத்தை அடைப்பு வேலிக்குள்ள இருந்த, பதிவான கூரை கொண்ட ஓட்டு வீட்டிலதான், அவர் தங்கவைச்சார். வெளிவாசலோட ஒற்றைத் தென்ன மரமும் மாட்டுக் கொட்டிலும் வீட்டுக்கு முன்னே இருந்தது. சேனப் பக்கம் ஆள் பிடிக்க வந்தா, ஒளிக்கிறதுக்கு காடு பக்கமா இருந்தது. மாறி மாறி நிக்கிறதுக்கு கன இடம் இருந்தது.

அந்த வீட்டில என்ன ஒரு பொருட்டாவே எடுக்காம, தானுண்டு தன்ற வேலையுண்டு, எண்டு வளைய வந்து கொண்டிருந்தாள் அவள். மாட்டுச் சாண வாடயும், மூத்திர வாடயும், மாட்டு மொச்சை வாடயும் அடிக்கும் அந்த மாட்டுக் கொட்டிலுக்க, நிலம் இருட்டத் தொடங்கின செக்கல் பொழுதிலதான் அவள முதல்தரம் தொடக்கிட்டினது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திக் கருக்கலில பால் கறந்து கொண்டிருந்தவள புதினம் பாத்துக் கொண்டிருந்த போதுதான், அவள் தன் கண்யாடையால தன்ற துடையக் காட்டினாள். முதலில தடுமாறி திணறிப் பயந்து போனன். தான் இரு கையிலயும் வேலையாக இருக்கிறதக் காட்டி, தன்ற துடையில கடிக்கிற நுளம்ப அடிக்கச் சொல்வது புரிஞ்சுது. நெருங்கிப் போய் நுளம்பத் தட்டி வருடி இழுத்த போது, அவள்ட மிருதுவான அடத்தி இல்லாத குளிச்சியான மயிர்த்துடையில, இரத்தத்தோட நசிஞ்சு, சிதஞ்சு, உருண்டு வந்தது நுளம்பின்ட கருத்த மிச்சம். துடையில வருடினது என்ர உடம்ப சிலிர்க்கப்பண்ணி, புடுக்க விறைக்க வைச்சுது. சாரன தூக்கி டென்ட் அடிச்சு நிண்டுது புடுக்கு. எவ்வளவு மடிச்சுப் பிடிச்சும், அடங்காம திமிறிக் கொண்டு நிக்குது புடுக்கு. மாட்டு மொச்சை மணத்தோட நரம்புகள பிசஞ்சு, சில்லிடும் குளிர்ச்சி மாதிரி, அவள்ற நினைவு எனக்குள்ள பதிஞ்சு போச்சு. முன் ஏற்பாடா சஸ்பெண்டர் போட்டிருந்தும், நுளம்படிக்கும் சந்தர்ப்பங்கள் கிட்டாமலே, பால் கறக்கும் பின்னேரக் கருக்கல்கள் கடந்து போய்க் கொண்டே இருந்திச்சு.

ஆனா, அந்தத் தொடுகை வேறு விதமாக்கிட்டியது. அவள்ட சித்தியிட குழந்தையோட மதிய வேளையில, வளவுக்குள்ள உலாவிக் கொண்டிருந்தவள், திடீர் எண்டு என்ன நோக்கி ஓடி வந்தாள். நெருக்கமாக என்ன உரசி நிண்டவள் குழந்தய கையில தந்து போட்டு, திரும்பி வெளிக் கடப்ப பாத்து ஓடினாள். வெள்ளக் கண்டுக் குட்டி வேலி இடுக்குள்குள்ளால வெளியேறி, வீதியில போய்க் கொண்டிருந்தது. பின்னால துரத்தி ஓடி, கயித்தப் பிடிச்சு இழுத்து வந்தாள். அந்த நெருக்கம் கூட கிட்டாது, அப்புச்சி, நான் TELO இயக்க உறுப்பினர், என்ற அட்டைய, எங்கட ஏரியா TELO பொறுப்பாளரிட்ட இருந்து வாங்கி வந்திருந்தார். திரும்பவும் படிக்க எண்டு ஊருக்குக் கூட்டிப் போனார்.

ஆத்தில பெருக்கு கூடியிருக்குது. கழுத்து மட்டத்தில இருந்த தண்ணி மட்டம் வாய்க்கு இடம் மாறித் தளம்பியது. கண்களுக்கு நெருக்கமாக அலை மடிப்புக்கள் கடந்து போனது. காத்திண்ட வேகம் குறைய திரும்பவும் தண்ணி மட்டம், கழுத்துக்கு கீழே இறங்கிற்று. பாலம் ஆத்தின்ற குறுகலான இடத்தில இவங்க ராணுவ முகாம் இருக்குது. ஆனா இந்திய ராணுவ முகாம் எந்தத் திசையில இருக்கெண்டு தெரியயில்ல. தூரத்தில மங்கலாக வெளிச்சம் தெரியிர 40 வோல்ட் குண்டு வல்ப் மின்னும் இடந்தான், இலங்க ராணுவத்தின் கடைசி சென்றிப் பொயின்டாக இருக்க வேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சென்றியில இருக்கிறவன் சினைப்பரால அடிச்சாலே தலை சிதறி ஆற்றில இரத்தம் கொப்பிழிக்கும். சிலவேள இந்திய ராணுவ முகாம் இருக்கும் விளிம்பில கூட அகப்பட்டுக்கிடக்கக் கூடும். சிகப்பு ரேசர் கதிர்ப்புள்ளி, என் தலைய ஏதாவது ஒரு பக்கத்தில் இருந்து சிதைத்து விடத் துடிப்பது போல எனக்குள்ள பதட்டம் இருந்து கொண்டே இருக்கு.

ஆள் பிடியும், அவள் நினைவுகளும் மறந்து போன மாலைப் பொழுதிலதான், டியுசன் கிளாஸ் முடிஞ்சு சைக்கிளில வந்து கொண்டிருக்கேக்க, ரயில்வே ஸ்டேசன் பங்களா முடக்கில, எங்களுக்குப் பின்னால வந்த வெள்ளவேன், எங்கள வழிமறிச்சு றோட்டுக்கு குறுக்காக நிண்டுது. நீளப்பாட்டுக் கதவை அகலத் திறந்த சிலர் துவக்குகளோட இறங்கினாங்க. சைக்கிள்கள வாங்கி பங்களா மதில் சுவரில் சாத்தினாங்க. நான் TELO இயக்க உறுப்பினர் அட்டையக் காட்டினன். வாங்கிப் பாத்துப் போட்டு கிழிச்சு கீழ போட்டாங்க. கையப் பின்னால முறுக்கித் திருகி வேனுக்குள்ள என்னத்தான் முதலில திணிச்சாங்கள்.

''ரெயினிங் கேம்புக்கு வா, TELO எண்டா என்ன எண்டு காட்டுறன்.''

இரண்டாவது பெச்சிலதான் பிடிச்சு 'சீவீஎப்' ரெயினிங்குக்கு கொண்டுவந்தாங்க. ஆத்தோரம் இருந்த முன்னால் பாராளுமன்ற உறுப்பினரின்ற தென்னந்தோப்புத்தான் பயிற்சி முகாமா இருந்தது. பயிற்சி என்பதை விட, எப்போதும் எவரையாவது நிலத்தில விழுத்தி, பூட்ஸ் காலால மிதிக்கிறதுதான் பயிற்சியாக இருந்தது. தப்பி ஓடாமல் இருக்க எல்லாருக்கும் மொட்டை அடிச்சிருந்தாங்க. ஆனா, துவக்க நெஞ்சோட அணைச்சு, குறி பாத்து சுடுறதுக்கு சொல்லித் தாரதில மட்டும் குறியாக இருந்தாங்க.

''என்ன கொரில்லா தாக்குதலா நடத்தப் போறீங்க? நேரடி ஆட்டந்தான். -டூ ஓர் டைய். துவக்க கீழ போடாம சுட்டுக் கொண்டிருந்தாப் போதும். அதுக்கு இந்த பயிற்சி போதும்.''

இப்பிடித்தான் பச்சத் தென்னம் மட்டையால அடிச்சுப் பயிற்சி தந்தாங்க. அடி தாங்காம முதல் தரம் தரவழியாத்தான் தப்பிக்க முயற்சி செஞ்சன். வடக்கு கிழக்கு முதலமைச்சர் 'சீவீஎப்' பயிற்சிய மேற்பார்வசெய்ய, முகாமுக்கு வாரதா அறிவிச்சிருந்த அந்த இரவத்தான், நானும் தப்பிக்கிறதுக்கொண்டு தீர்மானிச்சன். அமாவாச இருட்டில தென்னை மரங்கள் அடத்தியா இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத்தில மேட போட்டு, போக்கஸ் லைட் வெளிச்சத்திலதான், முதலமைச்சருக்கு ராணுவ மரியாதை செய்தம். பிறகு, பெறுப்பாளர்கள் மாறி மாறி உரையாற்றிக் கொண்டிருந்தாங்க. நான் தப்பிக்கிறதுக்கான நேரத்த பாத்துக் காத்திருந்தன். அண்டைக்கு காலயிலேயே துவக்கு எல்லாத்தையும் வாங்கி வைச்சிட்டாங்க. மதியம் வேலை செய்யிற சாட்டில தென்ன மரத்தோட அண்டின வயல் வரப்போட, வேலிக்கு கீழ இருந்த வக்கடைய அகலப்படுத்தி தப்பிக்க கண்டாயம் உண்டாக்கி வைச்சிருந்தன்.

''அடுத்து, இன்றைய பிரதம அதிதி உங்கள் முன் உரையாற்றுவார்.''

அறிவிப்பாளர் ரெண்டு மூண்டு தரம் ஸ்பீக்கரில அறிவிச்சார், ஆரும் கைதட்டுற மாதிரி இல்ல. ஸ்பீக்கர்தான் கூ... எண்டு இரஞ்சிது. என்ற மனம் பதட்டத்தில் அடிக்கத் தொடங்கீற்று. பின்னால நழுவுறதுக்கு போதுமான இருளில நான் இருக்கிறதையும், வழிப்பாட்டின்ற இருளையும் கவனிச்சுக் கொண்டே இருந்தன்.

''தமிழ் ஈழம் என்னும், அந்த மகத்தான கனவுடன், அந்த கனவு தந்த சுகத்துடன் மீளாத்துயிலில் ஆழ்ந்து போன தோழர்களின் கனவை நனவாக்கப் போகும் உங்கள் முன் உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.''

ஸ்பீக்கரிண்ட அம்புளிவயரில இருந்து கூ... கூ... என்ற இரைச்சல் அவரது குரலை சிதைச்சு இடைமறிச்சுது. நீண்டு கொண்டிருந்த அவர்ற பேச்சின்ற சாரம் எதுவும் மனதில பதியாத அளவுக்கு, தப்பிக்கிற முனைப்பு வலுவாக மாறிக் கொண்டிருந்திச்சு.

''உங்களில பலர் துப்பாக்கிகளுடன் தப்பிப் போய் இலங்கை ராணுவத்துடன் இணைஞ்சு செயற்படும் புலித் துரோகிகளுடன் இணையிறதையும், தப்பிக்க முனையிறதும், பயிற்சிக்கு ஒத்துழைக் காததையும், தோழர்கள் எமக்கு அறிவிச்சுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதனாலதான், நான் இன்று உங்கள் முன் வந்துள்ளேன். நீங்கள்தான் உங்கள் மாமாமார், சித்தப்பாமார், அண்ணன்மார்கள் சிந்திய ரத்தத்தை, அவர்களது கனவை நனவாக்கப் போகிறவர்கள். இந்தப் படைதான் நாளைய தமிழ் ஈழத்தை உருவாக்கப் போகின்றது என்பதை மனதில் கொண்டு மகத்தான தியாகங்களைச் செய்யத் தயாராகுங்கள்.''

தப்பித்தல் என்ற சொல்லும், ஸ்பீக்கரில முதலமைச்சரின் குரல் மௌனமானதும், என்னையும் அறியாம என்ற கவனத்தையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையையும் மேடைப் பக்கம் திரும்பிற்று. முதலமைச்சரின் கை விரல் எங்கள் கூட்டத்தச் சுட்டி நிண்டது. உடம்பு நடுங்கி உதறத் தொடங்கீற்று.

''நீங்கள் ஏன் தப்பிக்க முனையிறீங்க? பயிற்சிகள் கடுமையாக இருக்கிறதா? அடிக்கிறார்களா? சொல்லுங்கள். முதலமைச்சராக உங்கள் பிரச்சினையத் தீர்ப்பது என் கடமை.''

ஒருவரும் பதில் சொல்லாததால முதலமைச்சர் எதுவும் பேசாம மௌனமாக நிக்கிறார். பயிற்சியாளர் ஒருவர் மேடையில இருந்து எழும்பி வந்தார். முதலமைச்சர் அவர கையமத்தினார்.

''சொல்லுங்கள்.''

தொள தொள சட்டை போட்டிருந்த, ஒரு கூனல் மொட்டைத் தலை, மற்ற மொட்டைத் தலைகளுக்குள் இருந்து எழும்பி நிண்டுது. ஆங்கிலப் படங்களிலவார வேற்றுக்கிரக வாசி போல, பெரிய ஒற்றக் காது இருளில தெரிய எழும்பி நிண்டான் ரமணன்.

''படிக்க வேணும் ஐயா.''

வேகமா மற்ற மொட்டத் தலைகளோட தலையா கலந்து போனான் ரமணன்.

''ஏன் படிக்கவேணும்?''

''கேனத்தனமான கேள்வி.''

மொட்டத்தலைகளுக்குள்ள, மொட்டைத்தலையாக மறஞ்சு கொண்டு ஆரோ குரல் கொடுத்தான்.

நீண்ட அமைதிக்குப் பிறகு, அடிக்குப் பயந்த ஒல்லியான ஒரு மொட்டத்தலய மற்ற மொட்டத் தலைகள் எழுப்பிவிட்டன.

''ஐயா, வேலைக்கு போகவேணும். உழைக்க வேணும். குடும்பத்த காப்பாத்த வேணும். இரண்டு தங்கச்சிமார கரை ஏத்த வேணும், படிச்சாத்தானே ஐய்யா இதல்லாம் நடக்கும்?''

பதில் சொன்ன பிறகும் அவன் நிண்டு கொண்டிருந்தான். மற்ற மொட்டைத்தலைகள் அவனை இழுத்துக் கீழ விழுத்தின.

''அதத்தாண்டா மக்கள் நாங்களும் செய்யப் போறம். இந்திய அரசாங்கச் சம்பளத்தோட வேலை. மலரப் போகும் தமிழ் ஈழத்தில் நீங்கள் தானேடா பெரிய பெரிய பதவியில இருக்கப் போறாக்கள். உற்சாகமாக இருங்க. உங்களுக்கு சம்பளம் உண்டு. நல்ல எதிர்காலம் உண்டு.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலமைச்சர் இன்னும் ஏதேதோ பேசிக் கொண்டிருக்க, வக்கடைக் கண்டாயம் என் முழு மனசிலயும் நிறைஞ்சு இருந்துச்சு.

ஸ்பீக்கறில ஏதோ ஒரு அறிவிப்பும் பின் மௌனமும், பின் பின்னணி இசை இல்லாம "தோல்வி நிலையென நினைத்தால்..." யாரோ வசனமாக பாடிக் கொண்டிருந்த போது, ஸ்பீக்கர் சத்தத்தில இருந்து தூரமாக விலகி வயல் வெட்டைகளிலயும், ஒற்றையடிப் பாதையிலுமாக, இரவிருட்டில, இலக்கில்லாம நடந்து கொண்டிருந்தன். ஒற்றையடிப் பாத தார் வீதியில கொண்டு வந்து விட்ட போது, ஸ்பீக்கர் சத்தம் எங்கோ தூரத்தில் கிணற்றுக்குள்ள கேக்கிறது போல கேட்டுக் கொண்டிருந்தது.

தார் வீதிக்கு வந்து, எந்தப் பக்கம் பாலத்துக்குப் போகும் எண்டு தெரியாம, என் புத்தி அனுமானிச்ச திசையில நடக்கத் தொடங்கினன்.

தூரத்தில ஒரு ஒத்த குறுகின ஒளிப் பொட்டு ஒண்டு, மங்குறதும், பிறகு கணன்று செஞ்சிவப்பாவதுமா, சிறு அதிர்வுகளில் நெருப்புப் பொறிகள் சிதறுவதுமா, மேலும் கீழும் ஒரு சின்ன இடைவெளியில அசையிரதுமாக, இருளில எனக்கு எதிரில தார் றோட்டில் மிதந்து வாரதக் கண்டன். நிச்சயமா அது மின்மினிப் பூச்சியாக இல்ல. தார் ரோட்டில இருந்து இறங்கி, ரோட்டோர மரநடுகைத் திட்டத்தில நட்ட மரத்தின்ற பாதுகாப்பு அடைப்புக்குப் பின்னால பதுங்கிக் கொண்டன். ஒளிப் பொட்டு கிட்ட வர வர ஒரு விதமான கலகலக்கிற இரச்சலயும், அதிர்வையும் கேட்டன். சிக்ரட் பிடிக்கிற மணமும் கிட்ட வந்தது.

"அண்ணே..."

சைக்கிளின்ற இரச்சல் நிற்க, இருள் மூச்சுவிட ஏலாதளவுக்கு இருந்தது. ஒளிப் பொட்டு இருளில ஆடாம நிண்டு மங்கத் தொடங்கிற்று.

"ஆர்ரா... நீ?"

இருளப் பாத்து அதட்டினது அந்தக் குரல்.

"அண்ணே, என்ன பிடிச்சுக் கொண்டு வந்து ரெயினிங் குடுக்கிறாங்கண்ணே. அம்மாவப் பாக்க வேணும் போல இருக்கு. அதான் தப்பி வந்திற்றன் அண்ணே. பாலத்துக்கு போற வழியக் காட்டுங்கண்ணே."

குரல் இயலாமையாலயும், பயத்தாலயும், நடுங்கிறது, காஞ்சு வறண்ட உதடு பேச முடியாமல் திக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓசாடா நீ, பாலத்தால தப்பிப் போறதெண்டு நினச்சு, ஆமிட்ட வெடியா வாங்கப் போறாய்...? ஏறு சைக்கிள் நான் துறையடிக்குத்தான் போறன். கொண்டே விடியவெள்ளன படகில ஏத்தி விடுறன் வா.''

அந்தக் குரல் வெருட்டுற மாதிறி இருந்ததால முதல்ல ஓடி விடலாம் எண்டுதான் நினைச்சன். திக்கெண்ட இருட்டு பயப்பிடுத்தினதாலயும், ஆமி சுடும் எண்ட பயத்திலயும், சைக்கிள்ல ஏறிற்றன். ரெயினிங் கேம்பில இருந்து கொஞ்சத் தூரத்திலதான் துறையடி அம்பளம் இருந்தது. அதக் குறிவைக்காம பாலத்த இலக்கு வைச்சது முட்டாள்தனமாத்தான் பட்டுது.

சைக்கிள் தார் ரோட்டில ஓடி, இரண்டு மூண்டு மதகில ஏறி இறங்கி, கிறவல் வீதியில திரும்பி, இரண்டு மூண்டு முடக்குத் திரும்பிய போது ஸ்பீக்கர்ர சத்தம் துலக்கமாகக் கேட்டது.

''அடே சின்னா, கறுத்த கிடா எங்கடா?''

''மணியண்ண, மேயத்தானே கட்டிப் போட்டு வந்தனான்.''

''வயல் வெளி எல்லாம் நல்லாப் பாத்திற்றன். சின்ன ஆடக்காணமடா.''

''மணியண்ண, நீங்க கல்ளுப்பிளா பாத்திருப்பீங்க வடிவாப் பாத்தீங்களா?''

''அடே, வயல் வெளியெல்லாம் நல்லாப் பாத்திற்றண்டா.''

''மணியண்ண, வயல் வெளியில எங்க பாத்தனீங்க?''

''கோவத்த கிளறாத, உன்னாணக் கேக்கிறன். ஆட்ட என்னடா செய்தனி?''

''மணியண்ண? வயல் வெளியெல்லாம் காஞ்சுகிடக்கு? ஆடு மேயிறதுக்கு என்ன கிடக்கு? அதான், ஆட்ட வயல் வெளியில பச்சையா இருந்த ஆலமரத்தில ஏத்திக் கட்டிப் போட்டு வந்தனான். இப்ப வயிறு நிறைய திண்டு போட்டு, புழுக்கையும் போட்டிருக்கும் மணியண்ண.''

''அட நாசமாப் போனவனே எந்த ஆல மரமடா?''

''வயல் வெளியில இருக்கிற ஆலமரம்.''

''கொள்ளையில போறவனே நாலஞ்சு மரமிருக்கு அதுல எதுடா?''

''வைரவர் சூலம் இருக்கிற ஆல மரம் மணியண்ண.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வைரவரப்பா என்ற ஆட்ட காப்பாத்து. ஓடுடா ஓடுடா ஆலமரத்தடிக்கு ஓடுடா.''

''மணியண்ண, அங்க பாருங்க ஆடு தூக்குப் போட்டுட்டுது.''

''நாசங்கட்டுவானே, ஏழாயிரம் போயிட்டுதேடா.''

''மணியண்ண, காசு காசெண்டு பறந்து, வெள்ள மறிய வித்தீங்க. அந்த சோகத்தில கிடா தூக்குப் போட்டுட்டுது.''

ஸ்பீக்கரில ரவியும், நாதனும் மாதனமுத்தா கதையையும், மணியண்ணன் ரைட் நாடகத்தையும் மிக்ஸ் பண்ணி அசத்திக்கட்டிக் கொண்டிருந்தாங்கள். காற்றில ஸ்பீக்கர் சத்தம் நெருக்கமாகிவரும் போதுதான் மெல்ல சந்தேகம் தட்டத் தொடங்கியது. சிகரட்டையும், சாரக்கட்டையும் நம்பி சைக்கிளில் ஏறினது பிழையோ என நினச்சபோது, சைக்கிள் ரெயினிங் கேம்பின்ற மெயின் கேட் இருக்கிற ஒழுங்கையில திரும்பிச்சு. முகாம் வாசல் சென்றி, போக்கஸ் வெளிச்சத்தில தெரிஞ்சுது. திடுக்கிட்டு அவர்ர முகத்த திரும்பி பாத்தா, அந்த உருவத்த எங்கயோ பாத்தது போல இருந்திச்சு. சிலிப்பர் கட்டை பெஞ்சில மொட்டை தலைகளுக்கு முன்னே குந்தி இருக்கிற அந்த உருவம் நினைவில பதிஞ்சுது. R.P.G மாஸ்டர், வலது காது, நெருப்பில கருகின பிளாஸ்றிக் துண்டின்ற மிச்சம் போல, சுருண்டு கிடக்க, காதடி தலமுடி மட்டும் வெள்ளை இல்லாத பழுப்பு நிறத்தில நரைச்சுக் கிடக்கிற, R.P.G ரெயினிங் மாஸ்டர். திணறியதில சைக்கிள் கென்டில் உலாஞ்சினாலும், சைக்கிள் வலுவாக முகாம் நோக்கிப் போய்க் கொண்டிருந்திச்சு. ரெண்டு முரட்டுக் கைகளும் வலுவாக கென்டிலப் பிடிச்சிருக்க, பாரில பிடிச்சிராவிக்குள்ள அகப்பட்ட முருங்கச் செத்தல் மாதிரி நான் இருக்க, சைக்கிள் கேம்ப் முன் சென்றிய நெருங்கிற்று.

போக்கஸ் வெளிச்சத்தில R.P.G மாஸ்டரின்ட சைக்கிள் பாரில இருந்த என் மொட்டையக் கண்ட சென்றியில இருந்தவன் எழும்பி ஓடி வந்தான். வந்த வேகத்தில சைக்கிள் பாரில இருந்து என்ன இழுத்து கீழ விழுத்தி வயிற்றிலயும், நெஞ்சிலயும் பூட்ஸ் காலால மிதிச்சான். உடல் முழுக்க கடுப்பும், நோவும் தொடங்கி இருந்திச்சு.

இரவு முழுக்க போக்கஸ் லைட் கண்ணைக் குத்துற மாதிரி, எதிர இருந்த தென்னையில கட்டிப் போட்டாங்கள். தலயில கொட்டின பனி குதிவர குளிரக் கடத்தி விறைக்கப் பண்ணிச்சு, விட்டில் பூச்சிகளும், காட்டுப் பூச்சிகளும், போக்கஸ் வெளிச்சத்திற்காக என்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பு முழுக்க ஊர்ந்தது. காய்ச்சல் மெல்ல அடிக்கத் தொடங்கி கடுமையாக காயத் தொடங்கியது. கட்டின கயித்தில தொங்கிய படியே தூங்கிப் போனன்.

காலையில சேவிங் ரேசறோட வந்த ரெயினிங் மாஸ்டர், கண் இமைமயிரயும் வழிச்சார். உடம்பில அங்கயும், இங்கயுமா ரோமங்கள திட்டுத் திட்டா வழிச்சு அலங்கோலப் படுத்தினார்.

''தப்பிக்க நினச்சா இனி இது தாண்டா மற்றாக்களுக்கும்.''

பொறுப்பாளர் எச்சரிச்சு, கட்டுக்கள அவிட்டு விட்டார். ரெண்டு மொட்டைகள் தாங்கிப் பிடிச்சு முகாமுக்குள்ள கொண்டு போனாங்கள். ஒரு கிழமைக்கும் மேல இமமுடி அடத்தியா வளந்து கண்ண மூடுற மாதிரியும், உடம்பு முழுக்க முடி திட்டுத் திட்டா கரடியப் போல வளர்ரது போலயும், கனவும், காய்ச்சலும், பிதற்றலுமாககிடந்து மீண்டு வந்தன். காய்ச்சலாகக்கிடக்கேக்க, இலங்க ராணுவமுகாம் ஒண்டு தாக்கப்பட்டதாகவும், கொஞ்சப் பேர் செத்துப் போன தாகவும் கதைகள் உலாவின. கேம்பில பயிற்சி எடுத்தவங்களில சிலர் காணாமப் போயிருந்தது உறுத்தலாத்தான் இருந்திச்சு. எங்கட ரெயினிங் முகாம் தாக்கப்படலாம் என்ற பயம் இருந்தாலும், எதுவுமே நடக்காத மாதிரி பயிற்சிகள் நடந்து கொண்டுதான் இருந்திச்சு.

முன் இரவில, ஆத்தோர டம்மி பொயின்ற் ஒண்டில தனியா சென்றிக்கு இருந்த போதுதான், ஆத்து வாழைகளில, நிலவின்ற ஒளியில, அவள்ற முகம் வந்து வந்து போனது. கூடவே தப்பிக்கும் எண்ணமும் வந்தது.

உடம்பில கட்டுவலைகள் இறுக்கி இருந்த இடமெல்லாம், அரிப்பும், எரிவும், எழும்பத் தொடங்கி இருந்திச்சு. விரல்கள் விறைக்கத் தொடங்கினதால, கண்ணா கதியால தொடந்து பிடிக்க முடியாம வழுக்கிக்கொண்டே இருந்திச்சு. அலைகள் தன் பாட்டில கரைக்குப் போய் 'டப்' என மடிஞ்சு கொண்டிருந்திச்சு. எண்டைக்கும் இல்லாத மாதிரி, இண்டைக்கு அவள்ற நினைவு கடுமையாக வந்து கொண்டே இருக்கு.

உடல் முழுக்க அரிப்பும், எரிவும், அவள்ற நினைவுமா ஆத்தில அல்லாடிக் கொண்டிருக்கன். ஆத்தின்ற சின்னச் சின்ன சலசலப்பையும் மீறி, உறுமல் போல சத்தம் பாலம் இருக்கிற பக்கம் இருந்து கேக்குது. எஞ்சின் போட் சத்தம். என்ர தலைய ஆரோ கண்டுட்டாங்கள் போல கிடக்கு. சாவா வாழ்வா எண்டு தெரியாத பதட்டத்தில கை வழுக்கி ரெண்டு மூண்டு தரம் ஆத்துத் தண்ணிய குடிச்சன். உடம்பு சூடாகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீர் எண்டு ரெயினிங் கேம்புக்க நெருப்பு பத்தின மாதிரி வெளிச்சம். தென்ன மரமும் டம்மிப் பொயின்டும் ஒரு கணம் தெரிஞ்சு மறைஞ்சுது. குண்டு வெடிக்கிற சத்தம் கேக்குது. எங்கட ரெயினிங் முகாம் பக்கம் துவக்கு வெடிச் சத்தமும், பளிச் பளிச் என்ற வெளிச்சமும், கத்திற சத்தமும், கேக்குது. தொடந்து துவக்கு வெடிச் சத்தத்திலயும், R.P.G. வெடிக்கிற சத்தத்திலயும், அமுங்கிப் போன கத்திற சத்தத்திலயும், எங்கட ரெயினிங் முகாம் அமளி துமளிப் படுறது தெரியுது.

ஆத்துத் தண்ணிய கிழிச்சுக் கொண்டு பாலத்தடிப் பக்கம் இருந்து, எஞ்சின் படகுகள் வேகமா உறுமி வாரது தெரியுது. வேகமாக வந்த படகில இருந்தவங்கள் எங்கட ரெயினிங் முகாமை பாத்து துப்பாக்கியால சுட்டுக் கொண்டே, R.P.G ம் அடிக்கிறாங்கள். இருட்டக் கிழிக்கும் பளிர், பளிர் என்ற வெளிச்சங்களாலயும், வெடிச் சத்தத்தாலயும். குண்டு வெடிக்கிற சத்தத்திலயும், இந்த இடம் முழுக்க கலவரப்படுகுது. மரங்களில இருந்த பறவைகள் கலவரப்பட்டு கத்திப் பறக்குது. எங்கட ரெயினிங் முகாம், தரை வழியாகவும், ஆத்து வழியாகவும், தாக்கப்படுவதை பதட்டத்தோட பாக்கிறன். எங்கட கேம்பில இருந்தும் எதிர்த்து தாக்குறது தெரியுது. எங்கட கேம்பில இருந்து அடிச்ச R.P.G குண்டுகள் வந்து ஆத்தில நிண்ட படகுக்கு பக்கத்தில விழுந்து தண்ணி சிதறுது.

வேகமாக வந்த அலைகளின்ற அலைக்களிப்பில, நான் பிடிச்சிருந்த இத்துப்போன கண்ணா கதியால் 'டப்' என்ட சத்தத்தோட முறிஞ்சு போச்சு. நான் ஆத்தில தாழத் தொடங்கினன், அதிகமாக தண்ணி குடிச்சிற்றன். வாயில இருந்து குமிழிகள் வெளி யேறிக் கொண்டிருக்கு. கடும் சண்டய தாண்டு கொண்டே கேக்கிறன். தெளிவான நீல வானம் தெரியுது. அதில, பெத்தா சின்ன கோடாச் சுருட்டு வாங்க காச மறச்சுத்தாரா. காது சுருண்ட ரெயினிங்மாஸ்டர் சிகரெட் பிடிச்சபடி சிரிக்கிறார். பொறுப்பாளர் பச்சத் தென்னம் மட்டையோட ஓடி வாறார். ரவியும், நாதனும் பபூன் வேசத்தில நிக்கிறாங்கள். ரமணன் தொள தொள சேட்டோட துவக்க மேல பிடிச்சு கண்ட பாட்டுக்கு, கை உதற உதறச் சுடுறான். மொட்டத் தலைகளில, தென்னோல நிழல் விழ, நிறய பெடியல் இங்கயும் அங்கயும் அலையிறாங்கள். அக்காச்சி கச்சான் சுருள வைச்சு சப்பிக் கொண்டு எனக்கும் நீட்டுறா. அப்பு சிரிச்சபடி, என்ற TELO இயக்க உறுப்பினர் அட்டய தன்ற நெஞ்சுக்கு நேர பிடிச்சுக் கொண்டு எனக்குக் காட்டுறார். அவளின்ற கறுத்த சுருண்ட முடியும், கறுத்த முகத்தில சிரிக்கிற பல்லும், சிவத்த உதடுகளும், குறுக்க கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் போது தெரியும் வாளிப்பான மெழுகு போல இருக்கிற முதுகும், சின்னச் சின்ன பூன முடிகளோட அவள்ற துடையும், நினைவில நிக்குது. சிரிக்கிற அவளின்ட வாளிப்பான முகம் சுருங்கி தொஞ்சு கிழடு தட்ட அதில அம்மாவின்ற கவல தோஞ்ச முகம் தெரியுது. அம்மாவின்ட முகத்தக் கண்டோனே மூச்சு அதிகமாத்திணறுது. அம்மா தீத்தின மாவுருண்ட நெஞ்சுக்க பொறுக்குது. வானத்தில எல்லாற்ற முகமும் உருக்குலஞ்சு சிதஞ்சு சிதஞ்சு அழியுது.

(பிரசுரமாகாத படைப்பு-2015)

C.V.F.: Civil Volunteers Force பின்னர் T.N.A: Tamil National Army என அழைக்கப்பட்டது. இந்திய ராணுவத்தின் உதவியுடன், அவர்களுடன் இணைந்து செயற்பட்ட இயக்கங்களினால், பலவந்தமாக பாடசாலை மாணவர்கள் பிடிக்கப்பட்டு, பல பயிற்சி முகாம்களில் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டது. யாருடன் சண்டை பிடிக்கின்றோம் என்று தெரியாது, இலங்கை ராணுவத்துடன் இணைந்திருந்த விடுதலைப் புலிகளுடன் சண்டை இட்டு மடிந்தார்கள். பலர் ஆயுதங்களுடன் புலிகளிடம் சரணடைந்தனர். (புலிகளாலும், அதற்குள் வடிகட்டப் பட்டு சிலர் கொல்லப்பட்டார்கள்) வயல் வெளிகளிலும், ஆற்றோர தொம்பல் நிலங்களிலும், காட்டு விளிம்போரங்களிலும், உவர் கரச்சி வெட்டைகளிலும் இவர்களது உடல்கள் புதையுண்டு கிடக்கின்றன. தப்பிய ஓரிருவர் தம்மை வெளிப்படுத்திக்கொள்ள விருப்பம் இல்லாது, தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பாது - தாம் பயிற்சி பெற்ற முகாம்களை அண்டிய (வேறு மாவட்டங்களில்) பிரதேசங்களில் நடைப் பிணமாக வாழ்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைப்பாடு

என்ரை முகச் சதையெல்லாம் வறண்டு காஞ்சு கன்ன எலும்போட ஒட்டியிட்டுது பாருங்கோ. கண்ணில சவ்வு வளந்து பார்வையும் நல்லா மங்கிப் போச்சு. சத்தியமாச் சொல்லுறன் கேளுங்கோ, இனி எந்த ஒரு கஸ்டத்தையும் தாங்கிற அளவுக்கு என்ரை உடம்பில ஒரு திறாணியும் இல்ல. பார்வ தெரியிற அளவுக்கு இன்னும் விடியயில்லப் பாருங்கோ, அதுதான் குடிசைய விட்டு வெளிய போகாம பாத்துக் கொண்டு இருக்கிறன். மருமோளின்ற பழைய நைலெக்ஸ் சாரி உடம்பில தங்காம வழுக்கி வழுக்கி விழுகுறது எரிச்சலாக்கிடக்கு. வயித்தில இருக்கிற புழுக்கம் உடம்பு முழுக்க பரவி வெப்பிசாரமா இருக்குது. ராத்திரி பெஞ்ச மழக் குளிர் கூட உடம்பில தெரிய இல்லப் பாருங்கோ. ராத்திரி கோட மழ இடியோட கொட்டித் தீத்திற்றுப் போட்டுது. இண்டைக்கு குடிசையச் சுத்தி கனக்கச் சப்பாத்து அடிகள் பதிஞ்சிருக்கும். ஈக்குக் கட்டால, நாய்க்களித் தரையில, கூட்டி மறைக்கிறது சிரமமாத்தான் இருக்கும் பாருங்கோ. காலடிச் சத்தங்களும், முனகலா அவயள்ற பாஷையில கதைக்கிறதும், ராத்திரி முழுக்க என்னப் படுக்க விடாமப் பண்ணிப் போட்டுது. குடிசைக்குள்ள பழய சாக்கில பிரண்டு பிரண்டு கிடந்தன். புலவுப் பக்கம் காட்டுத் தோட்ட வேலைக்குப் போட்டு வந்த களைப்பில, மருமோள் சவம் போல படுத்துக் கிடக்கிறாள். பேராண்டி பக்கத்தில குப்புற விழுந்து வாய்க்குள்ள விரல வைச்சு சூப்பினபடி படுத்துக் கிடக்கிறான். ரெண்டுமே வருசக் கணக்கா அரப் பட்டினியோடதான் பாருங்கே படுத்து எழும்புதுகள். தடிச்ச, கனமான அந்தச் சப்பாத்து அடிகளக் கண்டு அதுகள் கலவரப் படக்கூடாது பாருங்கோ. அதுதான் அவையள் எழும்புறதுக்கு முன்னால எழும்பி கூட்டி அழிச்சுப் போடலாமெண்டு விடியிறதுக்காக காத்துக் கொண்டிருக்கிறன் பாருங்கோ.

'முள்ளிவாய்க்கால்' நினைவு நாட்கள் வாற ஒவ்வொரு முறையும் இந்தக் கரைச்சல்தான் பாருங்கோ. பயந்து பயந்தே அரவாசிச்சீவன் போட்டுது. சேறான களித்தரையில சப்பாத்து அடிகள் பெட்டி பெட்டியான விளிம்புகளோட பதிஞ்சு கிடக்குது. ஈக்குக் கட்டால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தத்த கூட்டி கருமானமா அடிகள அழிச்சுப் போட்டன். மழ பெஞ்ச விடியவெள்ளனக் குளிரிலயும், வயித்துப் புழுக்கம், உடம்பு முழுக்கப் புழுங்கி வேர்த்து, இடுப்புச் சாரிய தொப்பளா நனச்சுப் போட்டுது. ஈக்குக் கட்டின்ற கீறுகள் முத்தம் முழுக்க கோடு வரைஞ்சு கிடக்குது. ஈக்குக் கீறுகளின்ற விளிம்புகளில மணல் குருணிகள் காயத் தொடங்கீற்றுது பாருங்கோ. வெறும் வயிறுதான் எண்டாலும் ஏதோ இருக்கிற மாதிரி ஆர்ப்பாட்டம் பண்ணுது பாருங்கோ. தொட்டில் பழக்கம் மாத்த ஏலுமோ, சும்மாவாச்சும் கொல்லயில போய்க் குந்தத்தானே வேணும்.

கொல்லய்க்குக் கிட்டப் போனோனேயே நெஞ்சு பதறத் தொடங்கீற்றுது. வழக்கமான நாத்தத்தவிட கடுமையான நாத்தம் நாறுது. அறுகம் புல் படந்து மூடாத வழிப்பாட்டில அரைகுறயா சப்பாத்து அடிகள் பதிஞ்சு கிடக்குப் பாருங்கோ. கொல்ல அடைப்பு காட்டு மரத்தில இருந்த கிக்கிளிப்பே குருவி அலறிக்கத்தி முகத்தில காத்த மோதிப் பறந்து போகுது. நெஞ்சு படபடக்க, உடம்பு வெடவெடத்து நடுங்கீற்றுப் பாருங்கோ.

''தூ... கிக்கிளிப் பே...''

காறித்துப்பி, வீட்டச் சுத்திற இந்தப் பேய்கள் தாற பயத்த விரட்ட முடியாது பாருங்கோ. காட்டுக்குப் பக்கத்தில சீவிக்கிறது பயந்த சீவியந்தான். வாற வரும்படிக்கு, மூண்டு சீவன் வயித்தக் கழுவிறதெண்டா இதில கிடந்தாத்தான் சரிப்பட்டுவரும். மருமோளும் காட்டுப்புலவுத் தோட்ட வேலைகளுக்குப் போட்டு வரச் சுகம் பாருங்கோ. முன்னம் ஒருக்கா காட்டுயானையின்ர பெரிய அடியும், லத்தியும் கூட முத்தத்தில கிடந்திருக்குது. உதில பதிவா, துலக்கமில்லாம காட்டோரமா, அங்கங்க தெரியிற குடிசையள் எல்லாம் அகதியாப் போய் திரும்பி வந்தவயளின்ரை பாருங்கோ. குடிசையள்தான் அரவமில்லாமக் கிடக்குது. உள்ள பயத்தோட மனுசர்கள் அரகுறத் துடக்கத்தில கிடக்கின. கொல்லைக்குள்ள கிடந்த அடிகள மிதிச்சு அழிச்சுப் போட்டு, கொல்லயில இடி கம்பால இடிச்சுக் குழி பறிச்சுப் போட்டு அதுக்கு மேல குந்தினன்.

ராத்திரி பேராண்டி கடிச்ச மிச்ச றோஸ் பாண் துண்டுகளோட, தேத்தண்ணி குடிச்சதோட படுத்தது, இப்ப மூலம் பத்தி எரிஞ்சு கடுக்குது. வயிற்றுளைவோட எதுவோ குழிக்குள்ள இறங்கீற்றுது. கன நேரமா வயித்துக்கடுப்பு இருந்தும், குழிக்குள் ஏதேனும் போன மாதிரித் தெரியேல்ல. கன நேரம் குந்தி இருந்ததால குதி ரெண்டும் கொதி எழும்பிக் கடுக்குது. பாதம் முழுக்க பத்தி எரியத் தொடங்கீற்று. எழும்ப ஏலாம முழங்கால் மூட்டு இறுகி அவதிப்படுத்துது பாருங்கோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப் பக்கத்தில இருந்து வரேக்கையே காலால மிதிச்சு வழிப்பாட்டில அரகுறயாக் கிடந்த அடிகள அழிச்சுக் கொண்டு வந்தன். முத்தத்தப் பாத்த எனக்கு விசர்ப் பிடிக்காத குறதான் பாருங்கோ. குடிசயின்ற ஓரமா கூட்டின ஈக்குக் கட்டின்ற தடத்தில காய்ஞ்சு கிடந்த குருமண் படிவுகள அமத்திக் கொண்டு நெளிஞ்சு நெளிஞ்சு போகுது ஒரு அடி. இப்ப கூட்டின முத்தம் பாருங்கோ. கால் ரெண்டும் அதின்ர பாட்டில அடிபாத்துப் பின்னால போகுது. குடிசைக்கு அருகில கிடந்த விறகுச் சுள்ளிக் குவியலுக்க அடி மறஞ்சு போச்சு. சாரி இடற இடற கால் ரெண்டும் கடுகி நடந்து குடிசைக்குள்ள புகுந்திற்றுது. அரிக்கன் லாம்பத் தூண்டி, அவிஞ்சு போன கண்ண புழுண்டிப் புழுண்டிப் பாத்தன். வித்தியாசமா எதுவும் கண்ணில படேல்ல. மருமோளும், பேராண்டியும் வலம் மாறிப் படுக்குதுகள். பரபர எண்டு கையொண்டு சிறட்டய எடுக்க, மற்றக் கை தேத்தண்ணி வைக்க மூட்டின அடுப்பில இருந்து தணல அள்ளி, சிறட்டைக்க போட்டுது. தட்டியில சொருகியிருந்த சரய எடுத்து ரெண்டு காஞ்ச மிளகாய தணழுக்க போட்டுக் குடிசையின்ற மூலையில வைச்சன். அந்த இந்திய வீட்டுத்திட்ட அதிகாரியின்ற முகம் ஞாபகத்தில வந்து எரிச்சல் படுத்துது பாருங்கோ.

''உண்ணாணையனே, என்ன நம்பு உங்கட குடும்பத்துக்கு வீட்டுத் திட்டம் கிடைக்காதனே. குடும்ப உறுப்பினர் எண்ணிக்க ஐஞ்சுக்கு குறய எண்டா வீட்டுத்திட்டம் வராதணே.''

''ஏன் மோனே, காணமப் போன என்ற ரெண்டு பிள்ளயளின்ர பேரையும் சேர்த்தா ஐஞ்சு பேர் வருந்தானே ராசா?''

''காணாமப் போனவங்கள கணக்கில எடுக்க ஏலாதணை. அதோட, அங்க இழப்பு, காயம் பட்ட தழும்பு, எண்டு எந்தப் புள்ளித் திட்டத்துக்கயும் உங்கட குடும்பம் வர இல்லயணை, இந்தியன் வீட்டுத்திட்டத்துக்குப் போம், தரேலாதணை உங்களுக்கு.''

மிளகாய்ப் புக நாசிய நெருடிப் புரைக்கேற, பாயில கிடந்த மருமோளும், பேராண்டியும், அரண்டு பாயில புரண்டு கொண்டே இருமிச்சின. மிளகாய் புக சிரட்டய வெளிய கொண்டு போய் வைச்சுப் போட்டு வந்தன். பேராண்டி சிணுங்கிப் போட்டுப் படுத்தான்.

மரத்துப் போன நாக்கில ஊறின தேயிலச் சாயம் தொண்டைக்க தடிப்பா இறங்குது. காலம்பிறச் சாப்பாட்டுக்கு செத்தயில தொங்கிற, குறப்பாதி தேங்காயிலயும், அரிசியிலயும் கைவைக்க மனமில்லப் பாருங்கோ, கரிப்பிடிச்ச செத்தயப் பாத்துக் கொண்டிருக்கிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராண்டியும், மருமோளும் எழும்புறதுக்குள்ள திரும்பியிரலாம் எண்டுதான் தோணுது பாருங்கோ. எழும்பி மழயில நனஞ்சு ஊறி, மண்ணேறிப் பாரமாக் கிடந்த தட்டியத் தூக்கி குடிசயச் சாத்திப் போட்டு, முத்தத்தத் தாண்டி, ஒத்தயடிப் பாதயப் பாத்து நடக்கத் தொடங்கியிட்டன். மழயில சகதியாகக் கிடந்த ஒத்தயடிப் பாதயில வெறுங்கால் அடி பதிக்க, கால்களில ஏறின குளிர் உடம்பு முழுக்கப் பரவுது பாருங்கோ. அந்தத் தெம்பில ஊர்மனையப் பாத்து நடக்கத் தொடங்கியிட்டன்.

ஒல்லிக் குளம் மறிப்புக் கட்டுக்கு வந்து சேர கால்களில சேறு சப்பாத்துப் போல ஒட்டிக் காஞ்சு போச்சு. சாரியின்ற விளிம்பில சேறும், பாத ஓரத்தில கிடந்த பற்றச் சிலிநீர் ஈரமும் பட்டு சாரி கனமாகிப் போச்சு. நடந்து வந்த வேகத்தில, வயிற்றில இருந்த புழுக்கம், உடம்பு முழுக்கப் புழுங்கத் தொடங்கியிட்டுது. வியர்வையில உடம்பு தொப்பலா நனஞ்சிட்டுது பாருங்கோ. மறிப்புக் கட்டில ஏறிற்றன். வயல் வெளியும், மரங்களுக்குள்ள மூடுப்பட்ட ஊர் மனயும், சுருண்ட திருகல் கம்பி வேலிக்குள்ள மரக் கூட்டங்களால மூடின ஆமிக் கேம்பும், தூரத்தில துலக்கமில்லமாத் தெரியுது பாருங்கோ.

மறிப்புக் கட்டில நடந்து, இடது கர வாய்க்காலில இறங்கி ஊர்மனயப் பாத்து வயல் வரப்பில நடக்கத் தொடங்க, மூச்சுத் திணறித் தடுமாறுது. என்ர பார்வ சரியா இருந்தாப் பாருங்கோ, நான் இப்ப பாக்கிறத விடப் பொழுது நல்லா வெளிச்சுத்தான் இருக்கும். இத்திமரம் தாண்டி வயல் வரம்புகள் சந்திக்கிற, காவல் குடிச போடுற திடல் பக்கம் இருந்து வயித்தப் புடுங்குற புண நாத்தம் நாறுது. கண்திறந்தமாரி அவரின்ற உடம்பு கிடக்கிற நினைப்பு தட்டுத் தடுமாற வைக்குது. காட்டு மிருகமோ, பறவயோ, காட்டெலியோ செத்து நாறுது.

"கெலியில இருந்து தேட்டி கலிவரப் பூட்டி அடிச்சிருக்காங்கள். கண்டுத்தாச்சி சிவல நாகு, பின் பக்க சந்து ரெண்டும் சிதறிச் செத்துப் போச்சு. வயலுக்கயே குழி வெட்டித் தாட்டுப் போட்டெல்லோ வாறம்."

என்றவர் வந்து சொன்னப்ப, நாகு செத்த கவல இருந்துச்சு. ஆனா அந்த செய்தியின்ற அகோரம் மனசில படயில்ல. இவர், வயலுக்க பசள எறிஞ்சு கொண்டு நிக்கேக்க, கெலி அடிச்சுப் போட்டுதெண்ட செய்தி கேட்டு ஓடி வந்த போதுதான் பாருங்கோ அதின்ற அகோரம் என்னெண்டு விளங்கீச்சு. கலிபரால கெலியில இருந்து அடிச்சதில, அவர் நெஞ்சுப் பகுதி கோரயாகி இருந்துச்சு. நெஞ்சு எலும்புக் கூடு வெளிய துருத்திக் கொண்டு நிக்க, சதத் துண்டுகள் ரெத்தத்தோட வயல்ல சிதறிக் கிடந்த அகோரத்தப் பாத்த உடனே, என்ரை நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிப் போச்சுது பாருங்கோ. நாகு செத்த போது அவர் இருந்தார். அவர் செத்த போது என்ர தோள்களுக்குப் பின்னால ரெண்டு மக்களும் மல போல உயரமா நிக்கிற நினைப்பில உயிரப் பிடிச்சு வைச்சிருந்தன் பாருங்கோ.

காலிலயும், சாரியின்ர கீழ்க் கரையிலயும், களி காஞ்சு மொர மொரப்பாயிட்டுது. முகாமுக்குப் பக்கமாக இருந்த ஒழுங்கயில ஏறினப்போ திருகல் முருகலான கம்பிச் சுருளுக்குள்ள, மரங்கள் மூடின தாழ்வான தாவாரத்தோட சித்தோட்டு வீடுகள் தெரியுது பாருங்கோ.

சவண்டு கிடக்கிற மாங்கொத்துக்குப் பின்ன, வெள்ளச் சுண்ணாம்பு அடிச்ச வீட்டின்ர பாதிச் சுவரும், அரகுறப் படியும் தெரியுதெல்லே பாருங்கோ, அது அவற்ற பிரயாசயில வருசக் கணக்கா மிச்சம் பிடிச்சுக் கட்டின வீடுவாசல் தான் பாருங்கோ. முழங்கால் மூட்டு விலத்தின மாதிரி கால் ரெண்டும் தள்ளாடி உலாஞ்சுது. உடம்பு பலகீனமாக் கிடக்குப் பாருங்கோ.

பெரிசா டைமன் வெட்டி, அதுக்குள்ள சின்னச் சின்னதா டைமன் வெட்டி, பொடியள் விளையாடுற மாபிள் குண்டு பதிச்ச படிக்கட்டில குந்தி இருந்து, சுவரில நாரியச் சாத்தி, படிக்கட்டத் தடவிப் பாக்கவேணும் போலக் கிடக்குது. வீட்டுக் கறுத்தக் கொழும்பான் மாவில இருந்து, குயில் ஒண்டு ஈனமான குரலில முனகிக் கூவி, உள்ள வா வா எண்டு கூப்பிடுற மாதிரிக் கூவுது. நெஞ்சுப் பகுதியில மெல்லீசான நோ பரவி வலிக்குது.

குயிலின்ர ஈனமான முனகல், அலறிக் கத்தி ஆர்ப்பாட்டமாக் கேக்குது. திச கெட்டுத் தவிச்சுப் பறந்து வருது குயில், பின்னால காக்கா மூர்க்கமாகத் துரத்தி வந்துது. குயில துரத்திக் கொண்டு, என்ர தலைக்கு மேலால பறந்து ஊர்மனைக்குள்ள போகுது காக்கா. காக்கா தன்ர காலால நிலத்த விறாண்டி, வேர் கிளப்பி அலகால அறுத்துக் கொண்டு போறதப் பாத்திருக்கன். காக்காயில பாசமும், இரக்கமும் வருகுது. கிறவல் ஒழுங்க, கெட்டியான கொங்கிறீற் பாதயா மாறினது தெரியாம நடந்து கொண்டிருக்கிறன் பாருங்கோ.

கம்பிக் கிறாதிக் கதவு தூங்குற, ரெண்டு மதில் தூணிலயும், பச்ச நிற பெயின்ற் அடிச்ச அனுமார், கையில கதாயுதத்த வச்சுக் கொண்டு நிக்கிறார். இரும்புக் கிறாதிக் கதவுக்கு முன்ன நிக்கேக்க, ஏதாவது கிடைக்க வேணும் எண்ட தவிப்பு, உடம்பு முழுக்க வெம்மயாப் பரவுது. ஜிஎஸ் பொடிச்சி இண்டைக்கு எவ்வளவு வேல வாங்குமோ எண்டு பயமா வேற கிடக்குது பாருங்கோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்புக் கிறாதிக் கதவு சத்தமில்லாமத் திறக்குது. கிறீஸ் போட்டு தண்ணி மாதிரி வச்சிருக்காள் பொடிச்சி. முத்தம் முழுக்கப் பழுத்த மஞ்சள் பிலா இலயும், வேப்பஞ்சருகும், மாஞ்சருகுமா கிடக்குது. தென்னம் பிள்ளயின்ற பாளையில, அணில்பிள்ள ஓடுற சத்தம் கேக்குது பாருங்கோ. பாளையில இருந்து கொட்டுண்ட மஞ்சள் நிறத் தென்னம்பூ, தலயிலயும், நிலத்திலயும் சிதறுது. கூண்டுக்குள்ள கிடந்த, கறுத்த, இடுப்பு மெலிஞ்ச வேட்ட நாய் கூண்டுக் கதவ பிறாண்டி உறுமுது பாருங்கோ.

''என்ன பூரணக்கா வெள்ளனத்தோட?''

நாய பாத்துக் கொண்டிருந்ததால, ஜிஎஸ் பொடிச்சியிட தடிமனான குரல் திடுக்கிட வைச்சிற்றுது பாருங்கோ.

''பழஞ் சோறு ஏதும் மிஞ்சினது கிடந்தா பேராண்டிக்கு தண்ணிச் சோத்துக்கு...''

''உதில நில்லக்கா, ஏதும் கிடந்தாப் பாக்கிறன்.''

இடுப்பில கையூண்டி நிண்ட ஜிஎஸ் பொடிச்சி, கையத் தொங்கப் போட்டுட்டு, வீட்டு விறாந்த நிலப்படிக்குள்ள இருந்த இருளில மறைஞ்சு போனா. சும்மா நிண்டா ஒண்டும் நடக்காது பாருங்கோ.

பழய சாமான்கள் போடுற தகரக் கொட்டிலுக்க இருந்து விளக்குமாத்துத் தடிய எடுத்து வந்து, முத்தத்தக் கூட்டத் தொடங்கினன். ராத்திரி பெஞ்ச மழ ஈரத்தில, நிலத்தில ஒட்டிக் கிடந்த வேப்பஞ்சருகு படாத பாடு படுத்துது பாருங்கோ. வயித்துப் புழுக்கம் அடிவயிற்றில தொடங்கி உடம்பு முழுக்கப் பரவி நெஞ்செரிச்சுக் கொண்டு, காரமான ஏவற தொண்டைக்க வந்து நிக்குது. புழுக்கம் உடம்பு முழுக்க வேத்துக் கொட்ட வைக்குது. உடம்பு தொப்பலா நனைஞ்சு போட்டுது. சாரியின்ர கரையிலயும், கால்லயும் காஞ்சு கிடந்த களி ஈரமாகுது. இடுப்புச் சாரியும் தொப்பலா நனைஞ்சு, ஊறிப் போய் அரியண்டப் படுத்துது. கோட்ட மாதிரி மதில் சுவர் இருந்ததால சப்பாத்து அடி ஒண்டோடயும் மல்லுக்கட்ட இல்லப் பாருங்கோ. குப்பய அள்ளி மண் எடுத்த பள்ளத்துக்க கொட்டும் வர ஜிஎஸ் பொடிச்சியின்ற அசுமாத்தத்தக் காணயில்லப் பாருங்கோ.

விளக்கு மாத்துத் தடியின்ர சத்தம் நிண்ட பிறகுதான், வேர்வ பட்டு எரிவோட கலங்கிப் போன கண்ணுக்குள்ள ஜிஎஸ் பொடிச்சி தட்டுப்பட்டா. கையில ஒண்டையும் காணம் பாருங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்க, போன கிழம, நகர சப மண்டபத்தில நடந்த காணமப் போனாக்களின்ற விசாரணைக்கு, உன்னயும் காணம், உன்ற மருமோளயும் காணம்?''

நான் வேணுமெண்டே என்ர பிள்ளயளில அக்கறை இல்லாம இருந்தது போல, என்ர நெஞ்சு விம்மி, உடம்ப நடுக்கிக் கொண்டு பெரு மூச்சொண்டு, அடி வயித்தில இருந்து கிளம்பி வந்து வெளியேறுது பாருங்கோ.

''டவுனுக்கு பஸ்சில போக காசு பிரட்ட ஏலாமப் போட்டுதம்மா. அண்டைக்கு வேல ஒண்டுக்கும் போகவும் ஏலாதம்மா. அந்த நாளில எல்லாம் மூண்டு பேரும் பட்டிணிதானம்மா. எத்தின தரமம்மா அவங்களுக்கு முறப்பாடு குடுக்கிற? திரும்பத் திரும்ப அதே கேள்விக்கு பதில் சொல்லிச் சொல்லி துக்கம் மட்டுந்தானம்மா மிஞ்சி மிஞ்சிப் போகுது.''

''அதான் பூரணக்கா சொல்லுறன், பேசாம டெத் செட்டிபிக்கட்டுக்கு அப்ளை பண்ணு. சீவியத்துக்குச் சமூர்த்தி அட்டயோ பிச்சச் சம்பளமோ கிடைக்கும்.''

''அவர் செலி அடிச்சு செத்ததக் கண்ணால பாத்தவள் அம்மா, அவருக்கு எடுத்து குடுங்கம்மா, புண்ணியமாப் போகும். புள்ளயளுக்கு மட்டும் வேணாமம்மா. இந்தப் பாவி கையால கொண்டேத்தானேயம்மா மல போல இருந்த ரெண்டு பிள்ளயளயும் கேம்பில கொண்டே ஒப்படச்சனான். விசாரிச்சுப் போட்டு விடுறது எண்டு தானேயம்மா அந்தப் பாவிகள் சொன்னவங்கள். பிள்ளயளுக்கு டெத் சேட்டிபிக்கட் எடுத்துப் போட்டு நானும் என்ர மருமோளும் விசர் பிடிச்சுத்தானம்மா தெருவில திரிய வேணும்.''

பேசுறதுக்கு ஒண்டும் இல்ல எண்டு ஜிஎஸ் பொடிச்சி நினச்சுதோ தெரியா, விறாந்த இருளுக்குள்ள மறஞ்சு போயிற்றா. வேர்வ பட்டு எரியிற கண்ணப் புழுண்டி ஏதும் வேல வளவுக்குள் கிடக்கா எண்டு பாக்கிறன் பாருங்கோ. தேங்காய் உரிக்கிற பாரைக்கு அருகில உரிக்காத தேங்காய்களும், உரிச்ச பொச்சு மட்டைகளும் சிதறிக் கிடக்குது. பாரைய நெருங்கின போது, தேங்காய் உரிச்சு உரிச்சுக் கூரான அதின்ற நுனிப் பகுதி பளிச்செண்டு துலக்கமாக் கிடக்குறது பயமாத்தான் கிடக்குது பாருங்கோ. உரிக்காத தேங்காயத் தூக்கி பாரையில குத்தி, இடமும், வலமுமாக சாச்சு அமத்தி, உரிக்கத் தொடங்கிறன். வைத்தில புழுக்கம் அவிச்சலாக தொடங்கி உடம்பு முழுக்கப் பரவி, வியர்வ கொப்புளங்கள் மாதிரி உடம்பில கொட்டி ஊத்துது பாருங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உரிச்சுப் போட்ட, வியர்வயில நனஞ்ச தேங்காய்களும், உரிமட்டைகளும், பாரையச் சுற்றி, பரவிக் கிடக்குது பாருங்கோ. மூக்கு நுனியிலும், இம முடியிலும் வழிஞ்ச வியர்வயத் துடைக்க நிமிந்தன், தலைக்குள்ள கிறுகிறுப்பு வந்து கண்ண மங்கச் செய்யுது பாருங்கோ. திரும்பவும் குனிஞ்சு நிண்டு கொண்டு மூச்ச ஆசுவாசப் படுத்திக் கொண்டன். கையில பாதி உரிச்சபடி இருந்த தேங்காய பாரையில திரும்ப குத்தேக்க வலம் மாறி தேங்காய் பக்கம் போவது நினைவில தட்டிற்றுது. தேங்காய் பேந்து விடும் எண்ட நினப்பில வலம் மாறின வேகத்தில, கை பாரைக்கு நெருக்கமாக போவது மட்டும் தெரிஞ்சுது. என்னயுமறியாது தொண்டைக்குள்ள கேவுற சத்தம் எழும்புது. அடக்க வேணுமெண்டு நினைக்க முன்னமே, கேவுற சத்தம் கமறிக் கொண்டு வெளியில பொயிட்டுது பாருங்கோ. கண் மங்கி, இருட்டித் தடுமாறி பொச்சு மட்டக் குவியலுக்கு மேல குந்திச் சாஞ்சன். கையில பாரை கிழிச்ச வலி முள்ளந் தண்டுல பரவுது. கை கட்டுப்படுத்த ஏலாம நடுங்குது. கண் ரெண்டும் இருட்டி நினைப்பில்லாமப் போகப் பாக்குது. நினைப்பில்லாம போகாம இருக்க, தலயச் சிலுப்பிறன், கண்ண வெட்டி வியர்வய கண்ணுக்க எடுத்து எரியப் பண்ணுறன். நினைவோட இருக்க படாதபாடு படுறன் பாருங்கோ.

''பூரணக்கா, என்னண ஆச்சு உனக்கு?''

ஜிஎஸ் பொடிச்சி தன்ர பெரிய கருத்தக் கண்ண உருட்டி மிரட்டிக் கேட்டுக் கொண்டு நிக்கிறா.

''பாரை கிழிச்சுப் போட்டுதம்மா.''

''உனக்கென்ன விசரோ. ஆரணை உன்ன இந்த வேலயெல்லாம் பாக்கச் சொன்னது.''

நிலம் தடதடக்க தன்ர பருத்த உடம்பத் தூக்கிக் கொண்டு ஓடின ஜீஎஸ் பொடிச்சி, விறாந்த இருட்டுக்க மறஞ்சும் போனா. விறாந்தயில இருட்டு இருந்து கொண்டே இருந்தது. கையில பாரை கிழிச்ச இடத்தில சிவப்புக் கலந்த மஞ்சளான தண்ணி வடிஞ்சு கொண்டு இருந்துது. எழும்பி நிக்க தலக் கிறுகிறுப்பு தள்ளாட வைக்குது. உடம்பு வியர்வயில திரும்பத் திரும்ப தொப்பலா நனஞ்சு கொண்டிருக்குது பாருங்கோ.

சோட்டி காத்தில அரக்கப் பறக்க அசய, ஜிஎஸ் பொடிச்சி இருட்டின விறாந்தயில இருந்து கறுத்த பேக்கோட வந்தா. உடம்பில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் தெம்பு வந்த மாதிரி இருக்குது பாருங்கோ. வந்த வேகத்திலேயே, உரிச்ச ரெண்டு தேங்காயயும் பேக்கில போட்டு எடுத்தா ஜிஎஸ் பொடிச்சி.

''இந்தா பிடியண, இதில நிக்காம நட முதல்ல.''

ஜிஎஸ் பொடிச்சி இரும்புக் கிறாதிக் கதவத் திறந்து, முதுகில கைய வச்சு வெளிய தள்ளிக் கதவச் சத்தமில்லாமப் பூட்டினா. தன்ர பருத்த உடம்ப கைய அகலமா விரிச்சு வீசி, அசஞ்சு நடந்து போய், விறாந்த இருட்டுக்க மறஞ்சு பொயிட்டா ஜீஎஸ் பொடிச்சி. கையில இருந்த பேக்கின்ற கனம், உடம்பில கொஞ்சம் தெம்பத் தந்துது பாருங்கோ.

கேம் தாண்டி வயல் வெளியில இறங்க உடம்பு சோர்வில தள்ளாடுது. பாரை கிழிச்ச காயத்தில கடுப்பு எழும்பீற்றுது. வயல் வெளியில எருக்கிலய தேடிப் பிடிச்சு, உடச்சு காயத்தில பால தேச்சன் பாருங்கோ. பால் பிசு பிசுப்பா கைல ஒட்டீற்றுது. கடுப்புக் குறஞ்ச மாதிரி இருந்தாலும் எரிவு கூடி இருந்தது. இந்தக் காயத்த ஆத்தி தழும்பக் காட்டி 'செல்' பட்ட தழும்பு எண்டு வீட்டுத் திட்டக்காரனுக்கு காட்டலாமோ எண்டு புத்தி குறுக்கால ஓடுது பாருங்கோ.

மறிப்புக் கட்டிலயிருந்து இறங்கி ஒத்தயடிப் பாதைக்கு வரேக்க, கண் வெளிக்கிறதும், இருட்டரதுமா அல்லாட்டம் காட்டுது. பேராண்டியின் சிரிச்ச முகத்த நினச்சிக் கொண்டு உடம்புல பலத்தக் குடுத்து வேகமாக நடக்கப் பாதயில கால் ரெண்டும் இடறி விழுத்தப் பாக்குது. நெஞ்சுக் கூட்டுக்குள்ள ஏதோ கனமான பாரம் ஏத்தி விட்டது மாதிரி அமத்துது பாருங்கோ. இரவில இருந்து சாப்பிடாத வயித்துப் புழுக்கம், திரும்ப உடம்பு முழுக்கப் பரவி கொப்புளங்களா வேத்துக் கொட்டுது. நிச்சயமா கிறுதி வந்திற்றுது எண்டுதான் படுகுது. கையில இருக்கிறத மருமோளிட்ட சிந்தாம சிதறாம குடுத்திட்டாப் போதும் பாருங்கோ. கரிக்கட்டியால பல்லத் தீட்டீற்று நிக்கிற மருமோளின்ற தலக் கறுப்புத் தெரிஞ்சாலும், கூவிக் கூப்பிட தொண்ட எழும்புதில்லப் பாருங்கோ. உடம்ப உந்தித் தள்ளி நடக்க, கால் இடறி, தள்ளாடி, உலாஞ்சி நிலத்தில விழுறது தெரியுது பாருங்கோ.

''மாமி...''

கிணத்துக்குள்ள இருந்து வாறமாதிரித்தான் பாருங்கோ மருமோள்ற கூப்பாடு கேட்குது. நெஞ்சுக்கூட்டோட பையுக்க இருக்கிற சாமான்கள் சிதறாம அணச்சு வைச்சிருக்கன் பாருங்கோ. மருமோள்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில பாரப்படுத்திப் போட்டன் எண்டாச் சரி. ஒண்டு மட்டும் நிச்சயமாச் சொல்றன், ஒரு உறுப்பினர் குறயப் போறதால மருமோளுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தில நிச்சயமா வீடு கிடைக்கப் போறதில்ல. மருமோளின்ற கை என்ற உடம்பில குளிர்ச்சியோட பிடிக்கிறது தெரியுது. மருமோள் ஊரக் கூட்டப் போடுற கூப்பாடு எங்கயோ அதல பாதாளத்தில கேக்குது. மருமோளின்ர கையில பையக் குடுக்க ஏலாம, கை உடம்போட சேத்து விறச்சுப் போய்க்கிடக்குது.

மருமோளின்ர ஏக்கத்தில பரிதவிச்சுத் தவிக்கிற சின்னக் கண்கள் மனசில அல்லாடுது. காத்தில பறக்கிற நரச்ச சுருள் முடியக் கையால கோதிக் கொண்டு, அவர் முகம் காட்டாம, கண்டுத்தாச்சி மாட்ட நடத்திக் கூட்டிப் போறார். காவி அடிச்ச பள்ளிக்கூடத் தூண்களுக்கு பின்னால, சாரத்த தூக்கிக்கட்டி ஏக்கத்தோட திரும்பித் திரும்பிப் பாத்துப் போற ரெண்டு மக்களின்ற முகமும் வடிவாத் தெரியுது. பேராண்டியிட சுளிச்சுச் சிரிக்குற முகம் நினைவில வந்து வந்து போகுது பாருங்கோ.

(பிரசுரமாகாத படைப்பு - 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பு

பீயப் பார்த்துப் பார்த்தே தன் கண்களின் வெள்ளைப் பகுதி பழுத்து பழுப்பு நிறமாகப் போய் விட்டது போல அவருக்குத் தோன்றியது. வேப்ப மர நிழலில் விறைப்பா இருக்கிற கறுத்தக் கல்லுப் பிள்ளையார் சாமி கூட தனக்கு பீக்கலர் கலந்த கறுப்பாத்தான் தெரிவதாக கவலைப்பட்டார். எரிக்கிற வெயிலில் மினுமினுக்கும் தார் வீதி கண்களைக் குருடாக்கி விடுமெனப் பயந்ததால் தன் பார்வையை மீண்டும் நிழலுக்குள் இருந்த பிள்ளையார் சாமி மீது திருப்பினார். ''ஒன் நிழலண்டதாஞ்சாமி நானு உக்காந்திருக்கன்...'' என தன்னையறியாது பிரியும் உதடு கூட வெடிச்சு, அவிஞ்சு பழுத்து, தான் வாயைத் திறக்கும் போது, தன் கடைவாயில் பீ ஒட்டிப் பிளப்பது போல பசைத்தன்மையாக இருப்பதாக நினைத்தார். தனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து, தன் வீட்டினதும், தன் சாதி சனங்களின் வீட்டினதும் நிழல் மறைப்பாக இருப்பது, வெள்ளக்காரன் காலத்து, விறைப்பான நசுங்காத கறல் கட்டிப் போன தகரத் துண்டுதான், பிள்ளையார் சாமிக்கும் நிழல் மறைப்பாக இருக்கிறது என அவர் நினைத்த போது, பள்ளமாக உள் ஒடுங்கி எலும்புகள் துருத்திக் கொண்டிருக்கும் நெஞ்சுக் கூட்டுக்குள் இருந்து பெருமூச்சொன்று கிளம்பி, நெஞ்சுக்குள் பொறுத்து, நெஞ்சை வலித்துக் கொண்டு வெளியேறிப் போனது. தன் எலும்புகள் மீது தசைப் பிடிப்பற்று ஒட்டிக் கிடக்கும் தோலைப் போல, காலையில் பிள்ளையாருக்கு வைத்த பூ கல்லில் ஒட்டி வரண்டு போய்க்கிடப்பது போல அவருக்குத் தோன்றியது. வறுத்தெடுக்கும் வெயிலில், கலிச்சக்கரின் பின் கம்பியைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டு, நகரத் தெருக்களில் அலைந்து திரிவதால், கலிச்சக்கர் பவுசர் டேங்கின் சூடேரிய தகட்டு வெக்கையும், நேரடியாக தன் மீது விழும் வெயிலிலும் உதிர்ந்து ஐதாகி, செம்பட்டையும், பழுப்புமாக நரைத்துப் போன முடியைப் போலத்தான், வெப்பக் காற்றில், வேம்பின் கொத்துக்கள் உடைந்து, காஞ்சு கருகி, மரம் முழுக்க ஐதான பச்சையும், கருகின நிறமுமாக இருப்பதாக அவர் நினைத்தார். இவை ஒன்றையும் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையோ நினைப்போ இல்லாது இருக்கும் பிள்ளையாரின் தொந்தியைப் பார்த்தபடி, பசையைப் போல ஒட்டிப் பிளக்கும் உதடுகளைத் திறந்து சொல்லிக் கொண்டார், ''நம்மலால அப்புடி இருக்க முடியாது சாமி.''

''காந்தி நவரு, புள்ளயாரடிக்கிட்டப் போயி கேளு சாமி. அங்கின நாலஞ்சு பேரு இருக்காங்க, ஒங்க வேலைக்குத் தோதுப் பட்டு வருவாங்க சாமி.''

''எவடம்?''

''கோட்டுக்கு எதிர்த்தாப்பல இருக்கிற காந்தி நவரு. போடு போட்டிருக்கிற புள்ளயாரடியண்ட போய், உள்ளார போற ஒழுங்கையில போய்க் கேளு சாமி.''

''எது சக்கிலிய வாடிப் பிள்ளையாரடிக்குப் பக்கத்தில இருக்கிற ஒழுங்கையா?''

''...''

''சக்கிலிய வாடி பிள்ளையாரடிக்குப் பக்கத்தில இருக்கிற ஒழுங்கையா?''

''ஆமா சாமி.''

கறல் பிடித்து, துலக்கமில்லாது கிடக்கும், மஞ்சள் பெயின்றடித்து, கறுப்பு மையால் காந்தி நகர் என எழுதப் பட்டு அம்புக்குறி போட்ட தெருப் பெயர்ப் பலகை, போட்ட காலத்தில் இருந்து பழுது பார்க்காததால், அதன் கம்பம் கறல் கட்டி சாய்ந்து கிடப்பதைப் பார்த்தபடி இருந்தார்.

காலையில் பல்லைப் புடுங்கிப் போட்டு, கலிச்சக்கர் பவுசரில் போய் வந்த உதறலில், ரத்தம் இன்னும் நிக்காது அடித்துக் கொண்டு இருப்பதாக நினைத்தார். சின்னச் சூறாவளியைப் போல சுழன்றடித்த சூறைக் காற்றில் கஞ்சல்களும் புழுதியும் நின்ற இடத்திலேயே எழும்பிச் சுழல, தன் மீது வெக்கையுடன் புழுதிக் காற்று வந்து மோத திணறித் தடுமாறினார். வேப்ப மரத்தின் நிழலில் நிறுத்தி இருக்கும் இன்னும் கழுவாத கலிச்சக்கர் பவுசரில் இருந்து பீ நாத்தம் வெக்கக் காத்தில கலந்து நாறுவது போல அவர் உணர்ந்தார். சுப்பவைசரின் கண்ணில் பட முதல், கலிச்சக்கரைக் கழுவிக் கொண்டு போய் நகர சபை வாகனச் செட்டில் விட வேண்டும் என்ற பயம் அவரைத் தொற்றிக் கொண்டது. தன்னைக் காவலுக்கு விட்டு விட்டு, தங்களுக்கு எரி தண்ணி ஊத்தப் போன ரைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியனையும், ஆனந்தராசாவையும், இலக்கில்லாத திசையில் பார்வையை நகர்த்தி தன் பழுத்துப் போன மஞ்சள் கண்களால் தேடினார். உடம்பில் தண்ணி ஊத்தி குளிக்காததால், உடம்பில் இருக்கிற நரகல் நசநசப்பு தன் மனசிலும் நசநசப்பதாக நினைத்தார். பல்லுப் புடுங்கின காயத்தில, பீ நாத்தக் காத்துப் பட்டு ஏதாவது நோய் நொடி தொத்திக்குமோ எனப் பயந்தார்.

ஆஸ்பத்திரியில பல்லில படாம, குளிராகவும் இல்லாது, சூடாகவும் இல்லாது, கஞ்சியோ, கூழோ குடிக்கச் சொன்னதை நினைவு படுத்திப் பார்த்தார். இன்னும் ஒன்றும் வயிற்றுக்குள் போகாததால் வயிறு கடமுடப்பாக இரைவதைக் கேட்டார். பல்லுப் புடுங்கின காயத்தில நாக்கப் போட்டுப் பார்க்கக் கூடாது என சொல்லித்தான் அனுப்பி இருந்தார்கள். என்றாலும் தன் நாக்கு தன் கட்டுப்பாட்டில் இல்லாது திரும்பத் திரும்ப அங்கேயே போய் விழுவதாக பிள்ளையார் சாமியிடம் முறைப்பாடு செய்தார்.

எதிரில் பெரிய பொட்டி பொட்டியான சாம்பல் நிறப் பெயின்ற் அடித்து, கறுத்தக் கண்ணாடி யன்னல்கள் பொருத்தப்பட்ட, உயரமான அடுக்குமனைக் கட்டிடத்தை, பீயைப் பார்த்துப் பார்த்து சிறுத்துப் போன கண்ணை அகலத் திறந்து பார்த்தபோதும், அது தன் பார்வைக்குள் அடங்க மறுப்பது போல உணர்ந்தார். தம்மை வெள்ளக்காரன் கொண்டு வந்து குடியமர்த்திய போதே, சின்னதாக சித்தோடு வேய்ந்ததாக இந்தக் கட்டடம் கட்டப்பட்டதாக தன் மூத்தப்பா சொன்னதை நினைத்துப் பார்த்தார். அங்கும் இங்கும் கும்பல் கும்பலாக, விதவிதமான நிறத்தில் நிற்கும் வாகனங்களுக்கு கணக்கில்லை என எண்ணினார். தங்களைப் போல சின்ன மனிதர்களை விட பெரிய பெரிய மனிதர்கள் தான் அதிகமாக தப்புப் பண்ணுறாங்க எனப் பிள்ளையாரின் கண்களைப் பார்த்தபடி நினைத்தார்.

வீட்டுக்குப் போனாலாவது வயிற்றுக்குள் ஏதாவது ஊற்றி வயித்துக்குள் கேக்கும் கடமுடப்பையும், கொதிப்பையும் அடக்கி குளிரப் பண்ணலாம் என நினைத்தார். குடிக்கப் போன பயலுகள் வராததால் எரிச்சலுடன் கலிச்சக்கர் வண்டியின் மீது தன் பார்வையை நகர்த்தினார். தகர வீட்டுக்குள் இருக்கும் புழுக்கத்துக்கு, இங்கே கிடக்கிறது மேல் என நினைத்தார்.

''நானு வேணுமிண்னு ஏலாண்டு சொல்லல சாமி.'' என பிள்ளையாரிடம் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டார். போன தடவை பல்லுக் குத்து வந்த போது செக்ரோலில் நாள் குறைந்து விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று, பல்லுக்குள் போயிலைத் துண்டை அதக்கிக் கொண்டு வேலைக்குப் போய் வந்ததை, பல்லுக் குத்தால் வீங்கிப் போன ஒரு பக்கக் கன்னத்தில், கோணலாக உயர்ந்த தன் செம்பட்டை முடி மீசையுடன் ஞாபகம் கொண்டார். அதில் மூன்று நாட்கள் செக்ரோலில் சம்பளம் குறைந்து போனதால் அந்த மாதம், குறை பீடித் துண்டை பொத்திப் பொத்தி வைச்சுப் புகைத்ததையும், ஒரு சில இரவுகளை பாண் துண்டுடன் தள்ளியதையும், வீக்கம் வத்த ஆஸ்பத்திரியில் தந்த குளுசைச் சரையுடன் நினைத்துப் பார்த்தார். வீக்கம் வத்திப் போன உடனேயே, இன்று பல்லுப் புடுங்குவது என்று தான் திடமாக முடிவெடுத்ததை நினைத்துப் பார்த்த போது, தன் பார்வை பிள்ளையாரின் காதில் ஊரும் முசுரில் நிலைகுத்தியிருக்கக் கண்டார்.

''நாளைக்கு உனக்கு லீவு தர ஏலாது. நீ கலிச்சக்கர் பவுசரில் கட்டாயம் வேலைக்குப் போய்த்தான் ஆக வேணும்.''

தன் சைக்கிளின் கெண்டிலை பிடித்தபடி, தன் முகத்தைப் பார்க்காது, நிலத்தைப் பார்த்துக் கொண்டு சுப்பவைசர் சொல்லி விட்டு, வேகமாக சைக்கிளை தள்ளிக் கொண்டு மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் புறப்பட்டதை, சுப்பவைசரின் கூனுண்ட முதுகுடன் ஞாபகம் கொண்டார்.

''நானு பல்லுப் புடுங்க ஆஸ்பத்திரிக்குப் போவனுஞ் சாமி.''

டை அடித்ததால் கறுத்து விறைப்பாக இருந்த மீசையை தடவியபடி, சுப்பவைசர் குனிஞ்சு கொண்டே நடந்து போனதால், அவர்ர முகத்தில ஒன்றையும் கவனிக்க முடியவில்லை என நினைத்தார்.

''அப்ப மனசில ஒண்டும் பட்டுக்கல சாமி.'' என அவர் பிள்ளையார் சாமியின் வெடிப்புக் கண்டுவிட்ட தொந்தியைப் பார்த்துக் கொண்டே முனகினார்.

பெரிய நகர சபைக் கட்டிடத்தின் பின்புறம் மறைந்து கிடந்த சைக்கிள் பாக்கிலிருந்து, முன்னுக்கும் பின்னுக்கும் மக்காட் இல்லாத லொடலொடத்த தன் சைக்கிளை, ஓரங்களில் பூனை வால் குரோட்டன்கள் வளர்த்து வெட்டிவிடப்பட்டிருந்த நடைபாதையில் உருட்டிக் கொண்டு வரும்போதுதான், முனகுவது போல மூக்கால் கதைக்கும் பீயோன் வந்து தன்னை சுப்பவைசர் கூப்பிடுவதாக சொன்னதை, வெடிப்புக் கண்ட பிள்ளையார் தொந்திக்குள் இருந்து வெளி வருவதும், பின் உட்செல்வதுமாய் இருந்த குளுத்திப் பூச்சிகளைப் பார்த்தபடி நினைத்துக் கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபைக் கட்டடத்துக்குள் அவர் போன போது, நகர சபைக் கூட்டம் நடக்கும் குளிர் கோளின் பூட்டின வாசலுக்குப் பக்கத்தில், மாகாத்மா காந்தி கையில் தடியும், இடுப்பில் துண்டும், வெறும் மேலுடன் நடந்து போகும் படமும், காவி உடுப்பில் விவேகானந்தர், தலைப்பாவுடன் மார்புக்கு குறுக்காக கையைக் கட்டிக் கொண்டு இருக்கும் கம்பீரமான படமும் தொங்கிக் கொண்டிருந்த சுவரோடு சுவராக, கூனுண்டு எக்கிய வயிற்றுக்குள் கையைக் கட்டியபடி சுப்பவைசர், கள்ளத்தனமான பார்வையுடன் நின்றது அவர் நினைவுகளுக்குள் வந்தது.

சுப்பவைசர் தன்னுடைய முகத்தைக் காண வேண்டும் என்பதற்காக, அவரை நெருங்க முனைந்த போது, கூட்டம் முடிந்து நகர சபை உத்தியோகத்தர்களும், சேமன் ஐயாவும், மெம்பர்மாரும், கதவைத் திறந்து கொண்டு குளிர் கோளுக்குள் இருந்து ஒவ்வொருவராக வெளியே வரத் தொடங்கியிருந்தார்கள். சுப்பவைசர் ஒரு மெம்பருக்கு தன்னை கண்ணால் காட்டிய போது, ஏதோ வில்லங்கம் வரப் போகிறது என நினைத்து திணறியதையும், கோபமாக தன்னை நோக்கித் திரும்பிய மெம்பரின் முகமும், நக்கல் சிரிப்புடன் நின்ற சுப்பவைசரின் கோணிப் போன முகமும் அவர் நினைவுகளில் மாறி மாறி வந்தன.

''நாளைக்கு கலிச்சக்கரில வேலைக்கு போக ஏலுமா... ஏலாதா?''

''சாமி. பல்லுக் குத்து உசிரப் புடுங்குது சாமி, நாளக்கி வெள்ளனத்தோட ஆசுப்பத்திரியில நாளு குடுத்திருக்காங்க சாமி. நானு நம்மாளுவ ஒருத்தர சுப்போசியர் ஐயாக்கிட்டவ இப்பாமே ஒழுங்கு பண்ணிக் குடுத்திருதஞ் சாமி.''

''ஆருக்கு ஆரடா ஓடர் போடுறது. வெளியில போடா சக்கிலிய நாயே.''

''நம்மாளுக நிறயப் பேரு வேல இல்லாம இருக்காங்க சாமி. வேணுமின்னே நம்மள குடயுராங்க சாமி.'' பிள்ளையார் சாமியின் கண்களைப் பார்த்து முனகினார்.

''நகர சபை'' என்ற பொன் நிற எழுத்துக்களை தாங்கிய வளைவான கம்பிகளை, இரண்டு வெள்ளைத் தூண்களில் பொருத்தியிருந்த பிரதான வாசலை மறித்துத்தான், கண்ணப்பன் தலைமையில் வேகாத வெயிலில, இரண்டு கிழமைக்கு முன்னர் தங்கள் சாதி சனம் மறியல் செய்ததை, வாசகங்கள் தாங்கிய வர்ண அட்டைகளுடன் நினைத்துப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்கள் வயித்தில் அடிக்காதீர்!''

''எங்களையும் மனிதர்களாக நடத்துங்கள்.''

''நகர சுத்தி தொழிலாளர் மேற்பார்வை பதவி நமக்கே வேண்டும்.''

''எங்கள் குழந்தைகளின் கல்வியை ஒடுக்காதீர்கள்.''

இப்படி கனக்க வசனம் எழுதிய காட் போட் மட்டைகளைத் தாங்கியும், கோசம் இட்டுக் கொண்டும், மறியல் செய்தது நினைவுக்கு வந்த போது, அவர் பார்வை பிரமாண்டமான கோட்ஸ் கட்டடத்தின் மீது படிந்து கிடந்தது.

''குளுர் கோளுக்கு வெளியில நின்னே கூட்டம் போட்டு தீர்மானமும் எடுத்தாங்களாஞ்சாமி. இன்னிக்கு நானு, கலிசக்கருல வேலக்கு போவல்லினா, என்னய வேலய உட்டே தூக்குறதுண்ணு...'' பிள்ளையார் சாமியிடம் முனகிய போது தன்னையறியாது தன் கண்கள் பனிப்பதை உணர்ந்தார்.

''ஆபிசர்மாருட சொந்தக்காரங்களுக்கும், மெம்பர்மாருட உறவுக்காரங்களுக்குந்தாஞ்சாமி இன்னிவரக்கும் சுப்போசியர் பதவி குடுக்காங்க சாமி,'' என்று அவர் வாய் விட்டு பிள்ளையாரிடம் முறைப்பாடு செய்த போது, அவர் கண்களுக்குள் வெள்ளைப் பேப்பரில் கொம்பியூட்டர் தட்டச்சுத் தாள் மகஜரில் தன் இளைய மகனின் பெயர் முதலாவதாக இருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

''அதாஞ் சாமி நம்மளில கட்டம் கட்டுறானுவ...'' அவர் வாய்விட்டுச் சொன்ன போது, குடிக்கப் போன பயலுகள் வரும் திசையில் பார்வை அலைந்து பின் பிள்ளையார் மீது திரும்பியது.

''நான் உசிரோட இருக்கிற வரைக்கும் ஒரு சக்கிலியப் பயலுக்கும் ஒரு பதவியும் கிடைக்க விட மாட்டன்.''

கூட்டத்தில ஒரு மெம்பர் கத்திய போது, முன்னர் துவக்குத் தூக்கி சண்டை போட்ட இயக்கக்கார மெம்பர்மார் பற்றீஸ் திண்டு பல்லக் குத்திக் கொண்டு தெரியாத மாதிரி இருந்ததை கேள்விப் பட்டதை நினைத்த போது, அவர் பார்வை புழுதியால் அடைத்துக் கிடக்கும் தன் வீட்டுக்குப் போகும் பாதை மீது படிந்து கிடந்தது.

''சக்கிலியர் வழமையான மனிசர் இல்ல.''

''நவர பிதாவே அடிச்சிச் சொல்லிப்புட்டாராம் சாமி. அப்புறம் நாங்க ஏது சாமி?'' அவர் தொண்டைக்குள் கேவிய போது விட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமூச்சுடன், பல்லுப் புடுங்கின இடத்தில இருந்து வந்த இரத்த வாடை காத்தில் கலந்து பரவுவதை உணர்ந்தார்.

காலையில் கலிச்சக்கரில் வேலைக்குப் போன போது. பல்லுப் புடுங்கின இடத்தில விறைப்புக்கூட எடுபட்டிருக்கவில்லை என நினைத்தார். இரண்டு மதில் சுவர்கள் சந்திக்கும் முடக்கில். வீட்டு அத்திவாரத்தை அண்டி, சேறாக ததும்பிக் கிடந்த நிலத்துக்குள், புதைந்து கிடந்த கக்கூஸ் பிற்றை, மதில் சுவரில் பதித்துக் கிடந்த கூரான வீதுருத் துண்டுகளுடன் ஞாபகப்படுத்திப்பார்த்தார்.

கக்கூஸ் பிட்டின் கொங்ரீட் மூடியை மதில் இடுக்கு ஓரமாக கஸ்ரப்பட்டு, அலவாங்கை அடியில் விட்டு நெம்பித் திறந்த போது, பிட்டுக்குள் நிறைந்து முட்டி நின்ற பீ, தான் பிளந்த பிட் மூடியின் இடைவெளிக்குள்ளால் சிதறி, தன் கால்களில் தெறித்து வழிந்த போது, மண்ணை அள்ளிப் போட்டு தேச்சு விட்டு விட்டு, தன் வேலையில் கவனமாக இருந்ததை நினைத்துப் பார்த்தார்.

கலிச்சக்கர் பீயை உறுஞ்சுவதற்கு வசதியாக, பீக்குள் மண்ணெண்ணையை விட்டு. இரும்புக் கம்பியால் கலக்கி கூழாக்கிய போது, பல்லுப் புடுங்குவதற்குப் போட்ட ஊசியின் விறைப்பும், நரகல் நாத்தமும், மண்ணெண்ணை நாத்தமும் சேர்ந்து நாசி உள் வாங்க முடியாத கனதியுடன் கிடந்த காத்தை அவர் சுவாசித்ததாலும், பல்லுப் புடுங்கியதால் இந்த நரகல் வேலைக்காக வழமையாக தனக்குள் ஊற்றும் எரிதண்ணியை வயிற்றுக்குள் விடாததாலும், தலை விதிர்விதிர்த்து ஓங்காளம் ஓங்காளமாக வந்த போது, மதில் மூலையை அண்டி அவர் வாந்தி எடுக்க முனைந்த போது, வயிற்றில் ஏதும் இல்லாததால், ரெத்தத்துடன் எச்சிலைக் காறித் துப்பியது, இரத்த வெடுக்குடன் நினைவில் நின்றது.

இந்த கலிச்சக்கரெல்லாம் இல்லாத காலத்தில், தன் தகப்பனுடன் இந்த நரகல் வேலைக்குப் போனதை நினைத்துப் பார்த்தார். கக்கூஸ் பிட் மூடியைத் திறந்து, பக்கத்தில குழி போட்டு, அதுக்குள்ள பீய அள்ளிப் போட்டு மூடுற வேலை செய்யப் போன போது, தனக்கு மீசை பூனை முடியைப் போல இருந்ததை ஞாபகப் படுத்திப் பார்த்தார். தகப்பன் குழி போடும் வேலைக்கு மட்டுமே தன்னைப் பயன்படுத்திய போதும், முதல் தடவை அவ்வளவு நரகலை ஒன்றாகப் பார்த்த பயத்தில், கிழமைக் கணக்கில் தனக்கு காச்சல் அடித்து தன்னை படுக்கையில் போட்டதையும், மூத்தவர் திருநீறு மந்திரிச்சு விட்டு காச்சல் சுகமானதையும், தன் தகப்பனின் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லில்லாத சிரிப்புடன் ஞாபகம் கொண்டார். வானத்தில் படர்ந்து வந்த முகில் கூட்டம் சூரியனை மறைக்க, பிள்ளையாரடி முழுவதும் நிழல் படர்ந்து நகர்வதை பார்த்துக் கொண்டிருந்தார்.

தன் மூத்த பெண் பிள்ளைக்கு, குழந்தை பிறந்திருந்த போது கையில் காசு இல்லாது மனம் அல்லாடிக் கொண்டிருந்த போது தான், கன காலமாக பாவிக்காது விட்ட கக்கூஸ் பிட்டை, திரும்ப பாவிப்பதற்காக துப்பரவாக்கித்தரச் சொல்லி கிளாக்கர் பொடியன் கேட்ட போது, தான் மறுபடியும் நரகல் வேலைக்கு போனதை, பிட்டின் அடியில் கறுப்பாக படிந்து கிடந்த பீயை, பிட்டுக்குள்ளேயே இறங்கி அள்ளித் துப்பரவாக்கிக் கொடுத்ததை ஞாபகப் படுத்திப் பார்த்தார். இரண்டு மூண்டு நாள் கழிச்சு, தன் காலில் சின்னச் சின்ன கொப்பளங்கள் போட்ட போது, அம்மை நோயாக இருக்கும் என தான் கவனமற்று இருந்த போது, உடம்பில் ரூபாக் குத்தி அளவில் பெரிய பெரிய கொப்பளங்கள் போட்டு, உடைத்த இடத்தில் நோவும், எரிவும், அதோடு காச்சலும் பிடித்ததை, கொப்பளங்களில் இருந்து வழிந்த சீளின் நரகல் நாத்தத்துடன் அவருக்கு ஞாபகம் வந்தது.

"காஞ்சி போனாவும், நரகல் நரகலுதாஞ் சாமி..." மீசையும் தாடியும் அடர்ந்த வாய் முணுமுணுக்க கண்கள் கலிச்சக்கரின் சில்லில் மூத்திரமடிக்கும் நாயைக் கவனித்தபடி இருந்தன.

ஆஸ்பத்திரி விறாந்தையில் கடுகடுப்பான முகம் கொண்ட நேஸ் போட்ட ஊசியின் கடுப்புத்தாங்க முடியாது, நடை தடுமாற, குளுசை மணத்தில் நிறைந்து கிடந்த, குளுசை வாங்கும் கியுவுக்கு போய்க் கொண்டிருந்த போது, தனக்கு கண்கள் இருட்டிக் கொண்டு வருவது போல இருக்கிறது என நினைத்த போது, கரன்ட் 'சொக்' அடித்தது போல, தான் ஆஸ்பத்திரி விறாந்தையில் மல்லாக்காக விழுந்ததையும், பின் நினைவு தப்பிப் போனதையும், இன்னமும் தன் உடலில் கறுத்த வட்ட வட்டப் புள்ளிகளாக இருக்கும் கொப்பளங்களின் காய்ந்த வடுக்களைப் பார்த்தபடி நினைவு படுத்திக் கொண்டார்.

பிறகு ஊசிக்கு மாத்து ஊசி என்று, பத்துப் பன்னிரெண்டு ஊசி போட்டுத்தான் தன்னைப் பிழைக்க வைத்ததாக அறிந்து கொண்டதை, கடினமான வேலை செய்ய முடியாது களைப்பையும், கை விரல்கள் நிமிர்த்த மடிக்க முடியாது எப்போதும் வழுகி வழுகி வேலைகள் செய்ய ஒத்தாசையற்று சோர்ந்து விடுவதையும் கவலையுடன் நினைத்துக் கொண்டார்.

"என்ன நேஸ், டெஸ்ட் பண்ணாமத்தான் ஊசி போடுவீங்களா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சக்கிலியால்த்தானே ஒத்துக் கொள்ளும் எண்டு நினைச்சன் சேர்.''

''இத்துப் போன ஒடம்பும், செத்துட்ட போன புத்தியுமாத்தாஞ் சாமி ஊட்டண்ட கொணந்து போட்டாங்க.'' பிள்ளையாரைப் பார்த்து முனகிய போது. அவர் நினைவுகளில் அந்த நேஸின் கடு கடுத்த முகம் நினைவில் வந்து போனது.

உடம்பின் நசநசப்பும், மனசின் நசநசப்பும் அழுத்தியதால், தலைக்குள் கனதியாக எதுவோ குத்தி வலிப்பதாக உணர்ந்த போது, தன் கைகள் சன்னதம் கொண்டது போல பிள்ளையார் மாடத்தில் தாளம் தட்டத் தொடங்கி விட்டதை உணர்ந்தார். தன் மனதின் சுமை அடங்கும் வரை தாளம் தட்டி, கால்கள் களைப்பு மிகுதியால் அடங்கும் வரை ஆடவேண்டும் என்ற உணர்வு உந்த தவிக்கும் மனசை அடக்கி தன் கவனத்தை வேப்பின் நிழல் அசைவுகள் மீது குவித்து ஆசுவாசம் கொண்டார்.

தீ நாக்குகள் தீண்ட உருகி வெடித்துக் கிழியும் தோல்களுடன், பிடி வார்கள் நீல ஒளிர்வுடன் பத்த, எரியும் தப்புக்களின் ஒளிச் சுவாலையில், வன்மங்கொண்ட முகங்களுடன், நெருப்பைச் சுற்றி நின்ற தம் இளவட்டப் பயல்களின் முகங்களில் இருள் நிழல் அசையவும், இருள் போர்த்திய முகங்களுடன், தம் காந்தி நகர் வீடுகளுக்குள் இயக்கப் புள்ளைகள் வந்து திரிவதும், வகுப்பு வைப்பதும், தீ நிழல்களுடன் ஞாபகப்படுத்திக் கொண்டார். எண்பத்தி மூன்று கலவரத்துக்குப் பின்புதான், தங்கட வீடுகளுக் குள்ள வேற சாதிப் பொடியள் வந்து உண்டு, உறவாடிப் போன முகங்களை அவர் ஞாபகப்படுத்த பகீரதப் பிரயத்தனம் பண்ணினார். அந்த நிகழ்வுகளுக்குப் பின் தன்னுடைய விரல்கள் இன்று வரை தப்பைத் தொட்டு அதிரவில்லை என நினைத்தார்.

''தப்பு அடிக்கிறதும் தப்பு, தப்படிச்சு வருசத்துக்கும் தீபாவளிக்கும் வீடு வீடாப் போய் பிச்ச எடுக்கிறது அதவிடத் தப்பு. விடியிர தமிழ் ஈழத்தில் யாவரும் மனிதர்களாகவே நடத்தப்படுவர். சம பந்திப் போஜனம், யாவருக்கும் சம அந்தஸ்து, கௌரவமாக நடத்துதல் என்பவற்றை தமிழ் ஈழம் உறுதி செய்யும்.''

''எப்பங்கண்ணா தமிழ் ஈழம் வருகும்?''

''மிகக் கிட்டவாக இருக்கிறம். இந்தியா நினச்சா ஒரு பீடித் துண்டு பத்தி முடிக்கிறதுக்குள்ள தனது ராணுவத்த அனுப்பி தமிழ் ஈழத்த பிடிச்சுத் தரும். ஆனா சர்வதேசம் அதுக்கு இடம் தராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே நாம் உள்ளிருந்து போராட வேண்டும் வீரத்துடன் நீங்கள் போராட வாருங்கள்! இந்தியா ராணுவப் பயிற்சியும் தந்து, பின்னாலும் நின்று எம்மை வழிப்படுத்தும்.''

ஒன்று இரண்டு வகுப்பு நடந்த பின்னர், காந்தி நகருக்குள் இருந்து காணாமல் போன தங்கள் பிள்ளைகளின் முகங்களை ஞாபகத்தில் கொண்டுவர முயன்று கொண்டிருந்தார். தங்கள் பாட்டன் பூட்டன் பிறந்த மண்ணை, தம் பிள்ளைகள் மிதிக்கின்ற பெருமிதம், தமக்கு இருந்ததை நினைவுக்குக் கொண்டு வந்த போது, தன் பார்வை கூர்மையடைவது போல உணர்ந்தார்.

''இயக்கப் புள்ளக வந்து வகுப்பு எடுக்கிறதயும், நம்ம புள்ளக காணாமப் போறதயும், ஆரோ எம்டன் ஆமிக்கு போட்டுக் குடுத்திட்டாஞ் சாமி.''

உயிருடனேயே தம் உடம்பு எரிவது போல தம்மை உறைய வைத்த அந்த இரவை, அதன் கொடூரத்துடன் ஞாபகப்படுத்த முனைந்தார். இரவைக்கு இயக்கம் வந்து வகுப்பு வைக்கப் போகும் செய்தி, அன்று மாலை மல்லிகைப் பந்தலில் இருந்து பூவின் மணம் கசிவதைப் போலத்தான் வழமையைப் போல ஊருக்குள் காற்றில் கசிந்திருந்தது. வண்ணாத்திக் குளத்துக்கு அருகில் இயக்கப் புள்ளைகளை எதிர்பார்த்துக் கொண்டு, சத்தமில்லாது பகிடியும், பயமும், தீவிரமான உரையாடலுமாக இளவட்டப் பயல்கள் காத்துக் கொண்டிருந்ததை, தன் மூத்த மகனின் ஒடுங்கி நீண்ட முகத்துடன் ஞாபகப்படுத்திக் கொண்டார். காட்டிக் கொடுக்கும் எம்டனுடன் பதுங்கிக் கிடந்த ராணுவத்தின் துப்பாக்கிகள் இருளைக் கிழித்துக் கொண்டு, பளீர் என்ற வெளிச்சத்தையும், புகையையும், சன்னங் களையும் கக்கத் தொடங்கியதையும், சிதறி ஓடும் இளைஞர் கூட்டத்தையும், வெடிப்பட்டு கத்தக்கூட அவகாசமற்று வண்ணான் குளத்தில் விழுந்தவர்களையும், தப்பிப் போனவர்களையும் நினைத்துப் பார்த்தார். காலையில் உப்பிப் பருத்த ஒன்பது பேரினதும் உடல்களை பார்த்த போது, தன் பார்வை இருண்டு போனதை நினைத்துக் கொண்டார். அந்தச் சம்பவத்துக்குப் பின்னர் காந்தி நகருக்குள் இருந்து நிறையப் பொடியங்கள் காணமல் போனதை, காணமல் போன தன் மூத்த மகனின் சின்ன வயது நினைவுகளுடன் ஞாபகப்படுத்திக் கொண்டார். அப்படிப் போனவர்களில் ஓர் இருவரைத் தவிர மற்றவர்கள் இன்று வரை கண்ணில் படவில்லை என நினைத்தார்.

ரெயினிங்குக்குப் போன போதும். திரும்பி வரும் போதும், நேவி அடித்து கடலுக்குள்ளேயே செத்துப் போனார்கள் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்துக்குள் நடந்த கரைச்சலில் கொஞ்சப் பேரைக் கொன்று இந்தியாவிலேயே புதைச்சாங்கள் என்றும், கொஞ்சப் பேர் சண்டையில் செத்தார்கள் என்ற செய்திகளும் ஊர்க்காரர்களைப் போல தன் காதுகளிலும் விழுந்ததை, தன் நினைவில் இருந்து மறைந்து கொண்டிருக்கும், காந்தி நகரில் இருந்து காணாமல் போன இளவட்டப் பயல்களின் முகங்களுடன் ஞாபகம் கொண்டார்.

''அப்புச்சே, ஊட்டண்ட வராம இங்கின என்ன பண்ணின்டு நிக்க? பல்லுப் புடுங்கப் போனயெண்டு ஆத்தா செல்லிச்சு, புடுங்கிட்டியா?''

''ஆமா, புடுங்கீட்டேம்மா. சத்து தள்ளி நின்னு பேசும்மா. அப்புச்சே, இன்னாம் குளிக்கல. ஒடம்பு பூரா நரகலு. தள்ளியே நின்னு பேசும்மா.''

''வலிச்சுதா?''

''இல்லம்மே, புடுங்கிறப்ப விறப்பு ஊசி போட்டாங்களா, இப்பத்தான் கொஞ்சூண்டு வலிக்குது.''

''ஆத்தா சொல்லிச்சு, ஊட்டண்ட வந்தி சவ்வரிசி கஞ்ச குடிச்சிட்டுப் போவட்டாமுன்னு.''

''இப்ப வந்துற்றனம்மே, இந்தப் பயலுவ வந்திறட்டும்.''

''அப்புச்சோ!''

''என்னம்மே?''

''நீயி என்ன வேல பாத்திருக்கவே?''

''என்னாச்சம்மே?''

''அங்கின கண்ணத் தொரந்து வடிவாப் பாரு.''

கலிச்சக்கர் பைப் கட்டின கயிறு உறுவி அவிழ்ந்து, வழுக்கி தும்பிக்கை போல சவண்டு நின்ற பைப்பில் இருந்து பீ, பிள்ளையார் சாமியின் வலது தோள் மேல் கொட்டிக் கொண்டு இருப்பதைக் கண்ட போது தன் கண்கள் தன்னையும் அறியாது கலங்கிப் போவதை உணர்ந்தார்.

(பிரசுரமாகாத படைப்பு-2015)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலச போனவங்க

‘‘பொணப் பொட்டி சைசா எம்மாம் பெரிய நெல்லு. அவுஞ்சு, புக கிழம்ப பொளந்து கிடக்குது. ஊமத்தம் பூவு நாற்றாப்பொல, பீ நாத்தம் அண்ட முடியல. அவுஞ்சு பொளந்த அம்மாம் பெரிய நெல்லுக்க நானு கெடக்கன். அவுச்சி வெள்ளாவி வச்ச ஆசுபத்திரி துணியப்பொல கெடக்கற எம் மூஞ்சிய சுத்தி புக கிழம்புது. தலமுடி கறுகறுன்னு காக்காக் கூடப்பொல பறட்டயா இருக்கி. மீச முடியும் நல்ல விறப்பாத்தான் இருக்கி. கண்ணு தொரந்து, வாய் பொளந்து கிடக்கி. பொறவு பாத்தா, கண்ணுக் குள்ளாற இருந்தி, பூச்சியும் புழுவுமா வெளியாற வந்து உழுவுது. கறயான் புத்து உள்ளாறயிருந்து கறயான் வாறப்பொல, வாய்க் குள்ளாற இருந்தி செவத்த நுள்ளான் கொட்டுது. யூரினு நாத்தம் தாங்கிக்கிறாப்பொலயில்ல. முடி கொட்டி வழுக்கவுழுந்த தலயும், நர மீசயுமா, தச வத்தி, எலும்பு துருத்திக்கின்னு கிடக்கிற ஒடம்புமா, அரயில கோவண துண்டுமா நானு, ஏம் பொணத்த தாக்க படாத பாடுபட்டுக்கின்னு நிக்கன். நெல்லு பறவுற பலவத் தட்டியால மண்ண இஸ்து இஸ்து உடுறன். மண்ணு பீ சலியிறாப்பொல, அங்கின இங்கின வழுவி வழுவிப் போவுது. கை காலு சோம்பிப் போவுது. அவுஞ்ச நெல்லு வாட வருவுது.’’

நெல்லுக் காயப்போடும், மேலே கூரை இல்லாத, முத்த வெளியைப் போன்று எல்லை மதில் சுவர் வரை நீண்டு கிடந்த சீமெந்துத் தரையில், ரைஸ் மில் தகரக் கூரையின் தாழ்வாரத்தில். நெருப்பில் கருகி மிஞ்சிய பெரிய கரிக் கட்டைத் துண்டு போல கிடந்த அவர், நெல்லு அவிஞ்சு அடிப்பிடிச்சு கருகும் வாடையை நுகர்ந்தவராக திடுக்கிட்டு விழித்தார். வெயில் உச்சியில் இருந்து நகர்ந்து, ரைஸ் மில்லின் தாழ்வார நிழல், ரைஸ் மில்லின் காவி அடித்த சுவரில் ஏறி விட, தான் சுட்டெரிக்கும் வெயிலில் கிடப்பதை உணர்ந்தார். உடம்பு முழுவதும் வியர்த்து, முதுகுக்கும் சீமெந்துத் தரைக்கும் இடையில் வியர்வையின் ஈரம் நச நசப்பதையும், நாசி மூத்திர வாடையை சுவாசிப்பதையும் தன்னுணர்வு அவருக்கு உணர்த்தியது. பகல் தூக்கத்தின் அசதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் அவிஞ்ச நெல்லுச் சாக்கின் கனமான வெக்கையை முகத்துக்கு நேரே அழுத்திப் பிடிப்பது போன்ற சுமையால் மூச்சுத் திணறினார். தான் வெயிலில் கிடப்பதை உணர்ந்த போதும், உடல் அசதியால் எழும்ப விருப்பமற்றுக்கிடக்க விரும்பினார். நெல் அவிஞ்சு, அடிப்பத்தி கருகின வாடை அவரைத் துணுக்குற வைத்ததால் திடுக்கிட்டு வாரிச் சுருட்டி எழும்பி உட்காந்தார்.

அவர் கண்களுக்குள் சிவப்பு பல்ப்பின் ஒளிர்வு தெரிந்ததால், ஏற்பட்ட பதட்டத்துடன், படபடப்பாய் எழுந்து, நெல் அவியும் சிலிண்டரை நோக்கி, வியர்வைக் காவி படிந்த வேட்டித் துண்டொன்று இடுப்பில் பறக்க, கருகிய மரத் துண்டு போல, ரைஸ் மில் சுவரில் அவரது நிழல் விழ ஓடினார்.

''செவப்பு பல்ப்பு எம்புட்டு நேரமா பத்துதுண்ணு தெரியலியே? பகலுத் தூக்கம் பொளப்ப நாரடிச்சிரும் போலத்தான் கெடக்குது. சலீம் காஜ்ஜூயார் வந்து புறடியப் புடிச்சி கணக்கத் தீத்து தெருவுல உட்டிறப் போறாரு.''

தன்பாட்டில் முனகியபடி, எரிந்த விறகுக் கட்டையில் இருந்து ஒரு சிராய்த் துண்டு பிளப்பது போல பிரிந்த, அவரது சூம்பிக் கறுத்துப் போன கைகள் சுவிட்சை தடவி நிறுத்தியது. சிவப்பு ஒளிர்வு அவரது கண்ணுக்குள் இருந்து அணைந்து போனது.

நெல்லு அவிஞ்சு, தண்ணி வத்தி, அடிப்பத்தி கருகின வாடை அதிகமா சிலிண்டருக்குள் இருந்து வீசியதால், சலீம் காஜ்ஜியாருக்கு மூன்று நாளு மூடை நெல் பாழாய்ப் போய் விட்டது என, சிராய்த் துண்டு போல இருந்த தன் கையை நெஞ்சில் வைத்து வருடிக் கொண்டே முணுமுணுத்தார், ''முப்பது வருசமா நிழலு காட்டுற மனுசரு.''

''இனிம இந்த ஒடம்பு வேலக்குத் தோதுப்படா. நானு மட்டும் தனியா எப்பிடி இந்த மூஞ்சிய ஊருக்க காமிக்கிறது? இங்கின கிடந்து செத்தாலும் அங்கின போறாப்பல இல்ல.''

முனகியபடி, ரைஸ் மில் சுவரில் நிமித்திச் சாத்தியிருந்த வீல்வறோவை, தன் கறுத்த இரண்டு சிராய்த் துண்டுகள் போல நீண்டிருந்த கைகளில் பற்றி இழுத்து வந்து, நெல் அவியும் பிஸ்டனுக்குப் பக்கமாக விட்டார். துணியைப் பிடித்து பிஸ்டன் தகட்டை, நெடிய மெல்லிய கைகளால் நகர்த்தினார். அவிஞ்ச நெல்லின் வெக்கை ஆவியும், அடிப்பிடித்த மணமுமாக வீல்வறோவுக்குள் கொட்டுவதை கவனித்தபடி நின்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரியின் மலசலக்கூட பளிங்கு பேசினை, சோ என வேகமாக நுரையுடன் அடிக்கும் பைப் தண்ணியால் கழுவுவது போலவும், பிரதேச சபையின் யூனிபோம் அணிந்து மார்க்கட் பகுதிகளில் செனட்ரி வேலை செய்வது போலவும், தான் கனவு கண்டு கொண்டிருந்த போது, தான் இளவட்டமாக இருந்ததையும், தன் உடற்கட்டு திடுமனாகவும் விறைப்பாகவும் இருந்ததையும் நினைத்துப் பார்த்தார். செக்றோலில் பதிந்து, பத்துப் பன்னிரெண்டு நாள் வேலையாவது கிடைக்கும் என்று நம்பிக் காத்துக் கிடந்து, ஏமாந்து, மனசு சலிச்சு, ஊர் வீதியின் புழுதித் தெருக்களிலும், காட்டுப் பகுதிகளிலும், இலக்கில்லாது திரிந்த தனது இளமைக் காலம், நெல்லிலிருந்து கிளம்பும் ஆவியுடன் கண் முன்னே கரைந்து போகக் கண்டார்.

முனியப்ப சாமி இருக்கிற ஜெயம் பழ மரத்துக்குக் கீழே வைத்து, பிச்சாண்டி மாமா கேட்டது, இப்போதும் தனக்கு முன்னே நிழல் உருவமாக அசைவது போலக் கண்டார்.

''கதுருவெல பக்கம் சோனாக்களூற, சிங்களாக்களூற வயலுகளில வெள்ளாம வெட்டுற வேலக்கு கிறாக்கி இருக்கி, இஸ்றமா?''

நெடிய கைகளும், வைரமான கால்களும், கறுகறு என்ற சுருட்டை முடியும், பனை மரம் போன்று உயரமும். திரண்டு உருண்ட உடம்புமாக, பிச்சாண்டி மாமா முன்னே நிற்பது போன்ற உணர்வில் வீல்வறோவை தூக்கக் குனிந்த போது, நெல்லில் இருந்து அடித்த ஆவி முகத்தில் பட கண் கலங்கி குனிந்தபடியே நின்று அழுதார்.

அம்மாச்சிக்கு தூர இடத்துக்கு வேலைக்கு விட விருப்பம் இல்லாதிருந்ததையும், முன் பின் பழக்கமில்லாத வேலை என்று தான் பயந்து ஒதுங்கியதையும், தன் ஊரின் செம்மண் புழுதியுடன் நினைத்துப் பார்த்தார்.

''இங்கின கெடந்து கக்கூசியும் கழுவி, பீயும் அள்ளாம எங்கண்ணாச்சும் போய் பிளச்சுக்கோ,'' என்று, சூரக்கொட்டை அப்பத்தா அக்கம்பக்கத்தில் தன்னை அடகு வைத்து காசு பிரட்டிக் கொடுத்ததையும், அந்தப் பணத்தில், தான் ரவலிங் பையும், இரண்டு சாரண் துண்டுகளும், தாக்கத்தி ஒன்றும், டவலும், வாங்கியதை நினைத்துப் பார்த்தார். பிச்சாண்டி மாமாட உடம்பப் போல, சூரக்கொட்ட அப்பத்தாவும் செத்து, தாட்ட அவவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பையும், மண் திண்டிருக்கும் என நினைத்த போது வாய் விட்டு வந்த அழுகையை அடக்காது, உடல் குழுங்க அழுது தீர்த்தார்.

பிச்சாண்டி மாமா மூப்பனாக வழி நடத்த. தாங்கள் ஏழு பேராக, C.T.B பஸ்சின் வெள்ளித் தகடு பொருத்திய மிதி பலகையில் கால் வைத்து ஒருவர் பின் ஒருவராக. பேக்கின் ஒரு மூலையில், தாக்கத்தியின் மரப் பிடி வெயியே துறுத்தி நிக்க ஏறுவது போன்ற நினைவுகள் வந்து போயின.

அவர்களுடைய பாஷை பிடிபட நாள் போனாலும். சிங்களாக்கள்ர வயல்ல நல்ல வேலை கிடைச்சதோடு, பகிடி விட்டு சினேகிதமாகப் பழகியதையும், வயல் காட்டில் உடும்பைப் பிடிப்பதற்கு முயன்ற போது, வயலில தண்ணி குடிக்காத உடும்பை வேட்டையாடுவது பாவம் என கடுமையாகக் கோபப்பட்ட நாட்டுப்புற சிங்கள மக்களின் காய்ந்து வறண்ட முகங்களும் அவருக்கு ஞாபகம் வந்தது.

முஸ்லீம் ஆக்களுடைய வயல்ல வேல செய்த போது, வேலுப் பயலுக்கு பாம்பு கடிச்சதும், தங்கட உறவுச் சனம் போல அவனை, அவர்கள் தங்கள் தோளில தூக்கிக் கொண்டு போய் விசம் இறக்கிப் பின் ஆஸ்பத்திரியில சேர்த்துப் பிழைக்க வைத்ததை, கவலையான தொப்பி அணிந்த ஆண்களின் முகத்துடனும், முக்காடு அணிந்த பெண்களின் முகத்தோடும் நினைவுபடுத்திப் பார்த்தார்.

தமிழ்க் கடைகளில் சாப்பாட்டை எப்போதும் பொட்டலம் கட்டிக் கொடுத்ததையும், தாங்கள் வண்டுகளும், நுள்ளானும் ஊறும் மரங்களுக்குக் கீழ் இருந்து கொண்டு, மரங்களில் அமர்ந்திருக்கும் காக்கைகள் பீச்சி விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் அந்தரப்பட்டு பொறுக்கப் பொறுக்க உண்டதை ஞாபகப் படுத்திப் பார்த்தார். சிங்கள, முஸ்லீம் ஆக்களுடைய கடைகளில் தாங்கள், சாப்பாட்டுக் கடை மேசையில் வசதியாக அமர்ந்து சாப்பிட்டதையும், அவர்கள் மேசையும் துடைத்து, தண்ணியும் எடுத்து வைத்ததையும் ஞாபகப்படுத்திப்பார்த்தார்.

பத்துப் பன்னிரெண்டு வருசத்துக்கும் மேல், பூக்குடிச்சான் குருவி வெள்ளப் பூவில் இருந்து மஞ்சள் பூவுக்கு என்று, மரத்தில் அமராது, அந்தரத்தில் பறந்து கொண்டே தேன் குடிப்பது போல, தாங்கள் கதிரவெல வயல்க்காடுகளிலும், குருநாகல் தென்னந் தோப்புகளிலும், பறந்து பறந்து பிரயாசையாக உழைத்ததையும், கையில் காசு புழங்கும் போது, அப்பப்ப ஊரைப் பார்த்து வருவதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சீசனைப் பார்த்து, சிவப்பு நிற C.T.B பஸ்சில் ஏறி ஓடுவதுமாக கழிந்த நாட்களை, தாங்கள் முன் வேலை செய்த இடங்களில், பரிட்சயமான முகங்களுடன் ஞாபகத்துக்குள் கொண்டுவர முனைந்தார்.

ஒரு தடவை நல்ல மழை, வயல்க் காடு பூராகவும் வெள்ளம். விளைஞ்ச பயிர் எல்லாம் தண்ணியில விழுந்து கிடந்ததை, மழையில் நனைந்து ஊறிக் கொடுகி, தலையில் முண்டாசும், உடலில் நடுக்கமுமாக, முகத்தில் கவலையுடன் வயல் வரப்புக்களில், மழையில் நனைந்தபடி நிற்கும் வெள்ளாமைக்காரர்களின் முகத்துடன் ஞாபகப்படுத்திக் கொண்டார். முஸ்லீம் ஆக்களின்ற வயல்க்காட்டில வேல முடிஞ்சு கையில நல்ல காசு இருந்ததால், தாங்கள் முகத்தில் சந்தோசத்தைச் சுமந்து, ஊர் புறப்பட்டதை ஞாபகப் படுத்திப்பார்த்தார்.

அப்போதுதான் பக்கத்து தமிழ் ஊரில் வெள்ளத்தில சாய்ந்த, வெள்ளாமையை வெட்ட ஆள் இல்லாது அல்லாடுவதாகக் கேள்விப் பட்டதை, மழையில் நனைந்த உடுப்புக்களை உலரவைக்க தாம் படாத பாடு பட்டுக் கொண்டிருந்த நினைவுகளுடன் ஞாபகத்துக்குக் கொண்டுவந்தார்.

''ஆமா, ஒரு நட போயித்தான் பாக்கலாமே.'' என்று கண்ணப்பண்ணன் சொன்னதால், தாங்கள் ஊருக்குப் புறப்பட்ட வேகத்திலேயே அந்த ஊரை அண்டி வயல் காட்டில் நடந்த போது, மழை வானம் மம்மலான இருட்டாக இருந்தது. பாதி வழி போகும் போதே, எதிர்ப்பட்டவர்கள் அங்கே ஏதோ கலவரமென்று சொன்னார்கள். எண்பத்து மூன்று யூலைக்குப் பிறகு இரண்டு வருசமாக அடிக்கடி கர்த்தால், கலவரம், ஊரடங்கு, ரவுண்டப் என்று கேள்விப் படுவதாலும், தாங்கள் ஏழு பேர் இருக்கிறம், ஊர்ச்சனம் இருக்கு, பிறகு என்ன பயம் என்று நடக்கத் தொடங்கிய போது, போக்கு வெயில் மஞ்சளாக எரிக்க, மழை மயிர்த் தூத்தல் போட்டுக் கொண்டிருந்தது. கிழக்கில் பெரிய அரை வட்டமாக வானவில் வயல் வெட்டையை மூடியது போல படர்ந்து கிடந்தது, அவருக்கு ஞாபகம் வந்தது.

வயல் காட்டை அண்டி நடந்து ஊருக்குக்கிட்ட வந்த போது, வயல் வரவைக்குள் அறுக்காத பாதி வெள்ளாமைகள் தண்ணியில் விழுந்து கிடக்க, அறுத்த வெள்ளாமை உப்பட்டி கட்டாது வரப்பில் அங்கும் இங்கும் சிதறிக் கிடக்க, சன நடமாட்டம் அற்றுக் கிடந்ததை சாய்ந்து கொண்டிருந்த சூரிய வெளிச்சமும், அச்சுறுத்தும் அமைதியுமாக இருந்த ஊர்மனையுடன் அவர் நினைவுக்குள் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குள் தாங்கள் உள் நுழைந்த போது தங்களுடைய தலைக் கறுப்பைத் தவிர, வேறு மனிதர்களுடைய தலைக் கறுப்போ, கதைக்கும் சத்தமோ அற்று ஊர் வெறிச்சோடிக்கிடந்தது. நாய்கள் தம்மைப் பார்த்து விரசிக் குரைத்து பின் ஒடுங்கி ஓடியது. ஆடு, மாடு, கோழி எல்லாம் தன்னட்டவாரம் திரிவதைக் கண்டார்கள். ஊரில் உள்ள ஒழுங்கைகளில் தாம் அங்கும் இங்கும் நடந்து மனித முகங்களைத் தேடியதை ஞாபகப்படுத்திப்பார்த்தார். வீட்டுக் கதவுகள் எல்லாம் திறந்து கிடக்க போட்ட சாமான்கள் போட்டபடி முற்றத்தில் கிடக்க, முற்றங்கள் கஞ்சலும் குப்பையுமாகக் கிடந்தன. மனுசர மட்டும் குளக்கோட்டன்ட பூதம் உறுஞ்சி விழுங்கியது போல ஊர் வெறிச்சோடிப்போய்க் கிடந்ததை, சனம் இல்லாத ஊரை முதல் தடவை பார்த்த பயத்தில், உள்ளூர உதறல் பிடிக்க, நெஞ்சு திடும் திடும் என்று அடித்ததையும், மனசை எதுவோ குடயிர மாதிரி இருந்ததையும், நினைவு கொண்டார்.

''டோய் பயளுவளா, ஏதோ ஏடாகூடமா நடந்தி போச்சி. நாம விளப்பம் இல்லாம இங்கின வந்து மாட்டிக்கினமுண்ணு நெனக்கன். இங்கின நின்னா ஆபத்து. வந்த வழிப்பாட்டிலய போய்க்குவம்.''

பிச்சாண்டி மாமா சொன்ன பிறகு, பயத்தில் உள்ளுக்குள் அடித்துக் கொண்டிருந்த இதயத் துடிப்பு, தன் காதுக்குள் கேட்பது போல இருந்ததையும், தன் கால் கைகள் அதன் பாட்டில் உதரத் தொடங்கியதையும், ஞாபகப்படுத்திப்பார்த்தார். ஊருக்குள் இருந்து வெளியேறி வயல் வெட்டைக்கு வந்த போது, ஊருக்குள் இருந்த இருளைவிட வயல் வெட்டையில் மம்மலான இருள் வெளிச்சம் பரந்து கிடந்தது போல அவருக்கு ஞாபகம் வந்தது. ஊரின் ஓரமாக வயல்க்காட்டை அண்டி முருகன் கோயிலுக்குப் போகும் ஒத்தயடிப் பாதையில், ஒருவர் பின் ஒருவராக வேகமாக நடந்த போதும், தூரம் ஒன்றும் குறையிற மாதிரி தெரியவில்லை என நினைத்தார். கால்களில் ஒற்றையடிப் பாதையின் ஓரங்களில் கிடந்த, நாயுருவியும், தொட்டாச் சுருங்கியும். கிழித்த காயங்களால் ஏற்பட்ட எரிவு களுடன் ஞாபகம் வந்தது. பயத்தில் நடை தடுமாற இடறி இடறி கோயில் திடலுக்குக்கிட்ட வந்ததையும், அங்கிருந்து காட்டப் பாத்து நடந்து, காட்டுக்குள்ளால் போவதுதான் பிச்சாண்டி மாமாவின் நினைப்பாக இருக்க வேண்டும் என, தான் நினைத்ததும் அவருக்கு ஞாபகம் வந்தது.

''நாம தப்புப் பண்ணிப்புட்டம்டா வேலு. இங்கின குழப்பமுன்னு தெரிஞ்சப்பவே நாம திரும்பி நடந்திருக்கனுமடா.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆமாண்ணே அப்புடித்தான் தோணுது.''

வேலுவும், பிச்சாண்டி மாமாவும் பேசிக்கொண்டே கோயில் திடலில் ஏறிய போது, பக்கவாட்டில் இருட்டைக் கிழித்து மின்னிப் புகையும் வெளிச்சத்தில் தென்னையின் அடிப்பகுதி ஒன்று கண்ணில் பட்டதையும், ஒத்தை வெடிச்சத்தம் காதுக்கு மிகக் கிட்டவாக போனது போல இருந்ததையும், தலைக் கறுப்பு மறையிற இருளில வேலுப் பயல் கால் மடிய நிலத்தில் விழுவதையும் கண்ட போது, என்ன ஏது என்று திக்குத் தெரியாத திகிலில் நெஞ்சு விறைக்க, மூச்சுத் திணறி பயம் தன் நெஞ்சுக் கூட்டுக்குள் நெருப்புத் தணல் சுடுவது போல உணர்ந்ததை ஞாபகம் கொண்டார்.

''எலேய், அப்பிடியே நின்னப்பலயே கைய தலக்கு மேல தூக்குங்கலே.''

பிச்சாண்டி மாமா இரகசியமாக கிசுகிசுத்த போதும், அங்கிருந்த அமைதியில் தன் தலைக்குள் இடி இடிப்பது போல அந்தச் சத்தம் காதை அடைக்க, தலை நோவது போல இருந்தது, அவருக்கு ஞாபகத்தில் வந்தது. வெடித்து மின்னிப் புகைந்து வந்து தங்களைச் சாகடிக்கப் போகும், சன்னத்துக்காக தாங்கள் காத்து நின்ற போது, இரத்தப் புடையன் பாம்பு தன் கால் வழியே ஏறி தலையைச் சுற்றி ஊர, தன் உடம்பில் இரத்தத் திட்டுக்கள் உருவாகி விறைக்கச் செய்து விட்டது போன்றும், தன் தலைக்கு மேலே விசப் பாம்பின் நச்சுக் கொட்டாவி நாத்தத்தில் தலை கிறுகிறுப்பது போலவும், பயத்தில் கண்டிக் காய்த்துப் போன உடம்புடன் நின்றதையும், தங்களுக் கிடையான இடைவெளியில் வேலுவின் இடைவெளி தூரமாகக் கிடந்ததை, தான் தலை மயிர்க் கறுப்பு மறைகின்ற இருளில் கண்டதையும் நினைத்துப் பார்த்தார்.

துவக்கில் இருக்கும் கத்தியை முதுகில் வைத்து நெட்டித் தள்ளி நகர்த்தி, கோயில் மதில்சுவருடன் அண்ட நிற்க வைத்து, உடம்பு முழுவதும் முரட்டுத்தனமான விரல்கள், போட்டிருந்த சேட்டுக்கு மேலால் ஊர்ந்து தடவிய போது, கோயில் சுவர்ச் சுண்ணாம்புக் காவி வழுவழுப்பாக மழையில் நனைந்த கசிவுடன் பிசுபிசுத்தது, ஞாபகத்தில் இருக்கிறது என நினைத்தார்.

''நாம வெள்ளாம வெட்டுக்காரங்க சாமி.''

''நக்'' என்ற அழுத்தமான சத்தம் கேட்டு தான் திரும்பிய போது, பிச்சாண்டி மாமாவின் உயரத்தைவிட குறைந்த ஆமிக்காரன் துவக்கின் அடிக்கட்டையை பிச்சாண்டி மாமாவின் முகத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரே இருந்து, பின்னே இழுப்பதைக் கண்ட போது, அவர்கள் சோதித்து முடித்து, வேலுவை இழுத்து வந்து, கோயில் திடலில் மதில் சுவரை அண்டித் தாக்கச் சொன்ன போது, பயம் ஒரு மட்டத்தேளைப் போல உடலில் இருந்ததை ஞாபகம் கொண்டார்.

மழையில் நனைந்து ஊறிக் கிடந்த திடலில், களி மண் கசிந்து வழிய வழிய, தங்கள் சாரண் துண்டுகளிலும், கை, கால் உடம்பு களிலும், சகதி அப்ப அப்ப, கண்ணப்பண்ணனின் சின்னச் சேத்து மண் வெட்டியால் மாறி மாறி தாங்கள் ஆழக் குழி வெட்டிய போது மழைத் தூறல் நின்று போயிருந்ததையும், வேலுவைக் குழிக்குள் கிடத்திய போது, நோயாளியாக இருக்கும் அவன் தந்தையினதும், அவனை சின்ன வயதிலேயே விட்டு விட்டு இறந்து போன தாயையும், சகோதரியையும், நினைத்தபடி மண் போட்டு மூடியது, அவர் ஞாபகத்துக்கு வந்தது.

வேலுவை புதைச்ச குழிக்கு மேல மண்ணைப் போட்டு திட்டியாகக் குவித்து விட்டுக் கொண்டிருந்த போது, தமக்குப் பின்னே ஏதோ அரவம் கேட்பதாக நினைத்து பார்வையை பின்னே திருப்ப முன்னர், பின்புறம் இருந்து ஒரு ஒத்தை வெடி ஒன்று மின்னித் தெறித்தது போல, மிகப் பக்கத்தில் வெடித்தது தன் காதை இரையப் பண்ணியதை பயத்தின் பெருமூச்சுக்களாலும், கந்தக நெடியாலும், வியர்வை நாத்தத்தாலும், ஒரு களிம்பு போல கனதியாகிப் போன இருளில், சாவின் நெடி எந்த உடம்பில் இருந்து வெளிப்படுகின்றது எனத் தன் கண்கள் இருளை வினவி நின்றதை ஞாபகம் கொண்டார்.

நின்றிருந்த தன் கால்களுக்குக் கீழ், பைப்பில் இருந்து தண்ணீர் கொட்டுவது போல லபக் லபக் என்னும் சத்தத்தை, வெடியின் அதிர்வில் விதிர்விதிர்த்து அடங்கிக் கொண்டிருந்த காதுகளின் இரைச்சலுக்குள் துல்லியமாகக் கேட்டதை, தான் உணர்ந்த போது, வேலுட சவக்குழியின் கால் மாட்டுப் பக்கம் இருந்து மண்ணை அணைத்துக் கொண்டிருந்த கண்ணப்பண்ணன், மண் பிட்டியில் சாய்ந்து கிடக்க, அவர் தலையில் இருந்து வழிந்த இரத்தம் மண்ணைத் தண்ணி போல கரைத்துக் கொண்டு ஓடியது, இருளில் கறுப்பும் சிவப்பும் போல தெரிந்த இர்த்தத்துடன் ஞாபகம் வந்தது.

கண்ணப்பண்ணனை அவருடைய சின்ன சேத்து மண் வெட்டியாலேயே, அவர் உடம்பச் சூடு அடங்க முன்னமே குழி போட்டு, உடம்பை குழிக்குள் இறக்கிய போது, இளஞ்சூடாக தடித்த கூழைப் போல வழிந்து கொண்டிருந்த இரத்தம் நினைவில் வந்து, நெஞ்சை நோகப் பண்ணுவதை உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோத்துக் கவளம் தொண்டைக்குள் பொறுத்துக் கொள்ள, விக்கி கேவுவது போல பிச்சாண்டி மாமாவின் கேவிய குரல்தான் இன்று வரைக்கும் தன் காதுகளுக்குள் கேட்பது போல உணர்ந்தார். வெடிப்பட்ட திடலில் இருந்து உருண்ட அவரது கால்களைப் பற்றியபடி, புல்தரையிலும், புதரிலும் தானும் கூட உருண்டு சிதறிப் போவது போல உணர்ந்ததை, கறுத்த உயரமான பெரிய மனிதனின் உயிர் ஒரு கணத்தில் சத்தமில்லாது பிரிந்த போது, சாவின் பயமும் தம்மைவிட்டு தூரமாக போனது போல உணர்ந்தது, அவர் ஞாபகத்தில் நின்றது. பிச்சாண்டி மாமாட இரண்டு குமருகளிடமும் மனதார மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, நாலு பேராகக் குழி போட்டுத் தாட்டதை, மற்ற இருவரதும் குழியை விட நீளமாக இருந்த அவரது சவக்குழியுடன் ஞாபகம் கொண்டார்.

பாண்டி, அவன் ஆசை ஆசையாக கதுருவெல பேமென்டில, தன்னுடைய மூன்று மாதக் குழந்தைக்கு வாங்கின துணித்துண்டையும், கிலுகிலுப்பையையும் நினைத்துக் கொண்டு தாட்ட போது, ஏதாவது பகிடி விட்டு, சிரிச்சுக் கை கால் உதறி மற்றவர்களை உதறிவிட்டு ரகளை பண்ணும், பாண்டியின் சிரிச்ச முகத்தை, மரண பயத்தில் உறைந்து அசையாது அம்மிக்கிடந்த இருளில் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கத்தை, நெஞ்சை வலிக்கச் செய்து கொண்டு புறப்பட்டுப் போன பெருமூச்சுடன் நினைத்துக் கொண்டார்.

பேசும்போது கொன்னை தட்டுவதால், கனக்கக் கதைக்காத மாணிக்கண்ணன் வெடி வாங்கி சிதைந்து போன நெஞ்சுப் பகுதியுடன், வாய்க்குள் மந்திரம் உச்சரிப்பது போல, முணு முணுத்துக் கிடந்ததையும், ஆமிக்காரர்கள் புதைக்கச் சொல்லி உறுக்கிக் கொண்டே இருந்ததால், அவர குழியில போட்டு மூடும் போது கூட வாய் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்த போது, பயத்தில் மூத்திரம் கடுக்கி சாரணை ஈரமாக்கி விட்டது போல நின்றதையும், அவர் ஆசையாக பத்தும் சின்னச் சுருட்டைக் கூட குழிக்க போடாமல் அன்று தாட்டதற்காக, இன்று வருத்தப்பட்டார்.

இரத்தக் களிம்பு போன்ற கருஞ்சிவப்பு இருள் தன் கண் களுக்கு முன்னே நிழல் உருவமாக அசைந்து கொண்டிருக்க, பயத்தில் வெடவெடக்கும் கையால் மண்வெட்டியை பிடிக்க முடியாது பதற, கால்கள் நிலத்தில் நிற்க முடியாது தடுமாற, இலக்கில்லாது விழும் மண்வெட்டிக் கொத்துகளின் கோணல் மாணலாகிக் கொண்டிருக்கும் குழியை நேரானதாக்க முனைந்த போது, நந்துவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சு அடங்கி ஒரு கட்டையைப் போல, இருளும், பற்றைகளும் முகம் மறைக்க நிலத்தில் கால் மடிந்து குப்புறக் கிடந்ததை ஞாபகம் கொண்டார்.

ஆழமாகவும் நேர்த்தியாகவும் போட முடியாது, தட்டுத் தடுமாறி போட்ட குழிக்குள் நந்துவை இழுத்து வந்து கிடத்தி, மண்ணை இழுத்து மூடிய போது, நந்து தன் புத்தி சுகமில்லாத தங்கச்சி மேல் உசிரையே வைத்திருந்ததையும், அந்தப் பிள்ளை கவனிக்க யாருமற்று தெருக்களில் பிச்சை எடுப்பது போலவும், அடிவாங்கி அழுவது போலவும் எண்ணங்கள் திணறடித்த போது, தான் நந்துவை மூடிவிட்டிருந்தது, ஞாபகத்தில் இருந்து கொண்டே இருந்தது.

தன்னை சுட்டு விட்டு, நாய், நரி, உடம்ப பிச்சுத் தின்ன விட்டுட்டுப் போவாங்களா, இல்ல குழி தோண்டிப் புதைச்சுப் போட்டுப் போவாங்களா, இல்ல தனக்குத்தானே குழி போடுவதா என, தான் தடுமாறி நின்ற போது, கடுமையான ஒத்தைக் குரல் களிம்பு போன்ற இருட்டில் பின்புறமாக வந்து தன் தலையை இடிக்கச் செய்ததை ஞாபகப்படுத்திப்பார்த்தார்.

''கம போய் சொல்றது, நம்பட ஆக்களு மேல கை வைக்க ஓனா. கம போய் சொல்றது.''

தன்னை உயிரோடு விட்டு ஊரை மிரட்ட அவர்கள் யோசிக்கிறார்கள் என புரிந்து கொண்ட போது, எந்த ஊரில் போய் தான் இதைச் சொல்வது, தங்கள் ஆக்கள் ஆறு பேரை தாக்கிறதுக்கு குழி போட்டதை, ஊரில் சொல்ல முடியுமா, அவங்க அவங்க வீட்டுக் காரர்களுக்கு என்ன சமாதானம் சொல்வது என தான் கடுமையாக திணறிய போது, மீண்டும் தன் தலை கடுமையாக வலித்தது, இப்போதும் தலைக்குள் நோவது போல உணர்ந்தார்.

ஊரைப் பார்த்து மட்டும் போவதில்லை என்று மனசு திடமாக இருந்ததால், மூன்று நான்கு நாட்களாக, பிச்சாண்டி மாமாவை தாட்ட நீண்ட குழியின் கால் மாட்டுப் பக்கமாக கிடந்து அழுது அரண்டு கிடந்த போது, ஊருக்குள் தலைக் கறுப்பு எதுவும் கண்ணில் பட வில்லை, மயானம் போல இன்னும் தன் நினைவுகளில் சன நடமாட்டத்துடன் அந்த ஊரை நினைத்துப் பார்க்க முடியவில்லை எனக் கவலைப்பட்டார்.

ஐந்தாம் நாள் விடியலில் தூக்கம் இல்லாது குளிருக்காக கோயில் மதிலை அண்டித்தான் படுத்திருந்த போது 'டப்' என்ற வெடிப்புச் சத்தமும், பின் மண் உள்ளே கொட்டுப்படும் சத்தமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதும், பின் விடிஞ்சு பார்த்த போது, நந்துவை தாட்ட குழி உள்ளே சலிந்து கிடந்ததைக் கண்டதையும், அதுக்குப் பிறகு அங்கு நிற்க முடியாது, அவங்கவங்க பையை தலைமாட்டில வைத்து விட்டு, தன் பையைத் தூக்கிக் கொண்டு கால் போன போக்கில் போய் வேலை செய்ததை, வேலை செய்த இடங்களுடன் ஞாபகப் படுத்த முனைந்தார்.

பின் அந்த ஊர் மாயமாய் மறைந்ததைப் பற்றி நிறையக் கதைகளைக் கேட்ட போது தான் ஊமையாகக் கேட்டுக் கொண்டிருந்ததை நினைத்துப் பார்த்தார். அந்த ஊருக்கு கோட்டில் இருந்து சம்மன் கொண்டு வந்த இரண்டு பொலிஸ்காரர்களை, இயக்கம் கடத்தி கொன்று விட்டார்கள் என்றும், எருமைப் பால் கொண்டு போக வந்த பிக்கப்பை, சிங்களாக்களுடன் சேர்த்து இயக்கம் கடத்தி விட்டது என்றும், செய்தி அறிந்த ஊர்க்காரர்கள், அயல் ஊர்களிற்கு ஓடிவிட்டார்கள் என்றும், பல செய்திகளைக் கேட்ட போது, தன்னுடைய ஆட்கள் ஆறு பேரை காவு குடுத்து விட்டு, வெட்ட வெளியில் தனியாக எதையும் பேச முடியாது தவித்துத் திரிந்த நாட்கள் அவர் நினைவில் வந்தன.

வயல் காட்டில் நெல்லு ஏத்த வந்த சலீம் காஜ்ஜியார் மில்லில வேலை இருப்பதை அறிந்து, ஏத்தின லோட்டோட, இங்க வந்து முப்பது வருசத்துக்கும் மேல ஓடி விட்டது என நினைத்தார். அப்பப்ப ஊர் நினைவு வந்து நின்று அல்லாடிய போது, தங்களுடைய ஆட்களைப் புதைத்தது போல, தன் மனசுக்குள்ளேயே புதைத்து விட்டு, இங்கேயே ஓரமாக ஒட்டிக் கொண்டு கிடப்பதை நினைத்துப் பார்த்தார். குழப்பம் எல்லாம் ஓஞ்ச பிறகு மனது ஊர்ப்பக்கம் விடாப்பிடியாக தள்ளிய போது, புதுச் சட்டையும், கையில் பணத்துடனும், ஊரப் பாக்கப் போனது ஞாபகத்தில் வந்தது.

அரிசி லோட்டோட போன காஜ்ஜியாரின் லொரியில் போய், மெயின் றோட்டில் ராண்ஸ்போமருக்குப் பக்கத்தில் ரைவர் பொடியன் இறக்கி விட்ட போது, மதியத்தின் கொடு வெயில் தகித்துக்கிடக்க, காற்று புழுதிப் படலத்துடன் அடிக்க, தார் வீதியின் அரைவாசிக்கு வெண் மணல் பரவி, வீதியை பாதியாக்கி விட்டது போல கிடந்தது அவர் நினைவுக்கு வந்தது. மெயின் றோட்டில இருந்து ஐந்தாறு கட்ட நடந்துதான் ஊருக்குள் போக வேண்டும், முன்னர் காலையில் ஒன்று, மதியத்தில் ஒன்று என C.T.B பஸ் போகும், மற்றப்படி நடந்துதான் போக வேண்டும், என தன் பழைய நினைவுகளை இரை மீட்டார். மதிய வெயிலில் உடம்பு தஞ்சக் கேடாகக் கிடந்ததால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச நேரத்துக்கு பனங்கூடல் நிழலுக்குள் தன்னை மறைத்துக் கொண்டு பஸ்சுக்காக காத்து நின்றதை காவோலைகளின் உரசல் சத்தத்துடன் ஞாபகம் கொண்டார். ஊருக்குள் போய் மற்ற தரம் கவலையை கிளப்பி விட வேண்டுமா என மனசு பயத்தில் அடித்துக் கொள்ள நின்றது நிலத்தில் விழுந்த பனையின் அசையும் நிழல் போல நினைவில் அவருக்கு வந்து வந்து போனது.

பச்சை நிற ஆட்டோ ஒன்று, மெயின் ரோட்டில இருந்து திரும்பி, பள்ளத்தில் விழுந்து திட்டியில் ஏறி, அங்கும் இங்கும் நெளிந்து ஓடி வந்த போது, உள்ளே ஒரு ஆள் இருக்க இடம் இருப்பதை தான் கவனித்து, தான் கை போட்ட போது, நிறுத்தாது போன ரைவர் தன்னைத் தாண்டும் போது, தன்னை மேலும் கீழும் உற்றுப் பார்த்துக் கொண்டு போன போது, தான் போட்டிருக்கும் உடுப்பு புதுசா இருந்தாலும், உடம்பு நோயாளியைப் போல் இருப்பதால், தன்னிடம் பணம் இருக்காது என நினைத்து நிப்பாட்டாது போயிருப்பான் என நினைத்ததை, தன் மீது செம் புழுதியை வாரி விட்டுவிட்டுப் போன ஆட்டோவின் பின் புறத்துடன் ஞாபகம் கொண்டார்.

தன்னை நீண்ட நேரம் காக்க வைக்காது பின் புறம் அகலமான கறுத்த ஆட்டோ ஒன்று, மெயின் றோட்டில் இருந்து தாழ்வாக இறங்கி, அங்கும் இங்கும் நெளிந்து தன்னை நோக்கி வரும் போது, ஆட்டோவுக்குள் ஆக்கள் இல்லை என்பதைக் கவனித்து, கையில் பச்சைக் கலர் ரூபா நோட்டை தெரிவது போல பிடித்துக் கொண்டு. ஆட்டோவுக்கு கை போட்டதையும், தன்னை தாண்டிப் போன ஆட்டோ நின்ற போது, பின்னால் துரத்தி வந்த புழுதியும் கொஞ்ச நேரத்தில் அடங்கியது ஞாபகத்தில் வந்தது.

''எங்க போக?''

''செல்வா நகருங்க.''

''எவடம்?''

''வெல்வா நகருங்க.''

''சக்கிலிய வாடியா?''

''ஆமாங்க.''

ஆட்டோ எகிறிக் குதித்து ஓடப் பார்த்த போது, ஸ்ராட் நின்று போனதால் உதறிக் கொண்டு மீண்டும் ஆட்டோ நின்றது. தான் ஏறி விடுவேனோ எனப் பயந்த ஆட்டோக்காரர் ஆட்டோவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வேகமாக ஸ்ராட் செய்து கொண்டு, மீண்டும் புழுதியைக் கிளப்பி விட்டுவிட்டுப் போன வேகத்தைப் பார்த்த போது, தன் வறண்ட கன்னத்தசைகள் விரிந்து சிரித்ததை நினைவு கொண்டார்.

அதற்குப் பிறகு உள்ளே போக மனசு இடம் தராததால், ஊர்க்காரர்களுக்கு தான் மற்றவர்களுடன் சேர்ந்து காணாமல் போன பயலாகவே இருக்கட்டும் என நினைத்துக் கொண்டு, பொலனறுவை பஸ்ஸைப் பிடித்து மீண்டும் ரைஸ் மில்லுக்குத் திரும்பி வந்த போது, அவிஞ்ச நெல்லு வாடை தன்னை மிண்டும் வரவேற்றதை ஞாபகம் கொண்டார். நினைவுப் பிராக்கில் அவிஞ்ச நெல்லு முழுவதையும், முற்றம் போல விரிந்து கிடந்த சீமெந்துத் தரையில் பரவி விட்டிருப்பதைக் கண்டார்.

(பிரசுரமாகாத படைப்பு - 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றுகை

அவன் அந்த நகருக்கு விருப்பமில்லாது, வெறுப்பான மன நிலையில், தன் தந்தையுடன் வந்த போது, அந்த நகருக்கான தரை வழிப் பாதையோ, கடல் வழிப் பாதையோ அடைபட்டிருக்கவில்லை. தரை வழியில், காட்டுப் பகுதி ராணுவக் காப்பரண்களுக்கு அருகில் காடையர்களின் தாக்குதல்கள் கடுமையாக இருந்ததுடன், நகரை அண்டிய செக் போஸ்ட் பகுதிகளில், ராணுவத்துடன் இணைந்திருந்த இயக்கங்களின் கப்பம் கேக்கும் தொல்லையும், ஆட்கடத்தலும் அதைவிட அதிகமாக இருந்ததால்தான், தனக்கு ஊரை விட்டு புறப்பட விருப்பமில்லாது இருந்தது என நினைத்தான். கடல் வழியாக அவன் தன் தந்தையுடன், அந்த நகருக்குள் வந்த போது, பொழுது சாய்ந்து கொண்டிருந்ததால், ஊரின் நினைவுகள் அதிகமாக வந்து, அந்த மம்மலான பொழுதை இன்னும் துயரடையச் செய்வதாக வேதனைப்பட்டான். பழக்கப்படாத கப்பல் பயணத்தால் அதிகமாக வாந்தி எடுத்த களைப்பில், பயமும் சோர்வும் சேர்ந்து தன்னை கவலை கொள்ள வைப்பது போல உணர்ந்தான். இறங்கு துறையிலும், ஊர்களுக்குள்ளும், முன்னொரு போதும் பழக்கப் பட்டிராத முகங்களும், வீதிகளும் அவனை மிக ஆழமாகக் கவலை கொள்ள வைத்தன. பழக்கப்பட்ட தென்னை, மா மரங்கள் கூட தனக்கு அதிக உயரத்துடனும், பருமனுடனும், புதிய தோற்றம் தந்து வேதனைப்பட வைப்பதாக நம்பினான். அவனுடைய வாழ்வில் அது மிக அதிகமான தூரப் பயணமாக இருந்ததால், தன் நெருக்கமான உறவுகள் தூரமாக இருந்துகொண்டு, தன் நினைவுகளை ஈர்க்கின்ற கவலை அவனை கடுமையாக வாட்டியது.

கம்பி வேலியும், கிடுகும் கொண்ட அடைப்பும், சிவத்த பெயின்றடித்த தகரம் பொறுத்திய பலகைக் கதவு கொண்ட, அடைப்புக்குள் இருந்த, இரண்டு வேறு வேறான உயரத்தில், அஸ்பெஸ்டர் கூரைத் தகடுகள் பொருத்திய முகட்டைக் கொண்ட அமேரிக்கன் பெற்றன் வீட்டுக்குள் இருந்து, இரைச்சலாக சண்டை இடும் சத்தம் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்ததைக் கேட்டபடி, தந்தைக்குப் பின்னே நின்றிருந்தான். தந்தை தன் இமை மயிர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்களால் வருடியபடி, உள்ளே இருப்பவர்களை கூப்பிடாது நிற்பதால் தன்னை திரும்பவும் கூட்டிக் கொண்டு போய் விடுவார் என்றுதான் நினைத்தான். கவியத் தொடங்கியிருந்த இருள் தன் வேதனையை இரட்டிப்பாக்குவதாக உணர்ந்தான். தான் வந்து சேர்ந்த நேரம் மதியமாகவோ அல்லது இரவாகவோ இருந்திருந்தால், சிலவேளை இவ்வளவு தூரம் வேதனையைத் தந்திருக்காது என நினைத்தான். தந்தை எந்தப் பெயரையும் குறிப்பிட்டு உச்சரிக்காது, வெறும் ஒலி எழுப்பிக் கூப்பிட்ட போது, பதில் குரல் எதுவும் வெளிப்படாமல், உள்ளே சண்டையிடும் இரைச்சலும், கூச்சலும் அதிகமாகிக் கொண்டே வந்தன. காத்து நின்ற ஒவ்வொரு நொடியும், ஊருக்கு திரும்பிப் போகும் நினைவாகவே அவன் நின்றிருந்தான்.

தன்னைச் சூழ இருந்த புதிய இடத்தின் மீது கவனத்தை சிதறவிட்டு நின்ற போது, அவன் எதிர் பார்க்காத சமயத்தில், உள்ளே இருந்து முதிர்ந்து கூனுண்ட கறுத்த சிறிய மனிதர் வெளியேறி, வேகமாக கடப்பை நோக்கி வர, பின்னால், தலைவிரி கோலமாக, அவரைவிட உயரமாகவும், வெள்ளையாகவும், பெரிய வட்ட பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி அணிந்தும் இருந்த முதிய பெண்மணி, பின்னால் துரத்தி வந்து, தன் கையில் இருந்த நாணயக் குற்றிகளை அவரை நோக்கி வீசி எறிந்தார். முதியவரை விட வேகமாக அந்தரத்தில் சுழன்று வந்தன நாணயக் குற்றிகள். சில நாணயக் குற்றிகள் படலையில் பட்டு விழ, படலையைத் தாண்டி வந்த நாணயக் குற்றி ஒன்று தந்தையின் முகத்தில் பட்டு கீழே விழுந்த போது தந்தை பதறாது நிற்க, அவன் கலவரப்பட்டு நின்றான். படலையைத் திறந்த அவர், அவர்களைக் கண்டதும், தம்மை இனங்காணாத போதும், பொதுவில் ''வாங்கோ,'' என்றவர், பின் தந்தையை இனங்கண்டு ''ஆ, அட நீங்களா! வாங்க... வாங்க,'' என்றவர், தம்மைத் தாண்டி வெளியே போவதற்கு முனைப்புக் காட்டியதைக் கவனித்தான்.

''எல்லாம் முடிஞ்சாப் பிறகு, இப்பத்தான் எங்கட வீட்டுக்கு வழி தெரிஞ்சுது போல...''

இப்படிக் கடுமையாகத்தான், அந்த பெண்மணி தம்மை வீட்டுக்குள் வரவேற்ற போது, அவன் தந்தையுடன் திரும்பிப் போகும் எண்ணத்தை தீவிரப்படுத்திக் கொண்டுதான், அந்த வீட்டுக்குள் போனான். தன் எண்ணத்தை தந்தையிடம் அவன் சொன்ன போது, தந்தை தன் இமை முடிகளை விரலால் நீவியபடி கடுமையாகச் சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த வீடுதான் உனக்கு பாதுகாப்பு, இங்க இருந்து டெக்கினிக்கல் கொலிச்சில ஒழுங்கா படிக்கிற வழியப்பார்.''

தனக்கு இங்கு ஒரு சித்தியும், சித்தப்பாவும் இருப்பதாக தாய் சொல்லி இருந்த போதும், நாட்டில் தொடர்ச்சியாக நடந்த சண்டையால், அவர்களுடனான உறவு அவர்கள் இருக்கும் இடத்தைப் போலவே தூரமாகவே இருந்து வந்தது. விறாந்தைக்கு அடித்திருந்த நீலப் பெயின்ட், நாப்பது வோல்ற் மின்குமிழின் மங்கலான வெளிச்சத்தில் சோகம் கவிந்து. சோர்வாக இருப்பது போல அவனுக்குப் பட்டது. விறாந்தைச் சுவரில், மணிக் கூட்டுக்குப் பக்கத்தில், தொங்கிக் கொண்டிருந்த குடும்பப் படத்தில் இருந்த சிறுவர்களின் முகம், அவனுக்கு பரிட்சயமற்றதாகவும், நினைவில் தங்காமலும் இருந்தது. மூத்த பெண்ணும் பையனும் வெளிநாட்டில் இருப்பதாக கேள்விப் பட்டிருந்தான். இளையவனைப் பற்றி ஒருவரும் அவனுக்கு ஒன்றும் குறிப்பாகச் சொல்லவில்லை என நினைத்தான். வெளி விறாந்தையுடன் இருந்த அறையை அவனுக்காக அவர்கள் ஒதுக்கிக் கொடுத்தார்கள். தன்னை அங்கு விட்டு விட்டு தந்தை ஊருக்கு திரும்பிய சில வாரங்களிலேயே இந்திய ராணுவம் நாட்டை விட்டு வெளியேறி, பிரேமதாசாவுடனான பேச்சு வார்த்தை குழம்பி, அந்த நகரத்துக்கான கடல், தரை வழிப் பாதைகள் மூடுண்டு போனது. தன் வாழ் நாளில் இனி ஒரு போதும் ஊருக்குத் திரும்பி தன் நெருக்கமான உறவுகளைச் சந்திக்காமலே இறந்து போவேன் என்றுதான், அவன் தினம் தினம் நினைத்து கவலைப்பட்டுத் துவண்டு போனான்.

சித்தப்பாவினதும், சித்தியினதும் நடவடிக்கைகள் அவனுக்கு பயமாவும், புதிராகவும் இருந்தது. அவர்கள் தங்களுக்குள் கடுமையாக சண்டை போட்டுக் கொண்ட போதும், சித்தியை சைக்கிளில் வைத்து சித்தப்பா மிதித்துக் கொண்டு வெளியே போகும் போது சந்தோசமாகவும், சண்டை போட்டுக் கொண்டு அவர்கள் திரும்பி வரும் போது அவர்களை வியப்பாகவும் பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறான். அவர்கள் தங்களுக்குள் கடுமையாக சண்டை போட்டுக் கொண்டாலும், தனக்கான சாப்பாடு, அவர்கள் வீட்டில் இல்லாதிருந்தாலும் சாப்பாடு கூடைக்குள் மூடி வைக்கப் பட்டிருப்பதையும், சாப்பாடு வைக்காத பட்சத்தில் காசு இருப்பதையும் பல தடவை கண்டிருக்கிறான். சித்தப்பா அவனை சந்திக்கும் போது நினைவில் தங்காத சாதாரண விசாரிப்புக்களுடன் விலகிப் போய் விடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வர வேண்டிய நேரத்தில வராம இருந்து போட்டு... இப்ப இங்க என்னத்தப் பாக்க வந்தனி?''

இந்தக் கேள்வியை தன்னைக்காணும் நேரங்களில் எல்லாம் சித்தி கடுமையான தொனியில் கேட்பதால், பெரும்பாலும் அவவை தவிர்க்கவே அவன் விரும்பினான். கொஞ்ச நாட்களில் டெக்கில் கிடைத்த நண்பர்களுடனான உறவால், மூடுண்ட அந்த நகரம் தனக்கு, தன்னையறியாமலே நெருக்கமான உறவாகத் தொடங்கியதை உணர்ந்தான்.

டெக் முடிஞ்சு நண்பர்களுடன் கள்ளியங்காட்டு சந்தியில், விழுதெரிந்த ஆலமரத்துக்குக் கீழ் நின்று கதைத்துக் கொண்டிருந்த போது, பின்புறமாக வந்த யாரோ, அவனது கையை முரட்டுத் தனமாக திருகி, கழுத்தை திருப்பிப் பார்க்க முடியாது அழுத்திப் பிடித்துக் கொண்டு நிற்க, தன் தொண்டை கம்மி புரைக்கேறி தனக்கு வந்த செருமலை அடக்க முனைந்தான். நண்பர்கள் மரியாதையாக சிரித்துக் கொண்டு நிற்பதால் பகிடி என்று விளங்கிய போதும், வலுவான கைகளின் பிடி, சாதாரண மனிதக் கையின் பிடியாக இல்லாது இருந்ததால், தன்னைப் பிடித்திருப்பவரின் முகத்தைக்காண ஆவல் கொண்டான்.

அவர் தன் முரட்டுத்தனமான பிடியை விட்ட போது, கழுத்தில் வலியுடன் திரும்பிப் பார்த்தான். இரண்டு பேர், வரிப் புலி யூனிபோமும், இடுப்பில் பிஸ்டலும், தலையில் புலிச் சின்னம் பதித்த தொப்பியும், கழுத்தில் சயனைற் குப்பியும் அணிந்து, ஒரேமாதிரி உடல் கட்டும், வேறு வேறான சாயலிலும் இருவர் நின்றிருப்பதைக் கண்டான். தன் கைகளை முறுக்கிப் பிடித்த கண்ணாடி போட்டிருந்தவரின் சாயலை எங்கோ பார்த்த மாதிரி இருந்த போதும், சட்டென நினைவை இரை மீட்க முடியாது திணறினான்.

''என்ன ராசன்ணாச்சி, பேசாம நிக்கிறாய்?''

அந்தக் குரல் தன்னை ஊரின் கிறவல் வீதி இறக்கத்தில், குளிர் காற்றைக் கிழித்துக் கொண்டு சைக்கிளில் தான் வேகமாக ஓடிப் போவது போன்ற உணர்வில், உடல் குளிர்ந்து வருவதை உணர்ந்தான்.

''கணேசன்!''

''இப்ப கணேசன் இல்லண்ணாச்சி. பற்றிக். எங்கண்ணாச்சி இங்க நிக்கிறாய்? எப்ப இங்க வந்தனி?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வந்து ஆறு ஏழு மாதமாகுது. இங்க புதிய செம்மணி றோட்டில இருக்கிற அப்பாட தம்பி... இந்திரன் சித்தப்பாட வீட்டதான் இருக்கிறன். வீடு பக்கத்திலதான், வந்திற்றுப் போங்களன்.''

''வேற அலுவல வந்தனான். இப்ப வந்து வீட்ட பாத்திற்றுப் போறன். பிறகு வந்து ஆறுதலாக் கதைக்கிறன். ஊரில அம்மா... அன்ரி எல்லாம் சுகமா இருக்கிறாங்களா?''

''ஓ... நான் வரேக்க எல்லாரும் சுகமாத்தான் இருந்தவங்க.''

அவன் பின்னால் திரும்பிப் பார்த்துப் பார்த்து சைக்கிளில் முன்னே போக, அவர்கள் மோட்டார் பைக்கில் பின் தொடர்ந்து வந்தார்கள். தன்னை விட கணேசன் (பற்றிக்) இரண்டு வயது இளையவன், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் ஊரில் இருந்து, மாங்கனாய் அம்மன் கோவில் திருவிழாவுக்குப் பின் காணாமல் போனவன். இன்று தன்னை விட திடமான உடற்கட்டும், பருமனுமாக நிற்பதாக அவனுக்குப் பட்டது. அவர்கள் வீட்டுக்கு வந்த போது வழமையைப் போலவே சித்தியும், சித்தப்பாவும் வெளியே போயிருந்தார்கள். கணேசன் (பற்றிக்) நீண்ட நேரம் நிற்கவில்லை, ஊர் புதினங்களை விசாரித்து விட்டு, கட்டாயம் லீவு கிடைக்கும் போது, வந்து ஆறுதலாகக் கதைப்பதாக சொல்லிக் கிளம்பிப் போனான். முகந் தெரியாத ஊரில், தன் ஒன்று விட்ட சகோதரனைச் சந்தித்தது, அவனுக்கு தன் ஊருக்கே திரும்பிப் போனது போன்ற சந்தோசத்தைக் கொடுத்தது. கணேசன் (பற்றிக்) பற்றி பெரியம்மாவுக்கு தகவல் கொடுக்க, முற்றுகைக்குள்ளான இந்த நகரத்தில் இருந்து கொண்டு என்ன செய்ய முடியும் என நினைத்தான். தானோ அல்லது அவனோ உயிருடன் ஊர் திரும்பினால், நிச்சயம் ஊருக்கு தகவல் கிட்டும் என நினைத்தான்.

அவ்வப்போது, அவ்றோ விமானம் தார் பீப்பாக் குண்டுகளைப் போட்டு, அந்த நகரை கதிகலங்கடிச்சுக் கொண்டிருக்க, தினமும் பம்பர் தாக்குதல்களும், செல் தாக்குதல்களும், கெலிக்கப்டர் தாக்குதல்களும் என பரவலாக நடக்க, தினமும் மரண ஓலமும், பதில் தாக்குதல்கள் பற்றிய செய்திகளுமாக இருந்த போது, ஊர் நினைவும், பயமும் தினம் தினம் வாட்ட, நிச்சயமாக தான் உயிருடன் ஊர் போய்ச் சேர மாட்டேன் என நினைத்தான்.

அதிகாலையில் அவன் வேப்பங்குச்சியால் பல் துலக்கிக் கொண்டிருக்கும் போதுதான் கணேசை, இன்னொரு போராளி மோட்டார் பைக்கில் ஏற்றி வந்து, வீட்டுப் படலையடியில் இறக்கி விட்டு விட்டுப் போவதைக் கண்டான். வரிப்புலி உடுப்போ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதமோ ஏதுவும் இல்லாது நீலநிற செக் சேட்டும், கறுத்த டெனிம் ஜீன்சும் அணிந்து சாதாரணமாக வந்திருந்ததால், தன்னால் கணேசனுடன் கூச்சமில்லாது தம்பி என நெருங்க முடிவதாக நினைத்தான். கணேசனை சித்தப்பாவுக்கும், சித்திக்கும் விறாந்தையில் வைத்து, அறிமுகம் செய்யும் போது பெரியம்மாவின் மகன் என்று சொன்ன போதும், இயக்கம் என்று, அவன் பயத்தில் சொல்ல வில்லை. சித்தப்பாவிடமும், சித்தியிடமும், கணேஸ் இயல்பாகப் பழகிக் கொண்டு, வீட்டுக்குள்ளும், குசினிக்குள்ளும் பூந்து புறப்பட்டு வந்ததை அவன் ஆச்சரியத்துடன் பார்த்து நின்றான். கணேசன் தன்னை விட வெக்கறையான சுபாவம் கொண்டவன் என்பது அவனுக்குத் தெரியும். அன்று முழுவதும் கணேஸ், தன்னைச் சைக்கிள் பாரில் வைத்து மிதித்துக் கொண்டு நகரத் தெருக்களில் சுற்றியதையும், ஞானம்சில் பிரியாணி சாப்பிட்டதையும், தன்னுடைய டெக் நண்பர்களைச் சந்தித்து இயல்பாகப் பழகியதையும், தன்னுடைய பகல் கனவு போலத்தான் அவன் நினைத்தான். பின் மாலை திரும்பவும் மோட்டார் பைக்கில் வந்து, கணேசனை கூட்டிப் போன போது, ஊரை விட்டு வந்த போது ஏற்பட்ட துக்கமும் கவலையும் அவனை வாட்டியது.

தொடர்ச்சியான விமானக் குண்டுத் தாக்குதல்களும், செல் தாக்குதல்களும், அந்த நகரின் தெருக்களும், மனித முகங்களும் பழக்கப்பட்டு, டெக் படிப்பு வேலைகளிலும், முற்றுகைக்குள்ளான நகருக்கான எல்லா வகைப் பொருட்களும் தடை செய்யப்பட்ட பின், அங்கு புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுக் கொண்டிருந்த பொருட்களும், உபகரணங்களும் பற்றிய கவனத்திலும், நீண்டு கொண்டிருந்த நாட்களில், ஊரினதும், கணேசனதும் நினைவுகள் எப்போதாவது ஒரு தரம் வந்து போவதாக அவனுக்குப் பட்டது.

டெக் முடிந்து வந்து, மாலை நேரத்தில், வாழை மரங்களுக்கு தண்ணி ஊற்றிக் கொண்டிருந்த போதுதான். இரண்டு மோட்டார் பைக்குகள் கடப்படியில் வந்து நிற்கும் அரவத்தைக் கேட்டான். மூவர் வரிப் புலி யூனிபோமில் படலையை திறந்து கொண்டு உள்ளே வந்த போது, தன் கண் முன்னே பற்றிக் வரிப் புலி யூனி போமில் சிரித்துக் கொண்டு நிற்பது போல உணர்ந்தான். வாளியை வைத்து விட்டு நிமிர்ந்த போது, அங்கு நின்றிருந்த மூவரில் ஒருவரது சாயல் கூட பற்றிக்கினுடையது போல இல்லாதிருந்தது, தன் மனதில் வெறுமையையும், கவலையையும் தருவது போல உணர்ந்தான். சித்தியும் சித்தப்பாவும் அவர்களைக் கண்டு வேகமாக வெளியே வருவதைக் கண்டான். சில நாட்களாக புலிகளின் இலக்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது, விமானங்கள் துல்லியமான தாக்குதல்களை நிகழ்த்திக் கொண்டிருந்ததால், மற்ற இயக்க முன்னாள் போராளிகள் மீதும், வெளி மாவட்டத்தில் இருந்து வந்தவர்கள் மீதும், புலிகளின் விசாரணைகள் கடுமையாக நடந்து கொண்டிருந்ததால், அப்படி ஏதுமோ எனப் பயந்தான். தன் கால்கள் வழியாக முட்செடி ஒன்று தன் உடல் மீது படர்ந்து, தன் தசைகளை கிழிப்பது போன்ற பயம் பரவ நின்றிருந்தான்.

''என்ன தம்பி விளக்கம்!''

''ராசன் என்றது...''

''இவன் தான்... என்ற பிள்ளதான்.''

''இவரோட கொஞ்சம் தனியாக் கதைக்க வேணுமம்மா.''

''தம்பி இது மாவீரர் குடும்பம் தெரியுந்தானே, என்ன விளக்கமெண்டாலும் என்னோட கதையுங்கோ.''

''விசாரணை இல்லயம்மா இவற்ற தம்பி 'பற்றிக்' பற்றி கொஞ்சம் தகவல் தேவப்படுது, அவ்வளவுதான். இப்ப அரை மணித்தியாலத்தில கொண்டு வந்து விடுறம்.''

போதனா வைத்தியசாலைக்குள் மோட்டார் பைக் திரும்பிய போது, அவனது மனம் பற்றிக்கின் நினைவுகளுடன் தவித்துக் கொண்டிருந்தது. நீண்ட கொரிடோரில் நடந்து கொண்டிருந்த போது, அந்த வழுவழுப்பான தரை, தன் கால்களை பற்றி உள் இழுத்து நகர முடியாது, தன்னை ஒரே இடத்தில் நீண்ட நேரமாக வைத்திருப்பது போல உணர்ந்தான். எந்தப் புலனுணர்வும் இல்லாது நடந்து கொண்டிருந்தவன், அவர்கள் நின்றதால், அவர்களை முட்டுவது போல நெருக்கமாகப் போய், பின் விலத்தி நின்றான். வந்தவர்களில் ஒருவர் தன் கண்களை கூர்ந்து பார்த்துக் கொண்டு நின்றதால், அவனுக்கு தடுமாற்றமாகவும், சங்கடமாகவும் இருந்தது. பின் அவர் தன் பார்வையை விலக்கிக் கொள்ளாது, தன்னை நெருங்கி வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். மிகக் கிட்டவாக வந்தவர், அவரது இரண்டு கைகளையும் அகல விரித்து, தன்னை அணைத்துக் கொண்ட போது, தன் உடல் சிலிர்ப்பதை உணர்ந்தான். அவரது விறைப்பான வரிப் புலி யூனிபோமுக்குள் இருந்த முரட்டுத்தனமான கைகள், தன்னை இறுக்கித் தழுவிய போது, அவர்களது இறுக்கமான மனநிலையையும் மீறி, தன் உடலுக்குள் மென்மையான ஏதோ ஒரு உணர்வு கசிவது போல உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அண்ணே, ஆனயிரவு முகாம் தாக்குதல்ல அவற்ற வீரம் மகத்தானது. முற்றுகை தகர்ப்புச் சமரில பற்றிக் களத்தில விழுப்புண் ஏந்தி வீர மரணம் அடைஞ்சிற்றார். அவர் காயம் பட்டுக் கிடக்கேக்க, உங்கட பெயரையும், விலாசத்தையும் குடுத்திருக்கிறார். அதுதான் நாங்க உங்கள தேடி வந்தனாங்கள். வீட்ட கொண்டே கிரிய ஏதும் செய்யிறதெண்டா செய்து போட்டு, நாளைக்கு மதியத்துக்குப் பிறகு வித்துடல தந்தா நாங்க பொறுப்பெடுப்பம். நீங்க இப்ப அவர் வித்துடலப் பாக்கலாம்.''

மீண்டும் அவர் அவனை அணைத்துக் கொண்டார். மீண்டும் அவன் உடல் சிலிர்த்துக் கொண்டது. அவர் கைகளில் இருந்து கசிந்த ஏதோ ஒன்று, தன் உடலுக்குள் ஊடுருவ, அந்த அணைப்பின் பலத்தில், பலவீனப்பட்டு சோர்ந்து துவண்ட கால்களை நிமிர்த்தி நின்றிருந்தான். அந்த அணைப்பில், துயரங்களும், சுமைகளும் தன் உடலில் இருந்து சதையுடன் உருகி வழிந்து, அந்த ஆஸ்பத்திரி கொரிடோரின் வழுவழுப்பான தரையில் கசிந்து பரவுவது போன்ற உணர்வில் மெய் மறந்து நின்றிருந்தான். தன் நெஞ்சு விம்மி விம்மிப் புடைக்க, தன்னை சைக்கிள் பாரில் வைத்து மிதித்துக் கொண்டே, ஊர்ப்புதினமும், பகிடியுமாக, பற்றிக்கின் நினைவுகள் அவனது மனக் கண்ணில் இரை மீண்டு கொண்டிருந்தன. அவர் ஒவ்வொரு கணமும் தன் தழுவுதலின், வீரியத்தில் தன்னை உருக வைத்து, தன் மன இறுக்கத்தை இளக வைப்பது போல உணர்ந்தான்.

''என்ன ஒருக்கா வீட்ட விடுங்கோ. சித்தப்பாட்ட கேட்டுப் போட்டுச் சொல்லுறன்.''

திரும்பவும் மோட்டார் பைக் கள்ளியங்காட்டுச் சந்தியில் திரும்பிய போது. வெறுமையாக இருந்த மனதில், பற்றிக், வரிப்புலிச் சீருடையில் தன் மனதை முறுக்கிக் கொண்டு, சிரித்தபடி நினைவுகளில் தொற்றக் கண்டான். அவனது மோட்டார் பைக், அவர்களது மோட்டார் பைக்குக்குப் பின்னால் வந்து, புதிய செம்மணி வீதியில் திரும்புவது போலத்தான் அவனுக்கு இருந்தது. வீட்டுக்குத் திரும்பிய போது, சித்தப்பா வெளியில் போயிருந்தார், மெல்லிய நடுக்கம் உடலில் படிந்திருக்க சித்திக்கு முன்னே போய் நின்றான்.

''என்னவாம்?''

''பெரியம்மாட மகன் கணேசன் - பற்றிக் ஆனையிறவுச் சமரில... அதுதான்... வீட்ட கொண்டு வந்து கிரிய செய்ய...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையான கடுப்பான முகபாவம் மாறாது, தன் முகத்தைப் பார்த்தபடி சிந்தனை வசப்பட்டு நின்ற சித்தி, தன்னை இடித்துத் தள்ளி விட்டு விட்டு, கூந்தலை அள்ளி முடிந்தபடி, படலையை நோக்கிப் போவதை பயத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான். அவர்களிடம் ஏதையோ, தனது வழமையான, கடுமையான தொனியில் பேசி விட்டு, வீட்டுக்குள் வராது, வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கியதை, விடுவிக்க முடியாத புதிர் போல உணர்ந்தான்.

''நீங்க வாங்கோண்ண.''

மீண்டும் அவனை ஏற்றிக் கொண்ட மோட்டார் பைக் போதன வைத்தியசாலையை நோக்கிப் போனது. வைத்தியசாலையில் காட்டிய ஏதேதோ படிவங்களில் பெரியம்மாவின் கவலையில் தோய்ந்து தசைகள் சுருங்கி ஒட்டிப் போன முகத்தையும், பெரியப்பாவின் வண்டில் இழுத்து கூனுண்டு போன முதுகையும், நெருக்கமான ஊரவரின் முகங்களையும் ஞாபகப் படுத்தியபடி, ஒப்பமிட்டான்.

புதிய செம்மணி வீதியில் அவர்களது மோட்டார் பைக் திரும்பிய போது, பின்னே பற்றிக்கை ஏற்றி வந்த கறுத்த வேன், கெட்லைட்டை ஒளிர விட்டபடி புதிய செம்மணி வீதியில் திரும்புவதை, திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வந்தான். வீட்டின் முன்னே பெற்றோல்மெக்ஸ் வெளிச்சத்தில் படலை அகலத் திறந்து கிடக்க, ஆக்கள் நடமாட்டம் தெரிந்தது. அவனுடைய ஊரைப் போலவே சனம் திரண்டிருந்தது. சித்தப்பா ஒடுங்கிய தன் நெஞ்சுக்குக் குறுக்காக கையைக் கட்டியபடி, பெற்றோல்மெக்ஸ் வெளிச்சம் பட நின்றிருக்கக் கண்டான். வேனில் இருந்து புலிக் கொடி போர்த்திய வித்துடல் பேழையை இறக்கி, வளவுக்குள் கொண்டு வந்த போது, பின்னால் பெண்கள் ஒப்பாரி வைத்தபடி வந்தார்கள். வளவுக்குள் டென்ற் அடித்து, இரும்புக் கதிரைகள் போடப்பட்டிருந்ததைக் கண்டான். ஆண்களும், பெண்களுமாக வளவு முழுவதும் சனம் இறுக்கமான மன நிலையில் உரையாடிய படி நின்றிருந்தது, தன் மனதில் தெம்பைத் தருவது போல அவனுக்கு இருந்தது. வீட்டுக்குள் இருந்து சித்தி தலைவிரி கோலமாக கதறி அழுது வந்து, வித்துடல் பேழையின் மீது விழுந்து கதறி அழுதார்.

''ஐயோ...! ஐயோ...! என்ற பிள்ளய இப்பிடிக் கொண்டு வந்திருக்காங்களோ... நான் ஆருட்ட சொல்லி அழ... நான் பெத்த பிள்ளய கடைசியா ஒரு தரம் கண்ணில காண இல்லயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யா... உன்ற முகத்தையாவது ஒரு தரம் பாக்க குடுப்பின இருந்திருக்கைய்யாச்சி... நீயும் என்ற பிள்ள தானே ஐயாச்சி... உன்னட்ட சொல்லி அழாம... நான் வேற ஆருட்ட ஐயா சொல்லி அழ... போன மாசந்தானே ஐயாச்சி வந்திற்றுப் போன நீ... அண்டைக்கு நான் நினைக்கயில்லையே ஐயா... நீ இப்பிடி வருவாய் எண்டு... தெரிஞ்சிருந்தா என்ற கையாலேயே உனக்கு சமச்சுப் போட்டிருப்பனே ஐயா... அவன் உசிரோட இருக்கேக்க நீங்க ஒருத்தரும் உறவெண்டு வர இல்லயே... வந்திருந்தா உறவு சொல்லிச் சந்தோசப் பட்டிருப்பானே... நீர்வேலி வாழத் தோட்டத்துக்கதானே ஐயா... இந்தியன் ஆமி சுட்டு... அவன் அனாதப் பிணமாக் கிடந்தானாம்... அண்டைக்கு அவனுக்கு பக்கத்தில நீ நிண்டிருந்தா அவன தாங்கி இருக்க மாட்டியா ஐயா... என்ற புள்ளயிட உடம்பு வாழத் தோட்டத்துக்க கிடந்து புழுத்ததாமே ஐயா... கடைசியா கண்டு பிடிச்சு மண்ணெண்ன ஊத்தித்தானே பத்த வச்சதாம் ஐயா... உன்ன அப்பிடி அனுப்ப மாட்டன் ஐயா... பூரண கும்பம் வைச்சு... ராச மரியாதையோட உன்ன வழி அனுப்பி வைக்கிறன் ஐயா...''

ஆளரவமற்றது போல உறைந்து கிடந்த அந்த வீடு, சன நடமாட்டத்தாலும், பெற்றோல்மெக்ஸ் வெளிச்சத்தாலும், ஒப்பாரிச் சத்தத்தாலும், உயிர்ப்பாவது போல அவன் உணர்ந்தான். பெற்றோல்மெக்ஸ் வெளிச்சத்தில், மஞ்சளும், சிவப்பு நிறத்திலுமான புலிக் கொடி போர்த்திய கணேஸ் - பற்றிக்கின் முகம் அவனது வழமையான சிரிப்புடன் பிரகாசமாக ஒளிர்வது போல அவனுக்குப் பட்டது. சுவரில் புழுதி படிந்த பிளாஸ்ரிக் மாலையுடன் தொங்கிக் கொண்டிருக்கும் சித்தியின் இளைய மகன் அமுதனின் முகம்.

''உயிர் போகேக்க உன்ற அண்ணன நினைச்சுச் சொன்னியே ஐயா... என்ற பிள்ள சாகேக்க ஆர் ஆர நினைச்சு... தவிச்சு தவிச்சு... உயிர் போச்சோ ஐயா... அண்டைக்கு நீ வீட்ட வரேக்க... இந்த அம்மாவப் பாக்க... என்ற பிள்ளதான் உன்ன அனுப்பி வைச்சான் எண்டு இந்த பைத்தியக்காரிக்கு தோணாமப் போச்சே ஐயா... அண்டைக்கு படியில நீ ஏறேக்கயும்... இறங்கேக்கயும்... அவண்ட சாயல் தெரியுதெண்டு பட்டுதே ஐயா...''

கடலில் குளிக்கும் போது, தன் தோள்களில் ஏறி நின்று டைவடிக்கும் போதும், தன்னை சைக்கிளில் வைத்து இந்த நகரத் தெருக்களில் சுற்றிய போதும், கண்ணுக்குப் படாத கணேசனின் வலுவான கால்கள் தன் நினைவுகளில் வருவதை உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயா... என்ற ராசா... இந்த முத்தத்தில நிண்டு செம்பில தண்ணி வாங்கி அண்ணாக்கா குடிக்கேக்க... உன்ற மிடறு ஏறி இறங்கிறதப் பாத்து... அவன் போலவே இருக்கெண்டு... அண்டைக்கு இந்தப் பாவி நினைச்சனே ஐயா...''

தனக்கு மிக நெருக்கமாக நின்று அமுதன் அண்ணாக்காக தண்ணி குடிப்பது போல அவனுக்குத் தோன்றியது. வாழைக் குத்திகளை இணைத்துக் கட்டிய கட்டுமரத்தில் தன்னை இருத்தி, மாங்கனாய் குளத்தில், தன் வலுவான கைகளால் தடியை ஊன்றி, கட்டுமரத்தை நகர்த்திப் போகும் கணேசனின் நினைவு அவன் கண்களை பனிக்கச் செய்தது. கணேசனின் - பற்றிக்கின் மிடறு பெற்றோல்மெக்ஸ் வெளிச்சத்தில் நகர்ந்து அசைவது போலப் பட்டதால், தன் முள்ளந்தண்டு சிலிர்த்து, உடல் மயிர்கூச்செறிந்து உதற நின்றிருந்தான்.

காலையில் கிரியைகளுக்குப் பிறகு, அலங்கார ஊர்தியில் வித்துடலை வைத்து, முன்னே போராளிகள் அணிவகுத்துப் போக, வீதிகளில் மக்கள் மலர் தூவி அஞ்சலி செய்ய, கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு கொண்டு போன போது, தான் ஊர்போய் தகவல் சொல்வதற்காவது உயிருடன் இருக்க வேண்டும் என நினைத்தான். பற்றிக்குடன் களத்தில் வீர மரணமடைந்த மூன்று போராளிகளுடன் சேர்த்து, ராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்ட போது, ஆனையிறவில் சிதைந்த காப்பறண்கள், தன் கண்ணில் தோன்றுவது போல அவனுக்குப் பட்டது.

அவன் மாவீரர் மயானத்தில் இருந்து வீட்டுக்கு வந்த போது, பந்தல்கள் கலைக்கப்பட்டிருந்தன, தோரணங்கள் காய்ந்திருந்தன, வீட்டின் உள்ளே அமைதி நிறைந்திருந்தது போல அவனுக்குப் பட்டது. விறாந்தையில் கொழுவி இருந்த அமுதனின் படத்துக்கு, கணேஸனுக்குப் போட்ட மலர் மாலை அணிவித்திருந்தது, அமுதனின் முகத்துக்குப் புதுப் பொலிவு தருவதாக அவனுக்குப் பட்டது. சித்தப்பா கால் மாட்டில் குந்தி இருக்க, சித்தி ஆழ்ந்த தூக்கத்தில் படுத்துக் கிடந்தார். தான் அந்த வீட்டுக்கு வந்த காலத்தில், சித்தி அப்படி ஒரு ஆழ்ந்த தூக்கத்தில் இருந்ததை, இதற்கு முன் ஒரு போதும் தான் காணவில்லை என நினைத்தான்.

(பிரசுரமாகாத படைப்பு - 2015)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தப்பித்தல்

வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வீதிக்கு, தனது சிடி பிப்டி மோட்டார் பைக்கைத் தள்ளிய போது, ஸ்டேன்ட் அடித்ததால் ஏற்பட்ட விண் விண் என்ற வலியால், தன் சிந்தனை வயப்பட்ட நிலையைக் குழப்பி, மார்க்கட்டுக்கு அனுப்பும் மனைவி மீதும், தன் பிரஸ்டேஜ்ஜில் கை வைத்துவிட்ட லீனா டீச்சர் மீதும், எரிச்சல்பட்டுக் கொண்டார். புதுசா வந்த கத்துக்குட்டி லீனா டீச்சர், ஆங்கிலத்தில படிச்சுப் போட்டு, புதுசு புதுசா பள்ளிக்கூட காலை நேர அசம்பிளியில் அசத்துவது, தன் முப்பது வருட ஆசிரிய வாழ்க்கைக்கு சவாலாக இருப்பதாக கருதினார். கர்ணன் கட்டில் சட்டத்தை உடைத்துக் கொடுத்து, தன் கொடையின் திறத்தை நிரூபித்ததையும். இறுதியாக இருந்த நல்லவன் மரத்தைத்தொட இறங்கிப் போன பின், பஸ் மின்னல் தாக்கி, பஸ்சுக்குள் இருந்தவர்கள் கருகிப் போன கதையையும் வைத்துக் கொண்டு காலந்தள்ள முடியாது என்ற நிலையில்தான், காலையிலேயே, எப்போதோ தகர ரங்குப் பொட்டியில் போட்டு வைத்த புத்தகங்களுடனும், எப்போதோ மாந்திப்போன தன் புத்தியை உசுப்பி விட்டும், நாளை காலை அசம்பிளி நற்சிந்தனைக்காக, தன் சிந்தனையை துலக்கிக் கொண்டிருந்த போதுதான், மனைவி சாமான் லிஸ்டும், பையுமாக அவரை மார்க்கட்டுக்கு அனுப்பி வைத்த கடுப்பில், பைக்கைத் தள்ளியதால்தான், ஸ்டான்ட் தன் கால் பெரு விரலை பதம் பார்த்து விட்டது என, மனைவி மீது ஆத்திரம் கொண்டார்.

சிடி பிப்டி பைக்கின் பெற்றோல் டேங்கில், தன் சலிந்த தொந்தியை இருத்தி, தன் சிந்தனையின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாத வேகத்தில், பைக் மிக மெதுவாக நகர்ந்து கொண்டிருப் பதற்காக எரிச்சல்ப்பட்டார். அந்த ஒரு வழிப் பாதையால் மார்க்கட்டை நெருங்க நெருங்க வாகன நெரிசல் அதிகமாகிக் கொண்டு வந்ததால் நிதானமாக பைக்கைச் செலுத்த வேண்டும் என நினைத்த போதும், லீனா டீச்சர் நினைவில் தோன்றி கடுப்பாக்கியதால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரில் மார்க்கட்டுக்குள் இருந்து வெளியே வந்த முதியவரை மோதப் பார்த்தார். வீட்டில் இருந்து வரும் போது ஒரு வழிப் பாதையில் வேகமாக மார்க்கட்டை நெருங்கியது போல, திரும்பிப் போகும் போது, அப்படி வேகமாகச் செல்ல முடியாது என நினைத்தார். நகரைச் சுற்றிக் கொண்டுதான் வெளியேற வேண்டி இருப்பதால் வீடு போய் சேர நேரம் எடுக்கும் என நினைத்தார். பாக்கிங்கில் அவதானமாக பைக்கை விட்டபடி, நற்சிந்தனைக்கான தவிப்புடன், அவசரமாக பைக்கில் இருந்து பையை உருவிய போது, கெண்டில் திரும்பி தன் தொடையை தாக்க, தடுமாறி நின்றிருந்தார். மார்க்கட்டுக்குள் மரக்கறியை வாங்கி விட்டு, வெளியே தன் நண்பன் மார்க்கண்டு கடையில் பலசரக்குச் சாமான் வாங்கும் முடிவோடு வேகமாக மார்க்கட்டுக்குள் புகுந்து, மரக்கறி விற்கும் பகுதியை நோக்கி வேகமாக நடந்தார்.

பிஞ்சு வெண்டிக்காய், சூத்தை இல்லாத கத்தரிக்காய், அழுகாத தக்காளிப் பழம், விலைக்கான பேரம் பேசுதல் என அவரது வாய் உரையாட, தன் புத்தியின் பக்கம் அவை எந்த தாக்கமும் செலுத்தவில்லை என நினைத்தார். பேரம் பேசிய விலையும், தான் வாங்கிய மரக்கறிகளுக்குமான பெறுமதியை கிரகிக்க முடியாது, தான் தடுமாறுவதற்காக வெட்கப்பட்டார். கடைக்காரர் சொன்ன பெறுமதியைக் கொடுத்து விட்டு நகரும் போது, விலையை துருவித் துருவி ஆராயும் மனைவிக்கு பதில் அளிப்பதில் இருக்கக் கூடிய சிக்கல்களையும் அவர் புத்தி உணர்ந்தபடிதான் இருந்தது.

மரக்கறிக் கூடையுடன் திரும்பிய போதுதான், மின்னல் என அவர் சிந்தனையை அது தாக்கிற்று. ஒரு வழிப் பாதை, பேசிய வார்த்தையை திரும்பப்பெற முடியாது, முதுமை திரும்பாது, மாணவப் பருவத்தை திரும்ப அடைய முடியாது, கடந்த காலம் காய்ந்த காவோலை, பொரித்த கோழிக் குஞ்சு முட்டைக்குத் திரும்ப முடியாது, பிறந்த குழந்தை கருப்பை மீள முடியாது. மனித வாழ்வு ஒவ்வொரு கணமும், ஒரு வழிப் பாதைதான், எல்லோரும் இருந்த பாதையில் நடந்தவர்கள்தான்... சென் தத்துவம்... ஆகா அருமை... சிந்தனை வசப்பட்ட நிலையில் வேகமாக வந்து. தன் தொந்தி குலுங்கி அதிர, எதிர்ப்பட்ட கழிவு நீர் தேங்கிக்கிடந்த பள்ளத்தை, எகிறிக் குதித்துத் தாண்டினார்.

தனக்குக் கிட்டிய சிந்தனையை சிந்தாமல் சிதறாமல் சிறைப் பிடிக்க வேண்டும் என்ற வேகத்தில், மார்க்கண்டின் பலசரக்குக் கடைப் படிகளில் தாவி ஏறினார். நண்பன் என்பதைவிட மாஸ்ரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மரியாதைக்காக கல்லாவில் இருந்து எழுந்து நிற்கும், நண்பனின் தோளில் கை வைத்து கல்லாவில் அமர்த்தியபடி அலட்டிக்கொண்டு நிக்காமல், வேகமாக கடையில் இருந்து கிளம்ப வேண்டும் என நினைத்தார்.

''மச்சான் கொஞ்சம் அவசரமடா.''

''தம்பி சேர்ர சாமனுகள முதல்ல குடுத்திற்று நில்லு.''

மார்க்கண்டு கடன் கணக்குக் கொப்பிகளுடன் போராடிக் கொண்டிருப்பது தனக்குச் சாதகமாக இருந்ததால், சாமான்கள் நிறுத்து பொட்டலம் சுத்தும் கடைப் பையனைப் பார்த்துக் கொண்டிருக்கும் பாவனையில், தன் சிந்தனையின் வேகத்தை முடுக்கி விட்டார். முகபாவம், எதுகை மோனை, வாக்கிய அலங்காரம். உவமையணி, மேற்கோள் என, நீண்ட நாட்களாக உறங்கிக்கிடந்த தன் மூளையை, சிக்கி முக்கிக் கல்லில் உரசுவது போல உரசி, தன் சிந்தனைகளை ஒரு திரளாக திரட்டிக் கொண்டு நின்ற போதுதான், கால்களுக்குக் கீழ் காற்றுச் சுழிக்க, நிலம் அதிர்ந்து கடை அதிர, பாரிய குண்டு வெடிக்கும் சத்தத்தை அவர் கேட்டார். கடைப் பையனின் கையில் இருந்த சரை தடுமாறி விழுவதை, படபடக்கும் நெஞ்சுடன் கண்டார். வெடி அதிர்வில் இரைச்சலற்று உறைந்து போன அமைதியைக் கிழித்துக் கொண்டு, மிகக் கிட்டவாக இருந்து, ஒரு ஒற்றை வெடியும், பின் எதிர் பக்கமிருந்து தொடர் வேட்டோசைகளும் அதிரத் தொடங்கிய போது, பதட்டத்தில் தன் கை கால்கள் வெடவெடத்து உதர நின்றிருந்தார்.

''நிலத்தில விழுந்து படு மச்சான்.''

தன் தொந்தி நசிய குப்புற விழும் போதே தன் பருத்த உடல் மீது வெடி இலகுவாகப் பட்டு விடும் என்ற எண்ணம், பயங்கொள்ள வைத்ததால். தன் தலையை உயர்த்தாது, பார்வையை அங்கும் இங்கும் நகர்த்தி தன் உடலை பாதுகாக்கக் கூடிய அரணைத் தேடினார். கண்ணில்பட்ட சதுரமான தேயிலைப் பொட்டியை நோக்கி, பயத்தில் கட்டுப்பாடின்றி, தாடையுடன் தாடை கிடுகிடுத்து, பல்லுடன் பல்லு மோதுவதை கட்டுப் படுத்த முடியாது தவித்தபடி, தலையை உயர்த்தாது குரோலிங்கில் நகர்ந்தார். நெருக்கமாக தொடரும் வெடிச் சத்தத்தைக் கேட்டுக் கொண்டே, தன் பருத்த உடலை நகர்த்தி, நடுங்கும் கை கால்களை முடக்கி கொடுக்கிக் கொண்டு தேயிலைப் பொட்டிக்குப் பின்னே தன்னை மடக்கிக் கொண்டார். தன் பருத்த உடம்பு ஒரு குழந்தையின் உடம்பைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல உட்சுருங்கி விட்டது என உணர்ந்தார். பள்ளிக் கூட விஞ்ஞான ஆய்வு கூடத்தில், பதப் படுத்திய நிலையில். மருந்துத் திரவத்துள், மிதக்கும் இறந்த கருவைப் போல, தன் உடல் குறுகிக்கிடப்பதான நினைவு தனக்குள் வர, வேட்டோசைகளின் போக்கை கணிக்க முற்பட்டார். வேட்டோசைகள் ஓய்ந்து நீண்ட நிசப்தம் அந்த பிரதேசம் எங்கும் நிறைந்திருந்தது.

வேட்டோசைகளின் அதிர்வு அடங்கி மெல்லிய சலசலப்பு கேட்கத் தொடங்கிய போது, வெளியே எச்சரிக்கையாக நகர்ந்து போன மார்க்கண்டு, போன வேகத்திலேயே திரும்பி வருவதை. பரிசோதனைச் சாடிக் கருவின் நிலையில், தேயிலைப் பொட்டிக்குப் பின்னே கிடந்தபடி, வேகமாக அடித்து, வலிக்கத் தொடங்கி இருந்த நெஞ்சுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

''மச்சான் எழும்பி வீட்ட ஓடு. பொடியள் ஆமிட இண்டலியண்ட் நாலஞ்சு பேர போட்டுட்டு, தப்பிப் பொயிட்டாங்கள். ஆமி வந்து ரவுண்டப் பண்ணுரதுக்குள்ள வீட்ட ஓடு. தம்பி, டேய் கடய மூடுடா.''

கொடுகிய நிலையில், பத்துப் பன்னிரெண்டு நிமிசம் கிடந்த தன் உடம்பை விரிக்க அவதிப்பட்டபோது, தன் முழங்கால் பட்டு தேயிலைப் பொட்டி சாதாரணமாக நகர்ந்தபோது, தான் இவ்வளவு நேரமும் வெற்றுப் பொட்டிக்குப் பின்னே கிடந்ததை நினைக்க, மீண்டும் தன் தாடைகள் உதறி, பல்லு நெருமுப்படுவதை கட்டுப் படுத்த முடியாது தவித்தபடி எழுந்து நின்றார்.

பயத்துடன் மரக்கறிக் கூடையை தூக்கிக் கொண்டு, கடையை விட்டு தெருவுக்கு வந்த போது, காண் ஓரமாக் இரத்தம் சிதறிக் கிடக்க, ஒரு 'பொடி' கிடப்பதைக் கண்டு நிலை தடுமாறி, தன் கால்கள் இயங்க மறுப்பது போல உணர்ந்தார். பதட்டமும் நடுக்கமுமாக மோட்டார் பைக் பாக்கிங்க்கு கிட்ட வந்த போது, பாக்கிங்க்கு சற்றுத் தள்ளி வெடிப்பட்ட காயத்துடன் ஒரு பொடியைக் கண்டார், நடுங்கும் கையால் மோட்டார் பைக்கின் சாவித் துவாரத்துக்குள் திறப்பைப் போட முடியாது திணறும் தன் கைகளை வலுவாக்கிக் கொண்டு, திறப்பைப் போட்டு பைக்கை ஸ்ராட் செய்தார்.

பதட்டத்துடன் ஓடிக் கொண்டிருக்கும் சனத்துக்குள்ளால், ஒரு வழிப் பாதையின் விதி முறைகளை மீறி, வந்த வழியிலேயே பைக்கை ஒட்டி, காலாலும், சில வேளைகளில் கையாலும், சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளில் பைக்கின் முன் டயராலும், எதிர்ப்பட்ட சனத்தை இடித்து வழி எடுத்துக் கொண்டு, தட்டுத் தடுமாறி, பதறும் நெஞ்சுடன் வீடு நோக்கி பைக்கை ஓட்டினார்.

வீட்டை நெருங்கிய போது, பதட்டத்துடன் மனைவியும், மகளும், தெருவில் காத்து நிற்பதைக் கண்டு, பாதுகாப்பாக திரும்பிவிட்ட உணர்வில் பெருமூச்சுவிட்டார். பலமாக அறைந்தது போல வெளிறிப் போன முகத்தைப் பார்த்தபடி, பயத்துடன் மனைவி மரக்கறிக் கூடையை வாங்க, மகள் படலையை அகலத் திறந்து பிடிக்க பாதுகாப்பாக வீட்டுக்குள் நுழைந்து, முகத்தில் கோபத்தைக் காட்டினார். தன்னை படிக்கவிடாது மார்க்கட்டுக்கு அனுப்பி, கொல்லப் பார்த்ததான கோபத்துடன் பைக் ஸ்டான்ட் அடிக்காதபடி, பைக்கை நிறுத்தினார். நாளை கர்த்தாலோ, ஊரடங்கோ போடுவார்கள் என்பதால், தன் நற்சிந்தனை பிந்திப் போகும் என மன நிம்மதி அடைந்தார்.

(பிரசுரமாகாத படைப்பு-2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் இணைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்துக் கறுப்புக்களும் கரித்துண்டுகளும்

சில்வாவைத் தெரியும், வாடியிலிருந்து விரல் இடுக்கில் சூரன் மீன்களை இரு கைகளிலும் காவியபடி எங்கள் கிறவல் வீதியில் பனை ஓலைத் தொப்பி நாடா மார்பில், சிலுவையாய் அசைய செல்பவன். சந்தியில் சைக்கிள் கடை வைத்திருக்கும் சில்வாக்கு நெருப்பில் எரிந்து இழுத்துப் பிடித்த தோல், கழுத் தடியில் சுருங்கிக்கிடக்கும். வைரவர் கோவில் ஆலமர நிழலில் குண்டடித்து விளையாடி ஏதாவது காரணம் தேடி, சண்டை போடுபவனும் சில்வாதான். ''சில்வாட ஆஸ்தி எங்கட ரோட்டால கொண்டு வருவாங்களாம்...'' ஓங்கி நீண்ட வார்த்தைகளின் கோர்வை எழுந்து தென்னை வட்டுக்களின் உயரத்தைத் தாண்டியது. இரைச்சலின் அதிர்வில் முத்தம்மாச்சி அப்பாவின் முற்றத்து விலாட்டின் மென் பசிய நிற மாந்தளிர் ஆடி கலைவுற்றுப் போன மாமரப் பூச்சிகள் இரைச்சலான சடசடப்புச் சத்தத்துடன் முத்திப்போன கரும் பசியநிற இலைகளிலும், பழுப்பு நிற முதிர்ந்த இலைகளிலும் மோதின. நாக்குத் தெறிபட, தலை சிலும்பிப்போக, பிடரியில் விழுந்த அடியில் மண் நீல நிறம் பெற்று மங்கி பின் பழைய நிறம் பெற்றது. பின்னால் தணிகாசலம் மாமா செவ்விளநீர் வட்டுக்கு முன்னே தலை சிலுப்பி சிரித்தபடி, ''சில்வா இல்லடா எரும, செல்வாடா...'' ஓ...! தமிழ்த் தேசியம். எழுபத்தேழின் இரவொன்றில் செல்வாவின் ஆஸ்தி கொண்டுவந்த ட்ரெக்டர் பெட்டியினுள் சிறிமா புரத்தில் வைத்து இருளைக் கிழித்து ஒளிரும் நெருப்புத் தணல்கள் செஞ்சிவப்பாய்க் கனன்று வந்து வீழ்ந்த விறகுக் கட்டையை பார்த்துக் கொண்டிருந்த ஊர்.

கடல் கன்னியின் சப்பாத்துக்களை திருடிப் போனவர்களை, கடற்குதிரையில் ஏறி தேடித்திரியும் குள்ளர்கள் இரவில் நடமாடுவதால் அலைவாய்க்கரை முழுவதும் அதிகாலையில் தடம் கிடப்பதாக கடற்கரை ஓரக் கதைகளையும் முந்நூறு வருடம் இப்பூமியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருடன் வாழ்ந்த முப்பது முழ கருநாகங்கள் சிறுத்து ஒரு முழமாக, இறக்கைகள் முளைத்து மோட்சத்துக்கு, நாகலோகம் நோக்கி பறந்து போவதாக, கண்ணைச் சிமிட்டிக் கொண்டு சுருட்டோ சுங்கானோ புகைக்கும் பெத்தாக்கள், அச்சமூட்டும் இருளில் சொன்ன கதைகள் சொற்துகள்களாக உலாவும் பிரதேசம் அது.

"ஓம்... சுவீம்.... சுவீம்.... மான் ஒரு கையில் மழு, ஒரு கையில்... சங்கொருகையில்... ஆயிரத்தெட்டு பேய் பிசாசு, பில்லி... சூனியம்... அறு... அறு... திரிபுர... ஓம்... சுவீம்... சுவீம்..." நெற்றியின் மையம் கூசி, நெருட, உதிரும் திருநீறு கண் இமையிலும், மூக்கு நுனியிலும் சாம்பல் படிவாய்ப் படர, மந்திரம் சொல்லி காய்ச்சலுக்கு திருநீறு போடுவார் முத்தம்மாச்சி அப்பா. வாழும் போது யாருக்கும் இடைஞ்சலில்லாமல் வாழ்ந்து, முடிந்தளவுக்கு மற்றவர்களுக்காக வாழ்ந்தவர். பின்னாளில் தன் மரணச் செலவுக்கு பணமும், தன் மார்பளவுப்படத்துக்கு பிரேமும் போட்டு வைத்தவர். வாய்க்கரிசி பொரித்து சில்லறையும் சேர்த்து வைத்தவர். தன் மரணத்தின் பின்னும் தன் வாழ்வு தனக்குள் அடங்கி நிற்கவேண்டும் என்ற அறத்தை வாழ்க்கையாகக் கொண்ட முத்தம்மாச்சியப்பாவை, முத்தம்மாச்சியின் சேட்டையைப் பார் என சிரித்த ஊர்.

பனையில் இருந்து உதிரும் சிறிய மஞ்சள் நிற தடித்த இதழ்களைக் கொண்ட பனம்பூவை மெலிந்த இடது கையால் நிலத்தில் விழாது ஏந்தி, இது ஆண்பூ, இது பெண்பூ என நெற்றியைத் தாண்டி, கண்களை மூடி வந்து விழும் நீட்டு கரிய நிற முடியை ஒதுக்காமலே பிரசங்கம் செய்து, மனதில் வடுவை உண்டு பண்ணி, சப்பிய பனம் பூவின் கயர், தொண்டையை அடைக்க உணர்வில் இடறி, இடது கைக்காரிகள் மீது, ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தி, பின் இரவில் படகேறி ஊரைவிட்டுப் போன, சொண்டு குவியக் கதைக்கும் கீச்சுக் குரல்காரி நண்பியாக இருந்த ஊர்.

சம்பந்தருக்குப் பின்னால் போய் சூரியக் கொடி பிடித்து வாழ்க தமிழ் ஈழம் என தேர்தல் காலங்களில் மட்டும் கத்தினால் தமிழீழம் கிடைத்துவிடும் என்ற கற்பனை கலைந்து, தாடி வளர்த்து, மாலையில் கடற்கரை புதைமணலிலும், புல்மேட்டிலும், புட்போல் விளையாடி, வியர்வையும், களைப்பும் கலைய, பின் அந்திக் கருக்கலில் புற்றிடலில் கூடிக் கதைத்திருந்த குட்டி அண்ணன்கள் காணாமல் போயினர். திரும்பி வருவார்கள் என நிலவொளியில் காத்துக் கிடந்த கரும் பசிய நிற புறத்திடலும், வெண்மணல் பரப்பு மைதானமும் கோலாப் பத்தையாலும், தகரப் பத்தையாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடுண்டு போக, கோல் போஸ்டுகள் உக்கி கறையான் ஏறி சிதைந்து நிலத்தில் உரமாய் போயும், அவர்கள் திரும்பி வராமல் போனதை பார்த்திருந்த ஊர்.

தம்மை மீறி எதுவும் வீட்டுக்குள்ளோ அல்லது ஊருக்குள்ளோ வந்து விட முடியாது என, ஈசிச்செயாரில் சாய்ந்து அட்டணக்கால் போட்டபடி உள்ளங்காலில் ஒட்டிய மண்ணை அசட்டுச் சிரிப்புடன் தட்டிக்கொண்டே, தற்பெருமை பேசும் ஆண்களையும், அரையடி காணிக்கு அடிபட்டு, மண்டையை உடைத்துக் கொண்டு, பின் சிறிமாபுரத்து இனவாதக் குண்டர்கள் போட்ட டயரில் சிக்கி, கைகளை மேலே தூக்கிப் பிடித்தபடி எரிந்து உடல் கருகி உயிரிழந்த ஆண்களையும் கொண்ட ஊர்.

கஞ்சா அடிக்க தள்ளுவண்டியை தெரு ஓரமாக விட்டு விட்டுப் போவான் மாமி என்னும் தள்ளுவண்டிக்காரன். மதிய வெய்யிலைக் கூட பொருட்படுத்தாது, தள்ளுவண்டியை தள்ளிக் கொண்டே கடற்கரையில் விட்டு விட்டு வந்து, வீட்டுக்குள் ஒளிந்து கொள்ளும் குறும்புக்காரப் பெண்களையும், கணவன்மார்களின் சஸ்பெண்டர் களையும் தோய்த்துப் போட்டு விட்டு, கக்கூசுக்குப் போன குழந்தையை அலுப்புடன் பார்த்துக்கொண்டிருக்கும் பெண்களையும் கொண்ட ஊர் அது.

தாடி வளர்த்த குட்டி அண்ணன்கள் காணாமல் போன காலத்தில் வித்தியாசமாக தலைமேவி இழுத்த புதிய அண்ணன்மார்கள் ஊருக்குள் வந்தார்கள். அதிகம் அறைகளுக்குள்ளேயே அடைந்து கிடந்த அவர்கள், எங்களைக் கண்டு மருண்டதும், நாங்கள் அவர்களைக் கண்டு மருண்டதும் மாறி, பின் நட்பார்ந்த புன்னகையின் தொடுகை எம்மை வந்தடைந்த போது, ''நீண்ட படை நடப்பில் தலைவர் மா ஓவுடன்'' உம், ''லங்காராணியும்'' எம் கைகளுக்கு வந்தன.

ஊருக்குள் ஒரு தொங்கலில் இருந்து மறு அந்தம் வரை கண்டாயங்களும், கடப்புக்களும் கம்பிகளை அறுத்து உண்டாக்க தெரு ஏறாமலே ஊர் சுத்தி வந்தோம் நாம். ஈரப்பிலாவிற்குக் கீழ்வட்ட விதானை அம்மாச்சி ''சொட்'' கண்ணுடன் நிற்க, மண்ணுக்குள் வாள்களும் புதைத்து வைக்கப்பட்டன. காலையில் நாங்கள் கர்த்தால்களை எதிர்பார்த்து போர்வைக்குள் சுருண்டு கிடக்க, ரவுண்டப் என்ற சொல் திடுக்கிட்டு விழிக்கவைக்கும். ஊருக்குள் பெனான்டோவின் பச்சை நிறப் பொலிஸ் ஜீப் கிரவல் புழுதி கிளம்பவோ, அல்லது ஈரலிப்பான சேற்றில் சத்தத்துடன் டயர் சுழலவோ அடிக்கடி மாமாவைத் தேடிவரும். நாப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோல்ட் மின்சார பல்புகள் எரிவது தெரிகின்ற அளவுக்கு, மாலை மங்கிய பின்னும், இறந்து போன செத்தைகளின் ஈர்க்குகளைப் பிய்த்துப் போட்டு, காதல்மொழி பேசிய மாமாக்களும், சித்தப்பாக்களும் கூட காணாமல் போனார்கள். அப்படிப் போன இரவொன்றில் தான் அந்த ஊரும், கரிய நிறக் கடல் வெள்ளை நுரையைக் கரையை நோக்கித் தள்ளிக்கொண்டிருக்க, இரைச்சலான கடலலைக்குள் அமிழ்ந்த குரலில், கதைத்துப்பேசி படகேறிப் போனது. பின், வீடுகள் என்று சொல்லப்பட்டவை வெறும் சுவர்களாக பாசிபிடித்து நிற்க,. எல்லைகளை, சுனைக்கும் நாயுண்ணிப் பத்தைகளும் பாலக்கொடிகளும் தீர்மானித்தன.

எதுவும் தனக்குள் அடங்க வேண்டும். தன்னை மீறிப் போகும் எதுவும் அவரால் அங்கீகரிக்கப்பட முடியாத விசயங்கள். கண்டிப்பு, இறுக்கம், கடின உழைப்பு, உழைப்பால் தனக்கென்றொரு சுயகௌரவத்தை, மரியாதையை ஊருக்குள் ஏற்படுத்திக் கொண்டவர் ஐயா. அவையே அதிகம் உண்மையென உறுதியாக நம்புபவர். அரச உத்தியோகத்தில் தன் பிள்ளைகளை அமர்த்தி விட வேண்டும் என்பதற்காக கண்டிப்பையும், அதீதமான கண்காணிப்பையும் எம்மீது வைத்திருந்தவர் ஐயா. அம்மா எப்போதாவது இரவில் விரித்த புத்தகத்திற்கும் தனக்கும் இடையே விளக்கை வைத்து வாசிப்பது வினோதமாக இருக்கும். அதிகம் சாண்டில்யன், கல்கி, லஷ்மியாகத்தான் இருக்கும். ஆனாலும் அம்மாவின் எல்லைகள் எப்போதும் மிகக் குறுகியதாக இருந்த தில்லை. தன் கருப்பை குறித்தும், கருப்பையில் உதித்தவை குறித்தும், அதீத மதிப்பீடுகள் இருந்தன. வீர மாந்தர்களும் இலட்சியப்புதல்வர்களுமே அவருடைய மதிப்பீடாக இருந்தது. நான் உணர்ந்து என்னை தயார்ப்படுத்துவதற்கு முன்னமே சகோதரப் படுகொலைகளாலும், இலக்கற்ற வன்முறையாலும் தெறித்த இரத்தம் எமது ஊர்களிலும், வீட்டு முற்றங்களிலும், யன்னல், கதவிடுக்குக்குள்ளால் வந்து தெறித்து அறைந்து தன் கொடூரத்தைத் காட்டிற்று. இரத்த வெடில் முகத்தில் அறைந்து தாக்க, வீரம், விளைநிலம் என்னும் சொற்களின் மேல் பூச்சு எம் முன்னே உலர்ந்து போனது. பொருள் ஈட்டலை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையிலும் சரி, கல்வியிலும் சரி ஒட்ட முடியாமலும், வலிந்து ஒட்ட வைக்க முடியாமலும் போனது. இலக்கற்ற தவிப்பில் உலர்ந்த சருகைப்போல், பட்ட இடங்களில் எல்லாம் நொறுங்குண்டது மனம்.

வி. கௌரிபாலன்

('ஒப்பனை நிழல்' (2003) நூலில் இடம் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிபாலன் வாழ்க்கைக்குறிப்பு

கௌரிபாலன், திருகோணமலையில் உள்ள உப்புவெளி எனும் ஊரில் க.விஸ்வலிங்கம், வி. மங்களேஸ்வரி தம்பதிகளுக்கு 20.03.1970ல் மகனாகப் பிறந்தார். இவருடன் பிறந்தோர், நான்கு சகோதரிகள், இரண்டு சகோதரர்கள். இவர் 1977-லிருந்து 1983 - வரை உப்பு வெளியில் உள்ள 'மெதடிஸ்த் மிஷன் தமிழ்க் கலவன்' பாடசாலையில் ஆரம்பக் கல்வி பயின்றார். 1983-ல் யூலை கலவரம் ஏற்பட்டதால், இரண்டு வருடம் இவருடைய கல்வி தடைப் பட்டது. அக்காலக்கட்டத்தில் இயக்க அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தார். 1986-லிருந்து 1988-வரை திருகோணமலையில் உள்ள 'ஸ்ரீ ராமகிருஷ்ண மிசன் இந்துக் கல்லூரி'யில் இடைநிலைக் கல்வி பயின்றார். அடுத்து, கல்விப் பொது தராதரத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். 1989-ல் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்தார். 1992-வரை யாழ்ப்பாணத்தில் வசித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் 'படவரைஞர் பயிற்சி நெறி' பயின்றார். 1992-ல் மீண்டும் திருகோண மலைக்கு வந்தார். 1992-முதல் 2000 - வரை 'ஆரம்பம் நீர்ப்பாசனத் திணைக்களத்தில்' அமையப்பட வரைஞராக பணியாற்றினார். 2000-ஆம் ஆண்டில் மட்டக்களப்பு செங்கலடி நீர்ப்பாசனத் திணைக் களத்தில் கடமையாற்றினார். 2001-ஆம் ஆண்டு மட்டக்களப்பில், கீதாதேவி எனும் இசை ஆசிரியருடன் திருமணம் நடந்தது. 2003 - ஆண்டு மட்டக்களப்பில் (களுதாவளை) உள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையில், முகாமைத்துவ உதவியாளராக நிரந்தரப் பணி நியமனம் செய்யப்பட்டார். இவ்வாண்டில்தான் இவருக்கு நிதர்சனா எனும் மகள் பிறந்தார். தற்போது மட்டக்களப்பில் வசித்து வருகிறார். இவரது முதல் சிறுகதை ''தாயம்மா'', 1994 - ஆம் ஆண்டு தினமுரசு இதழில் வெளியானது. 2003-ல் ''ஒப்பனை நிழல்'' எனும் சிறுகதை நூலும், ''வானுறையும் தெய்வத்தினுள்'' எனும் நாடக நூலும் வெளியாயின. 2010-ல் ''நதிப்பாதையின் மேலே'' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் ஞாபகார்த்த வெளியீடாக ''பறப்பிழந்த வண்ணாத்துப் பூச்சிகள்'' என்னும் நாடகத் தொகுப்பு - 2012 இல் வெளிவந்துள்ளது. (S.M. Felix அவர்களின் அந்நாடகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பான "The Flightless Butterflies"ம் அந்நூலில் உள்ளது.)

French Institute of Pondicherry நிறுவனமும், Penguin India நிறுவனமும் இணைந்து வெளியிட்ட தொகுப்பான "Time will write a Song for you" Contemporary Tamil writing from Srilanka என்னும் புத்தகத்தில் (2014) இவரது மூன்று சிறுகதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொண்ட யதார்த்தத்தின் வன்முறையை நேரடியாகப் பிரதிபலிக்கும் வீண்முயற்சியில் ஈடுபடாமல், அந்த வன்முறை ஏற்படுத்தும் உணர்வுகளை, பதிவுகளை அவை நினைவில் கீறும் அழுத்தத்தை, தன்னைத்தானே தொடர்ந்து பார்த்துக்கொள்ளும், கடந்துசெல்லும் ஒரு மொழிநடையில் தீட்டுகின்றன கௌரிபாலனின் சிறுகதைகள். வாழ்வின் பொருளாக மாறிநிற்கும் வன்முறையை, வேதனையை, மரணத்தை மொழியினூடாகக் காலத்திலும் வெளியிலும் கடக்க, கடத்த முனையும் தன்னிலைகளாகக் கிடக்கின்றன கௌரிபாலனின் படைப்புகள். மிகச் சாதாரணமான மனிதர்களும் மனம் தரித்து வாழ்வை எதிர்கொள்ளும் நிலை தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது இச்சிறுகதைகளில். விடுதலைப் போராட்டம், யாழ்ப்பாணம், வன்னி போன்றவற்றின் ஊடாக மட்டுமே தொடர்ந்து ஒளி விலக்கப்பட்டு அறியப்பட்டு வரும் ஈழத்தமிழ் இலக்கியத்துக்கு மாறாகத் திரிகோணமலை, மட்டக்களப்பு சார்ந்த அறியப்படாத எளிய மனிதர்களை (ஈழ ஆப்பிரிக்கர்கள், ஆந்திர தமிழ் கன்னட அருந்ததியர்...) அவர்களது உணர்வு நிலையைக் 'காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்களாக' வீழ்த்துகின்றன இந்த எழுத்துக்கள்.

விடியல்

ரூ.250/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org